மேற்கோள் விளக்கக் கதை அகராவினை

(இரண்டாம் பகுதி)



தமிழ் வெளியீடு

மேற்கோள் விளக்கக்
கதை அகரவரிசை
(இரண்டாம் பகுதி)

---

633. தலையைக் கண்டு தலையுற வணங்கிய கதை

வரகுண பாண்டியமன்னன் ஒருநாள் திருவிடைமரு தூரையடைந்து தெருவை வலம் வந்தான். வழியிலே ஒரு தலைக் கூடு கிடந்தது. பாண்டியன் அத் தலைக்கூட்டைப் பார்த்து, "இறந்தும் திருவீதியில் கிடக்கும் சிறந்த நல் வினையைச் செய்திருக்கிறீர். உம்மைப் போல் என்னுடைய தலையும் இருப்பதற்கு மேன்மை தந்து அருள்புரிய வேண்டும்" என்று கூறினன். அத்தலைக் கூட்டைத்தனது தலையினற் பன்முறை வணங்கினன். இதனைக்கண்டோர் பாண்டிய மன்னன் திருவிடை மருதூரிடத்தே கொண்டிருக்கும் அளவற்ற அன்பை வியந்து பாராட்டினர்.

"மருதவட்டத் தொருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி
உம்மைப் போல எம்இத் தலையும்
கிடக்க வேண்டு மென்றடுத்தடுத் திரந்தும்"

[வரகுணபாண்டியன்] (திருவிடைமருதூர் மும்மணிக் கோவை)

---

634. தவத்தை மறந்த அந்தணன் கதை

வெகுகாலத்திற்கு முன் வடநாட்டிலே கங்கையின் கரையிலே அந்தணன் ஒருவன் தவஞ் செய்துகொண்டிருந்தான். அவனுடைய தவத்தின் சிறப்பால் அவனுடைய புகழ் எங்கும் பரவியிருந்தது.

சில வலைஞர்கள் அந்தணன் தவஞ்செய்துகொண்டிருந்த இடத்திற் குடியேறி வலை வீசி மீன் பிடித்தனர். நல்ல உயர்ந்த மீன்கள் அவர்களுக்கு அகப்பட்டன. அவர்கள் அம்மீன்களை நெருப்பிற்சுட்டு வதக்கி உண்டனர். அதனைத் தவஞ்செய்த அந்தணன் பார்த்தான். "ஆ! ஆ! இவ்வலைஞர்கள் மிகுந்த நல்வினையாளர்கள்" இனிய மீன்களை நாளும் பிடித்துச் சுட்டுத் தின்று மகிழ்கின்றனர் என்று எண்ணினான். அந்தணனுடைய நாவில் நீரும் ஊறியது. நாளும் அந்தணனுக்கு வலைஞர்கள் மீன் பிடித்துச் சுட்டுத் தின்பதைப் பார்ப்பதே வேலையாக முடிந்தது. இதனால் அந்தணன் தான் தவஞ் செய்வதை அடியோடு மறந்தான்.

இதனால் அந்தணனைத் துன்பம் தொடரத் தொடங்கியது. அவன் பல நாள் வருந்தி இறுதியில் இறந்தான். பழய தவஞ் சிறிதும் பயன் படாமற் போய் விட்டது. மறு பிறப்பில் அவன் வலைஞனாகவே பிறந்தான். ஒருவர் தாம் செய்யுந் தவத்தை மறந்தால் அவர்களைத் துன்பந் தொடர்ந்து பற்றும். இதனைக் கருதியே பெரியோர்கள் "செய்தவம் மறந்தால் கைதவ மாளும்" என்று கூறியிருக்கிறார்கள்.

[செய்தவம் மறந்தால் கைதவமாளும்] (பாரதம்)

---

635. தவளகிரி முதலியார் கதை

தவளகிரி முதலியார் என்னும் பெயரினையுடைய இவர் தொண்டவள நாட்டிலே வெண்குன்றம் என்னும் ஊரிலே வேளாளர் குலத்திலே பிறந்தார். இவரிடம் செல்வப் பெருக்கு மிகுந்திருந்ததோடு அறிவுடைமையுஞ் சிறந்திருந்தது. புலவர்களைப் போற்றுவதினும் பிறருக்கு உதவிபுரிவதினும் சிறந்து விளங்கினர். ஒரு நாள் கம்பர் இவருடைய இல்லத்திற்கு வந்தார். அவரை இவர் பெரிதும் பாராட்டிப் போற்றினர். அவருக்குப் பெருவிருந்து செய்வதற்கு இவர் ஏற்பாடு செய்தார். இவருடைய மகன் வாழையிலை அறுப்பதற்குத் தோட்டத்திற்குச் சென்றான். அப்பொழுது பாம்பு ஒன்று அவனைக் கடித்தது. அதனால் அவன் மாண்டு போனான். விருந்து

செய்வதற்கு இடையூறு நேர்ந்ததே என்று இவர் உள்ளம் வருந்தினர். ஆயினுஞ் செய்தியை வெளிப்படுத்தவில்லை. பிணத்தை மறைத்து வைத்தார். "உணவு கொள்ளவர வேண்டும்" என்று கம்பரை அழைத்தார். கம்பருக்குத் தடு மாற்றம் உண்டாகியது. "பையன் எங்கே?" என்று உசாவினர். பிறகு உண்மையை உணர்ந்தார். பாம்பினுடைய நஞ்சு இறங்குமாறு சிலபாடல்கள் பாடினர். நஞ்சு இறங்கியது. மாண்டவன் மீண்டான். கம்பருடைய பெருமை தவளகிரியாருக்கு மேலும் மிகுந்த வியப்பை ஊட்டியது. கம்பருடைய பெருமையை எங்கும் பரப்பினர். ஏரின் சிறப்பைப் பற்றி நூல்ஒன்று இயற்றவேண்டும் என்று கம்பரை வேண்டிக் கொண்டார். கம்பர் 'ஏரெழுபது' என்னும் நூலிஞைப் பாடினர்.

இத்தவளகிரி முதலியாருக்குப் பிறகு நான்காவது தலை முறையில் ஒரு தவளகிரி முதலியார் தோன்றினர். பாட்டனர் பெயரைப் பெற்ற அத்தவளகிரி முதலியார் தம்முடைய முன்னோர் பெருமைகளை அடிக்கடி பேசிக்கொண்டிருந்தார். ஒரு நாள் அரச அவையில் தவளகிரி முதலியாரைப் பற்றிப் பேச் செழுந்தது. அரசன் மாறுபட்டான். "இவ்வளவு பெருமைகள் இம்முதலியாருக்கு அமைந்திருக்க முடியாது" என்று மறுத்துப் பேசினன். பெயராகிய முதலியார் "தம் முன்னோர்களின் பெருமை மெய்ம்மையே" என்று காய்ச்சிய நெய்யில் கை தோய்த்து மழுவேந்தினர்.

"அழுவதுங் கொண்டு புலம்பாதுநஞ்சுண் டதுமறைத்தேர்
எழுபதுங்கொண்டு புகழ்க்கம்ப நாடன் எழுப்பவிசை
முழுவதுங் கொண்டொரு சொற்பேச நெய்யின் முழுகிக்
(கையின்
மழுவதுங் கொண்டு புகழ்கொண்டதால் தொண்ட
(மண்டலமே

[தவளகிரி முதலியார் கதை] (தொண்டமண்டல சதகம்)

636. தழுவிக்கொண்ட கதை

தேவியானவள் ஏகாம்பரரை மணம் புரியுமாறு கம்பையாற்றுக் கரையில் மணலால் இலிங்கம் அமைத்து வழிபாடு செய்தாள். தேவியின் பூசையில் சிவபிரான் மகிழ்ந்தார். இறைவியின் அன்பை ஆராய்ந்து பார்க்க எண்ணினார். கம்பையாற்றில் நீர் பெருகி வருமாறு செய்தார். இலிங்கத்திற்கு அழிவுவரும் என்று அஞ்சிய தேவியானவள் இலிங்கத்தை இறுகத் தழுவிக் கொண்டாள். அதனைக் கண்ட இறைவன் நீர்ப் பெருக்கைத் தடுத்தருளினார். அவ்வாறு இறுகத் தழுவிய படியால் இலிங்கத்தில் தேவியின் வளைத்தழும்பும் கொங்கைத் தழும்பும் பதிந்தன. பிறகு, இறைவன் இறைவியை மனம் புரிந்து இடப்பாகத்தை அளித்தருளினார்.

"நதிகொ ளகத்திற் பயந்து கம்பர்மெய்
கருக இடத்திற் கலந் திருந்தவள்"

[தழுவிக்கொண்டது] (திருப்புகழ்)

---

637. தனஞ்சயன் கதை

பாண்டி வள நாட்டிலே மாதுலம் என்னும் ஊரில் ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் தனஞ்சயன் என்னும் பெயருடையவன் ஒருவன் இருந்தான். இவன் வணிகர் குலத்தில் தோன்றியவன். இவன் மூன்றுண்டுக் குழவியாக இருக்கும்போதே தந்தை இறந்துபோனான். இவனுடைய தந்தை தான் தேடிய பொருள்களையெல்லாந் தீய வழிகளிலே அழித்து விட்டான். அதனால் அவனுடைய மனைவி மக்கள் வறுமையால் வாடித் துன்புறும் படியாக நேர்ந்தது. இவன் பருவமடைந்தபின் கல்வி கற்றான். தன்னுடைய குடும்பம் கொடிய வறுமையால் தளர்ந்து நிற்பதைக் கண்டு உளம் வருந்தினான். சிறிது பொருள் தேடி அதனை முதற் பொருளாக வைத்துக்கொண்டு வாணிகஞ் செய்தான். நேரிய

முறையில் வாணிகத்தைச் செய்தானுகையால் பொருள் சேர்ந்தது. முயற்சியில் சிறிதும் தளராமல் மேன்மேலும் ஊக்கத்தோடு முயன்று பொருள் தேடினன். அதனல் இவனுடைய குடும்ப நிலே சீர்பெற்றது. தானுந் திருமணம் முதலியன செய்துகொண்டு நல்வாழ்க்கையை மேற்கொண்டான். ஒருவன் காரியஞ் செய்கையில் தளர்ச்சியுறுது முயற்சியோடு செய்வானுயில் தன்னுடைய குடும்பத்தை முன்னுக்குக் கொண்டுவரலாம் என்பது இவனிடம் நன்கு விளங்கியது.

[முயற்சியால் முன்னுக்கு வருதல்]

---

638. தனதேவன் கதை

முன் காலத்தில் தனதேவன் என்னும் பெயருடையவன் ஒருவன் இருந்தான். இத் தனதேவனுக்குச் சிவதேவன் என்னும் பெயருடைய நண்பன் ஒருவன் இருந்தான். இவர்களிருவரும் ஆருயிர் நண்பர்களாக விளங்கி யிருந்தனர். தனதேவன் ஒரு சமயத்தில் தொலேவிடத்திற்குச் சென்று வரவேண்டியவனுக இருந்தான். அப்பொழுது இவன் தன்னிடம் இருந்த பொருளேத் தன்னுடைய ஆருயிர் நண்பனுகிய சிவதேவனிடங் கொடுத்து, "இதனேக் காப்பாற்றி வைத்திருந்து நான் மீளவும் வந்து கேட்கும்பொழுது கொடுப்பாயாக" என்று கூறிப் பொருளேக் கொடுத்துவிட்டுச் சென்றுன். தான் செல்லவேண்டிய இடத்திற்குச் சென்று செய்ய வேண்டிய அலுவல்களேச் செய்து முடித்துக்கொண்டு திரும்பி வந்தான். தன்னுடைய நண்பனுகிய சிவதேவனிடம் போய்த் தான் வைத்துச் சென்ற பொருளேத் திரும்பத் தருமாறு கேட்டான். சிவதேவன் இயற்கையிற் சிறிது கடும்பற்றுள்ள முடையவன். இப்பொழுது பொருள் தன்னுடைய கையிற் சிக்கவே அவனுடைய கடும்பற்றுள்ளம் மிகுதியாகி விட்டது. அவன் தன்னுடைய நண்பனுகிய தனதேவனேப் பார்த்து, "நீ எப்பொழுது என்னிடம் பொருளேக் கொடுத்தாய்? கொடுக்கவில்லேயே" என்று வஞ்சகமாகப் பேசினன் தனதேவன். எவ்வளவோ நன்மொழிகளேக் கூறிப் பார்த்தும் சிவதேவன்

மனம் மாறவில்லை. நண்பனிடத்தில் தீமைசெய்த அவன் மிகுவிரைவாகவே அழிந்தொழிந்து விட்டான்.

[நண்பர்கட்குத் தீமை செய்தல்]

---

639. தனதன் கதை

தனதன் என்பவன் பாண்டி வளநாட்டில் மதுரைமா நகரில் முன்னாளில் இருந்தான். இவனுடைய குலம் வணி கர் குலம். இவன் காலத்தில் குலோத்துங்க பாண்டியன் என்பவன் அரசு புரிந்து கொண்டிருந்தான். தனதனுக்குத் திருமணம் நிகழ்ந்தது. பலவகையான ஒலிக்கருவிகள் இனிது முழங்கிக் கொண்டிருந்தன. உற்றாரும் பெற்றாரும் ஒருங்கு சூழ்ந்திருந்தனர்.

அப்பொழுது இளங்கன்றை யுடைய பசு ஒன்று அங்கு கூட்டப்பட்டிருந்தது. அது கயிற்றை அறுத்துக் கொண்டு தனதனுகிய மணமகன் மேற்பாய்ந்து தனது கொம்புகளால் அவனைக் குத்தியது. அவன் அக்கணமே குடல் வெளியே வந்து மாண்டு முடிந்தான். இவனுக்கு ஏற்பட்ட கதியை எண்ணி அங்கிருந்தா ரனைவரும் ஏங்கி வருந்தினர்.

"நேற்று இருந்தவன் ஒருவன் இன்று இல்லாமல் இறந்து போனான் என்று சொல்லப் பெறும் பெருமையை உடையது இவ்வுலகம்" என்னும் ஆன்றோர் மொழியை அனைவரும் இத் தனதனிடம் அறிந்தனர்.

[உலக நிலையாமை]

(திருவிளையாடல்)

---

640. தனபதி கதை

தனபதி என்பவன் வெகு காலத்திற்கு முன்னர் மதுரை மாநகரில் இருந்தவன். இவனுக்குச் செல்வம் மிகுதியாக அமைந்திருந்தது. இவனுடைய மனைவியின் பெயர் சுசீலை.

இவன் இல்வாழ்க்கையை இனிது நடத்திக் கொண்டு சிறப்பாக வாழ்ந்தான். ஏழை எளியவர்கட்கு உதவி செய்தான்.

இவனுக்குச் செல்வம் மிகுதியாக அமைந்திருந்தும் மக்கட்பேறு உண்டாகவில்லை. பெரும்பாலுஞ் செல்வர்கள் மக்கட்பேற்றை அடையாமல் இருப்பதற்குக் காரணம் அவர்களுடைய தீவினைதான். மக்கட்பேறற்ற இவன் தன்னுடைய உடன் பிறந்தாள் மகனை வளர்ப்புப் பிள்ளையாகக் கொண்டான். தன்னுடைய செல்வம் முழுவதையும் அவனுக்கே உரிமையாக்கினன். தவஞ் செய்தற்பொருட்டுத் தன்னுடைய மனைவியோடு காட்டிற்குச் சென்றான்.

தனபதி சென்றபின் அவனுடைய பங்காளிகள் பொருள் கனையெல்லாந் தாங்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். வளர்ப்பு மகனுக்கும் அவனுடைய தாய்க்கும் உதவி செய்வார் எவரும் இலர். அவர்கள் பரமனை நோக்கி முறையிட்டார்கள்.

பரமன் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இரங்கினர். தவஞ் செய்யச் சென்ற தனபதியைப்போல் வந்தார். பங்காளிகளை அழைத்து அவையிலே நிறுத்தினர். பொருள் முழுவதையும் அச்சிறுவனே அடையவேண்டும் என்று முடிவு செய்தார். பங்காளிகள் தாங்கள் கைப்பற்றிய பொருளையிழந்து பழியையும் பாவத்தையும் அடைந்தார்கள். தாங்கள் செய்த செயலுக்காக இரங்கி நாணினர்கள்.

"பிறருடைய பொருளை விரும்பற்க. விரும்புதலால் உண்டாகும் செல்வம் பயனை அளிக்கமாட்டாது" என்று பெரியோர்கள் கூறிய, அறவுரை தனபதியின் பொருளை வௌவியர்களிடத்தில் நன்கு பலித்துவிட்டது.

[பிறன் பொருள் வௌவுதல்] (திருவிளையாடல்)

---

641. தனபாலன் கதை

இயக்கர் குலத்தில் தனபாலன் என்பவன் ஒருவன் இருந்தான். அவனை நிறைந்த செல்வம் உடையவன். கல்வியிலுந் தேர்ச்சி பெற்றவன். அரசியல் முறைகளையும்

நன்கு உணருவான். இவனுடைய மனைவியும் அழகிற் சிறந்த தவள்; பதுமினி என்னும் பெயரினள். தனபாலன் அறிவுந் திருவும் அமையப் பெற்று விளங்கியபடியால் குபேரன் இவனைத் தனக்கு அமைச்சனாக அமைத்துக்கொண்டான். சிறிது காலம் அமைச்சுத் தொழிலை அமைவுடன் நடத்திக் கொண்டிருந்தான்.

நாளடைவில் கிருதாசி என்னும் தேவதாசி ஒருத்திக்கும் இவனுக்கும் தொடர்புண்டாயிற்று. இவன் அவளுடைய மையலிலே தாழ்ந்து விழுந்தான். கைப்பொருள் முழுவதையும் அவளுடைய காலடியிற் சேர்த்தான். அமைச்சு வேலையால் வரும் பொருளுந் தொலைந்தன. வேலையைச் சரியாகப் பார்க்கவும் இல்லை. ஆகவே குபேரன் இவனை அமைச்சுத் தொழிலில் இருந்து அகற்றினான். பொருளும் போய் வேலையும் போய்த் துன்புற்றான். வறுமைப்பிணியால் வாடி நொந்தான். தனக்கு இந்நிலை வருமென்பதை அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. பொருளின் அளவு அறிந்து வாழாதவனுடைய வாழ்க்கை நன்றாகச் சிறந்திருத்தலைப் போலவே முன்பு காணப்பட்டுப் பிறகு ஒன்றுமில்லாமல் அழிந்து போகும் என்பதை இவன் உலகிற்கு உணர்த்தினான்.

[அளவறிந்து வாழ வேண்டும்]

---

642. தன்வினை தன்னைச் சுட்ட கதை

பட்டினத்துப் பிள்ளையார் தம்முடைய பொருள்கள் முழுவதையுந் துறந்து பெருந் துறவு கொண்டார். அவருடைய துறவைக் கண்டோர், "பாரினத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல் ஆருந் துறப்பதரிது" என்று பாராட்டி யிருக்கிறார்கள். பெருந்துறவையடைந்த பட்டினத்தார், கண்டவிடங்களில் ஐயமேற்று மெய்யறிவுடன் திரிந்து கொண்டிருந்தார். பட்டினத்தாருடைய செயல் அவருடைய தமக்கையாருக்குப் பிடிக்கவில்லை. நம் முடைய தம்பி பிச்சைக்காரனாகத் திரிவது நமக்குத் தானே இழிவு நஞ்சிட்டுக் கொன்று விட்டால் இழிவு இனிமேல் ஏற்படாமற்

போகும் என்று முடிவு செய்தார். நஞ்சைக் கலந்து சில அப்பங்களைச் சுட்டார். பட்டினத்தார் தம் வீட்டு வாசலில் பிச்சைக்கு வந்தபொழுது அவ்வப்பங்களைக் கொடுத்தார். மெய்யறிவுச் செல்வராகிய பட்டினத்தார் தம்முடைய மெய் யறிவினுல் அப்பத்தின் தன்மையை உணர்ந்து கொண்டார். "தன்விஷ தன்னைச் சுடும் ஒட்டப்பம் வீட்டைச் சுடும்" என்று கூறி அப்பத்தைத் தமக்கையாருடைய வீட்டிற்செரு கினர். அவ்வப்பம் பிற வீடுகட்கு அழிவு இல்லாமல் அவ் வீட்டை மட்டும் சுட்டு எரித்து அழித்தது.

"கையினில்பட் டினத்தார்க்குத் தமக்கைநஞ்சு
கலந்துபல காரஞ்செய்து
ஐயமறக் கொல்லவென்றே கொடுக்க
அவள்மனை நெருப்பால் அழிந்த தன்றே"

[ஒட்டப்பம் வீட்டைச் சுட்டது] (செயங்கொண்டார் வழக்கம்)

---

643. தாடகை கதை

முன்காலத்தில் தாடகை என்னும் பெயருடையவள் ஒருத்தி இருந்தாள். இவள் இராமாயணத்தில் கூறப்பெறும் அரக்கியாகிய தாடகையல்லள். சிவபெருமானிடத்தில் பேரன்புடையாளாய் அப்பெருமானைத் திருப்பனந்தாளில் வழி பட்டுக் கொண்டிருந்தாள். அவள் ஒருநாள் பூமாலை ஒன்றைத் திருப்பனந்தாள் இறைவனுக்குச் சார்த்தத் தொடங்கிய பொழுது அவள் தன் அரையிற் கட்டியிருந்த ஆடையவிழ்ந்து தரையில் விழத் தொடங்கியது. ஆடை நழுவாமல் முழங்கைகளால் அணைத்துக் கொண்டு சார்த்த முயன்றாள். முயன்றும் இலிங்கத்தின் முடியெட்டவில்லை. உள்ளம் வருந்தினாள். தாடகையின் நிலைக்கு இரங்கிய பரமன் முடியைச் சாய்த்து மாலையை ஏற்றுக் கொண்டார். ஆனால் மீட்டும் முடியை நேராக்கிக் கொள்ளவில்லை. சாய்த்தபடியே இருந்தார்.

அந்நாளில் உறையூரில் பரிமான் என்னும் சோழன் ஒருவன் அரசு புரிந்து கொண்டிருந்தான். அவன் நூலறிவும் சிவபெருமான்மீது அன்பும் சேரப்பெற்றவன். அவன் ஒரு நாள் திருப்பனந்தாளுக்குப் படையுடன் வந்தான். சிவலிங்கத்தை வணங்கச் சென்றான். சிவலிங்கஞ் சாய்ந்திருப்பதைப் பார்த்தான். அதனை நேராக நிமிர்த்தி வணங்க வேண்டும் என்று எண்ணினான். முடியை நிமிர்ப்பதற்கு ஆவன செய்தான். கயிறு கட்டி யானை குதிரை முதலியவைகளைக் கொண்டு இழுக்கச் செய்தான். எவ்வளவோ முயற்சி செய்தும் அவ்விலிங்கம் நேராக நிமிரவில்லை. சாய்ந்தபடியே இருந்தது. இப்பதிக்கு வந்த கலிய நாயனார் என்பவர் யானை குதிரை முதலிய படைகள் இலிங்கத்தை நிமிர்த்த முயன்று இழுத்துக் களைத்துப் போயிருத்தலை உணர்ந்தார். தளர்ச்சியை உண்டாக்கும் இத்தொழிலைத் தாமுஞ் செய்ய வேண்டும் என்று எண்ணினார். கயிற்றைத் தம்முடைய கழுத்திலே மாட்டிக் கொண்டு இழுத்தார். உடனே இலிங்கம் பண்டு போல் நேரான நிலையை அடைந்து விட்டது.

"திருப்பனந் தாளி லிங்கந் திண்கலைச் சிக்காக
வீருப்பி னுடன் சேர்ந்த விதம்போல்"

[தாடகை] (திருப்பூவண நாதருலா)

---

644. தாடிவெண்ணெய்க்காரன் கதை

பேராசை கொண்ட ஒருவன் ஆன்கூட்டம் மிகுந்த ஆயர்பாடிக்குப்போய் வெண்ணெய் சேர்த்துப் பொருள் திரட்ட வேண்டுமென்று எண்ணினான். தாடி வளர்த்துக் கொண்டு ஆயர்பாடிக்குச் சென்றான். இடையர்களாற் கொடுக்கப்பெறும் மோரைத் தாடியில் தோயுமாறு குடித்தான். அதனால் தாடி மயிரில் தோயும் வெண்ணெயை நாள் தோறுஞ் சிறிது சிறிதாகச் சேர்த்து ஒரு சேர் நெய்யாக்கினான். அதனால் இவனுக்குத் தாடி வெண்ணெய்க்காரன் என்று பெயர் உண்டாகியது. தாடி வெண்ணெய்க்காரன் அந் நெய்யைவிற்று அதனால் வரும் பணத்தைத் முதலாகவைத்துக் கொண்டு வாணிபம் செய்து பொருளீட்ட விரும்பினான்.

ஆனால் அவ்வெண்ணம் நிறைவேறுமலே இருந்தது. இவ் வெண்ணத்துடனேயே தாடி வெண்ணெய்க்காரன் மாண்ட படியினால் இவன் நரகத்தையடைந்து மிகுந்த தொல்லைக் குள்ளானான். பேரவாக்காரர்களுக்கு நேர்வது துன்பமே.

"நீடு நீணெறி செல்பவன் நாள்தொறும்
பாடி கண்டங்கொர் பாசனத் தானிரை
நாடி நாள்தொறும் நெய்தனக் கீட்டிய
தாடி வெண்ணெய் தனதுரை கேட்டுமால்"

[பேரவா] (நரி விருத்தம்)

---

645. தாணுமாலய முனிவர் கதை

ஒரு காட்டிலே முனிவர் ஒருவர் தவஞ் செய்து கொண்டி ருந்தார். அவருடைய பெயர் தாணுமாலய முனிவர். இம் முனிவர் பேகன் என்னும் பெயரினையுடைய ஒரு வேடனை நட்பாகக் கொண்டார். இருவருடைய நட்பும் நாளுந் வளர்ந்து கொண்டிருந்தது. முனிவர் ஒரு வேடனுடைய நட்பைக் கொண்டிருத்தலைக் கண்டு இம்முனிவரைப் போன்ற பிற முனிவர்கள் இகழ்ந்தார்கள். "இவரோ முனிவர்; அன் பையும் அருளையும் பற்றுக் கோடாகக்கொள்ள வேண்டியவர். அவனோ வேடன் அன்பையும் அருளையும் அடியோடொழித்து உயிர்த்தொகைகளைப் கொன்றொழிப்பவன்; அவ்வாருக நட்புக் கொள்ளுதல் எவ்வாறு பொருந்தும்?" என்று பேசிக் கொண் டார்கள். வேடனோ முனிவருக்குக் காய்கனி கிழங்கு முதலிய வைகளை நாளுங் கொணர்ந்து கொடுத்துக் கொண்டிருந்தான். பிற முனிவர்களோ தாமே சென்று அவைகளைத் தேட வேண்டியதாக இருந்தது. உண்மையை உணர்ந்து கொண்ட சில முனிவர்கள் யாருடைய நட்பாக இருந்தாலும் நட்புக் கொள்ளலாம். நாயோடு நட்புக் கொள்ளும் வேட னுக்கும் நல்ல முயல் கிடைக்கிறதன்றோ? என்று பேசிக் கொண்டார்கள்.

[யார் நட்பதாயினும் நட்புக் கொள்ளல் வேண்டும்]

---

646. தாயனூர் கதை

தாயனூர் என்பவர் சோழ வளநாட்டில் கணமங்கலம் என்னும் ஊரிலே முன்னூலில் வாழ்ந்திருந்தார். இவருக்கு முதலிற் செல்வம் மிகுதியாக அமைந்திருந்தது. இறைவனிடத்தில் உயரிய அன்புடையவராய்த் திகழ்ந்தார். இறைவனுக்குச் செந்நெல் அரிசி உணவு, செங்கீரை, மாவடு மூன்றையும் அருமையாகப் பக்குவஞ் செய்து படைத்தலாகிய அருமைத் திருப்பணியை நெடுங்காலஞ் செய்து கொண்டிருந்தார். காலமாறுபாட்டால் இவருடைய செல்வஞ் சிதைந்தது. இவர் மிகவும் வறியவரானார். ஆயினும் தாம் மேற்கொண்ட பணியை நாளும் விடாது செய்து வந்தார். நாளடைவிற் கூலி வேலை செய்யும்படியான நிலைமை ஏற்பட்டது. அப்பொழுதும் இவர் உள்ளந் தளரவில்லை. பல நாட்கள் பட்டினி கிடந்தார். பட்டினி கிடந்தும் பரமன் பணி மட்டும் ஒருவாறு நடைபெற்றுக் கொண்டிருந்தது. இறைவனுக்குப் படைப்பதற்கு உணவு வகையை ஒரு கூடையில் எடுத்துக் கொண்டு ஒருநாள் சென்றார். நடக்கமுடியாமல் தள்ளாடிக் கீழே விழுந்தார். பூசனைக்குரிய பொருள்கள் நிலத்தில் சிதறிப் போயின. தம்முடைய திருப்பணிக்குத் தடையுண்டாகியதைக் கண்ட இவர் உள்ளந் தளர்ந்தார். உயிர் வாழ்வதனால் இனிமேற் பயனில்லை யென்று துணிந்தார். உடைவாளை உருவி ஊட்டியை அரிந்தார். குருதிப் பெருக்கு ஆறெனப் புறப்பட்டது. இவருடைய அன்புக்கு மகிழ்ந்த இறைவன் தோன்றினார். "தாயரே! பொறும்" என்று தடுத்தார். நிலத்திற் சிதறிப்போன உணவுப் பொருள்களை ஏற்றருளினார். இவருக்கு அருள் புரிந்து மறைந்தார். அதுமுதல் இவருடைய பெயர் அரிவாட்டாய நாயனார் என்று வழங்கியது. செய்தற்கருமையான செயல்களைப் பெரியோர்கள் செய்வார்கள் என்பது இவரிடம் நன்கு பெறப்பட்டது, இவரது செயலைத் துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள், "பூட்டியரிவாள் ஊட்டி யரிந்தும்" என்று வியந்து புகழ்ந்துள்ளார்.

"கூலிக் கறுத்த நெல்லரிசி குழந்தைக் கீரை மாவடுவும்
சாலக் கமரி னிடைக்கவிழ்த்த தாயனூட்டி தனையரி

[வான்

மேலிட்டறுப்ப மாவடுவின் விடேல்விடேலென்றெலி
[மூழங்க

மாலுக்கரிய பதஞ் சேர்ந்தோன் வளஞ்சேர் சோழ
[மண்டலமே

[பெரியோர்கள் அரிய செயல் செய்வார்கள்] (சோழ மண்டல சதகம்)

---

647. தாயுமானவர் கதை

தாயுமானவர் ஏறக்குறைய முந்நூறுயாண்டு கட்கு முன்பு சோழவள நாட்டிலே திருமறைக் காட்டிலே வேளாளர் குலத்திலே பிறந்தார். பலகலைகளையும் நன்கு ஓதியுணர்ந்து சிறந்த அறிவாளியாகத் திகழ்ந்திருந்தார். அந்நாளில் திருச்சிராபுரத்தில் அரசு புரிந்து கொண்டிருந்த விசயரகுநாத சொக்கலிங்க நாய்க்கர் என்பவர் இவரைத் தம்மிடம் அழைத்து ஓர் உயர்ந்த அலுவலில் அமர்த்தியிருந்தார். சின்னாளில் அவர் இறந்தார். அரசியே அரசாட்சியை மேற்கொண்டாள்.

தாயுமானவருடைய அறிவு முதலியன அரசியின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. அவள் இவரைத் தழுவி மகிழவேண்டும் என்று சமயம் பார்த்துக் கொண்டிருந்தாள். ஒரு நாள் இவரைக் கண்டு தன்னுடைய உடல் பொருள் ஆவி எல்லாவற்றையும் இவருக்கே வழங்கி விட்டதாக இயம்பினள். இதனைக் கேட்ட இவர் சிராப்பள்ளி விட்டகன்றார். மௌன தேசிகர் என்னும் பெயருடைய ஒரு துறவியை அடைந்து அருளுரை பெற்று மெய்ஞ்ஞானச் செல்வரானார்.

துறவியாக வாழத் தொடங்கிய தாயுமானவர் அருட் பாடல்கள் பலவற்றைப் பாடினார். அப்பாடல்கள் தாயுமானவர் பாடல் என்னும் பெயரோடு வழங்குகின்றன. இவர் இவ்வுலகில் பல்லாண்டு துறவியாக வாழ்ந்திருந்து பிறகு இராமநாதபுரத்தில் வீடுபேற்றையடைந்தார். இவ்வுலகிலே

நன்மைகளையெல்லாம் பெறுதற்குரியவர் பிறன் மனைவியின் தோள்களைத் தோயாதவர்களே என்பது இப்பெரியாரிடத்தே நன்கு உணர நின்றது.

[நன்மைகளைப் பெறுதற்குரியவர்] (தாயுமானவர் வரலாறு)

---

648. தாயுமானவர் கதை (வேறு)

திரிசிரகிரியில் ஒரு வணிகன் இருந்தான். அவன் காவிரிப்பூம் பட்டினத்திலே யிருந்த அரதனகுத்தன் என்பவனுடைய மகளைத் திருமணம் செய்து வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தான். அப்பெண் கருப்பமுற்றாள். பேறுகாலம் நெருங்கியது. இச்செய்தியை உணர்ந்த தாய் பிள்ளைப் பேற்றுக்கு வேண்டிய மருந்துகள் ஒழுங்கு செய்து கொண்டு வந்தாள். வரும் வழியில் காவிரியாறு கரை புரண்டோடியது. ஆற்றைக் கடக்க முடியாமல் தாய் அக்கரையில் உட்கார்ந்து விட்டாள். மகளோ தாயின் வரவை எதிர்பார்த்துத் துடித்தாள். இதனைக் கண்ட பரமன் தாமே தாயாகி மருந்துகளோடு வந்து பெண்ணுக்கு ஆகவேண்டியவைகளைச் செய்து கொண்டிருந்தார். பிறகு உண்மையான தாயும் வந்து சேர்ந்தாள். எல்லோரும் இரண்டு தாய்களைக் கண்டு மயங்கினர். பரமன் உடனே மறைந்தருளினார்.

"–நற்கொடிக் கோர்,
தாயுமானர் கொடியார் தங்கள் வினைத் தீங்கொடி
[யார்."

[தாயுமானகடவுள்] (புலியூர் வெண்பா)

---

649. தாயுரை காத்த தையலின் கதை

முன்னாளில் காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்த சிறுமியர்களில் இருவர் ஒருநாள் சிறுவீடு கட்டி விளையாடலை மேற்கொண்டிருந்தனர். அப்பொழுது ஒரு சிறுமி மற்றொரு சிறுமி

யைப் பார்த்து, ''பிற்காலத்திலே எனக்கொரு பெண்ணும் உனக்கோராணும் பிறந்தால் அவ்விருவரையும் மணமக்க ளாக்குவதற்கு உடன் படுகிறாயா ?'' என்று உசாவினாள். மற்றவள் அதற்கு உடன்பட்டாள், இருவரும் அதனை முடிவு செய்து கொண்டனர்.

ஆண்டுகள் பல சென்றன. சிறுமியர் பெரியவர்களா யினர். திருமணமும் நடைபெற்றது. ஒருத்திக்கு ஆண் குழந்தை பிறந்தது; மற்றொருத்திக்குப் பெண் குழந்தை பிறந் தது. ஆண் குழந்தை முடமாக விருந்தது. இரு குழந்தை களும் வளர்ந்து மணப் பருவத்தை அடைந்தனர்.

பெண்ணின் தாய் தன்னுடைய கணவனைப் பார்த்து, ''நான் இளம் பருவத்தில் இன்னாளோடு சிற்றில் கட்டி விளை யாடிக் கொண்டிருந்தேன். அப்பொழுது எங்களிருவருக்கும் ஆண் குழந்தையும் பெண் குழத்தையும் பிறந்தால் இருவரை யும் மணமக்களாக்குவது என்று பேசிக் கொண்டோம். பெண்ணறிவினால் மனம் போனவாறு பேசிய என் மனம் இப் பொழுது மிகவும் கலங்குகின்றது. நம்முடைய அருமைப் பெண்ணை முடவனுக்கா கொடுப்பது என்று ஏங்குகின்றேன். நான் இப்பொழுது யாது செய்வேன் ?'' என்று உளம் வருந் திக் கூறினள்.

இவ்வாறு தந்தைக்குத் தாயுரைத்ததைக் கேட்டிருந்த தாழ்குழல், 'இன்னானுக்கென்று நம் தாய் வாக்குச் செய்த பின் ஐயம் ஏன் ? நாம் அவனுக்கே உரிமையாக வேண்டும்'' என்று முடிவு செய்தாள். புதுப்புடவையைக் கட்டினாள்; கூந்தலை வாரி முடித்தாள்; மணக்கோலம் பூண்டு முடவனைத் தலைவனாகக் கொண்டு வாழ்ந்தாள். இப்பெண்ணினுடைய கற்புடைமையை அனைவரும் பாராட்டிப் போற்றினர்.

''பெண்ணறி வென்பது பேதைமைத்தே என்றுரைத்த
நுண்ணறிவி னார்நோக்க நோக்காதே எண்ணிலேன்
வண்ட லயர்விடத் தியானோர் மகட்பெற்றுல்
ஒண்டொடி நீயோர் மகற்பெறிற் கொண்ட
கொழுநன் ஆவனுக்கென் றியானுரைத்த மாற்றம்
கெழுமி யவளுரைப்பக் கேட்ட விழுமத்தால்

சிந்தைநோய் கூருத் திருவிலேற் கென்றெடுத்துத்
தந்தைக்குத் தாயுரைப்பக் கேட்டாளாய் முந்தியோர்
கோடிக் கலிங்கம் உடுத்துக் குழல்கட்டி
நாடித் தலையை வணங்கித் தலைசுமந்த
ஆடகப்பூம் பாவை.''

[கற்புடைமை] (சிலப்பதிகாரம்)

---

650. தாருகாவன முனிவர்கள் கதை

முன்னாளில் தாருகாவனத்தில் முனிவர்கள் பலர் தவஞ் செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் பெண்களுடைய கற்பே உயர்ந்தது. பெண்கள் கற்புடையவர்களாக இருத்தல்வேண்டும். நாமும் தவத்தைச் செய்யவேண்டும். இவ்விரண்டினலும நன்மைகள் எல்லாவற்றையும் அடையலாம். என்னுங் கொள்கையுடையவர்களாய்ச் சிவபெருமானைக்கூடச் சிறிதும்மதியாது ஆணவமுடையவர்களாகத் திகழ்ந்தார்கள். அவர்களுடைய மனமயக்கைப் போக்க எண்ணிய சிவபெருமான் தாம் ஐயமேற்பவராக ஆனர். திருமால் மோகினியாக மாறினர். இருவரும் முறையே முனிவர்களின் மனைவியாரிடமும் முனிவர்களிடமுஞ் சென்றார்கள். இதனல் முனிவர்களின் மனைவியர் கற்புச் சிதைந்தது. முனிவர்களும் மோகினி மயக்கில் சிக்கியுழன்றார்கள். பிறகு ஆணவத்தை யொழித்து நல்ல நிலையை அடைந்தார்கள். ஆணவம் உடையவர்களுக்கு எவ்வழியிலும் அல்லல் ஏற்பட்டேதீரும்.

[ஆணவம்]

---

651 தாரையின் கதை

தாரை யென்பவள் தேவகுருவாகிய வியாழ பகவானுடைய மனைவி. திங்கள் வியாழ பகவானிடங் கல்வி கற்றுக் கொண்டிருந்தான். திங்களின் இளமைப் பருவத்தையும்

அழகையும் தாரை கண்டாள்; அவனிடங் காதல் கொண் டாள். கணவனில்லாத சமயம் பார்த்துத் தன்னுடைய காதலைப் புலப்படுத்தினாள். குருவினுடைய மனைவியென்ப தையுந் திங்கள் மறந்தான். அவளுடைய கருத்துக்கு இணங்கினான். இருவரும் ஒன்றுபட்டனர். ஒரு நாள் திங்கள் தாரையைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு போய்விட்டான்.

குருவாகிய வியாழ பகவான் திங்களின் தீச்செயலை உணர்ந்தார். திங்களைக் கொல்வதற்குச் சூழ்ச்சிகள் செய் தார்; முடியவில்லை. பிறகு நான்முகன் கட்டளைக் கிணங்க திங்கள் தாரையை விட்டான். தாரை திங்களிடம் இருந்த போது புதனைப் பெற்றாள். வியாழ பகவான் தம் மனைவியை இழந்து அவதியுற்றதை அசுரர்களும் பிறரும் அவரிடமே கூறி எள்ளி நகையாடினர். இதனால் தேவ குருவுக்கு மிகுந்த இழிவு உண்டாகியது. அவர் வெளியே தலை நீட்டு வதற்குக்கூட நாணியவராய் மறைந்து திரிந்தார். புகழை விரும்புங் கற்புக் கரசியான மனைவியைப் பெருதவர்களுக்குத் தம்முடைய பகைவர்களின்முன்பெருமிதமாக நடந்து கொள் ளும் உயரிய பான்மை அமையமாட்டாது என்பதை உலகம் வியாழ பகவானிடம் உணர்ந்து தெளிந்தது.

[வியாழ பகவான்] (பாரதம்)

---

652. தாலியைக்கொடுத்த கதை

கொங்குவளநாட்டில் தளவாய் இராமப் பையனுடைய அதிகாரம் நடந்து கொண்டிருந்தது. அரசினருக்குச் செலுத்த வேண்டிய வரியைச் செலுத்தத் தவறிய பல பாளை யக்காரர்கள் சிறை வைக்கப்பட்டனர். சிறை வைக்கப் பட்டவர்களுள் சம்பந்தச் சர்க்கரை என்னும் வள்ளலும் ஒருவர்.

அந்நாளில் ஒரு தமிழ்ப் புலவர் சம்பந்தச் சர்க்கரை மன் னருடியாரிடம் போயிப் பரிசில் பெற எண்ணினார். புறப்பட்டு

ஆணூருக்குச் சென்றார். சம்பந்தச் சர்க்கரை சிறையிலிருப் பதை அறிந்தார். சிறை சங்ககிரித் துருக்கத்தில் இருந்தபடி யால் சங்ககிரித் துருக்கத்திற்கு வந்தார். வாயில் காவல ருக்கு நன்மொழிகள் கூறிச் சிறைச்சாலையுட் புகுந்தார். பல செல்வர்கள், ''ஐயா புலவரே! பரிசு பெறுவதற்கு இடம் இது தானே? அங்கிருந்தார்கள் அவர்கள் செய்யுள் பாடிவந்த புலவரைப்பார்த்து ஊரில் இருக்கிறபொழுது வரக்கூடாதா?'' என்று கூறி நகைத்தார்கள். சர்க்கரை மன்றாடியார் புலவரை இரு கைகளாலும் தழுவிக்கொண்டார். பல நன்மொழிகள் பகர்ந்து பாராட்டினர். பரிசு கொடுப்பதற்கு யாது செய்வ தென்று எண்ணமிட்டார். சிறைச்சாலைக்கு வெளியே வந்து தங்கியிருந்த தம்முடைய மனைவியிடம் ஓர் ஆளையனுப்பினர். மனைவியார் சமயத்தை அறிந்தார். அவரிடமும் அப்பொழுது வேறு பொருளில்லை. தமது கழுத்தில் இருந்த திருத்தாலி யைக் கொடுத்தனுப்பினர். அதனை மகிழ்ச்சியுடன் சர்க்கரை யார் புலவரிடம் கொடுத்தார். அதனைப் பெற்றுக்கொண்ட புலவர் அத்தாலியோடு இராமப் பையனிடஞ் சென்றார்.

> ''கொங்கினில் ராமப்பைய னதிகாரக் குரூரத்தினுல்
> கங்குல் இராப் பகல் சர்வ சங்காரஞ்செய் காலத்திலே
> சிங்கநற் சம்பந்தச் சர்க்கரை தேவி திருக்கழுத்தின்
> மங்கலி யந்தனைத் தந்தான் தமிழ்க்கவி வாணருக்கே''

என்னுஞ் செய்யுளைப் பாடினர். தளவாய் இராமப்பையன் இதனைக் கேட்டு மிகுந்த வியப்படைந்தான் சர்க்கரை மன்றாடியாரை அழைத்துவரக் கட்டளை யிட்டான். அவ ரைப்பார்த்து ''மன்றாடியாரே, நீர் கொடையாளி என்பதனை அறிந்தேன். நீர் செலுத்த வேண்டிய வரியைக் காலம் நன்மையாக முடிந்தவுடன் செலுத்தி விடும்'' என்று கூறி னான். ''மேலும் ஏதேனும் வேண்டுமா?'' என்று கேட்டான். சர்க்கரை மன்றாடியார் ''சிறையிலிருந்த மற்றைய பாளையக் காரர்களையும் சிறை நீக்கவேண்டும் என்று வேண்டிக் கொண்டார். இராமப்பையன் அவ்வாறே சிறை நீக்கினான்.

> ''சங்ககிரித்துருக் கத்திற் சிறையினிற் சார்ந்திடுநாள்
> சங்கையி லாதொரு பாவாணன் சென்று தமிழுரைக்க

அங்க ணிருந்துதன் இல்லாள் கழுத்தில் அணிந்
[திருக்கும்
மங்கலி யந்தனைப் பெற்றளித் தான்கொங்கு
[மண்டலமே''

[தாலியைக் கொடுத்த வள்ளல்] (கொங்குமண்டல சதகம்)

---

653. திங்களணிந்த கதை

தக்கனுக்கு விண்மீன்கள் இருபத்தேழு பெயரும் பெண்களாகப் பிறந்தார்கள். தக்கன் தன்னுடைய பெண்கள் இருபத்தேழு பெயரையும் திங்களுக்கு (சந்திரனுக்கு)த் திருமணஞ் செய்துகொடுத்தான். திங்கள் அப்பெண்கள் இருபத்தேழு பெயரிடமும் ஒரே வகையான அன்பு செலுத்தாமல் உரோகணியிடம் மட்டும் அளவுகடந்த காதலுடையவனாய் அவளையே விரும்பியொழுகினான். இதனையுணர்ந்த மற்றைப் பெண்கள் இச்செய்தியைத் தம்முடைய தகப்பனாகிய தக்கனிடங் கூறினர். தக்கன் இதனைக் கேட்டு மிகுந்த சீனங் கொண்டான். ''உன் கலைகளெல்லாம் தேய்ந் தொழிக'' என்று சாபமிட்டான். கலைகள் தக்கன் சாபப்படியே தேயத் தொடங்கின. ஒரு கலை மட்டும் எஞ்சி நின்ற சமயத்தில் திங்கள் சிவபெருமானைப் பணிந்து தன்னைக் காக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். சிவபெருமான் எஞ்சி நின்ற கலையைத் தம்முடைய சடையிற் சூடிக்கொண்டார். இதனால் அந்த ஒரு கலைதேயாது எஞ்சி நின்றது. பிறகு அக்கலைகள் இறைவன் அருளால் வளரவும் தேயவும் ஆயின.

'' கலைமதியப் புத்தரித்த வேணியர் ''

[திங்களணிந்தது] (திருப்புகழ்)

---

654. திங்களின் கதை (1)

சந்திரன் என்னும் திங்கள் வியாழ பகவானுடைய மாணவன். திங்களுக்கு ஆசிரியன் வியாழ பகவான்தான்.

வியாழ பகவான் திங்களிடத்தில் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தான். அவ்வாறு நம்பிக்கை வைத்திருந்தும் திங்கள் சமயமறிந்து தன்னுடைய ஆசிரியன் மனைவியையே கைப்பற்றிக் கொண்டு சென்றான். இதனை வியாழ பகவான் கண்டு மிகுந்த கவலையடைந்தார். மாணவனுக வந்து கலைகளைக் கற்றவனே இவ்வாறு தீமை செய்தானே என்று உள்ளம் வருந்தினர். திங்கள் நல்லவனுகத்தான் முதலில் திகழ்ந்திருந்தான். ஆசிரியனுடைய மனைவியின் அழகுதான் அவன் உள்ளத்தைக் கலக்கி மாறுபாட்டினைச் செய்தது. எவ்வகையால் ஆராய்ந்து தெளிந்த பிறகும் செயலை மேற்கொண்டு செய்யும் பொழுது அச்செய்கையால் வேறுபடுகிற மக்கள் இவ்வுலகத்திலே பலர் உளர் என்பதை அனைவரும் திங்களிடத்தில் ஐயமறக் கண்டு கொண்டனர்.

[வினைவகையால் உள்ளம் வேறுபடும்]

---

655. திங்களின் கதை (2)

திங்கள் விண்ணுலகத்தில் விளங்குபவன். ஒளியையும் குளிர்ச்சியையும் உலகத்திற்கு அளிப்பவன். இவனைத் தெய்வமாகக் கொண்டு அனைவரும் போற்றி வணங்குவர். இவன் கலைகள் நிறைந்து சிறந்த ஒழுக்கம் உடையவனுகத் திகழ்ந்திருந்தான். மிகுந்த சிறப்போடு விளங்கியிருந்த இவன் ஒழுக்கந் தவறினன். வியாழனுடைய மனைவியை விரும்பினன். அவனைக் கலந்து மகிழ்ந்தான்.

தேவர்கள் அனைவரும் இவனை இகழ்ந்தனர். இவன் எய்தியிருந்த மேன்மைகளெல்லாம் இவனுடைய கூடா ஒழுக்கத்தால் அடியோடு அழிந்துபோயின. பிறகு இறைவனைப் பணிந்து போற்றி ஒருவாறு விளங்கலானன். அல்லொழுக்கத்தால் பெரும்பழியை எய்துவர் என்பது இவனிடம் நன்கு விளங்கியது. இவன் வியாழன் மனைவியோடு கலந்திருந்தபோது தோன்றிய மகன்தான் புதன் என்பர்.

[நல்லொழுக்கமுந் தீயொழுக்கமும்]

---

656. திங்களைத் தேய்த்த கதை

தக்கன் சிவபெருமானைப் பகைத்து ஒரு வேள்வியைச் செய்தான். சிவபெருமான் அவ்வேள்வியை அழிக்குமாறு வீரபத்திரக் கடவுளை யேவினர். வீரபத்திரக் கடவுள் தக்கன் வேள்வி செய்யுமிடத்திற்கு வந்தார். கூடியிருந்த தேவர்களை யெல்லாம் நன்கு புடைத்தார். அப்பொழுது திங்கள் வீரபத்திரக் கடவுளுடைய கையில் அகப்பட்டான். தடியினால் ஓரடி அவனுக்குக் கொடுத்தார். காலினால் கீழே தள்ளினர். அவனுடலைக் காலால் நன்கு தேய்த்துத் துகைத்தார். வலி பொறுக்க முடியாத திங்கள் ஓலமிட்டான்.

[திங்கள் தொல்லுக்குள்ளானது]

---

657. திதியின் கதை

வெகுகாலத்திற்கு முன்னர் காசிபர் என்னும் பெயருடைய முனிவர் ஒருவர் தவஞ்செய்து கொண்டிருந்தார். அவருக்குப் பல மனைவியர் இருந்தனர். அவர்களில் ஒருத்திக்குத் திதி யென்று பெயர். அவள் தேவர்களுக்கு அரசனான இந்திரனை வெல்லுமாறு ஒரு மகன் பிறக்க வேண்டுமென்று எண்ணினாள். காசிபருடைய அருளால் கருப்பத்தை அடைந்தாள். இந்திரன் இதனை உணர்ந்தான். அவளுடைய முடிவைக் கெடுக்க நினைந்தான். அவளுக்கு மாணவனாக அமர்ந்து பணிகள் செய்தான்.

ஒருநாள் மாலைப் பொழுதில் திதி தூய்மையில்லாமல் தூங்கிக் கொண்டிருந்தாள். அப்பொழுது இந்திரன் காற்று வடிவமாக அவளுடைய வயிற்றிற் புகுந்தான். வச்சிரப் படையினால் கருப்பத்தில் இருந்த குழந்தையை ஏழு துண்டங்களாக்கிவிட்டு வெளியில் வந்து விட்டான். திதி விழித்துக் கொண்டதுஞ் செய்தியை உணர்ந்தாள். அறிவில்லாமல் பகைவனுக்கு இடங்கொடுத்துக் கெட்டுப் போனேனே என்று மிகுந்த வருத்தமடைந்தாள். ஏழு துண்டங்களும் ஏழு வடிமா

கிப் பிறந்து சப்தமருத்துக்கள் என்னும் பெயரோடு உலகத்தில் இருக்கின்றன. பகைவனுக்கு இடங்கொடுப்பவர்கள் தாங்கள் எண்ணிய எண்ணத்தை முடிக்கமாட்டார்கள். இதனைக் கருதியே பெரியோர்கள் "மாற்ருனுக்கு இடங் கொடேல்" என்று சொல்லி யிருக்கிருர்கள்.

[மாற்ருனுக்கு இடங் கொடேல்]

---

658. திரணுசனன் கதை

வடநாட்டிலே முன்னளில் பன்னுசனன் என்னும் பெயரையுடைய ஓர் அந்தணன் இருந்தான். அவனுக்குத் திரணுசனன் என்னும் பெயரையுடைய ஒரு மகன் தோன்றினன். அவன் மறை முதலிய நூல்களை ஓதியுணர்ந்து சிறந்து விளங்கினன். அவன் தன்னுடைய ஆசிரியன் கட்டளைப்படி சிவப்பதிகளுக்குப் பயணம் புறப்பட்டான். சிவப்பதிகள் பலவற்றையும் போற்றி வழிபட்டுக்கொண்டு திருப்பூவணம் என்னும் பதியை அடைந்தான். மணி கர்ணிகை யென்னுந் திருத்த நீரில் மூழ்கியெழுந்தான். உமா தேவியை மட்டும் போற்றி வழிபட்டான். சிவலிங்கப் பெருமானைப் போற்றி வழிபடவில்லை. திருச்சுழியல் என்னும் பதியை அடைந்து சிவபெருமானைப் போற்றி வழிபட்டுத் திருப்பூவணத்திற்கு மீளவும் வந்து சேர்ந்தான். மணிகர்ணிகைத் தீர்த்தத்தில் மூழ்கிக் கரையேறினன். உடனே அரக்கனுக மாறித் தன்னறி விழந்து வருந்தினன். பசிப்பிணி அவனை வாட்டியது. அப்பொழுது நாரத முனிவர் அங்கு வந்து, "நீ யார்?" என்று உசாவினர். அவ்வளவில் அவனுக்குச் சிறிது அறிவு விளங்கியது. நிகழ்ந்ததைக் கூறினன். அரக்கனுக மாறியதற்குக் காரணந் தெரியவில்லை யென்ருன். நாரத முனிவர் மெய்யறிவுப் பார்வையினல் நிகழ்ந்ததை உணர்ந்தார். "பூவண நாதரை நீ முதலில் வழிபடாது தேவியை வழிபட்ட குற்றத்தால் இவ்வுருவத்தைப் பெற்று மயங்குகிருய். இனி மேல் முதலில் பூவண நாதரை வணங்கிப் பிறகு அம்மையாரை வணங்கினல் நற்கதி பெறுவாய்". பிரம தீர்த்தம் முறை தவறிய குற்றம் முதலியவைகளைப் போக்கும். அதில்

கார்த்திகைத் திங்களில் கார்த்திகை நாளில் மூழ்குவது சிறப் பாகும். அத்தீர்த்தத்தில் மூழ்கி அரக்க உருவை மாற்றிப் பூவணநாதரை வழிபடுவாய். காசி முதலிய பதிகளிற் செய்த தீவினை இப்பதியில் நீங்கும்'' என்று கூறி அகன்றார். திரணு சனன் நாரதர் கூறியபடியே நீராடி இறை வழிபாடு செய்து வீடுபேற்றை யடைந்தான்.

'' மெத்தத்,
தருக்கு திரணுசனர் தம்மணுக்க ராக
அரக்க உருவொழித்த அம்மான் ''

[திரணுசனன்] (திருப்பூவண நாதருலா)

---

659. திரி சங்கு கதை

திரிசங்கு கதிரவன் குலத்தில் தோன்றியவன். தந்தை யினுடைய பெயர் சத்தியவிரதன். மெய்ம்மையாளனாக மேன்மையடைந்து திகழ்ந்த அரிச்சந்திரன் இவனுடைய மகன்தான்.

இவன் ஒருநாள் தன் குலகுருவாகிய வசிட்டரிடம் போய்த் தான் ஊனுடலோடு வானுலகம் போகவேண்டு மென்று சொன்னான். ''அவர் இவ்வுடலோடு ஆங்கடைதல் கூடாது. இவ்வுடல் இங்கொழிந்தவுடன் அங்கு மேவலாம்; அதுவரை பொறுத்திரு'' என்றார்.

திரிசங்கு சினங் கொண்டான். ''நான் விரும்பியதை முடிக்காத நீர் என்ன குரு?'' என்று அவரிடஞ் சினங் கொண்டான். உம்மால் முடியாவிட்டால் நான் வேருருவரைக் கொண்டு இக்காரியத்தை நிறைவேற்றிக்கொள்ளுகிறேன்'' என்றான்.

மாணவனுகிய மன்னன் இப்படி வம்பு செய்யவே வசிட்டருக்குஞ் சினம் உண்டாகியது. ''முடியாததை முடிக்க வேண்டு மென்று துடிக்கிற நீ புலையனுகக் கடவாய்'' என்று புகன்றார் சாபம். அவன் உடனே புலையனுனான். வசிட்டர் இவனை நீங்கி வேறிடம் போய் விட்டார்.

சினம் என்னும் சேர்ந்தவரை அழிக்கும் நெருப்பு, இனம் என்று சொல்லப் பெறுகிற பாதுகாப்பாகிய மரக்கலத்தையும் அழித்தொழிக்கும் என்பது இவனிடம் நன்கு விளங்கியது.

[சினமென்னும் நெருப்பு]

---

660. திரிசங்கு சுவர்க்கக் கதை

கோசிகர் என்பவர் முதலில் ஓர் அரசராக இருந்தார். பிறகு அரசைத் துறந்து தவஞ் செய்து சிறந்த முனிவரானார். தமது தவப் பெருமையால் எதையும் முடிக்கக் கூடிய திறலுடையவரானார்.

அந்நாளில் அயோத்தியில் திரிசங்கு என்னும் பெயருடைய கதிரவன் குலத்து வேந்தன் ஒருவன் இருந்தான். அவன் தன்னுடைய குருவின் சாபத்தால் புலையனானான். அதனால் மிக இழிவடைந்து காடெங்குஞ் சுற்றித் திரிந்தான். இறுதியிற் கோசிக முனிவரைக் கண்டு வணங்கினான். அவர் திரிசங்கின் செய்தி முழுவதையும் உசாவியறிந்தார். அவனுடைய சிறுமையைப் போக்கி அவனைத் தேவர்களில் ஒருவனாக்க எண்ணினார். அதன் பொருட்டு வேள்வி ஒன்று செய்ய முயன்றார். முனிவர்களை அழைத்தார்; முனிவர்கள் வேள்விக்கு வரமறுத்தனர். மறுத்தவர்கள் அனைவரையும் வேடர்களாகுமாறு இவர் சபித்தார். அம்முனிவர்களும் அவ்வாறே வேடர்களாகிப் பலவாறு இழிந்து அலைந்தனர்.

பிறகு கோசிகர் திரிசங்கைப் பார்த்து, "நீ போய்த் துறக்கத்தில் இரு" என்று ஏவினார். உடனே திரிசங்குமேல் எழுந்து தேவர் உலகின் எல்லையை அடைந்தான். தேவர்கள் புலையனான திரிசங்கு இங்கு வருகிறானே என்று எண்ணித் தலைகீழாகத் தள்ளினர். திரிசங்கு கீழே விழும்போது கோசிக முனிவரைக் கூவி அபயமிட்டான்.

கோசிகர் திரிசங்கை, "நில் நில் நில்" என்று சொல்லி அந்தரத்தில் அப்படியே நிறுத்தி அவ்விடத்தை ஒரு சுவர்க்கமாகச் செய்தார். இதுவே திரிசங்கு சுவர்க்கம். மேலும்

வானுலகப் படைப்பையுந் தொடங்கினர். தேவர்கள் கோசி கருடைய ஆற்றலுக்கஞ்சி அவர் நோக்கப்படியே நடந்து கொண்டனர்.

பகைவர்களை அழித்தலும் நண்பினரை வாழச் செய்தலும் நினைக்குமிடத்துத் தவத்தால் முடிவதாம் என்பதை அனைவரும் கோசிகரிடத்தில் அறிந்து கொண்டனர்.

[தவத்தின் சிறப்பு]

———

661. திரிசடை கதை

திரிசடை என்பவள் விபீடணனுடைய மகள். இராவணன் சீதா பிராட்டியை இலங்கைக்குக் கொண்டுபோய்ச் சிறை வைத்தபோது இவளையும் வேறு சில அரக்கிகளையுங் காவல் வைத்தான். மற்றைய அரக்கிகள் சீதா பிராட்டியிடம் வன்சொற் கூறிக் கொடுமையாக நடந்துகொண்டனர். இவள் ஒருத்தி மட்டும் இன்சொல் இயம்பித் தெளிவுரைகள் பல செப்பினள். இன்சொல் இயம்பிய இவள் தன் தந்தை தையாகிய விபீடணன் அரசாட்சியை மேற்கொண்டதும் இம்மை யின்பங்களையெல்லாம் அடைந்தாள். இவ்வுலக வாழ்வைத் துறந்ததும் மறுமை யின்பமும் இவளுக்குக் கிட்டியது. சிறுமையற்ற இன்சொல் இம்மையிலும் மறுமையிலும் இன்பத்தை யளிக்குமென்பது இவளால் நன்கு விளங்கியது.

[இன்சொல்]

———

662. திருக்கண் புதைத்த கதை

திருக்கயிலையில் ஒருநாள் இறைவனும் இறைவியும் இனிதமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தனர். அப்போது இறைவி இறைவனைப் பார்த்து, "உலகத்திற்கு ஒளியினை அளிக்கும் ஞாயிறும் திங்களும் யாவர்?" என்று

உசாவினுள். இறைவன் இறைவியைப் பார்த்து "உமையே கேள் அவர்கள் இருவரும் நம்முடைய கண்களாவர்" என்று மறுமொழி கூறியருளினர்.

இம்மறுமொழியைக் கேட்ட இறைவி, அப்படியா?' என்று கூறி விளையாட்டாக இறைவனுடைய திருக்கண்கள் இரண்டையுந் தன்னுடைய கைகளால் மூடினுள். அவ்வளவில் உலகம் பேரிருளில் மூழ்கியது. உலகத்துயிர்களெல்லாம் தலைதடுமாறின. இறைவி திருக்கண்களைப் புதைத்து மறைத்தது ஒரு கணமேயாயினும் மானிடர்க்குப் பல்லாண்டுகளாயின. அக்காலையில் உலகம் இருளில் அடைந்த அல்லல் இயம்புதற்கரியவாயின. உலகம் கடவுளே முதலாகக் கொண்டது என்னுஞ் செய்தியை அனைவரும் அன்று நன்கு உணர்ந்து கொண்டனர்.

[உலகம் கடவுளே முதலாக உடையது] (அருணைசலப் புராணம்)

---

663. திருக்களிற்றுப்படியார் கதை

திருத்தில்லையில் எழுந்தருளி யிருந்த திருக்கடவூர் உய்ய வந்த தேவநாயனுர். தம்முடைய அறிவாசிரியராகிய உய்ய வந்த தேவநாயனுர் அருளிச் செய்த சைவசித்தாந்த நூல்கள் பதினுன்கனுள் திருவுந்தியாரின் உட்கிடையை விளங்கக் காட்டுமாறு ஒரு நூல் செய்தார். அந்நூலைக் கூத்தப்பிரான் திருமுன்பு வைத்துப் படிக்கத் தொடங்கினுர். தில்லைவாழ் அத்தணர்கள் "கூத்தப்பிரான் திருமுன்பு படியிலுள்ள கல்யானை இந்நூலைப் படியின்மேல் வைத்தால் படிக்கலாம்" என்று கூறினுர்கள். உய்யவந்த தேவநாயனுர் அதற்கு உடன்பட்டு நூலைக் கல்யானையின்மேல் வைத்தார். அக்கல்யானை நூலைத் துதிக்கையால் எடுத்துப் படியின்மீது வைத்தது. அதனுல் அந்நூலுக்குத் திருக்களிற்றுப்படியார் என்று பெயர் உண்டாகியது.

[திருக்களிற்றுப் படியார்]

---

664. திருக்குறிப்புத் தொண்டர் கதை

உறுபத்தி பொருந்திய அறுபத்து மூன்று நாயன்மார் களில் இவர் ஒருவர். தொண்டைவள நாட்டிலே காஞ்சிமா நகரிலே வண்ணர் குலத்திலே பிறந்தார். பிற உயிர்களிடத் திலே இரக்கம் பொருந்தியவர். சிவனடியார்களிடத்திற் பேரன்பு பொருந்திய இவர் அவர்களுடைய குறிப்பறிந்து இயன்ற உதவியைச் செய்தார். அதனால் இவருடைய பெயர் திருக்குறிப்புத் தொண்டர் என மருவியது.

இவருடைய பெருமையை இவ்வுலகினர் உணர்ந்து கொள்ளவில்லை. இறைவன் அதனைத் தாமே அறிவிக்க எண்ணினர். ஓர் அடியவர்போல் இவருக்குமுன்னே தோன்றி னர். இடையிலே இருந்த உடை அழுக்குடையதாக இலங்கி யது. திருக்குறிப்புத்தொண்டர் அவ்வாடையினை வெளுத்துத் தர எண்ணினர். தமது நோக்கத்தை அடியவர்க்குத் தெரி வித்தார். அவருஞ் சரி என்று தந்தார். மாலைப்போதுக்குள் தந்துவிடவேண்டும் என்று கட்டளை யிட்டார்.

இவர் துணியைத் துவைத்துக் காய வைக்கத் தொடங் கியதும் இறைவன் அருளால் பெரு மழை பொழியத் தொடங் கியது. மாலைவரை அம்மழை நிற்கவில்லை. அடியவர் இயம் பியபடி மாலைப்போதுக்குள் ஆடையை வெளுத்துக் கொடுக்க முடியாமற் போயிற்றே என்று உள்ளம் வருந்தினர். தமது தலையைத் துணி துவைக்குங்கல்லில் மோதிக் கொண்டார். ஆயினும் இறைவனுடைய அருளால் இவருடைய மண்டை உடையவில்லை. இறைவன் தோன்றி இன்னருள் புரிந்தார்.

துன்பமானது அருளினை மேற்கொண்டவர்கட்கு உண் டாகமாட்டாது. காற்று இயங்கும் இவ்வுலகத்திலே வாழ் கின்ற மக்களே அதற்குச்சான்று என்று அறநூலோர் கூறியது இவரிடம் நன்கு அமைந்தது.

" தலையுடை யொலிக்குஞ் சிலையிடை மோதியும் "

[திருக்குறிப்புத் தொண்டர்] (நால்வர் நான்மணிமாலை)

———

665. திருக்கூத்துக் காட்டிய கதை

குருநமசிவாயர் என்பவர் குகை நமசிவாயருடைய மாணவர். இவரிடந் திருவருள் சிறந்து திகழ்ந்தது. இவர் தம் முடைய ஆசிரியரின் கட்டளைப்படி திருத்தில்லையை அடைந்து தங்கினர். இவருடைய பெருமையைத் தில்லைவாழ் அந்தணர்கள் நன்குணர்ந்து கொள்ளவில்லை. பலவகையாலும் அவருடைய சீரை ஆராய்ந்து பார்த்தனர். கூத்தப் பிரானுடைய திருக்கூத்தைப் பார்க்க வேண்டுமென்று தெரியப்படுத்திக் கொண்டார்கள். குருநமசிவாயர் அதற்கு இணங்கினர். "காற்று வந்து சுவாமி அசைந்ததே தவிரக் கூத்து அன்று என்று சொன்னாலுஞ் சொல்வீர்கள். வாசல் கதவுகளையெல்லாம் நன்றாக அடைத்து விடுங்கள்" என்று கூறி அவ்வாறே அடைக்கச் செய்து கூத்தப்பிரானிடம் கூத்தினை இப்பொழுது தில்லை வாழந்தணர்களும் யானுங் காணுமாறு ஆடியருளவேண்டு மென்று வேண்டிக் கொண்டார். கூத்தப்பிரானும் அவ்வாறே ஆடியருளினர்.

"செப்புநடத் தைத்தே சிகநமசி வாயர்களிப்
புப்பெறக்காட் டுந்தென் புலியூரே"

[திருக்கூத்து]

(புலியூர் வெண்பா)

---

666. திருதராட்டிரன் கதை

திருதராட்டிரன் துரியோதனனுடைய தந்தை. இவனுடைய உள்ளத்தில் எந்நாளிலும் நல்லெண்ணம் இருந்ததில்லை. ஒருவரைக் கண்டவுடன் அவர்களுக்கு முன்னுல் மிகப் புகழ்ச்சியாகப் பேசுவான். அவர்கள் அப்பாற்போய் விட்டாலோ இகழ்ச்சியாகப் பேசுவான். பாண்டவர்களிடத்திலும் இவ்வாறுதான் காணுவிடத்தில் இகழ்ந்துரைத்தலையும் கண்டவிடத்தில் புகழ்ந்துரைத்தலையும் மேற்கொண்டிருந்தான்.

பாண்டவர்களைச் சூதாடுதற்கு அழைக்குமாறு துரியோதனன் கூறியபோது இவன் அவ்வாறே அழைத்துவரச்

செய்தான். பாண்டவர்களோ ஒழிப்பதற்குவேண்டிய வழி களையும் தம் மக்களுக்குச் சொல்லிக்கொடுத்துக்கொண் டிருந்தார்.

ஒருநாள் பாண்டவர்களைக் கண்டதும் "என்னுடைய அருமைத் தம்பியின் மக்களே! நீங்களும் என் மக்களாகிய துரியோதனன் முதலியோரும் எவ்விதமான பகையும் இல்லாமல் மிக ஒற்றுமையாக வாழ்ந்திருங்கள். நீங்கள் ஒற்றுமையாக வாழ்ந்திருத்தலேத்தான் நான் எதிர்பார்க் கிறேன்" என்று அறவுரைகள் பல புகன்றான்.

வீடுமர், விதுரர், துரோணர் முதலியோர் இக்கொடி யோனும் இவ்வாறு அறவுரை கூறுகிறானே இதுவும் ஓர் அறவுரையா? என்று உள்ளத்திலே எண்ணி எள்ளி நகையாடினார்கள்.

ஒருவன் அறஞ் சொல்லும் உள்ளம் உடையவன் அல்லன் என்பதை அவன் புறங்கூறிப் பழிக்கும் இழிதகவால் நன்கு உணர்ந்துகொள்ளலாம் என்பது இத் திருதராட்டிர னிடத்திலே நன்கு விளங்கியது.

[நல்லவன் அல்லன் என்பதை அறிந்துகொள்ள வழி] (பாரதம்)

---

667. திருநாவுக்கரசர் கதை

அப்பர் என்றும் வழங்கப்பெறுகிற இவர் சமய குரவர்கள் நால்வரில் ஒருவர். திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூரிலே வேளாளர் குலத்திலே குறுக்கையர் குடியிலே தோன்றி யவர். தந்தையார் பெயர் புகழனார். தாயார் பெயர் மாதினியார். அப்பருக்குத் தமக்கையார் ஒருவரும் இருந் தார். அவருடைய பெயர் திலகவதியார்.

அப்பர் இளமைப் பருவத்தில் எல்லாக் கலைகளையும் வழுவறக் கற்றார். பிறகு பழவினைப் பயனால் சமண சமயத் தைச் சார்ந்தார். அச் சமய நூல்களைக் கற்றுத் தேர்ந்து தருமசேனர் என்னுஞ் சிறப்புப் பெயரும் பெற்றுத் திகழ்ந் தார். பிறகு தாம் மேற்கொண்டுள்ள மதம் பொய்யென்று

கண்டு சைவ சமயத்திற்கே திரும்பினர். சமணர்கள் இவருக்கு அல்லல்கள் பல இயற்றினர். கல்லோடு சேர்த்துக் கடலிலே விட்டார்கள். நீற்றறையில் தள்ளினர்கள். யானைக் காலிலே இடறினர்கள். நஞ்சை ஊட்டினர்கள்.

சமணர்கள் செய்த தொல்லை அப்பரைச் சிறிதும் வருத்தவில்லை. அப்பர் இறைவனுடைய திருவடிகளை எண்ணிக்கொண்டு எத்தகைய துன்பமும் இல்லாமலிருந்தார். இறைவனுடைய திருவடிகளைப் போற்றி வழிபடுபவர்கள் எத்தகைய துன்பத்தையும் அடையமாட்டார்கள் என்னும் உண்மையை இவர்பால் நன்குணர்ந்துகொண்டது.

[இறைவனடியார் துன்பமடையார்] (பெரியபுராணம்)

---

668. திருநீலகண்ட நாயனார் கதை

திருத்தில்லையிலே குயவர் குலத்தில் தோன்றிய சிவனடியார் ஒருவர் இருந்தார். அவர் சிவபெருமானுடைய திருக்கழுத்தைத் திருநீலகண்டம் என்று புகழ்ந்து பேசுவார். அதனல் இவருடைய பெயர் திருநிலகண்ட நாயனர் என்று வழங்கியது. இவர் தமது குலத்தொழிலைச் செய்துகொண்டும் சிவனடியார்கட்குத் திருவோடு முதலியன செய்து கொடுத்துக்கொண்டும் இருந்தார். இவர் ஒருநாள் விலை மகள் ஒருத்தியினுடைய இல்லத்திற்குப் போய்விட்டுத் திரும்பினர். இதனை அறிந்த இவருடைய மனைவி உள்ளத்திற் சினங்கொண்டாள். அவர் தம்மைத் தொடவந்த பொழுது, "நீர் எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம்" என்று ஆணையிட்டார்.

மனைவியார், எம்மை என்று பன்மையாகச் சொன்ன படியால் இனிமேல் பெண்களைத் தொடுவதில்லை என்று உறுதிபூண்டிருந்தார். அவர்களுடைய இளமையும் போய் முதுமை வந்தது. இறைவன் இவர்களுடைய மனவுறுதியையும் தம்மீது வைத்துள்ள அன்பையும் உலகிற்குணர்த்த எண்ணினர். ஒருநாள் சிவனடியார்போல் கோலங்

கொண்டு திருநீலகண்டர் இல்லத்திற்கு வந்தார். ஓடு ஒன்றை நாயனாரிடங் கொடுத்து, "இதனை வைத்திருந்து நான் மீண்டு வந்து கேட்கும்பொழுது கொடு" என்று கூறிவிட்டுச் சென்றார்.

நாயனார் உள்ளேவைத்த ஓடு மறையும்படியாகச் செய்தார். பிறகு இவரிடம் வந்து, "நான் உன்னிடம் வைத்த ஓட்டைக் கொடு" என்று கேட்டார். நாயனார் உள்ளே சென்றார். ஓடு காணப்பெறவில்லை. எங்குந் தேடிப் பார்த்தார்; அகப்படவில்லை. கடவுளாகிய அடியாரிடம் வந்து தாங்கள் தந்துசென்ற ஓடு காணப்பெறவில்லை. வேறே ஓடு தருகிறேன் என்று கூறினார். வந்தவர் ஒப்புக்கொள்ளவில்லை. உன் மனைவியின் கையைப் பிடித்துக்கொண்டு நீரில் மூழ்கி ஆணையிடு" என்றார். மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டு மூழ்க நாயனார் பின்வாங்கினார். அடியாராக வந்த இறைவன் தில்லைவாழந்தணர்களிடத்தில் சென்று முறையிட்டார். அவர்கள் உசாவினர்கள். பிறகு மனைவியின் கையைப் பிடித்துக்கொண்டு நீரில் மூழ்கி ஆணையிட்டு உண்மையை விளக்குமாறு கூறினர்கள். நாயனார் தடி ஒன்றைப் பிடித்துக்கொண்டு மூழ்கத் தொடங்கியபோது, அவ்வாறு மூழ்கக்கூடாது; கையைப் பிடித்துக்கொண்டு மூழ்கவேண்டு மென்றார். கையைப் பிடித்துக்கொண்டு மூழ்க முடியாமைக்குக் காரணத்தை நாயனார் விளக்கினார். பிறகு நீரில் மூழ்கி இருவரும் இளமைபெற்றுக் கரையேறினர்கள். இறைவன் இருவருக்கும் திருவடிப்பேற்றை யருளினார்.

"நேயமனை யாளுடனே நீலகண்ட னார்முதுமை
போயிளமை பெற்ற புலியூரே"

(புலியூர் வெண்பா)

"மாது சொன்ன
சூளால் இளமை துறக்கவல் லேனல்லேன்"

[திருநீலகண்டர்] (பட்டினத்தார்)

669. திருப்பாணழ்வார் கதை

திருப்பாணழ்வார் என்பவர் உறையூரில் நெற்பயிரின் கதிரில் தோன்றினர். பஞ்சமகுலத்தில் பாணர் வகுப்பில் புறத்தானெருவன் வளர்க்க வளர்ந்தார். பாப்பாடலில் தோச்சி பெற்றார். திருமாலின் அன்பரான இவர் திருவரங்க நாதனுக்குத் திருப்பாடல் தொண்டு செய்ய எண்ணினர். தாம் தாழ்ந்த குலத்தில் வளர்ந்த படியினல் திருவரங்கத்திற் குள் நுழையாத் துணியாமல் தென்திருக் காவேரியின் தென் கரையில் திருமுகத்துறைக்கு எதிரிலே யாழுங் கையுமாக நின்று கொண்டு இசை பாடுந் திருத்தொண்டை மேற் கொண்டார். இத்தொண்டு வெகு நாள் வரையில் நடை பெற்றுக் கொண்டிருந்தது. பெருமான் இவரைத் தம்முடைய அடியிற் சேர்த்துக் கொள்ள எண்ணினர். தமக்குத் தொண்டு செய்பவரான உலக சாரங்க முனிவரின் கனவில் தோன்றி, "நமக்கு நல்லன்பரான பாண்பெருமானே இழிவாக எண்ணுமல் தோள்களில் எழுந்தருளச் செய்துகொண்டு வாரும்" என்று கட்டளை யிட்டார். அம்முனிவரும் அவ் வாறே சென்று பாணரைத்தம் தோள்களில் ஏற ஒப்புக்கொள் ளச்செய்து கொண்டு வந்து சேர்த்தார். இத்தகைய பெருமை பொருந்திய இவர் ஆழ்வார்களில் ஒருவரானர்.

[பாண்பெருமாள்]

---

670. திருமகள் வழிபட்ட கதை

வைகுண்டத்திலே திருமால் திருமகளோடு எழுந்தருளி யிருந்தார். அவர் யோக நித்திரையில் இருக்கும்போது வாலர்கில்லியர் என்னும் இருமுனிவர்கள் அங்கு வந்தார்கள். அவர்கள் குறுகிய உருவமும் பெருவிரல் அளவு வடிவமும் உள்ளவர்கள். அவர்களைத் திருமகள் பார்த்து எள்ளி நகை யாடினுள். "உருவு கண்டெள்ளாமை வேண்டும்" என் னும் குறள் திருமகளுக்குத் தெரியாதன்றே? அம்முனிவர் கள் மிகுந்த சினத்தோடு வந்த வழியே திரும்பிச்சென்றார்கள்:

திருமால் யோக நித்திரையிலிருந்து விழித்தார். நிகழ்ந்ததை உணர்ந்தார். திருமகள்மீது சினங் கொண்டு அவளுக்கு வசவுரை வழங்கினர். விரைந்து சென்று முனிவர்களைக் கண்டார். அவர்களை வணங்கினர். "என்னுடைய மனைவி அறியாமற் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும்" என்று சொல்லி வேண்டிக் கொண்டார். அவர்கள், "திருப்பூவணஞ் சென்று இறைவனை வழிபட்டால் ஏற்பட்ட குற்றம் விலகும்" என்று கூறிச் சென்றார்கள். பிறகு திருமாலும் திருமகளும் பூவணத்தை யடைந்து இறைவனைப்போற்றி வழிபாடு செய்து குற்றம் நீங்கப் பெற்று வைகுண்டத்தை யடைந்தார்கள்.

"உருமே னிவந்தமா யோனைத் தவஞ்செய்
திருமேனி தீண்டவருள் செய்தோன்"

[திருமகள் தவறு செய்தது] (திருப்பூவண நாதருலா)

---

671. திருமங்கை மன்னன் கதை

திருமங்கை மன்னன் என்பவர் முன்னாளில் சோழவள நாட்டில் வாழ்ந்திருந்தார். திருமாலிடம் பெருமாள் கொண்ட இவர் அவர் தம் அடியார்கட்கு உண்டி, உடை முதலியன வழங்க எண்ணினர். கையில் இருந்த பொருள்கள் முழுவதும் விரைவிற் செலவழிந்து விட்டன. மேற்கொண்டு நடத்துவதற்குப் பொருளில்லை. அதனால் இவர் உள்ளந் தளரவில்லை. துணைவர்கள் சிலரை உடன் சேர்த்துக் கொண்டு கொள்ளையடித்தார். அவ்வாறு கொள்ளையடிக்கப்பட்ட பொருளைத் தருமப்பணிக்குச் செலவிட்டார்.

நாகப்பட்டினத்தில் பௌத்தர் கோவிலில் பொன்னாற் செய்யப்பட்ட உருவம் ஒன்று இருந்தது. அதனையெடுத்து திருவரங்கத்தில் திருப்பணி செய்ய எண்ணினர். ஆனால் அக்கோவிலுக்குள் புகமுடியாதவாறு வாயில் சுருக்கிக் கட்டப்புட்டு அவ்வாயிலிலே மிகு விரைவாகச் சுழலும் உருளை

யொன்று நாட்டப்பட்டிருந்தது. யாரேனும் அவ்வாயிலில் புகமுயன்றால் அவ்வுருளைப் படையின் விரைவில் தாக்குண்டு விழுநேரிடும். ஆனால் இவர் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. வாழைத் தண்டுகளை ஒன்றன் பின் ஒன்றாகக் கொடுத்து அதன் விரைவைத் தடுத்தார். பொன்னுருவை எடுத்துக் கொண்டுபோய் எண்ணியவாறு செய்தார். ஊக்கமுடையவர்கள் எவ்வாறேனும் தாம் எண்ணிய காரியத்தைத் திண்ணமாக முடித்தே தீருவர் என்பதை இவர்பால் அனைவரும் அறிந்தனர்.

[ஊக்கம் உடையவர் உள்ளத் தளரார்]

---

672. திருமழிசையாழ்வார் கதை

திருமழிசையாழ்வார் என்பவர் திருமாலடியவர்களில் ஒருவர். வெகு காலத்திற்கு முன்பு இருந்தவர். இவர் பருவமடைந்த பிறகு இல்லறத்திற் புகாமல் துறவறத்தையடைந்து ஓரிடத்தில் தங்கியிருந்தார். தெளிவான மெய்யறிவு இவரிடம் நன்கு அமைந்திருந்தது. எண் வகைச் சித்திகளையும் இயற்றவல்ல ஆற்றலை இவர் எய்தியிருந்தும் அவைகளொன்றையும் நாடாமல் அவாவில்லாதவராக விளங்கினர்.

ஒருநாள் இவர் தனிவழியே சென்று கொண்டிருக்கும் போது வழியிலே ஓரிடத்தில் பணப்பை ஒன்று கிடந்தது. அதனைக் கண்ட இவர் "அதோ அங்கு ஆட்கொல்லி இருக்கின்றது" என்று சொல்லிக்கொண்டே விரைந்தோடினர். அவ்வழியே வந்த நால்வர் அப்பணப்பையைக் கண்டார்கள். இதனை ஆட்கொல்லி என்று இயம்பிக் கொண்டு ஓடுகிற அவன் பித்தன் போலும் என்று கூறிக்கொண்டே அப்பையை எடுத்துக் கொண்டு சென்றார்கள். அப்பொருளை ஒவ்வொருவரும் தாந்தாம் அடையவேண்டும் என்று எண்ணிச் சூழ்ச்சி செய்து நால்வரும் மாண்டார்கள்.

அவா இல்லாதவர்களுக்குத் துன்பம் இல்லையாகும். அவா இருந்தால் துன்பங்களும் மேலும் மேலும் ஒழியாமல்

வரும் என்பது, இந்த ஆழ்வாரிடமும் பொருளை யெடுத்துக் கொண்டு சென்றவர்களிடமும் நன்கு விளங்கியது.

[அவா இல்லாதவர்களுக்குத் துன்பமும் இல்லை] (ஆழ்வார் வரலாறு)

---

673. திருமங்கையாழ்வார் கதை

சோழ மன்னனுடைய கட்டளைப்படி மங்கை நாட்டுக்கு அரசராக இருந்த இவர் குமுதவல்லி யென்னும் பெயருடைய கட்டழகியைத் திருமணஞ் செய்து கொள்ள எண்ணினர். அவளுடைய விருப்பத்தின்படி நாள்தோறும் ஆயிரத்தெட்டு வைணவர்களுக்கு அமுது செய்வித்துக்கொண்டு வந்தார். கைப்பொருள் முழுவதுஞ் செலவாகிவிட்டது. வழிப்பறி செய்தாகிலும் பொருள்தேடி வைணவர்களுக்கு அமுதளிக்க வேண்டும் என்று உறுதி பூண்டார். வழிச் செல்வோரைக் கொள்ளையடித்துத் தம்முடைய திருத்தொண்டை நடத்தி வந்தார். திருமால் இவரையாட்கொள்ளக் கருதினர். தாம் அந்தண வேடங் கொண்டு பல அணிகலன்களைப் பூண்டு மணவாளக் கோலமாய் இவர் எதிரில் தோன்றினர். இவர் பெருமானைக்கண்டு நமக்கு நல்ல வருவாய் வந்தது என்று மகிழ்ந்தார். கையிற் படைக் கலங்களோடு அவர்களை வளைத்து ஆடையணிகளை யெல்லாம் கைப்பற்றிக் கொண்டார். மணமகன் காலில் அணிந்துள்ள ஆழியொன்றைக் கழற்ற முடியவில்லை. ஆனால் இவர் அதனையும் விடாமல் பற்களாலே கடித்து இழுத்தார். இவருடைய மிடுக்கை நோக்கிய பெருமாள் இவருக்குக் கலியன் என்று ஒரு பெயர் கொடுத்தார்.

[திருமங்கையாழ்வார்]

---

674. திருமாலைச்சிவனுக்கிய கதை

வடநாட்டில் இருந்து தென்னாட்டிற்கு வந்த அகத்தியர் பொதியமலைச் சாரலையடைந்தார். அப்பொழுது திருக்குற்ரு

லம் திருமாலின் பதியாகத் திருமுற்றம் என்னும் பெயரோடு விளங்கிக் கொண்டிருந்தது. அங்கு வைணவர்கள் பலர் ஆரவாரஞ் செய்து கொண்டிருந்தனர். அவர்கள் அகத்தியருடைய சிவக்கோலத்தைக்கண்டு மிக வெறுத்தனர். அவ்வூருக்குள் நுழையக்கூடாது என்று சொல்லித் தடுத்தனர். அகத்தியர் இதனைத் திருஇலஞ்சியில் எழுந்தருளிய முருகப் பெருமானிடம் முறையிட்டுக் கொண்டார். முருகக் கடவுள் சில சூழ்ச்சிகளை அகத்தியருக்கு மொழிந்தார். அகத்தியர் வைணவக் கோலம் பூண்டு திருமுற்றத்திற்குள் நுழைந்தார். திருமாலுடைய உருவத்திடஞ் சென்றதும் திருமாலின் தலையிலே கைவைத்துக், "குறுகு குறுகு" என்று கூறினர். அவ்வளவில் திருமால் வடிவஞ் சிவலிங்கமாக முடிந்து விட்டது.

"குருவாய் அகத்தியர் உன்னைப் பணிந்திடக்
கூடும்வை ணவர்நாணவே
குளிர்சித்தி ராநதிக் குற்றால மாகுகிரி
கூடாசலப்பதிக்குள்
மருவார் துழாய்மௌலி யுஞ்சங்கு சக்கரமும்
மணிவண்ண முங்காணவே
வளர்நெடிய மால்வடிவு குறுகுகுறுகென்றே
மகாலிங்க வடிவமாக்கிப்
பெருவான மதிநதி முடிக்குஞ் சடாடவிப்
பெம்மானை அம்மானிடம்
பிரியாத எந்தைதனை ஐந்தா னனத்தனைப்
பெருமானை அர்ச்சியென்றே
திருவாய் மலர்ந்தருள்செய் தென்னிலஞ் சிக்குமர
செங்கீரை யாடியருளே
சிறியனேன் அறிவினுள் குடிகொண்ட தெய்வமே
செங்கீரை யாடியருளே"

[திருமாலைச் சிவனுக்கியது] (திருவிலஞ்சி முருகன் பிள்ளைத்தமிழ்)

———

675. திருமால் எலும்பிற் புரண்ட கதை

சலந்தரன் என்பவன் திருமால் முதலிய பல தேவர்களையும் வென்றான். அதனால் அவனுக்கு மிகுந்த செருக்கு உண்டாகியது. சிவபிரானையும் வெல்லவேண்டும் என்று எண்ணினான். திருக்கைலையை அடைந்து சிவபிரானைப் போருக்கழைத்தான். அப்பெருமான் தம்முடைய திருவடியால் ஆழிப்படை ஒன்றை நிலத்திற் கீறினார். அப்படை சலந்தரனைக் கொன்றொழித்தது. சலந்தரனுடைய மனைவியின் பெயர் பிருந்தை. அவள் அழகில் மிக்கவள். திருமால் அவளைப் பலகாலமாக விரும்பியிருந்தார். ஆனால் சலந்தரனுக்கு அஞ்சி அவளை நெருங்காமல் இருந்தார். இப்பொழுது சலந்தரன் சிவபிரானுடைய ஆழிப்படையால் அழிந்தொழியவே அச்சம் சிறிதும் அற்றவராய்ச் சலந்தரனுடைய உடலிற்புகுந்து பிருந்தையோடு இன்பம் நுகர்ந்திருந்தார். பிறகு உண்மையை உணர்ந்த பிருந்தை தன்னுடைய கற்பு அழிந்தமைக்கு வருந்தித் தீயில் மூழ்கினாள். பிருந்தையின்மீது அதிக மோகங்கொண்ட திருமால் அவளுடைய எலும்பிலே விழுந்து புரண்டு வருந்தினார்.

"இடுகாட்டுள் மாதர் எலும்பிற் புரண்மால்"

[பிருந்தையின் எலும்பிற் புரண்டது] (நால்வர் நான்மணிமாலை)

---

676. திருமால் மீன்வடிவெடுத்த கதை

ஒரு கற்பத்தில் நான்முகன் துயின்றான். அவனுடைய முகங்களினின்றும் வெளிப்பட்டு ஆண் கோலத்துடன் உலாவிக்கொண்டிருந்த நான்மறைகளையும் மிகப் பேராற்றல் பொருந்தியவனும் நெடுங்காலந் தவஞ்செய்து பெருவரங்கள் பெற்றவனுமான சோமுகன் என்னும் அசுரன் கவர்ந்து கொண்டு ஊழிக்கால நீர்ப்பெருக்கினுள் மறைந்து சென்றான். இதனை உணர்ந்த திருமால் ஒரு மீனுக வடிவம் எடுத்தார். அவன் சென்ற நீர்ப்பெருக்கினுட் புகுந்து அவ்வசுரனைத் தேடிக் கண்டுபிடித்துக் கொன்றார். அவன் கவர்ந்துசென்ற

மறைகளை மீட்டுக்கொண்டுவந்து நான்முகனிடங் கொடுத்தார்.

[மீன்வடிவெடுத்தது]

---

677. திருமால் வஞ்சனைசெய்த கதை

அப்பரீடன் என்னும் அரசனுக்கு அழகிய பெண் ஒருத்தியிருந்தாள். நாரதரும் பருப்பதர் என்பவரும் அம் மங்கையை அடைவதற்கு எண்ணினார்கள். திருமாலிடத் திற்கு இருவருந் தனித்தனியே சென்று அவரைப் பார்த்தார் கள். நாரதர் பருப்பதருக்குக் குரங்கு முகம் உண்டாக வேண்டுமென்று வேண்டினர். பருப்பதரோ நாரதருக்குக் கிழமுகம் உண்டாகவேண்டும் என்று வேண்டினர். இரண்டு பேருடைய வஞ்சகத்தையுந் திருமால் உணர்ந்துகொண்டார். அவர்கட்கு நல்லறிவைப் போதிக்கவில்லை. அவ்விருவ ருடைய வஞ்சகத்தையும் தமக்கு நன்மையாகப் பயன் படுத்திக்கொள்ள முடிவு செய்தார். அவ்விருவருக்கும், "அவ்வாறே யாகுக" என்றுகூறி அவர்களுடைய எண்ணத்தை நிறைவேற்றினர். இருவரும் அம்பரீடனுடைய அவைக்கள மண்டபத்தில் சென்றிருந்தார்கள். அவ்வரச னுடைய மகள் மாலையிடுவதற்கு வந்தாள். இருவருடைய முகத்தையும் பார்த்தாள். பார்ப்பதற்கே மிகு விகாரமாக இருத்தலைக் கண்டு நாணி நின்றாள். இச்சமயத்தில் திருமால் அவர்கள் இருவருக்கும் இடையே தோன்றினர். அப்பெண் திருமாலுக்கு மாலையிட்டாள். திருமாலுடைய இவ்வஞ்சத்தினைப் பிறர் கண்டு எள்ளி நகையாடினர்.

"முனைக டந்தவேல் மணிமுடி அம்பரீ டன்றன்
மனையில் நாரதப் பருப்பத முனிவரை வஞ்சித்
தனைய மன்னவன் புதல்வியைக் கவர்ந்துகொண்
டினைய மாவலி தனக்குமுன் வஞ்சனை யிழைத்தாய்"

(டகன்றாய்

(காஞ்சிப் புராணம்)

[வஞ்சனையை மால் பயன்படுத்தியது]

---

678. திருமுகங் கொடுத்த கதை

பாண பத்திரன் வரகுண பாண்டியனுடைய கட்டளைப் படி சோமசுந்தரக் கடவுளுடைய திருக்கோயிலில் அமர்ந்து இசைபாடுந் திருத்தொண்டைச் செய்து கொண்டிருந்தான். சோமசுந்தரக் கடவுள் பாண்டியனுடைய பொருள்கள் சில வற்றைச் சில காலம் கவர்ந்து கொடுத்தார். பிறகு தம்மிடத்திலே அன்புடைய சேரமானுக்கு ; ஒரு செய்யுளை எழுதிக் கொடுத்து அவனிடம் அனுப்பினர். சேரமான் சிவபெருமானுடைய திருமுகத்தைக் கண்டு அளவற்ற உவகை கொண்டான். எதிர்கொண்டழைத்துப் பராட்டிப் போற்றினன். பிறகு பொருளறையைத் திறந்து வேண்டிய அளவு பொருளை எடுத்துக் கொள்ளுமாறு வேண்டினன். "நீர் மனமுவந்து கொடுப்பதே எமக்குப் போதும்" என்றனன் பாணபத்திரன். சேரமான் கொடுத்த பொருளைப் பெற்றுக் கொண்டு மதுரையை அடைந்தான் பாணபத்திரன்.

"மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவு பானிற வரிச்சிற
கன்னம் பயில்பொழில் ஆலவாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையின் உரிமையின் உதவி யெளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்கும் சேரலன் காண்க
பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே"

[திருமுகங் கொடுத்தது] (திருமுகப் பாசுரம்)

———

679. திருமூலர் கதை

திருமூலர் என்பவர் திருமந்திரம் என்னும் அரிய நூலை அருளிச் செய்த பெரியார். வடநாட்டில் இருந்த இவர் பொதியமலையை நோக்கிச் சென்றார். திருவாவடுதுறையை அடைந்து செல்லுகையில் அங்கோர் இடையன் இறந்து கிடந்தான். அவனுல் மேய்க்கப் பெற்ற ஆநிரைகள் அவனைச் சூழ்ந்து நின்று கதறின. அவைகளின் கதறல் இவருக்கு மிகுந்த மன நெகிழ்ச்சியை அளித்தது. தம் முடைய உடலை ஓரிடத்தில் மறைத்து வைத்தார். பிறர் உடலில் நுழையத்தக்க தம்முடைய ஆற்றலால் இடையன் உடலில் நுழைந்தார். சில காலம் அவைகளை மேய்த்துக் கொண்டிருந்தார். பிறகு ஓரிடத்தில் அமர்ந்து தவஞ் செய்த தோடு திருமந்திரம் என்னும் நூலையும் இயற்றினர். ஆக்க ரிடத்திற் கொண்ட அன்பினுல் தான் இவர் இவ்வாறு செய் தாராகலின், உலகினர் மக்கள் என்பு பொருந்திய உடலோடு கூடி உலகில் வாழ்தலின் பயன் பிற உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதலே என்று நன்கு உணர்ந்து கொண்டனர்.

[மக்கள் யாக்கையின் பயன்] (பெரிய புராணம்)

---

680. திருவரங்கத்தின் கதை

இராமபிரான் காட்டுக்குச் சென்று சீதையைப் பிரிந்து விபீடணனுக்கு அடைக்கலங் கொடுத்துக் கடல் கடந்து இலங்கைக்குச் சென்றார். இராவணன் முதலிய அரக்கர் களைக் கொன்று அயோத்திக்கு மீண்டார். திருமுடி சூட்டிக் கொண்ட பிறகு சுக்கிரீவன் முதலிய அனைவருக்கும் அவரவர் இருப்பிடஞ் செல்லுமாறு கட்டளையிட்டார். அப்பொழுது தம்முடைய வழிபடு கடவுளாகிய திருவரங்க நாதனைத் தமக்கு மிகவும் வேண்டியவனை விபீடணனிடங் கொடுத்து வழி பாடு செய்துவருமாறு கூறினர். விபீடணன் திருவரங்க நாதனைப் பெற்றுக் கொண்டு இலங்கைக்குச் செல்லும் பொழுது இடைவழியில் திருவரங்கநாதனை வைத்து விட்டுத்

தன்னுடைய நாட்கடன்களைச் செய்து முடித்தான். பிறகு இலங்கைக்குப் புறப்படும் பொழுது திருவரங்கநாதனை எடுத்துக் கொண்டு செல்ல முயன்றான். எவ்வளவோ முயன்றும் பெருமான் இடம் விட்டு அசைய வில்லை. அவ்விடமே திருவரங்கமாயிற்று.

[திருவரங்கம்]

681. திருவள்ளுவர் கதை (1)

திருவள்ளுவர் என்பவர் ஒப்பற்ற திருக்குறளை இயற்றியவர். தாம் இயற்றிய திருக்குறளை அரங்கேற்றஞ் செய்வதற்கு மதுரைத் தமிழ்ச் சங்கத்தார்களிடங் கொண்டு சென்றார். கல்விச் செருக்கில் மிகுந்திருந்த அவர்கள் இவரை மதித்துச் சங்கப்பலகையில் உடன் வைத்துக்கொள்ளவில்லை. திருவள்ளுவர், "நான் இயற்றியுள்ள இந் நூலுக்காயினும் இடங்கொடுக்க வேண்டும்" என்று கேட்டார். சங்கப்புலவர்கள் அவ்வாறே இடங்கொடுத்தார்கள். திருவள்ளுவர் தமது நூலைச் சங்கப்பலகையில் வைத்தார். தெய்வத்தன்மை பொருந்திய சங்கப்பலகை திருக்குறள் அளவாகச் சுருங்கிவிட்டது. சங்கப்புலவர்கள் சங்கப் பலகையை விட்டுக் கீழே இறங்கும்படியாக நேரிட்டது. பிறகு திருவள்ளுவர் தமது நூலைப் படித்து அரங்கேற்றஞ் செய்தார். திருக்குறளின் அருமையையும் பெருமையையும் உணர்ந்து சங்கப்புலவர்கள் பெரிதும் பாராட்டிப் புகழ்ந்தார்கள். அப்பொழுது அவர்கள் இயற்றிய பாடல்கள் திருவள்ளுவ மாலை என்னும் பெயரோடு வழங்குகின்றது.

[திருவள்ளுவர்]

682. திருவள்ளுவர் கதை (2)

திருவள்ளுவர் வாசுகியம்மையாரோடு திருமயிலையில் அமர்ந்து இல்லறத்தை இனிது நடத்திக்கொண்டிருந்தார்.

நெய்தற் றொழிலால் வரும் சிறு பொருள்தான் வாழ்க்கையை நடத்துவதற்குப் பயன்பட்டது.

திருவள்ளுவருடைய சிறப்பினையுணர்ந்த பலர் திருவள்ளுவருக்குப் பொருள் உதவிசெய்ய முன்வந்தனர். மெய்யறிவுபெற்று விளங்கிய திருவள்ளுவர் பொருளையோ அதனால் அடையக்கூடிய இன்பத்தையோ ஒருசிறிதும் விரும்பவில்லை.

ஒரு பெரியவர் திருவள்ளுவருடைய குடிலைத் தம்முடைய வியத்தகு ஆற்றலால் பெரிய மாளிகையாக மாற்றினர். ஆனால் திருவள்ளுவர் அதனை விரும்பவில்லை. வேறோர் இடத்திற்குக் குடிபோய்விட்டார். தம்முடைய மாணவர் கொண்டுவந்து தமக்குத் தெரியாமல் வைத்துச்சென்ற பொருளையும் எடுத்துக்கொண்டு போய்விடுமாறு கண்டித்துரைத்து எடுத்துக்கொண்டு போகச்செய்தார்.

ஐம்புலன்களையும் வென்ற மெய்யறிவாளர்கள் நாம் பொருளற்றவர்களாக இருக்கிறோம் என்று பிறருடைய பொருளை விரும்பமாட்டார்கள். இது திருவள்ளுவரிடத்தில் நன்கு விளங்கியது.

[மெய்யறிவாளர்கள்]

---

683. திருவள்ளுவர் பொறுமைக் கதை

திருவள்ளுவர் ஒருநாள் தாம் நெய்த ஆடையை விற்பனை செய்வதற்குக் கடைத்தெருவிற்குக் கொண்டு சென்றார். திருக்குறளைப் படித்த ஒருவன் திருவள்ளுவரிடம் பொறுமை இருக்கிறதா என்பதை அறிந்துகொள்ள விரும்பினான். திருவள்ளுவரிடஞ் சென்றான். அவர் கையில் வைத்திருந்த ஆடையைத் தன் கையில் வாங்கினான். "இதன் விலை யாது?" என்று உசாவினான்.

திருவள்ளுவர் அவ்வாடையின் விலை ஒரு பணம் என்று மறுமொழி கூறினார். உடனே அவன் அதனை இரண்டாகக்

கிழித்தான். ''இப்பொழுது இதன் விலை யாது?'' என்று ஒரு துண்டைக்காட்டிக் கேட்டான். ''அரைப்பணம்'' என்றார் திருவள்ளுவர். அவன் அவ்வாடையை மீண்டும் மீண்டும் பல துண்டுகளாகக் கிழித்து ''இப்பொழுது இதன் விலை யாது? இப்பொழுது இதன் விலை யாது?'' என்று கேட்டுவிட்டு இறுதியில் ஒன்றையும் வாங்காது சென்றான்.

அவன் அவ்வாடையைப் பல துண்டுகளாகக் கிழித்து விட்டபடியால் அவை எதற்கும் பயனற்றவைகளாக முடிந்தன. வள்ளுவர் அதனைத் தூர எறிந்துவிட்டுத் திரும்பிச் சென்றார். அவன் செய்த செயலை அடியோடு மறந்துவிட்டார். ஒருவர் செய்த தீமையைப் பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும். அதனை அடியோடு மறந்து விடுதல் பொறுத்துக்கொள்ளுதலினும் மிக நன்று என்று அவர் கூறிய அறத்திற்கு அவரே எடுத்துக்காட்டாகவும் முடிந்தார்.

[பிறர்செய்த தீமையை மறத்தல்] (திருவள்ளுவர் வரலாறு)

---

684. திருவாதவூரடிகட்கு அருளிய கதை

திருவாதவூரடிகள் பாண்டிவள நாட்டிலே வைகை யாற்றின் கரையிலேயுள்ள திருவாதவூரில் அமாத்தியப் பிராமணர் என்னும் அந்தணர் குலத்திலே தோன்றிக் கல்வி யறிவிற் சிறந்து மிகுந்த புகழோடு விளங்கியிருந்தார். திருவாதவூருடைய கல்விச் சிறப்பையும் அறிவுத் திறத்தை யும் அந்நாளில் அரசு செய்துகொண்டிருந்த அரிமர்த்தன பாண்டியன் அறிந்தான். வரவழைத்துப் பலவகைச் சிறப் புக்கள் செய்து மேன்மைப்படுத்தினன். அமைச்சராக அமைத்தான். திருவாதவூரர் அறிவு நூல்களை மிகுதியாகக் கற்றவராதலின் வீடுபேற்றிற்கான நெறியையே பெரிதும் நாடி நின்றார்.

பாண்டிய மன்னனுக்குப் பல குதிரைகள் வாங்க வேண்டிய சமயம் நேரிட்டது. மிகுந்த பொருள்களை

யெடுத்துக்கொண்டுபோய்த் தகுந்த குதிரைகளை வாங்கி வருமாறு கட்டளையிட்டான். திருவாதவூரர் வேண்டிய பொருள்களை ஒட்டகங்களின்மீது ஏற்றிக்கொண்டு கீழைக் கடற்கரைக்குச் சென்றார். திருப்பெருந்துறை என்னுமிடத்தில் சிவபெருமான் அறிவாசிரியராக எழுந்தருளியிருந்து திருவாதவூரடிகளுக்கு அறிவுரை வழங்கியருளினார். 'மாணிக்கவாசகர்' என்று திருப்பெயர் வழங்கி மறைந்தருளினர்.

மாணிக்கவாசகர் அவ்விடமே தங்கி அறிவாசிரியர் அருளிய மெய்ப்பொருளை ஆராய்ச்சி செய்துகொண்டும் திருக்கோயில் திருப்பணிகள் நடத்திப் பொருளைச் செலவிட்டுக்கொண்டு மிருந்தார். தன்னைநாடி வந்தவர்களைப் பார்த்து, "நீங்கள் அரசனிடம்போய்க் குதிரைகள் ஆடித் திங்களில் வரும் என்று சொல்லுங்கள்" என்று சொல்லியனுப்பினர். அவர்களும் அவ்வாறே சென்று கூறினர்.

[திருவாதவூரடிகள் அருள்பெறல்]

---

685. திருவானைக்காக் கதை

புட்பவந்தன் மாலியவான் என்னுங் கணநாதர்கள் கடவுளன்பில் பொருமை காரணமாகச் சினங்கொண்டு தமக்குத்தாமே வசவுரை வழங்கிக்கொண்டு ஆனையுஞ் சிலந்தியும் ஆயினர். புட்பவந்தன் வெள்ளையானை யானன். மாலியவான் சிலந்தியானன். வெள்ளை யானை வெண்ணுவலின்கீழ் இறைவனைக் கண்டு மகிழ்ந்து பூசனை புரிந்து வந்தது. சிலந்தி அவ்விறைவனைக் கண்டு மகிழ்ந்து தன்னுடைய வாய்நூலாலே கோயில் மண்டபம் கோபுரம் முதலியவைகளை இறைவனுக்கு அமைத்து வணங்கிற்று. சிலந்தி நூலைக்கண்ட யானை, "இஃதென்ன இவ்விடத்துத் தூய்மையைக் கெடுத்து இப்படி நடந்திருக்கிறது. சிலந்தியின் வாய்நூல் எச்சிலாயிற்றே" என்று வெறுப்புக் கொண்டது. அச் சிலந்தி நூலையெல்லாம் சிதைத்து அழித்தது. பிறகு அவ்விடத்தைத் தூய்மைப்படுத்திப்

பூசை செய்துவிட்டுப் போயிற்று. மறுநாள் வழிபட வந்த சிலந்தி கோயில் அழிந்துபோயிருப்பதைப் பார்த்துச் சினங் கொண்டது. யானை வந்து பூசனை புரிந்த போது அதனுடைய தும்பிக்கைக்குட் புகுந்து குடைந்தது. அதனால் யானைக்கு வலி மிகுதியாயிற்று. கையை ஓங்கித் தரையிலடித்து விழுந்து மாண்டுபோயிற்று. அதனுள் ளிருந்த சிலந்தியும் இறந்தது. இறந்த யானை சிவகண நாதன் ஆயிற்று. சிலந்தி சோழர் குலத்திற் பிறந்து கோச் செங்கட் சோழன் என்னும் பெயரைப் பெற்றது. இக் கோச்செங்கட் சோழன் பழைய வாசனை காரணமாக யானை புகமுடியாத கோயில்கள் பலவற்றை இறைவனுக்கு அமைத்து வழிபாடுசெய்து பெருமை பெற்றான்.

"சிவத்தியான முற்றோர் சிலந்தி நூல்செய்
திருக்காவணத்தே இருப்பா ரருட்கூர்"

[திருவானைக்கா]

---

636. திருவேங்கடன் கதை

திருவேங்கடன் என்பவன் நேரி என்னும் ஊரிலே வாழ்ந்திருந்தான். சிறந்த செல்வமும் இவனுக்கு அமைந்திருந்தது. கொடைத்திறனும் மிகுந்த புகழும் பெற்று விளங்கினான். இவனுக்கோர் அண்ணன் இருந்தான். அவனுடைய பெயர் கண்ணுக்கினியான். இவனிடம் நடைப் பண்போ கொடைப் பண்போ கிடையாது. எவருக்கும் எதுவும் ஈயான். 'ஈவது விலக்கேல்' என்பதற்கு மாறுகக் கொடுப்பவர்களைக் கூடக் கொடாமல் தடுப்பான்.

இரட்டைப் புலவர்கள் என்பவர்கள் ஒருநாள் திருவேங் கடத்திடம் வந்தார்கள். திருவேங்கடன் இரட்டையர்களைப் போற்றிப் பாராட்டிச் சீர்செய்து நன்கொடை நல்கினான். தன்னுடைய தம்பி இரட்டைப் புலவர்கட்குப் பொருள் வழங் குவது கண்ணுக்கினியானுக்குப் பிடிக்கவில்லை. அவன் தன்னுடைய தம்பியைப் பார்த்து, "இவர்கட்கு ஏன் இப்ப

டிப்பொருளை வாரிக் கொடுக்கிறாய்? இவர்களால் உனக்கு என்ன பயன்? கொடுக்காதே'' என்று சொல்லித் தடுத்தான். இதனைப் பார்த்தவுடன் இரட்டைப் புலவர்களுக்குச் சினம் மிகுதியாக உண்டாயிற்று. உடனே ஒருவர்;

''தேன்பொழிந்த வாயான் திருவேங் கடத்துடனே
ஏன்பிறந்தான் கண்ணுக் கினியானே—என்றார்.

உடனே மற்றவர்; —வான்சிறந்த

சீதேவி யாருடனே செய்யதிருப் பாற்கடலில்
மூதேவி ஏன்பிறந்தாள் முன்''

என்று பாடினார். இதனால் கண்ணுக்கினியானுக்கு மிகுந்த இழிவு உண்டாயிற்று. உலகத்தார்க்கு ஒத்த செயலை அறிந்து அதற்குத்தக்கபடி வாழ்பவனே உயிர்வாழ்பவன் என்று சொல்லப்பெறுவான். இதற்கு நேர்மாறாக நடப்பவனை இறந்து போனவனாகவே மதிக்கப் பெறுவான்'' என்று பெரியோர்கள் கூறியதற்கு இந்தக் கண்ணுக்கினியானும் திருவேங்கடமுமே சாட்சியாக அமைந்தார்கள்.

{ஒத்ததறிவான் உயிர் வாழ்வான்} (இரட்டையர் வரலாறு)

---

687. திலீபன் கதை

திலீபன் என்பவன் தெய்வக் கங்கையை நிலவுலகத்திற்குக் கொண்டு வந்த பகீரதனுடைய தந்தை. இவன் ஆருயிர்களிடத்திலே அருள்மிக்கவன். தன்முன்னோர்களை நற்கதியிற் சேர்த்தற்குக் கங்கையை மண்ணுலகில் கொண்டுவர இவன் பெரிதும் முயன்றான். பல ஆண்டுகள் அருந்தவம் புரிந்தும் பலவகையாக முயற்சிகள் செய்தும் இவனுடைய எண்ணம் ஈடேறவில்லை. பிறகு இவனுடைய மகனால் தான் இவனெடுத்த காரியம் இனிது முடிந்தது. இவன் தான் எண்ணி முயன்ற காரியத்தை முடிக்கவில்லையே என்று யாரும் இவனை இகழவில்லை. இவன் மிக முயன்றதைத்தான் பாராட்டினார்கள். எடுத்த காரியம் கைகூடினும் கூடா

தொழியினும் ஒருவர் முயற்சியைக் கைவிடுதல் கூடாது. முயற்சியில்லாமற் சோம்பேறிகளாக உள்ளவர்களைத்தான் உலகோர் இகழ்வர். இதனை உலகம் இவன்பால் உணர்ந்தது.

[காரியங் கைகூடாவிடினும் முயற்சியைக் கைவிடலாகாது]

---

688. திலீபராசன் கதை

திலீபன் என்பவன் கதிரவன் வழிமுறையில் தோன்றிய ஓர் அரசன். இவன் சிறந்த புகழாளனாக அரசாட்சி செய்து கொண்டிருந்தான். நெடுங்காலமாக மக்கட்பேறு உண்டாகவில்லை. மக்கட் பேறில்லாமல் தென்புலத்தார் கடனை எவ்வாறு தீர்ப்பேன் என்று அரசன் மிகுந்த துன்பமடைந்தான். தன்னுடைய மனைவியோடு குலகுருவாகிய வசிட்ட முனிவரிடஞ் சென்று முறையிட்டான். வசிட்ட முனிவர் திலீபனுக்கு மக்கட் பேறுண்டாதற்குத் தடையாயுள்ள காரணத்தை ஆராய்ந்து பார்த்தார். பிறகு திலீபனைப் பார்த்து, "அரசனே! ஒருமுறை நீ தேவலோகம் போய்த் திரும்பினாய். வழியிலே காமதேனு இருந்தது. நீ அதனை வழிபடாமல் விரைந்து வந்தாய். அக்காமதேனு தன்னை நீ இழிவு படுத்தினாய் என்று சினங் கொண்டு வசவுரை வழங்கியது. அக்காமதேனுவின் கன்றுகிய நந்தினியை நீ முறையாக வழிபடுவாயானால் அவ்வசவுரை நீங்கப் பெற்று மகப்பேற்றையடைவாய்" என்று கூறினர்.

திலீபன் வசிட்ட முனிவரைப் பார்த்து, "நந்தினியை வழிபட வேண்டிய முறைமையாது? அதனைத் தெரிவித்தருளவேண்டும்" என்று வேண்டிக் கொண்டான். வசிட்டர் திலீபனைப் பார்த்து, "அரசனே காமம் முதலிய வைகளை வெறுத்துக் காய்கனி கிழங்கு முதலான வைகளைப் புசித்துத் தூய்மையோடு நந்தினியைப் பூசை செய்யவேண்டும். நந்தினி நிற்கும்போது நீயும் நிற்க வேண்டும். அது போகும் பொழுது நீயும் போகவேண்டும். அஃது உண்ணும் பொழுது நீயும் உண்ணவேண்டும். அதுகிடக்கும்பொழுது

நீயுங் கிடக்க வேண்டும். அது மனம் மகிழும் வரையிலும் நீ சிறிதுந் தளர்ச்சி யடையக் கூடாது. இதற்கு யாதொரு தீங்கும் வராமல் நீ காக்க வேண்டும். இது மேயச் செல்லும்பொழுது உன்னுடைய மனைவி இதனை என்னுடைய இருப்பிட எல்லை வரையிற் கொண்டுபோய் விடவேண்டும். அது திரும்பி வரும்பொழுது கொண்டுபோய் விட்ட எல்லையில் நின்று வழிபட்டு அழைத்துக் கொண்டு வரவேண்டும் என்று கூறினர்.

திலீபராசன் மறுநாள் தொடங்கி வசிட்ட முனிவர் சொல்லியபடியே நந்தினியைப் பூசித்து வழிபட்டு வந்தான். அவ்வாறே இருபத்தொருநாள் நடந்தது. இருபத்தோராம் நாளில் நந்தினி திலீபராசனுடைய அன்பை ஆராய்ந்து பார்க்க எண்ணியது. மேய்ந்து கொண்டே இமயமலைச் சாரலுக்குப் போயிற்று. அரசன் இமயமலையின் சிறப்புக்களை ஒரு சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். நந்தினி இளம் புல்லை மேய்ந்து கொண்டு அங்குள்ள ஒரு முழைஞ்சில் நுழைந்தது. அப்பொழுது அரிமா (சிங்கம்) ஒன்று நந்தினி மேற் பாயத் தொடங்கியது. அரசன் பாணம்விட எண்ணினான். கைகள் அசையவில்லை. பின்னர் அரசனுக்கும் அரிமாவுக்கும் உரையாடல் நிகழ்ந்தது. அரசன் நந்தினியை விட்டுவிடும்படியும் அதற்குப் பதிலாகத் தன்னையுண்ணுமாறும் வேண்டிக் கொண்டான். அரிமா வந்தது தன்னுடைய மாயையினால்தான் என்று நந்தினி திலீபனுக்கு விளக்கியது. திலீபனுடைய அன்புடைமையைப் பாராட்டியது. திலீபன் மகப்பேற்றை அடையும்படி அருள் புரிந்தது. நந்தினியின் அருளால் திலீபன் இரகு என்பவனைப் பெற்றான்.

"கோவதைசெய் யப்பிடித்த கோளரிக்குத் தன்னுடலை
ஈவனென்று னேதிலீபன் என்னுமன்னன்—"

[திலீபன் அருள் பெற்றது]

[ஆத்திசூடி வெண்பா]

---

689. தில்லைபுலியூரான கதை

மத்தியந்தண முனிவர் என்பவருக்குப் பிள்ளை ஒருவர் பிறந்தார். முனிவர் தம்முடைய பிள்ளைக்குக் கற்பிக்க

வேண்டிய கலைகளையெல்லாம் நன்கு கற்பித்தார். கலைப் புலமை நிரம்பிய சிறுவர் வேறோர் இடத்திற்குச் சென்று இறைவனை வழிபட எண்ணினர். தந்தையார் தம்முடைய பிள்ளையைத் தில்லைக்கனுப்பினர். தில்லைக்கு வந்த முனிவர் பிள்ளை ஓரிடத்தில் அழகிய பொய்கை யொன்றையும் அதன் பக்கத்தே சிவலிங்கம் ஒன்றையுங் கண்டார். அங்கே ஒரு இலைக்குடில் அமைத்து அதில் தங்கி இறைவனை வழிபாடு செய்து கொண்டிருந்தார். ஒருநாள் தாம் பூசைக்குப் பறித்த மலர்களைப் பார்த்தார். அவற்றுட் பழையனவும் பழுதுபட்டனவுமான பல மலர்கள் கலந்திருக்கக் கண்டு உள்ளம் வருந்தினர். ''விடிந்தபின் மலரெடுக்கச் சென்றால் அதற்குள் வண்டுகள் ஊதிவிடும். இரவிலே சென்று எடுப்பதானால் மரமடர்ந்த இக்காட்டிலே வழிதெரியாது. மரங்களில் ஏறினாலுங் கால் வழுக்கும் இதற்கு யாது செய்யலாம்?'' என்று எண்ணி மனம் வருந்தினர். இறைவனை நினைத்துத் தொழுதார். இறைவன் அவர் முன் தோன்றினர். முனிவர் மகன் இறைவனைத் தொழுது போற்றினர், ''ஐயனே! என்னுடைய கைகளிலுங் கால்களிலும் புலிக்குள்ளனபோல் வலிய நகங்கள் உண்டாதல் வேண்டும். வழி தெரிந்து செல்லுதற்கும் பழுதற்ற மலர்களைப் பார்த்து எடுப்பதற்கும் அவ்விரண்டிலுங் கண்களும் அமைதல் வேண்டும்'' என்று வேண்டிக்கொண்டார். இறைவனும் அவ்வாறே அருள் செய்து மறைந்தருளினர். அதுமுதல் அவருடைய பெயர் வியாக்கிரபாதர் (புலிக்கால் முனிவர்) என்றாகியது. திருத்தில்லை புலியூர் என்னும் மற்றொரு பெயரையும் பெற்றது.

''தாண்டுபுலிக் கால்கையுகிர் தானேர் மழமுனிவன்
பூண்டிருந்தர்ச் சிக்கும் புலியூரே''

[தில்லைபுலியூரானது] (புலியூர் வெண்பா)

---

690. தீக்கடவுள் கதை

தீக்கடவுள் திக்குப் பாலகர்களில் ஒருவன். இவனுடைய இல்லக்கிழத்தியின் பெயர் சுவாகாதேவி. இவன் கொடிய பசியுள்ளவன். அகப்பட்டதை நொடியில் தின்று

தீர்த்துவிடுவான். பாண்டவர்கள் காலத்தில் காண்டவம் என்னுங்காடு ஒன்று யமுனையாற்றின் கரையில் அமைந்திருந்தது. அக்காடு பலவகை அரிய மரங்களாலும் கனிவர்க்கங்களாலுஞ் சிறந்து விளங்கியது. அஃது இந்திரனுக்குரியது. அக்காட்டினை உண்டு தன்னுடைய பசியைப் போக்கிக் கொள்ள வேண்டும் என்று தீக்கடவுள் எண்ணினான். செய்தி வெளியே தெரிந்தால் தன்னுடைய எண்ணம் நிறைவேறுமற் போகுமென்று முடிவு செய்தான். எண்ணியதை உள்ளத்துக்குள்ளேயே நீண்டகாலம் அடக்கி வைத்துக் கொண்டிருந்தான்.

கண்ணனும் அருச்சுனனும் ஒருநாள் தனியிடம் ஒன்றில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது தீக்கடவுள் அந்தண முனிவன் ஒருவனைப்போல் வந்தான் அந்த இடத்திற்கு. இருவரும் வந்தவன் உண்மையில் ஒரு முனிவனே என்று எண்ணினர். போற்றிப் புகழ்ந்து பாராட்டினர். வேண்டியது யாது என்று உசாவினர். ''மிகுபசியுடையேன் உணவு சிறிது தருக'' என்றான். அவர்கள் இருவரும் தருவதாக வாக்குறுதியளித்த பின்னர்த் தனது உண்மை வடிவத்தைக் காட்டினான்; காண்டவக் காடே உணவாக வேண்டுமென்றான். கூறிய வாக்கை மீறமுடியாமல் இருவரும் காண்டவக் காட்டைத் தீக்கடவுள் உண்ணச் செய்தனர். இந்திரன் இடையே செய்த தடைகளால் அக்காட்டைப் பாதுகாக்க முடியவில்லை.

தனது விருப்பம் பிறருக்குத் தெரியாதவாறு மறைத்துக் காரியங்களைச் செய்யக்கூடியவனாக ஒருவன் இருப்பின் பகைவர்கள் அவனை வஞ்சிப்பதற்காகச் செய்யும் சூழ்ச்சிகள் கைகூடாமல் போகும் என்பது இத்தீக்கடவுளின் செயலால் எல்லோருக்கும் அறிந்து கொள்ள நின்றது.

[மறைமுகமாகச் செயலாற்றுதல்]

---

691. தீக்கடவுள் நோயடைந்த கதை

முன்காலத்திலே சுவேதகி என்னும் பெயருடைய அரசன் ஒருவன் இருந்தான். அவன் ஒரு பெரிய வேள்

வியைச் செய்யத் தொடங்கினன். அவ்வேள்வி இரவும் பகலும் இடைவிடாமல் பன்னிரண்டு ஆண்டுகள் நடத்த வேண்டியதாகும்.

யாகனத் துதிக்கையில் இருந்து தண்ணீர் சொரிவது போலப் பசுவின் நெய்யை இடைவிடாமற் சொரிந்து அவ் வேள்வி நடத்தப்பட்டது. பலவகையான தின்பண்டங்கள் அப்பொழுதைக்கப்பொழுது தீயில் சொரியப்பட்டன. தீக் கடவுள் எல்லாவற்றையும் வாங்கி நன்ருகத் தின்று கொண் டிருந்தான். அப்பன்னிரண்டு ஆண்டுகளிலும் அவனுக்கு உண்பதைத் தவிர இரவிலும் பகலிலும் வேறு வேலை இல்லை. அதனல் தீக்கடவுளுக்கு உணவு செரியாமை, வயிற்றுவலி முதலிய நோய்கள் உண்டாயின. அதனல் அவன் மிகுந்த துன்பமடைந்து வருந்தலானன். பலவகையான மருத்துவங் களைச் செய்தும் குணம் உண்டாகவில்லை.

பிறகு தேவமருத்துவர்கள் தீக்கடவுளைப் பார்த்து, "இந்திரனுக்கு உரிமையான காண்டவக் காட்டில் உயர்ந்த மருந்துகள் பல வளர்ந்திருக்கின்றன. நீ அக்காட்டை உண்பாயானல் உன்னுடைய நோய் நீங்கி நலமடைகுவாய்" என்று கூறினர்கள்.

அதனல்தான் தீக்கடவுள் அக்காட்டைத் தனக்கு உண வாகத் தரவேண்டுமென்று அந்தணர் கோலத்தோடு போய் அருச்சுனனை வேண்டிக் கொண்டான். அருச்சுனனும் அவ் வாறே செய்தான். அதன் பிறகு தீக்கடவுள் நோய் நீங்கி நலம் பெற்றன். உயர்ந்த உணவாக இருந்தாலும் அதனை உண்ண வேண்டிய காலத்திலேதான் உண்ணவேண்டும்.

[பாலோடாயினுங் காலமறிந்துண்]

(பாரதம்)

---

692. தீயில் இறங்கிய வேளாளர்கள் கதை

ஒரு காலத்திற் சோழ மன்னன் தன்னுடைய மகனுக்கு முடிசூட்ட எண்ணினன். முடிசூட்டுவதற்கு வேளாளரை மட்டும் வரவழைத்தான். அப்பொழுது வேறு பல குலத்

தார்கள் தாங்களும் முடிசூட்டவேண்டும் என்னும் எண்ணத்தோடு அரச அவைக்கு வந்தார்கள். அரசன் ஐயங் கொண்டான். தனது அவைக்கு முன்னர்த் தீயை வளர்த்தினன். வேளாளர்களைப் பார்த்து, "இத்தீயில் இறங்கிக் கரையேறி வந்து முடியைச் சூட்டுங்கள்" என்று கட்டளையிட்டான். இதனைக் கேட்டதும் வேறு குலத்தைச் சேர்ந்தவர்கள் அங்கு நில்லாமல் ஓடிப்போனார்கள். வேளாளர்கள் மட்டும் அத்தீயில் இறங்கிக் கரையேறி வந்து முடியைத் தங்கள் கையால் தாங்கி வாழ்த்துரை கூறிச் சூட்டினார்கள். இச் செய்கையால் உண்மையான வேளாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டார்கள். அவர்களுடைய புகழும் மிகுதியாயிற்று. வீண் எண்ணங் கொண்ட மற்றவர்களோ இழிவடைந்து ஓடும்படியாக நேரிட்டது.

"வன்னியிற் சென்று கரையேறி
னர்தொண்ட மண்டலமே"

[வேளாளர் சிறப்பு] (தொண்டமண்டல சதகம்).

---

633. தீவினையாளர்கள் சிவலோகமடைந்த கதை (1)

முன்னாளில் பதரி காச்சிரமத்தில் பூரணவித்து என்னும் பெயருடைய முனிவர் ஒருவர் பத்திரதத்தை என்னும் பெயருடைய மனைவியோடு வசித்திருந்தார். இவர்கட்கு நெடுநாட்களாக மக்கட்பேறு உண்டாகவில்லை. இதனால் துன்பத்தையடைந்த பத்திரதத்தைத் தன் கணவராகிய முனிவரைப் பார்த்து வணங்கி, "அடிகள்! சிவபிரான் நமக்குக் குறைவில்லாத செல்வத்தையும் சிறப்பினையுங் கொடுத்திருக்கிறார். ஒரு மகனை அருள் செய்யவில்லை. அதனால் என்னுடைய மனங் கவலையடைகின்றது. நற்குணம் பொருந்திய மக்கட் பேற்றையடையாவிட்டால் நற்கதியில்லையென்று மறைகளுங் கூறுகின்றன. மக்கட் பேற்றை அடையுமாறு தாங்கள் தவஞ் செய்தல் வேண்டும்" என்று கூறினள்.

முனிவர் மனைவியின் மொழிகளைக் கேட்டுக் களிப்படைந் தார். அவளைப் பார்த்துப், "பெண்ணே! உன்னுடைய மொழிகள் உண்மையே. அவ்வாறே தவஞ்செய்வேன். பரமசிவன் நமக்கு மகப்பேற்றை அருள் செய்வார்" என்று கூறி மனைவியைத் தெளிவித்தார். தாம் ஒரு காட்டை யடைந்து தவஞ் செய்தார். பரமசிவன் இவருடைய தவத் திற்கு இரங்கினர். காளாபூர்தியின்மீது வந்து காட்சி தந்தார்." உன்னுடைய தவத்திற்கு மகிழ்ந்தோம். உனக்கு மகப்பேறுண்டாக அருள் புரிந்தோம்" என்று கூறி மறைந் தார்.

பிறகு முனிவர் தமது இருப்பிடத்திற்கு வந்து நிகழ்ந் தவைகளை மனைவியிடம் கூறினர். நாளடைவில் பத்திர தத்தை கருப்பமடைந்தாள். நன்னாள் ஒன்றில் மகனைப் பெற்றாள். அவனுக்குச் சாநந்தன் என்று பெயரிட்டனர். சாநந்தன் வளர்ந்து கலைகளெல்லாங்கற்று அறிவுடையவ னாகச் சிறந்து திகழ்ந்தான். ஒருநாள் முனிவர்களனைவருங் கூடிப் புராணம் படிக்குமிடத்திற்குச் சென்றான். அறிவுடைய இவனை அம் முனிவர்கள் சாநந்த முனிவர் என்று கூறிப் பாராட்டினர். புராணத்தில் நல்வினை செய்பவர்கள் அடை யும் நற்கதிகளையும் தீவினை செய்பவர்கள் அடையுந் தீய கதி களையுங் கேட்டு உள்ளம் வாடினர் சாநந்த முனிவர்.

"இறைவன் சிலருக்கு நல்வினை வழியாய் நன்மையை யும் சிலருக்குத் தீவினை வழியாய்த் துன்பத்தையுங் கொடுப் பதால் அவரடையும் பயன் என்ன? எல்லோருக்கும் நல் லறிவு தோன்றுமாறு செய்து வீடு பேற்றைக் கொடுப்பதால் அவருக்கு ஏற்படக்கூடிய குறைவு என்ன?" என்று எண்ண மிட்டார். இறைவனுடைய திருவருள் எவ்வாருயினும் ஆகுக. எமதருமனிடம் போய்ச் சொல்லவேண்டிய செய்தி ஒன்று உள்ளது என்று முடிவு செய்தார். சிவபிரானை யெண் ணினர். மலர் விமானம் ஒன்று வந்து இறங்கியது.

சாநந்த முனிவர் முனிவர்களையெல்லாம் அழைத்துக் கொண்டு விமானத்தில் ஏறி எமபுரியை நோக்கிச் சென்றார். இவர் செல்லுதலியறிந்த நாரத முனிவர் இவருக்கு முன்னக ஏமலோகத்திற்குச் சென்று இவருடைய வரலாற்றை யமனுக் குச் சொன்னர். எமலோகம் இவரால் கொள்ளையிடப்பட்டுப்

பாழாகிவிடுமென்றும் அவ்வாறு ஆகாமல் பாதுகாத்துக் கொள்ளுமாறும் எமனுக்குக் கூறிவிட்டுத் தாம் போய்விட்டார்.

---

694. தீவினையாளர்கள் சிவலோகமடைந்த கதை (2)

சாநந்த முனிவர் எமலோகத்தை யடைந்தார். எமதர்மராசன் இருக்கையை விட்டு இறங்கி எதிர் சென்று பணிந்தான். அவருக்கு அண்மையிற் சென்று, "என்ன காரியமாக இங்கு வந்தது?" என்று உசாவினன். சாநந்த முனிவர் நமனைப் பார்த்து, "உம்முடைய பட்டணச் சிறப்பைப் பார்க்க வந்தேன்" என்று கூறினர். நமன் 'நன்று' என்று உடன் பட்டான். அங்கு நல்வினையின் பயனுக இன்பம் நுகர்பவர்களனைவரையுங் காட்டச் செய்தான்.

பிற்கு சாநந்த முனிவர் எமபுரியின் தெற்கு வாயிலை அடைந்தார். அங்குள்ள தீவினையாளர்களைச் சாநந்த முனிவர் போன்ற நல்வினையாளர்கள் காண்பது நன்று அன்று என்று நமன் சொன்னன். அவ்வாயிலில் நின்றுகொண்டிருக்குஞ் சமயத்தில் ஊழிக்காலக் கடல் ஒலியைப்போல் பேரொலி உண்டாகியது. தீவினையாளர்கள் துன்புறுங் கூக்குரலைக் கேட்ட அளவில் சாநந்த முனிவர் வியப்படைந்தார். உள்ளே செல்வதற்கு எண்ணங் கொண்டார். நமன் வாசலின் கதவைத் திறக்குமாறு கட்டளையிட்டான்.

சாநந்த முனிவர் முதலியோர் உள்ளே சென்றார்கள். சாநந்த முனிவர் அங்கு தீவினையாளர்களை வருத்தப்படுத்தும் வகைகளைப் பார்த்தார். நமன் அவர்கள் செய்த தீவினைகளை விளக்கமாகக் கூறியதோடு அவர்கள் இனிமேல் நற்கதியடையமாட்டார்கள் என்றுஞ் சொன்னன். சாநந்த முனிவர் நமன் கூறியதைக் கேட்டுப் புன்னகை கொண்டார்.

இத்தீவினையாளர்களைச் சிவமறையினுல் கைலாயத்திற் செலுத்திக் காக்காமற் செல்லுவோமாயின் சிவத் தொண்டர்

கள் நம்மை இழித்துக் கூறுவார்களென்று எண்ணினர். மிகக் கொடுமையான இருபத்தெட்டுக்கோடி நிரயங்களில் உள்ளவர்கள் எல்லோரும் வீடுபேற்றிற்குத் தகுதியுள்ளவர்களாய்ப் பொன் விமானத்தில் ஏறிக்கொண்டு கைலாயம் போய்ச் சேருவதற்கு அருள் செய்யுமாறு சிவபிரானை எண்ணினர். அத்தீவினையாளர்களுடைய காதுகள் தோறும் போய்க் கேட்குமாறு ஐந்தெழுத் தருமறையை உரக்கச் சொன்னர். இவருடன் இருந்த முனிவர்களும் அவ்வாறே உரக்கக் கூறினர். அவ்வொலிகள் தீவினையாளர்களுடைய காதுகளில் போய்ப் புகுவதற்கு முன்னரே அவர்கள் செய்த தீவினைகளெல்லாம் நீங்கித் தூயர்களானார்கள். திருநீறு சிவகண்மணி சிவக்குறி முதலியன தாங்கியவர்களாய்ப் பேரொளியோடு திருக்கைலையை அடைந்தார்கள்.

"முன்னர் மெய்யறி வறிந்துள சாநந்த முனிவன்
பன்னியஞ்செழுத் தாகிய பரமமந் திரத்தை
இன்னல் வெந்நர கத்துளோர் தமையெலா மெடுத்து
மன்னு றுந்துறக் கத்துற வைத்தனன் மன்னே"

[தீவினையாளர்கள் சிவலோகம்] (சித்தாந்த சிகாமணி)

---

695. துகில் வளர்ந்த கதை

துரியோதனன் துரோபதையை அரச அவைக்குக் கொண்டு வருமாறு துச்சாதனனுக்குக் கூறினன். அவனும் அவ்வாறே கொண்டு வந்தான். பிறகு துரோபதையின் துகிலை உரியச் சொன்னன். துரோபதை தனக்கு நேரிட்டிருக்கும் இத்தொல்லையில் இருந்து காப்பாற்றுமாறு கண்ணனை எண்ணினாள். முதலில் ஆடையை விடாமல் கைப்பற்றியிருந்தவள் பிறகு ஆடையை விட்டுக் கையைத் தலைமீது சேர்த்துக் கண்ணனைத் தொழுதாள். துச்சாதனன் துரோபதையின் ஓர் ஆடையை உரிய இரண்டாவது ஆடை தோன்றியது. துச்சாதனன் அதனையும் உரிய மூன்றாவது ஆடை தோன்றியது. இவ்வாறு கணக்கற்ற ஆடைகள் கண்ணனருளால் வளர்ந்தன. இதனைக் கண்டு அனைவரும் அஞ்சினர்.

" ... ...ஐவர்தையலுக்கு
வண்துகி லொன்றினைக் கண்ணுற்ற போதுதன்
மன்னர்முன்னே
கண்துளி சோரத் தொழுதுநின் பேர்கட் டுரைத்த
பின்னே
ஒண்துகில் கோடி குவிந்ததெம் மாயம் உரிந்துரிந்தே"

[துகில் வளர்ந்தது]

---

696. துச்சோதனன் கதை

மகத நாட்டிலே வீரை என்னும் நகரிலே ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு துச்சோதனன் என்னும் பெயருடைய அந்தணன் ஒருவன் இருந்தான். இவன் சில நூல்களைத் தப்புந் தவறுமாகக் கற்றுணர்ந்தான். சொல்லாற்றல் அமைந்திருந்தபடியால் இவன் சொல்வதை அனைவரும் கேட்டனர். நூல்களை நன்கு ஓதியுணராமல் இருந்தும் தான் எல்லாவற்றையும் கற்றுணர்ந்து முற்றுமறிந்து விட்டதாக எண்ணினான். ஆணவமுஞ் செருக்கும் அளவு கடந்து நின்றன. நல்ல அறிஞர்களை யெல்லாம் " அவர்களுக்கு என்ன தெரியும் ?" என்று சொல்லி இகழ்ந்து கொண்டு திரிந்தான். இவன் இவ்வாறு நாளும் பிதற்றிக் கொண்டு திரியவே பலரும் இவன்மீது மிகுந்த வெறுப்புக்கொண்டனர். "உண்மையான நல்ல அறிவு இவனுக்கு இருக்குமாயின் இவன் இவ்வாறு துள்ளித் திரிவானை அறிவற்றபடியினால் அன்றே கூத்தாடுகிறான்" என்று சொல்லிப் பழித்தனர். அறிவின்மையென்பது தன்னைத்தானே அறிவாளியாக எண்ணித் தருக்கித் திரிவதுதான் என்பதை அனைவரும் இவன்பால் உணர்ந்தனர்.

[அறிவுடையராகத் தம்மை மதித்தலே அறிவின்மை]

---

697. துந்துபி கதை

அசுரத் தச்சனுகிய மயனுக்குத் துந்துபி என்னும் பெய ருடைய புதல்வன் ஒருவன் இருந்தான். இவனுக்கு அறிவு மிகுதியாக இல்லையாயினும் ஆண்மை மிகுதியாக இருந்தது. அச்சம் என்பதைச் சிறிதும் அறியான். இவன் சினங் கொண்டு முழங்குவானுயின் துந்துபி என்னும் ஒலிக்கருவி யின் முழக்கத்தைப்போல் இருக்கும். அதனுல் இவனுக்குத் துந்துபி என்பது காரணப் பெயராக அமைந்து நின்றது. இவன் தேவர்களையும் பிறரையும் வென்று செருக்கித் திரிந் தான்.

எல்லாரையும் வென்ற இவன் இறுதியில் வாலியையும் வெல்ல விரும்பினன். தான் போருக்கு வருவதாக வாலிக் குத் தெரியப்படுத்தினன். தான் எத்தகைய முன்னேற் பாடுஞ் செய்து கொள்ளாமல் போருக்குச் சென்றான். இவ னுடைய வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்த வாலி இவனை விரைவில் வென்று வெற்றிக்கொடி நாட்டினன். ஆக வேண்டியவைகளைத்தான் ஒழுங்காகச் செய்து முடித்துக் கொண்டு பிறகு போருக்குப் புறப்படாமல் மனம் போனவாறு செல்லின் அதுபகைவரின் வளர்ச்சிக்கும் பாதுகாப்பிற்கும் துணைபுரிவதாம் என்பது இவனிடம் நன்கு பெறப்பட்டது.

[வகையறச் சூழா தெழிதல்]

---

698. துமிரன் கதை

துமிரன் என்பவன் ஓர் அசுரன். நருமதையாற்றுக்கு வடபால் இருந்த ஓரிடத்தில் இவன் வாழ்ந்திருந்தான். இவன் வாழ்ந்திருந்த காலம் இராமாயணம் நிகழ்ந்த காலமாகும். துமிரன் மிகுந்த ஆற்றலுடையவன். தன்னுடைய ஆற்றலை நம்பி எதனையும் எண்ணுமற் செய்துவிட்டுப் பிறகு விழிப் பான். இவன் இவ்வாறு வாழ்ந்திருக்கும் நாளையில் அங்க தன் முதலிய குரங்கு வீரர்கள் சீதா பிராட்டியைத் தேடிக் கொண்டு சென்றனர். ஒருநாள் இரவில் இவன் வாழ்ந்

திருக்குள் ஹரின் அயலில் இருந்த ஒரு பொழிலில் வந்து தங்கி அவர் அனைவரும் துயின்று கொண்டிருந்தனர்.

அப்பொழுது அவ்விடத்திற்கு வந்த இவன் நம் முடைய ஆட்சிக்குட்பட்ட இடத்தில் இவர்கள் இவ்வாறு வந்து அச்ச மில்லாமல் உறங்குகின்றார்களே என்று மிகுந்த சினங்கொண் டான். எவரையும் எழுப்பி யாது செய்தி? எந்த ஊர்? என்று ஒன்றும் உசாவவில்லை. விரைவாகப் போய் அங்கதன் மார்பில் ஓங்கிக் குத்தினன். அங்கதன் திடுக்கிட்டு விழித் தான். துமிரனைக் கண்டான், "நீ யாரடா? ஏன் இவ்வாறு வந்து பேய்போற் குத்தினாய்?" என்று உசாவினன். துமிரன் சினங் கொண்டான்; "போருக்கு வா ஒருகை பார்க்கலாம்" என்று அறை கூவினன். இருவருக்கும் பெரும் போர் நிகழ்ந் தது. அங்கதன் துமிரனிடப் பேராற்றல் அமையப்பெற்றவ னுசையால் மிகு விரைவாகத் துமிரனைக் கொன்றுவிட்டான். ஒருவரை அழிக்க வேண்டுமாயின் அவ்வாறே அழித் தொழிக்கக் கூடியவர்களிடத்தில் தவறு செய்தலை ஒருவன் தான் அழிந்தொழிய வேண்டுமானால் கேட்காமலே செய்யா லாம் என்பதை இவன்பால் உலகம் உணர்ந்தது.

[ஆற்றலுடையவர்களிடத்தில் தவறு செய்தல் கூடாது]

---

699. துரியோதனன் கதை (1)

துரியோதனன் என்பவன் திங்களின் குலத்தில் திரு தராட்டிரனுக்கும் காந்தாரி என்பவளுக்கும் மகனுகத் தோன்றினன். இவனேடு கூடப்பிறந்தோர் நூற்றுவ ராவர். துரியோதனனுக்குத் தீய குணங்கள் யாவும் பிறப் பிலேயே நன்கு படிந்திருந்தன. எத்தகைய பெரியோர்களை யும் இவன் வணங்கமாட்டான். அதனால் இவனுக்கு வணங்காமுடி மன்னன் என்று ஒரு பெயரும் அமைந் திருந்தது.

பெருஞ் செல்வத்தைப் பெற்றிருந்தவனுகிய இவன் பிறர் ஆக்கங் கண்டு பொருமையாகிய தீய குணத்தையும் மிகப்

பெரிய அளவிற் பெற்றிருந்தான். பாண்டவர்களை எவ்வாறேனும் அழித்தொழிக்க வேண்டும் என்பதே இவனுடைய முதன்மையான குறிக்கோளாக இருந்தது.

அதனால் பாண்டவர்களுக்கு இவன் செய்த தீமைகள் எண்ணமுடியாதன. வீடுமன் முதலியோர் இவனுக்குக் கூறிய அறவுரைகளும் வீணாகவே போயின. ஒழுக்கமற்ற இவனை உலக மக்கள் அனைவருமே வெறுத்துப் பழித்தனர். பிறகு பாரதப் போர் நிகழ்ந்தபோது தன்னுடைய உடன் பிறந்தவர்களோடும் நண்பர்களோடும் அழிந்தொழிந்து இழிந்துபோனான். இவன் எவ்வளவோ உயர்வாக வாழக் கூடிய வாய்ப்பைப் பெற்றிருந்தும் அது வீணாகவே போயது. அழுக்காறுடையவனிடத்தில் செல்வம் நிலைக்கமாட்டாது. ஒழுக்கமற்றவனுக்கு உயர்வு உண்டாகமாட்டாது. என்பதை உலகம் இவன்பால் உணர்ந்துகொண்டது.

[அழுக்காறுடையவனும் ஒழுக்கமற்றவனும்] (பாரதம்)

---

700. துரியோதனன் கதை (2)

துரியோதனன் பெருந்திருவுடையவனாகச் சிறந்திருந்தான். செல்வ நலம் அளவில்லாமல் அமைந்திருந்தது. ஆயினும் துரியோதனனுடைய குணநலம் சீருடையதாக இல்லை. சுற்றத்தினராகிய பாண்டவர்கட்கு நாளுந்தொல்லை கொடுத்தான். அவன் சுற்றத்தோடு ஒட்டி வாழமாட்டான் என்பதை அறிந்த பெரியோர்கள் பாண்டவர்கட்குத் தனியிடம் அமைத்துக்கொடுத்து அதில் இருக்கச் செய்தனர். துரியோதனனுடைய தீக்குணங்கள் இப்பொழுதும் மாறவில்லை. சேய்மையில் இருந்த உறவினர்களாகிய பாண்டவர்களை அண்மையில் அழைத்துத் தீமைசெய்தான். சூதாடச் செய்து நாடுநகர்களைக் கைப்பற்றினான். விதுரன் முதலோர்களையும் விரட்டினான். வீடுமரையும் பகைத்துக் கொண்டான்.

துரியோதனன் இவ்வாறு பழிபடு செயல்களைப் புரியவே போர் நிகழ்ந்தது. தானும் மாண்டான்; தன்னுடன் பிறந்தவர்கட்கும் அழிவையுண்டாக்கினான். அவனுடைய

செல்வ நலமுஞ் சிதறியழிந்தது. சுற்றத்தோடு மனங்கலந்து பழகும் தன்மை இல்லாதவனுடைய வாழ்க்கை குளப்பரப் பானது கரையில்லாமல் நீர்நிறைந்தாற் போன்றது என்னுஞ் செய்தி இவனிடம் நன்கு பெறப்பட்டது.

[உறவினரைப் பகைத்தல்]

---

701. துரியோதனன் கதை (3)

பாண்டவர்கள் கானகத்தில் தங்கியிருக்கையில் துரியோதனன் தன்னுடைய செல்வச் சிறப்பைப் பாண்டவர்களுக்குக் காட்டி அவர்களுக்கு வயிற்றெரிச்சலை உண்டாக்க வேண்டும் என்று எண்ணினான். உயர்ந்த ஆடையணிகளை அணிந்துகொண்டு தன்னவர்களோடும் படைகளோடும் பாண்டவர்கள் தங்கியிருக்குமிடத்திற்குச் சென்றான். பக்கத்தில் ஓரிடத்தில் நீர்நிலையொன்றில் படைகளோடு நீராடிக் கொண்டிருந்தான்.

அப்பொழுது அந்த இடத்தில் சித்திரசேனன் என்னும் வித்தியாதரன் ஒருவன் அழகிய மாதர்கள் பலரோடு வந்து தங்கியிருந்தான். முதலில் இவனுக்கும் அவனுக்குஞ் சொற் போர் நிகழ்ந்தது. பிறகு விற்போர் தொடங்கியது. வித்தியாதரன் துரியோதனன் முதலிய பாவரையும் வென்று துரியோதனனைக் கட்டிச் சிறைபிடித்துக் கொண்டு தன் நாட்டை நோக்கிப் புறப்பட்டான்.

துரியோதனன் அஞ்சினான்; அலறினான். பாண்டவர்களை நோக்கி அபயமிட்டுக் கத்தினான். இவனுடைய கதற லைத் தருமர் கேட்டார். உள்ளமிரங்கித் தம்பியரையனுப் பினர். நால்வருஞ் சென்று சித்திரசேனனை வளைந்தனர். அவன் அரவக் கொடியோனை விட்டுவிட்டுச் சென்றான்.

நால்வரும் தீயோனைக் கொண்டுவந்து தூயோன் முன் நிறுத்தினர். தூயோன் அத்தீயோனுக்கு இன்னுரைகள் பல இயம்பிக் கனி முதலியன வழங்கி வழியனுப்பி வைத்தான். தீயோன் நாணத்தோடு அவ்விடமிருந்து திரும்பினான்.

காட்டில் இருந்தும் இவர்கள் இவ்வாறு சிறப்புடன் இருக்கிறார்களே எனனும் பொறுமை இவன் உள்ளத்தை வெதுப்பத் திரும்பிச் சென்றான்.

தனக்குத் துன்பஞ் செய்தவரை ஒறுத்தல் அவர் நாண முறும்படி நன்மை செய்தலாம் என்பது அன்று தருமரிடம் நன்கு காணப்பட்டது.

(பாரதம்)

---

702. துரியோதனன் கதை (4)

துரியோதனன் எவரையும் ஒரு பொருளாக மதியாது இகழ்வதில் தேர்ச்சிபெற்றிருந்தான். இவன் பாண்டவர்களைப் பழித்துரைத்து அவர்களுக்குத் தொல்லை புரிதலையே தனது இனிய பொழுதுபோக்காகக் கொண்டு காலங்கழித்தான்.

பாண்டவர்களைப் பலவாறு வைததன்றித் தூது வந்த கண்ணபிரானையும் மனம்போனபடி வைதான், இடையன் என்றான்; கோவியர்களால் உரலோடு கட்டுண்டவன் என்றான்; வெண்ணெயைத் திருடியவன் என்றான்; துரியோதனனுடைய உரைகள் கண்ணபிரானெடு சென்றிருந்த சாத்தகிக்கு மிகுந்த சீற்றத்தை உண்டாக்கியது. துரியோதனைக் கொன்றுவிடுவதாகக் கூறி வாளையுருவிக்கொண்டு அவன்மீது பாய்ந்தான். சாத்தகி துரியோதனைக் கொன்று விடாமல் கண்ணபிரான் பிடித்துக் கொண்டார்.

"அறிவற்றவனுகிய இத்துரியோதனன் அறிவில்லாமற் பேசினுல் நாம் சினங்கொள்ளலாமா? உறவினர்களுடைய குற்றங்களையே எடுத்துக் கூறிப் பழித்துரைப்போர் மற்றவர்களை என்னதான் சொல்லமாட்டார்கள்" என்று எடுத்துரைத்துத் தடுத்துவிட்டார். இதனுல் அன்று துரியோதனன் இன்னுயிர் பிழைத்தான்.

(பாரதம்)

---

703. துருவன் கதை

துருவன் என்பவன் உத்தானபாதன் என்னும் அரச னுடைய புதல்வன். சிறந்த அறிவுடையவன். இவனுக்கு உத்தமன் என்னும் பெயருடைய தம்பி ஒருவன் இருந்தான். இருவரும் இருதாய்வயிற்றில் பிறந்தவர். மூத்தவள் மகன் துருவன், இளையவள் மகன் உத்தமன். அரசன் இளையாள் மோகத்திலாழ்ந்து மூத்தாளையும் அவளுடைய மகனையும் வெறுத்தான். இதனால் வருந்திய துருவன் தன் தாயின் சொற்படி தவஞ்செய்தான். இறைவன் அருளைப்பெற்று உயர்பதம் அடைந்தான். இளையவனுகிய உத்தமன் அரச செல்வத்தை அடைந்து அரசாட்சி புரிந்திருந்தான். ஆயினும் அறிவில்லாதவனுகையால் குடி முதலியவை களில் ஈடுபட்டு இறுதியில் மாண்டொழிந்தான்.

துருவன் தன்னுடைய அறிவின் சிறப்பால் உயர்பதம் அடைந்தமையையும் இளையவன் அறிவின்மையால் எல்லா வற்றையும் இழந்து அழிந்தமையையுங் கண்டோர் அறிவுடை யவர் எல்லாம் உடையவர் ஆவர்; அறிவற்றவர் எவைகளை உடைய்வர்களாக இருந்தாலும் யாதும் இல்லாதவர்களே யாவர் என்று தெளிந்தனர்.

[அறிவுடைமையும்]

(இன்மையும்)

---

704. துருவாசர் கதை

தேவலோகத்தில் தேவேந்திரன் அவையில் முனிவர் களுந் தேவர்களும் கூடியிருந்தார்கள். நிலவுலகில் உருக்கு மாங்கத மன்னன் ஏகாதசி நோன்பைச் செய்வதால் மக்களும் அதனைக் கடைப்பிடிக்கின்றனர். இதனால் உருக்குமாங்கத னுடைய நாட்டில் எமதூதர்களுக்கு வேலையில்லாமற் போய் விட்டது என்று பேச்சு நிகழ்ந்தது.

துருவாசர், "நான் உலகத்திற்குப் போய் அந்நோன்பை அழித்து விடுகிறேன்" என்று கூறினர். உடனே புறப்பட்டு

உருக்குமாங்கதனுடைய நாட்டிற்கு வந்து சேர்ந்தார். உருக்கு மாங்கதன் முனிவரைக் கண்டு வணங்கினன். தகுந்த வழி பாடுகள் செய்தான். "தேவரீர் இங்கெழுந்தருளியது யாது காரணம்?" என்று உசாவினன்.

முனிவர் அரசனைப் பார்த்து, "நீ ஏகாதசி நோன்பை மேற்கொண்டு நடத்துகிறாய் என்று உணர்ந்தேன். அதனால் உன்னைப் பார்த்து விட்டுப் போகவந்தேன்" என்றார். "இன்று என்னுடைய மனையில் அடிகள் உணவு கொள்ள வேண்டும்" என்று சொல்லி வேண்டிக் கொண்டான். துருவாசர், "நானும் ஏகாதசி விரதம் இருந்து விட்டுச் சாப்பிட வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றார்.

அரசனும் நகர மாந்தர்களும் ஏகாதசி விரதமிருந்தனர். துவாதசியில் உணவு கொள்ளுஞ் சமயத்தில் துருவாசர் வர வில்லை. எங்கோ மறைந்திருந்தார். அரசன் விரதப்பலன் கெட்டுப்போகக் கூடாதென்று சிறிது தண்ணீர் அருந்தினன். உடனே துருவாசர் தோன்றி, "நான் இல்லாமற் சாப்பிட்டு விட்டாய் உன்னைத் தொலைத்துவிடுகிறேன்" என்று சொல்லித் தம்முடைய சடையை எடுத்து நிலத்தில் ஓங்கி யடித்தார். அந்த இடத்தில் நிலம் வெடித்து ஒரு பூதம் புறப்பட்டது. அம்பு உருக்குமாங்கதனைக் கொல்லத் தொடங் கிற்று. அவன் அஞ்சியோடினான். அவனுடைய உதவிக் குத்திருமாலின் ஆழிப்படை வந்தது. அது பூதத்தைக் கொன்றுவிட்டது. பிறகு துருவாசரைக் கொல்லத் துரத்தியது துருவாசர் சிவபிரான் திருமால் முதலிய தேவர்களிடஞ் சென்று தம்மைக் காப்பாற்ற வேண்டுமென்று வேண்டினார். அவர்களோ "எம்மால் இயலாது உருக்குமாங்கதனிடம் ஓடு" என்று சொல்லி விரட்டினார்கள். சாட்சிக்காரன் காலில் விழுவதைப் பார்க்கினுஞ் சண்டைக்காரன் காலில் விழுவது நல்லது என்று எண்ணிய துருவாசர் விரைந்து வந்து உருக்கு மாங்கதனிடஞ் சேர்ந்தார். உருக்குமாங்கதனும் ஆழிப் படையிடமிருந்து துருவாசரைக் காப்பாற்றினான்.

துருவாசர் வேலையற்றுப்போய் நமக்கு நாமே தொல்லை யைத் தேடிக் கொண்டோமே இஃதென்ன அறிவு! என்று தம்மைத்தாமே நொந்து கொண்டு போய்விட்டார்.

" வாச்சு தெனத் துருவாசர் உருக்குமாங்
கதணமெத்த வருத்த நேமி
பாய்ச்சலினுல் ரிஷியைவெல்ல வரருக்மாங்
கதன்தாபம் பரித்தா ரன்றே "

[துருவாசர் உயிர் பிழைத்தது] (செயங்கொண்டார் வழக்கம்)

---

705. துரோணர் கதை

துரோணர் பரத்துவாசருடைய புதல்வர். பரத்துவாசர் ஒருநாள் திலோத்தமையைக் கண்டார். அவள்மேல் பெரு மோகங் கொண்டார். அதனுல் இவருடைய வீரியம் காரிய மாகாமலே வெளியாயிற்று. அதணைப் பரத்துவாசர் ஒரு துரோ ணத்தில் விடுத்தார். துரோணம் என்பது பதக்கு அளவு கொள்ளும் குடம். அக்குடத்தில் இவர் பிறந்தபடியினுல் துரோணர் என்னும் பெயரைப் பெற்றார்.

எல்லாக் கலைகளிலும் வல்லவராய் இவர் சிறப்படைந் தார். இவரோடு துருபதன் என்னும் பெயருடையான் ஒருவன் கலைகள் கற்றன். அவன் அறிவில் மந்தமானவன்; ஆகவே கூரிய அறிவாளியாகிய துரோணருடைய உதவி யைக்கொண்டே கலைகளைப் பயின்றான். அதன் பொருட்டு நன்றியறிதலாய்த்தான் அரசன் ஆனபிறகு தன் நாட்டில் பாதியை இவருக்குத் தருவதாகக் கூறினன். பிறகு இருவரும் பிரிந்தனர்.

துருபதன் அரசனனன். துரோணர் கிருபி என்பவளை மணந்து இல்லற வாழ்க்கையிற் புகுந்தார். மகன் ஒருவனுந் தோன்றினன். இல்லாத் துன்பம் இவருக்கு மிகுதியாயிற்று. அதனுல் வருந்தினர். நண்பன் நாடு தருவதாகச் சொல்லி யுள்ளானே மாடு தருமாட்டானே சிறுவனுக்குப் பால் கிடைக்குமே என்று எண்ணியவராய்த் துருபதனிடஞ் சென்றார். அம்மடையன் இவ்வறிவாளிக்குயாதும் உதவாமலே விரட்டிவிட்டான்.

இந்த உலகத்தின் இயற்கை இரண்டு வகை; ஆதலால் திருவுடையராதலும் வேறு; அறிவுடையராதலும் வேறு என்பது இவர்கள் இருவர்பாலும் நன்கு பெறப்பட்டது.

[அறிவுடைமையுஞ் செல்வமும் வெவ்வேறு]

---

706. துரோணரை ஓணன் கொண்டு போன கதை

துரோணாச்சாரியார் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் வில்வித்தை கற்பித்துக் கொண்டிருந்தார். பாண்டவர்கள் அறிவுடையவர்களாகையால் வில்வித்தையை நன்கு கற்றுக் கொண்டார்கள். கௌரவர்களோ மந்தர்களாகையால் வில்வித்தையை நன்முகக் கற்றுக் கொள்ளாமலிருந்தார்கள். இதனைத் திருதராட்டிரன் உணர்ந்தான். ஒருநாள் துரோணரைப் பார்த்து, "என்னுடைய பிள்ளைகளுக்கு நீர் கற்றுக் கொடுக்கிற வித்தை நன்முக வரவில்லை. என்னுடைய தம்பி பிள்ளைகளுக்கு நன்முக வருகிறது. ஆகையால் உம்மிடத்தில் வஞ்சகம் இருக்கும்போல் தெரிகிறது" என்று சொன்னான்.

துரோணர் திருதராட்டிரனை அழைத்துக் கொண்டு பூம்பொழில் ஒன்றுக்குச் சென்முர். இருவரும் மறைவான் ஓரிடத்தில் அமர்ந்து கொண்டு ஒரு தூதனையழைத்தார்கள். அவனைப் பார்த்து, "நீ பிள்ளைகள் வில் வித்தை பயிலுகிற கூடத்திற்குப்போய், அப்பிள்ளைகளிடத்திலே, 'உங்களுடைய ஆசிரியரை ஓர் ஓணன் கொண்டு போகிறது' என்று சொல்லிவிட்டு வருவாயாக" என்று சொன்னார்கள். அவனும் அவ்வாறே சென்று கூறினான்.

துரியோதனன் முதலியோர் நம்முடைய ஆசிரியரை ஓணன் கொண்டுபோகக் காரணம் என்ன? அதை அடித்து இழுத்தெறிந்துவிட்டு ஆசிரியரைக் கூட்டிக் கொண்டு வருவோம் என்று கம்பும் கையுமாக வந்து வேலிகளையெல்லாங் கலைத்துக்கொண்டு திரிந்தார்கள்.

பாண்டவர்கள் ஐந்து பேரும் நம்முடைய ஆசிரியர் பேராண்மை மிக்கவர். அவரை ஒணுன் கொண்டு போவ தாகச் சொல்வது வெறும் புரட்டு. இதில் ஏதோ வேடிக்கை யிருக்கிறது போய்ப் பார்ப்போம் என்று ஐந்துபேரும் ஐந்து தேரில் ஏறிக்கொண்டு வில்லுடனும் அம்புடனும் வந்தார்கள். அவர்களுடைய படைகளும் பின்னல் வந்து கொண்டிருந் தன. பொழிலையடைந்த பாண்டவர்கள், ''ஓணுன் எங்கே?'' என்று கேட்டார்கள். துரோணர் இச்செய்தியைத் திருத ராட்டிரனிடம் கூறி, ''உம்முடைய பிள்ளைகளின் அறிவு இப்படி இருக்கிறது. நான் என்ன செய்வேன்?'' என்று கூறினர்.

" மன்னர் துரோணரை யோணுன் கொண்டு
போகுதென் ருெருசொல் வந்ததாலே
பொன்னுரத மேறியம்பு வில்லெடுத்து
ஐவரும் சமர்க்குப் போனரன்றே ''

[துரியோதனன் முதலியோர் மடமை] (செயங்கொண்டார் வழக்கம்)

---

707. துற்சகன் கதை

சையகிரி என்னும் மலையில் துற்சகன் என்னும் பெயரை யுடையவன் ஒருவன் இருந்தான். அவன் வேடர் குலத்திற் பிறந்தவன். கொலை, களவு முதலிய தீவினைகளை மிகுதி யாகச் செய்துகொண்டு திரிந்தான். அவன் மிகக்கொடியவன் என்னும் பெயர் எங்கும் பரவியிருந்தது. அந்நாளில் சோழ மன்னர் ஒருவர் கூத்தப்பிராணைக் கண்டு போற்றுவதற்காக உறையூரிலிருந்து சுற்றத்தினரோடு நில்லையை நோக்கி வந்து கொண் டிருந்தார். உறையூர்ச் சுற்றத்தினர் துற்சகனைப்பழைத்து அரசரின் சுமையொன்றைத் தூக்கிக் கொண்டு வருமாறு கூறினர். துற்சகனும் அவ்வாறே சுமையைச் சுமந்து கொண்டு திருத்தில்லைக்கு வந்தான். கூத்தப்பிராணைப் போற்றி வழிபட்டான். பிறகு காய்ச்சல் நோயால் இறந்தான். கூத்தப்பிராணைப் போற்றி வழிபட்டபடியாலும் திருத்தில்லை யில் இறந்தபடியாலும் அவன் நற்கதியை அடைந்தான்.

"பாதகஞ்செய் துற்சகனும் பண்டிறக்கக் கண்டுகதி
போதவுவந் திட்ட புலியூரே"

[துற்சகன்] (புலியூர் வெண்பா)

---

708. துற்றெரிசனன் கதை

துற்றெரிசனன் என்னும் பெயருடைய வேடன் ஒருவன் வழிச்செல்வோர்களைக் கொள்ளையடித்தல் கொலை செய்தல் முதலிய தீத்தொழிலிலே ஈடுபட்டுத் தன்னுடைய வாழ் நாளைக் கழித்துக்கொண்டிருந்தான். அவ்வாருக ஒருநாள் அகவை முதிர்ந்த அந்தணன் ஒருவன் அவ்வழியே வந்தான். வேடன் அவ்வந்தணனைப் பார்த்து, "உன்னைக் கொலை புரிந்து விடுவேன். உன்னிடம் உள்ள பொருள்களை யெல்லாங் கொடுத்துவிடு" என்று கேட்டான். அந்தணன் தன்னிடமிருந்த பொருள்களை உடனே வேடனிடங் கொடுத்துவிட்டான். பிறகு வேடனைப் பார்த்து, "நான் முதியவ னுகையால் வெய்யிலால் வருந்துவேன். நீ கவர்ந் துள்ள பொருள்களில் குடையையமட்டுங் கொடு" என்று கேட்டான். வேடனும் உள்ளம் இரங்கிக் குடையைக் கொடுத்தான். அந்தணன் அக்குடையைப் பிடித்துக் கொண்டு திருத்தில்லைக்குச் சென்றான். அந்தணனுக்குக் குடை வழங்கிய நல்வினையினால் அந்த வேடன் சிவபெருமா னுடைய திருவடிகளை யடைந்தான்.

"நற்கதியைத் துற்றெரிசனன் மறையோ னுட்களிக்கப்
பொற்குடையால் நல்கும் புலியூரே"

[துற்றெரிசனன்] (புலியூர் வெண்பா)

---

709. துன்பந் தொடர்ந்துவந்த கதை

ஓர் ஊரிலே ஒரு குடியானவன் இருந்தான். அவனுக்குப் பொல்லாத காலம் வந்தது. ஒருநாள் பெருமழை

பொழிந்தது. அப்பொழுது அவனுடைய ஆன் ஒன்று கன்று போட்டது. மழையினுல் ஆவுக்குங் கன்றுக்கும் அல்லல் உண்டாகும்போல் தெரிந்தது. அப்பொழுது அவனுடைய வீட்டின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது. அச்சமயத்தில் சூல்கொண்டிருந்த குடியானவனுடைய மனையாள் பேறு காலம் நெருங்கியதனுல் உடல் வருந்தினுள். மேலும் அக்குடியானவனுடைய வேலையாள் ஒருவன் இறந்து போனுன் என்று செய்தி வந்தது. குடியானவன் இப் பொழுது விதையை விதைக்காவிட்டால் நிலங் காய்ந்து போகும். 'எது எப்படியானுலும் ஆகட்டும், விதையை விதைத்துவிடுவோம்' என்று எண்ணியவனுய் விதையைத் தூக்கிக்கொண்டு வயலைப்பார்க்க வோடினுன். அப்பொழுது அவனுடைய பழைய கடன்காரர்கள் சிலர் எதிர்ப்பட்டுக் கடனைக் கொடுத்துவிட்டு மறுவேலை பார்க்கவேண்டுமென்று மறித்தார்கள். இச்சமயத்தில் நிலத்திற்கு வரி கட்டவில்லை யென்று அரசாங்க ஆள் வரிப்பணத்தை வாங்குவதற்கு வந்தான். இவைகள் இவ்வாருகக் குடியானவனுடைய குலகுரு தமக்கு அவ்வாண்டுக் காணிக்கைப்பொருள் தர வில்லை யென்று அதனைக் கேட்டுக்கொண்டு வந்தார். புலவர்கள் இருவர் இச்சமயத்தில் குடியானவன்மீது சில செய்யுட்கள் இயற்றிக்கொண்டு வந்து அவைகளைக் கேட்டு நன்கொடை கொடுக்கவேண்டும் என்றார்கள். குடியானவன் இச்சமயத்தில் அடைந்த வருத்தத்தைக் கூறவும் வேண்டுமோ ?

"ஆவீன மழைபொழிய இல்லம் வீழ
அகத்தடியாள் மெய்ந்நோவ அடிமை சாவ
மாவீரம் போகுதென்று விதைகொண் டோட
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ளக்
கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்கக்
குருக்கள்வந்து தட்சணைக்குக் குறுக்கே நிற்கப்
பாவாணர் கவிபாடிப் பரிசு கேட்கப்
பாவிமகன் படுந்துயரம் பார்க்கொ ணுதே"

[துன்பம் வந்தால் தொடர்ந்து வரும்] (விவேகசிந்தாமணி)

710. தூக்கணங் குருவியின் கதை (1)

ஒருநாள் அடைமழை பெய்துகொண்டிருந்தது. மக்கள் வெளியே புறப்படாமல் வீட்டிற்குள்ளேயே அடங்கியிருந்தனர். பறவைகளெல்லாம் தம் கூடுகளில் ஒடுங்கியிருந்தன. குரங்கு ஒன்றுக்கு மழையில் நனையாமல் தங்குவதற்கு இடங்கிடைக்கவில்லை. அது மழையில் நனைந்துகொண்டு ஒரு மரத்தின்கீழ் வந்து தங்கியிருந்தது. அம்மரத்தின்மேல் கூடுகட்டிக்கொண்டிருந்த ஒரு தூக்கணங் குருவி அக்குரங்கைப் பார்த்து, "ஐயா குரங்காரே அவர்களே! தாங்கள் மழையில் வருந்துகிறீர்களே. மனிதர்களுக்கு இருப்பதைப்போலத் தங்கட்கும் கை கால்கள் இருக்கின்றனவே! தாங்கள் ஏன் ஒரு குடிசை போட்டுக்கொண்டு சுகமாகத் தங்கியிருக்கக்கூடாது?" என்று உசாவியது. இதனைக் கேட்டவுடன் குரங்கிற்கு மிகுந்த சினம் உண்டாகியது. அது தூக்கணங் குருவியைப் பார்த்து, "அடா அற்பப் பயலே! நீதானு எனக்கு அறிவுரை கூறுபவன்? ஒரு சிறு கூட்டைக் கட்டிக்கொண்டதும் நீ மிகப்பெரியவனாகிவிட்டாயோ? இதோ பார்! உன்னுடைய கூட்டைப் பிய்த்தெறிகிறேன்" என்று கூறிக்கொண்டே விரைந்து மரத்தின்மேல் ஏறித் தூக்கணங் குருவியின் கூட்டைப் பிய்த்தெறிந்துவிட்டது. அதனால் தூக்கணங் குருவியும் மழையில் நனைந்து வருந்தவேண்டியதாயிற்று. அறிவற்றவர்கட்கு அறிவுரை கூறினால் தவருமல் தீங்குண்டாகும். ஆகவே அறிவற்ற முரடர்களுக்கு நாம் அறிவுரை கூறுதல் கூடாது.

"வானரம் மழைதனில் நனையத் தூக்கணம்
தானெரு நெற்சொலத் தாண்டிப் பிய்த்திடும்
ஞானமுங் கல்வியும் நவின்ற நூல்களும்
ஈனருக் குரைத்திடில் இடர தாகுமே"

[தீயோர்கட்கு அறிவு சொல்லுதல்] (விவேகசிந்தாமணி)

711. தூக்கணங் குருவியின் கதை (2)

குரங்கு தூக்கணங் குருவியின் கூட்டைப் பிய்த்தெறிந்து விட்டதன்றே? இதனால் வருத்தமடைந்த தூக்கணங்குருவி முறை மன்றத்திற்குப்போய் நடுவரைக்கண்டு "நான் மழையில் நனைந்து வருந்திய குரங்காருக்கு அறிவுரை கூறினேன். அவ்வளவிற் குரங்கார் மிகுந்த சினங்கொண்டு என்னுடைய கூட்டைப் பிய்த்தெறிந்து விட்டார். தாங்கள் இதனை நன்கு உசாவி முறை வழங்குதல் வேண்டும்" என்று சொல்லி வேண்டிக் கொண்டது.

நடுவர் உடனே குரங்கை வரவழைத்து உசாவுவதாகச் சொன்னார். குரங்கை அழைத்து வருமாறு ஆளை அனுப்பினர். தன்னை ஒறுப்பதற்காகத்தான் நடுவர் அழைக்கிறார் என்பதைக் குரங்கு அறிந்து கொண்டது. போகும் வழியில் பலாமரம் ஒன்றில் ஏறிப் பலாப் பழம் ஒன்றை அறுத்து எடுத்துக் கொண்டு சென்றது. நடுவருக்குத் தெரியாமலே அப்பழத்தை அவருக்குப் பின்னால் வைத்து விட்டுத் தான் முன்னால் சென்று நின்றது. நடுவர் குரங்கைப் பார்த்தவுடனே மிகுந்த சினங்கொண்டார். "பொல்லாத குரங்கே! இத் தூக்கணங்குருவி உனக்கு நல்லது சொன்னால் நீ அதனுடைய கூட்டைப் பிய்த்தெறிந்து விட்டாயாமே! உனக்கு அவ்வளவு கொழுப்பு என்ன? பார் உன்னைக் கண்டதுண்டமாக வெட்டச் சொல்கிறேன்" என்று கூறிச் சிறினர். இதனைக் கேட்ட குரங்கு நடுங்கியது. "எதையும் முன்பின் பார்த்துப் பேச வேண்டும்" என்று கூறியது.

இதனைக் கேட்ட நடுவர் இக்குரங்கு என்ன இப்படிச் சொல்லுகிறதே என்று எண்ணமிட்டவாறு கடைக் கண்களால் பின்புறம் பார்த்தார். பலாப்பழம் இருப்பது தெரிந்தது. இதனைக் குரங்குதான் கொண்டுவந்து வைத்திருக்கிறதென்று அறிந்து கொண்டார். சிறிது நேரம் எண்ணமிடுபவர் போல் இருந்தார். பிறகு தூக்கணங்குருவியைப் பார்த்து, "ஏ வாயாடிக் குருவியே! நீ சும்மா யிருப்பதற்கென்ன கேடு? மலைபறித்தாற் போன்றிருக்கின்ற இக்குரங்காருக்கு நீதானா அறிவுரை கூறுவது? இனிமேல் இவ்வாறு வாயாடாதே. பெரியோர் சிறியோர் என்கிற எண்ணம் வேண்டும். இம் பொழுது ஓடிப்போ" என்று கூறினர்.

இதனைக்கேட்ட தூக்கணங்குருவி, எல்லாம் கைக்கூலி செய்த வேலை என்று எண்ணிக் கொண்டே பறந்து ஓடிப் போய்விட்டது. குரங்குந் தன் வழியே போய்விட்டது.

[கைக்கூலி பெறுவோர்]

---

712. தெய்வானை கதை

தெய்வானை என்பவள் அசுர குருவாகிய சுக்கிரனுடைய மகள். சன்மிட்டை என்னும் பெயருடைய அரசன் மகளோடு கூடி ஒருநாள் மலர் கொய்வதற்கு இவள் சென்றாள். தோழிகள் பலரும் உடன் சென்றார்கள். நண்பகற்போதில் தடாகம் ஒன்றில் எல்லோரும் நீராட எண்ணினார்கள். ஆடையைக் களைந்து கரையில் வைத்து விட்டுத் தடாகத்தில் இறங்கி நீராடினார்கள். அப்பொழுது அவ்விடத்திற்கு ஆண்மகன் ஒருவன் வந்தான். எல்லோரும் விரைந்து கரையேறித் தத்தம் ஆடைகளை எடுத்து அணிந்து கொண்டார்கள். அக்காலை தெய்வானையின் ஆடையைச் சன்மிட்டை அறியாமல் எடுத்துக் கட்டிவிட்டாள். அதன் பொருட்டுத் தெய்வானையைச் சன்மிட்டை பலவாறு இகழ்ந்தாள். அரசன் மகளாகிய தன்னைத் தெய்வயானை இகழ்ந்தாளே என்று சன்மிட்டை உள்ளத்துட் பகைகொண்டிருந்தாள். ஒருநாள் தெய்வானையைப் பிடித்து ஒரு பாழுங் கிணற்றிலே தள்ளி விட்டாள். அக்கிணற்றுக்குள் தெய்வானை திண்டாடிக் கொண்டிருந்தாள். அப்பொழுது அங்கு வேட்டைக்கு வந்த அயாதி அரசன் என்பவன் தெய்வானையைக் கிணற்றிற் கண்டு கரையேற்றினன்.

தெய்வானை அயாதி செய்த பேருதவியைப் பெரிதும் பாராட்டினாள். தான் அவனையே திருமணஞ் செய்து கொண்டாள். செய்த நன்றி சிறிதாக இருந்தாலும் அது செய்யப்பட்ட காலத்தைப் பார்த்து நல்லவர்கள் அதனைப்

பெரிதாக மதித்துப் போற்றுவார்கள் என்னும் உண்மை தெய்வாதீனப்பால் நன்கு விளங்கியது.

[காலத்தினாற் செய்த நன்றி]

---

713. தெய்வீகன் கதை

நடுநாட்டிலே திருக்கோவலூரிலே தெய்வீகன் என்பவன் ஒருவன் முன்னாளில் வாழ்ந்திருந்தான். இவன் எப்பொழுதும் உயர்ந்த எண்ணங்களையுஞ் சிறந்த செயல்களையும் உடையவனாக இருந்தான். இவனிடத்தில் மகிழ்ச்சி கொண்ட இந்திரன் தெய்வத் தன்மை பொருந்திய குதிரை யொன்றை இவனுக்குத் தந்தான். இதன் பிறகே இவனுக்குத் தெய்வீகன் என்று பெயருண்டாகியது. அக்குதிரையினிடம் உள்ள தெய்வத் தன்மை என்னவென்றால் அஃது எத் தகைய தீனியையும் தின்னாது. ஆனால் நினைத்த இடங் களுக்கெல்லாஞ் செல்லுந் தன்மை பொருந்தியது. தெய்வீ கன் அத்தெய்வீகக் குதிரை மீதமர்ந்து நினைத்த இடங் களுக்கெல்லாஞ் சென்று கொண்டிருந்தான்.

மூவேந்தர்களும் அக்குதிரையைத் தமக்குத் தந்துவிடு மாறு தனித்தனியே இவனுக்கு ஆள் அனுப்பினர். இவனோ எவருக்குந் தரமுடியாது என்று மறுத்து விட்டான். போர் மூண்டது. மூவேந்தரையுந் தன்னால் வெல்ல முடியும் என்னும் உயரிய எண்ணத்தோடிருந்த இவன் தான் எண் ணியவாறே வெற்றியடைந்தான். மூவேந்தரும் போர் மூள்வதற்கு முன்பு செய்து கொண்ட ஏற்பாட்டின்படி தத்தம் பெண்களை இவனுக்குத் திருமணஞ் செய்து தந்தனர். அவர் களோடு இவன் சிறந்த நிலைமையில் விளங்கி யிருந்தான். மக்கள் தம் உள்ளத்தில் உயரிய எண்ணங்களைக் கொண்டி ருப்பின் அதற்குத்தக நல்வாழ்வு பெறுவர் என்பது இவனிடம் நன்கு விளங்கியது.

[சிறந்த எண்ணம் உயர்ந்த நிலையைத் தரும்]

---

714. தென்மலையான் கதை

தென்மலை என்னும் ஊரிலே முன்னாளில் செல்வன் ஒருவன் இருந்தான். வெகுகாலமாகிவிட்டபடியால் அவனுடைய பெயரை அனைவரும் மறந்துவிட்டார்கள். அவனுடைய ஊர்ப்பெயரால் அவன் தென்மலையான் என்றே சொல்லப்படுகிறான். இத் தென்மலையானிடம் செல்வம் மிகுதியாக இருந்தது. இவன் மிகக் கையழுத்தக்காரன். தானதருமங்கள் செய்யமாட்டான். நன்றாக உண்டு உடுத்து வாழமாட்டான். தன்னுடைய செல்வத்தைக் கள்ளர்கள் கவர்ந்துகொண்டு போய்விட்டால் என்ன செய்வதென்று அஞ்சிப் பொருளைப் பொன்னாக மாற்றி விளாங்காய் அளவு உருண்டைகளாகச் செய்தான். ஐந்தாறு உருண்டைகளாயின. அவைகளைத் தன்வீட்டு முன்றிலில் இருந்த விளாமரத்தின் அடியிற் புதைத்துவைத்தான்.

தென்மலையானுக்கு அகவை முதிர்ந்துவிட்டது. சாங்காலமும் நெருங்கிவிட்டது. ஆங்காலமெல்லாவற்றையும் அவமே போக்கிய அவனுடைய உடல் வீங்கிவிட்டது. தொண்டையை அடைத்துக் கொண்டது. கையை அசைக்க முடிகிறதே தவிர வாய்திறந்து ஒரு சொல்லும் பேசமுடியவில்லை. காய்ச்சல் வேறு அடிக்கிறது. இச்சமயத்தில் அவனுக்கு நல்லறிவு சிறிது உண்டாயிற்று. 'நாம் அறஞ் செய்யாமல் இருந்தோமே! பொருள் வீணாகப் போய்விடப் போகிறதே! பொருளை எடுத்து அறஞ் செய்யுமாறு சொல்லுவோம்' என்று எண்ணினான். பேசமுடியாதபடியால் விளாமரத்தைச் சுட்டிக்காட்டிக் கையையும் உருண்டையளவாகப் பிடித்துக் காட்டினான். விளாமரத்தினடியில் பொன்னுருண்டைகள் உள்ளன என்பதுதான் அவனுடைய சைகைக்குப் பொருள். ஆனால் யாருக்கும் அது விளங்கவில்லை. சாகப் போகிற சமயத்தில் விளாம்பழந் தின்ன விரும்புகிறான் என்று பக்கத்தில் இருந்தவர்கள் எண்ணினார்கள். "காய்ச்சல் அடிக்கிற இச்சமயத்தில் விளாம்பழத்தைத் தின்னக்கூடாது" என்று கூறிவிட்டார்கள். தென்மலையான் அந்தோ நம்முடைய பொன் புளிவிளங்காயாகப் போய்விட்டதே என்று உள்ளம் வருந்தி மாண்டான். அவனுடைய பொருள் யாருக்கும் பயன்படாமல் போய்விட்டது. இவற்றன்மையுடை

யார் செல்வம் எவருக்கும் பயன்படாமற் போகுமென்பது இவனிடம் நன்கு விளங்கியது.

"பேதையார் கைகாட்டும் பொன்னும் புளிவிளங்
காயாம்"

[அறிவற்றவர் செல்வம்] (நாலடியார்)

---

715. தென்முகன் கதை

ஏறக்குறைய ஆயிரத்து முந்நூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர்த் தென்னாட்டிலே கயலூர் என்னும் ஊரிலே தென்முகம் என்னும் பெருமைடைய சிற்றரசன் ஒருவன் இருந்தான். இவன் ஆருயிர்களிடத்திலே அன்பும் அருளும் அமையப் பெற்றவன். பிறர் துன்பத்தைத் தன் துன்பமெனக் கொள்ளுந்தகைமை சான்றவன். பிறருந் தன்போலவே இன்புற வேண்டும் என்னும் பரந்த நோக்கம் அமையப்பெற்றவன்.

கயலூருக்கு அயலூரில் வாழ்ந்த மக்கள் ஒருநாள் தென்முகனிடம் வந்து அண்மையில் உள்ள பல சிற்றரசர்கள் தக்கவாறு நாட்டையாண்டு மக்களைப் பாதுகாக்கவில்லையெனவும் போரிட்டு அந்நாடுகளையும் வென்று தென்முகன் உரிமையாக்கிக் கொள்ளுதல் வேண்டுமெனவும் அவ்வாறு செய்தால் பொருள் குவியும் என்றும் போரிடுதற்குத் தாங்கள் துணை புரிவதாகவும் புகன்றனர். தென்முகன் அவர்களுடைய கூற்றுக்கு இணங்கவில்லை. போரிட்டால் உயிர்கள் வருந்தி மடியுமெனவும் அன்பினுலும் அருளினுலும் வராத செல்வத்தை விரும்பக்கூடாதெனவும் நல்லுரைகள் நவின்று அவர்களுடைய உள்ளத்தைத் தெளிவித்தான். அன்பினுலும் அருளினுலும் வராத செல்வத்தை நல்லவர்கள் விரும்பமாட்டார்கள் என்பது தென்முகனிடம் நன்கு விளங்கியது.

[நல்வழியில் வராத செல்வத்தை நல்லோர் விரும்பார்]

---

716. தேரையர் கதை

தேரையர் என்பவர் வெகுகாலத்திற்குமுன் தமிழ் நாட்டில் வாழ்ந்திருந்தவர். மருத்துவ முறையைத் திருத்தமுறப் பயின்றவர். பல மருத்துவ நூல்களைத் தாமும் இயற்றியவர். இவர் காலத்தில் ஓர் அரசன் தலைவலியினால் மிகுந்த தொல்லைப் பட்டான். பல மருத்துவர்கள் தலைவலியைப் போக்குதற்கு முயன்றனர். முடியவில்லை. தலைவலியின் மூலகாரணத்தை இவர் ஆராய்ந்து பார்த்தார். அவ்வரசனுடைய மூளையில் தேரை ஒன்று தங்கி மூளையைத் தின்றுகொண்டிருக்கிறதென்றும் அதனால்தான் அரசனுக்குத் தலைவலி உண்டாகிறதென்றும் இவர் உணர்ந்தார். தாம் வெகுபக்குவமாக மண்டையோட்டைக் கீறினர். தேரையிருப்பதைக் கண்டார். ஓர் ஏனத்தில் தண்ணீரையெடுத்து அத்தேரைக்குமுன் நீட்டினர். அத்தேரை தண்ணீரில் குதித்தது. அதுமுதல் அரசனுடைய தலைவலியும் நின்றுபோயது. மற்றவர்களால் தீர்க்கமுடியாத நோயை இவர் இவ்வாறு தீர்த்துப் புகழ் பெற்றார். இராமதேவர் என்று வழங்கிக்கொண்டிருந்த பெயர் இதன் பிறகுதான் தேரையர் என வழங்கத் தொடங்கியது. நோயின் தன்மையை உணர்ந்து அதன் காரணத்தையும் அறிந்து அதைப் போக்கக்கூடிய முறைமையினையுந் தெரிந்து பொருந்துமாறு மருத்துவஞ் செய்பவனே சிறந்த மருத்துவனுவான் என்பது இத்தேரையரிடம் நன்கு விளங்கியது.

[மருத்துவ முறையை நன்குணர்ந்தவனே சிறந்த மருத்துவன்]

---

717. தேவகி எண்ணத்தை முடித்த கதை

தேவகி கம்சனால் கொல்லப்பட்ட தன்னுடைய மக்கள் அறுவரையுங் காணவேண்டுமென்று விரும்பினாள். தாயினுடைய விருப்பத்திற்குக் கண்ணன் இசைந்தான். பாதாள உலகத்திற்குச் சென்றான். அங்குப் பலிச் சக்கரவர்த்தியினுடைய அவையில் இருந்த மரீசிப்பிரசாபதியினுடைய

மக்களும் பிரம சாபத்தால் இரணிய கசிபுவின் பிள்ளைகளாகப் பிறந்தவர்களும் தனக்கு முன்பு தேவகியின் கர்ப்பத்திற் சேர்க்கப்பட்டவர்களுமாகிய ஆறுபேர்களையும் மிகுவிரை வாகக் கொண்டுவந்து தேவகியின் முன்பு சேர்த்தருளினன்.

[எண்ணத்தைக் கண்ணன் முடித்தது] (பாகவதம்)

———

718. தேவசன்மா கதை

மகத நாட்டிலே மாகபுரி என்னும் ஊரிலே தேவசன்மா என்னும் பெயருடைய மறைவன் ஒருவன் இருந்தான். வறுமை நோயால் வாடிய அவன் பிறரை வஞ்சித்து வாழத் தன் நெஞ்சத் தெண்ணினன். துறவியைப் போற் கோலங் கொண்டான்; செல்வர்கள் பாற் சென்றான்.

செல்வர்கள் இவனுடைய பொய்க் கோலத்தை மெய்க் கோலம் என்று எண்ணினர். விருந்து முதலியன செய்து பொருளும் வழங்கினர். அன்பர்கள் பாற் பெற்ற பொருளைப் பொற்காசுகளாக மாற்றினன். உள்ளே நல்ல துளையுள்ள மூங்கில் தண்டு ஒன்றையெடுத்து அதற்குட் செறித்தான். பொற்காசுகள் நிறைந்த அத்தடியை எப்பொழுதும் கையிலே வைத்துக் கொண்டிருந்தான். எக்காரணத்தை முன்னிட்டும் அத்தடியைப் பிறர்பால் கொடான்.

அந்நாளில் தீவகன் என்னும் பெயருடைய தீயவன் ஒருவன் இருந்தான். அவன் தேவசன்மாவிலும் பத்துமடங்கு அதிகமானவன். எதில் தெரியுமா! வஞ்சனைகள் செய்து பிறருடைய பொருளைக் கவர்தலில்தான்; அவன் தேவசன்மாவின் திருக்கைத் தடியின் உண்மையை எவ்வாறோ உணர்ந்துகொண்டான். எப்படியேனும் அத்தடியைத் தான் கவர்ந்துவிடவேண்டும் என்று திட்டஞ் செய்தான். தேவசன்மாவை அடைந்து தன் முடி தரையுறப் பணிந்தான். "குருமூர்த்தியே! உலகமாயையில் அகப்பட்டுத் துன்புறுகிறேன். அடியேனைக் கடைத்தேற்றியருள வேண்டும்" என்று பலவாறு கூறிப் பசப்பினன்.

தீவகனே ''அன்பனே! கடவுள் இருக்கிறார் அஞ்சாதே'' என்று கூறித் தேற்றினன். அன்றுமுதல் அவர்கள் இருவருங் குருவுஞ் சீடனுமாய் நடித்தார்கள்.

ஓராண்டுவரை ஓடியது. தீவகன் இன்னும் தண்டைக் கைப்பற்றவில்லை. ஒருநாள் குருவும் மாணவனும் அன்பர் ஒருவர் இல்லத்திற்குச் சென்று உணவுகொண்டு மீண்டனர். வழியில் தீவகன் துரும்பு ஒன்றை எடுத்துத் தன்னுடைய தலைமேல் வைத்துக் கொண்டான். பிறகு தேவசன்மாவைகிய குருவைப் பார்த்து, ''அடிகாள்! நமக்குணவளித்த உணவுக் கொடையாளியின் இல்லத்தில் இருந்து துரும்பு ஒன்று என் தலையில் ஒட்டிக்கொண்டு வந்துவிட்டது. அன்னமிட்ட வீட்டிற் கன்னமிடலாமா? நான் இந்தத் துரும்பைக் கொண்டுபோய் அந்நல்வினையாளனது இல்லத்தில் சேர்த்து விட்டு வந்துவிடுகிறேன்'' என்று சொல்லிவிட்டுத் திரும்பியோடினன். ஓரிடத்திற் சிறிது நேரம் பதுங்கியிருந்து விட்டுத் திரும்பி வந்தான்.

''தங்களுடைய அருளால் தீவினையில் இருந்து தப்பினேன்'' என்று கூறிக் குருவைத் தொழுதான். குரு 'இவன் பிறர் பொருளை விரும்பாத பேரருளாளன்' என்று தன் உள்ளத்தில் எண்ணினன். தன்னுடைய ஆருயிரினும் அரிய தடியை அவனிடம் கொடுத்து வாங்கவுந் தொடங்கினன். சமயம் பார்த்துத் தீவகன் அத்தடியோடு ஓடிப்போனன்.

உள்ளத்தின் கண்ணே குற்றம் நிறைந்திருக்கப் பெருமையுடையவர்களைப் போல் நடந்து வஞ்சகமாகத் திரிகிற மனிதர்கள் இவ்வுலகிலே பலர் என்பது இத்தேவசன்மாவினிடத்தும் தீவகனிடத்தும் நன்கு பொருந்தியது.

''பிறர்மனைத் துரும்பு கொள்ளான்
பிராமணன் தண்டு கொண்டான்''

[ஆஷாடபூதி]

———

719. தேவமித்திரன் கதை

பாண்டிவள நாட்டிலே பாடலி என்னும் ஊரிலே முன் னாளில் குறுநில மன்னன் ஒருவன் அரசு செய்திருந்தான். அவனுடைய பெயர் தேவமித்திரன். இவன் சீரிய மனநலம் அமையப் பெற்றவன். உயிர்களிடத்தில் இவன் இயற்கை யில் அருளுடையவனாயினும் பகைவர்களிடத்திற் சிறிதும் இரக்கங்காட்டமாட்டான். இவன் கனகசுந்தரி என்னும் ஏந்திழையை மணந்து இல்வாழ்க்கையை இனிது நடத்திக் கொண்டிருந்தான். இல்லாளைத் தவிரப் பிற மாதர்களைத் தழுவமாட்டான். இவனுடைய நல்லொழுக்கம் பலராலும் பாராட்டப்பட்டுச் சிறந்து விளங்கியது.

அந்நாளில் சோழவளநாட்டில் காமதிலகம் என்னும் பெயரினையுடைய விலைமகள் ஒருத்தி இருந்தாள். அவள் பேரழகுடையவளாய்ப் பிறங்கியதுமன்றி ஆடல்பாடல் களிலும் வல்லவளாய் விளங்கினாள். அவள் தேவமித்திர னின் குணநலன்களை அறிந்தாள். அவனை மயக்கித் தன் வழியில் இழுத்துவிடவேண்டும் என்று முடிவுகட்டினாள். புறப்பட்டு இவனுடைய நகரையடைந்து தங்கினாள். இவனை மயக்க முயன்றாள். யாதும் முடியவில்லை. பிறகு அரசியின் நட்பைப் பிடித்து அவளிடஞ்சென்று தங்கித் தன்னுடைய நடிப்பை அரசனுக்குக் காட்டினாள். அரசன் அவள் அந்தப் புரத்திலும் நுழையாதபடி தடுத்து விரட்டித் தன்னுடைய அறிவாண்மையை அவளுக்குப் புலப்படுத்தினான். நிறைந்த நல்லறிவு அமையப்பெறுதவர்கள்தாம் வரைவின் மகளிரை விரும்புவர் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது.

[அறிவற்றவரே விலைமகளிரை விரும்புவர்]

---

720. தேவர்கள் மீன்பிடித்த கதை

சூரபதுமன் வீரமகேந்திரத்தில் இருந்து கொடுங்கோ லரசைத் தேவர்கள் நடுங்குமாறு புரிந்துகொண்டிருந்தான். தேவர்களைத் தனக்கு அடிமைகளாகப் பலவகையான பணி

கூச் செய்யுமாறு பணித்தான். அப்பணிகளுள் மீன் பிடித்துக் கொண்டுவந்து கொடுத்தலும் ஒன்று.

மீனினைப் பிடித்தலுக்குத் தேவர்கள் மிகவும் நாணினர்கள். வேறுவழியில்லாமல் மிகுந்த மனவருத்தத்தோடு பிடித்துக் கொண்டுவந்து அசுரர்களுக்குக் கொடுத்தார்கள். அசுரர்களோ சிறிதும் நாணுமல் அம்மீனினைக் கொன்று தின்றார்கள்.

தீவினைகளைச் செய்வதற்குத் தீவினைகளையுடைய தீயோர் அஞ்சமாட்டார்கள். ஆனால் சிறப்பினையுடைய பெரியோர்களோ தீவினைகளைச் செய்வதற்கு அஞ்சுவார்கள் என்பன அத்தாவில் அசுரர்களிடத்திலும் தேவர்களிடத்திலும் நன்கு பெறப்பட்டன.

[தீவினைக்குத் தீயார் அஞ்சார்] (கந்தபுராணம்)

---

721. தேவியைக் கொடுத்த கதை

பாண்டிவள நாட்டில் மதுரைமா நகரில் அரசு புரிந்து கொண்டிருந்த வரகுண பாண்டிய மன்னன்மேல் விக்கிரம சோழன் படையெடுத்துச் சென்றான். ஆனால் வரகுண பாண்டியனைப் போரில் வெற்றி கொள்ள முடியவில்லை. புறமுதுகுகாட்டி ஓடிவரும்படியாக நேரிட்டு விட்டது. பிறகு விக்கிரம சோழன் தன்னுடைய மகளை வரகுண பாண்டியனுக்குத் திருமணஞ் செய்து கொடுத்து உறவு கொள்ள எண்ணினான். வரகுண பாண்டியனுடைய உடன்பாட்டைப் பெற்றுத் தன்மகளைத் திருமணஞ் செய்து கொடுத்தான்.

வரகுண பாண்டியன் சோழன் மகளோடு பள்ளியறைக்குச் சென்றான். மனைவியின் வடிவழகைக் கண்டு மகிழ்ந்தான். உலகத்திலே சிறந்த பொருள்களாக இருப்பவை கடவுளுக்கு உரியதாகையால் நான் இப்பெண்ணை என்னை யாண்டருளிய மருதவாணப் பெருமானுக்கு வழங்குவேன் என்று முடிவு செய்தான். எவரும் அறியாமல் அப்பெண்ணின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு திருக்

கோயிலை அடைந்தான். கோயிற் கதவு பூட்டப்பட்டிருந்த படியால், "மருதப்பா!" என்று கூப்பிட்டான். இறைவன், 'வரகுண' என்று சொல்லிக் கதவைத் திறந்தார். வரகுணன் உள்ளே சென்று "பெருமானே! இவ்வழகிய பெண்ணை ஏற்றருள வேண்டும்" என்று கூறினான். இறைவன், "அப்படியே யாகுக" என்று அப்பெண்ணைப் பிடித்துத் தன்னுள் அடக்கினார். ஒருகை மட்டும் வெளியே நீட்டி யிருந்தது. அரசன் அவ்விடம் விட்டு நீங்கி எவரும் அறியாது பள்ளியறைக்குச் சென்றான். கோயில் திருக்கதவுந் திருக் காப்பிடப்பட்டது.

மறுநாட் காலையிற் கோயிற் பணி புரிவோர் சென்று கோயிலைத் திறந்தனர். சிவலிங்கத் திருவுருவில் ஒரு பெண்ணின் கைதொங்குவதைக் கண்டு அரசனுக்கு அறிவித் தார்கள். பாண்டியன் மருதவாணர் திருமுன்பு சென்று "இக்கை எளியேனுல் தொடப்பட்டதென்றே நீக்கிவிட்டீர்?" என்று கேட்டு உள்ளம் வருந்தினான். "உனது அன்பினை உலகத்திற்குக் காட்டவே அதனை வைத்திருந்தேன்" என்று கூறி, அக்கையையும் உள்ளே மறைத்துக் கொண்டார் கடவுள்.

"விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழல் தேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய அன்பின் வரகுண தேவர்"

[வரகுண தேவர்] (திருவிடைமருதூர் மும்மணிக் கோவை)

---

722. தேனுகனைக் கொன்ற கதை

கண்ணன் பலராமனுடனும் இடைச் சிறுவர்களோடும் காடு மேய்த்துக் கொண்டு திரிந்தான். பழங்கள் மிகுதி யாகப் பழுத்து மணம் வீசிக் கொண்டிருந்த ஒரு பனங் காட்டை ஒருநாள் அவர்கள் அடைந்தார்கள். பனம்பழங் களை விரும்பி அதனை உதிர்த்துக் கொண்டிருந்தார்கள். தேனுகாசுரன் என்பவன் அப்பனங் காட்டிற்குத் தலைவன்.

அவன் கம்சனுக்கு நண்பன்; அவன் கழுதை வடிவத்தோடு கண்ணன்மீது பாய்ந்து வந்தான். கண்ணன் அக்கழுதையின் பின்னங்கால்கள் இரண்டையும் பற்றிச் சுழற்றிப் பக்ன மரத்தின்மீது ஓங்கியடித்தான். தேனுகாசுரக் கழுதை அவ்வளவில் மாண்டு தொலைந்தது.

[தேனுகன்] (பாகவதம்)

---

723. தேனுண்டு மகிழ்ந்தவன் கதை

ஒரு மனிதன் ஒருநாள் காட்டின் வழியே சென்றுகொண்டிருந்தான். அப்பொழுது யானை ஒன்று அவனைத் துரத்தியது. யானைக்கு அஞ்சியோடிய அம்மனிதன் வழியில் செடிகொடிகளால் மூடப்பட்டிருந்த ஒரு பாழுங் கிணற்றிலே விழுந்தான். விழுந்தவன் அக்கிணற்றில் தொங்கிக் கொண்டிருந்த விழுது ஒன்றைப் பற்றிக் கொண்டு தொங்கினன். அப்பொழுது ஐந்தலை நாகம் ஒன்று அவனைக் கடிப்பதற்குச் சீறிக்கொண்டு வந்தது. அந்நிலையில் எலியொன்று இவன் பிடித்திருந்த விழுதை மேலே பிடித்துத் தன்னுடைய கூரிய பற்களால் 'கரகர' என்று கடித்தது. விழுது அறுமானால் அவன் அக்கிணற்றுக்குள் விழுந்து மடிய வேண்டியதுதான். இத்தகைய பல துன்பங்களுக்குள் சிக்கிக்கொண்ட அவன், 'ஆ கடவுள் எனக்கு எவ்வளவு துன்பங்களை யுண்டாக்கியிருக்கிறார்' என்று எண்ணிக் கொண்டு விண்ணை நோக்கி வாயைப் பிளந்தான். மேலே இருந்த தேன்கூடு ஒன்றில் இருந்து சில தேன் துளிகள் அவனுடைய வாயிலே விழுந்தன. அவன் அத்துளிகளை யுண்டு எல்லாத் துன்பங்களையும் மறந்து மகிழ்ந்தான்.

"அடுகரி தொடரவீழ ஐந்தலை நாகங்காண
இடிகிணற் றறுகின் வேரைப் பற்றிநான் றிடஅவ் வேரைக்
கடுகவோர் எலியும்வந்து கறித்திட அதினின் ரேனுக்(கு)
இடைதுளி தேனக்கின்பம் போலுமிப் பிறவி யின்பம்.

[சிற்றின்பத்தில் மகிழ்தல்] (விவேகசிந்தாமணி)

---

724. தொண்டைமான் கதை

கரிகாற்சோழன் சோழநாட்டின் வடபகுதிக்குச் சென்றான். காடு ஒன்றில் சுற்றித்திரிந்து கொண்டிருந்தான். ஒரு மரத்தடியில் ஒரு பிலங் காணப்பட்டது. அதற்குப் பக்கத்தில் ஒரு மரநிழலில் அழகிய பெண் ஒருத்தி அமர்ந்திருத்தலைக் கண்டான். அவளுடைய அழகு அரசனுடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டு மயக்கியது. அவளைத் தழுவ விழைந்தான் அவளும் இணங்கினாள். ஆயினும் அரசனைப் பார்த்து, "நான் உம்மைக் கூடினால் என் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைக்கு உம்முடைய அரசாட்சியைக் கொடுப்பீரா?" என்று கேட்டாள். அவ்வாறே கொடுப்பதாக அரசன் உறுதி மொழியளித்தான். அவள் அரசனைப் பார்த்து "நான் நாக லோகத்தில் இருக்கும் நாககன்னிகை; நீரோ நிலவுலகத்தில் இருக்கும் அரசர்; உறுதிமொழி எவ்வாறு நிறைவேறுகிறது?" என்று உசாவினாள்.

அரசன் சிறிது எண்ணமிட்டான். பிறகு அப்பெண்ணைப் பார்த்து, "நாம் இப்பொழுது தங்கியிருக்கும் இவ்விடத்தில் உள்ள ஆதொண்ட மலர்மாலையை நீ உன்னுடைய கையிலே கொண்டுபோ. பிறக்கும் பிள்ளையின் கழுத்தில் அதனை அணிந்து அனுப்பு. நான் அவனுக்கு முடிசூட்டுகிறேன்" என்று கூறி உறுதிமொழியளித்தான். பிறகு இருவரும் இன்பந்துய்த்தனர். அரசன் தன்னுடைய நாட்டிற்குத் திரும்பிவிட்டான். நாககன்னிகை பிறகு ஒரு மகனைப் பெற்று வளர்த்தாள். கலைகளையெல்லாங் கற்பித்தாள். உரிய பருவத்தில் ஆதொண்ட மாலையை அணிந்து கரிகாற்சோழனிடத்திற்கு அனுப்பினாள். அரசன் அவையோர்கட்கு நிகழ்ந்ததைக் கூறித் தனது நாட்டின் வடபகுதியை அவனுக்கு முடிசூட்டினான். அந்நாடே தொண்டை நாடாயிற்று. அவ்வரசனே தொண்டைமானானான்.

[தொண்டைமான்]

---

725. தொண்டைமான் களிற்றைத் தடுத்த கதை

ஆதொண்டைச் சக்கரவர்த்தி என்னுஞ் சோழமன்னன் ஒருவன் தொண்டை நாட்டை அரசாட்சி செய்துகொண்

டிருந்தான், அவன் ஒருநாள் தன்னுடைய பகைவர்களோடு போர் செய்வதற்குச் சென்றான். அவன் யானைமீது ஏறித் திருமுல்லைவாயில் என்னும் ஊர்வழியாகச் சென்றுகொண் டிருந்தான். அங்கு அப்பொழுது அடர்த்தியாகப் படர்ந் திருந்த முல்லைக்கொடிகள் யானையின் காலிற் சிக்கிக்கொண்டு அதனுடைய போக்கிற்குத் தடை செய்தன. முல்லைக்கொடி களிற் கால் சிக்கிக்கொள்ளவே யானை நின்றுவிட்டதைக் கண்ட தொண்டைமான் கீழே குதித்தான். வாளையெடுத்துக் கொண்டு கொடிகளை அறுத்தான். கொடிகளினிடையே இருந்த சிவலிங்கத்தின்மீது வாள் தாக்கியது. அதனால் ருதியும் வெளிப்படலாகியது. இதனைக் கண்டு தொண்டை மான் வருந்தி நின்றான். இறைவன் வெளிப்பட்டுக் காட்சி தந்தருளினார்.

"தொண்டைமான் கடக்களிற்றினை
முல்லையால் தொடக்கி
அண்டர்தம்பிரான் வெளிப்படக்
காட்சிதந் தருள்சீர்
கொண்ட வான்பதி முதல்பல
தன்னிடைக் குலவக்
கண்டமுல்லையின் பெருமையார்
கட்டுரைத் திடுவார்"

[திருமுல்லைவாசல்] (காஞ்சிப் புராணம்)

"கண்ணூர் கருணைக் கடற்றெண்ட
மான்கைக் கடாசலத்தைத்
தண்ணூறு முல்லைக் கொடி தடுத்
தாட்கொண்ட தன்மையெல்லாம்
பண்ணூருஞ் செஞ்சொற் றிருமுல்லை
வாயிற் பதிகஞ் சொல்ல
மண்ணூழி காலமும் நிற்பதன்
றேதொண்ட மண்டலமே"

[தொண்டமண்டல சதகம்]

---

726. தொண்டைமான் கதை (வேறு)

I

கொங்குநாட்டில் இருந்த ஓர் இளைஞன் தொண்டைமான் என்னும் அரசனுடைய படையிற் சேர்ந்து பகைவன் மேற போருக்குச் சென்றான். போர் செய்து வெற்றிபெற்றான். அத்தொண்டைமான என்னும் அரசன் இவ்விளைஞனுக்குத் தன பெயரையும் மாலையையும் விருதாகக் கொடுத்தான். அதுமுதல் அவ்விளைஞனுக்குத் தொண்டைமான் என்னும் பெயர் உண்டாகியது.

II

தொண்டைமான் என்னும் விருதுப் பெயர் கொண்ட மற்றொருவனும் கொங்குவள நாட்டில் இருந்தான். இவன் சங்ககிரி துர்க்கத்தில் இருந்த நவாபுவைப் பார்க்கச் சென்றான். பலநாள் காத்திருந்தும் நவாபினுடைய பேட்டி கிடைக்கவில்லை. ஆண்மையிற் சிறந்த இவன் எதற்கும் அஞ்சான். நவாபினுடைய மகன் அருமையாக வளர்த்து வந்த ஒரு செம்மறிக் கடாவைப் பிடித்து அதனுடைய இரண்டு காதுகளையும் அறுத்துவிட்டான். நவாபினுடைய ஏவலர் இவனைப் பிடித்துக்கொண்டுபோய் நவாபுவின் முன்னர் விட்டார்கள். நவாபு கடாவின் காதையறுத்த காரணம் யாது என்று உசாவினன். அதற்கு இவன் "தங்களைக் காணப் பலநாள் காத்திருந்தும் காணமுடியவில்லை. இப்படியொரு காரியத்தைச் செய்தாவது தங்களைப் பார்க்கலாம் என்று செய்தேன்" என்று கூறினன். இவனுடைய துணிவுக்கும் எண்ணத்திற்கும் மகிழ்ந்த நவாபு இவனுக்கு, "வளர்கடாவைக் காதறுத்த பகதூர் தொண்டைமான்" என்று சிறப்புப் பெயர் வழங்கினன்.

"பண்டைய நாளிலொன்னூர்பஞ்சு போலப் பறந்தகலத்
திண்டிறல் காட்டிய காளையை நோக்கியச்
செம்பியனும்]
தொண்டைமா னென்னுந் தனதுநற்பேரும் சிறப்புமிக
வண்டரை மீதினில் பெற்றவ னுங்கொங்கு
மண்டலமே"

[கடாவைக் காதறுத்தது] (கொங்குமண்டல சதகம்).

727. தோழமை கொண்ட கதை

சிவபெருமான் சுந்தரமூர்த்தியாரைத் தடுத்தாட் கொண்டவுடன் தேவாரப் பாக்களைப் பாடுமாறு திருவருள் புரிந்தார். சுந்தரர் முன்னரே கல்வியை நன்கு கற்றவர். இப்பொழுது திருவருளும் கூடவே சுந்தரருடைய அறிவு மிக உயர்ந்ததாகச் சிறந்து திகழ்ந்தது. சுந்தரரின் அறிவு மாட்சியைக் கண்ட சிவபெருமான் சுந்தரரைத் தம்முடைய தோழராகக் கொண்டார். இதனால் சுந்தரருக்குத் "தம்பிரான் தோழர்" என்னும் பெயர் ஒன்று உண்டாகியது.

".....உறழ்ந்த கல்வியுடையானும் ஒருவன் வேண்டு மெனவிருந்து, துறந்த முனிவர் தொழும்பரவை துணைவா நினைத்தோழ மைகொண்டான்"

[சுந்தரர் தோழமை] (நால்வர் நான்மணிமாலை)

---

728. நகிலன் கதை

நகிலன் என்பவன் பாண்டிவளநாட்டிலே திருவல்லி புத்தூரிலே முன்னாளில் வாழ்ந்திருந்தான். இவன் வணிகர் மரபினன். வாணிகத் துறையிற் பொருள் தேடுதலில் மிக வல்லவன். வாணிக வழியால் மிகுந்த பொருள் தேடினான் பொருளை நன்கு தேடினானெயினும் அதனை நுகர்ந்து மகிழும் தன்மை இவனுக்கு ஏற்படவில்லை. இவற்றன்மை மிகுதியாக அமையப் பெற்றவனதலின் பொருளைச் செலவு செய்யாது மிக அழுத்தமாகப் பற்றியிருந்தான், இவனுடைய மனைவி மிகநல்லவள். அவள் கடும் பற்றுள்ளம் உடையவள் அல்லள்

பொருளைச் செலவு செய்யாது நாளும் நாளுந் தேடுவ திலேயே கண்ணுங் கருத்துமாக இருந்த இவனுக்குக் கொடிய நோய் ஒன்று உண்டாகியது. அது மிகவும் அல்லற் படுத்தி இவனுடைய ஆருயிரை விழுங்கி விடுமளவிற்குத் துன்பஞ் செய்தது. பக்கத்தில் உள்ள மடவார் வளாகம்.

என்னுஞ் சிவப்பதியில் எழுந்தருளியுள்ள பரமனை நோக்கி இருவரும் வேண்டிக் கொண்டனர். நோய் நீங்கினால் பெரும் பொருளாக் காணிக்கையாக வழங்குவதாகவும வேண்டிக் கொண்டனர். நோய் சிறிது தணிந்தது. ஓரளவு பொருளைத் தனியாக எடுத்துக் கடவுளுக்கென வைத்தனர். நோய் அடியோடு நீங்கியது. நகிலனுடைய மனைவி கடவுளுக்கு எடுத்து வைத்த பொருளைச் செலுத்திவிட விரும்பினாள். வணிகனோ பரம்பொருளைவிட அரும்பொருளையே மிகுதியாக விரும்பினான். ஆகையால் கடவுளுக்கு அப் பொருளை அளித்துவிட உள்ளந் துணியவில்லை. கடவுளை ஏய்த்துவிட வேண்டுமென்றே இவன் முடிவு செய்தான். தீர்ந்த நோய் திரும்பி வந்து மீளவும் இவனைப் பற்றியது. இவன் மீளவும் வேண்டிக் கொண்டு பொருளை எடுத்து வைத்தானோயன்றிக் கடவுளுக்கு அதனைக் கொடுத்துவிடத் துணியவில்லை. இவ்வாறு கடும்பற்றுள்ளம் உடையவனாக இருந்த இவனுடைய பொருள் நாளடைவில் அழிந்துதொலைந்தது. நகிலனும் ஒழிந்து போனான். தானும் நுகர்ந்து பிறருக்கும் வழங்காதவனுடைய செல்வம் குற்றத்தையே உண்டு செய்வதாம் என்பது இவனிடம் நன்கு விளங்கியது.

[கொடாதவன் செல்வம்]

---

729. நகுடன் கதை

நகுடன் என்பவன் திங்களின் குலத்து மன்னர்களில் ஒருவன். இவன் நேர்மையோடு அரசாட்சியை நடத்தினான். குதிரை வேள்விகள் (அசுவமேத யாகம்) நூறு இயற்றினான். நூறு குதிரை வேள்விகள் செய்பவன் விண்ணவர் தலைவனாகலாம். நகுடனும் அவ்வாறே இந்திரனானான்.

இந்திரனானவனை முதலில் முனிவர் எழுவர் சிவிகையில் வைத்துச் சுமந்து செல்லுதல் வேண்டும். அம் முறைப்படி இவனையுஞ் சிவிகையில் அமர்த்தி மாதவர் எழுவர் தூக்கிச் சென்றனர். அவ்வாறு தூக்கிச் செல்லும் போது சிவிகையில் இருப்போன் தன்னைத் தூக்கிச் செல்லும்

மாதவ முனிவர்களின் பெருமையை மனதிற் கொண்டு அடக்கம் பணிவு முதலிய நற்குணங்களுடன் அமர்ந்திருத்தல் வேண்டும்.

இந்த நகுட இந்திரன் விரைந்து இந்திராணியிடஞ்செல்ல எண்ணினான். சிவிகை தாங்கிச் செல்லும் முனிவர்களைச் "சர்ப்ப சர்ப்ப" என்றான். சர்ப்ப சர்ப்ப என்றால் விரைவாகச் செல்லுங்கள்' என்பது பொருள். நகுடன் இவ்வாறு நவின்றதைக் கேட்டதும் சிவிகையின் முன்பக்கத்தைத் தாங்கிச் சென்ற அகத்தியருக்கு மிகுந்த சினம் உண்டாகியது. அவர் நகுட இந்திரனைப் பார்த்து, "நீ சர்ப்பமாகுக" என்று சாபங் கொடுத்தார். அவ்வளவில் இவன் பாம்பாக உருண்டுப் பாரிலே விழுந்தான்.

"....நகுடன் நின்னால்
முந்தரவுரு வமானான்"

[நகுடன் பாம்பானது] (சித்தாந்த சிகாமணி)

---

730. நக்கீரர் கதை (1)

நக்கீரர் என்பவர் மதுரைமா நகரில் இருந்தவர். சங்கப் புலவர்களுக்குத் தலைமைப் புலவர். திருமுருகாற்றுப் படையைப் பாடி முருகப் பெருமானுடைய திருவருளைப் பெற்றவர். இவருடைய வாக்குப் பலிதம் உள்ளது. இவர் சங்கத்தில் அமர்ந்திருக்கையில் குயவர் குலத்தில் தோன்றிய குயக் கொண்டான் என்பவன் ஒருவன் அங்கு வந்தான். அவன் வடமொழியை நன்கு கற்றுப் புலமை பெற்றவன். அவன் வடமொழி உயர்ந்ததென்றும் தமிழ்மொழி தாழ்ந்ததென்றும் வல்வழக்கிட்டான். அவ்வளவில் நக்கீரருக்குக் கடுஞ்சினம் உண்டாகியது. வசைப்பாட்டு ஒன்று பாடினார். அவன் உடனே விழுந்து இறந்தான்.

சங்கத்தில் இருந்த மற்றைப் புலவர்கள் குயக்கொண்டானுடைய குற்றத்தைப் பொறுத்து அவனுக்கு உயிரளிக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டனர். நக்கீரர் தாம்

பாடிய வசைப்பாட்டை மாற்றினர். இறந்து விழுந்த குயக் கொண்டான் பிழைத்தெழுந்தான். சங்கப் புலவர்கள் நக்கீ ரருடைய சொல்லாற்றலையும் பெருமையையும் அ றி ந் து மகிழ்ந்தார்கள். நக்கீரருடைய பெருமையை அவருடைய வாய்மொழி அன்று காட்டி நின்றபடியால் ஒருவருடைய பெருமையை அவர்களுடைய வாயுரையின் சிறப்பினாலேயே உணர்ந்து கொள்ளலாம் என்று அனைவரும் தேறினர்.

ஆரியம் நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோள் பட்டானைச்—சீரிய
அந்தண் பொதியில் அகத்தியனுர் ஆணையால்
செந்தமிழே தீர்க்கசுவா கா

[பெருமையை வாய்மொழி காட்டிவிடும்] (நக்கீரர் பாட்டு)

---

731. நக்கீரர் கதை (2)

நக்கீரர் தம்மைவிடப் பேரறிவாளர்கள் தமிழகத்தில் எவருமே இல்லையென்று தருக்கி யிருந்தார். கலைமகளே இன்னுங் கல்விகற்றுக் கொண்டிருக்கிருள். ஆகவே நம் முடைய அறிவு எவ்வளவு என்னும் எண்ணம் இவருடைய உள்ளத்திற் சிறிதும் உண்டாகவில்லை.

ஒருகால் இறைவன் பாடியனுப்பிய கவிக்குற்றங் கூறினர். இறைவனே எதிர்வந்து அச்செய்யுளில் குற்ற மொன்றும் இல்லையென்று கூறியும் இவர் அதனை ஒப்புக் கொள்ளாமல் தடைகள் நிகழ்த்தினர். இறைவர் தம் முடைய நெற்றிக் கண்ணைத் திறந்து காட்டிய பொழுதுகூட இவர் சிறிதும் அஞ்சவில்லை.

பிறகு இறைவன் நக்கீரரைத் தண்டித்து அகத்திய முனிவர்பால் மேலுங் கல்விகற்குமாறு அனுப்பினர். நக்கீர ரும் அவ்வாறே சென்று அகத்தியர்பால் இலக்கணம் முதலிய வைகளைக் கற்றார். அறிவு தெளிவாகியது. முன்பு தாம் பாடியவைகளும் கூறியவைகளும் தவருக இருக்கக் கண்டு

திருத்திக் கொண்டார். எவ்வளவுக் கெவ்வளவு ஒருவர் மிகுதியாகக் கல்வி கற்றிருக்கிறாரோ அவ்வளவுக் கவ்வளவு அறிவும் மிகுதிப்படும் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்து கொண்டது.

[அறிவு கல்விப் பயிற்சியளவாகும்]

---

732. நக்கீரர் கரையேறிய கதை

திருவாலவாய்க் கடவுளின் திருப்பாடலுக்குக் குற்றங் கூறிய நக்கீரர் பொற்றுமரையில் விழுந்து கிடந்தார். சங்கத் திற்குத் தலைமைப் புலவர் இல்லாததினால் நக்கீரரைக் கரையேற்றவேண்டுமென்று சங்கப் புலவர்கள் ஆலவாயண்ணலை வேண்டிக் கொண்டார்கள். ஆலவாய் அண்ணல் பொற்றுமரைக் கரைக்கு எழுந்தருளினார். நக்கீரர் திருக்காளத்தியப்பர்மீது கைலைபாதி காளத்திபாதியந்தாதி பாடினார். சிவபெருமான் நக்கீரருக்கு முன்னால் வந்து அவருடைய கையைப் பிடித்துக் கரையேற்றினார். பிறகு கோபப்பிரசாதம் பெருந் தேவபாணி, திருவெழு கூற்றிருக்கை ஆகியவைகளைப் பாடி இறைவனுடைய திருவடிகளிலே விழுந்து வணங்கினார். சங்கப் புலவர்களார் இறைவனை வணங்கினார்கள். நக்கீரரைப் புலவர் கூட்டத்தோடிருக்குமாறு கூறி இறைவன் மறைந்தருளினார்.

[நக்கீரரைக் கரையேற்றியது] (திருவிளையாடல்)

---

733. நச்சரவாட்டிய நம்பன் கதை

முன்னொரு காலத்தில் இறைவன்மீது அன்புபூண்ட அடியவன் ஒருவன் இருந்தான். அவன் ஒரு பெண்ணைக் காதலித்தான். அப்பெண்ணைத் திருமணஞ் செய்துகொள்ளுதற்பொருட்டு அவளை அழைத்துக் கொண்டு சென்றான்.

ஓரிடத்தில் அவ்வாடவனைப் பாம்பு ஒன்று கடித்தபடியினால் அவன் மாண்டு விழுந்தான். அதனால் அவனோடு வந்த பெண் பலவாறு அழுது புலம்பினாள். தன்னுடைய ஆருயிர்க் காதலனைப் பிழைப்பித் தருளுமாறு இறைவனை நோக்கி வேண்டிக் கொண்டாள். அவளுடைய வேண்டுகோளுக்கு இரங்கிய சிவபெருமான் ஒரு பாம்பாட்டியைப்போல் கோலம் பூண்டு அவ்விடத்திற்கு எழுந்தருளினார். மருடி வாசித்தார். கடித்த பாம்பு தோன்றி இறைவன்முன் நின்று ஆடியது. அதனுடைய நஞ்சை மாண்டவனுடைய உடலில் இருந்து இறங்குமாறு செய்தார். அதனால் மாண்டவன் உயிர் பெற் றெழுந்தான்.

" நச்சரவாட்டிய நம்பன் போற்றி "

[இறைவன் பாம்பாட்டியது] (திருவாசகம்).

---

734. நந்தன் கதை

ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு மகதநாட்டிலே பாடலிபுரம் என்னும் நகரிலே நந்தன் என்னும் பெயருடைய மன்னன் ஒருவன் இருந்தான். இவன் பகை வரை வெல்லும் போராற்றல், அறிவுநலம், செல்வச் சிறப்பு முதலிய யாவற்றினுஞ் சிறந்து விளங்கினான். இவனுக்கு வரருசி என்னும் பெயருடைய அறிஞன் ஒருவன் அமைச் சனாக அமைந்திருந்தான். அவன் சீரிய நலங்கள் யாவுஞ் செறியப் பெற்றவன். சொல்லாடுதலில் மிகவல்லவன். தன் னுடைய சொல்திறத்தினால் எல்லோரையும் தன் வழிக்குக் கொண்டுவந்துவிடக் கூடியவன்.

அரசனாகிய நந்தன் ஆட்சித் திறத்தை மறந்து இன்ப நுகர்ச்சியில் மிகுதியாக ஈடுபட்டான். அரசாட்சி சீர் குலையத் தொடங்கியது. அமைச்சனாகிய வரருசி அரசனுக்கு அறிவுரைகள் பல கூறினான். இன்பப் பெருக்கில் இழிதல் துன்பப் பெருக்கிற்குக் காரணம் ஆகும் என்று கழறினான். அமைச்சனுடைய அறிவுரைகள் அரசனாகிய நந்தனுக்குப்

பிடிக்கவில்லை. அமைச்சனுகிய வரருசியைத் தொலைத்து விட்டுத் தன்போக்கிற்கு உடன்பாடாக இருப்பவனை அமைச்சனுக்க வேண்டுமென்று முடிவு செய்தான். வரருசியைக் கொன்றுவிடுமாறு மறைமுகமாக ஏற்பாடு செய்தான். செய்தியை உணர்ந்த வரருசி நந்தனை விட்டு விலகினுன். பகைவர்களோடு போய்ச் சேர்ந்துகொண்டான். நந்தனைப் பற்றிய உண்மைகளையெல்லாம் பகைவர்கட்கு நவின்றுன். நந்தன் மீது படையெடுக்கச் செய்தான். பெரும் போர் நிகழ்ந்தது. இறுதியில் சாணக்கியன் என்பவனல் இறந்து தொலைந்தான். வில்லைக்கொண்டு போர் செய்யும் போர் வீரர்களோடு பகை கொண்டாலும், சொல்லாடுந் திற முடைய அறிஞர் பகையினை ஒருவர் தேடிக்கொள்ளுதல் ஆகாது; அவ்வாறு தேடிக்கொண்டால் அழிவுண்டாகும் என்பது இவனிடம் நன்கு விளங்கியது.

[சொல்லேருழவர் பகை தொல்லை யளிக்கும்]

---

735. நந்தன் கதை (வேறு)

ஔவையார் காலத்திலே சோழவள நாட்டில் நந்தன் என்னும் பெயருடையவன் ஒருவன் இருந்தான். பெருஞ் செல்வம் படைத்திருந்தபடியால் இவன் ஒரு குறுநில மன்னனைப் போல் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தான். கல்வியறிவு இல்லை. புலவர்கள் எவரும் இவனை ஒரு பொருட்படுத்திப் பாடவும் நாடவும் இல்லை. புலவர்கள் வாக்கால் செய்யுள் பெற வேண்டுமென்று இவன் நாளும் முயன்று கொண்டிருந்தான். இவனுக்கு உடன் பிறந்தார் கள் சிலர் இருந்தனர். அவர்களும் நந்தனைப் போன்ற குணம் படைத்தவர்களே.

ஒருநாள் ஔவைப் பிராட்டியார் நந்தனுடைய ஊர் வழியாகச் சென்றார். நந்தனும் அவனுடைய உடன் பிறந்தார்களும் ஔவையாரிடம் பாடல் பெற முயன்றனர். இம்முழுமக்கள் எச்சிற்கையாற் கூடக் காக்கைவிரட்டார். கல்வியறிவும் அடியோடு இல்லாதவர் என்பதை நன்கு

உணர்ந்திருந்த ஔவையார் இவர்களுடைய தீக்குணங்களை யெல்லாம் தொகுத்து இகழ்ச்சியாகப் பாடல் ஒன்று பாடி விட்டுச் சென்றார்.

கல்லாதவன் எத்தகைய நலங்கள் அமையப் பெற்றவனாக இருந்த போதிலும் அறிவுடையோர் அவனை ஒரு பொருட்படுத்த மாட்டார்கள் எனபது இந்த நந்தன்பால் நன்கு காணப்பட்டது.

[கல்லாதவனை அறிஞர் மதியார்]

---

736. நந்தனார் கதை

இவர் திருநாளைப் போவார் என்னும் பெயரால் அழைக்கப் பெறுவார். அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவர். சோழவள நாட்டிலே ஆதனூரிலே பறையர் குலத்திலே தோன்றியவர்; நல்வினைப் பயனால் இவருக்கு இறையன்பு முறுகி யெழுந்தது. தம்மால் இயன்றபடி அறச் செயல்களைப் புரிந்து கொண்டிருந்தார். திருத்தில்லைக்குச் சென்று கூத்தப்பிரானைப் போற்றிவழிபட வேண்டும் என்னும் எண்ணம் இவருக்கு உண்டாகியது. அடிக்கடி தில்லைக்குப் போகவேண்டுமென்றும் நாளைக்குப் போவேன் நாளைக்குப் போவேன் என்றுஞ் சொல்லிக் கொண்டிருந்தபடியால் இவருடைய பெயர் திருநாளைப் போவார் என வழங்கியது. இறுதியில் ஒருநாள் துணிந்து தெழுந்து தில்லையை அடைந்தார். தெருவிலே சுற்றிக் கொண்டிருந்தார். இவரை யாட்கொள்ள இறைவன் எண்ணினார். தில்லைவாழ் அந்தணர்களுக்குக் கட்டளை யிட்டார். தில்லைவாழந்தணர்கள் இறைவன் கட்டளைப் படி இவரைத் தீயில் மூழ்கச் செய்து கூத்தப்பிரான் திருமுன்பு இட்டுச் சென்றனர். ஆங்கு அவர் ஆண்டவனுடைய அடிமலரை அடைந்தார். தில்லைவாழ் அந்தணர்கள் நந்தனாரைக் காணுமல் திகைத்தார்கள். அம்பலவாணன் அடியினையுட் புகுந்த நந்தனார் பிறப்பொழிந்தார். "ஒருவன் வீணுகப் போகும் நாள்கள்" ஏற்படாமல் நல்

விஜனகனையே நாடிப் புரிவானுயின் அஃது அவனுடைய பிறவி வாயிலை அடைக்கும் கல்லாம் என்று அறநூலோர் கூறியது இவரிடத்தில் உண்மையாகியது.

[வாழ்நாள் வழியடைத்தல்] (பெரிய புராணம்)

---

737. நந்திக்கலம்பகக் கதை

நந்தியென்னுந் தொண்டைமானுடைய உடன் பிறந்தான் ஒருவன் தன்னுடன் பிறந்தானைத் தொலைக்க எண்ணினான். கல்வியை நன்கு கற்றான். வசைமிகுந்த கலம்பகம் ஒன்றை இயற்றி வைத்துக்கொண்டு விலைமகள் ஒருத்தியினுடைய இல்லத்தில் மறைந்திருந்தான். ஒருநாள் அரசன் நகர் சுற்றிக்கொண்டு சென்றான். அப்பொழுது விலைமகள் வசைக்கலம்பகப் பாடல் ஒன்றை வீணையில் அமைத்து இசையுடன் பாடிக்கொண்டிருந்தாள். தன்மேற் பாடிய வசைக் கலம்பகப் பாடலை அரசன் கேட்டான். அச்செய்யுளின் இன்பம் அவனைப் பெரிதும் கவர்ந்தது. இறப்பதாயினும் இச் செய்யுள்கள் எல்லாவற்றையும் கேட்டுவிட்டு இறக்கவேண்டுமென்று முடிவு செய்தான். மறுநாள் அவ்விலைமகளைக் கூப்பிட்டுக் கேட்டான். அவள் "நான் பாடிய பாடல் என் வீட்டில் இருக்கும் தங்களுடைய உடன் பிறந்தானால் பாடப்பட்டது" என்று கூறினாள்.

தன்னுடைய உடன்பிறந்தானின் கல்வித்திறத்தை அரசன் பாராட்டினான். பாடல்கள் முழுவதையும் கேட்கவேண்டும் என்று முடிவு செய்தான். உடன்பிறந்தானை யழைத்தான். "நீ பாடியுள்ள பாடல்கள் முழுவதையும் நான்கேட்கவேண்டும்" என்று கூறினான். அவன் "சுடுகாட்டிற்கும் அரண்மனைக்கும் நடுவில் வரிசையாகத் தொண்ணூற்றொன்பது பந்தல்களிட்டு ஒவ்வொரு பந்தலிலும் இருந்து ஒவ்வொரு செய்யுளையும் கேட்க வேண்டும். சுடுகாட்டில் சிதையின் மேல் இருந்துகொண்டு நூறுவது செய்யுளைக் கேட்க வேண்டும்" என்று கூறினான். இதற்கு அரசன் உடன்பட்டான். அரண்மனைக்கும் சுடுகாட்டிற்கும் இடையில் தொண்ணூற்றொன்பது

பந்தல்கள் இடச் செய்தான். இடுகாட்டில் சந்தனக் கட்டை யும் அடுக்கச் செய்தான். தொண்ணூற்றொன்பது பாடல்களை யும் தொண்ணூற்றொன்பது பந்தல்களில் இருந்து கேட்டான். நூருவது பாடலாகிய,

"வானுறு மதியை அடைந்ததுன் வதனம் வையகம்
அடைந்ததுன் கீர்த்தி
கானுறு புலியை அடைந்ததுன்வீரம கற்பகம்
அடைந்ததுன் கரங்கள்
தேனுறு மலராள் அரியிடஞ் சேர்ந்தாள் செந்தழல்
புகுந்ததுன் மேனி
யானுமென் கலியும் எவ்விடம் புகுவேம் எந்தையே
நந்தி நாயகனே"

என்னும் பாடலை இடுகாட்டில் கட்டையிற்படுத்துக்கொண்டு கேட்டான். அவ்வளவில் கட்டை நீப்பற்றியெரிய மாண் டொழிந்தான். பிறகு உடன் பிறந்தான் முடிசூடி அரசனா னான்.

"வெல்லாமல் வென்றநற் சந்தனக்
காட்டத்தின் மேலிருந்து
நல்லாறை நந்திக் கலம்பகங்
நற்றுணைக்குக் கேட்டனன்
கொல்லா புரிச்சந்த்ரன் மாமுடி
சூட்டக் குடை கவித்து
மல்லார் புரித்தொண்ட மானை
துந்தொண்ட மண்டலமே"

[நந்திக்கலம்பகம்] (தொண்டமண்டல சதகம்)

738. நந்திதேவர் சாபமிட்ட கதை

ஒரு காலத்தில் இராவணன் குபேரனை வென்று அவனிடமிருந்த புட்பக விமானத்தைப் பறித்துக் கொண்டான். பிறகு அதில் ஏறிக்கொண்டு கைலாய மலைக்கு நேராக விண்ணிற் சென்றான். அப்பொழுது அது மேற் கொண்டு பறக்கமுடியாமல் நின்று போய் விட்டது. விமானம் நின்று போகக் காரணம் யாது என்று இராவணன் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தான்.

அப்பொழுது இராவணனுக்கு முன் நந்திதேவர் தோன்றினர். இராவணனைப் பார்த்து, "இராவணா! இங்கு எவரும் ஊர்தியில் வரலாகாது. இது சிவபெருமான் எழுந்தருளியிருக்குமிடம், ஆகையால்தான் உன்னுடைய விண்ணூர்தி நின்றுபோய்விட்டது" என்று கூறினர்.

நந்திதேவர் நவின்றதைக் கேட்ட இராவணனுக்கு மிகுந்த சினம் உண்டாகியது. அவன் நந்திதேவரைப் பார்த்து, "அறிவற்ற குரங்கே! எனக்கு அறிவுசொல்ல உன்னை இங்கு யார் கூப்பிட்டது? சற்றும் அடக்கமில்லாமற் பேசுகிற நீ யார்? உன்னுடைய அறிவுரை எனக்குத் தேவையில்லை. உன்னுடைய வேலையைப் பார்" என்று சொல்லி அதட்டினான். இதனால் நந்திதேவர் மிகுந்த சினங் கொண்டார். "தீயவனே! நீ என்னைக் குரங்கென்று கூறியபடியால் உன் ஊரும் உன் குலமும் குரங்கினாலேயே அழிந்து போகட்டும்" என்று வசவுரை வழங்கினர். பிற்காலத்தில் அனுமான் சுக்கிரீவன் முதலிய குரங்குகளினாலேயே இலங்கை அழிந்து போயிற்று. மிகவும் எளிமையானவர்களென்று நாம் யாரையும் இகழ்ந்துரைக்கக்கூடாது. அவர்கள் கொடியவர்களாகவும் இருப்பார்கள்.

[நொய்யவ ரென்பவர் வெய்யவராவர்] (உத்தரகாண்டம்)

---

739. நப்பின்னை கதை

அயோத்திக்கு அரசனாகிய நக்கினசித்து என்பவனுக்கு ஒரு மகள் பிறந்தாள்; அவள் சிறந்த அழகோடு விளங்கி

யிருந்தாள். அவளுக்கு இடப்பெற்ற பெயர் சத்தியவதி என்பது. சத்தியவதி திருமணப் பருவத்தை யடைந்தாள். அரசன் தன்னுடைய மந்தையில் உள்ள ஏழு காளைகளைப் பிடித்துக் கட்டுபவனுக்குத் தன்னுடைய மகளைத் திருமணஞ் செய்து கொடுப்பதாக அறிவித்தான். இதனையறிந்த கண்ணபிரான் தாம் அங்குச் சென்று காளைகளை அடக்க வெண்ணினர். அவைகள் அசுர வடிவினவென்பதை யறிந்தார். தாம் தனித்தனி ஏழு வடிவங்கொண்டு அவைகளைப் பிடித்துக் கட்டிவிட்டுச் சத்தியவதியைத் திருமணஞ் செய்துகொண்டார். இச் சத்தியவதியையே நப்பின்னையென்று கூறுவர்.

" .....நப்பின்னையாம்
விரகதத்தைக்கு விடையேழ் தழுவின வேங்கடவன் "

[நப்பின்னை திருமணம்] (திருவேங்கடத் தந்தாதி)

---

740. நமிநந்தியடிகள் கதை

சோழவள நாட்டில் ஏமப் பேரூரில் தோன்றிய நமிநந்தியடிகள் இறைவனிடத்தில் மிகுந்த அன்புடையவராகத் திகழ்ந்தார். இவர் திருவாரூர்க்கு நாள்தோறும் சென்று சிவவழிபாடு செய்துகொண்டிருந்தார். ஒருநாள் கோவிலில் திருவிளக்குகள் மிகக் குறைவாக இருந்தன. அதனால் இருள் எங்குஞ் சூழ்ந்திருந்தது. நமிநந்தியடிகள் மேலுஞ் சில விளக்குகளை ஏற்றி ஒளியுண்டாக்க விரும்பினர். கோவிலுக்குப் பக்கத்தில் இருந்த ஒரு வீட்டிற்குச் சென்று நெய் கேட்டார். அவ்வீட்டுக்குரியான் சமணன். அவன் நமிநந்தியடிகளைப் பார்த்து, "உங்கள் கடவுளுடைய கையில் தீ இருக்கிற பொழுது வேறு விளக்கு எதற்காக? உங்களுடைய கடவுள் அருளுடையவரானால் எரியச் செய்யட்டும் இக்குளத்து நீரை, முகந்து விளக்கிலிட்டு எரி போ" என்று சொன்னான். இதனைக் கேட்டு நமிநந்தியடிகள் திகைத்திருந்தார். அப்பொழுது வானெலி ஒன்று, "நீ இக் குளத்து நீரை விளக்கிலேயிட்டு எரி. அது நெய்யைப்போல் நன்றாக எரியும்" என்று உண்டாகியது. நமிநந்தியடிகள் அவ்வாறே தண்ணீரை முகந்து

விளக்கில் ஊற்றி எரிக்கத் தொடங்கினர். விளக்கு விடியும் வரையில் எரிந்து கொண்டிருந்தது.

—"நன்னீரை,
விட்டு விளக்கிட்டார்"

[தண்ணீர் விளக்கெரித்தது] (புலியூர் வெண்பா)

———

741. நமிநந்தியடிகள் கதை (2)

ஒரு சமயத்தில் வீதி விடங்கப் பெருமானுர் திரு மணலி என்னுமிடத்திற்கு எழுந்தருளுந் திருவிழா நடை பெற்றது. அவ்விழாவில் எல்லாக் குலத்தினரும் ஒன்று சேர்ந்திருந்தனர். நமிநந்தியாரும் அவ்விழாவுக்குச் சென்றிருந்தார். வீட்டை யடைந்தவுடன் நீராடித் தம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்ள எண்ணினர். தண்ணீர் கொண்டு வருமாறு மனைவியார்க்குக் கட்டளையிட்டார். தாம் சிறிது நேரந் திண்ணையில் கண்ணயர்ந்தார். அப் பொழுது புற்றிடங் கொண்டார் அடியார் போல் நமி நந்தியாரின் கனவில் தோன்றினர். "ஆரூரிற் பிறந்தவர் கள் அனைவருஞ் சிவகணங்கள். அதனை நீ நாளைக்குக் காண்பாய்" என்று கூறினர். நமிநந்தியார் விழித்துக் கொண்டார். நீராடாமலே வீட்டுக் குள்ளே போய்ச் சிவ பூசை உணவு கொள்ளல் முதலியவைகளை முடித் தார். மறுநாள் திருவாரூர்க்குச் சென்ற போது திருவாரூரிற் பிறந்தவர்களனைவருஞ் சிவகணங்களாக விளங்குதலைக் கண்டார்.

"பிறப்பால் அடையாத பேரின்பத் தன்னூர்ப்
பிறப்பால் அடைவிக்கும் பெம்மான்-பிறப்பன
முற்று நிமலமே மூதூர்க் கிலைபுலையென்
றுற்றுநமி நந்தியார்க் கோதினனே"

[குலமயக்கையொழித்தது] (திருவாரூர் உலா)

———

742. நம்மாழ்வார் கதை

சடகோபர் என்று வழங்கப் பெறும் இவர் பாண்டி வள நாட்டில் திரு நகரி என்னும் ஊரிலே வேளாள குலத்தில் தோன்றினர். தந்தையார் பெயர் காரியார். தாயார் பெயர் உடைய நங்கையார். பிறந்த உடன் தம்மைப் பற்ற வந்த சடவாயுவை இவர் அதட்டி விரட்டிய படியால் சடகோபர் என்னும் பெயரை அடைந்தார். மாறர் என்பது இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர். அழுதல், அரற்றல், பிதற்றல் முதலியன இல்லாமல் இவர் குழந்தைப் பருவத்திலிருந்தே புளிய மரம் ஒன்றில் தங்கி யோகஞ் செய்திருந்தார். திருமாலிடத்தில் பேரன்பு கொண்டு அக்கடவுளையே பற்றி யொழுகினர். திருமால் இவருக்கு நம்மாழ்வார் என்று சிறப்புப் பெயர் வழங்கினர். அறிவு என்னும் அங்குசத்தினால் இவர் ஐம் புலன்களையும் அடக்கி யொழுகினர். அதனால் இவருக்கு வீடு பேறு எளிதாக அமைவதாயிற்று. ஐம் புலன்களையும் அடக்கு பவர்கள் வீடு பேற்றை அடைவார்கள் என்னும் உண்மையை உலகம் இவர்பால் நன்கு உணர்ந்துகொண்டது.

[புலனையடக்குவோர் வீடுபேறடைவர்] (ஆழ்வார்கள் வரலாறு)

---

743. நரகாசுரன் கதை

நரகாசுரன் என்பவன் அரக்கர்களில் ஒருவன். இவன் உயிர்கட் கெல்லாந் தொல்லை கொடுத்துக் கொண்டிருந் தான். எவரேனும் மிகுதியாகப் பொருளுடையவர்களாக இருக்கிறார்கள் என்று இவன் உணர்ந்தால் உடனே சென்று அவர்களிடம் உள்ள பொருள்களில் பெரும் பகுதியை இவன் கைப்பற்றி விடுவான். இவனுடைய தொல்லையை நினைத்துக் குடிகள் நாளும் நடு நடுங்கிக் கொண்டிருந்தனர். இவன் தன்னுடைய கொடுமையை மனிதர்களிடம் மட்டுங் காட்ட வில்லை. தேவர்களிடமுங் காட்டினன். வருணனது குடையைக் கவர்ந்தான்.

இந்திரன் காதில் அணிந்திருந்த குழையைப் பறித்துக் கொண்டான். இந்திரனுல் இவனே யாதுஞ் செய்ய முடியவில்லே.

இந்திரன் திருமாலிடஞ் சென்று முறையிட்டான். அவர் சிறிது காலம் சும்மா விருந்தார். பிறகு இவனேடு போரிட்டு இவனேக்கொன்று தொலேத்தார். இவனுடைய ஆட்சியில் பொருள் உள்ளவர்கள் தாம் மிகுந்த தொல்லேக் குள்ளாயினர். ஒழுங்காக அரசாட்சியைச் செய்யாத கொடுங் கோலரசனுக்குக் கீழ்வாழ நேரின் பொருள் இல்லாதவர்களேப் பார்க்கினும் பொருள் உள்ளவர்கட்கே அல்லல் மிகுதியாம் என்பது நரகாசுரனுடைய ஆட்சியில் நன்கு விளங்கியது.

[கொடுங்கோல் மன்னன் ஆட்சியில் பொருளுடையார்க்குத் தொல்லே]

---

744. நரசிங்கத்தின் கதை

இரணியனுடைய புதல்வனுகிய பிரகலாதன் 'இரணியாய நம:'' என்று ஆசிரியன் சொல்லிக் கொடுத்ததைச் சொல்லாமல், ''நாராயணுய நம'' என்றே பிடிவாதமாகக் கூறினுன். இரணியன் பிரகலாதனேப் பலவாறு தண்டித்தும் பயனில்லாமற் போய்விட்டது. இரணியன் பிரகலாதனேப் பார்த்து, ''நீ கூறும் நாராயணன் யாண்டுள்ளான் ?'' என்று உசாவினுன். அதற்குப் பிரகலாதன் ''அந்நாராயணன் எங்கும் உள்ளான்; அவன் இல்லாத இடமே இல்லே'' என்ருன். சினங்கொண்ட இரணியன், ''நீ கூறும் தேவன் இத்தூணில்கூட இருக்கிருனு ?'' என்று கேட்டு அங்குக் கூடத்தில் இருந்த தூணேச் சுட்டிக் காட்டினுன். ''ஆம் அத்தூணிலும் இருக்கிருன்'' என்று பிரகலாதன் மறுமொழி கூறினுன். உடனே இரணியன் அத்தூணே எட்டி அறைந்தான். அதில் இருந்து திருமால் நரசிங்கமூர்த்தியாக வெளிப்பட்டார்; பெருநகை புரிந்தார். இரணியனேத் தம்முடைய இதாடையிலே மடக்கி வைத்து வயிற்றை நகத்தால் கிழித்துக்

குடலைப் பிடுங்கி மாலையாக அணிந்து கொண்டார். குருதியைக் குடித்தார்.

"கூடமுறை நீடுசெம்பொன் மாமதலை யூடெழுந்த
கோபவரி நாரசிங்கன் மருகோனே" (திருப்புகழ்)

"கையால் எற்றினன் எற்றலோடுந்
திசைதிறந் தண்டங் கீறிச் சிரித்தது செங்கட் சீயம்"

[நரசிங்கம்]

---

745. நரசிங்கமுனையரையர் கதை

திருமுனைப்பாடி நாட்டிலே நரசிங்கமுனையரையர் என்னும் பெயருடைய குறுநில மன்னர் ஒருவர் இருந்தார். இவர் இறைவனிடத்திலே அன்பும் அவனுடைய அடியார்களிடத்திலே சிறந்த பண்பும் உடையவர். பிறர்க்கு உதவி செய்வதில் மிகுந்த விருப்பம் உடையவர். திருநீறணிந்து நாளுஞ் சிவ வழிபாடு செய்பவர். திருவாதிரை நாள்தோறுஞ் சிவனடியார்கட்கு நல்விருந்து செய்து ஒவ்வொருவருக்கும் நூறு நூறு பொன் வழங்குவதென்பது இவருடைய வழக்கம். உள்ளத்தே நற்பண்பில்லாமல் புறத்தே மட்டுங் கோலங் கொண்டு வஞ்ச நெஞ்சராய்த் திரிபவர்களிடத்திற்கூட இவர் உண்மை யன்புகொண்டு அவர்களைப் பாராட்டிப் போற்றி வந்தார். இவரிடம் பொருள் பெற எண்ணிய வஞ்சகன் ஒருவன் நீறணிந்து சிவனடியார் கோலம் பூண்டு இவரிடத்தே வந்தான். பந்தியுட் புகுந்து நன்கு உண்டான். பிறகு பொருள் பெற முந்தினன். சிலர் இவரிடம் அவன் வஞ்சகன் என்பதைக் குறிப்பாக உணர்த்தினர். இவர் உடனே அவனை விரட்டி விடவில்லை. அவனை மிகுதியாகப் பாராட்டினர். நூறு பொன்னுக்குப் பதிலாக இருநூறு பொன் வழங்கினர். "தாங்கள் இனிமேல் நாளும் நீறணிந்து வருதல் வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார். இவருடைய பண்புடைமையைக் கண்டு அக்கள்ளனும் நல்லவனானான். எல்லோரிடத்திலும் பண்புடைமையோடு நட்ந்து

கொள்ள வேண்டுமென்பது இவரிடம் நன்கு விளங்கியது. நல்லியல்பாளர்களுடைய தன்மை இதுதான்.

[கள்ளனைத் திருத்திய காவலன்]

---

746. நரிகட்குப் போர்வையளித்த கதை

இறைவனிடத்தில் பேரன்புடையவனுகிய வரகுண பாண்டியன் ஒருநாள் இரவில் உறங்கிக் கொண்டிருந்தான். நள்ளிரவில் நரிகள் மிகுதியாக ஊளையிட்டன. அவ்வொலி அரசனுடைய காதில், "அர அர" என்று கூவுகிறதுபோல் விழுந்தது. அரசன் அமைச்சர்களை அழைப்பித்து, "நரிகள் ஏன் அவ்வாறு கூவுகின்றன?" என்று உசாவினன். "அவை குளிர் மிகுதியால் அவ்வாறு கூவுகின்றன" என்று அமைச்சர்கள் மறுமொழி கூறினர்கள். அரசன், நரிகள் குளிரின் மிகுதியால் இறைவனை அழைக்கின்றன போலும் என்று எண்ணினன். வேடுவர்களை அழைத்து "அந்நரிகளைத் துன்புறுத்தாமல் பிடித்துக்கொண்டு வாருங்கள்" என்று கட்டளையிட்டான். வேடர்களும் அவ்வாறே பிடித்துக்கொண்டு வந்தார்கள். அரசன் அவைகளுக்குஞ் சிறந்த போர்வைகள் அளித்து அனுப்பினன்.

"ஓடும் பன்னரி ஊளைகேட் டரனைப்
பாடின வென்று படாம்பல அளித்தும்"

[நரிகட்குப் போர்வையுதவியது] (திருவிடைமருதூர் மும்மணிக் கோவை)

---

747. நரிகளான வாயாடிகள் கதை

கோவலன் தன் மனைவி கண்ணகியோடு மதுரைமாநகரை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். வழியிலே கவுந்தியடிகள் என்னும் பெயரினையுடைய தவமூதாட்டி

ஒருத்தி இருவருக்கும் துணையானாள். மூவரும் வழி நடந்தனர். ஒருநாள் சோலை ஒன்றினிலே தங்கி இளைப்பாறியிருந்தனர். அப்பொழுது அவ்விடத்திற்குக் காமுகன் ஒருவன் தன் காதற் கிழத்தியோடு வந்தான். அவர்கள் இருவரும் கோவலன் கண்ணகி இருவருடைய அழகையும் பார்த்து வியந்தனர்.

பிறகு கவுந்தியடிகளைப் பார்த்து, "இவர்கள் யாவர்?" என்று கேட்டனர். அதற்குத் தவமூதாட்டி "இவர்கள் என்னுடைய மக்கள்" என்று கூறினாள். உடனே அவர்கள் இருவரும் "ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர்கள் கணவனும் மனைவியுமாக இருக்கமுடியாதே" என்று கூறியதோடு மேலுங் பலவாறு இழிவுரைகள் இயம்பி எள்ளி நகையாடத் தொடங்கினர். தவமூதாட்டிக்கு மிகுந்த சினமுண்டாகியது. உடனே அவர்களைப் பார்த்து நரிகளாகக் கடவீர்கள்" என்று கொடிய வசவுரை வழங்கினர். அவ்வளவில் அவர்கள் இருவரும் நரிகளாகி ஊளையிடத் தொடங்கினர்.

ஒருவர் தாம் காக்கவேண்டிய எதனைக் காக்காமற் போனாலும் நாவினையடக்கிக் காத்து வீணுரையாடாதிருத்தல் வேண்டும். அவ்வாறு காவாதொழியின் இவ்வாறுதான் நரிகளாகித் திரிந்து துன்பப்படுமாறு நேரிடும். இவ்வுண்மை இந்த மனித நரிகளிடம் நன்கு பெறப்படுதலைக் காண்க.

[தொகுக்க]

(சிலப்பதிகாரம்)

---

748. நரிகளைப் பரிகளாக்கிய கதை

திருவாதவூரர் திருப்பெருந்துறையில் அருளுரை பெற்றுத் திருப்பணிகள் செய்து கொண்டிருந்தார். பிறகு இறைவனுடைய கட்டளைப்படி மதுரைக்குச் சென்று குதிரைகள் விரைவில் வருமென்று கூறினர். பாண்டிய மன்னனுக்குக், "குதிரை வரும், குதிரை வரும்" என்று பல நாட்களைத் திருவாதவூரர் இறைவன் கட்டளைப்படி குறிப்பிட்டார். ஆனால் அந்நாட்களிலெல்லாம் குதிரைகள் வரவில்லை. பாண்டியன் திருவாதவூரரின் பேச்சில்

ஐயங் கொண்டான். அவரை ஒறுத்துத் தன்னுடைய பொருள்களை யெல்லாம் வாங்கு மாறு ஏவலர்கட்குக் கட்டளையிட்டான். ஏவலர்கள் பலவாறு திருவாதவூரரைத் துன்புறுத்தினர்கள். திருவாதவூரர் மதுரைக் கடவுளை வேண்டினர்.

மதுரைக் கடவுள் திருவாதவூரருடைய துன்பத்தைப் போக்க எண்ணினர். காட்டில் திரிந்த குறு நரிகளை யெல்லாம் பிடித்து அழகிய பெருங் குதிரைகளாகச் செய்தார். தாமும் மறையாகிய பரியின் மீது ஏறிக்கொண்டு பாண்டியனிடம் வந்தார். பாண்டியன் குதிரைகளைக் கண்டு மகிழ்ந்தான். இறைவன் பாண்டியனிடம் குதிரைகளை ஒப்படைத்து விட்டு மறைந்தருளினர். பாண்டியன் திருவாதவூரருக்குப் பல வகையான வரிசைகள் செய்து மேன்மைப்படுத்தினன். திருவாதவூரருந் தமது இல்லத்தை யடைந்து மகிழ்ந்திருந்தார்.

"நரியைக் குதிரை ஆக்கிய நன்மையும்"

[நரிகள் பரிகளான கதை] (திருவாசகம்)

---

749. நரியின் கதை

ஓரிடத்திலே இரண்டு ஆட்டுக் கடாக்கள் ஒன்றோடொன்று பகைகொண்டு போரிட்டன. அதனால் அவைகளுக்குப் பெருங் காய முண்டாகிக் குருதி வழிந்தது. இதனை ஒரு நரி கண்டது. குருதி சிந்துமிடத்தில் இருந்து தசை பெயர்ந்து விழும் அதனை உண்ணலாம் என்று எண்ணமிட்டுக் கொண்டு ஆட்டுக்கடாக்கட்கு இடையே போயது. ஆட்டுக்கடாக்கள் இரண்டும் முழுப்பலத்தோடு பின் வாங்கி முட்டிக் கொண்டபொழுது நரி ஆடுகளின் இடையே அகப்பட்டுக் கொண்டது. மோதல் பலமாகவே நரியின் மண்டையும் உடைந்து சிதறியது. அதனால் அந்நரி கீழே விழுந்து துடிதுடித்துச் செத்துப் போய் விட்டது. வீணனை அவாக்கொண்டு வகையறியாமல் மாட்டிக் கொண்டால் இறந்தொழிவது திண்ணம்.

"ஆட்டுக் கடாப்போரில் அன்றுதசை நாடிநரி
மாட்டிக் கொண் டேயுயிரும் மாய்ந்ததுபார்"

[வீண் அவாவால் உயிரிழப்பு நேரிடும்] (ஆத்திசூடி வெண்பா)

---

750. நரியின் கதை

முன் காலத்தில் காகன் என்னும் பெயருடைய வேடன் ஒருவன் வேட்டைக்குச் சென்றான். யானை ஒன்றைக் கண்டு அதனைக் கொன்று வீழ்த்தினன். அப்பொழுது அண்மையில் இருந்த புற்றில் இருந்து பாம் பொன்று புறப்பட்டு வேடனுடைய காலில் கடித்தது. அவன் அப்பாம்பை வில்லால் அடித்துக் கொன்றான். அவனும் நஞ்சு தலைக்கேறி மாண்டு வீழ்ந்தான்.

நரி யொன்று அந்த இடத்தை நண்ணியது. அது மூன்று பிணங்களையுங் கண்டு அகமகிழ்வு கொண்டது. நல்வினையினால் நமக்கு இன்று நல்ல ஊதியம் ஏற்பட்டிருக் கிறது. யானையை ஆறுதிங்களுக்கு உண்ணலாம். வேடனை ஏழு நாட்களுக்குச் சாப்பிடலாம். பாம்பு ஒரு நாளைக்குப் போதும். ஆகவே நமக்கு நெடு நாளைக்கு உணவுக் கவலை இல்லை. என்று எண்ணமிட்டு இன்பக் கூத் தாடியது.

பிறகு நரம்பினால் கட்டியுள்ள வில் நாணியை ப் பார்த்து இதனை முதலில் தின்போம். மற்றவைகளைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணமிட்டுக் கொண்டு வில்லின் நாணினைக் கடித்தது. வில் நிமிரவே நரியின் தலை நறுக்குண்டது.

வாழ்க்கையின் நிலையின்மையை அறிந்து கொள்ளாமல் சிலர் இப்படித்தான் வீண் எண்ணங்கொண்டு பிறகு விரைந்து அழிகிறார்கள்.

"களிறறு திங்கட் காகும்
கானவன் ஆகும் ஏழ்நாள்

ஒளிறுவாள் எயிற்று நாகம்
உண்டொர் நாட் கிரையென்றெண்ணி
வெளிறிலார்ச் சிலையிற் கோத்த
நாரிவாய்க் குதையைக் கவ்விக்
குளிறுபேழ் வாயிலுய்ப்பக்
கொடுவிற்கோத் திட்ட தன்றே''

[வீணவா] (நரி விருத்தம்)

———

751. நல்லான் கதை

நல்லான் என்பவர் வெகு காலத்திற்கு முன்பு மதுரை மாநகரில் வாழ்ந்திருந்தார். இவருக்கு விளைநிலங்கள் மிகுதியாக இருந்தன. செல்வச் சிறப்பும் நன்குக அமைந் திருந்தது. செல்வத்துக்குப் பயன் ஈதலாகையால் இவர் தாம் பெற்றிருந்த செல்வத்தைப் பலருக்குங் கொடுத்துச் சிறப்புடன் வாழ்ந்திருந்தார். கொடை நலத்திற் சிறந்து விளங்கிய இவரைப் பலரும் புகழ்ந்து பாராட்டினர். இவர் ஏர்கள் பலவற்றை வைத்துத் தமது விளைநிலங்களில் பயிரிடுதலே நன்குசெய்து அதனால்தான் தம்முடைய செல் வத்தைப் பெருக்கிப் பலருக்கும் உதவி புரிந்து கொண் டிருந்தார்.

ஒரு காலத்தில் மழை நன்குகப் பெய்யவில்லை. அதனால் இவர் தம்முடைய பயிர்த் தொழிலை நன்குகச் செய்ய முடியவில்லை. விளைநிலங்கள் உழப்படாமலே கிடந்தன. ஆகையால் இறைவன் இவர்பால் மனமகிழ்ந்து இவருக்கு உலவாக் கோட்டை யருளினர். அதனால் இவர் பலருக்கும் உதவி செய்து கொண்டிருந்தார். மழை நன்கு பெய்யாவிடின் உலகத்தில் உழவர்கள் உழுதொழிலைச் செய்யமாட்டார்கள் என்னும் உண்மையை அந்நாளில் அனைவரும் நன்கு உணர்ந்து கொண்டனர்.

[உலவாக் கோட்டையருளினர்] (திருவிளையாடற் புராணம்)

752. நல்லியக்கோடன் கதை

நல்லியக் கோடன் என்பவன் தொண்டைவள நாட்டில் ஆமூரில் பல ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்திருந்த ஒரு குறுநில மன்னன். உயிர்களிடத்தில் அன்பும் அருளும் உடையவன். இவன் தன்னுடைய செல்வத்தைத் தான் மட்டும் உண்டு களிக்கவில்லை. எல்லாருக்கும் உணவுகள் வழங்கினன். பாடிவந்த பாவாணர்கட்குப் பெரும் பொருள் வழங்கினன்.

இவனுடைய கீர்த்தி அந்நாளில் யாண்டும் பரவியிருந்தது. தான் பெற்ற செல்வத்தினைப் பலருக்கும் பகுத்தளித்துப் பல உயிர்களையுங் காப்பாற்றுதல் அறநூலோர் தொகுத்துக் கூறிய அறங்கள் எல்லாவற்றுள்ளுந் தலைமையானதாம் என்பதைப் பலரும் இவன்பால் நன்குணர்ந்தனர்.

[தலைமையான அறம்]

---

753. நல்லொழுக்கத்தை விட்ட கதை

பிரகலாதன் தன்னுடைய நல்லொழுக்கத்தினுல் மூவுலகத்தாராலும் புகழப் பெறுஞ் சீர்த்தியோடு விளங்கினன். தேவேந்திரன் அந்தணக் கோலம் பூண்டு பிரகலாதனிடஞ் சென்றான். பிரகலாதனுக்கு மாணவனாக அமைந்து நின்று ஒழுகினன். இதனுல் பிரகலாதனுக்கு அந்தணக் கோலத் தேவேந்திர மாணவனிடத்தில் அளவு கடந்த அன்புண்டாகியது. அவன் அந்தணக் கோல மாணவனைப் பார்த்து "உனக்கு வேண்டிய வரம் யாது? கேள் தருகிறேன்" என்று சொன்னன். இந்திரன் பிரகலாதனைப் பார்த்து, "உமது நல்லொழுக்கத்தின் பலனைத் தானமாகப் பெற விரும்புகிறேன்" என்று சொன்னன். பிரகலாதனுக்குத் திகைப்புண்டாகிவிட்டது. தன்னுடைய ஒழுக்கத்தின் பலனைத் தான்ஞ் செய்து விடுவதனுல் யாது விளையுமோ என்று மிகுந்த அச்ச

மடைந்தான். தான் வாக்களித்து விட்டபடியால் மறுத்துக் கூறவும் முடியவில்லை. "தந்தேன்" என்று கூறினன். பிறகு மனக் கவலையோடிருந்தான்.

அப்பொழுது ஒளி ஒன்று நிழல் வடிவத்தோடு பிரகலாதனுடைய உடலில் இருந்து வெளியே வந்தது. பிரகலாதன் அதைப் பார்த்து, "நீ யார்?" என்று கேட்டான். அதற்கு அவ்வொளி, "நான் உன்னுடைய நல்லொழுக்கத்தின் சாரம். நீ என்னை எறிந்து விட்டாய். நான் பிரிந்து சென்று உன்னுடைய மாணவனுகிய அந்த அந்தணனிடத்தில் தங்கியிருக்கப் போகிறேன்" என்று கூறியது.

அதன் பிறகு மற்றொரு நிழல் முன்போல வெளிப்போந்தது. பிரகலாதன் அதனையும், "நீ யார்?" என்று கேட்டான். அதற்கு அந்நிழல் "நான் நேர்மை யென்று பெயர் பெற்றவன். உன்னுடைய நல்லொழுக்கத்தோடு குடியிருந்தவன். அஃது உன்னைவிட்டேகவே நானும் புறப்பட வேண்டியிருக்கிறது" என்று கூறி விட்டுப் போய்விட்டது. இவ்வகையாக அவனிடங் குடிகொண்டிருந்த வாய்மை, பொறுமை, வீரம் முதலிய எல்லாக் குணங்களும் ஒவ்வொன்றுகச் சென்று விட்டன. செல்வமானது பிரியும் போது, "ஓ" பிரகலாதா! உன்னுடைய நன்னடக்கையால் மூன்றுலகங்களையும் உட்படுத்தியாண்டனை. அதனையறிந்த இந்திரன் அந்தணனுகக் கோலம் பூண்டு வந்து மாணவனுக நடித்து உன்னுடைய குணத்தைக் கவர்ந்து கொண்டு விட்டான். எல்லாவற்றிற்கும் மூலம் நன்னெறியாகிய நல்லொழுக்கமே யன்றி வேறெதுவும் அன்று" என்று கூறி அதுவுஞ் சென்றது. ஒருவனுடைய நல்லொழுக்கம் போனல் அவனைப் பற்றிய எல்லாம் போய்விடும்.

[நல்லொழுக்கமே மூலகாரணம்] (பிரகலாதன் கதை)

---

754. நவகேசர் கதை

நவன் எனவும் கேசன் எனவும் பெயரினையுடைய இவர் தொண்டைவள நாட்டில் காஞ்சி நகரத்தில் முன்

ஞளில் வாழ்ந்திருந்தனர். இவர்கள் சூதாடுதலில் மிக வல்லவர். சூதாடுதலேயே தமது தொழிலாகக் கொண்டு பெரும் பொருள் திரட்டினர். பிறகு திருக்குடந்தைக்குக் குடியேறி அங்குத் தமது தொழிலே நடத்திக் கொண்டிருந்தார்கள். அந்நாளில் மூர்க்கநாயனர் என்னும் சிவனடியார் ஒருவர் இருந்தார். அவருஞ் சூதாடுதலில் வல்லவர். அவர் சூதால் வருஞ் செல்வத்தைச் சிவனடியவர்கட்கு உணவளிக்கும் அறவழியிலே செலவிட்டார். நாளடைவில் பொருள் வளங்குன்றியது. நவகேசர் திருக்குடந்தையில் சூதாடுந் தொழிலில் ஈடுபட்டிருத்தலேயும் பொருள் மிக உடையராக இருத்தலேயும் அறிந்தார். திருக்குடந்தைக்குச் சென்று நவகேசர்களோடு சூதாடத் தொடங்கினர். முதலில் அவர் தாம் பொருளைத் தோற்பார். இந்நவகேசர்கள் வெற்றி நமக்கே என்று மேலும் மேலும் முனைந்து சூதாடுவார்கள். மூர்க்கநாயனர் சிறிது சிறிதாக அவர்களுடைய பொருள்களைக் கைப்பற்றி விடுவார். நாளும் பொருளழிவு மிகுதியாக நேர்தலே உணர்ந்தும் முதலில் ஒன்றனையடையும் அதனையே பெரிதாகக் கருதி நாளுஞ் சூதாடி எல்லாப் பொருள்களையும் அடியோடு இழந்து பின்னர் நவகேசர்கள் வறிஞராய் ஊரை விட்டு ஓடிப் போயினர். ஒரு பொருளையடைந்து நூற்றுக் கணக்கான பொருளையிழக்கும் சூதர்கட்கு நல்வாழ்வைக் கடைப் பிடிக்கும் நெறி உண்டாகமாட்டாதென்பதை உலகம் இவர்கள் பால் உணர்ந்தது.

[சூதாடிகட்கு நல்வாழ்வு உண்டாகமாட்டாது]

---

755. நளனுடைய கலியை நீக்கிய கதை

நிடத நாட்டை யாண்டிருந்த நளன் வேட்டையாடக் காட்டிற்குச் சென்றான். வேட்டையாடி முடிந்த பின் உணவருந்தி விட்டு ஒரு மரநிழலிலே படுத்து உறங்கினன். அப்பொழுது தனக்குத் துன்பம் வந்ததாகவும், மரத்திலிருந்து கீழே விழுந்ததாகவும் பாம்பு தீண்ட அதனால் உடல் கறுத்ததாகவுங் கனவு கண்டு விழித்தான். விழித்த

வுடன் அக்கனவைத் தன்னுடைய அமைச்சன் வேள்வி யாசிரியன் (புரோகிதன்) முதலியவர்களிடங் கூறினன். அவர்கள் இதற்குச் செய்யவேண்டிய கழுவாயைக் கூறினர்கள். ஆனல் அரசன் கழுவாயைச் செய்யாது இருந்துவிட்டான். அதனல் சூதாடி நாடு நகரங்களை யிழந்து துன்புற்றன். பிறகு கலி சிறிது விலகிய சமயத்தில் தான் இழந்தவைகளை யெல்லாம் மீளவும் பெற்றன்.

பிறகு நளனுக்குச் சிவப்பதிகட்குப் பயணஞ் சென்று நன்னீர் (தீர்த்தம்) ஆட வேண்டும் என்னும் எண்ணம் உண்டாகியது. நால்வகைப் படைகளுடனும் புறப்பட்டுப் பல பதிகட்குச் சென்று திருத்த நீராடி இறைவழிபாடு செய்தான். பிறகு திருப்பூவணத்தை யடைந்தான். அது வரையில் தனக்கிருந்த தீவினை அடியோடு அகன்று விட்டதையும் அதனல் தான் தூய்மையுள்ளவனகிவிட்டதையும் உணர்ந்தான். அப்பதியில் பலநாள் தங்கிப்பூசை வேள்வி முதலியன புரிந்து முற்றிலுந் தூயோனய்த் தன்னுடைய நாட்டை யடைந்தான்.

" ... ... தோளில்,
தழைக்கும் படிகொள் நளச் சக்ரவர்த்தி முன்பட்
டுழைக்குங் கலிதீர்த் துவந்தோன் "
. . .. " குலவு
நளச்சக்ரவர்த்தி கலி நாசஞ் செய் நாதன் "

[நளன் கலியை நீக்கியது] (திருப்பூவணநாதருலா)

---

756. நளன் பெருமை கொண்டாடிய கதை

நளன் புட்கரனேடு சூதாடி நாடு நகரங்களையெல்லாம் இழந்து விட்டான். மனைவி மக்களையெல்லாம் பிரிந்து தானெரு பக்கஞ் சேர்ந்தான். தமயந்தி தன்னுடைய தந்தையின் நகரையடைந்து தந்தையிடம் நிகழ்ந்தவைகளைக் கூறினள். பிறகு மற்றெரு முறை திருமணம் நிகழ்வதாகக் கூறி நளன் தேரோட்டியாக வேலை பார்த்திருந்த நாட்டு மன்னனுக்குத் திருமண அழைப்பு அனுப்பச் சொன்னள்.

அம்மன்னனும் நளனையே தேரோட்டியாகக் கொண்டு வீமனுடைய நகரத்தை அடைந்தான். தமயந்தி நளனைப் பலவகையாலும் ஆராய்ந்து பார்த்து வந்துள்ளவனே தன்னுடைய கணவன் என்று அறிந்து அவனை அரண்மனைக்கு அழைக்கச் சொன்னாள். வீமராசன் தன்னுடைய அமைச்சர்களை அனுப்பினான். நளன் 'தான் வரமுடியாது' என்று கூறி மறுத்து விட்டான். பிறகு மாமனுகிய வீமரர்சனே மருமகனுகிய நளனிடம் வந்து தன்னுடைய அரண்மனைக்கு அழைத்துக்கொண்டு சென்றான். அமைச்சர்கள் கூப்பிட்டபொழுது நளன் செல்லாமலிருந்ததற்குக் காரணம் மாமனே தன்னை அழைக்கவில்லை யென்பதுதான். இதுமுதல், "கடுகு சிறுத்தாலும் காரம் போகாது" என்று பழமொழி உண்டாயிற்று.

"அடவிசென்று நகரிழந்து வறுமை தங்கி
உடல் மெலிந்து அம்மா னூர்வந்
திடவுமம்மான் ஏவலினுல் அமைச்சரழைத்
திடவருவ திலேபோ வென்ற
நிடநளனே ராசனெதிர் கொண்டழைக்கச் சம்மதித்
[தான்
செயங்கொண்டாரே"

[நளன் தன்மானம்] (செயங்கொண்டார் வழக்கம்)

---

757. நளன் கதை (1)

நளன் என்பவன் நிடத நாட்டிலே மாவிந்தபுரியிலே அரசு புரிந்து கொண்டிருந்த மன்னன். இவன் விதர்ப்பன் வீமன் மகளாகிய தமயந்தியைத் திருமணம் புரிந்திருந்தான். காலக்கோளாறினுல் பல வகையான தொல்லைகள் நேர்ந்தன. மனைவி மக்களை யிழந்து காடொன்றிற் சென்று கொண்டிருந்தான். ஓரிடத்தில் பாம்பு ஒன்று காட்டுத் தீயில் அகப்பட்டு வெந்து கொண்டிருந்தது. நளன் அதனைக் கண்டு உள்ளம் இரங்கினன். நெருப்பிற் புகுந்து அதன் உயிரைக் காப்பாற்றி

னுன். அவ்வளவில் அப்பாம்பு நளனைக் கடித்தது. ஆயினும் நளன் அப்பாம்பிற்கு யாதொரு தீமையுஞ் செய்யவில்லை. அவ்வாறு பாம்பு கடித்ததால் பிறகு இவனுக்கு நன்மையே விளைந்தது. ஓர் உயிருக்கு நாம் செய்யத் தக்கது நன்மை, செய்யத்தகாதது தீமை. நன்மை செய்தார் நலம் பெறுவர். தீமை செய்தார் தீமை பெற்று நலிவர் என்னும் உண்மையை உலகம் நளன்பால் உணர்ந்து கொண்டது.

[நன்மை செய்தார் நலம் பெறுவர்] (நைடதம்)

---

758. நளன் கதை (2)

நளன் தமயந்தியை மணம் புரியும் பொருட்டு அவளுடைய நாட்டையடைந்து தங்கியிருந்தான். பல நாட்டு அரசர்களும் அவ்வாறே அங்கு வந்து தங்கியிருந்தார்கள். தேவர்களும் வந்திருந்தார்கள். தேவர்களுடைய தலைவனுகிய இந்திரனும் வந்திருந்தான்.

இந்திரன் நளனையடைந்து 'யான் உன்னிடம் ஒன்றை விரும்பி வந்துள்ளேன்' என்று கூறினன். விண்ணவர் தலைவனுகிய இந்திரனே தன்பால் ஒன்றை எண்ணி வந்திருத்தலைக்கண்டு நளன் மகிழ்ந்தான். இவர் எதனை விரும்பி நம்மிடம் வந்துள்ளார் என்பது தெரியவில்லையே தெரிந்தால் கேட்பதற்கு முன்னலேயே கொடுத்து விடலாமே என்று எண்ணி உள்ளம் வருந்தினன். பிறகு இந்திரன் தமயந்தியிடம் தூது போய் வரவேண்டுமென்று கூறியபோது அதற்கு இணங்கி அவ்வாறே செய்தான்.

இரவலாளர்கள் தன்பால் நன்கொடையினைப் பெற்று மகிழ்ந்து முகமலர்ச்சியடைதலைக் காணும் வரையில் இரக்கப்படுதலும் துன்பத்தைத் தருவதாம் என்று நூலோர் கூறியது நளன்பால் நன்கு விளங்கியது.

[இரக்கப்படுதலும் இன்பம்] (நைடதம்)

---

759. நளாயனி கதை

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் மௌற்கல்யர் என்னும் பெயருடைய முனிவர் ஒருவர் இருந்தார். அவர் தவத்தாற் சிறந்து பெருமையுடன் திகழ்ந்தார். அவருக்கு நளாயனி என்னும் நங்கையர்க்கரசி பங்கமில் மகளாயப்பாரினில் அமைந்தாள். அவள் தன்னுடைய கணவனே தெய்வமென்று நடந்தாள். சிறிது காலம் நளாயனியோடு இன்ப வாழ்க்கையை இனிது நடத்திய முனிவர் தம்முடைய மகளாயினின் கற்பின் திண்மையை ஆராய்ந்து பார்க்க எண்ணினர்.

குறை நோயும் அதனால் சிதையுடலும் முதிர் பருவமும் உடையவராய்த் தோன்றினர். அவருடைய வடிவம் கண்டோரெல்லாம் வெறுத்தொதுக்கத்தக்க விதத்தில் விளங்கியது. அவ்வெறுக்கத்தக்க உடல் நிலையைக் கண்டு நளாயனி சிறிதும் வெறுப்புக்காட்டவில்லை. முன்னையினும் பன்மடங்கு முதிர்காதல் உடையவளாய் முனிவரைப் பெரிதும் போற்றி மகிழ்ந்திருந்தாள். முனிவர் உண்டு மிகுந்த எச்சிலையே உணவாகக் கொண்டு மகிழ்ந்தாள். ஒருநாள் முனிவர் உண்ட கலத்தில் அவருடைய கைவிரல் ஒன்று அற்றுவிழுந்து கிடந்தது. அதனைக் கண்டும் அவள் சிறிதும் வெறுப்படையவில்லை. அதனையும் உண்டு மகிழ்ந்தாள்.

மேலும் முனிவர் நளாயனியின் கற்பு நலத்தை நன்கு ஆராய்ந்து பார்க்க எண்ணினர். ஒருநாள் தம்முடைய மகளாயினியைப் பார்த்து, "மாதே! இன்பத்தை விலையின் பொருட்டு அளிக்கும் விளங்கிழையார் பால் மேவ விரும்புகின்றேன். ஆகவே என்னைத் தூக்கிக் கொண்டு செல்வாயாக" என்று கட்டளையிட்டார். நளாயனி அவ்வாறே அவரை ஒரு கூடையில் உட்கார வைத்து விலைமகளின் இல்லத்திற்குத் தூக்கிக் கொண்டு சென்றாள். பிறகு அங்கிருந்து மீளவும் வீட்டிற்குத் தூக்கிக்கொண்டு வந்தாள்.

வரும் வழியில் மாண்டவியர் என்னும் முனிவர் ஒருவர் கழுவில் ஏற்றப் பெற்றிருந்தார். அவர்மீது நளாயனி தூக்கி வந்த கூடை இருளில் தெரியாமல், இடித்துவிட்டது. அதனால் வருந்திய மாண்டவியர், "மாதே! முன்னரே

வருந்திக் கொண்டிருக்கும் எனக்கு மேலும் வருத்த முண்டாகுமாறு செய்தாயன்றே? பொழுது விடிந்ததும் நீ மாங்கலியம் இழக்கக் கடவாய்'' என்று வசவுரை வழங்கினர். இதனைக் கேட்ட நளாயனி, ''அவ்வாறுயின் பொழுது விடியாமற் போகக் கடவது'' என்று தானும் எதிர் வசவுரை வழங்கினள்.

மறுநாள் கதிரவன் தன்னுடைய ஒளியைக் காட்டாது மறைந்தனன். தேவர்களனைவரும் கதிரவனைக் கண்டு ''ஏன் புறப்படவில்லை?'' என்று உசாவினர். அதற்குக் கதிரவன், ''என்னுல் ஆவது ஒன்றுமில்லை. நான் கற்புக் கரசியாகிய நளாயனியின் கட்டளையை மறுக்கவல்லேன் அல்லன்'' என்று கூறினன். தேவர்கள் நளாயனியை அடைந்து கட்டளையை மாற்றுமாறு வேண்டினர். நளாயனி, கதிரவனுதயமாயின் நான் மாங்கல்ய மிழக்குமாறு நேரிடும் என மறுமொழி யுரைத்தாள். தேவர்கள் மாண்டவியரிடஞ் சென்று அவர் இட்ட வசவுரையை மாற்றச் செய்தனர். அதன் பிறகு நளாயனியும் தன்னுடைய வசவுரையை மாற்றினள். அதன் பிறகு பொழுது விடிந்தது. தேவர்கள் நளாயனியின் கற்புத் திறத்தைப் பாராட்டிச் சென்றனர்.

மௌற்கல்ய முனிவர் தம்முடைய மனைவியின் கற்பையும் அன்பையுங் கண்டு களித்தார். தம்முடைய விகார வடிவத்தை மாற்றினர். நளாயனி விரும்பிய மேன்மைகளையும் வழங்கினர். மறுபிறப்பில் நளாயனி, பாஞ்சாலையாயினள்.

[கற்பின் திண்மை] (நளாயனி வரலாறு)

---

760. நள்ளி கதை

நள்ளியென்பவன் கடையெழு வள்ளல்களில் ஒருவன். உள்ளத்தில் அருளுடையவனாக விளங்கினன். இரவலர்க்கு இல்லையென்னுமல் ஈந்து மகிழ்ந்தான். இவன் ஒரு குறுநில மன்னனேயாயினும் பெருநில மன்னனைவிடப் புகழ் பெற்று விளங்கினன். இவனுடைய சிறந்த குணநலங்கள் அனைவருடைய உள்ளங்களையுங் கவர்ந்தன.

பரணர் என்னும் புலவர் வறுமையால் வாடினார். பரிசிலை நாடினார். பலவிடங்கட்குஞ் சென்றார். தக்கவாறு பரிசில் கிடைக்கவில்லை. வழிநடை வருத்தத்தால் மிகக் களைப்படைந்திருந்த இவர் நள்ளியின் நகரையடுத்த காட்டிலே படுத்திருந்தார்.

நள்ளி ஏதோ அலுவலாக அக்காட்டு வழியே சென்றான். பரணரைக் கண்டான். அவர் புலவர் என்பதும் வறுமையால் வாடிக் களைத்துப் படுத்திருக்கிறார் என்பதும் நள்ளிக்குத் தெரிந்தன. உள்ளம் வருந்தினான். விரைந்து சென்று சிறந்த உணவுகளைக் கொண்டு வந்து ஊட்டினான். அணிகலன்கள் மிக வழங்கினான். பொருள்களையுங் கொடுத்தான். மற்றுஞ் செய்ய வேண்டியவைகளைச் செய்தான். எல்லாவற்றையுஞ் செய்தும் தான் யார் என்பதை மட்டும் புலவருக்குக் கூறவில்லை.

ஒருவர் ஒருவர்க்குச் செய்யும் உதவியானது கைம் மாற்றினை எதிர்பார்த்ததாக மாட்டாது. இவ்வுலகம் மழைக்கு என்ன கைம்மாற்றினைச் செய்கிறது? இது நள்ளியிடம் நன்கு விளங்கியது.

[கைம்மாறில்லாத உதவி] (அகநானூறு)

---

761. நன்றிகெட்ட வேடன் கதை

ஒரு வேடன் காட்டிலே வேட்டையாடிக் கொண்டு திரிந்தான். அச்சமயத்தில் புலியொன்று வேடனைத் துரத்திக் கொண்டு வந்தது. புலிக்கு அஞ்சிய வேடன் ஒரு மரத்தின் மீது ஏறினான். அம்மரத்தில் ஒரு குரங்கு வசித்திருந்தது. அக்குரங்கு தன்னைக் கடித்துவிடுமோ என்று முதலில் வேடன் அஞ்சினான். அக்குரங்கு அஞ்சவேண்டியதில்லை யென்று கூறி வேடனுக்கு அடைக்கலம் அளித்தது. காலையில் மரத்தில் ஏறிய வேடன் மாலைவரையில் மரத்தில் இருந்தான். புலி மரத்தின்கீழே அமர்ந்துகொண்டு அசையாமல் இருந்தது. வேடனுக்குப் பசி பொறுக்க முடியவில்லை. அதனால் மிகவும் வருந்தினான். குரங்கு கிளைக்குக்கிளை தாவிப் பல காய்களை

கூனைக் கொண்டு வந்து வேடனுக்குக் கொடுத்து அவனுடைய பசியைப் போக்கியது. இரவில் குரங்கும் மனிதனும் மாறிமாறி விழித்துக்கொண்டிருந்தனர். மனிதன் தூங்கும் பொழுது புலி குரங்கைப் பார்த்து வேடனைக் கீழே தள்ளிவிடு நான் அவனைத் தின்றுவிட்டுப் போய்விடுகிறேன்'' என்று கூறியது. இதனைக் கேட்ட குரங்கு, அடைக்கலமாக வந்திருப்பவனுக்கு நான் தீமை செய்யமாட்டேன்'' என்று கூறிவிட்டது. பிறகு வேடன் விழித்துக்கொண்டிருக்கக் குரங்கு உறங்கியது. அப்பொழுது புலி வேடனைப் பார்த்து, ''நீ இந்த மரத்தில் எத்தனை நாளைக்கு இருக்க முடியும்? அக் குரங்கைக் கீழே தள்ளிவிடு நான் அதனைத் தின்று விட்டுப் போய்விடுகிறேன்'' என்று கூறியது. இதனைக் கேட்ட வேடன் உடனே குரங்கைப் பிடித்துக் கீழே தள்ளிவிட்டான். புலி குரங்கைக் கொன்றுவிட்டது.

''வல்லியந் தனைக்கண் டஞ்சி மரந்தனில் ஏறும் வேடன்
கொல்லிய பசியைத் தீர்த்து ரட்சித்த குரங்கைக்
[கொன்ருன்
நல்லவன் தனக்குச் செய்த நலமது மிக்க தாகும்
புல்லர்கள் தமக்குச் செய்தால் உயிர்தனைப் போக்கு
[வாரே''

[தீயோர்க்கு உதவி செய்தால் தீமையுண்டாம்] (விவேக சிந்தாமணி)

---

762. நன்றி மறவாத கதை

ஒரு காலத்தில் ஓர் அரசன் ஒவ்வொரு குலத்திலும் ஒரு பெண்ணை எல்லாக் குலத்திலும் திருமணஞ் செய்து கொண்டு வந்தான். வேளாளர் வகுப்பிலும் அழகிய பெண் ஒன்றைத் திருமணஞ்செய்ய எண்ணினான். ஒரு குடும்பத்திலிருந்த அழகிய பெண் ஒன்றைக் கேட்டான். அக் குடும்பத்தினர் அரசனுடைய வேண்டுகோளை மறுப்பதற்கஞ்சி ஒப்புக் கொண்டார்கள். திருமணத்திற்கு நாளுங் குறிப்பிட்டு மணப்பந்தல் முதலியவைகளை அமைத்தார்கள். மணப்பந்தற்காலில் மணநாள் அன்று பெண்நாய் ஒன்றைக் கட்டிவைத்து விட்டுக் குடும்பத்தாரனைவரும் வேறு நாட்டிற்குச் சென்று ஒளித்துக்

கொண்டார்கள். அவ்வாறு ஒளித்துக் கொண்டவர்களை வணிகர் முதலிய வேறு வகுப்பினர் காட்டிக் கொடாமல் பாதுகாத்து வேண்டிய உதவிகளைச் செய்தார்கள். அவ் வணிகர்களுடைய நன்றியை மறவாமல் தங்களைக் காத்தவர் களின் பெயர்களைத் தங்கள் குடிப்பெயராக வழங்கித் தங்க ளுடைய நன்றியறிதலை வேளாளக் குடும்பத்தினர் புலப்படுத் திக் கொண்டனர்.

[நன்றிமறவாமை]

---

763. நன்னன் கதை

கொங்கு நாட்டில் இருந்து அரசு புரிந்த மன்னர்களில் நன்னன் என்பவன் ஒருவன். இவன் மிகப் பொல்லாதவன். கல்வியறிவும் இவனிடம் தக்கவாறு அமையவில்லை. இக் கொடியவனைக் கண்டால் மக்கள் புலியைக் கண்டு மானைப் போல் நடுங்குவார்கள். எவ்வளவு கொடிய தீமையாக இருந்தாலும் இவன் அதனைக் கூசாது புரிந்துவிடுவான். எவர் இயம்புவதையும் இவன் கேளான். இவனுடைய சோலையில் அரிய மாமரம் ஒன்று இருந்தது. அம்மரத்தின் காய் அமுதினும் இனிய சுவையை உடையது. அம்மரத்தின் காயை எவரும் தின்னக் கூடாது என்றும் மீறித் தின்போர் கொலை செய்யப்பெறுவர் எனவும் தெரியப்படுத்தியிருந்தான்.

மதிவதி என்னும் பெயருடைய மங்கை ஒருத்தி ஆற்றிற்கு நீராட வந்தாள். அவளுடைய தந்தை பெருஞ் செல்வம் படைத்த ஒரு வணிகன். அவள் நீராட வந்த சமயத்தில் நன்னனுடைய மாமரத்தின் காய் ஒன்று மரத்தில் இருந்து விழுந்து ஆற்றில் மிதந்தது. அதனை மதிவதி மதி யில்லாமல் எடுத்துத் தின்றாள். சோலைக் காவலன் இதனைப் பார்த்துவிட்டு நன்னனிடஞ் சென்று கூறிவிட்டான்.

நன்னன் பெருஞ் சினங் கொண்டான். நன்னுதலைக் கொன்று விடுமாறு கட்டளையிட்டான். இதனை மதிவதியின் தந்தை உணர்ந்தான். அந்தோ விதிவழி இவ்வாறு இருந்ததே என்று கதிகலங்கினான். விரைந்து வந்து நன்னனுடைய கால்களில் விழுந்தான். அவள் அறியாமற் செய்த பிழை

யைப் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று வேண்டினான். நன்னன் கேட்கவில்லை. கொன்றே தீர்க்க வேண்டுமென்று கூறினான். அவள் நிறையளவு பொன் தருகிறேன். எண்பத்தொரு யானைகள் தருகிறேன் கொலை செய்யாமல் விட்டு விடவேண்டும்" என்று கெஞ்சினான். யாதும் பயனில்லை. கொன்றே தீர்த்தான். இவனுடைய கொடுஞ் செயல் யாண்டும் பரவியது. அனைவரும் இவனை வைது இகழ்ந்தார்கள். இவன் பெயர் "பெண் கொலை புரிந்த நன்னன்" என்று நீண்டது. இவ்வாறு கொடுங்கொலை புரிந்த இவன் நெடுங்காலம் வாழவில்லை. சேர மன்னன் வந்து ஊரை வளைத்துச் செய்த போரில் பேரைக் கெடுத்துக் கொண்ட இவன் பட்டொழிந்தான். குடிகள் அஞ்சுமாறு கொடுஞ் செயல்களைப் புரிந்தொழுகும் கொடுங்கோலனுக ஒருவன் இருப்பின் அவன் தவறுது மாண்டொழிவான் என்பது இவனிடம் பெறப்பட்டது.

[கொடுங்கோல் மன்னன் விரைவில் அழிவான்]

———

764. நாகதந்தன் கதை

தானியபுரம் என்னும் ஊரிலே குபேரதத்தன் என்னும் பெயருடைய செட்டி ஒருவன் இருந்தான். அவனுடைய மனைவியின் பெயர் சுதத்தை. இவர்களிருவருக்கும் நாகதந்தன் என்னும் பெயருடைய மகன் ஒருவன் பிறந்தான். இந்நாகதந்தன் கல்வி கற்றும் அறிவற்றவனுகவும் பேராக் கொண்டவனுகவும் இருந்தான். எவருடைய பொருளாக இருப்பினும் சமயங் கிடைக்குமாயின் அதனை வவ்விக் கொள்வதற்கு இவன் சிறிதும் பின்வாங்கமாட்டான். இவனுடைய தங்கைக்குத் திருமணம் நிகழ்ந்தது. இவனுடைய தந்தையே அணிகலன்களை வாணிகஞ் செய்யும் அணிகல வணிகனுக இருந்தான். இவனுடைய தாய் தன் பெண்ணுக்கு அணிகலன்களைத் தன்னுடைய கணவன் கடையிலிருந்து தெரிந்தெடுத்தாள். பேரவாக்கொண்டவனுகிய இவன் தாயையும் வஞ்சித்து ஏமாற்றப் பார்த்தான். ஆனால் அதற்கு இடங்

கிடைக்கவில்லை. அந்த வருத்தத்தோடு உயிரை விட்டான். மறுபிறப்பிற் குரங்காகப் பிறந்தான்.

" மெய்ப்பொருள் தேறலன் பற்றுள மேபுரிந்
திப்பை யாக்கையில் தேர்ச்சியில் வாணிகன்
கப்பி யாப்பிறந் தானெனுங் கட்டுரை
ஒப்ப நூலுணர்ந் தார்சொலக் கேட்டுமால் "

[தாயை வஞ்சிக்க எண்ணியவன்] (நரிவிருத்தம்)

---

765. நாகன் கதை

முன்னாளில் தென்னாட்டில் நாகன் என்னும் பெயருடையவன் ஒருவன் இருந்தான். அவனிடம் பொருள் மிகுதியாகக் குவிந்திருந்தது. நாகன் வாழ்ந்திருந்த ஊரின் பெயர் ஆலூர். அவ்வூர்மக்கட்கு நாகனிடம் பொருமை யுண்டாகியது. நாளும் நாகனைப் பகைத்தனர். ஆனால் பொருட் சிறப்புடைய அவனை ஏதுஞ் செய்ய முடியவில்லை. நாகனுக்குப் பொருமை மிக்க மக்களிடையில் வாழ்வது பிடிக்கவில்லை. தன்னுடைய அளவற்ற பொருளையும் எடுத்துக் கொண்டு வெகுதொலைவில் இருந்த வேறொரு நாட்டிற்குக் குடியேறினான். அந்நாட்டார் நாகனிடம் பொருமை கொள்ளவில்லை. நாகனை யடுத்து அன்பு பாராட்டி நாகனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து தாமும் நாகனால் பொருள் பெற்றுச் சிறப்புற்றனர். நாகனுடைய புகழ் அந்நாடு முழுவதும் பரவியது. பொருள் என்று சொல்லப்பெறுகிற கெடாத விளக்கம் தன்னையுடையார் சென்ற நாட்டிலெல்லாம் சென்று அவர்கட்கு மிகுந்த புகழினை உண்டாக்கும் என்பது நாகனிடம் நன்கு பெறப்பட்டது.

[பொருள் எங்குச் சென்றாலும் சிறப்பினைக் கொடுக்கும்]

---

766. நாகன் கதை (வேறு)

முன்னளில் நாகன் என்னும் பெயருடையவன் ஒருவன் இருந்தான். இவனுக்குச் செல்வம் சிறிது அமைந்திருந்தது. தான் பலருக்கும் உதவி செய்தும் நன்கொடைகள் வழங்கியும் வள்ளலாக விளங்கவேண்டுமென்று எண்ணினான். தன் பால் வந்த சிலருக்குப் பொருள் வழங்கினன். புகழ்ப்பாடல் களும் சில கிடைத்தன. செல்வத்தைப் பெருக்கவேண்டும் என்னும் எண்ணம் இவன்பால் சிறிதும் இல்லை. ஆகவே எத்தகைய முயற்சியும் செய்யாமல் உட்கார்ந்தபடியே வள்ள லாக முயன்று கொண்டிருந்தான். மிகுவிரைவில் கைப் பொருள் தீர்ந்து விட்டது. பிறகு இவனிடம் நன்கொடையை நாடி எவரும் வரவில்லை. வள்ளல் என்னும் பெயரும் அமையவில்லை.

முயற்சியில்லாதவன் பிறருக்கு உதவிசெய்து வள்ள லாக முயலும் எண்ணமானது பேடியின் கையில் உள்ள வாள் எத்தகைய சிறப்பும் அற்று அழிவது போலக் கெடும் என்பதைப் பலரும் இவனிடம அறிந்து கொண்டனர்.

[தாளாண்மை யின்றேல் வேளாண்மை யில்லை]

---

767. நாகன் கதை (வேறு)

முன்னளில் நாகன் என்னும் பெயருடைய வேடுவன் ஒருவன் தண்டகக் காட்டில் வாழ்ந்திருந்தான். மான், முயல், பன்றி முதலிய விலங்குகளையும் பறவைகளையும் வேட்டையாடிக் கொன்றுண்பதே இவனுடைய தொழிலாக இருந்தது.

இந்நாகன் ஒருநாள் முனிவர் ஒருவரைக் கண்டான். அவருடைய பெயர் முற்கலர். அவரைக் கொன்று தின்னலாம் என்று கொல்லத் தொடங்கினன். அவர் தம்முடைய திறமையால் இவனுக்கு அன்பு, அருள், கொல்லா விரதம், நல்வினை, தீவினை, வீடுபேறு, அளறு முதலியனைகளின் தன்மைகளைத் தெளிவாக விளக்கி அறிவுரை கூறினர்.

முற்கல முனிவர் மொழிந்ததைக் கேட்ட நாகனுக்கு நல்லறிவு உண்டாகியது. அன்றுமுதல் ஓர் உயிரையுங் கொல்வதில்லை என்று உள்ளத்தில் உறுதி கொண்டான். இவனுடைய கொல்லா விரதத்தையும் மனநிலையையும் உணர்ந்த ஆனைமுகக் கடவுள் இவனுக்குத் திருவருள்செய்து தம்மடியிற் சேர்த்துக் கொண்டார். கொல்லா நோன்பை மேற்கொண்டு நடப்பவனுடைய வாழ்நாள்மேல் உயிருண்ணுங்கூற்றுச் செல்லாது என்பது இந்நாகனிடத்தில் இனிது விளங்கியது.

[கொல்லா நோன்புடையவன்]

---

768. நாடன் கதை

நாடன் என்பவன் நிடதமலைக்குப் பக்கத்தில் கானதம் என்னும் ஊரில் வாழ்ந்திருந்தான். இவன் வேடர் குலத்தினன். தன்னுடைய குலவழக்கப்படி வேட்டையாடுவதற்குக் காட்டிற்குச் சென்றான். அங்கோரிடத்தில் புறுக்கள் கூட்டமாக அமர்ந்திருந்தன. அக்கூட்டத்தில் ஓர் அம்பைச் செலுத்தினான்.

ஐந்தாறு புறுக்கள் அடியுண்டு வீழ்ந்து பதைத்தன. அவை வருந்தித் துடிப்பதை இவன் அண்மையிற் சென்று கண்டான். அவ்வளவில் இவனுடைய உள்ளத்தில் அருளுடைமை தோன்றிற்று. உள்ளங் கலங்கி வருந்தினான். தம்மீது அம்பு பட்டால் எவ்வாறிருக்கும் அவ்வாறுதானே இவைகட்கும் இருக்கும் என்று எண்ணினான். தன்குலத்தை வெறுத்தான்; வில்லை இறுத்தான். இனிமேல் எவ்வுயிர்க்கும் தீங்கு செய்வதில்லையென்று முடிவு செய்தான். அன்று முதல் எல்லா உயிர்களிடத்திலும் அருளோடு நடந்து கொண்டான்.

இவனுடைய அருளுடைமையால் இவனுக்கு மேலான வீடுபேறுங் கிடைத்தது. இருள் பொருந்திய நரகத்தை

யடைதல் அருள் பொருந்திய மனமுடையவர்கட்கு இல்லை யென்பது இவன்பால் உண்மையாகியது.

[அருளாளர் நிரயமடையார்]

---

769. நாடோட நடுவோடிய கதை

பாண்டவர்கள் கௌரவர்களின் தொல்லையால் ஒரு காலத்தில் வேத்திரகீயம் என்னும் ஊரில் ஓர் அந்தணன் மனையில் தங்கியிருந்தனர். அவ்வூரையடுத்த காட்டில் பகாசுரன் என்பவன் தங்கியிருந்தான். அப்பகாசுரனுக்கு ஊரார் முறை வைத்துக் கொண்டு நாடோறும் ஒரு வண்டி சோற்றையும் அவ் வண்டியை இழுக்கும் மாடுகளையும் அதனை ஓட்டிச் செல்லும் மனிதனையும் உணவாக அனுப்பிக் கொண்டிருந்தனர்.

ஒருநாள் பாண்டவர் தங்கியிருந்த வீட்டுக்காரர்கள் உணவனுப்ப வேண்டிய முறை வந்தது. வீட்டுக்குரிய அந்தணர் தன்னுடைய மகனை அனுப்ப வேண்டியதாக நேரிட்டது. அவள் அதனைக் குறித்து வருந்தினாள். அங்கு மாறுகோலத்துடன் தங்கியிருந்த பாண்டவர்களின் தாயாகிய குந்திதேவி வீட்டுக்காரியைப் பார்த்து, "அம்மா! நீ வருந்தாதே எனக்கு ஐந்து மக்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவனை அசுரனிடம் அனுப்புகிறேன் என்று தேறுதல் கூறினாள். வீட்டுக்காரியும் அதற்கு இணங்கிச் சமையலைச் செய்து முடித்தாள். வண்டியில் உணவை நிரப்பி வீமனை யனுப்பினர்.

வீமனே சாப்பாட்டுராமன். உணவு கண்டால் அதனை விடான். காட்டிற்குச் சென்ற வீமன் பகாசுரனை ஒருபொருட்படுத்தாது உணவு முழுவதையுந் தானே உண்டான். மாடுகளை யவிழ்த்துப், 'பிழைத்துப் போங்கள்' என்று கூறி விரட்டிவிட்டான். மாடு திரும்பி வந்ததைக் கண்ட ஊரார், "அந்தோ கண்டவர்களை அனுப்பியபடியால் சென்றவன் அசுரனிடம் போகாமல் மாடுகளை யவிழ்த்து விரட்டி விட்டுத் தான் எங்கோ ஓடிப்போனான். இனிமேற் பகா

சுரன் இங்கு வந்து எல்லாரையும் வருத்தப் போகிறான். இதற்கென்ன செய்வதென்று அஞ்சி ஊருக்கு வெளியே சென்று பகாசுரன் வரக்கூடிய வழியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

உணவை உண்டு முடித்த வீமன் அங்கு வந்த பகாசுரனைக் கொன்று முடித்துவிட்டு ஊரை நோக்கித் திரும்பி வந்து கொண்டிருந்தான். கண்டபடி ஒரு வண்டி உணவைத் தின்றிருந்தபடியால் வீமன் பூதம்போல் உப்பித் தொலையில் இருந்து பார்ப்பவர்கட்கு அப் பகாசுரன் போலவே காணப் பட்டான். அவனைக் கண்டவுடன் ஊரார்கள் ''அதோ வந்து விட்டான் பகாசுரன்'' என்று கூறிக்கொண்டு மூலைக் கொருவராக ஓட்டம் பிடித்தனர். ஆனால் பாண்டவர்கள் வருவது வீமன்தான் என்று அறிந்து கொண்டார்கள். அருச்சுனன் முதலியோர் ஓடாது அப்படியே நின்றிருந்தனர். ஆனால் தருமர் அவர்களைப் பார்த்து, ''ஓடுங்கள் ஓடுங்கள்'' என்று கூறி அவர்களை ஓடச் செய்து தாமும் அவர்களுக்கு நடுவே விழுந்து ஓடினர். இதனைக் கண்ட அருச்சுனன் ஓடிய படியே நகைத்துக் கொண்டு, ஏன் அண்ணை வருவது வீமன் என்றுதான் நமக்கு நன்கு தெரிகிறதே நாம் ஏன் ஓட வேண்டும்?'' என்று கேட்டான்.

அதற்குத் தருமர், ''தம்பி! அப்படியன்று; ஊரோட உடனோடவேண்டும், நாடோட நடுவோட வேண்டும்'' ஆகவே தம்பி! நிற்காதே'' என்று சொல்லிக் கொண்டு மேலும் ஓடினர். அன்று முதல் அம்மொழி உலகில் நிலைத்து விட்டது.

''நாடோடும் போது நடுவோட வேண்டு மென்று
தேடுந் தருமர்சொன்ன சீரதனால்—நீடு
பொருந்துபுகழ்ப் புன்னைவன பூபாலா நன்முயற்
தெரிந்துநா டொப்பன செய்''

[நாடொப்பன செய்தல்]

(ஆத்திசூடி வெண்பா)

770. நாட்டைப் புகழ்ந்து பாடிய கதை

சேர மன்னன், சோழ மன்னன், பாண்டிய மன்னன், ஆதொண்டைச் சக்கரவர்த்தி இந் நால்வரும் ஒரு சிறப்பின் பொருட்டுக் காஞ்சி நகரத்திலே கூடியிருந்தார்கள். அப்பொழுது அவ்விடத்திற்கு ஔவையார் வந்தார். அரசர்கள் நால்வரும் ஔவையாரைப் போற்றிப் பாராட்டினார்கள். தமிழ் உலகத்து நான்கு மண்டலங்களின் சிறப்புக்களையும் புகழ்ந்து பாடவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். ஔவையார், யாஞைமிகுதியால் மலை நாடும், நெல்மிகுதியால் சோழ வளநாடும் முத்தின் மிகுதியால் பாண்டி நாடும், கல்வியறிவு ஒழுக்கம் கொடை முதலிய வைகளால் நிறையப் பெற்ற வேளாளர்கள் வாழ்கிறபடியால் தொண்டை நாடுஞ் சிறந்து விளங்குகின்றன என்னுங் கருத்தை யமைத்து;

"வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்துப்-பூழியர் கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர்
[வயற்றொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து"

என்னும் பாடலைப் பாடினார்.

[நாடுகளைப் புகழ்ந்தது]

---

771. நாந்தகன் கதை

நாந்தகன் என்பவன் முன்னாளில் சோழவள நாட்டில் உறையூரில் இருந்து அரசுபுரிந்த சோழ மன்னர்களில் ஒருவன். இவனிடம் போராண்மையும் படைவலியும் நன்கு அமைந்திருந்தன. எங்காவது சென்று அடிக்கடி போரிட்டு வெற்றிக் கொடி நாட்டிக் கொண்டேயிருப்பான். "மற்ற வர்களோடு மாறு கொண்டு பகைத்து வீறு கொண்டு போரிட்டுக் கொண்டிருப்பதே எனக்கு இனிமையான

பொழுது போக்காம்" என்று இவன் அடிக்கடி கூறிக் கொண்டிருப்பான்.

அந்நாளில் மதுரையில் சுந்தரேச பாதசேகரன் என்னும் பாண்டிய மன்னன் அரசுபுரிந்து கொண்டிருந்தான். அவன் தன்னுடைய படையைப் பெருக்கிப் போர்செய்து கொண்டிருத்தலே பொழுது போக்கு என்னும் கொள்கையுடையவனல்லன். இறைவன் அடிக்கே அன்பு செய்து அப் பரமன் திருவடித் தொண்டுகளையே புரிந்து கொண்டிருந்தான். அவனிடம் பொரும்படை பெரும்படையாக இல்லையென்பது இவனுக்குத் தெரிந்தது அவனோடு போரிட்டு அவனைத் தோற்கடித்தல் நமக்கு மிக இனிமை பயப்பதாம் என்று எண்ணினான். படையைத் திரட்டிக்கொண்டு அவனோடு போருக்குச் சென்றான். மதுரைக் கடவுளுடைய மலரடிகளையே துணையாக நம்பிய அவன் தன்னுடைய சிறு படையைத் திரட்டிக் கொண்டு வந்து எதிர்த்தான். மதுரைக் கடவுள் பாண்டியனுக்குத் துணையாக வந்து நாந்தகச் சோழனை விரட்டினார். பிறகு மடு ஒன்றில் வீழ்ந்து மடியுமாறு செய்தார். பகைமையில் மிகுதல் இனிதாம் என்பவனுடைய வாழ்க்கை குறைதலும் கெட்டொழிதலும் மிக நெருங்கிய செயல்களாம் என்பது இவனிடம் நன்கு விளங்கியது.

[பகையில் மிகுந்தால் குன்றலுங் கெடலும் விரைந்து நிகழ்வனவாம்]

---

772. நாமம்போட்ட பிள்ளையார் கதை

ஒரு நாள் காளமேகப் புலவர் திருவரங்கத்துக்குச் சென்றிருந்தார். வைணவராக இருந்த காளமேகப் புலவர் சைவராகியது சிலருக்குப் பிடிக்காமல் இருந்தது. ஆகவே அவர்கள் ஒருநாள் ஓரிடத்தில் இருந்த ஒரு பிள்ளையாருக்குப் பட்டைநாமஞ் சார்த்தினர். பிறகு காளமேகப் புலவரை அழைத்து, "நீர் சைவராகப்போய் விட்டீரே இதோ இருக்கிற இந்தப் பிள்ளையாரைப் பாரும், இவர் திருமாலே மெய்க் கடவுள் என்றுணர்ந்து நாமம் போட்டுக் கொண்

டிருக்கிறார்'' என்று கூறினர்கள். இதனைக் கேட்ட காள மேகப்புலவர் சினங் கொண்டார். ''காரணம் அதுவன்று; தம்முடைய தந்தை பிறவாமலும் இறவாமலும் என்றும் ஒரே தன்மையாக இருக்கிறபடியாலும் தன் மாமனுகிய திருமால் அடிக்கடி பிறந்து பிறந்து இறக்கிறபடியாலும் தன் மாமனுடைய காணியாட்சியை அவன் இறக்கும்பொழுது கைப்பற்றிக் கொள்வதற்காக வந்திருக்கிறார்'' என்னும் பொருளை அமைத்து,

> ''தந்தை பிறந்திறவாத் தன்மையினுல் தன் மாமன்
> வந்து பிறந்திறக்கும் வண்மையினுல்—முந்தொருநாள்
> வீணிக்கு வேளை எரித்தான் மகன்மாமன்
> காணிக்கு வந்திருந்தான் காண்''

என்னுஞ் செய்யுளைப் பாடினர். காளமேகப் புலவருடைய வாயைக் கிளறிய வைணவர்கள் நாணமடைந்து சென்றனர்.

[வீணைகப் பழிப்புத்தேடிக் கொண்டது]

---

773. நாய்க்கட்டம் எடுத்த கதை

வரகுணபாண்டியன் ஒரு நாள் மருதவாணரைப் போற்றி வழிபடுவதற்குத் திருவிடைமருதூரையடைந்தான். இரவனைப் போற்றி வணங்கிக்கொண்டு வெளியே வந்து கோயிலை வலம்வரத் தொடங்கினன். கோயிலின் திருமுற்றத்தில் ஒரு நாய் மலங்கழித்துச் சென்றிருந்தது. அதனைக் கண்ட பாண்டியன் இதனை எவரேனும் நான் முதல் முறைவலம் வருவதற்குள் அப்புறப்படுத்திவிட்டால் என்னுட்டில் கால் பங்கு தருவேன் என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டு சென்றனன். வலத்தை முடித்து இரண்டாம் முறை தொடங்குகையில் பார்த்தால் அம்மலம் அப்படியே கிடந்தது. நான் இரண்டாம் முறை வலத்தை முடிப்பதற்குள் எவரேனும் இம்மலத்தை அகற்றினுல் என் நாட்டில் அரைப்பங்கு கொடுப்பேன் என்று மனதில் எண்ணமிட்டுக் கொண்டு சென்றனன். இரண்டாம் வலத்தை

முடித்து வருகையிலும் அம்மலம் அப்படியே கிடந்தது. மூன்றும் வலத்தை முடிப்பதற்குள் இதனை அப்புறப் படுத்துபவர்களுக்கு என் நாட்டில் முக்கால் பங்கு கொடுப் பேன் என்று எண்ணிக் கொண்டு சென்றான். மூன்றும் வலத்தை முடித்து வருகையிலும் அம்மலம் அப்படியே கிடந்தது. நாடு முழுவதும் எனக்கே உரியதாகட்டும். நானே இதனை அப்புறப்படுத்துகிறேன் என்று அரசனே நாயின் மலத்தை எடுத்துக்கொண்டு போய் வெளியே எறிந்தான்.

"கோயின் முற்றத்து மீமிசைக் கிடப்ப
வாய்த்த தென்று நாய்க் கட்டமெடுத்தும்"

[வரகுணதேவர்] (திருவிடைமருதூர் மும்மணிக் கோவை)

---

774. நாரதர் கதை

இவர் நான்முகனுடைய வழித்தோன்றல் என்பர். வெகு காலம் பெய்யாமலிருந்த மழை இவர் பிறந்தவுடனே பெய்ததாம். அதனால் இவருக்கு நாரதர் என்று பெயராம். நாரம் என்றால் நீர் என்று பொருள். இவர் வீணை பாடுவதில் வல்லவர். இவருடைய வீணைக்கு மகதி என்று பெயர். இவர் இசை நூல் ஒன்றும் இயற்றியிருக்கிறார் என்று கூறுவர்.

இவர் நெடுங் காலந் தவஞ் செய்து முக்கால நிகழ்ச் சிகளையும் உணர்ந்து கொள்ளும் ஆற்றல் பெற்றிருந்தார். எல்லா வகையான அவாக்களையும் ஒழித்து எதனிலும் பற்றில்லாதவராக விளங்கினர். ஓரிடத்திலும் நிலையாகத் தங்கமாட்டார். மண்ணகம் விண்ணகம் எங்கும் கணத் திற்குக் கணஞ் சென்று கொண்டிருப்பார். எவ்வகையான பற்றும் அற்று விளங்கிய இவர் இறுதியில் வீடுபேற்றை யடைந்தார்.

பற்றற்றவர் என்று கூறப்படுவோர் அவா அற்றவரே; அவா அருத மற்றவர் அவ்வளவாகப் பற்று அற்றவர் அல்லர் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது.

[பற்றற்றவர் அவா அற்றவர்]

---

775. நாரதர் குடும்பச் சுமையறிந்த கதை

ஒரு காலத்தில் நாரதர் திருமாலைக் கண்டு வழிபடச் சென்றார். தாம் பிரமவிருடி யென்றும் மெய்யறிவு கைவரப் பெற்றவரென்றுஞ் செருக்குக் கொண்டு சிலமொழிகள் கூறினர். திருமால் தம்முடைய மாயையை எவராலுங் கடக்க முடியாதென்பதை நாரதருக்குப் புலப்படுத்த வேண்டுமென்று திருவுளங்கொண்டார். அங்கு அண்மையில் இருந்த தடாகம் ஒன்றில் நீராடி வருமாறு முனிவர்க்குக் கட்டளையிட்டார். நாரதர் தமது வீணையைக் கரையில் வைத்து விட்டுக் குளத்தில் இறங்கி மூழ்கினர். அவ்வளவில் சிறந்த பெண் வடிவத்தையடைந்தார். திருமால் நாரதருடைய யாழை எடுத்துக் கொண்டு மறைந்துவிட்டார். பெண் வடிவடைந்த நாரதர் தமது பழைய நிலையை அடியோடு மறந்துவிட்டார். நாரதப்பெண் கரையிலேறி நின்றபொழுது ஓர் அரசன் அவளைக் கண்டான். அவளைத் தன்னுடைய அரண்மனைக்கு அழைத்துச் சென்று மணம் புரிந்துகொண்டான். அவளிடம் பல பிள்ளைகளைப் பெற்றான். இதனால் நாரதப்பெண்ணுக்குக் குடும்பச் சுமையும் கவலையும் மிகுதிப்பட்டன. அதனால் அவள் மிகுதியும் வருந்தியிருந்தாள். திருமால் நாரதப்பெண்ணுக்குப் பழைய நிலைமையைக் கொடுக்க எண்ணினர். ஒரு கிழவடிவங் கொண்டு நாரதப்பெண்ணிடஞ் சென்றார். பக்கத்தில் இருந்த ஒரு குளத்தில் முழுகிவருமாறு கூறினர். நாரதப் பெண் அவ்வாறே மூழ்கிய அளவில் பழைய நாரத வடிவம் பெற்றாள். திருமால் தாம் எடுத்துச் சென்ற யாழைக் கொண்டு வந்து கரையில் வைத்தார்; கரையேறிய நாரதருக்கு நடந்ததைக் கூறினர். அவருடைய மனதைத் தெளிவித்தார்.

[நாரதர் குடும்பச்சுமை]

---

776. நாரதர் சுற்றித் திரியநேர்ந்த கதை

தக்கன் வேதவல்லி என்பவளை மணந்தான்; ஆயிரம் பிள்ளைகளைப் பெற்றான். அவர்களைப் பார்த்து, "நீங்கள் சிவபிரானைக் குறித்துத் தவஞ் செய்து படைப்புத்தொழில் செய்வதற்கு வரம் பெற்று வாருங்கள்" என்று கட்டளை யிட்டு அனுப்பினான். அவர்கள் அவ்வாறே சென்று தவஞ் செய்தார்கள். நாரதர் அங்குச் சென்று அவர்களுக்கு மெய் யறிவு வழியை உரைத்தருளினார். அதனால் அவர்கள் படைப் புத்தொழிலில் வெறுப்புக்கொண்டு வீடு பேற்று வழியை நாடினார்கள். இதனையறிந்த தக்கன் மறுபடியும் ஆயிரம் பிள்ளைகளைப் பெற்று முன் போலவே தவஞ்செய்ய அனுப்பி னான். நாரதர் முன்போலவே செய்தார். இதனால் தக்கன் மிகுந்த சினமடைந்தான். இவ்வுலகில் எப்பொழுது பார்த்தா லும் சுற்றித்திரிந்து அலைந்துகொண்டிருக்குமாறு நாரதருக்கு வசவுரை (சாபம்) வழங்கினான். இதனால் நாரதர் ஓரிடத்தில் நிலையாக இராமல் எப்பொழுதும் அலைந்து திரியும்படியான நிலையை அடைந்தார்.

[நாரதர் வசவுரை பெற்றது]

---

777. நாரைக்கு முத்தி கொடுத்த கதை

பாண்டிவள நாட்டில் மதுரைக்குத் தெற்குத் திக்கில் ஒரு தாமரைத் தடாகம் இருந்தது. ஒரு நாரை அத்தடாகத் தில் உள்ள மீன்களைத் தின்றுகொண்டு வாழ்ந்திருந்தது. அத் தடாகம் வற்றிப்போன பிறகு நாரை ஒரு காட்டுக்குப்போய் அங்கிருந்த தடாகத்தில் மீனையுண்ணத் தொடங்கியது. அக் காட்டில் முனிவர்கள் தவஞ் செய்திருந்தார்கள். அவர்கள் அக்குளத்தில் நீராடும் பொழுது மீன்கள் அம்முனிவர்க ளுடைய சடை முதலியவைகளிலே துள்ளித்திரிந்தன. அவை களைக் கண்ட நாரை முனிவர்களின் உடலைத் தீண்ட நற்ற வஞ் செய்த மீன்களை உண்ணக் கூடாது என்று இரையை வெறுத்தது. பிறகு முனிவர்கள் படித்த மதுரைப் புராணத் தைக் கேட்டு மதுரையின் பெருமையை உணர்ந்தது. மதுரையை அடைந்து பொற்றாமரையில் நீராடிச் சோமசுந்

தரக் கடவுளைப் போற்றி வழிபட்டுக்கொண்டிருந்தது. மதுரைக் கடவுள் நாரைக்குக் காட்சி கொடுத்து அருளுரை வழங்கினர். பொற்றுமரையில் மீன்களோ பிற நீர்வாழ் உயிர்களோ இல்லாமற் செய்தருள வேண்டும் என்றும் அவ் வாறிருந்தால் அதனைத் தன்னுடைய குலம் உண்டு தீவினையை அடைய நேரிடும் என்றும் வேண்டிக்கொண்டது. சோமசுந்தரக் கடவுளும் அவ்வாறே அருள் புரிந்தார். இறைவனைப் போற்றிக் கொண்டிருந்த நாரை பிறகு இறவாக் கதியை எய்தியது.

[நாரைக்கு முத்தி கொடுத்தது] (திருவிளையாடற் புராணம்)

---

778. நார்முடிச் சேரலன் கதை

நார்முடிச் சேரலன் சேர மன்னர்களில் ஒருவன். உறுதி ஊக்கம் முதலிய உயர் குணங்கள் இவன்பால் ஒன்றி யிருந்தன. இவன் அரசாளும் பருவத்தை யடைந்து முடி சூடத் தொடங்கினன். இவனுடைய பங்காளிகள் மணி முடியைக் கவர்ந்து மறைத்துக்கொண்டனர். முடிசூடும் வேளை நெருங்கியது.

முடி சூட்டுதற்கு யாது செய்வதென அனைவரும் கவலை யுற்றனர். ஊக்கமுடைய இவ்விளவரசன் சிறிதும் ஏக்க மடையவில்லை. ஆக்கமடைதற்குரிய நெறியை ஆராய்ந்து இவன் களங்காய்கனைக் கண்ணியாகத் தொடுத்தான். நாரி னால் முடியொன்று செய்தான். எண்ணிய வேளையில் முடி சூடிக் கொண்டான். இவனுடைய செயலைக் கண்டோர் இவனுக்குக் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலன் என்று நீண்ட பெயர் தந்தனர். உடையர் என்று ஒருவரைச் சொல்ல வேண்டுமாயின் அவர்கள் ஊக்கமுடையராக இருத்தல் வேண்டும். அவ்வாறு ஊக்கமில்லாதவர்கள் ஆக்கமுடையவர்களாக இருந்தாலும் அவர்கள் பொருளுடை யவர்களோடுசேர்த்து எண்ணப்படமாட்டார்கள் என்பது இவனிடம் நன்கு பெறப்பட்டது.

[ஊக்கமுடைமையே ஆக்கமுடைமை]

---

779. நாவுக்கரசர் நஞ்சுண்ட கதை

திருநாவுக்கரசர் சமண சமயத்திலிருந்து சைவ சமயத் திற்குச் சென்றபடியால் அவர்மீது சினங்கொண்ட சமணர்கள் நாவுக்கரசரைக் கொல்லப் பலவழிகளிலும் முயன்றனர். ஒரு முறை நஞ்சு கலந்த உணவினை நாவுக்கரசருக்குக் கொடுக்க வேண்டுமென்று பல்லவ மன்னனிடம் பகர்ந்தனர். அவனும் "அவ்வாறே செய்யுங்கள்" என்று அறைந்தனன். சமணர்கள் நஞ்சு கலந்த பாற்சோற்றை நாவுக்கரசருக்கு நல்கினர். நாவுக்கரசர், நஞ்சினையுண்ட நம்பனடியை நண்ணி யுள்ளமையால் அந் நச்சுணவு எத்தகைய தீமையையுஞ் செய்யவில்லை. அவர் அதனை இனிதுண்டு எத்தகைய மாறு பாடும் இல்லாமல் இனிதிருந்தார் சமணர்கள் தங்கள் வஞ்சகம் பலிக்கவில்லையே என்று நெஞ்சங் கலங்கி வருந்தினர்.

[நாவுக்கரசர்]

(பெரிய புராணம்)

---

780. நானாவாவென்ற கதை

இலங்கையில் இராவணனுக்கும் இராமபிரானுக்கும் போர் மூண்டது. இராமபிரான் இராவணனுடைய படைக் கலங்களை அழித்துத் தொலைத்துவிட்டார். அச்சமயத்தில் இராவணன் வெறுங்கையனாக நின்றான். படைக்கலங்கள் எதுவுமின்றி வெறுங்கையனாக நிற்கும் இராவணனைக் கொலைபுரிவது அற மாகமாட்டாது. இதனைத் திருவுளத்தில் கொண்ட இராம பிரான் இராவணனைப் பார்த்து, "வெறுங் கையனாக நிற்கும் நின்னைக் கொல்லுதல் எனக்குத் தக்கதன்று. ஆகவே நீ இன்றுபோ நாளைக்குப் படையுடன் போருக்கு வா" என்று கூறினர். மறுநாள் போருக்கு வந்த இராவணன் இராமரால் போரிற் கொலை செய்யப்பட்டான்.

"வேனாவா வென்றேன் விடைபோலக் கொல்கைக்கு
நானாவா வென்னும் நயனத்தாள்"

[இராமபிரான் அருள்]

(திருவாரூர் உலா)

---

781. நான்கு கோடிக்குப் பாடிய கதை

ஒரு புலவன் ஓர் அரசனிடம் பரிசு பெறுவதற்குச் சென்றான். அப்புலவன் நல்ல அறிவுள்ளவனு அல்லது போலிப் புலவனு என்று அரசன் ஆராய்ந்து பார்க்கவெண்ணினான். வந்த புலவனைப் பார்த்து, "நீர் இன்று பொழுது போவதற்குள் நான்கு கோடிப் பாடல்கள் பாடிக்கொண்டுவர வேண்டும். அவ்வாறு பாடிக்கொண்டு வந்தால் நல்ல பரிசு பெற்றுச் செல்லலாம். இன்றேல் உம்முடைய தலை போய்விடும்" என்று சொன்னான்.

அரசனுடைய உரைகளைக் கேட்ட புலவனுக்கு உயிர் அப்பொழுதே போய்விட்டது. இன்று மாலைக்குள்ளாவது நான்குகோடிப் பாடல்களாவது; இது யாரால் முடியும்? பொழுது போவதற்குள் ஆயிரம் பாடல்கள் பாடுவதென்றால் கூட முடியாதே; அவ்வாறுக நான்கு கோடிப் பாடல்களை எவ்வாறு பாடுவது என்று எண்ணமிட்டுக் கொண்டே சென்றான். உடனே வேறு ஊரை நோக்கி ஓடிப்போவது தான் நல்லது என்று முடிவு செய்தான்.

இச்சமயத்தில் வழிபடு கடவுளே தனக்கு முன்னால் தோன்றியதுபோல் ஔவையார் அப்புலவனுக்கு முன்னால் வந்தார். ஔவையாரைக் கண்டவுடன் அப்புலவன் மகிழ்ச்சியடைந்தான். ஔவையாரைப் பார்த்து அரசனுடைய அவையிலே நிகழ்ந்ததைக் கூறி வருந்தினான். இதனைக் கேட்ட ஔவையார் அப்புலவனைப் பார்த்து நகைத்தார். "இதற்குத்தானு வருந்துகிறாய்? நான்கு கோடிப் பாடல்கள் அல்ல. நாற்பது கோடிப் பாடல்கள் கூடச் சிறிது நேரத்திற்குள் பாடலாமே நான் சொல்லுகிறேன் எழுதிக்கொள்" என்றார். போலிப் புலவன் எழுத்தாணியைக் கையில் எடுத்துக்கொண்டு எழுதத் தொடங்கினான்; ஔவையார்,

"மதியாதார் முற்றம் மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி பெறும்.
உண்ணீருண் ணீரென் றுபசரியார் தம்மனையில்
உண்ணுமை கோடி பெறும்."

" கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்.
கோடானு கோடி கொடுப்பினுந் தன்னுடைநாக்
கோடாமை கோடி பெறும்"

என்று பாடினர். எழுதிக் கொண்ட புலவன் உடனே திரும்பிச் சென்று அரசனிடம் பாடலைக் கொடுத்தான். அரசன் தக்கவாறு நன்கொடை கொடுத்து அனுப்பினன்.

[நான்கு கோடிப் பாடல்கள்] (ஔவையார் வரலாறு).

---

782. நான்முகம் பெற்ற கதை

படைப்புத் தொழிலைச் செய்பவனுகிய பிரமனுக்கு முதலில் ஒரு தலைதான் இருந்தது. பிரமன் திலோத்தமை என்னும் அழகிய பெண்ணைப் படைத்தான். அவளுடைய அழகைக் கண்டு அவள்மீது மையல் கொண்டான். அவள் சென்ற திக்கை நோக்கினன். அவள் வேருெரு திக்கு நோக்கிச் சென்ருள். நான்முகன் அவளைப் பார்க்க விரும்பி அப்பக்கத்திலும் ஒரு தலையைப் படைத்துக்கொண்டான். இவ்வாறு அவள் நான்கு திக்கினுஞ் செல்லவே நான்முகன் நான்கு பக்கங்களினும் முகத்தைப் படைத்துக் கொண்டு நான்முகன் ஆயினன்.

[நான்முகனைனது]

---

783. நான்முகனுடைய தலையை அறுத்த கதை

ஒரு காலத்தில் நான்முகன் தானே முதற் கடவுள் என்று மிகுந்த செருக்குற்றிருந்தான். சிவபெருமான் தாமே முதற் கடவுள் என்று நான்முகனுக்கு உணர்த்த விரும்பினர்.

சிறந்த வடிவத்தோடு நான்முகன் எதிரில் தோன்றினர். நான்முகனுடைய ஐந்தாவது தலை "எனது நுதலில் இருந்து தோன்றிய நீயோ முதல்வன்" என்று கூறிப் பழித்தது. அவ் வளவிற் சிவபெருமான் தம்முடைய கூருன வைரவ மூர்த்தியை நோக்கியருளினர். வைரவ மூர்த்தி தமது இடக்கை விரலின் நகநுனியால் அவ்வைந்தாவது தலையைக் கொய்து விட்டார். அத்தலை அப்படியே அவருடைய கையில் ஒட்டிக் கொண்டது. சிவபெருமான் அறநெறியை உலகத்தவர் அறிந்து கடைப் பிடிக்குமாறு தாமும் கடைப் பிடித்துக் காட்ட எண்ணினர். வைரவ மூர்த்தியைப் பார்த்து, "இத்தீவினை தீர நீ ஐயமேற்க வேண்டும்" என்று கூறினர். வைரவர் பல சிவப்பதிகட்கும் பல காலஞ்சென்று ஐயமேற்றுக் கொண்டு திரிந்தார். பிறகு காசியை அடைந்த பொழுது அத்தலை அவருடைய கையை விட்டு நீங்கியது.

"தடக்கையுகிர் வாளா லறுத்தது நான்முகன் சென்னி"

[நான்முகன் தலையிழந்தது] (திருக்கருவைக் கலித்துறையந் தாதி

---

784. நான்முகனைச் சிறையிட்ட கதை

முருகக் கடவுள் திருக்கயிலையில் முதற்கோபுரத்தில் தம் துணைவர்களோடு எழுந்தருளி யிருந்தார். அப்பொழுது நான்முகன் தேவர்களோடு சிவபெருமானை வணங்குதற்குச் சென்றனன். அவன் முருகக் கடவுளைக் கண்டான். கீழே விழுந்து எண்வகை உறுப்புக்களும் நிலத்தில் தோயுமாறு வணங்கவில்லை. இரண்டு கைகளையுங் குவித்துக் கும்பிட்டு விட்டுச் சென்றனன். முருகக் கடவுள் நான்முகனை, "இங்கே வா" என்று கூப்பிட்டார். அவன் வந்தான். நீ என்ன தொழில் செய்கிறாய்?" என்று உசாவினர். "நான் படைப்புத் தொழில் செய்கிறேன்" என்றனன் நான்முகன். நல்லது, "மறை வருமோ?" என்று கேட்டார் முருகக் கடவுள். "வரும்" என்று கூறிவிட்டு மறையை ஓதத் தொடங்கினர். முதலில் "ஓம்" என்று சொன்னர். முருகக் கடவுள் "ஓம்" என்பதற்குப் பொருள் என்ன?" என்று உசாவினர். நான்முகன் பொருள்கூற முடியாமல் திகைத்தான். "படைப்புத்

தொழில் செய்வது இப்படித்தானு?" என்று கேட்டு நான் முகனுடைய நான்கு தலைகளுங் குலுங்குமாறு குட்டினார். தம்முடைய தொண்டர்களைப் பார்த்து, "இவனைச் சிறையி லடையுங்கள்" என்று கூறினார். அவர்களும் அவ்வாறே நான்முகனைச் சிறையில் அடைத்தார்கள். முருகக் கடவுள் படைப்புத் தொழிலைத் தாமே செய்தார்.

[நான்முகன் சிறைப்பட்டது] (கந்தபுராணம்)

---

785. நான்முகன் அருள்பெற்ற கதை

முன்னொரு கற்பத்தில் நான்முகனவன் மூன்றுலகங்களை யும் படைத்துத் தானே பரமனென்று ஆணவங் கொண்டான். சிவபெருமானை மறந்து எல்லாப் பொருள்களையும் படைக்கத் தொடங்கியபடியால் அவை பெருகவில்லை. அதனால் மிகவும் வருந்திநின்றான். அப்பொழுது திருமால் வந்து, "எமதுமுதல்வ னாகிய சிவபெருமானை மறந்தமையால் உன்னுடைய படைப் புத் தொழில் பெருகவில்லை. ஆகவே இனியேனுஞ் சிவ பெருமானுடைய திருவருளைப் பெறுதற்குத் தவம்புரிக" என்று கூறினார்.

நான்முகன் திருமாலின் கட்டளைப்படியே தவத்தைச் செய்தான். ஆயினுஞ் சிவபெருமான் வெளிப்படவில்லை. அதனால் வருந்தியழுதான். அப்பொழுது சிந்திய கண்ணீர்த் துளிகள் பிசாசுகளாகி நெருங்கின. அதனைக்கண்டு இறந்த வன் போல் மூர்ச்சித்துக் கிடந்தான். அப்போது சிவபெரு மான் நான்முகனுடைய கனவில் தோன்றி, "உன்னையே பரமென்று நீ மதித்தமையால் படைப்புத் தொழில் உனக்குக் கைகூடாமற் போய் விட்டது. அது கைகூடும்படி நமது பதத்திலுள்ள உருத்திர கணத்தை அனுப்புகிறோம்" என்று கூறி மறைந்தார். நான்முகன் கனவு தெளிந்தெழுந்தான். தல்லொழுக்கம் பூண்டு இறைவனைப் போற்றினான். இறைவ

னுடைய திருவருளால் பதினெரு உருத்திரர்கள் தோன்றி நான்முகனுடைய மயக்கொழித்து அருள்புரிந்தார்கள்.

[நான்முகன் அருள் பெற்றது] (காஞ்சிப் புராணம்)

---

786. நான்முகன் எழுத்தை அழிக்க முடியாத கதை

முன்னாளில் சேது என்னும் பெயருடைய மன்னன் ஒருவன் இருந்தான். அவனுக்கு மகள் ஒருத்தி பிறந்து வளர்ந்து பருவமடைந்திருந்தாள். அவனோ அரசன் தன்னுடைய தமக்கை மகனுக்குத் திருமணஞ் செய்து கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்தான். அரசனுடைய மனைவியோ தன்னுடைய தமையன் மகனுக்குத் திருமணஞ் செய்து கொடுக்கவேண்டு மென்றாள். இதனால் இருவருக்கும் போராட்டம் மிகுதிப்படப் பெண் திருமணம் ஆகாமலே இருந்தாள்.

இச்செய்தியைத் திருமால் அறிந்தார். நான்முகனைப் பார்த்துச், "சேது மன்னனுடைய மகள் தந்தையால் குறிக்கப்படுகிறவனுக்கு மனைவியாவாளா? அல்லது தாயால் குறிக்கப்படுகிறவனுக்கு மனைவியாவாளா?" என்று உசாவினர். நான்முகன் திருமாலைப் பார்த்து, 'அவள் இரண்டு பேராலுங் குறிக்கப்படுகிறவர்களுக்கு மனைவியாக மாட்டாள். செக்கடியில் இருக்கிற முடவன் ஒருவனுக்கு மனைவியாவாள்" என்று கூறினார்.

இதனைக் கேட்ட திருமால், அரசனுடைய பெண் செக்கடியிற் கிடக்கிற முடவனுக்கு மனைவியாக வேண்டிய காரணம் என்ன? இதனுடைய உண்மையை அறிவோம் என்று முடிவு செய்தார். கருடனைக் கூப்பிட்டு இன்ன நாட்டிலே இன்ன ஊரிலே இன்ன இடத்திலே இருக்கிற முடவனை ஐந்து லட்சம் காதவழிக்கு அப்பாலுள்ள தீவிலே கொண்டுபோய் விட்டுவிட்டு வா என்று கட்டளை யிட்டார்.

திருமால் உரைப்படி கருடன் செக்கடியிற் கிடந்த முடவனைத் தீவிலே கொண்டு போய் விட்டு விட்டுத் திரும்பினன். அப்பொழுது முடவன் கருடனைப் பார்த்து, "நான் செக்கடியிலே கிடந்தேன். கண்டவர்கள் எளியவன் என்று இரங்கி ஏதோ கொடுத்ததைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். மக்கள் நடமாட்டம் இல்லாத இவ்விடத்திலே நீ என்னைக் கொண்டுவந்து போட்டு விட்டாய். இங்கு நான் உணவுக்கு என்ன செய்கிறது?" என்று கேட்டான். கருடன் "நான் உனக்கு இரை கொண்டுவந்து தருகிறேன்" என்று சொல்லிவிட்டு வந்தான்.

சேது மன்னனுடைய மனைவி, என்னுடைய பெண் எவ்வளவு காலத்திற்குத் திருமணம் ஆகாமல் இருப்பாள்? நம்முடைய கணவன் என்ன செய்தாலும் செய்யட்டும் என்று எண்ணியவளாய் மகளை ஒரு மரப்பேழையில் வைத்துப் பெண்ணின் நன்கொடைப் பொருளாகச் சிறிது பொருளையும் வைத்து உணவுக்காகப் பலகாரங்களும் அதற் குள்ளேயே வைத்து, "என்னுடைய மகளை உன்னுடைய மகனுக்குத் திருமணஞ் செய்துகொள்" என்று செய்தியும் எழுதிப் பெட்டியில் வைத்து அனுப்பினள். அப்பெட்டி செக்கடி முடவனைக் கொண்டுபோய்த் தீவில் விட்டு வரும் கருடனுக்கு முன்னால் வந்தது. பலகாரமணத்தைக் கண்ட கருடன் பெட்டியில் பலகாரம் உள்ளது இதனைக் கொண்டு போய்த் தீவில் உள்ள முடவனுக்குக் கொடுக் கலாம் என்னும் எண்ணத்தோடு அப்பெட்டியைப் பறித்துக் கொண்டு போய்ச் செக்கடி முடவனிடம் வைத்து "இதில் பலகாரம் இருக்கிறது சாப்பிடுவாயாக" என்று கூறித் திருமாலிடஞ் சென்றான். திருமாலைப் பார்த்துத், "தங்களு டைய கட்டளைப்படி செய்து விட்டேன்" என்று கூறினன்.

பசியால் வருந்தியிருந்த முடவன் பெட்டியைத் திறந்து பார்த்தான். பெண்ணையும் பலகாரத்தையும கண்டு மிகுந்த வியப்படைந்தான். இவர்கள் இருவரைத்தவிர அத்தீவிலே வேறு மக்கள் போக்குவரத்தோ குடியிருப்போ இல்லை. தெய்வத் திருவருளால் ஓரிடத்தில் கூடிய அவர்கள் இரு வரும், இன்னும் யாது நடக்கிறதோ பார்ப்போம் என்று

எண்ணிக் கொண்டு பெட்டியில் இருந்த பலகாரத்தைச் சாப்பிட்டுக் கொண்டும் உரையாடியும் பொழுது போக்கி யிருந்தார்கள்.

திருமால் நான்முகனைப் பார்த்துச், "சேது மன்னனு டைய மகள் செக்கடி முடவனுக்கு மணவியாவாள் என்று கூறினையே அச்செய்தி யாதாயிற்று? செக்கடி முடவன் ஐந்து லட்சங் காதவழிக்கு அப்பாலே போய் விட்டான். நீ எழுதிய செய்தி மெய்யோ" என்று உசாவினர். நான்முகன் திருமாலைப் பார்த்து. "நான் எழுதியது தவ றுது. செக்கடி முடவன் தீவாந்தரம் போயிருந்தால் பெண்ணும் அங்கே போயிருப்பாள்" என்று கூறினன். திருமால் தம்முடைய அறிவுப் பார்வையால் பார்த்தார். செக்கடி முடவனோடு அரசனுடைய அருமைத் திருமகளும் அமர்ந்திருத்தலைக் கண்டார். நான்முகன் கூறிய செய்தி யைப்பற்றி மகிழ்ந்தார். முடவனையும் பெண்ணையுந் தம் மிடம் கொண்டு வரச் சொன்னர். செக்கடி முடவனைக் காமன் போல் கட்டழகுடையவனைச் செய்தார். தேவர் கோயெல்லாந் தருவித்து அவ்விடத்திலேயே மணஞ் செய்து வைத்துப் பிறகு சேது மன்னனிடம் அனுப்பிவைத் தார்.

"பெண்ணைவாழ்க் கைப்படுத்தச் சேதுமன்னன்
குறித்திடமும் பிசகி யந்தோ
கண்ணைர்பரி சோதனைக்குத் தப்பிவிதிப்
படிமுடவன் கைக்கொண் டானே"

"பண்ணுலவு புகழ்மேவும் செயங்கொண்டா
ரேமுவர் பாரித்தாலும்
எண்ணையத்தனைத் துடைத்திடலாம் எழுத்ததனைத்
துடைப்பவர்க ளில்லை தானே"

[ஊழ்] (செயங்கொண்டார் வழக்கம்)

787. நான்முகன் தில்லைக்கு வந்த கதை

நான்முகன் கங்கைக் கரையில் ஒரு வேள்வி செய்ய எண்ணினன். தில்லை வாழ் அந்தணர்களை அழைத்துக் கொண்டு வருமாறு நாரதரைத் தில்லைக்கு அனுப்பினன். நாரதர் தில்லையை அடைந்து தில்லைவாழ் அந்தணர்களை வேள்விக்கு வருமாறு அழைத்தார். அதற்குத் தில்லைவாழ் அந்தணர்கள், "நாங்கள் இங்கே கூத்தப்பிரானுடைய கூத்தைக் கண்டு மகிழ்ந்து பேரின்பக் கடலிற் படிந்து திளைத்தவர்களாக இருக்கிறோம். இதனைவிடச் சிறந்த பேறு ஒன்றும் உள்ளதோ? நாங்கள், "சிற்சபைபொலியத் திருநடம் புரியும் அற்புதக் கூத்தனின் அடியிணைகளை ஒரு நாளும் பிரிந்திருக்க மாட்டோம்" என்று கூறிவிட்டனர். நாரதர் சென்று இச்செய்தியை நான்முகனிடங் கூறினர். "தில்லைத்திருக்கூத்து அத்தகைய சிறப்புடையதா? அதனை நான் அறியாமற் போனேனே" என்று கூறி நான்முகன் தேவர்களோடு தில்லையை அடைந்து அம்பலவாணனது அடியிணைகளைப் பணிந்து மகிழ்ந்தான். பலநாள் தங்கிப் பூசித்து வழிபட்டான்.

"வேதத் தோன்முத லாகிய தேவர்கள்
பூசித் தேதொழ வாழ்புலி யூரினில்"

[தில்லை]

(திருப்புகழ்)

---

788. நிகும்பலை வேள்விக் கதை

இராமபிரானுக்கும் இராவணனுக்கும் போர் மூண்டது. அரக்கர்கள் வஞ்சகமாக வேலை செய்வதில் வல்லவர்கள். இராவணன் மகனுகிய இந்திரசித்து இராமபிரானுக்கும் அவருடைய படைக்கும் தளர்ச்சியை உண்டு பண்ண எண்ணினன். பொய்யாக ஒரு சீதையைத் தன்னுடைய மாயையினலே உண்டுசெய்தான். அந்த மாயா சீதையைப் பார்த்தால் சீதாபிராட்டியைப் போலவே இருக்கும். இந்திரசித்து அந்த மாயா சீதையைக் கொண்டு வந்து

அனுமார் முதலியோர் முன்னிலையில், இவள் பொருட்டுத் தானே நீங்கள் பெரும் போர் செய்கிறீர்கள். இதோ இவளை வெட்டிக் கொலை செய்கிறேன்; இனிமேல் என்ன செய்கிறீர்கள் பார்ப்போம்?'' என்று சொல்லி அப் பொய்ச் சீதையை வெட்டிக் கொலை செய்தான். '' அயோத்திக்குப் போய்அங்குள்ளவர்களையும் வெட்டிக் கொன்றுவிடுகிறேன் '' என்று சொல்லி அயோத்திக்குப் போகிறவனைப் போலப் போக்குக் காட்டி நிகும்பலை என்னுமிடத்திற்குப் போய் அங்கு ஒரு வேள்வியைச் செய்தான். மாயா சீதை கொலை செய்யப்பட்டதை யறிந்த இராமபிரான் உண்மையான சீதையே கொலை செய்யப்பட்டாள் என்று எண்ணி வருந்தினர். விபீடணன் வண்டு வடிவங் கொண்டு போய் எல்லா உண்மைகளையுந் தெரிந்து வந்து இராமபிரானுக் குணர்த்தினன். இராமபிரான் இலக்குமணரை அனுப்பினர். அவர் சென்று இந்திரசித்து நடத்திய நிகும்பலை வேள்வியை அழித்து விட்டார்.

'' கண்ணர்படை தனைச்செயிக்க இந்த்ரசித்து
நிகும்பலையைக் கருதிச் செய்தே
நண்ணியவேள் வியுமுடியும் தருணமதில்
இலக்குவன்போய் நாசஞ் செய்தான் ''

[நிகும்பலை வேள்வி] (செயங்கொண்டார் வழக்கம்)

---

789. நிமி கதை

நிமி என்பவன் கதிரவன் குலத்தில் இக்குவாகு என் பவனுக்கு மகனுகத் தோன்றினன். அரசச் செல்வத்தோடு ஆண்மையும் இவனிடத்தில் அமைந்து விளங்கியது. அரசாட்சியை அறமுறைப்படி செய்தான். வேள்வி ஒன்று செய்ய விரும்பிய இவன் அதற்குத் தலைமை தாங்கும்படி வசிட்டரை வேண்டிக் கொண்டான்.

வசிட்டர் தேவர்கோன் செய்யும் வேள்வி ஒன்றுக்குப் போய் விட்டு வந்து விடுகிறேன் என்று புகன்று அங்குச் சென்றார். நிமி அதுவரை பொறுத்திருக்க வில்லை. கௌதமரைத் தலைவராக வைத்துத் தான் செய்ய எண்ணிய

வேள்வியைச் செய்து முடித்தான். சில நாள் உறக்கமின்றி யிருந்தமையால் பிறகு படுத்து உறங்கிக்கொண்டிருந்தான்.

விண்ணகஞ் சென்ற வசிட்டர் மண்ணகந்திரும்பினார். நிகழ்ந்ததை உணர்ந்தார்; "நான் வருவதற்கு முன் வேள் வியை வேறொருவனைக் கொண்டு நடத்தினான். நான் வந்த பிறகும் என்னை வந்து கண்டிலன். இவ்வாறு என்னை இழிவுபடுத்திய இவன் இறந்து ஒழிக" என்று சாபமிட்டார்.

அமைச்சர்கள் அரசனை எழுப்பினர். அவன் எழுந்து நிகழ்ந்ததை அறிந்தான். "யான் எத்தகைய தவறுஞ் செய் யாதிருக்க எனக்குச் சாபமிட்டீர்; இச்சாபம் உம்மையுஞ் சேர்க" என்று அரசன் எதிர் சாபங் கொடுத்தான். இரு வரும் இறந்தனர். பலவாறு தொல்லைகட்கு உள்ளாயினர்.

தான் ஒன்றுஞ் செய்யாதிருக்கத் தனக்குத் தீங்கு செய்தவர்க்கும் துன்பமானவற்றைச் செய்தல் செய்த பிறகு தப்பமுடியாத துன்பத்தையே கொடுக்கும் என்று அறநூ லோர் கூறியது இவ்விருவர்பாலும் நன்கு பொருந்தியது.

[துன்பம் துன்பமளிக்கும்] (இராமாயணம்)

---

790. நிருகன் கதை

நிருகன் என்பவன் கதிரவன் குலத்தில் தோன்றிய காவலர்களில் ஒருவன். கலையுணர் புலமையில் இவன் தலை சிறந்து நின்றான். அரசாட்சியைச் சிறிது காலம் நன்றாக நடத்தினான். பிறகு சிற்றின்பத்தில் முற்றிய பற்றுடைய வனானான். ஆட்சியை மறந்து காமக்களியாட்டத்திலேயே கருத்தைச் செலுத்தியிருந்தான். அரசாட்சி நன்கு நடை பெறவில்லை. நாட்டு மக்கள் வாட்ட முற்றனர். அமைச்சர்கள் தம்மனம்போனவாறு அரசு புரிந்தனர்.

அந்தணர் இருவர் ஆவின்பொருட்டு மாறுபட்டு அதனை இவன்பால் கூறும்பொருட்டு வந்தனர். பலநாள் காத்திருந் தும் அரசனைக் காணமுடியவில்லை. பார்ப்பார் அரசனைப் பாரார் ஆயினர். ஆவும் அவர்களோடு அடைந்திருந்தது.

எத்தனை நாட்கள் காத்திருக்க முடியும்? முடிவில்லாத சினம் மூண்டது மறையவர் இருவருக்கும். அரசனை ஓந்தியாமாறு வசவுரை வழங்கினர். வழக்கிற்கு மூலமாக நின்ற ஆவினை வழியே சென்ற ஒருவனுக்கு வழங்கி விட்டுத் தாம் தம் வழியே சென்றனர். அவ்வந்தணர்கள் மறையாற்றல் நிறையப் பெற்றவர்கள். ஆகவே அரசன் அவ்வந்தணர்களின் சாபவுரைப்படி ஓந்தியானான். நாட்டு மக்கள் மன்னனுக்கு நேர்ந்த இன்னலைக் கண்டு மனமறுகினர். நாடிமுறை செய்யா மன்னவன் கேடடைவான் என்பது இவன்பால் நன்கு விளங்கியது.

[முறை செய்யா அரசன் கேடடைவான்]

———

791. நீகன் கதை

நீகன் என்பவன் கதிரவ குல மன்னனாகிய சுகுணனை என்பவனுடைய மகன். இவனுக்குக் கிருட்டினராயன் எனவும் பெயர் வழங்கியது. இவன் தொண்டைவளநாட்டைத் தனக்கு உரிமையாகக் கொண்டு அரசு புரிந்திருந்தான். எல்லா நூல்களிலும் நல்ல தேர்ச்சியுள்ளவன். இவன் அரசாட்சி செய்து கொண்டிருக்கும் காலத்தில் சோமநாதன் என்னும் பெயருடைய மறையவன் ஒருவன் இவன்பால் வந்தான். இவனுடைய புகழை நன்குணர்ந்து இவன்பால் மதிப்புக் கொண்டிருந்த அவன் தான் பல திருவூர்களுக்கு இறைவழிபாட்டின் பொருட்டுச் சென்று வரவேண்டும் எனவும் தான் திரும்பி வரும் வரையிலும் தன் மனைவியையும் குழந்தையையும் பாதுகாத்துத் தரவேண்டும் எனவும் வேண்டிக் கொண்டான். இவன் 'சரி' என்று ஒப்புக் கொண்டான். இருவரையும் ஓர் இல்லில் வைத்து வேண்டிய உணவுப் பொருள்களை வழங்கினன். அவ்வில்லத்தை அடைத்துப் பூட்டி வைத்தான்.

திங்கள்கள் சில சென்றன. நீகன் அப்பார்ப்பனியை அடியோடு மறந்தே போயினன். அடைக்கலம் வைத்த மறையவன் திரும்பி வந்தான். நீகனுக்குப் பார்ப்பனியின் நினைவு வந்தது. விரைந்தோடி வீட்டைத் திறந்து பார்த்தான்.

பூட்டப்பட்ட வீட்டுக்குள் அகப்பட்டுக் கொண்ட பொலன் கொடியும் புதல்வனும் பொன்னுலகேகி விட்டனர். மன்னன் தன் மறதியை எண்ணி வருந்தினன். மறையவன் தன் மனைவியையும் குழந்தையையும் எண்ணி வருந்தினன். இச் செய்கையால் அரசனுடைய புகழ் அடியோடு மங்கிப்போய் விட்டது. ஒருவனுடைய அறிவை அவனுடைய வறுமை யழிப்பதைப்போல் ஒருவனுடைய புகழை மறதி யழித்து விடும் என்பதற்கு இவன் சரியான எடுத்துக்காட்டாக நின்றான்.

[புகழை மறதி அழிக்கும்]

---

792. நீரிலே நின்ற நேரிழையின் கதை

ஓர் அரசனுடைய மனைவி அரண்மனையில் ஊழியஞ் செய்து கொண்டிருந்த வலையன் ஒருவனிடங் காதல் கொண்டாள். அவனை அழைத்துக் கொண்டு வேறெங்கேனும் ஓடிப் போக லாம் என்று எண்ணினாள். தன்னுடைய எண்ணத்தை அவ் வலையனிடங் கூறினாள். அவனும் அதற்கு இணங்கினான். அரசி தன்னிடம் இருந்த விலையுயர்ந்த பொருள்களை யெடுத் துக்கொண்டாள். இருவரும் ஒருநாள் அதிகாலையில் வீட்டை விட்டுப் புறப்பட்டு ஒருவருக்குந் தெரியாமல் ஓடினார்கள். நான்கு நாழிகை வழி தொலை சென்றபின் ஆங்கொரு பேராறு குறுக்கிட்டது. அதில் தண்ணீர் கரைபுரண்டு ஓடிக்கொண் டிருந்தது.

அவ்விடத்தை யடைந்ததும் வலையன் இவளைத்தேடிக் கொண்டு அரண்மனையில் இருந்து ஆட்கள் வந்தால் தலை போய்விடும் என்றும், அவளிடம் உள்ள பொருள்களைக் கவர்ந்து கொண்டு அவளை அவ்விடத்திலேயே விட்டுவிட்டு ஓடிப்போவது நல்லதென்று முடிவும் செய்தான்.

அப்பெண்ணைப் பார்த்து, "இந்த ஆறு மிகுந்த ஆழ முடையது. உன்னுடைய அணிகலன்கள் பொருள்கள் முதலியவைகளைச் சேலையில் மூட்டையாக்கக் கட்டி என்னிடங்

கொடு. நான் அக்கரையிற் கொண்டுபோய் வைத்துவிட்டு வந்து உன்னையுந் தூக்கிக் கொண்டுபோய் அக்கரையிற் சேர்க்கிறேன்'' என்று கூறினான். அவன் கூறியதை மடந்தை நம்பினாள். ஆடையணிகலன்களை மூட்டையாகக் கட்டி அவனிடந் தந்தாள். அவன் அம்மூட்டையை எடுத்துக் கொண்டு அக்கரை சேர்ந்தவுடன் மிகு விரைவாக ஓடிப் போனான். காமக்காழ்ப்பு மிக்க காவலன் மனைவிக்கு இப் பொழுதுதான் உண்மை விளங்கியது. ஓடிச்சென்று யாரிட மேனுங் கூறலாமென்றால் இடையில் உடையுமில்லை. மார் பளவு தண்ணீரில் இறங்கி ஆற்றுக்குள் நின்று கொண்டிருந் தாள்.

அப்பொழுது ஒரு நரியானது ஊன் துண்டு ஒன்றைக் கவ்விக் கொண்டு அவ்விடத்திற்கு வந்தது. தண்ணீர் ஓரத்தில் இருந்து அதனைத் தின்று கொண்டிருந்தது. அப் பொழுது பெரிய கயல் ஒன்று தண்ணீரில் துள்ளியது. அக் கயலைப் பிடிக்க விரும்பிய நரி ஊன்துண்டைவிட்டு மீனைப் பிடிக்கத் திரும்பியது. அச்சமயத்தில் கழுகு ஒன்று பறந்து வந்து அவ்வூன்துண்டைப் பற்றிக் கொண்டு போய்விட்டது. நரி, மீனும் போய் ஊனும் போய் விழித்தது. இதனைப் பார்த்துக் கொண்டிருந்தாள் தண்ணீரில் நின்ற அரசி. அவள் நரியைப் பார்த்து, ''நரியே மீனுக்கு அவாக் கொண்டு ஊனையும் இழந்தாயன்றே?'' என்று கேட்டாள். இவளு டைய செய்கையை உணர்ந்து கொண்ட நரி, ''பெண்ணே உலகத்தில் தவறுகள் இல்லையா? நீ பெருமை பொருந்திய அரசனைக் கைவிட்டு வம்பனைப் பிடித்துக் கொண்ட தன்மை யைப்போலத்தான் இதுவும் இருக்கிறது'' என்று கூறியது.

''ஓரியே மீனுவந் தூனி முந்தையோ
நாரியே காண்பிழை நாட்டில் இல்லையோ
பாரிய கணவனைப் பழுது செய்துநீ
நீரிலே இருப்பது நினைமை யல்லவே''

''சம்புவே என்ன புத்தி சலந்தனின் மீனைநம்பி
வம்புறு விடக்கைப்போட்டு வானத்தைப் பார்ப்ப
தேனை

அம்பு விமாதே கேளாய் அரசகே அகல விட்டு
வம்பகேக் கைப் பிடித்த வாறுபோல் ஆயிற் றன்றே ''

[தன்பிழையுணராதவர்] (விவேகசிந்தாமணி)

---

793. நீலஅரக்கியை வென்ற கதை

விசுவாமித்திரர் தம்முடைய வேள்விக்கு அசுரர்கள் செய்த இடையூற்றைத் தவிர்ப்பதற்காகத் தசரத மன்னரிடம் போய்த் தமது குறையுரைத்து இராமரையும் இலக்குமணரையும் தம்முடன் அழைத்துக்கொண்டு சென்றார். மூவருஞ் சென்ற காலத்தில் தாடகை எதிர்ப்பட்டாள். இராமபிரான் அவள்மீது கருணையைச் செலுத்திக் கொன்றருளினர். பிறகு விசுவாமித்திரருடைய வேள்வியும் இடையூறில்லாமல் நடைபெற்றது.

'' நீல அரக்கியை வென்று ''

[தாடகை] (திருப்புகழ்)

---

794. நீலநக்கர் கதை

சாத்தமங்கை என்னும் ஊரில் மறையவர் குலத்திலே நீலநக்கர் தோன்றினர். சிவ வழிபாடு முதலியவைகளிற் சிறந்து விளங்கினர். ஒரு திருவாதிரையன்று பூசை முடித்தார். பிறகு அண்மையில் உள்ள அயவந்தி என்னும் சிவப்பதிக்குச் சென்று சிவபிரானுக்குப் பூசை புரிந்தார். அப்பொழுது ஒரு சிலந்தி இறைவன்மீது விழுந்தது. அதனைக் கண்டதும் நாயனார் மனைவியார் அஞ்சினர். வாயால் ஊதி அச் சிலந்தியை அப்புறப் படுத்தினர். மனைவியாருடைய செயல் வெறுக்கத் தக்கதாக நாயனருக்குத் தோன்றியது. எச்சில் பறக்குமாறு வாயால் ஊதியதற்காகத் தம்முடைய மனைவியைக் கண்டித்தார். ''உன்னைத் துறந்து விட்டேன்''

என்று கூறிவிட்டு வீட்டிற்குச் சென்றார். நாயனாருடைய மனைவியார் இல்லத்திற்குச் செல்லத் துணியாமல் அயவந்தி நாதனை மனதில் எண்ணிக் கொண்டு கோயிலிலேயே தங்கியிருந்தார்.

நீலநக்கர் உறங்கும்பொழுது கடவுள் அவருடைய கனவில் தோன்றினார். "உன்னுடைய மனைவி ஊதிய இடத்தைத் தவிர மற்றைய இடங்களில் கொப்புளத்தைப்பார்" என்று காட்டினார். நாயனார் தம்முடைய மனைவியின் சிவ அன்பை உள்ளத்தில் எண்ணி வியந்தார். காலையில் எழுந்து கோயிலுக்குச் சென்றார். தம்மை வந்து வணங்கிய மனைவியை இல்லத்திற்கு அழைத்துக் கொண்டு சென்றார். இறைவன் மெய்யன்புக்குக் கட்டுப்பட்டவன் என்பது இவ் வம்மையாரிடம் நன்கு விளங்கியது.

"பொறையார் தில்லை வாழ்முனிவர் புகலிப்பெருமான் சண்டீசர்
நிறையார் கலியார் பூசலியார் நீலநக்கன் நிகழ்ச் சோமன்
முறையார் ஞானத் திருவகவல் மொழிந்த கபாலர் முதலாய
மறையோர் எவரும் இமையோராய் வாழுஞ் சோழ மண்டலமே"

[நீலநக்கர்] (சோழமண்டல சதகம்)

---

795. நீறிட்டான் மதிலின் கதை

நீறிட்டான் மதில் என்பது திருவானைக்காக் கோவிலில் உள்ள நான்காவது மதில். இது மிகப் பெரியது. இம் மதில் கட்டப் பட்டபொழுது சிவபெருமான் அங்கு ஒரு சித்தராக எழுந்தருளினார். வேலைக்காரர்களுக்குத் திரு நீற்றையே கூலியாகக் கொடுத்தார். அக்கூலி வேலைக் காரர்கள் உண்மையாகப் பாடுபட்ட அளவுக்கு ஏற்பப் பொற்காசு ஆயிற்று. திருநீற்றையே கூலியாகக் கொடுத்த

காரணத்தால் அவ்வாறு கட்டப்பட்ட மதில் நீறிட்டான் மதில் எனவும், திருநீற்று மதில் எனவும் பெயர்களைப் பெற்றன. இம்மதிலை வலம் வருவோர் எல்லா மேன்மை களையும் எய்துவர்.

" அகிலகாரணர் விண்ணுஞர் பால் பூதியை அளித்து முகில்
சுலாவ நன் கிழைத்த மாமதில் "

" ஆழித்தேர் மறு கிற்பயில் மெய்த்திரு
நீறிட்டான் மதில் சுற்றிய பொற்றிரு
ஆனைக்காவினில்... ... ... "

[திருவானைக்கா மதில்] (திருப்புகழ்)

---

796. நீற்றறையிலிட்ட கதை

சமண சமயத்தைச் சார்ந்தொழுகிய திருநாவுக்கரசர் அச்சமயம் பொய்யென வுணர்ந்து சைவசமயத்தைத் தழுவி னர். இதனையுணர்ந்த சமணர்கள், அரசனிடம் போய் "நாவுக்கரசரைக் கொலைபுரிதல் வேண்டும்; இன்றேல் நம் முடைய சமயம் அழிந்தொழியும்" என்றனர். அரசன் நாவுக்கரசரைப் பிடித்துவரச் செய்தான். சமணர்களைப் பார்த்து, "இவரை எவ்வாறு கொலை புரியலாம்?" என்று உசாவினன். சமணர்கள் "நீற்றறையில் தள்ளலாம்" என்ற னர். அரசன் அவ்வாறே அப்பரை நீற்றறையில் தள்ளச் செய்தான். வெப்பம் மிகுந்த நீற்றறையில் நாவுக்கரசர் ஏழு நாள்வரை யிருந்தார். தேவாரப்பதிகம் பாடினர். நீற்றறை குளிர்ந்து இன்பப் பொருள்கள் அமைந்தவிடம் போலாகியது. அப்பர் எத்தகைய அல்லலும் இல்லாமல் இன்புற்றிருந்தார்.

[நீற்றறையில் இட்டது] (பெரிய புராணம்)

---

797. நெடுங்கிள்ளி கதை

இவன் சோழவள நாட்டில் உறையூரில் இருந்து அரசு புரிந்த சோழ மன்னர்களில் ஒருவன். இவன் பதற்றங் கொண்டு காரியங்களைச் செய்துவிட்டுப் பின்னர் உள்ளம் இரங்குவான். அமைவரிடமும் வன் சொல் பேசுவான். குற்ற உசாவல்களை நன்கு புரிய மாட்டான். குற்றவாளியாக ஒருவர் இருத்தல் கூடும் என்று தான் சிறிது உள்ளத்தில் எண்ணினாற் போதும் அவர்கட்குக் கடுமையான தண்டனை விதித்து விடுவான். சினமும் இவனிடம் அளவு கடந்திருந்தது.

'அந்நாளில் காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்து அரசு புரிந்து கொண்டிருந்த கிள்ளி வளவனுக்கும் இவனுக்கும் பகை மூண்டிருந்தது. இளந்தத்தன் என்னும் புலவன் ஒருவன் காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்து உறையூருக்கு வந்தான். அவன் தன் பகைவனுடைய ஒற்றனாக இருக்கக்கூடும் என்று உள்ளத்தில் எண்ணினான். யாதும் உசாவவில்லை. அவனைப் பிடித்துச் சிறையில் அடைக்கச் செய்தான். பிறகு கொன்று விடுவதற்காகவே சிறையில் அடைக்கச் செய்தான்.

கோவூர்கிழார் என்னும் புலவர் இச் செய்தியை உணர்ந்தார். விரைந்து வந்தார். அறவுரைகள் பலவற்றைக்கூறினார். இளந்தத்தனைச் சிறையிலிருந்து விடுவிக்குமாறு செய்தார். இச்செய்தியைக் கிள்ளிவளவன் உணர்ந்தான். இருவருக்கும் போர்மூண்டது. அப்போரில் இவன் தோல்வியடைந்து சிறுமைக்குள்ளானான். வன்சொற் பேசுதலும் அளவு கடந்த தண்டனையும் அரசனுடைய வலிமையைக் கெடுக்கும் படையாகும் என்பதை இவன் உலகிற் குணர்த்தினான்.

[கடுமொழியுங் கையிகந்த தண்டமும்]

798. நெடுஞ்செழியன் கதை

நெடுஞ்செழியன் என்பவன் மதுரையில் இருந்து அரசு புரிந்த பாண்டிய மன்னர்களில் ஒருவன். இவனுடைய ஆட்சிக் காலத்தில் பராசரன் என்னும் அந்தணன் ஒருவன் சேரமன்னனிடஞ் சென்று நன்கொடை பெற்று மீண்டான். திருத்தண்கால் என்னும் ஊரில் வரும் போது அந்தணச் சிறுவன் ஒருவன் அருமறையை முறைப்படி ஓதுவதைப் பராசரன் கேட்டு மகிழ்ந்தான். தான் பெற்ற நன்கொடைகளில் சிலவற்றை அவனிடம் நல்கிச் சென்றான்.

அந்தணச் சிறுவன் அவைகளைத் தந்தையிடம் தந்தான். தந்தையாகிய வார்த்திகன் அவைகளைப் பார்த்து மகிழ்ந்தான். அப்பொருள்கள் விலையேறப் பெற்றவை. பொருமை கொண்ட சிலர் வார்த்திகன் இவைகளைக் களவு செய்தான் என்று ஊர்க்காவலரிடம் உரைத்துச் சிறையில் அடைக்கச் செய்தனர். ஊர்க்காவலரும் அவ்வாறே செய்தனர். வார்த்திகன் மனைவி வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டாள். ஐயை கோயிலுக்குச் சென்று ஐயோ தெய்வமே! என முறையிட்டாள். கோயில் வழிபாட்டாளர் கோயிலுக்கு வந்தபோது கோயிலைத் திறக்கமுடியவில்லை. செய்தியை உணர்ந்த நெடுஞ்செழியன் நிகழ்ந்தவைகளை யறிந்தான். வார்த்திகனைச் சிறையிலிருந்து வெளிப்படுத்தினான். ஊர்க்காவலர் அறியாது செய்த குற்றத்திற்காக அவனை வணங்கிக் குற்றம் பொறுக்குமாறு வேண்டிக் கொண்டதுடன் இரண்டு ஊர்களை நன்கொடையாகவும் வழங்கினான். இச்செயலால் அரசனது செங்கோல் அனைவராலும் பாராட்டப் பெற்றது. அரசர்கட்கு நிலைத்த புகழைக் கொடுப்பது செங்கோன்மை. செங்கோன்மையின்றேல் புகழ் மூண்டாக மாட்டாது என்பது இம்மன்னனிடம் பெறப்பட்டது.

[செங்கோன்மையே புகழையளிக்கும்]

799. நெம்மேலித்தச்சன் கதை

சோழவள நாட்டில் நெம்மேலி என்னும் ஊரில் கருங் கற்பணி செய்யுந் தச்சன் ஒருவன் கம்பர் காலத்தில் வாழ்ந் திருந்தான். கம்பருக்குஞ் சோழனுக்கும் வம்பு மூண்டது. கம்பர் வேற்று நாடு செல்லப் புறப்பட்டார். அப்பொழுது குடும்பப் பாதுகாப்புக்காக நெல் வாங்கி வைத்து விட்டுச் செல்ல எண்ணினர். நெம்மேலித் தச்சன் செல்வச் சிறப் போடு வாழ்ந்திருந்தான். வினைபுலங்கள் அவனுக்கு மிகுதி யாக இருந்தமையால் நெல் வேண்டிய அளவு வைத் திருந்தான். குடும்பப் பாதுகாப்புக்கு நெல்வாங்கி வைத்து விட்டுப்போக வெண்ணிய கம்பர் நெம்மேலித் தச்சனிடஞ் சென்று அவனைப் புகழ்ந்து பாடினர். அவன் ஆயிரங் கல நெல் கொடுத்தான். கம்பர் அதனைத் தன்னுடைய குடும்பத்தாருக்கு அனுப்பிவிட்டுத் தாம் வேறு நாடு சென்றார்.

“ நிச்ச முறவே நெற்பயிராய் நீளுந் தமிழ்க்கு
நெம்மேலித்
தச்சன் பொலியா யிரக்கலநெல் தந்தா னுலகிற்
காதரவாய்
மெச்சு மவன தாண்மையினுல் வென்றே கொடியின்
விருதுகட்டி
வைச்ச கொடையின் திறமெளிதோ வளஞ்சேர்
சோழ மண்டலமே ”

(சோழமண்டல சதகம்)

[நெம்மேலித் தச்சன்]

---

800. நெல்லளித்த கதை

சுந்தரமூர்த்தியார் பரவைநாய்ச்சியாரோடு திருவா ரூரில் வாழ்ந்திருக்குங் காலத்தில் குண்டையூர்க் கிழவர் என்பவர் சுந்தரருக்குத் தவறாமல் நெல் அளித்து வந்தார். ஓராண்டு மழையில்லாத படியால் குண்டையூர்க்கிழவருக்கு

விளைச்சலில்லாமற் போய்விட்டது. அதனால் சுந்தரமூர்த்தியாருக்கு நெல் அனுப்ப முடியவில்லை. இறைவனை நோக்கி முறையிட்டார். குண்டையூர்க்கிழவருடைய முறை பாட்டைக் கேட்ட இறைவன் குண்டையூர் முழுவதும் நிரப்புமாறு நெல் மலையை அளித்தார். நெல் மலையை எடுக்க முடியாமல் வருந்திய குண்டையூர்க்கிழவர் அச்செய்தியைச் சுந்தரமூர்த்தியாரிடம் சொன்னார். நெல்மலை திருவாரூர்க்கு வரவேண்டு மென்று சுந்தரர் தேவாரம் பாடினார். இறைவன் தம்முடைய பூதகணங்களை விட்டு நெல் மலையைத் திருவாரூரில் சேர்த்தார். அந்நெல் மலையைக் கண்டு பரவையார் மகிழ்ந்தார். அவரவர் வீட்டு வாசலில் உள்ள நெல்லை அவரவர்களே எடுத்துக் கொள்ளலாமென்று அறிவித்தார்.

" குண்டையூர் சில நெல்லுப் பெற்றேன் ஆளிலை யெம்
பெருமான் அவை அட்டித் தரப்பணியே "

" கற்றத மிழ்ப்புல வனுக்கு மேமகிழ்
உற்றிரு பொற்கொடி களிக்க வேபொரு
கற்பணை நெற்பல அளித்த காரணன் "

(திருப்புகழ்)

" அண்ட மேறு நெல்மலைகள் அனந்த கோடி
பொன்மலை போல்
குண்டை யூரன் ஊரனுக்குக் கொடுத்த பெருமை
குறியாரோ
தொண்டர் நீள நினைந்தவென்று துதிக்குங் கீர்த்திச்
சோழியராய்
மண்டி வாழுங் குடியிருப்பு வளஞ்சேர் சோழ
மண்டலமே "

வீடு தோறுந் தெருக்கள் தொறும் விரிநீ ரெல்லை
மேடைதொறும்
நீடு பூத கணஞ்சொரிந்த நெற்போ ரெல்லாம்
நேர்ந்தவரே
கூடி வாரு மெனப்பரவை கூறமுழங்குங் குடைமுரச
மாடு லாவு நிலைமையது வளஞ்சேர் சோழ
மண்டலமே "

[குண்டையூர் கிழார்]

(சோழமண்டல சதகம்)

801. நெல்லிமரமான கதை

சிவபெருமானும் உமாதேவியும் ஒன்றுக அமர்ந்திருந் தனர். அப்பொழுது தேவர்கள் அங்கு வந்து தாரகன் என்னும் அசுரனைக் கொல்ல வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். சிவபிரான் தேவியை விட்டு நீங்கினர். தமது விந்தை நிலமகளிடம் விட்டார். இதனை யறிந்த உமையவள் எங்களுடைய இன்பத்திற்கு இடையூறு செய்த படியால் "தேவர்களே! நீங்கள் மக்கட்பேற்றிற் குறைபா டுடையவர்கள் ஆகக் கடவீர்கள். நிலமகளே! நீ பலருடைய நுகர்வுக்கும் உரியவளாகக் கடவாய்" என்று வசவுரை வழங்கினள். நிலமகள் முருகக் கடவுளை வணங்கி வசவுரை நீங்கப் பெற்றாள். முருகக் கடவுளை விட்டுப் பிரிய மனமில்லா மல் அவருடைய பக்கத்திலேயே நெல்லி மர வடிவமாக நின்று எப்பொழுதும் அவரைப் போற்றி வந்தாள். முருகக் கடவுள் சுவாமி மலைக்கு எழுந்தருளியபோது கூடவே வந்து அப்பதியில் சுவாமி திருமுன்புக்குத் தென்பால் நெல்லிமர மாக நின்று நாளும் போற்றலானாள்.

[சுவாமிமலை நெல்லி மரம்]

---

802. நெற்குன்றவாணர் கதை

தொண்டைவள நாட்டில் நெற்குன்றம் என்னும் ஊரில் முதலியார் ஒருவர் இருந்தார். அவருடைய பெயர் நெற் குன்றவாண முதலியார் என வழங்கியது. செல்வராகிய இவர் புலவராகவும் கொடை வள்ளலாகவுந் திகழ்ந்தார். நம்பிகாளி என்னும் புலவர் ஒருவர் நெற்குன்றவாண முதலி யார் இல்லத்திற்குச் சென்றார். முதலியார் உள்ளே இருப்ப தாக எண்ணிக் கொண்டு அவர்மீது செய்யுட்கள் சில வற்றைப் பாடினார். ஆனால் அப்பொழுது முதலியார் உள்ளே இல்லை. வெளியே சென்றிருந்தார். வீட்டிலிருந்த வேலைக் காரி உடனே நம்பிகாளிக்கு நன்கொடை வழங்கியதோடு, "சிறிது நேரத்தில் முதலியார் வந்து விடுவார் இருங்கள்" என்று கூறினள். பாடிய புலவரிடம் முதலியார் வீட்டில்

இல்லையென்று சொல்லக்கூடாது என்று எண்ணியே வேலைக்காரி அவ்வாறு பரிசளித்தாள். சிறிது நேரத்தில் முதலியார் வந்து சேர்ந்தார். தாமும் பலவகையான நன் கொடைகளை வழங்கினர்.

"கற்குங் கவிவல்ல அந்தணர் கோன்நம்பி காளிக்கியாம்
விற்கும் பரிசன மாகிவிட் டோம்வட வேங்கடமும்
பொற்குன் றமும்புகழ் கங்கா நதியும் பொதியமும்போல்
நெற்குன்ற மும்நம் மரபுமெந் நாளும் நிலைநிற்கவே"

என்னுஞ் செய்யுளைப் பாடினர். தம்மை விற்றும் பரிசு கொடுத்தார்.

"பன்னுத் தமிழ்க்கவன் மாமனை தாதி பரிசளிப்ப
முன்னம்பி காளிக்கு நெற்குன்ற வாண
முதலி யென்போன்
பின்னுஞ் சிலபல பொன்னுங் கொடுத்துத்தன்
பேர்நிறுத்த
மன்னுத் தமிழும் உரைத்தான் அவன்தொண்ட
மண்டலமே".

[நெற்குன்றவாண முதலியார்] (தொண்டமண்டல சதகம்)

---

803. நெற்போர் எரிந்த கதை

கொங்கு மண்டலத்தில் குறுப்பி நாட்டில் விசயமங்கலம் என்னும் ஊரில் சாமிநாதப் புலவர் என்னும் பெயருடைய புலவர் ஒருவர் இருந்தார். அவருக்கு வறுமைத் தொல்லை பெரிதாக இருந்தது. அந்நாளில் பொன்கலூர் நாட்டுப் புற்றிரைச்சல் என்னும் ஊரிலே முத்தான் என்னுஞ் செல்வன் ஒருவன் சிறந்த வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தான். அவனிடம் நெல்மிகுதியாக இருந்தது. சாமிநாதப் புலவர் முத்தானைக் கண்டு "தமக்கு நெல் உதவவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார். முத்தான் தன்னிடம் நெல்

இல்லையென்று மிகுந்த சினத்தோடு கூறினன். சாமிநாதப் புலவருக்கு மிகுந்த வருத்தம் உண்டாகியது.

"பாழ்த்தவப் புற்றிரைச்சல் பாவிமுத்தான் குன்றை
யொப்ப
வீழ்த்த நெற்போர் வெண்பொடியாய் வேகவின்றே
—வாழ்த்தக்
கொடாதான் இடாதான் குறுந்துணியுந் தோய்த்தே
உடாதான் பெருந்துயருள் உற்று"

என்னும் பாடல் ஒன்றைப் பாடினர். முத்தானுடைய நெற் போர்கள் தீப்பிடித்து வெந்து சாம்பராய் விட்டன.

"வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை"

என்பது தெய்வப் புலவர் திருவாக்கன்றே?

"போயா தரவுடன் நெற்போர் கிடந்திடப் புற்
றிரைச்சல்
தீயார வெந்து பொடிபட வென்றன்று செந்தமிழால்
ஓயாத வாக்கிதென் மங்கைச் சுவாமியென் றோர்
புலவன்
வாயார வங்கதம் பாடின துங்கொங்கு மண்டலமே"

[வசைபாடியது] (கொங்குமண்டல சதகம்

---

804. நைமிச முனிவர்கள் கதை

நைமிசாரணியம் என்னுங் காட்டில் முன்னாளில் முனிவர் கள் பலர் தவஞ் செய்துகொண்டிருந்தார்கள். ஒருநாள் சூதமுனிவர் அங்கு வந்தார். நைமிசாரணிய முனிவர்கள் சூதமுனிவரைப் பார்த்துத் "தங்களுக்கு அரிய செய்திகளைக் கூறவேண்டுமென்று கேட்டனர்." அவரும் புராணச் செய்தி களையும் மறை முடிவுச் செய்திகளையும் நாளுங் கூறினர். நைமிசாரணிய முனிவர்கள் சூதமுனிவர் சொல்லியவைகளை இடைவிடாது கேட்டு வந்தனர். சூதமுனிவர் தமது சொற்

பொழிவை நிறுத்தி விட்டு நீராடல் உணவு கோடல் முதலிய காரியங்கட்குச் செல்லும்போது நைமிசாரணிய முனிவர்களும் தமது நாட்கடன்களை முடித்துக் கொண்டனர்.

சூதமுனிவர் சொற்பொழிவு செய்து கொண்டிருக்கும் போது யாரும் அவ்விடத்தை விட்டுச் சிறிது நேரம்கூட அசைவதில்லை. செவிக்குணவில்லாத பொழுது மட்டும் வயிற்றுணவு முதலியவைகளை முடித்துக் கொண்ட இம் முனிவர்களுடைய செயலைக் கண்டோர் செவிக்குணவு இல்லாதபொழுதுதான் இவர்கள் வயிற்றுக்குஞ் சிறிது உணவு கொடுப்பார்கள் போலும் என்று கூறி மகிழ்ந்தனர்.

'செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்'

என்று திருவள்ளுவர் கூறியது இவர்களிடம் நன்கு விளங்கியது.

[செவியுணவு]

---

805. பகவன் கதை

இவர் பெருஞ்சாகரன் என்னும் அந்தணனுடைய புதல்வர். தம்முடைய ஊரில் இருந்து காசிக்குப் பயணஞ் சென்றார்; திரும்பி வந்தார். தொண்டை மண்டலத்தில் அகரம் என்னும் ஓர் ஊரில் தங்கியிருந்தார். அப்பொழுது ஆதி என்னும் பெயரையுடைய அந்தணமாது ஒருத்தி அங்கு வந்தாள். இவர்கள் இருவருக்குந் திருமணம் நடை பெற்றது. ஔவை, அதிகமான், உப்பை, உறுவை, வள்ளி, கபிலர், திருவள்ளுவர் என்னும் பெயரினையுடைய மக்கள் எழுவர் தோன்றினர். இவர்களில் திருவள்ளுவர் என்பவர் தாம் தமிழ் மறையாகிய திருக்குறளை உலகிற்கு வழங்கி யவர். ஔவை கபிலர் ஆகியவர்களுஞ் சிறந்த புலவர் களாகவே திகழ்ந்தனர். தம்முடைய மக்கள் அறிவாளி களாய் உலகிற்குப் பயன்பட்டதைக் கண்டு பகவனும் ஆதியும் மிகுந்த களிப்படைந்தார்கள். தம்மைப் பார்க்கி னுந் தம்முடைய மக்கள் அறிவுடையவர்களாக இருத்தல்

உலகத்திற்கு மிகுந்த நன்மையை உண்டாக்கும் என்பதை இவர்கள் தம்முடைய மக்கள்பாற் கண்டு தெளிந்தனர்.

[தம்மில் தம்மக்களறிவுடைமை]

---

806. பகாசுரன் கதை

பகாசுரன் என்பவன் பாண்டவர்கள் காலத்தில் ஏக சக்கிரம் என்னும் பெயருடைய காட்டிலே வசித்திருந்தான். இவன் அசுரனுகையால் உள்ளத்தில் எள்ளளவும் அருள் இல்லாதவனுக இருந்தான். வேத்திரகீயம் என்னும் ஊரில் புகுந்து அகப்பட்டவர்களைக் கொன்று தின்று கொண்டு திரிந்தான். இவனுடைய தொல்லை நாளும் மிகுதிப்பட்டுக் கொண்டே இருந்தது.

பாண்டவர்கள் வேத்திரகீயத்தில் தங்கியிருந்தபோது அவ்வூரார்கள் முறைவைத்துக் கொண்டு வீட்டிற்கு ஒரு வண்டி சோறு இரண்டு மாடுகள் அதனை ஓட்டிக் கொண்டு செல்லும் மனிதன் ஆகிய உணவை அனுப்பிக் கொண்டிருந்தார்கள். பகாசுரனும் நன்கு தின்று மதர்த்துத் திரிந்து கொண்டிருந்தான்.

பாண்டவர்கள் தங்கியிருந்த வீட்டுக்காரர்கள் உணவு அனுப்ப வேண்டிய முறை வந்தபோது குந்திதேவி தன்னுடைய மகனுகிய வீமனை உணவு வண்டியை ஓட்டிக் கொண்டு செல்லுமாறு ஏற்பாடு செய்தாள். வீமன் இந்தப் பகாசுரனைக் கொன்றொழித்தான். பலரைக் கொன்று தின்ற தீவினையால் பகாசுரன் வெகுகாலம் வரையில் கொடிய அளற்றிலே கிடந்து வருந்தினன்.

உயிர்கள் உடலோடு வாழும் நிலைமை ஊனுண்ணுதிருத்தலை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. ஊன் உண்பவனை அளறு வெளிவிடாது தன்னிடையே அழுத்திக்கொள்ளும் என்பது இப்பகாசுரனிடம் நன்கு பெறப்பட்டது.

[ஊன் உண்பவன் நிரயமடைவான்]

---

807. பகீரதன் கதை

பகீரதன் என்பவன் கதிரவன் குலத்தில் தோன்றிய திலீபன் என்னும் அரசனுடைய மகன். நன்கு கல்விகற்று அறநெறிப்படி அரசுபுரிந்துகொண்டிருந்தான். இவனுக்குக் குலகுரு வசிட்டர்; ஒரு நாள் இவன் தன்னுடைய குருவினிடம் தன்னுடைய முன்னோர்களின் வரலாறுகளைக் கேட்டான். கடலைத் தோண்டிய சகரர் என்பவர் இவனுடைய முன்னோர்களாவர். அவர்களனைவரும் கபிலருடைய வசவுரையால் இறந்து நற்கதியடையாமையை இவன் அறிந்தான். அவர்களை நல்ல கதியிற் சேர்க்க வேண்டும் என்று எண்ணினான். தான் ஆண்டு வந்த அரசைத் தன்னுடைய அமைச்சனிடந் தந்தான். தான் காட்டையடைந்து கடுந்தவம் புரிந்தான். இறைவன் தோன்றியருளினர். அவருடைய சடையில் இருந்த தெய்வ கங்கையை இவன் மண்ணுலகிற்கு அனுப்ப வேண்டுமென்று வேண்டி அவ்வாறே கொணர்ந்து தன்னுடைய முன்னோர்களின் எலும்புக் குவியலுள் விட்டான். இந்த நல்வினைப் பேற்றால் சகரர்கள் அனைவரும் நற்கதியடைந்தனர். பழியற்ற நல்ல மக்களை ஒருவன் பெற்றால் அவனுடைய குல முறையினர் யாவரும் நன்மையைப் பெறுவர் என்பதை உலகம் இந்தப் பகீரதன்பால் அறிந்துணர்ந்தது.

[நன்மக்கட்பேற்றின் நலம்] (பாகவதம்)

---

808. படிக்காசுப் புலவர் தோல்வியடைந்த கதை

படிக்காசுப் புலவர் இராமநாதபுரத்திலே இரகுநாதசேதுபதியின் அவையிலே புலவராக விளங்கியிருந்தார். பிறகு சிவப்பதிகட்குப் பயணஞ் சென்றார். பல விடங்கட்குஞ் சென்று விட்டு இறுதியில் கொங்குநாட்டை யடைந்தார். அந்நாட்டில் கவசை என்னும் ஊரில் மசக்காளிமன்றாடி என்னும் பெயருடைய வள்ளல் ஒருவன் வாழ்ந்திருந்தான்.

அவனிடம் புலவர்கள் பலர் இருந்தனர். அப்புலவர்கட்கும் படிக்காசுப் புலவருக்கும் சொற்போர் மூண்டது. முடிவு செய்து கொண்டபடி படிக்காசுப் புலவர் வண்ணப்பாடலைப் பாடி முடிக்கவில்லை. ஆகவே முன் செய்து கொண்ட முடிவுப்படி கொங்கு நாட்டுப் புலவர்கள் படிக்காசுப் புலவருடைய பல்லக்கு முதலியவைகளைக் கவர்ந்து கொண்டனர். படிக்காசுப் புலவர்;

"அஞ்சாவி மக்களும் சாணரும் பாணரும் அம்பட்டரும்
செஞ்சாயக் காரரும் வேசையர் மக்களுஞ்
செந்தமிழைப்
பஞ்சாகப் பன்னி ஒருகாசுக் கோர்வண்ணம்
பாடலுற்றார்
நஞ்சாகப் போச்சுதை யோவென் தமிழ்கொங்கு
நாடெங்குமே"

என்று பாடிக்கொண்டு வேறிடஞ் சென்றார்.

"நல்லார் புகழ் மசக் காளி கவசையி னுவினிசை
எல்லாஞ் சொலிநிலை நில்லாமல் பல்லக் கிரவை பற்றிச்
சொல்லால் உயர்ந்த படிக்காசன் கட்டிச் சுமக்கக்கவி
வல்லாரடித்துத் துரத்தியதுங்கொங்கு மண்டலமே"

[படிக்காசுப் புலவர் தோல்வி] (கொங்கு மண்டல சதகம்)

---

809. பட்டமரந்தளிர்த்த கதை

முன்னாளில் நம்பிகாளி யென்னும் பெயருடைய தமிழ்ப் புலவர் ஒருவர் இருந்தார். அவர் கல்வியை நன்கு கற்றுத் தேறியவர். தெய்வத்தன்மையும் வாக்குப் பலிதமும் அவரிடத்தில் நன்கு அமைந்திருத்தன. அவர் ஒரு நாள் நெருஞ்சூர் என்னும் ஓர் ஊருக்குச் சென்றார். அவ்வூரில் அப்பொழுது வட மொழியில் வல்ல சில அறிஞர்கள் இருந்தனர். அவர்கள் "வட மொழியே சிறந்தது; தெய்வத்தன்மை பொருந்தியது; தமிழ் மொழி அவ்வளவு தெய்வீகம் பொருந்தியது அன்று. ஏன்று ஒழுங்கற்ற முறையில்

சொற்போரிட்டனர். நம்பிகாளியாரோ அவர்கள் கூற்றை மறுத்து வட மொழியை விடத்தமிழுக்குத் தான் பெருமை அதிகமென்று பற்பல மேற்கோள்கள் எடுத்துக் காட்டிச் சமயக் குரவர்கள் நிகழ்த்திய புதுமைகளையும் புகன்றார். வடமொழிப் புலவர்களோ சமயாசாரியர் செயற் கருஞ் செயல்களைச் செய்திருப்பின் அது அவர்களுடைய தெய்வத் தன்மையால் விளைந்திருக்கக் கூடுமென்றும் தமிழின் பெருமையால் அன்று என்றும் புகன்றனர்.

நம்பிகாளியார் அவர்கள் செய்தது போன்ற புதுமை யொன்றைத் தமிழ் மொழியின் பெருமையால் தாமுஞ் செய்தல் கூடுமென்று கூறினர். இதனைக் கேட்ட மற்றைப்புலவர்கள் பக்கத்தில் இருந்த சோலை யொன்றில் பட்டுப்போய் விறகிற்குத் தகுதியாக நின்றமரம் ஒன்றைச் சுட்டிக் காட்டி, "வேறு ஒன்றுஞ் செய்யவேண்டாம்; காய்ந்து போய் நிற்கும் அந்த மரம் உயிர் பெற்றுத் தழைக்குமாறு நீர் செய்து விடின் நீர் கூறுவன எல்லாவற்றையும் நாங்கள் ஒப்புக் கொள்ளுகிறோம்" என்றனர். உடனே நம்பிகாளியார்!

"தெய்வத் தமிழென்னுஞ் செம்மொழியும்
அம்மொழிநேர்
செய்விப்பர் தேவரனல் தேறத்—தெய்வம்
சுரந்தளிக்கு மாநெருவூர்ச் சோலையிலே பட்ட
மரந்தளிர்க்க இன்று வளர்ந்து"

என்று பாடினார். மறுகணமே அம்மரம் தளிர் விட்டுத் தழைத்து வளரத் தொடங்கியது. நம்பிகாளியாரோடு சென்போரிட்ட புலவர்கள் தமிழின் பெருமையை நன்குணர்ந்து கொண்டவர்களாய் நம்பிகாளியையுந் தமிழ் மொழியையும் பாராட்டிப் புகழ்ந்தனர்.

"பரந்த கடலுல கெல்லா மறியப் பரமசிவன்
நிரந்தர மாயருள் சண்முக வேலன் நன் னேயத்தினுல்
புரந்தரன் போற்றும் நெருவூரிற் காளிப் புலவன் பட்ட
மரந்தழை யக்கவி பாடிய துங்கொங்கு மண்டலமே"

[தமிழின் சிறப்பு] (கொங்குமண்டல சதகம்)

810. பட்டி கதை

பட்டி என்பவன் அவந்தி நாட்டிலே உச்சைனி என்னும் நகரத்தில் முன்னாளில் வாழ்ந்திருந்தவன். இவன் கல்வி கேள்விகளிலும் சூழ்ச்சித் திறத்திலும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாஞாய் இப்பாரில் இனிது சிறந்து விளங்கினான். அரச தருமங்களை நன்குணர்ந்து விளங்கிய இவன் விக்கிரமார்க்கனுக்கு அமைச்சனாக அமைந்தான். இவ்வமைச்சன் சதுரப் பாடாகக் காரியங்களைப் புரிந்தபடியால் விக்கிரமார்க்கனை வெல்ல எண்ணிய பகைவேந்தர்களின் எண்ணம் சிறிதும் பலிக்கவில்லை. பலர் இப்பட்டியோடு சொற் போர்செய்து தோற்கடிக்க வந்து மிகமுயன்றனர். அவர்களையெல்லாம் இவன் சில கேள்விகளுக்குக் கூடப் பதிலுரைக்கத் திறனற்றவர்களாகச் செய்தான். இவன் விக்கிரமார்க்கனுக்குத் தம்பியாகையால் விற்போர் செய்வதிலுஞ் சிறந்து விளங்கினான். இப்பட்டியின் புகழால் மன்னனுடைய புகழும் திக்குகள் தோறும் எட்டி நின்றது. திறமை மிக்கவனே தேர்ச்சிமிக்க அமைச்சனுவான் என்பது இவனிடம் நன்கு விளங்கியது.

[திறமையுடையவனே சிறந்த அமைச்சன்]

---

811. பட்டி இரட்டையாக்கிய கதை

விக்கிரமாதித்தனுக்குப் பத்திரகாளி காட்சி தந்தாள். ஆயிரம் ஆண்டுகள் அரசாட்சி செய்யுமாறு அருள் புரிந்தாள். விக்கிரமாதித்தன் தான் ஆயிரம் ஆண்டுகள் அரசாட்சி செய்ய அருள் பெற்றதை அமைச்சனுகிய பட்டிக்குக் கூறினான். அமைச்சனுகிய பட்டி அரசனைப் பார்த்துப், "பத்திரகாளி உமக்கு ஆயிரம் ஆண்டுகள் தந்தாள் அல்லவா? நானும் ஆயிரம் ஆண்டுகள் தருகிறேன்" என்று சொன்னான்.

இதனைக் கேட்ட விக்கிரமாதித்தன் 'உன்னால் ஆயிரம் ஆண்டுகள் எப்படித் தரமுடியும்?' என்று உசாவினான்.

அதற்குப் பட்டி, "ஆறுதிங்கள் அரியணையில் இருந்து அரசாட்சி செய்கிறது, ஆறுதிங்கள் காடு பிறநாடு ஆகிய வைகளில் சுற்றித் திரிகிறது. இவ்வாறு இரண்டு ஆயிரம் ஆண்டுகள் அரசாட்சி செய்யலாம். அம்மன் அருளியது தவருது. நாம் காடாறு திங்கள் நாடாறு திங்கள் என்று இருந்தால் இரண்டாயிரம் ஆண்டுகள் உலகத்தில் இருக்கலாம்" என்று சொன்னான்.

பிறகு பட்டியாகிய அமைச்சன் பத்திரகாளியை நோக்கித் தவஞ் செய்தான். பத்திரகாளி பட்டிக்கு முன் தோன்றி, "உனக்கு வேண்டியது யாது? என்று கேட்டாள். பட்டியானவன், "நான் இந்நிலவுலகில் இரண்டாயிரம் ஆண்டுகள் இருக்குமாறு அருள்புரிய வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான். பத்திரகாளி பட்டியைப் பார்த்து, "விக்கிரமாதித்தனுடைய தலையை அறுத்து என் முன் வைப்பாயானால் நீ, நிலவுலகில் இரண்டாயிரம் ஆண்டுகள் இருக்குமாறு அருள் புரிகிறேன்" என்று சொன்னாள்.

பட்டி அரண்மனையை அடைந்தான். விக்கிரமாதித்தன் உறங்குகையில் அவனைத் தூக்கிக் கொண்டு போய் அம்மனுக்கு முன் கிடத்தி அவனுடைய தலையை அறுத்தான். அப்பொழுது விக்கிரமாதித்தன் விழித்துக் கொண்டான். பட்டி ஏதோ காரியத்திற்காக அறுக்கிறான் அறுத்தால் அறுக்கட்டும் என்று பேசாமல் இருந்தான். பட்டி கழுத்தை அறுத்து அம்மனுக்கு முன்னே வைத்தான். பத்திரகாளி பட்டியைப் பார்த்து "இரண்டாயிரம் ஆண்டுகள் உலகில் இருப்பாய்" என்று சொல்லி அருள்புரிந்தாள்.

பட்டி அருளைப் பெற்றவுடன், நேற்றுத்தானே அரசனுக்கு ஆயிரம் ஆண்டுகள் இருப்பதற்கு அருள்புரிந்தாய். அவன் இன்று இறந்தானே. எனக்குக் கொடுத்திருப்பதும் இவ்வாறுதான் முடியுமோ? என்று உசாவினான். பட்டி பகர்ந்ததைக் கேட்ட பத்திரகாளிக்கு மகிழ்ச்சியுண்டாகியது. அரசனையும் எழுப்பி விட்டாள். பட்டி விக்கிரமாதித்தனுடைய வாளைக் இரட்டிப்பாக்கியதைக் கண்டோர் "மந்திரங்கால் மதிமுக்கால்" என்று சொல்லிப் பாராட்டினார்கள்.

" சிந்தை மகிழ் விக்கிரமா தித்தனுக்கா
யிரவருடந் தேவி யீந்தாள்
புந்திவலி மந்திரி சொல் லாலிரண்டா
யிரவருடம் புவியை ஆண்டான் " .

[மந்திரங் கால் மதி முக்கால்] (செயங்கொண்டார் வழக்கம்)

---

812. பட்டிப்பெருமான் பள்ளனை கதை

கொங்குவள நாட்டில் பேரூரில் எழுந்தருளிய இறைவனைப் பட்டிப்பெருமான் என்பர். சுந்தரமூர்த்தியடிகள் கொங்குவள நாட்டுச் சிவப்பதிகளைப் போற்றி வழிபட்டுக் கொண்டு பேரூர்க்குச் சென்றார். இவருடைய வருகையை அறிந்த சிவபெருமான், "நாம் இருக்குமிடத்தைச் சுந்தரனுக்குச் சொல்லாதே" என்று நந்திதேவரிடம் கூறிவிட்டுப் பள்ளனுடைய வடிவம் எடுத்துக்கொண்டு வயலுக்குச் சென்றார். சுந்தரர் வந்து பார்த்துவிட்டுச், "சுவாமி எங்கே?" என்று நந்திதேவரைப் பார்த்துக் கேட்டார். நந்திதேவருடைய நிலை கலக்கமாக முடிந்துவிட்டது. இறைவன் கட்டளையை மீறக் கூடாது என்பது ஒரு பக்கம். அடியாரிடம் பொய்யுரைக்கக் கூடாது என்பது மறுபக்கம். இதனால் திகைத்த நந்திதேவர் கண்சாடையாற் காட்டினார். உண்மையை உணர்ந்து கொண்ட சுந்தரர் வயலுக்குச் சென்று இறைவனை வணங்கினார். சுந்தரரோடு கோவிலுக்கு வந்த இறைவன், "வயலிற் கொண்டு போய் ஏரிற் பூட்டி மற்றைய எருதுகளோடு சேர்த்து உழாமல் ஓரிடத்தில் வைத்துத் தினை போட்டால் இவ்வாறுதான் ஆணவங் கொண்டு நம்முடைய கட்டளையை மீறுவாய்" என்று சொல்லி நந்தி தேவருடைய முகத்தில் மண் வெட்டியினால் வெட்டினார். நந்தி தேவர் இறைவனை வணங்கினார். நந்தி தேவருடைய முகம் வளர்ந்தது.

" கடுவாள் விழியினை ஆரூர்ப்பரவை கலவி வலைப்
படுவார் தமிழ்ச்சுந் தரர்பாடற் கீயப் பரிசின்மையால்.

நெடுவாணை பாயும் வயலூடு போகி நெடிய பள்ள
வடிவாகி நின்றதும் பேரூர்ச் சுவன் கொங்கு
மண்டலமே ''

'' நறைவயல் வாய்ச்சுந் தரர்க்கொளித்தாரதை
நந்தி சொலப்
பிறைமுடி வேணியர் பட்டீச் சுரர்பெரு ஞ்வெட்டி
யால்
குறைபட வெட்டி விழுமுக நந்திசெய் கொள்வினல்
மறுமுகம் ஈண்டு வளர்ந்தது வுங்கொங்கு
மண்டலமே ''

[கடவுள் பள்ளனது] (கொங்குமண்டல சதகம்)

---

813. பட்டினசாமி கதை

முன்னாளில் பழனவேலி என்னும் ஊரில் பட்டினசாமி என்னும் பெயரையுடைய வணிகன் ஒருவன் இருந்தான். இவன் முன்பிறவியிற் செய்த தீவினையினல் இவனுடைய சிறந்த வாழ்வு குன்றியது. வறுமை மிக வருத்தியது. பட்டினசாமி பட்டினிசாமியாயினன். அதனல் இவனுடைய சுற்றத்தார்களும் இவனை இகழ்ந்து நீக்கினர். இவன் தன னுடைய மனைவியோடு காட்டையடைந்து காய் கனி முதலி யவைகளைத் தின்று கொண்டு தங்கியிருந்தான். பிற கு மனைவியோடு திருவாரூரை அடைந்தான். பசிக்கொடு மையைத் தணித்தற் பொருட்டுத் தாமரை மலர்களைப் பறித்து விற்று அதனல் வருஞ் சில காசுகளைக் கொண்டு உணவுப் பொருள்கள் தேடினன். ஒருநாள் தாமரை மலர் கள் விற்கவில்லே. அதனல் அவனும் அவன் மனைவியும் உணவின்றிப் பசியினல் வருந்தியிருந்தனர். பொழுது போயது. தாங்கள் பறித்த தாமரை மலரோடு இருவருந் திருக்கோயிலையடைந்தனர். அப்பொழுது அங்குக் கூடியி ருந்தோர் '' வைகாசி விசாகநாளாகிய இன்று தாமரை மலரைக் கொண்டு இறைவனைப் பூசித்து நோன்பிருந்தால் எல்லையற்ற செல்வமுண்டாவதோடு இறுதியில் வீடுபேறும்

உண்டாகும். ஆகவே நாங்கள் தாமரை மலரைக் கொண்டு பூசைபுரிய விரும்புகிறோம். இம்மலரின் விலை யாது? இயம்பு வாயாக'' என்று கேட்டனர். இதனைக் கேட்ட பட்டினசாமியும் அவன் மனைவியுந் தாமரை மலர்களை விற்காமல் தாங்களே பூசை செய்து வழிபட்டனர். இரவில் பசிக்கொடுமையால் பட்டினசாமி இறந்தான். அவன் இறந்த துன்பத்தைப் பொறுக்க முடியாமல் அவனுடைய மனைவியும் இறந்தாள். ஆரூர் இறைவனை வழிபட்ட நல்வினையால் பட்டினசாமி கதிரவன் குலத்தில் இக்குவாகு என்னும் அரசனுடைய வழி முறையில் பத்திர சேனன் என்னும் பெயருடைய அரசனுக்குப் பிறந்தான். பட்டினசாமி யினுடைய மனைவி அரசியானாள்.

> ''தென்னூரர், ஆனந்தர்க் கெம்மை அணிந்துய்ந்தார்
> உண்டென்று''

[பட்டினசாமி] (திருவாரூர் உலா)

---

814. பட்டினத்தடிகள் கதை

பட்டினத்தடிகள் சோழவள நாட்டில் காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகர் குலத்தில் தோன்றியவர். இவருக்கு இடப் பெற்ற பிள்ளைப் பெயர் திருவெண்காடர் என்பது. இவர் பல மரக்கலங்களை வைத்துக்கொண்டு வாணிகஞ் செய்து பெரும் பொருள் ஈட்டினார். சிறந்த செல்வராக வாழ்ந்து கொண்டிருந்தார். மக்கட்பேறு உண்டாகவில்லை. சிவபெருமானே புதல்வராகத் தோன்றி மெய்யறிவுச் சுடர் கொளுத்தினர். அவ்வளவில் இவர் பாரனைத்தும் பொய் யென்றுணர்ந்து கடுமையான துறவு பூண்டார். இவருடைய துறவை வியந்து மறறைப் பெரியோர்கள் ''பாரனைத்தும் பொய் யெனவே பட்டினத்துப் பிள்ளையைப் போல் ஆருந்துறக்கை அரிதரிது'' என்று பாராட்டியுள்ளனர். கழுமரம் தீப்பிடித்து எரிதல் முதலிய பல வியத்தகு நிகழ்ச்சிகள் இவர்பால் நிகழ்ந்தன. பத்திரகிரியார் இவருடைய மாணவர். இம்மை மறுமை நலங்களை உணர்ந்து துறவு பூண்ட இவருடைய

பெருமை இன்றும் எல்லோருடைய பாராட்டிற்கும் உரிமை யாக விளங்குகிறது. துறந்தவர்களிற் சிறந்தவர்களின் பெருமை என்றுங் குன்றின்மேலிட்ட விளக்காகத் திகழு மென் பதற்கு இந்தப் பட்டினத்தடிகளே சிறந்த சான்றாக அமைந்து விளங்குகின்றார்.

[துறவிகள் பெருமை] (திருவெண்காடர் புராணம்).

---

815. பட்டும் பாட்டும்

ஒரு நாள் ஔவையார் சோழ மன்னனிடஞ் சென்றார். அவன் ஔவையாருக்கு அரிய பட்டுஒன்றை அளித்தான். அளித்து விட்டு, "இப்பட்டு அருமையானது மிக உயர்ந்தது. தாங்கள் உடுத்திக்கொள்ள மிக இனிமை யாக இருக்கும். இதைப் போன்ற பட்டை நீங்கள் இதுவரையில் பார்த்திருக்க மாட்டீர்கள். இதன் விலையும் மிக அதிகம்" என்று பலவாறு புகழ்ந்து பேசினான்.

சோழன் தன்னுடைய பட்டைக் குறித்துத்தானே பல வாறு புகழ்ந்து பேசியது ஔவையாருக்கு மிகுந்த எரிச்சலை யுண்டாக்கியது. உடனே ஔவையார்;

"நூற்றுப்பத் தாயிரம் பொன்பெறினும் நூற்சீலை
நாற்றிங்கள் நாளுக்குள் நைந்துவிடும்-மாற்றலரைப்
பொன்றப் பொருதடக்கைப் போர்வேல் அகளங்கா
என்றுங் கிழியாதென் பாட்டு"

என்று பாடினார். சோழ மன்னன் இப்பாடலைக் கேட்டதும் தன்னுடைய பட்டாடையைத் தானே புகழ்ந்து பேசியதை எண்ணி மிகுந்த நாணங்கொண்டான். அவனுடைய பெருமிதமும் அடங்கிவிட்டது.

[அழிவற்ற பொருள்] (ஔவையார் வரலாறு).

---

816. பட்டைக்கிழித்த கதை

திருவெண்ணெய்நல்லூர்ச் சடையப்ப முதலியார் பெருஞ் செல்வர். புதிதாக முடிசூட்டப்பெற்ற சோழ ம ன் ன ன் ஒருவன் சடையப்ப முதலியாரைப்பற்றிக் கேள்விப்பட்டான். அவர் தன்னை வந்து பார்க்கவில்லையே எ ன் று சினங் கொண்டான். முதலியார் வறியராம்படி அவருடைய பொருள் களை யெல்லாங் கவர்ந்துகொண்டான். அதன் பிறகு கூடச் சடையப்ப முதலியார் அரசனைப் போய்ப் பார்க்கவில்லை.

அந்நாளில் சீனத்தில் இருந்து பட்டு வாணிகன் ஒரு வன் இழையாயிரம் பொன் பெற்ற பட்டு ஒன்றைக் கொண்டு வந்து அதனை அரசனிடத்திற் காட்டினான். அரசன் அதனை வாங்க விரும்பினான். ஆனால் அவனுடைய பொருளறை யிற் பொருள் போதிய அளவு இல்லை. ஆகவே அப் பட்டுத் தனக்கு வேண்டாம் என்று அ ர சன் பட்டுவாணிகனை அனுப்பிவிட்டான். அவ்வணிகன் அப்பட்டைச் சடையப்ப முதலியாரிடங் கொண்டு சென்றான். அவர் அதனை வாங்கி அ ணி ந் து கொ ண் டா ர். இச்செய்தியைக் கேள்வியுற்ற அரசன் பொறுமைகொண்டான். சடையப்ப முதலியாரை வலுக் கட்டாயமாகத் தன்னிடத்திற்கு வரவழைத்தான். "நான் அழைத்ததற்கு நீர் ஏன் வராமல் இருந்தீர்?" என்று கேட்டான். முதலியார் தம்முடைய தொடையில் சிலந்தி என்று கூறினர். ஆனால் அதனை அரசன் நம்ப வில்லை. முதலியார் விலையுயர்ந்த பட்டைக் கிழித்துத் தொடைப் புண்ணைக் காட்டினர். அரசன் தனது செல் வத்தைவிட மிக மீறிய பட்டை வறுமைக் காலத்தில் வாங்கியதைப் பார்க்கினும் அதனை ஒரு பொருள் செய் யாமல் கிழித்ததைப் பார்த்து மிகுந்த வியப்படைந்தான். பிறகு அவரிடம் நன்மதிப்போடு நடந்து கொண்டான்.

"உற்ற தொடைப்புண்ணுக் குடைகீறிக்
காட்டிநின்றான்
கொற்றவன்முன் உன்கங்கை கோத்திரத்தான்-"

(ஆத்திசூடி வெண்பா)

" தெள்ளத் தெளிந்தவர் செய்தக்க
தோர்முறை செய்யிலையால்
எள்ளத் தகுமலை யத்தகு
யாமென்ப தின்றறிந்தோம்
உள்ளற் கரிய தொடையாடை
கீறிய தொன்றுமொரு
வள்ளற் றகைமையொ டொத்துள
தால்தொண்ட மண்டலமே "

தொடையாடைகிழித்தது] (தொண்டமண்டல சதகம்)

---

817. பண்ணன் கதை

முன்னாளில் தொண்டை நாட்டில் பண்ணன் என்னும் பெயருடைய வேளாளன் ஒருவன் இருந்தான். இவன் மிகுந்த ஊக்க முடையவன். ஆக்கம் தேடுவதில் எப பொழுதும் கண்ணுங் கருத்துமாக இருப்பான். ஆனல் தீயவழிகளில் ஒரு கடுகைக்கூடத் தேடமாட்டான். பயிர்த் தொழில் வாணிகம் முதலியவைகளை முறைப்படி செய்தே தேடுவான். இவனிடம் நாளடைவில் செல்வம் பெருகியது.

செல்வத்தை என் செய்வது? செலவு செய்வதற்காகத் தானே செல்வத்தைத் தேடுவது. பண்ணன் பலவகை யாள அறங்களைச் செய்தான். தானும் நன்கு உண்டு உடுத்து மாடமாளிகைகள் கட்டி மகிழ்ந்தான். ஊர் வாழ் மக்கள் பண்ணனுடைய பண்பைப் பாராட்டிப் போற்றினர். சேர்க்க வேண்டிய வழியை நன்கு ஆராய்ந்து பிறருக்குத் தீமையில்லாத வகையில் தேடிய பொருள் அறத்தையும் இன்பத்தையும் அளிக்கும் என்பதை அனைவரும் இவனி டம் நன்கு உணர்ந்தனர்.

[நன்னெறியில் தேடிய பொருள் நலமளிக்கும்]

---

818. பதஞ்சலிக்கருளிய கதை

இறைவன் திருக்கூத்தியற்றினர். அத்திருக்கூத்தைத் திருமால் கண்டார். தம்முடைய இருக்கையை அடைந்து துயிலாதிருந்தார். தமக்கு அணையான ஆதிசேடப் பாம்புக்குத் திருக்கூத்தின் பெருமையை உரைத்தார். ஆதிசேடனுக்கு அக்கூத்தினைக் காணவேண்டும் என்னும் அவா உண்டாகியது. அதனைற் கண்ணீர் பொழிந்தான். அதனைக் கண்ட திருமால், "நீ இறைவனுக்கு அன்பனாகி விட்டாய். இனிமேல் உன்னை அணையாகக் கொள்ளுதல் எனக்குத் தக்கதன்றும். ஆகவே இனிமேல் நீ தவஞ் செய்தலே தக்கதாம்" என்று கூறி ஆதிசேடனை அனுப்பினர்.

சிவபிரானுடைய திருக்கூத்தைக் காண விரும்பிய ஆதிசேடன் வடகைலையின் பக்கத்தைச் சார்ந்து ஓரிடத்தில் அருந்தவம் இயற்றினர். இறைவன் ஆதிசேடன் முன்பு தோன்றினர். "நீ இவ்வுருவை ஒழித்து விட்டு அத்திரி முனிவரின் மனைவியிடத்தே முன்னொருகால் ஐந்தலைச் சிறு பாம்பாய் வந்ததைப் போல் இப்பொழுதும் அவ்வடிவினையே எடுத்துக் கொண்டு தில்லைக்குச் செல். அங்கு நம்முடைய கூத்தைக் காண விரும்பிப் புலிக்கான் முனிவன் (வியாக்கிரபாதர்) தவஞ் செய்துகொண்டிருக்கிறான். உங்களிருவருக்கும் தைப்பூசத்தன்று இன்பக் கூத்தைக் காட்டியருளுவோம்" என்று அருள்புரிந்தார். பதஞ்சலியும் திருத்தில்லையை அடைந்து தவஞ் செய்து கொண்டிருந்தார்.

"பதஞ்சலிக் கருளியபரம நாடக"

[பதஞ்சலிக்கருளியது] (திருவாசகம்)

---

819. பதுமயோனி கதை

பதுமயோனி என்னும் பெயருடைய மறையவன் ஒருவன் வெகு காலத்திற்கு முன்பு வாழ்ந்திருந்தான். இவன் மறையவர் குலத்தில் தோன்றியிருந்தும் அக்குலத்திற்குரிய

ஒழுக்கங்கள் சிறிதும் இல்லாமல் தீமையான காரியங்களையே நாளும் புரிந்துகொண்டு திரிந்தான். பொருளில் மிகுந்த பற்றுக்கொண்டிருந்த இவன் பலவழிகளிலும் முயன்று பொருள் தொகுத்துச் செல்வன்போல் தலையெடுத்துத் திரிந்தான். பிறருக்கு யாதும் ஈயான். உலுத்தர்கள் அனைவரிலுஞ் சிறந்து விளங்கினன். வேலையாட்களிடம் வேலை வாங்கிக்கொண்டு கூலி கொடுக்காமல் ஏய்ப்பதில் கெட்டிக்காரனாக விருந்தான்.

இத்தகைய இவனிடம் தேவதத்தன் என்னும் பெயருடைய அந்தணன் ஒருவன் வந்தான். அவன் அட்டில் தொழிலில் வல்லவன். அதனையறிந்துகொண்ட இவன் அவனைப் பார்த்து, "நீ எனக்கு நல்ல உணவுகளை ஆக்கித் தருவையாகில் நான் உனக்குத் தக்கவாறு ஊதியங் கொடுப்பேன்" என்று உரைத்தான். தேவதத்தன் ஓராண்டு வரை மடைத்தொழிலில் ஈடுபட்டிருந்தான். அவனுக்கு உடை முதலியன கூட ஒழுங்காக வாங்கிக் கொடாமல் தொல்லைப் படுத்தி இறுதியில் யாதுங் கொடாமலே போகச் சொன்னான். அவன் உளம் வருந்தித் திகைத்தான். "தீவினையாளனே! நீ உன்னுடைய பொருளை யெல்லாம் இழந்து பேயாகக் கடவாய்" என்று கொடிய சாபவுரை கூறி யகன்றான். இப்பொல்லாதவனும் விரைவிற் பொருளை யிழந்து பேயானான். எல்லாம் பொருளாலேயே உண்டாகும என்று எண்ணிக்கொண்டு அதனைக் கொடாது உலுத்தனாயிருப்பவன் இழிந்த பிறப்பை யடைவான் என்பது இவனிடம் நன்கு பொருந்தியது.

[உலுத்தன் இழிந்த பிறப்படைவான்]

---

820. பதுமாசுரன் கதை

பதுமாசுரன் என்பவன் இறைவனை நோக்கி நெடுங் காலந் தவம் புரிந்தான். இறைவன் பதுமாசுரனுக்கு முன்பு தோன்றினார். "வேண்டியது யாது?" என்று கேட்டார். பதுமாசுரன், "நான் யாருடைய தலையிற் கையைவத்தாலும்

அவர்கள் வெந்து நீருகப் போகவேண்டும்'', என்று வரங் கேட்டான். இறைவன், ''அப்படியே தந்தோம்'' என்றார்.

இறைவனிடத்தில் தவத்தினால் வரத்தைப் பெற்ற பதுமாசுரன் இறைவனுடைய தலையின் மீது கையை வைப்பதற்காக ஓடினான். பதுமாசுரனுடைய செயலைக் கண்ட இறைவன் ஓடி ஐவிரலிக்காய்க்குள் ஒளிந்துகொண்டார். இச்சமயத்தில் திருமால் மோகினி வடிவம் எடுத்துக் கொண்டு பதுமாசுரன் முன்வந்தார். பதுமாசுரன் மோகினியைக் கண்டு மயல் கொண்டான். மோகினியைத் தழுவ வந்தான். மோகினியாகிய திருமால், ''நீராடி வந்து என்னைத் தழுவு'' என்றார். பதுமாசுரன் நீராடச் சென்றான். அண்மையில் தண்ணீர் அகப்படவில்லை. இச்செய்தியை அவன் மோகினியிடங் கூறினான். அதற்கு மோகினியாகிய மால் ''நீர் கிடைக்காவிட்டால் தண்ணீரைத் தொட்டுத் தலையின் மீது வைத்துக் கொண்டு வா'' என்று கூறினார். பதுமாசுரன் ஓரிடத்தில் சிறிது தண்ணீரைக் கண்டு அதனைத் தன்னுடைய விரலால் தொட்டுத் தலைமீது வைத்துக்கொண்டான். வைத்துக் கொண்ட அப்பொழுதே அவன் வெந்து நீருனான். அறிவற்றவர்கள் மிகு விரைவாகத் தங்களுக்கு அழிவைத் தேடிக் கொள்ளுவார்கள்.

''கடியகனல் முனிக்கோடிப் பயந்தீசன்
ஐவிரலிக் காய்க்குள் சென்றார்''

[இறைவன் அஞ்சி யோடியது] (செயங்கொண்டார் வழக்கம்)

---

821. பத்திரகிரியார் கதை

பத்திரகிரியார் முதலில் ஓர் அரசனாக இருந்தார். பிறகு பட்டினத்தாருடைய அருளால் துறவறத்தை மேற்கொண்டு திருவிடைமருதூரில் தங்கியிருந்தார். பட்டினத்தாரும் அப்பதியில் எழுந்தருளியிருந்தார். பட்டினத்தாரிடத்தில் எப்பொருளும் இல்லை. பத்திரகிரியாரிடத்தில் திருவோடு ஒன்று இருந்தது. நாய் ஒன்று அவரிடும் உணவுக்காக அவரைச் சுற்றிக்கொண்டிருந்தது.

ஒருநாள், இறைவன் ஒரு துறவி போல் பட்டினத்தார் முன் தோன்றி, "என்னுடைய பசியைத் தணிப்பீரா?" என்று உசாவினர். பட்டினத்தார், "நான் கோவணந் தாங்குவதே சுமையாக இருக்கிறேன். உமக்கு என்னால் எவ்வாறு பிச்சையிட முடியும்? அதோ இருக்கிற குடும்பியைக் கேட்டால் உமக்குப் பிச்சையிடுவான்" என்று கூறினர்.

இறைவன் பத்திரகிரியாரிடஞ் சென்றார். பட்டினத்தார் பகர்ந்ததை அவரிடம் இயம்பி "நீராவது என்னுடைய பசியைத் தணிப்பீரா?" என்று கேட்டார். பத்திரகிரியார் "இந்த ஓடும் நாயும் என்னைக் குடும்பியாக்கிவிட்டன" என்று கூறி ஓட்டை யெடுத்து நாயின் மீது எறிந்தார். பிச்சைக்கு வந்தவர் மறைந்து போனார். அதன் பிறகு பத்திரகிரியார் ஓடு வைத்துக்கொள்வதும் இல்லை.

தவஞ் செய்பவனுக்கு ஒருபற்றும் இல்லாதிருத்தல் இயற்கையாகும்; ஒருபொருளிற் பற்றுடையவராக இருத்தல் மீண்டும் மயங்குவதற்கு வழியாகும் இது பத்திரகிரியார் இடத்தில் நன்கு பெறப்பட்டது.

[பற்றற்றிருத்தல்]

(பத்திரகிரியார் வரலாறு)

———

822. பத்துப்பிறவி யெடுக்க நேர்ந்த கதை

முன்னொரு காலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் கொடிய பகையுண்டாகியது. இருவரும் நெடுங்காலம் போர் செய்தார்கள். தேவர்கட்குத் தோல்வி யேற்படும் போல் தெரிந்தது. திருமால் தேவர்களுக்குத் துணையாக வந்து தமது ஆழிப்படையைக் கையிலெடுத்தார். அசுரர்கள் அஞ்சினர்கள். தங்களுக்குச் சிறிய தாயும், திருமகளுக்குத் தாயும், பிருகு முனிவருக்கு மனைவியுமாகிய கியாதி என்பவளுடைய இலக்குமியை யடைந்து, "அடைக்கலம்" என்று கூறி உள்ளேபோய் ஒளிந்துகொண்டார்கள். கியாதி உள்ளே எவரும் நுழைந்து விடாதவாறு வாசலில் காவலாக நின்றாள்.

ஓடிய அசுரர்களைத் தேடிக்கொண்டு திருமால் அங்கே வந்தார். மாமியாகிய கியாதி நிற்குமிடத்தை யடைந்து உள்ளே போக முயன்றார். உள்ளே போகக் கூடாது என்று கியாதி தடுத்தாள். திருமால் பெருஞ்சினங் கொண்டார். மாமி யென்றும், பெரிய முனிவருடைய மனைவி யென்றும், கற்புடைய பெண்மணி யென்றும் எண்ணுமல் ஆழிப்படையினால் அவளுடைய தலையை அறுத்தெறிந்தார்.

பிருகுமுனிவர் தம்முடைய மனைவி கொலையுண்டதை அறிந்தார். அவருக்குச் சினம் உண்டாகியது. அசுரர் களைக் கொல்லும் பொருட்டு உள்ளே சென்றுள்ள திருமாலின் முகத்தைப் பார்த்துத் "துன்பத்தைத் தருவதாகிய பத்துப் பிறவியை நீ எடுக்கக்கடவாய்" என்று வசவுரை (சாபம்) வழங்கினர். கியாதி சுக்கிரபகவானால் உயிர் பெற்றெழுந் தாள்.

"தறிபவ மரமுடைச் சங்கு கண்ணனும்
அறிவுணர் பிருகுவும் ஆமென் தொண்டரால்
பறிபடு தலையனைப் பவங்கள் பத்தினும்
மறிபடு மாலென மதித்தி டாய்கொலோ"

[பத்துப்பிறவிக்குக் காரணம்] (சித்தாந்தசிகாமணி)

---

823. பந்தன் கதை

பந்தன் என்பவன் சோழவள நாட்டில் காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்திருந்தான். இவனிடம் செல்வச் சிறப்பு நன்கு அமைந்திருந்ததோடு உயர்ந்த குணங்களும் ஒருங்கு பொருந்தியிருந்தன. உறவினர் பலர் இவனுடைய இல் லத்தை அடைந்து நாளும் உண்டு மகிழ்ந்தனர். "தனக் கென வாழாப் பிறர்க்குரியாளன்" என்று இவனைப் பலரும் பாராட்டினர். இவன் உறவினரை மகிழ்ந்து பேணுஞ் செயல் ஆதிசேடனுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. இவனைத் தன்னுடைய உலகத்திற்குக் கொண்டு சென்றான். தன்னுடைய அருமைப்பெண்ணை இவனுக்கு மணஞ் செய்து

தந்தான். மேன்மைகள் பல வழங்கினன். பிறகு இவன் தன்னுடைய நகரையடைந்தான். முன்னையினும் பன்மடங்கு விரிந்த மனப்பான்மையுடையவனுய்ச் சுற்றத்தாரையும் பிற ரையும் பேணி மகிழ்ந்தான். இவனுடைய உயரிய பண்பு களை ஒளவையார் உணர்ந்தார். இவன்மீது அந்தாதி ஒன்று பாடினுர். அவ்வந்தாதி பந்தனந்தாதி என்னும் பெயரையுடையது. சுற்றத்தைப் போற்றிப் பாதுகாத்து ஒழுகுவோர் நலமெலாம் பெறுவர் என்பது பந்தனிடம் நன்கு விளங்கியது.

[சுற்றந்தழுவுதல்]

---

824 பரசுராமர் கதை

பரசுராமர் என்பவர் ஒரு முனிவருடைய பிள்ளை. அந்தண குலத்தில் தோன்றியவர். ஓர் அரசன் இவருடைய தந்தையை வஞ்சமாகக் கொன்றுவிட்டான். அதனுல் சீற்ற முற்ற பரசுராமர் சத்திரிய வழி முறையினரை யெல்லாங் கொன்று தொலைக்க எண்ணி அவ்வாறே செய்துகொண்டு நிரிந் தார். இராமபிரான் இனிய குணங்கள் பலவும் நிறையப் பெற்றவர். மிதிலேக்குச் சென்று சீதையைத் திருமணஞ் செய்துகொண்டு திரும்பும் பொழுது பரசுராமர் தசரதராமர் முன்னே தோன்றினர். இராமபிரானைப் பார்த்து, ''முன்னே முறிந்து போய்க் கிடந்த சிவபிரானுடைய வில்லை முறித்து விட்டதைப் பற்றிப் பெருமைப் பட்டுக்கொள்ளாதே. இந்த வில் திருமாலினுடைய வில்; இதனை வளை பார்க்கலாம்'' என்று கூறித் தம்முடைய கையில் இருந்த வில்லை இராம பிரான் முன்பு நீட்டினர். கடுமையான சொற்கள் பலவற் றைக்கூறினர். இராமபிரான் அவ்வில்லை எளிதாக வளைத்து நாணேற்றினர். அதனில் அம்பைத் தொடுத்து, ''இவ்வம் புக்கு இலக்கு யாது?'' என்று உசாவினர். பரசுராமன் அதற்கு இலக்காகத் தமது தபோபலம் முழுவதையுங் கொடுத்தார். பரசுராமர் சத்திரியர்களைக் கருவறுத்தவராக இருந்தும் இராமபிரான் அவரைக் கொல்லாமல் உயிரோடு விட்டு விட்டார்

"மெய்த்தவம் போருக வெஞ்சொலிராகவன் வாங்கி
துய்த்தவம் போருக" [வளைத்

"இன்சொ லிராம னியம்ப இரேணுகைசேய்
துன்பமொழி யேபுகன்ருன் சோமேசா—வன்புடைய
இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்குவது"

[இராமனும் பரசுராமனும்] (சோமேசர்முதுமொழி வெண்பா)

---

825. பரதமுனிவர் கதை

பரத மன்னர் பருவம் முதிர்ந்தபின் அனைத்தையுந் துறந்து காட்டையடைந்து கடுந்தவம் புரிந்து பரத முனிவர் என்று பலராலும் போற்றப் பெற்றுச் சிறந்து விளங்கினர். தவம் புரிதலே இவருடைய முழுநேர வேலையாக இருந்தது.

இம்முனிவர் ஒருநாள் கண்டகியாற்றுக்குச் சென்ருர். கருப்பம் முதிர்ந்த மான் ஒன்று அங்கு நீர் குடிக்க வந்தது. அப்பொழுது அண்மையில் அரிமா ஒன்று பெருமுழக்கஞ் செய்தது. அம்முழக்கத்தைக் கேட்டு நடுங்கிய மான் ஓடுங்கி வீழ்ந்து மாண்டது. அதன் குட்டி வெளிப்பட்டுத் தனியே தத்தளித்தது. ஆற்றுக்குச் சென்ற அரச முனிவர் அம் மான் குட்டியைக் கண்டார். உள்ளம் உருகினர்; அதனைத் தம்முடைய தவச்சாலைக்கு எடுத்துக்கொண்டு சென்ருர்.

இப்பொழுது இம் மான் குட்டியை வளர்ப்பதே இவருடைய தவமாக முடிந்தது. அல்லும் பகலும் அம் மான் குட்டியின் எண்ணமாகவே இருப்பார். இவருடைய ஆயுள் முடிந்தது. உடலை விடும் பொழுதும் இம் மான் குட்டியை எண்ணிக் கொண்டே உடலை விட்டார்.

ஒருவர் தம்முடைய இறுதிக் காலத்தில் எதனை எண்ணிக் கொண்டு உயிர் விடுகின்ருரோ அஃதாகவே அவர் ஆகிருர் என்பது அருமறைகளின் துணிபு. மானையே நினைத்துக்

கொண்டு உயிர் விட்ட மாமுனிவர் மறு பிறப்பில் மானுகப் பிறந்தார்.

மானுகப் பிறந்தவர் பழம் பிறப்புணர்ச்சியோடு சில காலம் உலகில் திரிந்து பிறகு மானுடவியல் யொழித்தார். பிறகு அங்கிரா என்னும் ஓர் அந்தணனுக்கு மகனுகத் தோன்றினர். இப்பொழுதும் பழம் பிறப்புணர்ச்சி அப்படியே இருந்தது. அவாவினுல் உண்டாகும் அல்லல் நன்கு அறிந்த இவர் எதிலும் அவா அற்றவராக இருந்து வீடுபேற்றை அடைந்தார்.

எல்லா உயிர்களுக்கும் எக்காலத்திலும் ஒழியாமல் வருகின்ற பிறவித்துன்பத்தை உண்டாக்கும் விதை அவா வேபாகும் என்று அறநூலுடையார் அருளியது இம்முனிவரிடம் நன்கு பெறப்பட்டது.

[அவாவே பிறவி விதை] (பாகவதம்)

---

826. பரதன் கதை (1)

இவன் இராமபிரானுடைய தம்பியாகிய பரதன் அல்லன். கலிங்க நாட்டில் சிங்கபுரம் என்னும் ஊரிற் பிறந்தவன். அவ்வூரில் இருந்து ஆட்சி புரிந்திருந்த வசு என்பவன் இப்பரதனுக்கு நண்பனுக இருந்தான்.

அந்நாளில் கபிலபுரம் என்னும் ஊரில் குமரன் என்னும் பெயருடைய அரசன் ஒருவன் இருந்தான். சிங்கபுரத்து வசுவுக்கும் இந்தக்கபிலபுரக் குமரனுக்கும் போர் மூண்டது. அப்பொழுது கபிலபுரத்துச் சங்கமன் என்னும் பெயருடைய வணிகன் ஒருவன் சிங்கபுரத்திற்குச் சென்று வாணிகத்தில் ஈடுபட்டான்.

சிங்கபுரத்துப் பரதன் கபிலபுரத்துச் சங்கமனைக் கண்டான். தன் நண்பனும் அரசனும் ஆகிய வசுவிடம் போய்க் "கபிலபுரத்தில் இருந்து சங்கமன் என்னும் பெயருடைய ஒற்றன் நம்முடைய நகரத்திற்கு வந்து வணிகஞ்

செய்வதைப்போல் நடித்து உளவறிந்து கொண்டிருக்கிறான். வணிகன் போல் வேவு பார்க்கும் அவனைக் கொன்றுவிட வேண்டும்'' என்று கொடும்பழி சுமத்தினான்.

வசுமன்னன் பரதன் பகர்ந்ததை உண்மை யென்று நம்பினான். சங்கமனைக் கொன்றுவிடச் செய்தான். சங்கமனுடைய மனைவியின் பெயர் நீலி. அவள் தன்னுடைய தலைவன் கொல்லப்பட்டதை உணர்ந்தாள். சிங்கபுரத்துக்கு வந்தாள். 'குற்றமற்ற என் கணவனைக் கொல்லுமாறு சூழ்ச்சி செய்தவன் தானும் அவ்வாறே கொலையுண்டு தொலைக. அவனுடைய மனைவியும் என்போல் துன்படைந்து கெடுக' என்று கொடிய சாபமிட்டாள். தான் தன் தலைவன் உடலைத் தழுவி மாண்டாள். அவள் சாபப்படியே மறு பிறவியில் பரதன் கோவலனைப் பிறந்து அவமே மாண்டொழிந்தான்.

எவ்வளவு பெரிய பகையைப் பெற்றவரும் உய்வர். ஆனால் தீவினையின் பகையோ தான் என்றுங் கெடாது பின் சென்று வருத்தும், என்று பெரியோர்கள் கூறிய கூற்றுக்கு இப்பரதனே தக்க சான்றாக அமைந்தான்.

[தீவினையின் பகை] (சிலப்பதிகாரம்)

---

827. பரதன் கதை (2)

சந்திரகுல மன்னனாகிய துஷ்யந்தன் என்பவனுக்கு இவன் புதல்வனாகத் தோன்றினான். இசை நூலில் மிக வல்லவன். அதனோடு மக்களின் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களை உடலுறுப்புக்களின் குறிப்பால் உணர்த்து தற்குரிய கலையிலும் இவன் சிறந்து விளங்கினான். அக்கலை பரதம் என்று பெயர் பெறும். இவன் அக்கலையில் வல்லவனாக விளங்கவே இவனுக்குப் பரதன் என்று காரணப் பெயர் உண்டாயிற்று.

இவன் அறநெறி முறைமையோடு அரசாட்சியைச் செய்துகொண்டிருந்தான். எவராலுஞ் செய்தற் கரிய

வேள்விகள் பல வற்றை இவன் செய்து முடித்தான். பதினேழு கோடி வெள்ளியானைகளைத் தன் குருவுக்குத் தானமாகக் கொடுத்தான். இந்திரன் பொருட்டு அசுரரோடு போர் செய்து வென்று தேவரைக் காத்தான். இவனுடைய செங்கோல் எல்லோரானும் நன்கு பாராட்டப் பெற்றமையால் இவனுடைய வழி முறையினரும் பாரதர் என்று கூறப்பெற்றனர். பாண்டவர்கள் துரியோதனன் முதலியோர் இவனுடைய வழி முறையில் தோன்றியவர்களே. இவர்களுடைய வரலாற்றைக் கூறும் நூலும் பாரதம் என்றே பெயர் பெற்றது.

[இறைமாட்சி]

---

828. பரத்துவாசர் கதை

பரத்துவாசர் என்பவர் முனிவர்களில் ஒருவர். இவருடைய தந்தையார் பெயர் உதத்திய முனிவர். இவர் சினமற்றவராகத் திகழ்ந்தார். அதனால் இவரை அனைவரும் பாராட்டினர். பரத்தினிடத்திலேயே இவர் தம் முடைய உள்ளத்தைச் செலுத்தியிருந்ததால் இவருடைய பெயர் பரத்துவாசர் என்று பரவியது.

இராமபிரான் காட்டு வாழ்க்கையை முடித்துத் திரும்பி வந்த போது இவர் அவரை வரவேற்றுப் பாராட்டினர். சிறந்த விருந்து செய்ய எண்ணினர். விண்ணுலகத்தில் உள்ள இனிய பொருள்கள் எல்லாம் தம்மிடத்தில் வருமாறு எண்ணினர். அப்படியே சுரபி, சிந்தாமணி, அமுதம் முதலிய உயரிய பொருள்களெல்லாம் வந்தன. அனைவருக்கும் ஒரே தன்மையாகச் சிறந்த விருந்தை இயற்றினர். எல்லோரும் உண்டு மகிழ்ந்து இவருடைய பெருமையைப் பாராட்டினர்கள்.

இவர் தவநலத்தால் எண்ணியவைகளை எண்ணியவாறே முடிப்பதை இராமபிரான் புகழ்ந்தார். ஒருவன் தன்னுடைய மனதில் சினத்தை எண்ணுதவனாக இருந்தால்

அவன் எண்ணிய பொருள்களெல்லாம் திண்ணமாக உடனெய்தும் என்பதனை அனைவரும் இவரிடங் கண்டு தேறினர்.

[தவநலம்] (இராமாயணம்)

---

829. பராந்தகன் கதை

பராந்தகன் என்பவன் ஓர் அரசன். இவன் வெகு காலத்திற்கு முன் உறையூரில் அரசாட்சி செய்து கொண்டிருந்தான். அந்நாளில் சாரமா முனிவர் என்பவர் சிவபிரானுக்குச் செவ்வந்திமலர் அணிய விரும்பி மலர்ப்பொழில் ஒன்று அமைத்தார். அதிற் செவ்வந்தி மலர்கள் தோன்றின.

பராந்தக மன்னனின் ஏவலனுகிய மாவலன் என்பவன் சாரமாமுனிவரது மலர்ப்பொழிலில் இருந்து மலர் களைக் களவு செய்துகொண்டு போய் அரசனுக்குக் கொடுத்தான். அவன் அதனைப் பெற்று மகிழ்ந்தான். முனிவர் இக்களவினை அரசனுக்கு உணர்த்தினர். அரசன் களவு செய்பவனைக் கண்டித்துத் தடுக்கவில்லை. களவினால் ஆகிய மலரை நாளும் பெற்று மகிழ்ந்தான்.

சாரமா முனிவர் சீறினர்; களவினால் வருகிறதென்பதை அறிந்தும் அரசன் கொள்ளுகிறானே என்று வருந்தினர். முனிவர் பெருமையால் உறையூரில் மண்மாரி பெய்து மூடியது. மன்னனும் மாண்டான். தான் களவு செய்யாதிருந்தும் களவினால் கிடைத்ததை மருது கொண்டமையால் அரசனுக்கு இவ்வாறு அழிவு நேரிட்டது.

பிறருடைய பொருளைக் களவால் கொள்ள வேண்டாம் என்று உள்ளத்தால் எண்ணுதலும் தீமையைக் கொடுக்குமென்பது இவனால் உலகிற்குத் தெரியலாயிற்று.

[உள்ளத்தால் எண்ணுதலும் தீமை]

---

830. பரிகளை நரிகளாக்கிய கதை

திருவாதவூரடிகளின் பொருட்டு மதுரைக் கடவுள் காட்டில் திரிந்த நரிகளை யெல்லாங் குதிரைகளாக்கிப் பாண்டிய மன்னனிடங் கொடுத்துவிட்டுச் சென்றார். அப்பரிகளெல்லாம் அன்றிரவில் நரிகளாயின. மதுரைக் கதவு அடைக்கப் பட்டிருந்தபடியால் அவைகள் உடனே வெளியேற முடியவில்லை. நகரெங்குஞ் சுற்றித் திரிந்து எதிர்ப்பட்டவர்களை யெல்லாங் கடித்தன. குதிரைச் சாலையில் முன்னிருந்த குதிரைகளையுங் கடித்துத் துன்புறுத்தின. அன்றிரவு மதுரை நகரெங்கும் நரிகளால் மிகுந்த தொல்லை விளைந்தது. நண்டு நத்தைகளை உண்டு பழகிய அந்நரிகள் மறுநாட் காலையில் நகரின் கதவு திறக்கப்பட்டதும் மிகு விரைவாகக் காட்டை நோக்கி ஓடிப்போயின. இச்செய்தி திருவாதவூரருக்கோ பாண்டிய மன்னனுக்கோ பொழுது விடியும் வரையில் தெரியவில்லை. மறுநாள் காலையில் மன்னன் திருவாதவூரரைக் கண்டு மிகுந்த சினங்கொண்டான். தண்டஞ் செய்வோரிடம், "திருவாதவூரரை ஒறுத்துப் பொருளை வாங்குங்கள்" என்று கூறி அவர்களோடு அனுப்பினன். அவர்களும் திருவாதவூரரைக்கொண்டு போய்ப் பலவாறு துன்புறுத்தினர்கள்.

(திருவிளையாடல்)

"நரியைக் குதிரைப் பரியாக்கி
ஞாலமெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம்
பிச்ச தேற்றும் பெருந்துறையாய்"

(திருவாசகம்)

திருவாத வூரரெம் மாணிக்க வாசகர் தென்னவன் முன்
வெருவாது காட்டு நரிபரியாய் விற்க மீண்டவைதாம்
நரியாக வைகை நரிபெருக்காய் வரும் நாளிற் சொக்கர்
அறியாது போய்மண் சுமந்ததும் பாண்டியன்

[மண்டலமே.

[பரிகளை நரிகளாக்கியது] (பாண்டிமண்டல சதகம்)

83. பரிச்சித்து கதை

பரிச்சித்து என்பவன் அருச்சுனனுடைய பேரன். இவனுடைய தாய்பெயர் உத்தரை. தந்தை பெயர் அபி மன்னன். இவன் அறநெறிப்படி அரசாட்சி செய்துகொண் டிருந்தான். ஒருநாள் வேட்டைக்குச் சென்றபொழுது இறந்துகிடந்த பாம்பொன்றை எடுத்துச் சமீக முனிவருடைய கழுத்தில் மாலையாகப் போட்டுவிட்டுச் சென்றான். இச் செய்தியை அறிந்து சமீக முனிவருடைய மகனுகிய சிருங்கி முனிவர் பரிச்சித்துப் பாம்புகடித்துச் சாகுமாறு சாபமிட்டார்.

பரிச்சித்துவின் சாவு ஏழு நாட்களுக்குள் நிகழ்வதாக இருந்தது. செய்தியை அறிந்த பரிச்சித்து பாம்பு கடித்துச் சாவதில் இருந்து தப்புவதற்காகப் பலமான ஏற்பாடுகளைச் செய்தான். எவ்வுயிரும் அண்மையில் நெருங்காதவாறு தெப்பம் ஒன்றில் ஏறிக் கடலில் ஓரிடத்தில் இருந்தான்.

பலர் அரசனைப் பாதுகாத்திருந்தனர். குறித்த காலம் நெருங்கியது. கார்க்கோடகன் என்னும் பாம்பு அரசனைக் கடிப்பதற்கு எழுந்தது. அரசன் இருக்கும் நிலையை அறிந்தது. எலுமிச்சம்பழம்போல் உருவெடுத்துக் கடலில் விழுந்தது. அலையின் உதவியால் தெப்பத்தின் அண்மையில் வந்து சேர்ந்தது. நமக்குத் தொல்லை ஒன்றும் இல்லையென்று எண்ணியிருந்த அரசன் அவ்வெலுமிச்சம் பழத்தைக் கையில் எடுத்தான்.

அவ்வளவில் கார்க்கோடகன் தன் உருவத்தை எடுத்துக் கொண்டு அரசன் கையிற் கடித்தது. அரசன் உடனே அலறி வீழ்ந்து மாண்டான். ஊழைக் காட்டினும் பெரிய வலிமை யுடையது வேருென்றும் இல்லையென்பதை அனைவரும் இவ னிடம் அறிந்தனர்.

[ஊழ்வலிது] (பாரதம்)

832. பரிமாமிசைவரப் பண்ணிய கதை

" திருவாதவூரடிகள் சிவபிரானிடத்தில் எல்லையற்ற அன்பு கொண்டு விளங்கினர். குதிரைவாங்கும் பொருட்டு மதுரையில் பாண்டியன் பொருளை எடுத்துக்கொண்டு புறப்பட்டபோதே அவர், "இறைவா! இப்பொருள்களை நின் திருப்பணிக்குச் செலவுசெய்தல் வேண்டும்" என்னும் எண்ணத்துடனேயே எடுத்துக்கொண்டுசென்றார். திருவாதவூரின்எண்ணப்படியே சிவபெருமானுடைய திருப்பணிகள் நடைபெற்றன. பொருள் முழுவதுஞ் செலவாகிவிட்டது. திருவாதவூரின் எண்ணமும் நிறைவேறிவிட்டது. திருவாதவூரரைக் காக்கவேண்டியது இறைவனுடைய கடமையாகிவிட்டது. ஆகவே அவர் குதிரை கொண்டுவரும் பணியில் ஈடுபட்டு நரிக்குதிரைகளை ஏற்பாடு செய்தார். தாம் காளையில் ஏறுபவராக இருந்தும் இப்பொழுது குதிரையில் ஏறிவரவேண்டியவரானார். ஏற்றில் ஏறும் இறைவனைக் குதிரையில் ஏறச்செய்தது திருவாதவூரடிகளின் திருப்பணியேயாகியது. (திருவிளையாடல்)

" இளஏறு உகந்தேறியைப்
பரிமா மிசைவரப் பண்ணிய வித்தக "

[சிவபெருமான் குதிரையில் வந்தது] (நால்வர் நான்மணிமாலை)

---

833. பரிவாய்பிளந்த கதை

கண்ணபிரானைக் கொல்லப் பல முயற்சிகளை மேற்கொண்டிருந்த கம்சன் ஒருநாள் கேசியென்னும் அசுரனைக் கண்ணனிடம் அனுப்பினான். அக்கேசி குதிரையின் வடிவத்தையெடுத்துக்கொண்டு ஆயர்கள் அஞ்சி நடுங்குமாறு கனைத்துக் கண்ணன்மீது பாய்ந்து வந்தான். கண்ணன் தன்னுடைய கைகளைப் பெரிதாக்கி நீட்டினான். அதன் வாயிற் கொடுத்துத் தாக்கினான். பற்களை உதிர்த்து உதட்டைப் பிளந்தான். அதனுடைய உடலையும் இருபிளவாக்கிக் கொன்றான்.

[கேசி என்னும் அசுரன்] (பாகவதம்)

---

834. பர்த்துருகரியார் கதை

இவர் வடநாட்டில் உச்சயினி என்னும் நகரத்தில் இருந்து அரசு புரிந்துகொண்டிருந்தார். ' புவிவேந்தராக விளங்கியதுடன் சிறந்த கவி வேந்தராகவும் விளங்கினர். வடமொழிப் புலமையாளர். தம்முடைய பெயரால் பர்த்துருகரி நீதி சதகம், சிருங்கார் சதகம் முதலிய நூல்களை இவர் இயற்றியுள்ளார். வாழ்க்கைக்கு வேண்டிய வளன்களெல்லாம் இவரிடத்தில் நன்கு அமைந்திருந்தன. தம் மனைவியோடு இல்வாழ்க்கையை இவர் இனிதுநடத்திக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் முனிவர் ஒருவர் இவரிடத்திற்கு வந்தார். கிடைத்தற்கரிய மாங்கனியொன்றை அரசரிடந் தந்தார். அதனை உண்பவர் நெடுங்காலம் உலகில் உயிர்வாழ்ந்திருக்கலாம். அரசர் அவ்வரிய கனியைத் தம் மனைவிக்குக் கொடுத்தார். அவள் அதனைத் தன்னுடைய கள்ளக் காதலனுக்குத் தந்தாள். அவன் அதனைத்தான் விரும்பியிருந்த ஒரு விலைமகளுக்குக் கொடுத்தான். அவள் அதனைத்தான் விரும்பியிருந்த ஓர் இடையனுக்குக் கொடுத்தாள். அவ்விடையன் அதனைத் தான் காதல் கொண்டிருந்த ஒரு பறைச்சிக்குக் கொடுத்தான்.

பறைச்சி அக்கனியின் பெருமையை அறியாளாகையால் அதனைத் தன்னுடைய சாணிக் கூடையின்மேல் வைத்துக் கொண்டு தன்னுடைய இல்லத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தாள். அப்பொழுது அரசர் மேல்மாளிகையில் உலாவிக் கொண்டிருந்தார். அவர் பறைச்சி கூடையிற் கொண்டு போகும் மாங்கனியைப் பார்த்தார். தாம் முனிவரிடமிருந்து பெற்ற கனிபோல் இருக்கிறதே என்று எண்ணமிட்டார். ஏவலரை அனுப்பி அவளைத் தம்மிடம் அழைத்துவரச் செய்தார். அக்கனி ஏதென்று வினவினர். அவள் உண்மையைச் சொன்னாள். தொடர்பாக உசாவியதில் உண்மை விளங்கியது. தம்மனைவியின் தீயொழுக்கத்தை அரசர் அறிந்தார். அவளைக் கொலைசெய்ய எண்ணினர். ஆயினுங் கொலைசெய்யவில்லை. தாம் இல்லத்தைத் துறந்துசென்றார்.

இல்லறத்தை நடத்துதற்கு வேண்டிய சிறந்தகுணம் இல்லாளிடம் இல்லையானால் இல்லறவாழ்வு இல்லாத அற வாழ்வாகவே முடியுமென்பதை உலகம் நன்கு உணர்ந்து கொண்டது.

[மனையாளிடம் சிறந்த குணம் இருக்கவேண்டும்]

---

835. பலராமன் கதை

பாரதப்போர் மூண்டது. கண்ணன் பாண்டவர்களுக்குத் தேரோட்டியானான். பலராமன் முதலியவர்களைத் துரியோ தனனுக்குத் துணைபோகுமாறு கட்டளையிட்டான். பலராமன் கண்ணன்கழறியபடி துரியோதனனுக்குத் துணைபோகவில்லை. ஒரு காரணத்தை முன்னிட்டுத் துணைவர்களோடு புறப்பட்டுத் திருத்த நீராடப் போய்விட்டான். போரில் துரியோதனன் கூட்டம் அழிந்தொழிந்தபிறகு திரும்பிவந்தான். துரியோ தனன் தொலைந்துபோனதை அறிந்தான். போரில்மாண்ட துரியோதனனும் அவனுடைய துணைவர்களும் நற்கதியடைய வேண்டும் என்று காட்டிற்குச்சென்று தவஞ்செய்யத் தொடங்கினன். துரியோதனனுக்குச் சமயத்தில் உதவி செய்யாமல் அவன் இறந்தபிறகு அவனுடைய நன்மையை நாடித் தவஞ்செய்யத் தொடங்கிய பலராமன்செயல் எல்லோ ருக்கும் நகைப்பையும் வியப்பையும் அளித்தது. "பலராமன் திருநாள் கழித்துத் தேரிழுக்க வந்தான்" என்று கூறி எள்ளி நகையாடினர்கள். சமயத்திற்கு உதவாதவர்களைக் குறித்தும் பேசநேர்ந்த விடத்துத் 'திருநாட்கழித்துத் தேரிழுக்க வந்தார்' என்று கூறுவது வழக்கமாகிவிட்டது.

[சமயத்திற்கு உதவாதவர்]

---

836. பலராமன் யமுனையாற்றை அடக்கிய கதை

ஒரு காலத்தில் பலராமர் யமுனையாற்றைப் பார்த்து, "ஓ யமுனைய்! நான் நீராடுதல் வேண்டும். நீ இங்கே வா" என்று கூப்பிட்டார். யமுனை பலராமர் கூப்பிட்டபடி வரவில்லை. ஏதோ மயக்கத்தினால் பிதற்றுகிறார் என்று எண்ணியது. பலராமர் மிகுந்த சினங்கொண்டார். தமது படைக்கலமான கலப்பையைக் கையிலெடுத்து அதன் நுனியால் அவ்வாற்றை யிழுத்தார். அவ்வாறு தான் போகும் வழியைவிட்டுப் பலராமர் இருக்குமிடத்திற்கு வந்தது. தன்னுடைய உடலோடு அவருக்கெதிரில் நடுங்கி நின்றது. பலராமர் அதனுடைய குற்றத்தைப் பொறுத்தார். அதனிலே நீராடினார்.

[யமுனையை அடக்கியது]

---

837. பலாத் தழைக்கப் பாடிய கதை

ஒரு குறவனுக்கு இரண்டு மனைவியர் இருந்தனர். அவர்களிருவரும் அடிக்கடி போரிட்டுக்கொண்டே யிருப்பர். குறவன் இளையாள்மீது மோகங்கொண்டவனாய் மூத்தாளைச் சிறிது வெறுத்திருந்தான். அக்குறவன் பலாமரம் ஒன்றைக் கண்ணுங் கருத்துமாகத் தன் இன்னுயிர்போல் வளர்த்து வந்தான். மூத்தாளைக் கணவனுடைய சினத்திற்கு உள்ளாக்கி நன்கு அடிவாங்குமாறு செய்யவேண்டும் என்று எண்ணிய இளையவள் தன்னுடைய கணவன் இல்லாத சமயத்தில் பலாமரத்தை வெட்டிவிட்டு மூத்தவள் மீது பழிசுமத்தினாள். தன் கணவன் வந்தால் தன்னை யாதுசெய்வானோ என்று மூத்தவள் அழுது புலம்பிக் கொண்டிருந்தாள். அப்பொழுது ஔவையார் அவ்வழியே வந்தார். மூத்தவள் அழுவதைக் கண்டு காரணம் உசாவினார். மூத்தவள் நிகழ்ந்ததைக் கூறினாள். உடனே ஔவையார் :

"கூரிய வாளால் குறைத்திட்ட கூன்பலா
ஓரிதழாய்க் கன்றுய் உயர்மரமாய்ச்—சீரியதோர்
வண்டுபோற் கொட்டையாய் வண்காயாய்த்
பண்டுபோல் நிற்கப் பணி" [தின்பழமாய்ப்

என்று தம்முடைய வழிபடு கடவுளாகிய ஆனைமுகக் கடவுளை நோக்கிப் பாடினர். ஆனைமுகக் கடவுள் அருளாற் பலா உடனே தழைத்துக் காய்த்துப் பழுத்து நின்றது. இப் புதுமையைக் கண்ட மூத்தவள் ஔவையாரைப் புகழ்ந்து பாராட்டித் தன்னிடம் அப்பொழுதிருந்த தினையை ஔவை யாருக்குக் கொடுத்தாள். ஔவையார் அதனை வாங்கித் தம்முடைய மூட்டையில் முடிந்துகொண்டு சோழமன்ன னிடஞ் சென்றார். ஔவையாரிடத்தில் மூட்டையைக் கண்ட சோழமன்னன் "மூட்டையில் என்ன இருக்கிறது?" என்று உசாவினன். ஔவையார் :

"கூழைப் பலாத்தழைக்கப் பாடக் குறமகளும்
ஊழக் குழக்குத் தினைதந்தாள்—சோழகேள்
உப்புக்கும் பாடிப் புளிக்கும் ஒருகவிதை
ஒப்பிக்கும் என்றன் உளம்"

என்னுஞ் செய்யுளைப் பாடினர்.

[ஔவையாரின் வாக்குச் சிறப்பு]

---

838. பலி கதை

பலி என்பவன் விரோசனன் என்பவனுடைய மகன். செல்வச் சிறப்பு இவனிடம் மிகுதியாக இருந்தது. இன் பங்களை யெல்லாம் எண்ணியவாறே நுகர்ந்து களித்திருந் தான். தேவர்கட்குத் தீமை செய்வதிலும் இவன் தலை சிறந்து நின்றுனகையால் அனைவரும் இவன் மீதுபொருமை கொண்டிருந்தார்கள். முனிவர்களுந் தேவர்களும் இவனி டம் வந்து வாய்கொண்டமட்டும் புகழ்ந்து இவனுடைய்

செல்வத்தைக் கொள்ளை கொண்டுபோயினர். புகழ்ச்சி விருப்பனுகிய இவன் புகழ்ச்சியைத்தான் பெரிதாகக் கருதி ஞனே தவிரப் பொருளைப் பெரிதாகக் கருதவில்லே.

நாளும் நாளும் தேவர்களுடைய புகழ்ச்சியும் அவர் கட்கு இவன் செய்யுந் தானதருமங்களும் அளவு கடந்து சென்றமையால் இவன் மிகுவிரைவில் வறியவனுனன். அரசாட்சியும் இவனேவிட்டு அகன்று போயது. தனக்குப் பொருள் உள்ள அளவை முன்னரே இவன் சீர்தூக்கிப் பார்த்துப் பொருளின் நிலேக்குத் தக்கவாறு கொடையின் நிலேயையும் மேற்கொண்டிருப்பானுயின் இவனுக்கு இந்நிலே ஏற்பட்டிராது. தனக்கு உள்ளபொருளின் அளவை ஆரா யாமல் மேற்கொள்ளும் ஒப்புரவினுல் ஒருவனுடைய செல் வத்தின் அளவு விரைவில் கெடும் என்பதை இவன் உலகத் திற்கு உணர்த்தினுன்.

[அளவறிந்து கொடை வழங்கல்]

---

839. பலிதன் கதை

பலிதன் என்பவன் பாண்டிவள நாட்டில் பிரான்மலே என்னும் ஊரில் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு வாழ்ந் திருந்தவன். எல்லா நூல்களேயும் இவன் நன்கு ஓதியுணர்ந்து விழுமிய புலமைபெற்றுத் திகழ்ந்தான். கல்வியறிவிற் சிறந்து விளங்கினும் அவையில் பலர்முன் யாதும் பேசத் திறமற்றவனுக இருந்தான். தனியே வந்து தன்பால் கற்க விரும்புகிறவர்களுக்கும் உரையாடுகிறவர்களுக்கும் கோடையிடிபோல் பலவற்றைக் கூறி முழங்கிக் கொண் டிருந்தான். இதனுல் இவன் பெரும் புலவன் என்று எங்கும் பேராகியது. இவனுந் தன்னேச் சிறந்த அறிஞனென்றுந் தனக்கு நிகராவார் எவருமிலரென்றும் உள்ளந் தருக்கியிருந் தான். மற்றைப் புலவர்கட்கு யாதுந் தெரியாதென்றும் இகழ்ந்து வந்தான். ஒருகாலத்தில் பாணசூரி என்னும் புலவன் ஒருவனுக்கும் இவனுக்கும் சொற்போர் உண்டாகு மாறு சிலர் அவை கூட்டிப் போர் மூட்டி விட்டார்கள்.

முதலில் பாணரூரி ஏழுந்து முறையாகத்தான் பேச வேண்டியவைகளைப் பேசிமுடித்தான். பிறகு பலிதன் பேச எழுந்தான். பலர் கூடியிருந்தபடியால் அவையச்சம் இவனைச் சூழ்ந்துகொண்டது. யாதும் பேசமுடியாமல் ஊமை போல் நின்றான். வாயைத் திறந்து பேச எவ்வளவோ முயன்றும் வாயைத் திறக்க முடியவில்லை. பலரும் இகழ்ந்து சென்றனர். இவனும் இழிவடைந்து சென்றான். சிறந்த அறிஞனாக விருப்பினும் அவையில் பேச இயலாதவன் சிறுமையடைவான் என்பது இவன்பால் நன்கு விளங்கியது.

[அவையஞ்சுவோர் இழிவடைவார்]

---

840. பவணமாதேவன் கதை

பவணமாதேவன் என்பவன் தாதகிநாட்டில் பூமிதிலகம் என்னும் நகரில் இருந்து அரசு புரிந்துகொண்டிருந்தான். இவன் எல்லா உயிர்களிடத்திலும் அன்பும் அருளும் உடையவன். எவ்வுயிரையுந் தன்னுயிரைப் போல் எண்ணி ஒழுகும் இயல்புடையவன்.

இவனுடைய மகன் அன்னத்தின் குஞ்சொன்றைப் பிடித்துத் தன் மனைவியரிடங் கொடுத்தான். அவர்கள் அதனைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தார்கள். பவணமா தேவர் ஒரு நாள் அந்த அன்னக் குஞ்சைக் கண்டான். நன்கு போற்றி வளர்ப்பினும் அது தன்னுடைய தாயையுங் கூட்டத்தையும் பிரிந்ததனால் ஏங்கித்தளர்ந்திருத்தலைக் கண்டான்; இன்னருள் கொண்டான்.

தன்னுடைய மகனைப் பார்த்து, "மகனே! அவ்வாறு சிறிய குஞ்சைப் பிடித்து வருத்தலாமா? இது மிகத் தீவினையாயிற்றே. அது தன் தாயிடம் வளருவது போல் இங்கு வளருமா?" என்று கூறிக் கலங்கினான். தந்தையின் கலக்கத்தைக் கண்ட மைந்தன் அக் குஞ்சை விட்டுவிட்டான். பிறகு தானுந் தன்னுடைய தந்தையைப் போல் இன்னருள் உடையவனாயினான்.

மற்றைய உயிர்கட்குளதாம் நோயினைத் தமக்கு ஏற் பட்ட நோயைப் போல் எண்ணிப் போற்றுவிடத்து அறிவி னுல் ஆகக்கூடிய பயன்யாதும் இன்றும் என்பது இப் பவணமாதேவனிடம் நன்கு விளங்கியது.

[பிறர்நோயைத் தன்நோய்போல் எண்ணுதல்] (சிந்தாமணி)

---

841. பவுண்டரகன் கதை

பவுண்டரகன் என்பவன் முன்னளில் குரு நாட்டை அ ர சா ட் சி செய்துகொண்டிருந்தான். கண்ணபிரானும் இந்நாளில்தான் உலகில் வாழ்ந்திருந்தார். நாரத முனிவர் கலகஞ் செய்வதில் வல்லவர். கண்ணனிடம் பவுண்டரகன் பகைகொள்ளுமாறு அறிவுறுத்திவிட்டார்.

பவுண்டரகன் தானுங் கண்ணபிரான் போல் நடிக்கத் தொடங்கினன். கண்ணனுடைய அறிகுறிகளாகிய சங்கு சங்கரம் முதலியவைகளைத் தானுந் தாங்கினன். இவனுக்கு அவைகள் இறைவன் அருளால் எய்தின. இவன் அவை களை மேற் கொண்டவுடன் கண்ணபிரானிடம் போய்ச், "சங்கு, சக்கரம், தண்டு முதலியவைகள் எனக்கே உரியன. இவைகளை இனிமேல் நீ தாங்குதல் கூடாது. அவைகளை விட்டு விடுக" என்று உ ரை த் த ான். கண்ணனைப் பலவாறு இழித்துரைத்தான். இவன் ஒருவரை இழித்துரைப்பதனுல் நேருக்கு நேரேதான் இழித்துரைப் பானே தவிரக் காணுத இடத்தில் இழித்துரைக்க மாட் டான். இவ்வுயரிய கு ண ம் இவனுக்கு இயல்பாகவே அமைந்திருந்தது.

'ஆழி முதலியவைகளை நீ விட்டு விடுக' என்று பவுண்டரகன் பகர்ந்தவுடன் கண்ணன் தன்கையில் இருந்த ஆழிப்படையை முதலில் விட்டான். அப்படை விரைந்து வந்து இவனுடைய தலையை அறுத்துச் சென்றது. இறந் தொழிந்த இவன் மாயவன் உருவம் பெற்று மகிழ்ந்தான்.

பொருமை முதலிய தீக்குணங்கள் இவனிடம் அமைந் திருந்தும் புறங்கூருமை யொன்றினுலேயே சிறப்படைந்தான். காணுவிடத்தே பழித்துரைத்து ஒருவன் உயிர் வாழ்வதை விட இறந்தொழிதல் அறநூல் உரைக்கும் மேன்மையைத் தரும் என்பது இப்பாவுண்டரகனிடத்தில் இனிது பெறப் பட்டது.

[புறங்கூறலில் இறத்தல் இனிது] (பாகவதம்)

---

842. பழநியாண்டவர் கதை (1)

நான்முகனுக்கு முன்னுல் நாரதமுனிவர் வீணைவாசித் தார். நான்முகன் மகிழ்ந்து மாங்கனி ஒன்றை நாரதருக்கு நல்கினுன். நாரதர் கைலேக்குச் சென்ருர். தாம் பெற்ற கனியை இறைவன் முன்பு வைத்து வணங்கினர். இறை வன் தம்முடைய புதல்வர்களாகிய ஆனைமுகனையும் ஆறு முகனையும் பார்த்து, ''இவ்வுலகை வலஞ் செய்து விட்டு முதலில்வந்து கேட்பவர்கட்கு இக்கனியை வழங்குவேன் என்று இயம்பினர். முருகக் கடவுள் உடனே மயிலின் மீது ஏறிக் கொண்டு உலகை வலம்வரத் தொடங்கினர். ஆனை முகக் கடவுளோ இறைவனை வலம்வந்து, ''எல்லா உலகங் கட்குந் தந்தையாக உள்ள தங்களை வலஞ் செய் தால் எல்லா உலகையும் வலஞ்செய்ததனேடொக்கு'' மென்ருர். இறைவன் மாங்கனியை ஆனைமுகக் கடவுளுக்கு அளித் தருளினர். பிறகு வந்து சேர்ந்த முருகக் கடவுள் செய்தியை உணர்ந்தார்; மனம் வருந்தினர். திருவாவினன்குடியை அடைந்து தங்கினர். இறைவன் உமாதேவியோடு பழநியை அடைந்து முருகப்பெருமானைக் கண்டார். ''எங்கட்கு இனிய பழம் நீயே'' என்று கூறி எடுத்து அணைத்துக்கொண் டார். முருகக்கடவுள் துறவுக் கோலத்துடன் அவ்விடத் திலேயே தங்கிவிட்டார். அந்த இடமே பழநியாகி மிகுந்த சிறப்புடன் திகழ்ந்து விளங்குகிறது.

[முருகக்கடவுள் உலகை வலம் வந்தது] (பழநிப்புராணம்)

---

843. பழநியாண்டவர் கதை (2)

இடும்பனென்பவன் சூரபதுமன் முதலிய அசுரர்களுக்கு வில்லாசிரியனாக அமைந்திருந்தான். முருகக் கடவுளால் சூரபதுமன் அழிந்தொழிந்த பிறகு இடும்பன் நல்லறிவு பெற்றான். உரு மாறி மனிவியோடு பொதிகை மலையை அடைந்தான். அகத்திய முனிவருக்குப் பணி செய்துகொண்டு அவ்விடமே தங்கியிருந்தான்.

அகத்தியமுனிவர் இடும்பனைப் பார்த்து, "வடக்கே உள்ள பூர்ச்சவனத்தை யடைந்து, அங்குள்ள சிவசக்தி என்னும் இரண்டு சிகரங்களைக்கொண்டு வருவாயானால் போகம் வீடு இரண்டும் கிடைக்கும்" என்று கூறினர். அகத்தியர் உரைத்தபடி இடும்பன் பூர்ச்சவனத்தை யடைந்தான். இரண்டு மலைகளையும் காவடியாக்கித் தோட்சுமையாகக் கொண்டுவந்தான்.

வழியில் வில்லுடனும் அம்புடனும் முருகக்கடவுள் ஓர் அரசனைப் போலத் தோன்றி யெதிர்த்தார். இடும்பன் வழி மயங்கித் திருவாவினன்குடியை அடைந்தான். பசி தாகக் களைப்பால் தோட்சுமையைக் கீழே வைத்தான். களைப்புச் சிறிது தெளிந்த பின் தூக்கினான். மலை அசையவில்லை. ஐயங் கொண்டு மலைமேல் ஏறிப் பார்த்தான். தடியைத் தாங்கிய ஓர் இளைஞனைக் கண்டான். இளைஞனைய முருகக் கடவுள் "அசுரனே! இம்மலையை விட்டுச் செல்வாயாக" என்று கட்டளையிட்டார். அசுரன் சினங்கொண்டு முருகவேளின்மீது பாய்ந்தான். போர் நிகழ்ந்தது. விரைவில் அசுரன் மாய்ந்தான். இடும்பி இரந்து வேண்டினள். முருகன் திருவருளால் இடும்பன் எழுந்தான். முருகக் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தான். தம்முடைய பணிகளைப் புரிந்து கொண்டிருக்குமாறு முருகக் கடவுள் அருள்புரிந்தார். அம்மலைகளே சிவமலையும் சித்திமலையும் ஆம்.

[பழநியாண்டவர்] (பழனித்தல புராணம்)

844. பழிக்குப் பழி தீர்த்த கதை

இராமபிரான் சுக்கிரீவன் பொருட்டு வாலியை மறைந்து நின்று கொன்றார். இருவர் போராடிக்கொண்டிருக்கும் போது மூன்றாம்பேர் ஒருவர் போரிடுவாரில் ஒருவர்க்கு உதவியாக மற்றவரை யடித்து வீழ்த்துவது அறநெறியின் பாற்பட்டதன்று. அறநெறிகளை யெல்லாம் உணர்ந்த இராம பிரானே இவ்வாறு சுக்கிரீவனுக்கு உதவியாக வாலியைக் கொன்று வீழ்த்தியது தீவினை நேர்தற்கு இடமாக முடிந்து விட்டது. அவ்வாறு கொல்லப்பட்ட வாலி பின்னர் உலுப் தகன் என்னும் வேடனுகப் பிறந்தான். இராமபிரானே கண்ணபிரானுக வேறொரு பிறவியை எடுத்தார். இறுதி நாளில் கண்ணபிரான் காலமேலே தூக்கியவாறு ஒருவகை யான யோகத்தில் அமர்ந்திருந்தார். அவருடைய காலின் பெருவிரல் ஆடியது முற்கூறிய வேடனுக்கு ஒரு பறவையைப் போல் தெரிந்தது. பறவையென்றே முடிவு செய்த வேடன் ஒரு கணையைச் செலுத்தினன். அதனுல் கண்ணபிரான் உலகை விட்டகன்றார்.

"வாலிகெட ராமனெரு வாளிதொட்ட வெம்பழியை
மேலொருசென் மத்திலன்னேன் மீண்டு கொன்றுன்—
[ஞாலமதில்
வல்லவனே புன்னை வனநாதா யாரெனினும்
ஒல்லை கெடுப்ப தொழி"

பழிக்குப்பழி] (ஆத்திசூடி வெண்பா)

---

845. பழியஞ்சிய கதை

மதுரைமாநகரில் குலோத்துங்க பாண்டியன் என்பவன் அரசுசெய்துகொண்டிருந்த காலத்தில் ஓர் அந்தணன் தன் மனைவியோடும் குழந்தையோடுந் திருப்புத்தூரில் இருந்து மதுரையை நோக்கி வந்துகொண்டிருந்தான். அந்நாளில்

எங்குங் காடாக இருந்தது. அந்தணன் தன்னுடைய மனைவியை ஓர் ஆலமரத்தடியில் விட்டுவிட்டுத் தண்ணீர் கொண்டுவரச் சென்றான். ஆலமரத்தின்மேல் எப்பொழுதோ எய்யப்பட்டுக்கிடந்த கணையொன்று காற்றால் அசைந்து கீழே விழுந்து அங்கிருந்த பார்ப்பனியைக் கொன்றது. அதே சமயத்தில் வேடனொருவன் அவ்வாலமரத்தின் கீழ்வந்து வெய்யிலுக் கொதுங்கியிருந்தான்.

தண்ணீர் கொண்டுவந்த அந்தணன் தன் மனைவி இறந்து கிடத்தலையும் வேறொரு பக்கத்தில் வேடன் ஒருவன் இருத்தலையுங் கண்டான். அவனே தன்னுடைய மனைவியைக் கொன்றவனென்று முடிவுசெய்தான். அவனைப் பலவாறு வைது ஆணையிட்டுப் பாண்டிய மன்னனிடம் வருமாறு அழைத்துக்கொண்டு தன்னுடைய மனைவியின் பிணத்தையுந் தூக்கிக்கொண்டு மதுரைக்குச் சென்றான். அரசன் பலவாறு உசாவியும் உண்மை விளங்கவில்லை. பிறகு அரசன் சோம சுந்தரக் கடவுளையடைந்து உண்மையை விளக்குமாறு வேண்டிக் கொண்டான். திருமண வீடு ஒன்றுக்குச் சென்றால் உண்மை விளங்குமென உணர்ந்தான். அந்தணனையும் அழைத்துக்கொண்டு திருமண இல்லத்திற்குச் சென்றான். அங்கு இயமதூதர் பேசிக்கொண்டதையும் மாடுமுட்டிய தனால் மணமகன் இறந்ததையுங் கண்டு உண்மை தெளிந்தான். வேடனுக்கும் அந்தணனுக்கும் வேண்டிய உதவி செய்து அவர்களை அனுப்பிவைத்தான்.

(திருவிளையாடல்)

"வேதனில்லாள் வீந்ததிறம் மீனவற்கு நீ தெரித்தாய்
சோதிபழி யஞ்சுஞ் சோமேசா—பூதலத்தின்
எல்லார்க்கும எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில்"

[பழியஞ்சியது] (சோமேசர் முதுமொழி வெண்பா)

846. பழையது சாப்பிட்ட கதை

ஓர் ஊரிலே ஒரு செல்வன் இருந்தான். அவனுக்கு அவனுடைய தந்தை தேடிவைத்த பொருள் அளவில்லாமல் இருந்தது. ஆகவே அவன் வறியவர்கள் தாம் வேலைசெய்து வயிறு வளர்க்க வேண்டியவர்கள்; நாம் எத்தகைய வேலையுஞ் செய்யாமல் ஒரே இடத்தில் உட்கார்ந்துகொண்டு நன்றாகச் சாப்பிடலாம். நாம் வேலை செய்வது மிகவும் இழிவான செயலாம் என்று முடிவுசெய்து அவ்வாறே செய்துகொண்டிருந்தான். இதனால் அவனுக்கு நாளுக்குநாள் சோம்பேறித்தனம் வளர்ந்துகொண்டு வந்தது. நாளடைவில் அவனுக்கு நோயும் உண்டாகிவிடும்போல் இருந்தது.

அச்செல்வனுடைய மனைவி நல்ல குணம் உடையவள். அறிவும் ஒழுக்கமும் அமையப் பெற்றவள். அவளுக்குக் கணவனுடைய போக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. அவள் தன் கணவனை திருத்துவதுபற்றி இரவும் பகலும் எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள்.

செல்வனுக்குத் தன்னுடைய மனைவியின் மீது அன்பு அதிகம். அவன் ஒருநாள் தன்னுடைய மனைவியைப் பார்த்துச் சாப்பாடாயிற்று?'' என்று உசாவினன். அவள் ''சிறிது பழையது சாப்பிட்டேன்'' என்று மறுமொழி கூறினள்.

உடனே செல்வன் சமையற்காரனை யழைத்து, ''நீ ஏன் வீட்டரசிக்குப் பழைய சாப்பாடு போட்டாய்?'' என்று உசாவினன். அதற்கு அவன், ''இல்லை ஐயா, புதிய சாப்பாடுதான் சாப்பிட்டார்கள்'' என்று மறுமொழி கூறினன். செல்வன் மனைவியைப் பார்த்து, ''நீயேன் இப்படிப் பொய்பேசுகிறாய்?'' என்று கேட்டான்.

அதற்கு அவள், ''தாங்கள் வருந்தியுழைத்து அதனால் வந்த பொருளினால் ஆகிய உணவாக இருந்திருப்பின் புதியது என்று சொல்லியிருப்பேன். தங்கள் தந்தையார் வருந்தித் தேடிய முன்னாள் பொருளினால்வந்த உணவாகையால் பழையது என்று கூறினேன். இதில் பொய்யொன்றுமில்லை'' என்று உரைத்தாள்.

இதனை கேட்ட செல்வன் நாணினான். தானுந் தன்னுடைய சோம்பேறித்தனத்தை விட்டுவிட்டு வருந்தியுழைத்துப் பொருள்தேட முயன்றான். அதனால் நோய்க்கு ஆளாகாமல் தப்பினான். தான் முயற்சி செய்து வருந்தித் தேடி உண்பதுதான் சிறந்த உணவாகும். இதுபற்றியே பெரியோர்கள், "போனகமென்பது தானுழந் துண்டல்" என்று கூறியுள்ளார்கள்.

[போனக மென்பது தானுழந் துண்டல்]

---

847. பழையனூர் நீலியின் பழங்கதை

காஞ்சிபுரத்திலே ஞானதிபன் என்னும் பெயரையுடைய அந்தணன் ஒருவன் இருந்தான். அவனுக்குப் புவனமதி என்னும் பெயரையுடைய மகன் ஒருவன் பிறந்து வளர்ந்து திருமணமாகியிருந்தான். பிறகு அந்தப் புவனமதி கங்கையில் நீராடி விசுவநாதரை வழிபடும் பொருட்டுக் காசிக்குச் சென்றான். அங்கே சிலகாலந் தங்கியிருந்து சத்தியஞானி என்னும் அந்தணனுடைய மகளாகிய நவக்கியானி என்பவளைத் திருமணஞ் செய்துகொண்டு சிலகாலம் வாழ்ந்திருந்தான். நவக்கியானி கர்ப்பமடைந்தாள். புவனமதி சேதுவில் நீராடவேண்டுமென்று சத்திய ஞானியாகிய மாமனரிடங் கூறிவிட்டு மனைவியாகிய நவக்கியானியையும் அவளுடைய அண்ணனாகிய சிவக்கியானி என்பவனையும் உடனழைத்துக் கொண்டு தென்னாட்டை நோக்கிப் புறப்பட்டான்.

மூவருந் திருவாலங்காட்டை யடைந்தனர். புவனமதிக்குத் தன்னுடைய பழைய மனைவியின்மீது காதலுண்டாயிற்று. இரண்டாவது மனைவியாகிய நவக்கியானியைக் கொன்றுவிட்டுக் காஞ்சிபுரத்திற்குச் சென்று முதல் மனைவியோடு வாழ்க்கை நடத்தவேண்டுமென்று முடிவுசெய்தான். நவக்கியானியின் தமையன் ஏதோ அலுவலாக அகன்றிருந்த சமயத்தில் இரண்டாவது மனைவியாகிய நவக்கியானியைக் கொலைசெய்துவிட்டுப் போய்விட்டான். திரும்பிவந்த

தமையன் தங்கை இறந்துகிடப்பதைக் கண்டு தானுந் தற்கொலை செய்துகொண்டு உயிரைவிட்டான். இவர்களே பழையனூர் நீலியென்னும் பேயாகவும் நீலன் என்னும் பேயாகவும் அமைந்து நின்றனர். பழையனூர் நீலி தன்னைக் கொன்ற கணவனை அவனுடைய மறுபிறப்பிலே கொன்று பழியைத் தீர்த்துக்கொண்டாள்.

[பழையனூர் நீலி]

---

848. பழையனூர் நீலி கதை (1)

நீலி என்பவள் திருவாலங்காட்டிலே வேளாளர் குலத்திலே புரிசை கிழான் என்பவனுக்கு மகளாகப் பிறந்தாள். பழவினை வயத்தால் பேயானாள். வேண்டியபோது வேண்டியவாறு உருவங்களை எடுக்குந் திறமும் இவளுக்கு அமைந்திருந்தது. திருவாலங்காட்டுக்கு அண்மையிலிருந்த பழையனூர்க் காட்டிலே இவள் அலைந்து திரிந்துகொண்டிருந்தாள். காஞ்சிபுரத்தில் இருந்து வணிகன் ஒருவன் அவ்வழியே வந்தான். அவன் நீலிக்கு முன்பிறப்பில் கணவனாக இருந்தவன்.

இந்நீலி வணிகனுடைய மனைவியைப் போல் வடிவங் கொண்டு கையில் கள்ளிக் கட்டையைக் குழந்தையாக்கி எடுத்துக்கொண்டு வணிகனைப் பின்தொடர்ந்தாள். வணிகன் இவளைக் கண்டு அஞ்சினான். விரைந்து நடந்தான். அவளும் விடாது தொடர்ந்தாள். இருவரும் பழையனூருக்குட் புகுந்தனர். நீலி அவ்வூரார்களிடம் வணிகன் தன்னுடைய கணவன் என்றும், கையில் உள்ள குழந்தை அவனுடையதென்றும் முறையிட்டுக் கொண்டாள். ஊரார் வணிகனை உசாவினர். அவன் இவள் பேயென்றும் தன்னைக் கொலைபுரிய முயலுகிறாள் என்றுங் கூறினான். வணிகன் கூற்றை ஊரார் நம்பவில்லை. வீடு ஒன்றைக் கொடுத்து அவ் வீட்டில் அன்று இரவு தங்கியிருக்குமாறும் வணிகனுக்குத் தொல்லை நேருமாயின் தாங்கள் பொறுப்பாக இருப்பதாகவும் ஊர்த்தலைவர்கள் எழுபது பேரும் உரைத்தனர்.

வணிகன் மறுக்க முடியாமல் அன்றிரவு அவளோடு அவ்வீட்டில் தங்கினான். நீலியாகிய அப்பேய் நள்ளிரவில் வணிகன் உயிரைப் போக்கிச் சென்றது. பொறுப்பேற்றுக்கொண்ட எழுபது பேரும் தீப்பாய்ந்து உயிர் துறந்தனர். பேயின் பேச்சை நம்பியபடியால் அவர்கட்கு இத்தொல்லை நேர்ந்தது. எத்தகைய பற்றும் அற்றவர்களைத் தேறித் தெளியக் கூடாது. அவர்கள் பற்று இல்லாதவர்களாகையால் பழிக்கு நாணமாட்டார்கள் என்பது நீலியிடத்தில் நன்கு விளங்கியது.

"மாறு கொடு பழையனூர் நீலிசெய்த
வஞ்சனையால் வணிகனுயிர் இழுப்பத் தாங்கள்
கூறியசொற் பிழையாது துணிந்து செந்தீக்
குழியிலெழு பதுபேரும் மூழ்கிக் கங்கை
ஆறணிசெஞ் சடைத்திருவா லங்காட் டப்பர்
அண்டமுற நிமிர்ந்தாடும் அடியின் கீழ்மெய்ப்
பேறுபெறும் வேளாளர் பெருமை யெம்மால்
பிறித்தள விட்டிவள வெனப் பேசலாமோ"

(பெரிய புராணம்)

சாய்த்திட் டவர்க்குத் திருமேனி
முன்கையைச் சந்தனமாத்
தேய்த்திட் டவர்க்கெவர் நேரென்ப
ராலங்கஞ் செந்தழலில்
தோய்த்திட் டவருக்குச் சர்வாங்க
முந்திரி தூள்படவே
மாய்த்திட் டவர்க்கரி தோவெளி
தோதொண்ட மண்டலமே"

[பழையனூர் நீலி] (தொண்டமண்டல சதகம்)

849. பழையனூர் நீலி கதை (2)

பழையனூரில் நீலியாற் கொல்லப்பட்ட வணிகன் பொருட்டுப் பிணையாக இருந்த வேளாளர்கள் எழுபது பேர். வேளாளன் நீலியாற் கொல்லப்பட்டதை அறிந்து, அவர்களில் அறுபத்தொன்பது பேர் தீப்பாய்ந்து உடனே இறந்தார்கள். ஒருவன் அதிகாலையிற் புறப்பட்டு ஏர் உழுவதற்காக வயலுக்குச் சென்றிருந்தான். அவன் மட்டும் இறவாமல் எஞ்சியிருத்தலைக் கண்ட நீலி அவ்வேளாளனுடைய மனைவியைப் போல் வயலுக்குச் சென்றாள். "வணிகன் இறந்து போனான். வேளாளர்கள் தாங்கள் கூறிய படியே அறுபத்தொன்பது பேரும் தீயில் விழுந்து இறந்தார்கள். நீர்மட்டும் உயிர் வாழ்ந்திருக்கப் போகிறீரா?" என்று உசாவினாள். உடனே அவ்வேளாளன் கொழுவால் சூத்திக்கொண்டு உயிர் துறந்தான்.

"விழுவேன் எனச்சென்று வீழ்ந்தாரில்
ஓர் மைந்தன் வேறுபட
உழுவே யியிற்சென் றிருநீலி
முன்கை யுடையவற்குக்
கொழுவே படைக்கல மென்சொல்
லாமுனங் கூறியசொல்
வழுவே எனப் பொன்றும் வல்லாள
னுந் தொண்ட மண்டலமே"

[பழையனூர் நீலி] (தொண்டமண்டல சதகம்)

---

850. பறிதலைக்குண்டர் கதை

சமணர்கள் தங்களுடைய தலையில் மயிரில்லாது, பிடுங்கிவிடுவர். மயிர் இருந்தால் பேன் முதலியன உண்டாகி அழிதற்கு ஏது வாமாகலின் மயிரைப் பிடுங்கி

விடுந் தொழிலினை மேற் கொண்டுள்ளனர். ஒருவன் சமணனுகும் போது குருமார்கள் பலரும் அவனைச் சூழ்ந்து கொண்டு, "இப்துக் பிற்சுக்" (இப்போது துக்கம் பிறகு சுகம்) என்னும் அவர்களுடைய மறையைக் கூறிக் கொண்டு அவனுடைய தலைமயிர்களை யெல்லாம் ஒவ் வொன்றுகப் பிடுங்கிவிடுவர். இவ்வாறு செய்தல் அவர் களுடைய வழக்கமாகும்.

[சமணர்கள் செயல்]

---

851. பனந்தன் கதை

முன்னாளில் பனந்தன் என்னும் பெயருடையவன் ஒரு வன் இருந்தான். இவனுடைய தந்தை பகைவர்களால் அரசிழந்து வருந்தியிருந்தான். பனந்தன் தக்க பருவத்தை யடைந்ததும் தந்தை அரசிழந்திருத்தலை யறிந்தான். எவ் வாறேனும் தந்தை யிழந்த அரசியலைத் தான் கைப்பற்றி விடுவதென்று முடிவு செய்தான். போர் முறைகளைத் தக்கார்பால் உணர்ந்தான். இவன் நாட்டை மீண்டுங் கைப் பற்ற முயல்கிறான் என்பதைப் பகைவர்கள் உணர்ந்து பல அல்லல்களைப் புரிந்தனர். இவன் அவ்வல்லல்களுக் கஞ் சித் தன் முயற்சிகளைக் கைவிடவில்லை. இவனுடைய விடா முயற்சியைக் கண்ட பலர் உதவிபுரிந்தனர். இவனுடைய ஊக்கம் நாளும் வளர்ந்தது. தகுந்த காலத்தில் பகைவர் கள்மேற் போருக்குச் சென்றான். வெற்றி கிட்டியது. மேலும் முயன்று பகைவர்களுடைய நாட்டையுங் கைப்பற்றிக் கொண்டான். இவனுடைய தந்தை தன் மைந்தனின் ஊக்கத்தைக் கண்டு உள்ளங் களித்தான். அசைவில்லாத ஊக்கமுடையவனிடத்திற்குச் செல்வம் வழி கேட்டுக் கொண்டு செல்லும் என்னும் பெரியார் மொழியின் உண் மையை அனைவரும் இவன்பால் உணர்ந்தனர்.

[செல்வம் ஊக்கமுடையானிடம் வழிகேட்டுச் செல்லும்]

---

852. பனந்துண்டந் தளிர்க்கப் பாடிய கதை

திருக்கோவலூரில் அங்கவை சங்கவை என்னும் மங்கையர் இருவர் திருமணத்தை ஔவையார் நடத்தினர். அத்திருமணத்திற்குச் சேர சோழ பாண்டியர்களாகிய மூவேந்தர்களும் வந்திருந்தார்கள். மூவேந்தர்களும் ஔவையாருடைய ஆற்றலை அறிய விரும்பினர். அங்கோரிடத்தில் பனை மரத்தின் துண்டு ஒன்று கிடந்தது. அத்துண்டு தளிர்க்குமாறு பாடவேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். ஔவையார் அப்பொழுதே:

"திங்கட் குடையுடைச் சேரனுஞ் சோழனும் பாண்டியனும்
மங்கைக் கறுகிடவந்து நின்ருர்மணப் பந்தலிலே.
சங்கொக்க வெண்குருத் தீன்றுபச்சோலை சலசலத்து
நுங்குக்கண் ணூற்றி அடிக்கண்கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்றுபழந்தர வேண்டும் பனந்துண்டமே"

என்று பாடினர். பனையின் துண்டமும் அப்பொழுதே தளிர்த்துக் காய்த்துப் பழுத்து நின்றது. இப் புதுமையை அங்கு வந்திருந்த அனைவரும் கண்டு வியந்து பாராட்டினர்.

[ஔவையார் செய்த தெய்விகச் செயல்] (ஔவையார் வரலாறு)

---

853. பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்த கதை

வைகையாற்றுக்குத் தெற்கே சூருவிருந்த துறை என்னும் ஊரில் தேவகுருவாகிய பிருகற்பதி தவஞ் செய்து கொண்டிருந்தார். அவ்வூரில் வேளாளன் ஒருவன் இருந்தான். அவனுடைய பெயர் சுகலன். அவனுக்குப் பன்னிரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். செல்வச் செருக்கின் சிறப்பினால் அவர்கள் அடக்குவாரற்ற கழுக்காணிகளாகத் திரிந்து கொண்டிருந்தார்கள். ஒருநாள் தவஞ்செய்துகொண்டிருந்த பிருகற்பதியைக் கண்டார்கள். அவர்மீது கற்களை வாரியெறிந்து கையைத் தட்டி நகைத்தார்கள். பிருகற்பதி

அப்பிள்ளைகளைப் பார்த்து, "நீங்கள் பன்றிக்குட்டிகளாகப் பிறக்கக் கடவீர்கள்" என்று வசவுரை வழங்கினர். பிள்ளைகள் வசவுரைக்கு விடுதலை கேட்டனர். "சோமசுந்தரக் கடவுள் உங்களுக்குத் தாயாக வந்து பால்கொடுக்கும் பொழுது சாபம் நீங்கும்" என்றார். பிள்ளைகள் பன்றிக் குட்டிகளாகப் பிறந்தார்கள். ஆண்பன்றியும் பெண் பன்றியும் போரில் மாண்டன. பன்றிகள் மாண்டு வீழ்ந்த இடம் பன்றிமலையாயிற்று. தாயை இழந்த குட்டிகள் பசியால் வருந்தின. சோமசுந்தரக் கடவுள் தாய்ப்பன்றியின் வடிவங் கொண்டு பால் கொடுத்து அக் குட்டியைப் பாதுகாத்தார். பன்றிக் குட்டிகளின் சாபந்தீர்ந்தது.

[பன்றிக்குட்டிகளுக்கு முக்திகொடுத்த கதை] (திருவிளையாடல்)

---

854. பாசதரன் கதை

இவன் முன்னாளில் கோதாவரி யாற்றுக்கரையில் இருந்த ஓர் ஊரில் மறையவர் குலத்திற் பிறந்தான். இவன் தந்தை செல்வமுடையவனாக இருந்தபடியால் இவன் கல்வியை நன்கு கற்காது இளம் பருவத்தை வீணிற் கழித்தான். காளைப் பருவத்தையடைந்ததுங் கலவியிற் கருத்தைச் செலுத்தினான். பொருள் முழுவதையும் விலைமாதர்க்கு வாரி வழங்கினான். வறுமையடைந்தபின் ஊரை விட்டுப் புறப்பட்டு ஊர் ஊராகச் சுற்றித் திரிந்தான். மதுரைமா நகரை யடைந்து அழகிய விலைமகள் ஒருத்தியின் மையலிலே தாழ்ந்து விழுந்தான். அவளுக்குக் கொடுப்பதற்காகக் களவு முதலியன செய்து பொருள் தேடினான். பிறகு புதுவையை அடைந்து அங்கிருந்த விலைமகள் ஒருத்தியின் மையலிற் படிந்தான். அவளுக்கு இவனுற் பல வேலைகள் ஆகவேண்டியதாக இருந்தமையின் அவள் இவனுக்கு இனிய சொற்கள் பல இயம்பித் தான் ஏவிய செயல்களை யெல்லாஞ் செய்யுமாறு ஏவல் கொண்டாள். அவளுடைய இன்சொற் களெல்லாம் உண்மையானவைகளே என்று எண்ணி இவன் முதலில் உள்ளங் கனிந்திருந்தான். இவனுல் தனக்கு ஆக

வேண்டிய காரியங்கள் யாதுமில்லையாகவே பிறகு அவள் இவளைப் "பேயே! நாயே! போ வெளியே" என்று கூறிப் பிடரியைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டாள். அவனுடைய இன்சொற்களை யெல்லாம் உண்மையென்று நம்பிய இவளைப் பலரும் இகழ்ந்தனர். அன்பு கொண்டு விரும்பாமல் பொருளை நாடி விரும்பும் பூவையரின் இன்சொல் பிறகு இழிவுடையதாக முடியும் என்பதைப் பலரும் இவளிடம் அறிந்து கொண்டனர்.

[விலைமகளிர் இன்சொல் பொய்ம்மையானது]

---

855. பாசமறுத்த கதை

வருணனுக்கு ஒரு பகைவன் ஏற்பட்டான். அவன் ஓர் அசுரன். அவ் வசுரனைக் கொல்லுஞ் சூழ்ச்சியை வருணன் அறிந்தான். ஒருநாள் இரவில் வருணனுடைய ஆசிரியர் வருணனிடம் வந்தார். வருணன் தன்னுடைய ஆசிரியனைப் பகைவனென்று எண்ணிப் பாசத்தை விட்டான். அப் பாசத்தால் ஆசிரியன் இறந்தான். அக் கொலையின் காரணமாய்ப் பிசாசு ஒன்று தோன்றியது. அது வருணனுடைய கால் கைகளைக் கழுத்தோடு சேர்த்துக் கட்டிக் கடலிற் போட்டுவிட்டது. வருணன் நெடுநாள் கடலில் அழுந்திக்கிடந்தான். சிவபெருமான் மாசிமகத்திற் காட்சி தந்து அவனுடைய பாசங்களை அறுத்தருளினர். அன்று முதல் அத்துறை பாசமறுத்த துறை என்று பெயர்பெற்றது. பாசமறுந்த வருணன் அவ்விடத்திற்கு ஈசான திக்கில் தன்னுடைய பெயரால் ஒரு கோயில் அமைத்து அதில் ஆதி மூலேசரையும் அமிர்தவல்லியம்மையாரையும் நிலைபெறுத்தினன்.

"ஆழ்ந்தகடற் செல்வற் கடர்பிரம கத்திதனைப்
போழ்ந்தறுத்தா ளுந்தென் புலியூரே"

[பாசமறுத்தது]

(புலியூர் வெண்பா)

---

856. பாஞ்சாலன் கதை

இவன் பாஞ்சாலநாட்டிற்கு மன்னனாக இருந்தான். இளமைப்பருவத்தில் துரோணரோடு அங்கிவேச முனிவர் என்பவரிடம் படைக்கலப் பயிற்சி பெற்றான். துரோணர் தாமறிந்திருந்த கலைகளை யெல்லாம் இவனுக்குணர்த்தினர். அதனால் மனமகிழ்ச்சியடைந்த இவன் தான் அரசனானவுடன் தன் நாட்டிற் பாதியை இவருக்குக் கொடுப்பதாகக் கூறினான். பிறகு, இருவரும் பிரிந்தனர். துரோணர் தவ வாழ்க்கையை மேற்கொண்டார். பாஞ்சாலன் அரசாட்சியை மேற்கொண்டான். வறுமையால் வருந்திய துரோணர் பாஞ்சாலனிடஞ் சென்று தமக்கொரு கற்று தரவேண்டுமென்று வேண்டினர். பாஞ்சாலன், "உம்மை எனக்குத் தெரியாது. நீர் யார்?" என்று உசாவினன். ஒன்றுங் கொடாமலே விரட்டிவிட்டான். உடம்பின் அகத்துறுப்பாகிய அன்பு இல்லாதவர்கள் புறத் துறுப்பாகிய பொருள்வளம் முதலியவைகளைப் பெற்றிருந்தாலும் எவ்விதமான பயனும் உண்டாகமாட்டாது என்பதை உலகம் இவன்பால் அறிந்துணர்ந்தது.

[அன்பின்றேல் யாதும் பயனில்லை]

---

857. பாஞ்சாலி கதை (1)

பாண்டவர்கள் காட்டு வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்தபோது சூரியோதனன் ஏவலால் துருவாசர் பாண்டவர் களிடத்திற்குச் சென்றார். உணவிடவேண்டும் என்றார். பாண்டவர்கள் துருவாசரை நீராடிவரச் சொன்னார்கள். யாது செய்வதென்று பாஞ்சாலியோடு கலந்து எண்ணினார்கள். கண்ணனை நினைத்தார்கள்; அவர் உடனே வந்தார். பாண்டவர்கள் நிகழ்ந்ததை உரைத்தார்கள். அவர் "நீங்கள் உணவு பெறுங் குறைவிலா ஏனத்தில் உணவு ஏதேனும் உளதா பாருங்கள்" என்றார். பாஞ்சாலி பார்த்தாள். அவ் வேனத்தில் ஒரு சோறு இருந்தது. அதனை எடுத்து வந்து கண்ணனிடம் தந்தாள். அவர் அதனை உண்டார். துருவாச

ருக்குப் பசி அடியோடு இல்லாமல் உணவு உண்டதுபோல் மன நிறைவு ஏற்பட்டுத் தேக்கெறிந்துவிட்டது; துருவாசர் திரும்பிவந்து பாண்டவர்களை வாழ்த்திவிட்டுப் போய்விட்டார். விருத்தோம்புதலாகிய வேள்ளியின் பயன் இவ்வளவு என்று அளவுபடுத்திக் கூறத்தக்கதன்று; விருந்தினரின் தகுதிக்கு ஏற்ற அளவீனதாகும் என்னும் உண்மையை அன்று உலகம் பாஞ்சாலிபால் நன்கு தெரிந்துகொண்டது.

[விருந்தினர் பெருமைக்கேற்றது பயன்] (பாரதம்)

---

858. பாஞ்சாலி கதை (2)

பாஞ்சாலநாட்டு மன்னன் மகளாகிய இவள் துரோபதை எனவும் பெயர் பெறுவாள். பாண்டவர்களை மணந்த இவள் அவர்களோடு காடுபுகுந்து வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தாள். ஒருநாள் காட்டில் நெல்லிக்கனி ஒன்றைக் கண்டு அதனைப் பறித்துத்தருமாறு அருச்சுனனை வேண்டினாள். அவனும் அவ்வாறே அக்கனியைப் பறித்தான்.

பிறகு அக்கனி முனிவர் ஒருவருக்குரியது என்று தெரிந்தது. அம் முனிவர் வரின் சாபங்கொடுத்துவிடுவார் என்றும் பிறர் அச்சுறுத்தினர். தருமர் கண்ணனை எண்ணினர். அப் பண்ணவன் விரைந்துவந்தார்; நிகழ்ந்ததை அறிந்தார்; எல்லோரையும் பார்த்து, "நீங்கள் எல்லோரும் உங்கள் மனத்தில் கொண்டிருக்கும் எண்ணங்களை ஒளிமறைவின்றி உரைப்பீர்களாயின் இக் கனி மரத்திலே பொருந்துமாறு செய்வேன். உற்றது சொன்னால் அற்றது பொருந்தும்" என்றார்.

ஐவரும் தத்தம் உள்ளக்கிடக்கைகளை உரைத்தனர். பிறகு பாஞ்சாலி, "எனக்கு அறிவும் அழகும் ஆண்மையும் அமைந்த ஐவர் ஆளர்களாக அமைந்திருக்கவும் அகமானது அவ்வளவில் அமைதிபெறுது இன்னும் ஓர் ஆடவனை விரும்புகிறது. இவ்வாருயின் ஏத்திழைமார்களை எவ்வாறு நம்புகிறது?" என்று இயம்பினள். அவ்வளவில் கொய்த கனி மரத்திற் பொருந்தியது.

ஒருவன் தன் மனத்தோடு பொருந்த உண்மை பேசுவானுகில் அவன் தவமுந் தானமுஞ் செய்கிறவர்களை விட உயர்ந்தவனுவான் என்பது பெரியோர் அறவுரை. பாஞ்சாலி உள்ளத்தொடு பொருந்த உண்மை பேசியதாலேயே வியத்தகு நிகழ்ச்சியாக அற்றகனி மரத்திற் பொருந்தியது.

[உண்மை பேசுவோன் உயர்ந்தவன்] (வில்லிபாரதம்)

---

859. பாணன் கதை

பாணன் என்பவன் பலி என்பவனுடைய மகன். சோணிதபுரம் என்னுந் திருநகரில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தான். இவன் அசுரகுலத்தில் தோன்றியவன். அசுரகுலத்தினர் செய்யுந் தீத்தொழில்களைத் தான் செய்யாதொழிந்தான். தவம் ஒன்றே எல்லா நன்மைகளையுந் தரத்தக்கது என்று உள்ளத்தில் தெளிந்து இறைவனை நோக்கி நிறைதவம் புரிந்தான்.

ஆண்டுகள் பல சென்றபின் ஆண்டவன் இவனுக்குக் காட்சிதந்தார். இவன் எண்ணியவைகளை எண்ணியவாறடையும்படி திண்ணமான வரந்தந்தார். அதனுல் இவன் மிகுந்த செல்வப்பேற்றை யடைந்து சிறந்து விளங்கினுன். அரசனுகி ஆருயிர்களைப் புரந்தான். அசுரர் எவரும் அடையாத சிறப்பினை இவன் அடைந்தான்.

பிற அசுரர்கள் வறுமையாளராய்த் தாழ்ந்த நிலையில் கலங்கி நிற்க இவன் உயர்ந்து விளங்கியதற்குத் தவமே காரணமாக அமைந்துதின்றது. இவ்வுலகிலே வறுமையாளர்கள் பலராகவும் செல்வர்கள் சிலராகவும் ஆகக் காரணம் தவஞ்செய்வார் சிலரும் செய்யாதவர்கள் பலருமாக இருத்தலே என்பதை உலகம் இவன்பால் இனிதறிந்தது.

[தவத்தினுல்தான் செல்வமுண்டாகும்] (இலிங்க புராணம்)

---

860. பாணினிமுனிவர் கதை

பாணினி என்பவர் வடநாட்டிலே மறையவன் ஒருவனுக்குப் புதல்வராகத் தோன்றினர். இவருடைய குடும்பம் வறுமையுடையது. தாய் தந்தையரும் மாண்டுபோனார்கள். இவர் தம்முடைய ஊரைவிட்டுப் புறப்பட்டுப் பாடலிபுரம் என்னும் பதியினை யடைந்தார். அங்கு வர்சா என்னும் பெயருடைய பெரும்புலவர் ஒருவர் தம்முடைய மாணவர்களுக்குப் பாடம் நடத்திக்கொண்டிருந்தார். தாமும் கல்வி பயில இவர் எண்ணினர். கற்பிக்குமாறு புலவரை வேண்டிக் கொண்டார். அவரும் இணங்கினர். நாளும் அவர்களோடு அமர்ந்திருந்தார். இவருடைய அறிவு கூர்மையற்றதாக இருந்தபடியால் மூளையில் எதுவும் ஏறவில்லை. பிற மாணவர்கள் இவரை மதிக்கவில்லை. மற்றவர்கள் நன்கு கல்விபயிலும் போது நாம் ஒன்றும் உணராமல் இருக்கிறோமே என்று உள்ளங் கலங்கினர். இறைவனை எண்ணித் தொழுதார். பரமனருளால் கல்வியறிவு நன்கு உண்டாகியது.

வடமொழியில் இலக்கண நூல் ஒன்று இயற்றினர். அதனைத் தம்முடைய ஆசிரியருக்குக் காட்டினர். அதனைக் கண்டவர்கள் அனைவரும் பாராட்டினர். இவர் தமக்கு அத்தகைய பேரறிவு உண்டாகக் காரணம் தாம் சேர்ந்த கூட்டமே என்று திண்ணமாக நம்பினர். ஒருவனுக்கு அறிவு மனத்தில் உள்ளதுபோலக் காட்டினாலும் அஃது அவன் சேர்ந்த இனத்தால்தான் உண்டாகும் என்பது இவரிடம் நன்கு விளங்கியது. இவர் இயற்றிய நூல் பாணினீயம் எனப் பெறும்.

[அறிவு சேர்ந்த இனத்தால் உண்டாகும்]

---

861. பாண்டவர்கள் கதை (1)

பாண்டவர்கள் எனப்பெறுவோர் பாண்டு மன்னனுடைய மக்களாவர். இவர்களுடைய பெயர் தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் எனப்பெறும்..

இவர்கள் இற்றைக்கு ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அத்தினபுரத்தில் அரசுபுரிந்திருந்தனர். கௌரவர் எனப்பெறுவோர் திருதராட்டிரனுடைய மக்கள். அவர்கள் நூற்றுவராவர். எல்லோருக்கும் மூத்தவன் துரியோதனன். இவன் பொருமை, வஞ்சம் முதலிய தீய குணங்கள் முற்றும் ஒருங்கு அமையப்பெற்றவன். இவனுடைய தந்தையாகிய திருதராட்டிரன், மாமனுகிய சகுனி என்போரும் துரியோதனனுக்கு உடந்தையாக இருந்தனர். இவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து பாண்டவர்களுக்குக் கொடுமைகள் பல செய்தனர். பாண்டவர்கள் எதிர்த்துத் தீமைசெய்யவில்லை. அறமே எல்லா நலங்களையும் அளிக்குமென்று துணிந்து எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டிருந்தனர். தருமர் பொறுமையிற் சிறந்தவராய்த் தம்பியர்களையும் அடக்கித் தம்வழியில் நடத்திவந்தார். இறுதியில் அறமே வெற்றியடைந்தது. பாண்டவர்கள் எல்லா நலங்களையும் ஒருங்கு அடைந்தனர். கௌரவர்களோ அழிந்து ஒழிந்து தொலைந்துபோயினர். அறம் எல்லாச் சிறப்புக்களையும் செல்வத்தையும் கொடுக்கும். அறநெறியில் நிற்போர் கேடடையமாட்டார்கள். மறநெறி ஒழுகுவோர் விரைந்து தொலைவர் என்பதை உலகம் இவ்விருவர்பாலும் நன்கு உணர்ந்துகொண்டது.

"அருமைசெறி பாண்டவர் பங்காளி
செய்கொடுமை யாற்கா டாண்டும்
உரிமையுடன் தருமர்செய்த நன்றியினுல்
திரும்பவும்வந் துலகை யாண்டார்
பருவரைவில் லாவலைத்த செயங்கொண்டா
ரேயெவரும் பண்பாய்ச் செய்த
தருமமே தலைகாக்கும் அதர்மமழித்
திடுமெனவுஞ் சாற்று வாரே"

[அறம் எல்லாவற்றையுங் கொடுக்கும்] (செயங்கொண்டார் சதகம்)

862. பாண்டவர்கள் கதை (2)

துரியோதனன் செய்த தீமையால் தருமர் முதலிய ஐவரும் காட்டிலே அலைந்துகொண்டிருந்தார்கள். அரச செல்வத்தை நுகர்ந்து கொண்டிருந்தவர்கள் காட்டிலே திரியும்படி நேரிட்டால் அவர்களுக்கு ஏற்படும் அல்லல்கட்கு ஓர் அளவும் உண்டோ? காட்டிலே விருப்பமான இடங்களில் இலைக்குடில் அமைத்து அதிலே வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.

நாளுந் துன்புற்றுக் கொண்டிருந்தவர்கள் ஒருநாள் மிகுதியான கவலையில் ஆழ்ந்து நம்முடைய ஊழ்வினை இவ்வாறும் இருந்ததே என்று உரையாடி வருந்திக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவ்விடத்திற்கு வியாசர் வந்தார். பாண்டவர்களுடைய துன்பத்தையும் மனவருத்தத்தையுங் கண்டார். "எவ்வளவோ அரசர்கள் இவ்வாறு துன்புற்று வாடினார்கள். துன்புறுவதால் தீமையொன்றும் இல்லை. உளதாய தீவினை கழிந்துபோகப் பிறகு இன்பந்தான் உண்டாகும்" என்று அறிவுரைகள் பல கூறினர். பாண்டவர்கள் வருத்தம் நீங்கித் திருத்தம் அடைந்தார்கள். பெரியோர்களுடைய வாய்ச் சொல்லைக் கேட்பது வழுக்கல் நிலத்தில் ஊன்றுகோலைப்போல் பயனளிப்பதாகும் என்பது இச் சமயத்தில் நன்கு விளங்கியது.

[தக்கோர் அறிவுரை தளர்ச்சி நீக்கும்]

---

863. பாண்டியனும் புலவர்களும்

முன்னாளில் மதுரைமா நகரிற் பாண்டியன் ஒருவன் அரசுபுரிந்துகொண்டிருந்தான். அவனுடைய பேரவையிலே புலவர்கள் பலர் அமர்ந்து நூலாராய்ச்சி செய்துகொண்டிருந்தனர். பாண்டியனுஞ் சிறந்த புலமை நலம் அமையப் பெற்றவன். காலாகாலத்தில் நாட்டில் மழை பெய்யவில்லை. மக்கள் வருந்தினர். அரசனுக்கும் பொருள் வருவாய்

குன்றியது. அவன் புலவர்களைப் பாதுகாக்க முடியாமல் திண்டாடினான். அவர்களைப் பார்த்து, "நீவிர் செழிப்புள்ள நாடுகளுக்குப் போய்த் தங்கியிருந்து இந்நாடு செழித்தபின் வாருங்கள்" என்று கட்டளையிட்டான். அவர்களும் அவ்வாறே பிரிந்து போயினர். அரசன் புலவர்களைப் பாதுகாக்க முடியாமல் அனுப்பிவிட்டமைக்குக் காரணம் மழை பெய்யாமை யாகையால், நாட்டிலே மழைபெய்யாவிட்டால் ஒருவர் மற்றவர்களைப் பாதுகாப்பது, உதவிசெய்வது முதலியன நிகழாதென்பதை அனைவரும் நன்குணர்ந்து கொண்டனர்.

[மழையில்லாவிட்டால் யாதும் நிகழமாட்டா]

---

864. பாண்டியன் சுரந்தீர்த்த கதை

மதுரைமா நகரில் கூன்பாண்டியன் என்பவன் அரசாட்சி செய்துகொண்டிருந்தான். அவன் சோழ மன்னனுடைய மகளாகிய மங்கையர்க்கரசியாரைத் திருமணஞ் செய்து கொண்டிருந்தான். குலச்சிறையார் என்பவர் அமைச்சராக அமைத்திருந்தார்.

அந்நாளிற் பாண்டிநாட்டில் சமணர்கள் மிகுதியாக இருந்தார்கள். பாண்டியன் பழவினைப்பயனால் சமண சமயத்திற் சார்ந்து அச் சமயத்தை மேற்கொண்டொழுகினான். ஆனால் அவனுடைய மனைவியாகிய மங்கையர்க்கரசியாரும் அமைச்சராகிய குலச்சிறையாரும் சமண சமயத்திற் புகாமல் சைவர்களாகவே ஒழுகி வந்தார்கள். பாண்டிநாடு முழுவதுஞ் சமண சமயம் பரவி நின்றது. மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் பாண்டிவள நாட்டில் மீண்டுஞ் சைவ சமயத்தை நிலைநிறுத்த வேண்டுமென்று பேரவாக் கொண்டார்கள். திருஞானசம்பந்தப் பிள்ளையாரை மதுரைக் கழைத்தார்கள். திருஞானசம்பந்தர் வந்து தங்கிய மடத்தில் சமணர்கள் தீயையிட்டார்கள். அது கூன்பாண்டியனுக்குக் கொடிய வெப்பு நோயை உண்டாக்கியது. பாண்டி

யன் மிக வருந்தினன். சமணர்கள் ஒரு பக்கத்திலும் திருஞானசம்பந்தர் ஒரு பககத்திலுமாக நோயைத் தீர்க்க முயன்றார்கள். சமணர்களால் யாதுஞ் செய்யமுடியவில்லை. திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருநீற்றைப் பூசிப் பாண்டிய னுடைய வெப்புநோயைப் போக்கியருளினர்.

[பாண்டியன் சுரந்தீர்த்தது]

---

865. பாண்டு மன்னன் கதை

பாண்டு மன்னன் என்பவன் பாண்டவர்களுடைய தந்தை. இவன் குந்தி, மத்திரை என்னும் மாதர் இருவரை மணந்து இல்வாழ்க்கையை இனிது நடத்திக்கொண்டிருந்தான். ஒருநாள் வேட்டைக்குச் சென்றன்; விலங்குகள் பலவற்றைக் கலங்குமாறு கொன்றன்.

ஓரிடத்தில் கிந்தமன் என்னும் பெயருடைய முனிவன் ஒருவன் தன் மகளியோடு மானுருக்கொண்டு இன்ப போகத்திலே இனிது திளைத்திருந்தான். பாண்டு மன்னன் அவர் இருவரையும் உண்மை மான்கள் என்றே உள்ளத்தில் எண்ணினன். ஓர் அம்பினைச் செலுத்தினன். மானுருவா யிருந்த கிந்தமன் மானிலத்தில் வீழ்ந்து பதைத்தான். பாண்டு மன்னன் அஞ்சிக் கலங்கிக் கிந்தமன் வீழ்ந்த இடத்திற்கு ஓடினன். 'என்போல நீயும் இன்பம் நுகரும் போது இறப்பாயாக' என்று சாபமிட்டுக்கொண்டே கிந்தமன் மாண்டான்.

இவ்வாறு சாபம் பெற்ற பாண்டு பின் இன்ப நலத்தை எண்ணுமல் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்தான். தருமர் முதலிய ஐவருந் தேவர்களுடைய திருவருளாற் பிறந்தனர்.

வசந்த காலம் ஒன்றில் இவன் மத்திரையென்னும் மகளியோ டிருந்தபோது கிந்தமன் சாபமொழியை மறந்து விந்தையான இன்பநலத்தில் ஈடுபட்டான். அவ்வளவிற் சாபக்கேட்டால் மாண்டு வீழ்ந்தான்.

துன்பங்கள் தன்னை வருத்துதலை விரும்பாதவன் தான் பிற உயிர்களிடத்திலே தீமையான செயல்களைச் செய்யாதிருத்தல் வேண்டும். செய்தாலோ பாண்டு மன்னனைப் போல் ஈண்டிய துன்பத்தை எய்த நேரும்.

[இன்பம் விரும்புவோன் துன்பஞ் செய்யலாகாது] (பாரதம்)

---

866. பாதிமாதுடனை பரமன் கதை

கைலாயத்திற் சிவபெருமான் உமாதேவியாரோடு எழுந்தருளியிருந்தார். பிருங்கி முனிவர் என்பவர் இறைவனை வணங்குதற்குச் சென்றார். அவர் இறைவனைத் தவிர மற்றுள்ளனவெல்லாம் அழியக்கூடியவைக ளாதலின் நான் உமாதேவியரை வணங்கமாட்டேன் என்று முடிவுகட்டினர். இறைவனை மட்டும் வணங்கிவிட்டுச் சென்றார். மற்றொரு நாள் பிருங்கி முனிவர் இறைவனை வணங்கச் சென்றபோது சிவபெருமானும் உமாதேவியாரும் ஓர் இருக்கையில் உடற் பிரிவு தோன்றாது இறுக அணைந்து வீற்றிருத்தலைக் கண்டார். வண்டினுடைய வடிவத்தை எடுத்துக்கொண்டு பறந்து கழுத்துச் சந்து வழியாகப் புகுந்து இறைவனை மட்டும் வலஞ் செய்துவிட்டுச் சென்றார். இதனால் உமாதேவியார்க்குச் சினம் உண்டாகியது. என்னை இம் முனிவரன் இகழ்தலால் என் கூறான பொருளையும் இழந்துவிடுக என்று சாபங் கொடுத்தார்.

இதனால் பிருங்கி முனிவருடைய உடலின் ஊன் முதலியன ஒருபக்கத்தில் நழுவிக் கீழே விழத் தொடங்கின. முனிவர் தம்முடைய ஆற்றலையிழந்து கீழே விழலானார். சிவபெருமான் முனிவருக்கு மற்றொருகால் தோன்றுமாறு அருள்புரிந்தார். ஒளியின்றிக் கதிரவன் இல்லை; சூடின்றி நெருப்பில்லை; சத்தியின்றிச் சிவமில்லை என்னும் உண்மையை உணர்ந்து கொள்ளாமல் நீ மயக்கத்தை அடைந்துவிட்டாய்; இனிமேல் அவ்வாறு மயங்கற்க" என்று அறிவுறுத்தினர். பிறகு பிருங்கி முனிவர் மகிழ்ந்து இருவரையும் வணங்கி வழி படலானார்.

சிவம் வேறு நாம் வேறு என்று இருத்தலினன்றே இவ்வாறு ஒரு முனிவன் நம்மை இழிவுபடுத்த நேரிட்டது என்று எண்ணிய உமாதேவி கேதாரம், காசி, காஞ்சி, திருவண்ணாமலை முதலிய சிவப்பதிகளில் தவம்புரிந்து திருச்செங்கோட்டில் எழுந்தருளிக் கேதார விரதம் இயற்றிச் சிவபெருமானுடைய இடது பாகத்தைப் பெற்று அர்த்த நாரீசுவரர் என்னும் பெயரொடு விளங்கலாயினள்.

"நெடுவா ரிதிபுடை சூழுல கத்தி னிமலியுமை
யொடுவாகு பெற்ற திருமேனி காணும் உயிர்கட்கெல்
நடுவாக நின்ற பரஞ்சோதி தானர்த்த நாரிச் சிவ [லாம்
வாடிவானதுந்திருச் செங்கோடு சூழ்கொங்கு மண்டலமே"

[அர்த்தநாரீசுவரர்] (கொங்குமண்டல சதகம்)

---

867. பாம்பின் தலையிற் கூத்தாடிய கதை

கண்ணனும் அவனுடைய நண்பர்களும் ஒருநாள் யமுனைக் கரையை அடைந்தனர். அங்கிருந்த மடுவொன்றில் காளியன் என்னும் பெயருடைய பாம்பு ஒன்று இருந்தது. அது மிகுந்த நஞ்சுடையது. அது பலருக்குந் தொல்லையை விளைத்துக்கொண்டிருந்தது. கண்ணபிரான் அப் பாம்பை யொழிக்கவேண்டுமென்று எண்ணினார். கரைமீதிருந்த படியே பாம்பின் தலைமீது குதித்தார். மகிழ்ச்சிப் பெருக்கால் கூத்தாடினர். காளியனுக்கு மிகுந்த வருத்தம் உண்டாகியது. ஆகவே அது குருதியைக் கக்கித் தன்னைக் காப்பாற்ற வேண்டுமென்று கண்ணனை வேண்டிக்கொண்டது. கண்ணன் காளியனுக்கு அருள் செய்தார். அவ்விடத்தை விட்டுச் செல்லுமாறு கூறினர். அப் பாம்பும் அவ்வாறே போய்விட்டது.

"எற்பணியராவை மிதித்து எட்டித் துவைத்து"

[கண்ணன் பாம்பின் தலையில் கூத்தாடியது] (பாகவதம்)

---

868. பாம்பு எய்த கதை

அநந்தகுண பாண்டியன் மதுரைமா நகரிலே இருந்து அரசாட்சி செய்துகொண்டிருந்தான். இவன் இறைவனிடத்திலே மிகுந்த அன்போடு விளங்கினன். பாண்டிநாடு முழுவதுஞ் சிவமணங்கமழ்ந்தது. சமணர்கள் மிகுந்த பொருமை கொண்டார்கள். பாண்டியனைக் கொல்ல எண்ணினர்கள். தீய எண்ணத்தோடு பெரிய வேள்வியொன்று செய்தார்கள். வேள்விக் குழியிலிருந்து ஓரசுரன் தோன்றினன். சமணர்கள் அவ்வசுரனைப் பார்த்து, "நீ விரைவாகப் போய்ப் பாண்டியனைக் கொன்றுவிட்டு வா" என்றார்கள். அவ்வசுரன் பெரிய பாம்பின் வடிவங்கொண்டு கண்டவர்களனைவரும் அஞ்சத்தக்கவாறு மதுரையை நோக்கி வந்தான். பாண்டியன் இச் செய்தியை அறிந்தான். சோமசுந்தரக் கடவுளிடஞ் சென்று முறையிட்டுக் கொண்டான். சோமசுந்தரக் கடவுளின் திருவருளால் அப் பாம்பைக் கொன்றான். அது நஞ்சைக் கக்கியது. இறைவன் தமது சடையில் உள்ள திங்களில் இருந்து அமுதத்தை உதிர்த்து அந் நஞ்சைப் போக்கியருளினார்.

[பாம்பு எய்தது] (திருவிளையாடல்)

---

869. பாம்புகள் வழிபட்ட கதை

தேவர்கள் அமுதத்தை அடையும் பொருட்டுத் திருப்பாற்கடலைக் கடைந்தார்கள். அப்பொழுது ஐந்துதலைப் பாம்பு மந்தர மலையாகிற மத்துக்குக் கயிறுகப் பயன்பட்டது. தேவர்களும் அசுரர்களும் இருபக்கங்களினும் நின்று வலிவாக இழுத்துக் கடைந்தபடியினல் பாம்பின் உடல் புண்ணுகியது. அதனல் அதற்கு வருத்தம் மிகுதியாகியது. திருமாலின் கட்டளைப்படி பாம்பு திருத்தணிகையை அடைந்து முருகக் கடவுளைப் பணிந்து வழிபட்டது. முருகவேள் எதிர் தோன்றிப் பாம்பினுடைய உடலைத் தம்முடைய கையினல் தடவினர். அதனல் பாம்பின் புண் ஆறியது. பழைய வலிமையைத்

திரும்ப அடைந்து தன் இருப்பிடத்திற்குச் சென்றது. மற்றொரு பாம்புந் தணிகையில் வழிபட்டு நலம் பெற்றது.

"விட ஐந்துதலை அரவு தொழுகின்ற
தணிமலையில் உறை கின்ற பெருமாளே."

[பாம்பு வழிபட்டது] (திருப்புகழ்)

---

870. பாம்புக்குடம்பெற்ற கதை (1)

ஓர் ஊரிலே நிலவழகு என்னும் பெயருடையவன் ஒருவன் இருந்தான். அவனிடம் ஓர் அளவு பொருள் இருந்தது. நிலவழகினுடைய வீடு பாதுகாப் பற்றதாக இருந்த படியால் நிலவழகு தன்னுடைய பொருளைத் தன் நண்பனை ஆனையப்பன் என்பவனிடங் கொடுத்துத் தான் கேட்கும் போது திரும்பத் தருமாறு சொன்னன். ஆனையப்பன் முதலில் நல்லவனாகத்தான் இருந்தான். நிலவழகினிடம் இருந்து பொருள் பெற்றபிறகு அவனுடைய மனம் மாறிவிட்டது. "பெறல ரும்பொருள் பெற்றபின் சிந்தை பிறிதாம்" என்பது பெரியோர் வாக்கு. ஆனையப்பன் நிலவழகு தன்னிடம் கொடுத்த பொருளைத் திரும்பக் கொடாமல் அமுக்கிவிடுவதென்று முடிவுசெய்தான். பொருள் கொடுத்த பொழுது நிலவழகு ஆனையப்பனிடம் இருந்து எத்தகைய பற்றுச் சீட்டும் பெற்றுக்கொள்ளவில்லை. இதனால் ஆனையப்பனுடைய எண்ணம் எளிதில் நிறைவேறுவதாக இருந்தது.

பிறகு நிலவழகு தனக்குப் பொருள் வேண்டிய சமயத்தில் ஆனையப்பனிடஞ் சென்று தான் கொடுத்துவைத்துள்ள பொருளைத் திரும்பத் தருமாறு கேட்டான். ஆனையப்பனோ நான் உன்னிடமிருந்து பொருள் பெற்றதில்லையென்று சாதித்தான். நிலவழகு ஐம்பெருங் குழுவினரிடம் (பஞ்சாயத்தார்கள்) சென்று முறையிட்டுக் கொண்டான். அவர்கள் குறிப்பிட்ட ஒருநாளில் வருமாறு இருவரிடமுங் கூறினர். அவ்வாறே இருவருஞ் சென்றனர். முறைமன்றத்தினர் வழக்காளியைப் பார்த்து, "நீ பொருள் கொடுத்ததற்குச் சான்று

உண்டா?'' என்று உசாவினர்கள். வழக்காளி, ''இல்லை'' என்றனன். அந்நாள் வழக்கப்படி நல்லபாம்பு இடப்பெற்ற குடம் ஒன்றை அவைக்குக் கொண்டுவரச் செய்து, ''நீ பொருள் கொடுத்தது உண்மைதான் என்பதை உறுதிட படுத்த இக் குடத்திற்குள் கையிட்டுக் கூறுவாயாக'' என்றனர். பாம்பு தன்னை எங்குக் கடித்துவிடுகிறதோ என்று அஞ்சிய நிலவழகு ''நான் ஆணையப்பனிடம் நேற்றிரவே பொருளைப் பெற்றுக்கொண்டுவிட்டேன்'' என்று கூறிவிட்டான். நிலவழகினுடைய பொருள் போனது போனதுதான்.

[போனது போனதுதான்]

---

871. பாம்புக்குடம்பெற்ற கதை (2)

தோட்டக்காரன் ஒருவனுக்குப் பேரம்பலம் என்னும் பெயருடைய மகன் ஒருவன் இருந்தான். அவன் தன் தாய் தந்தையர்கட்குத் தெரியாமல் காய்கறி முதலியன விற்று நூறு வெண்பொற் காசுகளைச் சேர்த்தான். அதனைக் கழுக்குன்றன் என்பவனிடங் கொடுத்து, ''இப்பொருளை நான் கேட்கும் போது தருவாயாக''என்று சொல்லியிருந்தான். பிறகு பேரம்பலத்திற்குப்பொருள் வேண்டியதாக நேரிட்ட சமயத்தில் கழுக்குன்றனைக் கண்டு, ''நான் உன்னிடங் கொடுத்து வைத்துள்ள பொருளைத் தருவாயாக'' என்று கேட்டான். இளைஞனாகிய பேரம்பலத்தை வஞ்சித்துப் பொருளைக் கவர்ந்து கொள்ள எண்ணிய கழுக்குன்றன், ''நாளை இரவில் வா உன் பொருளைத் தருகிறேன்'' என்றான். பிறகு குடம் ஒன்றில் ஒரு பாம்பைப் பிடித்துப் போட்டுக் குடத்தின் வாயைத் துணியால் இறுகக் கட்டினான். மறுநாள் இரவு பேரம்பலம் வந்த பொழுது பாம்புக் குடத்தை அவனிடம் கொடுத்து, ''உன்னுடைய பொருள் இக்குடத்தில் இருக்கிறது. உன்னுடைய தோட்டத்திற்குக் கொண்டுபோய் வைத்து அவிழ்த்து எண்ணிக்கொள்'' என்று கூறினன். கழுக்குன்றன் கழறியவைகளை நம்பிய பேரம்பலம் பாம்புக் குடத்தைத் தன்னுடைய தோட்டத்திற்குக் கொண்டுபோய் வைத்து அவிழ்த்து அதனுள் தன்னுடைய கையை விட்டான். உள்ளிருந்த பாம்பு

பேரம்பலத்தின் கையைக் கடித்தது; பேரம்பலம் மாண்டான். நம்முடைய கையில் இருக்கின்ற பொருள்தான் நமக்குப் பயன் படுமே தவிரக் கையை விட்டு நீங்கிய பொருள் பயன்படமாட்டாது. அப்பொருளால் சில சமயங்களில் பெருந் தொல்லை நேரிடுவதும் உண்டு.

[தன் கையை விட்டு நீங்கிய பொருள் தனக்குப் பயன்படாது]

---

872. பாரி கதை

கொடையிற் புகழ்பெற்று விளங்கியவன் பாரி. இவனைப் பெரியோர்கள் மிகுதியும் பாராட்டியுள்ளனர். மாரிபோல் வழங்குவதில் இப் பாரிபோல் எவருஞ் சிறந்து விளங்கவில்லை. பாடிச் செல்வோருக்கும் பாடாது செல்வோருக்கும் இவன் நாடிய பொருளை மிகுதியாக வழங்கிப் புகழ்பெற்றான். இவனுடைய அருளுடைமை இவ்வுலகமெங்கும் பரவி நின்றது.

பாரி மன்னன் தேரிலேறி ஊருக்கு வெளியே சென்றான். காட்டையடைந்து சுற்றினான். ஓரிடத்தில் தாவிப் படரக் கொழுகொம்பில்லாத தனிக் கொடியொன்று விண்ணிலசைந்து துவண்டு நின்றது. அது முல்லைக்கொடி. பாரி மன்னன் அக் கொடியிடத்தில் அருள் கொண்டான். அது படர்ந்து செழிக்குமாறு தன் தேரை அதனிடஞ் செலுத்தி விட்டுத் தான் நடந்து சென்றான்.

ஒருவனுடைய கண்ணுக்கு அழகு கண்ணேட்டமாகிய அருளேயாகும். அவ்வருளில்லாவிடத்து அக் கண்கள் கண்களென்று கழறப்பெறமாட்டா. அவைகளைப் புண்கள் என்றே அனைவரும் இகழ்வர் என்பது பெரியோர் வாக்கு. அந்நேரிய மொழிக்கு இப் பாரி மன்னன் தக்க எடுத்துக் காட்டாவனன்றே?

[அருளற்ற கண்கள் புண்களேயாம்] [சங்க நூல்]

---

873. பாரிசாதங் கொண்டு வந்த கதை

கண்ணபிரான் நரகாசுரனைக் கொன்றார். அவனால் முன்னே கவர்ந்துகொண்டு போகப்பட்ட அதிதியின் (இந்திரன் தாய்) குண்டலங்களைக் கொடுப்பதற்காகக் கருடன் மேல் சத்தியபாமையோடு ஏறிக்கொண்டு தேவலோகத் திற்குச் சென்றார். கண்ணபிரானோடு சென்ற சத்தியபாமை தேவலோகத்து மலரான பாரிசாதப் பூவை விரும்பினாள். பாரிசாத மலரை மானிடப் பெண்களுக்குக் கொடுக்கக் கூடாது என்னும் எண்ணத்தோடு இந்திராணி கொடாதிருந் தாள். இதனைப் பார்த்த சத்தியபாமை, "நாம் இந்தப் பாரி சாத மரத்தை மண்ணுலகிற்குக் கொண்டுபோய்விடுவோம்" என்று கண்ணனிடங் கூறினாள். கண்ணபிரான் கருடனைக் கொண்டு அந்தப் பாரிசாத மரத்தை வேரோடு பறித்துக் கொண்டு வந்து சத்தியபாமையின் வீட்டு முற்றத்திலே நட்டருளினார். அப்பொழுது இந்திரன் முதலிய தேவர்கள் கண்ணபிரானை எதிர்த்துப் போரிட்டார்கள். கண்ணபிரான் தம்முடைய சங்கநாதத்தினால் அவர்கள் அனைவரும் மயங்கி விழுமாறு செய்தார்.

[பாரிசாதம் கொண்டுவந்தது] (பாகவதம்)

---

874. பார்வதி கூற்றையுதைத்த கதை

பார்வதி கூற்றையுதைக்கவில்லை. சிவபெருமான் தான் மார்க்கண்டேயருக்காகத் திருக்கடையூரில் உதைத்தருளி னார். ஆனால் அவர் உதைத்த திருவடி இடது திருவடி. பார்வதி சிவபெருமானுடைய இடப்பாகத்தைப் பெற்று விளங்குகிறாள். அதனால் இடது திருவடி இறைவனுடைய தாகவே நமனையுதைத்த அச் செயலை இறைவியின்மீது ஏற்றி அருணகிரிநாதர் "கூற்றுமரித் திடவேயுதை பார்வதி" என்றும், "கூற்றினை மோதிய பதசத் தினி" என்றுந் திருப் புகழில் பாடியுள்ளார்.

[பார்வதி கூற்றையுதைத்தது]

---

875. பால் அருந்திய அறுவர் கதை

பராசர முனிவருக்கு ஆறு பிள்ளைகள் இருந்தார்கள். அவர்களுடைய பெயர், தக்கன், அனந்தன், நந்தி, சதுர் முகன், பரிதிப்பாணி, மாலி என்பன. இவர்கள் சரவணப் பொய்கையில் குதித்து விளையாடியதுமன்றி அதில் வாழ்ந்த மீன்களையுங் கொன்றுர்கள். இதனைத் தந்தையாகிய பராசர முனிவர் கண்டார். "நீங்கள் மீன்களாகக் கடவீர்கள்" என்று சாபவுரை வழங்கினர். இதனைக் கேட்டுப் பிள்ளைகள் கலங்கினர்கள். "எங்களுடைய சாபம் நீங்குதல் எப் பொழுது?" என்று உசாவினர்கள். அதற்குப் பராசரர், "அறுமுகக் கடவுளுக்கு உமையம்மை பால் கொடுப்பாள் அப்பொழுது சரவணத்திற் சிந்துகின்ற பாலை நீங்கள் அருந்திப் பழைய உருவத்தையடைவீர்கள்" என்றார். அவ்வாறே அறுவரும் சரவணப் பொய்கையில் சிந்திய பாலை யுண்டு பழைய வடிவத்தைப் பெற்றார்கள். சிவபிரானை வணங்கினர்கள். அவர் இவர்களைப் பார்த்து, "நீங்கள் திருப்பரங்குன்றத்தில் தவஞ்செய்துகொண்டிருங்கள். முருகன் அங்கு வந்து அருள்புரிவான்" என்று திருவாய் மலர்ந்தருளி னர். அறுவரும் அவ்வாறே திருப்பரங்குன்றத்தில் தவஞ் செய்துகொண்டிருந்தார்கள். முருகவேள் சூரனையழிக்க வந்தபொழுது அருள்பெற்று வீடுபேற்றையடைந்தார்கள்.

"பால்அருந்திய பேர்சிறந்திரு மூவர்விஞ்சையர்
சூழ் பரங்கிரி"
(திருப்புகழ்)

[பால் அருந்தியது]

---

876. பிச்சையப்பன் கதை

வெகுகாலத்திற்கு முன்பு தொண்டைவளநாட்டில் பெரு நகர் என்னும் ஊரில் பிச்சையப்பன் என்னும் பெயருடைய வன் ஒருவன் இருந்தான். இவன் நன்மனம் அமையப் பெற்றவன். தனக்கு எவ்வளவு குறையிருந்தாலும் அதனைப் போக்கிக்கொள்ள எண்ணமாட்டான். பிறருடைய குறை

யைத் தீர்ப்பதற்குத்தான் முந்தி நிற்பான். இவன் எப்பொழு தும் முயற்சியாய்க் காரியங்களைச் செய்துகொண்டே யிருப் பான். சிறிதுநேரங்கூடச் சோம்பியிருக்கமாட்டான். இவ னுடைய உறவினர்கள் பலர் மிகுந்த வறுமையுடையவர் களாக இருந்தனர். இவன் தன்னுடைய முயற்சியினால் அவர்கள் அனைவருக்கும் உதவிசெய்து அவர்களை நன்னிலை யில் நிறுத்தினான். இவனுடைய உதவிசெய்யும் பண்பையும் முயற்சியையும் அக்காலத்தில் இருந்த புலவர்களும் புகழ்ந்து பாராட்டியுள்ளனர். இவன் தன்னுடைய நன்மையையும் இன்பத்தையும் நாடாமல் பிறருக்கு உதவிசெய்வதிலேயே கண்ணுங்கருத்துமாக இருத்தலைக் கண்டோர் இவனை, "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்" என்று போற் றினர். தன்னுடைய நன்மையை நாடாமல் காரியங்கள் புரிவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருப்பவன் தன் உறவினர்களுடைய துன்பத்தைப் போக்கி அவர்களைத் தாங்குபவன் ஆவான் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது.

[தந்நலம் நாடான் தமர்க்குத் துணையாவான்]

---

877. பிணத்தைமூடி மணத்திற்குச் சென்ற கதை

தொண்டை வளநாட்டில் வாயற்பதி என்னும் ஊரில் வடுக நாதமுதலியார் என்னும் பெயருடைய முதலியார் ஒரு வர் முன்னாளில் வாழ்ந்திருந்தார். இவர் விருந்தோம்பு வதினும் நன்கொடை கொடுப்பதினும் புகழ் பெற்றவர். இவருடைய இல்லத்திற்குச் சில புலவர்கள் வந்தனர். அவர் களுக்கு விருந்து சமைத்துக் கொண்டிருக்கும்பொழுது முதலி யாருடைய தம்பி இறந்து போனான். அவனுடைய பிணத்தை மறைத்து விட்டுப் புலவர்களுக்கு முதலியார் விருந்து செய்தார். இம்முதலியாருடைய மகனும் புகழுடன் விளங் கினர். அவரிடமும் புலவர்கள் தொடர்பு கொண்டிருந்த னர். ஒரு புலவருக்குத் திருமணம் நிகழ்வதாயிற்று. அத் திருமணத்திற்குக் கட்டாயம் வரவேண்டு மென்று முதலியா

ருடைய மகனிடம் புலவர் வற்புறுத்தி யிருந்தார். மணநாள் அன்று எதிர்பாராதவாறு முதலியாரின் மகனவி இறந்து போனுள். செய்தியை உணர்ந்த புலவர் முதலியாருடைய மகன் எங்கே தம்முடைய திருமணத்திற்கு வராமல் பிண விணையில் இருந்து விடுகிருரோ என்று எண்ணி முதலியா ருடைய இல்லத்திற்குச் சென்ருர். தம்பியின் பிணத்தை மூடி வைத்து விட்டு விருந்தினர்க் கன்ன மிட்ட வடுகநாதர் மகனுயின் மனவியின் பிணத்தை மூடி வைத்து விட்டு என்னுடைய திருமணத்திற்கு வந்து அதனைச் சிறப்பாக முடித்து வைப்பாயா என்று;

"முந்தனை யோன் மாள முத்தமிழோர்க் கன்னமிட்ட
அந்தவடுகன் மகனுனல்—வந்தென்
தலைக்கலி யாணத்துக்கே தான் பிணத்தை மூடி
இலக்கணமாச் செய்குவைநீ யே"

என்று பாடினுர். முதலியாருடைய மகனும் புலவருடைய திருமணத்திற்குப் போய் அதனை முடித்து விட்டு வந்தபின் தன்னுடைய மனவியின் பிணவினையை நடத்தினுர்.

"நெடுக விரித்துப் பிணமூடி
னேன் மகன் நீயெனில்வா
கடுக எனக்கு முன் முந்தவென்
றேயோர் கவிதை சொல்லி
முடுக வழைப்ப மனையாள்
பிணந்தனை மூடிச் சென்ற
வடுகன் அளித்த மகன் வாய
லான் தொண்ட மண்டலமே"

[பிணத்தை மூடி மணத்திற்குச் சென்றது] (தொண்ட மண்டல சதகம்)

---

878. பிம்பசரன் கதை

பிம்பசரன் என்பவன் முன்னுளில் வட நாட்டில் இராச கிருகம் என்னும் நகரில் இருந்து அரசு செலுத்திக் கொண்டி ருந்த ஓர் அரசன். நலங்களெலாம் நன்கு அமையப்பெற்ற இவன்

சீருஞ் சிறப்புந் திகழ அரசு புரிந்து கொண்டிருந்தான். ஆண்டுகள் தோறும் வேள்விகள் செய்வது இவனுக்கு வழக்கம்.

புத்தர் இவனுடைய நாட்டிற்கு வந்தார். வேள்வி செய்தலையும் அவ்வேள்வியில் உயிர்க் கொலை புரிதலையுங் கண்டார். "அரசனே! உயிர்க் கொலை செய்து ஏன் வேள்விகளைச் செய்கின்றாய்? பிறஉயிர்களை ஒருவன் வருத்தாமல் தன்னுடைய வாழ்க்கையை நடத்துவதுதான் மேன்மையை அளிக்கும். உயிர்க் கொலை பொருந்திய வேள்விகளைச் செய்து நன்மையை அடைவதைப் பார்க்கினும் உயிர்க் கொலை புரியாமல் தாழ்ந்த நிலைமையில் இருப்பது எவ்வளவோ சிறப்பினை அளிக்கும்" என்று அறவுரைகள் பல அருளுரையாகக் கூறினர்.

பிம்பசரன் அது முதல் வேள்வி செய்தலை நிறுத்தினன். வேட்டையாடுதலையும் விட்டான். ஊன் உண்ணுமையாகிய சிறந்த நோன்பை மேற்கொண்டான். அந்நாட்டினரும் அரசனைப் பின்பற்றினர். நாடு முழுவதும் அருளறஞ் சிறந்தோங்கியது.

நெய் முதலிய பொருள்களைத் தீயிற் சொரிந்து ஆயிரக் கணக்கான வேள்விகள் செய்தலைப் பார்க்கினும் ஒன்றன் உயிரைக் கொன்று அதன் உடம்பைத் தின்னுதிருத்தல் நல்லது என்பதை உலகினர் உணரப் பிம்பசரன் வழிகாட்டியது மிகச் சிறப்பாகப் பொருந்தியது.

[ஆயிரம் வேள்வி செய்தலினும் புலாலுண்ணுமை நன்று]
(புத்த சரிதை)

---

879. பிரகலாதன் கதை (1)

பிரகலாதன் என்பவன் இரணியனுடைய மகன். இவன் திருமாலிடத்திலே பெருமால் கொண்டவனாய் அன்பு செய்திருந்தான். இவனுடைய தந்தை யாகிய இரணியன் ஆணவங்கொண்டவனாய் உலகோர் அனைவரும் தன் பெயரையே சொல்லிப் புகழ ஆரசாட்சி செய்திருந்தான்.

பிரகலாதனுக்குக் கல்வி கற்பிக்கத் தொடங்கிய ஆசிரியன் பிரகலாதனைப் பார்த்து "ஓம் இரணியாய நம" என்று சொல் என்று முதலிற் சொன்னான். பிரகலாதனோ அவ்வாறு சொல்லாமல் "ஓம் நமோ நாராயணாய" என்று நவின்றான். தன்வேலை போய் விடும் என்று அஞ்சிய ஆசிரியன் இரணியனிடம் ஓடினான். உன் மகன் சொல்லத் தகாத சொற்களைச் சொல்லுகிறான்" என்றான்.

இரணியன் மகனை யழைத்தான். "அவ்வாறு சொல்லாதே" என்றுகண்டித்தான். பலவாறு தண்டித்தான். "யாது செய்தாலுஞ்சரி நான் இந்தப் பயனற்ற சொற்களைச் சொல்லமாட்டேன்" என்று சொல்லி விட்டு "நமோ நாராயணாய" என்றே கூறினான்.

இறுதியில் இரணியன் அழிந்தொழியுமாறும் நேரிட்டது. குற்றமற்ற நல்ல அறிவினையுடையவர்கள் பொருளற்ற மொழிகளை மறந்துங் கூறமாட்டார்கள் என்பது அந்நாளில் பிரகலாதனிடத்தில் நன்றாக விளங்கியது.

[அறிஞர் பொருளற்ற மொழி கூறார்] (பிரகலாதன் கதை)

---

880. பிரகலாதன் கதை (2)

தன்விருப்பம் போல் பிரகலாதன் நடக்காதபடியினால் இரணியன் அவனைக் கொன்று விடுமாறு ஏவலர்களுக்குக் கட்டளையிட்டான். இரணியனது ஏவலைப் பெற்றோர் பிரகலாதனைக் கொல்ல முயன்றனர்.

கொடிய நச்சுப் பாம்புகளை விட்டுக் கடிக்கச் செய்தார்கள். மலைமேல் ஏற்றிக் கீழே உருட்டினார்கள். நஞ்சை ஊட்டினார்கள். தடிகளைக்கொண்டு அடித்தார்கள். வேலாற் குத்தினார்கள். வாள்கொண்டு வெட்டினார்கள். நெருப்பிலே தள்ளினார்கள். கல்லோடு கட்டிக் கடலிலே போட்டார்கள். இன்னுஞ் செய்யக் கூடியவைகளையெல்லாஞ் செய்தார்கள்.

மணிவண்ணனை மனத்திலேகொண்ட பிரகலாதனுக்கு எத்தகைய தீமையும் உண்டாக வில்லை. அவன் வழக்கம் போல் மகிழ்ச்சியாகவே இருந்தான்.

ஒருவன் தீயநெறிகளிலே சென்று தீமையான காரியங்களைச் செய்யாம லிருப்பானுயின், அவன் எத்தகைய கேட்டையும் (தீமையையும்) அடையமாட்டான். அவனுக்குச் செய்யப் பெறுந் தொல்லைகள் அவனை வருத்த மாட்டா' என்று அறநூலோர் கூறியது பிரகலாதனிடம் உண்மையாக விளங்கியது.

(இரணியன் கதை)

---

881. பிருகரதன் கதை

முன்னாளில் விதேக நாட்டிலே பிருகரதன் என்னும் பெயருடைய அரசன் ஒருவன் அரசாட்சி செய்து கொண்டிருந்தான். இவனுக்குத் தேவவிரதன் என்னும் பெயருடைய மைந்தன் ஒருவன் தோன்றினான். இவன் மனைவி மக்களோடு இனிது வாழ்ந்துகொண் டிருக்குங்கால் ஒரு நாள் மேல் மாளிகையில் உலாவிக் கொண்டிருந்தான். அப்பொழுது மாவிலையின் பழுப்பு ஒன்று இவனுடைய முன்பு விழுந்தது.

அப்பழுப்பினை அரசன் தன்னுடைய கையிலே எடுத்தான். எண்ணம் பலவாறு ஓடத் தொடங்கியது. "ஆ ஆ, இம்மாவிலை சிலநாள்களுக்கு முன்னர் எவ்வளவு அழகாக விளங்கியது. பிறகு விரைவாக முற்றி இப்பொழுது உதிர்ந்தும் போயதே. நம்முடைய உடலின் தன்மையும் இத்தகையதுதானே", என்று எண்ணினான். அறங்கள் பலவற றைச் செய்தான். தன்னுடைய மகனுக்குப் பட்டங் கட்டி விட்டுத்தான் துறவியானான். அரசாட்சித் தொல்லைகள் இம்மன்னனுக்கு இல்லாமற் போன தன்றி இறுதியில் வீடு பேறும் உண்டாயது.

ஒருவன் எவ்வெவற்றில் இருந்து விடுபடுகிருனே அவ்வவற்றுல் வரும் துன்பம் அவனைப் பற்றுவதில்லே யென் பது அவ்வரசன் பால் இனிது விளங்கியது.

[விட்டு விட்ட பொருள்களால் துன்பமில்லே]

(மைத்திராயணி உபநிடதம்)

---

882. பிருகு முனிவர் கதை

பிருகு முனிவர் என்பவர் அந்தணர் குலத்தில் தோன் றினர். எல்லாக் கலேகளையும் நன்கு கற்றுத் தேறினர். பிறந்த பொழுதே இவர் சிறந்த ஒளியுடன் திகழ்ந்தமை யால் பிருகு என்று பெயரிடப் பட்டார். இவர் புலோமசை கியாதி என்னும் பெயருடைய மங்கையர் இருவரை மணந்து முதலில் இல்லறத்தை இனிது நடத்தினர்.

மாலொடு போர் புரிந்தினைத்த அசுரர்களிற் சிலர் இவ ருடைய மனைவியாகிய புலோமசையிடம் வந்து அடைக் கலம் புகுந்தனர். புலோமசை தன்னுடைய கற்பாற்றலால் அவ்வசுரரைப் பாதுகாத்து அனுப்பினள். அதனற் சினங் கொண்ட மால் அவள் இறந்தொழியுமாறு சாபமிட்டார். அவளும் அவ்வாறே இறந்தாள்.

இதனைக் கண்ட பிருகு முனிவர், ''நீ மண்மேற் பிறந்து மனைவியைப் பிரிக'' என்று சாபமிட்டார்' இதனல் பிறகு மாலும் அவ்வாறே உழன்றார். பிறகு பிருகு முனிவர் இறந்து போன தம்முடைய மனைவியைத் தம்முடைய தவப் பெருமை யால் எழுப்பிக் கொண்டார்.

பிறகு வாழ்க்கைத் துன்பங்கள் மலிந்து விளங்குதலை உளங்கொண்டு எல்லா அவாக்களையும் ஒழித்துத் தவஞ் செய்து வீடுபேற்றை அடைந்தார்.

அவா என்று சொல்லப் பெறுகிற துன்பங்களுள் பொல் லாத துன்பம் கெடுமானுல், இவ்வுலகில் இன்பம் இடைய ருது உண்டாகும் என்பது இவரிடம் நன்கு விளங்கியது

[அவாவற்றுல் துன்பங் கெடும்]

---

883. பிருங்கி முனிவர் கதை

பிருங்கி என்பவர் முற்றத் துறந்த முனிவர்களில் ஒருவர். உலகத் துன்பங்கள் எல்லாவற்றிற்கும் காரணம் அவாவே என்று இவர் அறிந்தார். எப்பொருளிலும் அவாவை நிறுத் தாமல் ஒழுகினார். தம்முடைய தவப் பெருமையால் மேரு மலைக்குச் சென்றார். இறைவனும் இறைவியும் ஓர் இருக்கை யில் எழுந்தருளி யிருந்தனர். இறைவியை வழிபட்டால் உலக இன்பங்கள் உண்டாகிவிடும்; அதனால் பிறவித் துன் பம் உண்டாகும் என்று எண்ணிய இவர் இறைவனை மட்டும் வழிபட்டார். வண்டு வடிவம் எடுத்துக் கொண்டு இருவருக் கும் இடையே பறந்து சென்று இறைவனை மட்டும் வலஞ் செய்தார்.

பிருங்கியின் செயல் பிராட்டிக்குச் சினத்தை உண்டாக் கியது. தன்னுடைக் கூருகிய ஊனுங் கரையச் செய்த னள். இறைவன் அருளால் மூன்றுவது கால் ஒன்று இவ ருக்குத் தோன்றியது.

இறைவி இறைவனுடைய இடப் பாகத்தைப் பெற்றுப் பரமனோடு ஒன்றினாள். அப்பொழுதும் இவர் வீடு பேறு ஒன்றையே வேண்டிப் பணிந்தார். இறைவியும் இவரிடம் திருவருள் செய்து இவர் எண்ணியவாறே அருள் புரிந்தாள்.

ஒருவன் ஒன்றை விரும்பத் தொடங்கினால் பிறவாமை யைத்தான் விரும்ப வேண்டும். அஃது அவா அற்ற தன் மையை நாடினால் உண்டாகும் என்பது இவரிடம் நன்கு விளங்கியது.

[விரும்பினால் பிறவாமையை விரும்ப வேண்டும்] (சிவரகசியம்)

---

884. பிருடி கதை

தொண்டை வள நாட்டில் பிருடி என்னும் பெயருடைய அந்தணன் ஒருவன் இருந்தான். இவனுடைய மனைவியின் பெயர் உருசி. இவர்கள் அந்தணர் குலத்தில் பிறந்திருந்தும் அக்குலத்திற்கேற்ற ஒழுக்கம் உடையவர்களாக இல்லை.

சிறிதும் அஞ்சாமல் கொலை, களவு, காமம் முதலிய தீவினை களை மிகுதியாய்ச் செய்தார்கள். அதனால் மிகுந்த தீவினை உண்டாகியது அத்தீவினை அவர்களுக்குப் பெருஞ் சுமை யாகி அவர்களை வருத்தத் தொடங்கியது. வருத்தத்தைப் பொருத இவர்கள் அறிஞர்களிடம் சென்று இத்தீவினையைப் போக்குதற்கு வழி யாது என்று ஐசாவினர்கள். அவ்வறி ஞர்கள் நன்னீராடல், சிவப்பதி வழிபாடு செய்தல் முதலிய வைகளைச் செய்தால் அத்தீவினையைப் போக்கலாம் என்று கூறினர்கள். இவர்கள் அவ்வாறே பல இடங்கட்குச் சென்று நல்வினையைப் புரிந்து பார்த்தார்கள். தீவினைச் சுமை தொலையவில்லை. ஒரு பெரியவர் கோபருப்பதம் என்னு மிடத்திற்குச் சென்று திருத்தநீராடி இறைவழிபாடு செய்தால் தீவினையைப் போக்கலாம் என்று கூறினர். இவர்களும் அவ்வாறே அப்பதிக்குச் சென்று திருத்த நீராடி இறை வழி பாடு செய்து தமது தீவினையைப் போக்கிக் கொண்டார்கள். எக்காரியமும் காலம் வரும்போதுதான் கைகூடும்.

[காலம் வரும்போதுதான் காரியங் கைகூடும்.]

---

885. பிருதுவின் கதை

பிருது என்பவன் கதிரவன் குலத்தில் தோன்றிய ஒரு காவலன். இவன் இவ்வுலகில் தோன்றிய பொழுது நலங் கள் பல உண்டாயின. தேவர்கள் இவனுக்குப் படைக் கலங் கள் பலவற்றை அருளினர். இவன் தக்க காலத்தில் அரச னாகி இருநிலம் புரந்தான்.

அறநெறி முறைப்படி ஆட்சியை மாட்சி பெறச் செய்து கொண்டிருந்தான். சில காரணங்களால் விளை பொருள்கள் நன்கு விளையவில்லை. அதனால் குடிகள் அல்லல் பல அடைந் தனர். இவன் தன்னுடைய ஆட்சியைத் தானே இகழ்ந்து கொண்டான். நிலமகள் வளங் குன்றக் காரணம் யாதென்று நெடிது எண்ணமிட்டான். வில்லெடுத்துக் கணை தொடுத் தான் நிலமகள் மீது வீசுதற்கு. நிலமகள் அஞ்சினள். ஆவின் வடிவை அடைந்து ஓடத் தொடங்கினள். இவன்

அவனை அதட்டினான். 'நில்' என்று கட்டளை யிட்டான். "உன்னை அழிப்பேன்" என்று கூறிக் கணையை வீசத் தொடங்கினான்.

நிலமகள் வழக்கம்போல் 'விளைவை அளிக்கிறேன் கணையை விடாதே' என்று வேண்டினாள். மன்னன் மகிழ்ந்து கணையை மடக்கினான். அணிநிலம் வழக்கம்போல் விளைவை நல்கியது. அவன் கீழ் வாழ் மக்கள் அல்லல் அகன்று உள்ளங் களித்தனர்.

தன் கீழ் வாழ்வார் துன்பினை அகற்றுபவனே அரசரிற் சிறந்தவனாய்த் திகழ்வான் என்பது இம்மன்னனிடம் நன்கு விளங்கியது.

[துன்பகற்றுவோனே அரசன்]

---

886. பிழைப்பிழந்த கதை

ஒரு காட்டிலே ஒரு வேடன் இருந்தான். அவன் பெரும் பாலும் காட்டெலிகளையே பிடித்துத் தின்பது வழக்கம். ஒரு நாள் காட்டில் சில வளைகளைக் கண்டான். அவைகள் எலி வளைகளாக இருக்கக்கூடும் என்பதற்குச் சில அறிகுறிகள் காணப்பட்டன. அவ்வளைகளைத் தோண்டிப் பார்த்தான். இவன் எண்ணியபடி எலிகள் பல அகப்பட்டன. அதைக் கொண்டு இவன் மன நிறைவடையவில்லை. மேலும் மிகுதி யாக எலி பிடிக்க வேண்டும் என்னும் அவா அவன் உள்ளத்தில் மேலோங்கியது. கண்ணுக்குத் தெரிந்த வளைகளையெல்லாம் தோண்டினான். சில வளைகள் பாம்பு வளைகள். அவ்வளைகளில் இருந்து பாம்புகள் புறப்பட்டுச் சீறிக்கொண்டு வேடனைத் துரத்தலாயின. வேடன் மிகு அச்சங்கொண்டு ஓடத் தொடங்கினான். முன்பு தான் பிடித்திருந்த எலிகளையும் போட்டுவிட்டு மிகு விரைவாக ஓடும்படி நேரிட்டது. இவ்வளைகளில் இருந்து புறப்பட்ட பாம்புகள் சீறிக்கொண்டு தன்னைப் பின்தொடர்ந்ததை எண்ணி எண்ணி நடுங்கினான். இனிமேல் எலி பிடிப்பதற்கு எவ்வளைகளையுந் தோண்டுவதே இல்லை யென்று முடிவு செய்தான். அதுமுதல் அவனுடைய

எலி பிடிக்கும் பிழைப்புப் போய்விட்டது. கிலி பிடித்த இவன் வேறு வகையான பிழைப்புகளையும் அறியாதபடியி னுல் வருந்தித் துன்புற்ருன். யாராக இருப்பினும் பெற்றதைக் கொண்டு மன நிறைவுடைய வேண்டும். இல்லாவிட்டால் பேரவாவினுல் பெருந் தொல்லைக்கு உள்ளாக நேரிடும். பிறரி டம் பொருள் இரப்போரும் ஓரளவுக்கில்லாமல் அவா மிகுதி யினுல் அளவு கடந்து இரக்கத் தொடங்குவார்களேயானுல் வேடிக்கைப் போன்றே பிழைப்பைக் கெடுத்துக் கொண்டு துன்புறுவர்.

[மன நிறைவு வேண்டும்]

---

887. பிள்ளைகளை மீட்டுக் கொடுத்த கதை

ஓர் அந்தண மாதுக்கு மூன்று பிள்ளைகள் பிறந்தன. அப்பிள்ளைகள் பிறந்த அதே கணத்தில் மறைந்து விடுவது வழக்கமாகி விட்டது. தாய்கூட அக்குழந்தைகளின் முகங் களைப் பார்க்க முடியவில்லை. பிறகு அம்மாதுக்கு நான்காவது குழந்தை பிறக்கத் தொடங்கியது. அவ்வந்தணன் கண்ண னிடம் வந்து, "இந்த ஒரு பிள்ளையை யேனும் காப்பாற்றி அடியேனுக்கு உதவி செய்ய வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான். கண்ணன் அவ்வாறே "காப்பாற்றித்தருகிறேன்" என்று உடன்பட்டான். பிறகு ஒரு வேள்விக்குச் சென்ற படியினுல் கண்ணன் அந்தணனுடைய இல்லத்திற்கு எழுந் தருள முடியவில்லை. இச்செய்தியைக் கண்ணன் அருச்சுன னிடம் சொன்னுன். அருச்சுனன், "நான் போய் அப்பிள் ளையைக் காப்பாற்றுகிறேன்" என்று கண்ணனுக்கு உறுதி மொழி கூறினுன். அந்தணனையும் அழைத்துக் கொண்டு அவனுடைய வீட்டிற்குச் சென்ருன். மகப்பேறு நிகழும் இடத்தைச் சுற்றிக் காற்றுக்கூட உள்ளே நுழைய முடியாத படி அம்புக்கூடங் கட்டிக் காவல் செய்து கொண்டு நின்ருன். பிள்ளை பிறந்தது; ஆனுல் முன் போலவே போன மாயந் தெரியாமற் போய்விட்டது. அந்தணனுக்கு அருச்சுனன் மீது அளவு கடந்த சினம் உண்டாகி விட்டது. அவன் அருச்சுனனைப் பார்த்து, "ஆண்மை அற்றவனே! உன்னுல்

அன்றே யரன் பிள்ளையை இழக்கும்படியாக நேரிட்டு விட்டது. கண்ணன் எழுந்தருளிக் காப்பதை நீயன்றே கெடுத்தாய்?'' என்று பலவாறு இகழ்ந்தான். அருச்சுனனைக் கண்ணனிடத்திற்குத் தள்ளிக்கொண்டு சென்றான். கண்ணன் புன்னகை செய்தான். ''அவனை விடு; உனக்கு நாள் பிள்ளையைக் கொண்டு வந்து தருகிறேன்'' என்று அருள் புரிந்தான்.

கண்ணன் ஒரு தேரிலே ஏறினான். அருச்சுனனையும் அந்தணனையும் தேரில் அழைத்துக்கொண்டு புறப்பட்டான். அருச்சுனனைத் தேரோட்டுமாறு செய்தான். அத்தேருக்கும் அருச்சுனனுக்கும் அந்தணனுக்கும் மேலான ஆற்றலைத் தன்னுடைய எண்ணத்தால் கொடுத்தான். இவ்வுலகத்திற்கு வெளியே நெடுந் தொலை அளவும் கொண்டுபோய் அங்கே ஓரிடத்தில் தேருடனே இவர்களை நிறுத்தினான். தான் பரமபதத்திற்குச் சென்றான். அங்கு தேவிமார் கண்ணனைக் காணும் பொருட்டு அழைப்பித்து வைத்திருந்த பிள்ளைகள் நால்வரையும் அந்தணனிடத்தில் கொண்டு வந்து கொடுத்தான். தேவிமார்கள் இப்பிள்ளைகளைக் கவர்ந்ததன் நோக்கமும் நிறைவேறியது.

[பிள்ளைகளை மீட்டது]

---

888. பிள்ளைப்பாண்டியன் கதை

பிள்ளைப்பாண்டியன் என்பவன் வெகுகாலத்திற்கு முன் மதுரைமாநகரில் இருந்து அரசுபுரிந்துகொண்டிருந்தான். இவன் கல்வியை நன்கு கற்றவன். யாரேனும் அரைகுறையாகக் கல்வி கற்றுத் தப்புந்தவறுமாகப் பாடல் இயற்றுவாராயின் இவனுக்கு மிகுந்த சினமுண்டாகிவிடும். அவர்களைத் தனக்கு அண்மையிற் கூப்பிடுவான்; சென்றவுடன் தலையில் நறுக்கென்று குட்டிவிடுவான். அவனுடைய விரல்களில் ஆழி (மோதிரம்) இருக்கும். அவ் வாழிகள் குட்டும் பொழுது தலையிற்பட்டுப் புண்ணையுண்டாக்கிவிடுவதும் உண்டு. ஆனால் குட்டுப்பட்டவர்கள் தங்களுக்குத் தலையில்

ஏற்பட்டுள்ள புண் தங்கமோதிரத்தால் ஏற்பட்டதென்பதை யெண்ணி ஒருவாறு மன நிறைவு கொள்ளுவார்கள். இதனால் தான் "குட்டுப்பட்டாலும் மோதிரக்கையாற் குட்டுப்பட வேண்டும்" என்னும் பழமொழியும் உண்டாகியது. இப் பாண்டியனிடம் போலிப்புலவர்கள் பலர் குட்டுப்பட்டிருக் கிறார்கள்.

"குட்டுதற்கோ பிள்ளைப்பரண் டியனீங் கில்லை"

[பிள்ளைப் பாண்டியன்] (தனிப்பாடல்)

---

889. புகழேந்திப் புலவர் கதை

புகழேந்திப்புலவர் தொண்டைமண்டலத்தில் பொன் விளைந்த களத்தூரிற் ரோன்றியவர். ஒட்டக்கூத்தர் என்னும் புலவர் இப்புகழேந்திப் புலவரின் காலத்தில் இருந்தார். இருவருக்கும் பகையுண்டாயிற்று. ஒட்டக்கூத்தர் புகழேந்திப் புலவர் வருந்துமாறு சிறையில் அடைத்துவிட்டார். இயற்கை யாகவே இனிய பண்புவாய்ந்த புகழேந்திப்புலவர் எல்லோ ரிடத்திலும் இன்சொற்களையே இயம்பிக்கொண்டிருந்தபடி யால் எல்லோரும் இவருக்கு வேண்டிய உதவிகளைச் செய் தனர். சிறைச்சாலை வழியாகத் தண்ணீருக்குச் சென்ற பெண்களிடம் எளிமையான இனிய நூல்கள் சிலவற்றை இயற்றிக்கொடுத்து இன்னுரையாடினர். அவர்களும் இனிய உணவுப்பொருள்களை வழங்கி அன்பு பாராட்டினர். எல்லோ ரிடத்தும் இன்சொல் பேசுபவர்களுக்குத் துன்பத்தையுண் டாக்கும் வறுமை முதலிய கொடுமைகள் உண்டாகமாட்டா என்பது இவரிடம் நன்கு பெறப்பட்டது.

(புகழேந்தி வரலாறு).

[இன்சொல் இயம்புவோர்க்குத் தீமைகள் உண்டாகமாட்டா]

---

890. புகழ்த்துணை நாயனார் கதை

முன்னாளில் செருவிலிபுத்தூர் என்னும் ஊரில் புகழத் துணை நாயனார் என்னும் பெயருடையவர் ஒருவர் இருந்தார்.

அவர் ஆதிசைவ மரபில் தோன்றியவர். இறைவழிபாடு செய்தலைக் கடமையாகக் கொண்டவர். அந்நாளிற் பன்னெடுநாள் மழைபெய்யாமற் போய்விட்டது. அதனால் நாட்டிற் பஞ்சம் மிகுதியாயிற்று. மக்கள் உணவுப்பொருள் கிடைக்காமற் பெரிதும் வருந்தினர். புகழ்த்துணையார்க்கும் உணவு அகப்படவில்லை. அதனால் தளர்ந்து மிகவும் மெலிந்தார். ஒருநாள் சிவபூசை செய்யும்பொழுது பசி மிகுதியாயிற்று. அதனால் அதிகத் தளர்ச்சியை அடைந்தார். திருமுழுக்குச் செய்துகொண்டிருந்த குடத்தோடு இறைவன் மீது விழுந்தார்.

சிறிதுபோது மயங்கிக்கிடந்தார். அப்பொழுது இறைவன் அவருடைய மனவெளியில் தோன்றிக் காட்சிதந்தார். "அன்பனே! மனம் வருந்தாதே. இப்பஞ்சம் நீங்கும் வரையிலும் உனக்கு நாடோறும் ஒரு பொற்காசு தருகிறோம். அதனைக்கொண்டு நீ உன் திருப்பணிகளைச் செய்வாயாக" என்று அருள்புரிந்தார். அவ்வாறே பொற்காசும் நல்கினார். புகழ்த்துணையார் அதனைக்கொண்டு தாம் செய்யவேண்டிய கடமைகளைச் செய்துகொண்டிருந்தார். மழையின்றேல் தானம் தவம் முதலியன உலகில் நிலைபெறமாட்டா.

"நேய புகழ்த்துணையார் நீராட்டுங் கைதளர்ந்துன்
தூயமுடி மேல்விழுந்தார் சோமேசா—ஆயுங்கால்
தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்"

(சோமேசர் முதுமொழி வெண்பா)

"அகத்தடி மைசெய்யு மந்தணன் ருனரசிற்
புனல்கொண்டுவந் தாட்டுகின்ருன்
மிகத்தளர் வெய்திக் குடத்தைநும் முடிமேல்
விழுந்திட்டு நடுங்குதலும்
வருத்தவ னுக்கு நித்தற்படியும் வருமென்
ருருகாசிகை நின்றநன்றிப்
புகழ்த்துணை கைபுகச் செய்துகந் தீர்பொழி
லார்திருப் புத்தூர்ப் புனிதனீரே"

[வான்சிறப்பு] (தேவாரம்)

891. புட்கரன் கதை (1)

புட்கரன் என்பவன் நளன் வாழ்ந்திருந்த காலத்தில் இருந்தவன். குறுநில மன்னர்களில் ஒருவன். நளனுக்கு அடங்கி ஆட்சிபுரிந்துகொண்டிருந்த இவன் கலியின் சூழ்ச்சியால் நளனிடத்திற்கு வந்தான். "நாம் இருவரும் சூதாடுவோம் வருக" என்று கூப்பிட்டான். புட்கரனைவிட நளன் சிறந்த அறிவாளி. ஆகவே அவன் இவனோடு நாம் சூதாடினால் தோல்வியடையமாட்டோம் என்று எண்ணினான். புட்கரனோடு சூதாடுவதற்கு இசைந்தான்.

ஊழ்வினையால் கலி உருத்துநின்ற ஞகையால் நளனுடைய அறிவு குன்றியது. சூதாடுதலில் பேதையாய்த் தோற்றான். மடையனாக இருந்த புட்கரனோ சூதாடுதலில் சீரிய அறிவுநலம் உடையவனாய் வெற்றியடைந்தான். சிறந்த அறிவாளியாகத் திகழ்ந்த நளன் சூதில் தோல்வியடைந்ததும் பேதையாக இருந்த புட்கரன் சூதில் வென்றதும் ஊழ்வினையின் போக்காக முடிந்தது.

பொருளை இழத்தற்குக் காரணமான ஊழ் பேதையாக்கும்; பொருள் ஆவதற்குக் காரணமான ஊழ் அறிவைப் பெருக்கும் என்பன இவ்விருவர்பாலும் நன்கு உணரப்பட்டன.

[ஆகூழும் போகூழும்]

---

892. புட்கரன் கதை (2)

புட்கரன் என்பவன் நளனுக்குக் கீழ்ப்பட்டுக் கப்பங் கட்டிக் கொண்டிருந்த ஒரு குறுநில மன்னன். குறுநில மன்னனாக இருந்தும் உறுதொழிலைப் புரியாது சூதாடும் தொழிலையே மேற்கொண்டான். ஒருநாளின் அறுபது நாழிகையையுஞ் சூதாட்டத்திலேயே செலவிடுவான்.

சூதாட்டத்தில் மட்டும் அல்லாமல் வாதாட்டத்திலும் வல்லவன். நளனைத் தொலைக்க எண்ணிய சனி இவனையடுத்தான். சனியின் துணையைப் பெற்ற இவன் நாடுநகரம் எல்லாவற்றையும் வென்றுகொண்டு நளனை நாட்டைவிட்டுத் துரத்தினான். குறுநில மன்னனாக இருந்தவன் பெருநில மன்னனாகியும் சூதாட்டத்தை விட்டு நாடாள்வதில் உள்ளத்தைச் செலுத்தவில்லை. நாளுஞ் சூதாட்டத்தையே நயந்து ஓயாமல் ஒழியாமல் சூதாடிக்கொண்டிருந்தான். சனியின் தொல்லை நளனைவிட்டு நீங்குகிற சமயத்தில் நளன் இவனிடம் வந்தான். அப்பொழுதும் இவன் சூதாட்டத்தில் மூழ்கினான். "நான் தோற்ற நாட்டைத் தந்துவிடுகிறேன். நீ தோற்ற உன்னுடைய மனைவியைத் தா" என்றான். மேலுஞ் சூதாடினான். வெற்றி நளனுக்கு உண்டாகியது. தோல்வியடைந்த இவன் நாட்டையுஞ் செல்வத்தையும் இழந்து ஓட்டம் பிடித்தான். ஓயாமல் சூதாடுந்தொழிலை மேற்கொண்டால் பொருளும் அது வரும் வழியும் புறமே சென்றுவிடும் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்து கொண்டது.

[சூதாடுந் தொழிலைத் தொடர்ந்து நடத்தினால் செல்வந்தொலையும்]

---

893. புட்பதந்தர் கதை

புட்பதந்தர் என்பவர் பெருந்தவம் புரிந்த அருந்தவர்களில் ஒருவர். தம்முடைய அருந்தவத்தின் பயனைய் ஆக்கையோடு ஆயிரங்கண்ணன் உலகிற்குச் சென்றார். அங்குச் சில நாள் தங்கியிருந்தார். ஒருநாள் புறப்பட்டு யமபுரஞ் சென்றார்.

இவ்வுலகில் பொல்லாத காரியங்களைப் புரிந்தோர் அவ்வுலகில் அல்லல் அடைந்து அலறுதலைக் கண்டார். அருளுடைமையிற் சிறந்து விளங்கிய இவருக்கு எமலோகத் தண்டனைக் காட்சிகள் மிகுந்த துன்பத்தை யுண்டாக்கின. இவர் சென்றபோது தீவினையாளன் ஒருவனை எமபடர்கள்

தீயில் தள்ளித் துன்புறுத்திக்கொண்டிருந்தனர். இவர் உடனே எமனிடஞ் சென்றார். அத் தீவினையாளனைத் துன் புறுத்தாது விட்டுவிட வேண்டும் என்று வேண்டிக்கொண் டார். அவனுடைய தீவினை தீரவேண்டுமாகையால் அவனைத் தீயிலிடுகின்றனர். அவனுக்குப் பதிலாக வேறு எவரேனுஞ் சென்று தீயிற்புக இசைந்தால் அவனை விட்டு விடலாம் என்றான் நமன். இவர் தாமே புகுவதாகக் கூறித் தீயிற் புகுந்தார். இவருடைய அருளுடைமையைக் கண்டு அனைவரும் மிகுந்த வியப்படைந்தனர். ஒருவனிடத்திலே அருளில்லாதவிடத்தில் அவன் கண் பெற்றிருப்பதால் யாதும் பயனில்லை யென்பதை இவரிடம் எல்லோரும் நன்கு கண்ட னர்.

[அருளே கண்ணுக்கழகு]

---

894. புட்பதந்தர் கதை (வேறு)

புட்பதந்தர் என்பவர் ஒரு முனிவர். அவர் காட்டிலே தவஞ்செய்துகொண்டிருந்தார். அவருக்கு ஒருநாள் மிகுந்த பசியுண்டாகியது. பக்கத்தில் இருந்த ஒரு சிற்றூரை நோக்கி உணவுக்காகப் புறப்பட்டார். அவர் செல்லும் வழியில் நுண் ணுணர்வாளன் என்னும் பெயரையுடைய வேளாளன் ஒருவன் தன்னுடைய நிலங்களை உழுதுவிட்டுத் தன்னுடைய வீட்டை நோக்கிப் போய்க்கொண்டிருந்தான். அப்பொழுது அவன் தன் முன்பாகச் செல்லும் முனிவரைக் கண்டான். அவருக்கு உணவிட்டு அதனால் உண்டாகும் நல்வினையைத் தான் அடைய எண்ணினான். தன்னுடைய இல்லத்திற்கு வந்து உணவுகொள்ள வேண்டும் என்று முனிவரை வேண்டிக்கொண்டான்.

முனிவர் வேளாளனுடைய வேண்டுகோளுக்கு இரங்கி னார்; அவனோடு சென்றார். அவனளித்த உணவை உண்டு மீண்டுங் காட்டையடைந்தார்.

திங்கள்கள் சில சென்றன. நுண்ணுணர்வாளன் கள்ளர் கள் சிலருக்குக் கையாளாக இருந்தான். தன்னூர் அரச

னுடைய நகைகளைக் களவாடி வந்த கள்ளர்களுடன் சேர்ந்து அவைகளைப் பங்கு பிரித்துக்கொள்ளப் புட்பதந்த முனிவர் தவஞ்செய்துகொண்டிருந்த காட்டிற்குச் சென்றான். கள்ளர்கள் தாம் களவாடிய அணிகலன்களில் ஒரு பாகத்தைத் தமக்கு உளவு கூறிய நுண்ணுணர்வாளனுக்குக் கொடுத்தனர். அவைகளை அவன் பெற்றுத் தன் மடியில் வைத்துக் கட்டிக்கொள்ளப்போகிற சமயத்தில் அரசனுடைய வீரர்கள் பலர் குதிரையேறி விரைவாக அவ்விடத்திற்கு வந்தனர்

காவலர்கள் வந்ததைக் கண்ட கள்வர்கள் தம்மிடம் இருந்த நகைகளைக் கீழே போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தனர். நுண்ணுணர்வாளன் ஓடவில்லை. கள்வர்கள் ஓடியதும் இவன் தன்னிடமிருந்த நகைகளைப் பக்கத்தில் தவஞ்செய்துகொண்டிருந்த புட்பதந்தருடைய மடியிலே போட்டுவிட்டான். அவ்விடம் வந்த வீரர்கள் புட்பதந்த முனிவரையும் நுண்ணுணர்வாளனையும் நகைகளோடு பிடித்துக்கொண்டுபோய் அரசன் முன்னிலையில் விட்டனர்.

அரசன் நுண்ணுணர்வாளனை உசாவினான். அவன், "யான் முனிவரைப் போற்றுதற்குச் சென்றிருந்தேன். யான் யாதொன்றினையும் அறியேன் என்று கூறினான். புட்பதந்தர் அவன் தனக்கு உணவிட்டுப் பசிபோக்கியவன் என்பதை அறிந்தார். அரசனைப் பார்த்து, "அரசனே! யானே நகைகளைக் களவாடினேன். அவன் யாதும் அறியான்" என்று கூறினர். அதனைக் கேட்டு அரசன் சினங்கொண்டான். முனிவரைத் தூக்கிலிடுமாறு கட்டளையிட்டான். அப்பொழுதும் முனிவர் நுண்ணுணர்வாளனைக் காட்டிக்கொடுக்கவில்லை.

முனிவர் அச்சமில்லாமலும் யாதும் உரையாமலும் இருப்பதைப் பார்த்து அரசன் சினம் ஆறினான். முனிவரது அடிகளில் வீழ்ந்து, "நிகழ்ந்ததையுரைத்து அடியேனைக் காப்பாற்றவேண்டும்" என்று வேண்டிக்கொண்டான். முனிவர் நிகழ்ந்ததை உரைத்தார். நுண்ணுணர்வாளனுடைய மடமையையும் அரசனுக்கு எடுத்துரைத்தார். அவன் செய்த குற்றத்தையும் பொறுக்குமாறு வேண்டிக்கொண்டார். அரசனும் அவ்வாறே செய்தான்.

[பெரியோர் சிறு உதவியையும் பாராட்டுவர்]

895. புண்டரீகன் கதை

முன் காலத்தில் ஓர் ஊரில் புண்டரீகன் என்னும் பெயரை யுடையவன் ஒருவன் இருந்தான். அவன் அந்தணர் குலத்தில் தோன்றியவன். அவனுக்கு அகவை முதிர்ந்த தாயும் தந்தையும் இருந்தனர். புண்டரீகன் தன்னுடைய தாய் தந்தையர்களைச் சிறிதுங் கவனிப்பதில்லை. அவனுடைய மனைவி அழகிற் சிறந்தவள். புண்டரீகன் தன்னுடைய மனைவியின் பேச்சைக் கேட்டுக்கொண்டு அவளுடைய விருப்பம்போல் ஆடினான்.

தாய் தந்தையர்கள் இயலாதவர்களாக விருந்தும் வீட்டு வேலைகளை அவர்களே செய்யவேண்டுமென்று வருத்தினான். அவர்களும் தங்களுடைய பிள்ளைக்கு அஞ்சி வீட்டு வேலைகளைச் செய்து துன்புற்றார்கள். "கடவுளே! எங்களுடைய துன்பத்தைப் போக்கவேண்டு"மென்று கடவுளை நோக்கி முறையிட்டுக்கொண்டார்கள். சில ஆண்டுகள் சென்றன.

புண்டரீகனுக்குத் தெய்வத் திருவருளால் நல்ல அறிவு உண்டாயிற்று. தன்னுடைய தாய் தந்தையர்களை அது வரையில் வருத்தியதை எண்ணி உள்ளம் வருந்தினான். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பதை யுணர்ந்து தாய் தந்தையரைப் பணிந்து வழிபட்டுப் போற்றலானான். இருமுது குரவர்கட்கும் பூசனை நாளுஞ் சிறப்பாக நடைபெற்றது. புண்டரீகனுடைய நல்லொழுக்கம் முதலில் ஊரிற் பரவிப் பிறகு உலகத்தினும் பரவியது.

திருமால் புண்டரீகனுடைய நல்லொழுக்கத்தை யுணர்ந்து மகிழ்ந்தார். புண்டரீகனுக்கு மேன்மை கொடுப்பதற்காக எழுந்தருளினார். புண்டரீகன் தன்னுடைய பெற்றோர்களின் உடன்பாட்டின்மீது அக் கடவுளை வணங்கினான். "சுவாமி! தாங்கள் இப்பட்டணத்தில் எஞ்ஞான்றும் இருந்து அருள்புரிய வேண்டுமென்பது அடியேனுடைய விருப்பம்" என்று சொன்னான்.

திருமால் புண்டரீகனுடைய வேண்டுகோளை ஒப்புக் கொண்டார். அவ்வூரிலேயே தங்கி அன்பர்களுக்கு அருள் புரியலானார். அவ்வூர் புண்டரீகனுடைய பெயரால் புண்ட

ரீகபுரம் என்று வழங்கத் தொடங்கி இந்நாளில் பண்டரிபுரம் என வழங்குகின்றது.

[அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்] (பக்த விசயம்)

---

896. புண்டரீகாக்கன் கதை

முன்னாளில் கோமேதகத் தீவின்கண் விசிட்டன் என்னும் பெயருடைய அந்தணன் ஒருவன் வாழ்ந்திருந்தான். அவனுடைய மனைவியின் பெயர் சுவேதை. இவர்களுக்குச் சித்திரலேகை என்னும் பெயருடைய பெண் ஒருத்தி பிறந்தாள். அவள் மிகுந்த வடிவழகு பொருந்தியவளாக விளங்கினாள். அப்பெண்ணை அத்தீவில் பூச்சக்கரமென்னும் நகரத்தில் வாழ்ந்திருந்த அரிசன்மன் என்பவனுடைய மகனாகிய புண்டரீகாக்கன் என்பவன் மணம் புரிந்துகொண்டான். இப் புண்டரீகாக்கன் வைணவர்களுக்குத் தலைவனாக விளங்கினான். இடைவிடாது திருமாலைப் போற்றி வழிபட்டுக்கொண்டிருந்தான். ஆயினும், இவன் இளைஞனாக இருந்தபடியாலும், சித்திரலேகை பேரழகோடு விளங்கியபடியினாலும் அவளுடைய இன்பநலத்தையே இவன் பெரிதாக எண்ணியிருந்தான்.

சித்திரலேகை பேரழகோடு விளங்கினளாயினும் அவளிடத்தில் நல்லியல்புகள் சிறிதுமில்லை. தன்னுடைய கணவனின் மாணவரென்றும் நண்பரென்றும் பாராமல் எல்லோரிடத்திலும் தீயொழுக்கமுடையவளாக இருந்தாள். ஒரு நாள் புண்டரீகாக்கனுடைய இல்லத்திற்குத் துருவாச முனிவர் வந்தார். புண்டரீகாக்கன் அவரை வரவேற்றுப் பாராட்டிப் போற்றினான். தன்னுடைய இல்லத்தில் உணவருந்திச் செல்லவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். சமையல் செய்யுமாறு தன் மனைவியிடஞ் சொன்னான். அவளுஞ் சமையல் செய்துமுடித்தாள். பிறகு முனிவர் தனிமையாக அமர்ந்திருந்த இடத்திற்குச் சென்றாள். அவருடைய பெருமையை உணராமல் கலவியை விரும்பி அவரைத் தழுவத் தொடங்கினாள். அவர் விழித்துப் பார்த்தார். அவ்வளவில் மிகவும் அஞ்சி அவ்விடம்விட்டு ஓடினாள். ஓர் ஆலமரத்

தடிக்கு ஓடிச்சென்று அங்குக்கிடந்த ஓர் ஆட்டுமந்தைக்குட் புகுந்து ஒளிந்திருந்தாள். முனிவர் தம்முடைய யோகபலத்தினுல் அவளிருந்த இடத்தை அறிந்தார். அவளுடைய கணவனுகிய புண்டரீகாக்கனைப் பார்த்து, "உன்னுடைய மனைவி இன்னவிடத்திலுள்ள ஆலமரத்தடியில் ஆட்டு மந்தையினிடத்தில் ஒளிந்திருக்கிருள். அவளை அம்மரத்தின் நுனிக்கிளையில் ஏற்றிவிட்டு வருவாயாக" என்று கட்டளையிட்டார்.

புண்டரீகாக்கன் தன்னுடைய மனைவியைத் தேடிச் சென்று ஆலமரத்தடியில் அவளைக் கண்டுபிடித்தான். முனிவர் உரைப்படி அவளை மரத்தின் நுனிக்கிளைக்கு ஏற்றினன். அவள் அங்கு அக்கிளை ஆடுந்தோறும் மனம் வருந்தி அலறினுள். கிளையைப் பிடித்துக்கொண்டு குலுங்கினுள்.

புண்டரீகாக்கன் தன்னுடைய மனைவியின் பிரிவாற்ருமல் கலங்கினுன். துருவாச முனிவரைப் பார்த்து, "அடிகளே! என்னுடைய மனைவியைப் பெற விரும்புகிறேன். அவள் ஆலமரத்தைவிட்டு இறங்கிவருமாறு அருள்புரிய வேண்டும்" என்று வேண்டிக்கொண்டான். துருவாச முனிவர் அவன் கூறியதைக் கேட்டு வியப்புற்ருர். புண்டரீகாக்கனைப் பார்த்து, 'அவ்வாருயின் நீ அவ்வாலமரத்தடிக்குப் போய், 'மனைவியே வருக' என்று கூறுவாயாக" என்ருர். புண்டரீகாக்கனும் ஆலமரத்தடிக்குச் சென்று அவ்வாறே கூறினன். அவள் நான்கடி இறங்கினுள். துருவாசரிடம் புண்டரீகாக்கன் ஓடிவந்து நிகழ்ந்ததைக் கூறினன்.

துருவாசர் புண்டரீகாக்கனைப் பார்த்து, "அவளிடத்திலே இன்பம் நுகர்ந்த ஆடவர்கள் எல்லோருஞ் சென்று 'இறங்கு' எனக் கூறின் இறங்குவாள்" என்று சொன்னுர். அதற்கிணங்கிய புண்டரீகாக்கன் அத்தகைய ஆடவர்களையெல்லாம் அங்கு அனுப்பினன். அவர்கள் எல்லோருஞ் சென்று, 'இறங்கு' என்று கூறியபோதும் பாதிமரமே இறங்கினுள். புண்டரீகாக்கன் அதனையுந் துருவாசரிடம் அறிவித்து வேண்டினன். "உன் மாணவர்கள் யாவரும் அவ்வாறு கூறின் இறங்குவாள்" என்று சொன்னுர். மாணவர்கள் யாவரும் வந்து இறங்கு என்றபொழுதுஞ் சிறிதுசிறிது இறங்கினுள். இச்செய்தியைப் புண்டரீகாக்கன் துருவாசரிடங்

கூறி யழுதான். "அவள் தன்பால் இன்பம் நுகர்ந்தார் பெயர்களையெல்லாங் கூறினுல் இறங்குவாள்" என்று சொன்னர். அவன் இச்செய்தியை அவளிடங் கூறினன். அவள் தன்னுடைய கள்ளக் கணவர்களுடைய பெயர்களை யெல்லாம் உள்ளவாறு கூறினுள். அப்பொழுதும் அவள் அடிக்கிளைக்குத்தான் வந்து சேர்ந்தாள்.

அதன்பிறகு முனிவர் ஆலமரத்தடிக்குச் சென்று புண்டரீ காக்களைப் பலவாறு இகழ்ந்துபேசினர். அவன் புறச் சமயத்தான் ஆகுமாறு வசவுரை வழங்கினர். அவனுடைய மாணவர்களைப் பார்த்து, "நீங்கள் ஆசிரியனுடைய மனைவி யைக் கூடியபடியால் உங்கள் மனையியர் வேசையராகுக" என்றார். பிறகு தீய ஒழுக்கமுடைய அப்பெண் ணைப் பார்த்து, "நீ அசுரகுலத்தில் ஆட்டுமுகத்துடன் பிறப்பா யாக" என்றர். ஒருவன் தன்னுடைய மனைவியின் தீய வொழுக்கத்தைப் பார்த்துக்கொண்டு நாணுதிருப்பனேல் அவன் நல்லவர்கட்கு முன் நாணத்தையடையுமாறு நேரிடும் என்பதை உலகத்தார் இவனிடம் உணர்ந்துகொண்டனர்.

(உபதேச காண்டம்)

"கற்பின்மை இல்லாள்பால் கண்டுமய லுற்றழிந்தான்
சொற்புண்ட ரீகாக்கன் சோமேசா—பொற்பெண்ணி
இல்லாள்கட் டாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்
நல்லாருள் நாணுத் தரும்"

[பெண்வழிச் சேறல்] (சோமேசர் முதுமொழி வெண்பா)

---

897. புண்ணியகோட்டி முதலியின் கதை

முன்னுளில் தொண்டைவள நாட்டில் புண்ணியகோடி முதலியார் என்னும் பெயருடைய முதலியார் ஒருவர் இருந் தார். செல்வச் சிறப்பில் சிறந்து திகழ்ந்த இவர் புலவர் களுக்கும் வறியர்கட்கும் நன்கொடை வழங்குவதில் வள்ளல் கள் எல்லோருக்கும் முன்னணியில் நின்றார். வந்து கேட்ப

வர்கட்கு கேட்பவைகளை யெல்லாம் இல்லை என்னுது ஈந்து நின்ற இவர் சில பேர் கேட்பதற்கு நாணங்கொண்டு வாய் திறந்து கேட்க மாட்டார்கள். அல்லது கேட்டாலும் எல்லா வற்றையுங் கேட்காமல் சிலவற்றை விட்டு விடுவார்கள். அத்தகையோர்கள் தாங்கள் நாடி வந்தவைகளை எழுதச் செய்து கொடுக்க வேண்டும் என்னும் எண்ணத்தோடு வீட்டு முன்றிலில் மணலைப் பரப்பி வைத்தார். இச்செய்கை யால் இவருடைய புகழ் யாண்டும் பரவி எக்காலும் நிலை பெறுவதாயிற்று. இவர் மீது புலவர்கள் செய்யுள் பாடிப் புகழ்ந்துள்ளனர்.

"உணலைப் பசும்பொன் முதலான
வற்றை உதவிப்பின்னும்
குணலச்சை யுள்ளவர் கேட்கவுங்
கூசுவர் கொல்லெனவே
எணலைக் கருதி எழுதிவைப்
பீரென இல்மறைந்து
மணலைப் பரப்பிய முன்றிலுள்
ளான்தொண்டை மண்டலமே"

[புண்ணியகோடி முதலியார்] (தொண்டைமண்டல சதகம்)

---

898. புத்தர் கதை

புத்தர் என்பவர் வடநாட்டிலே கபிலபுரம் என்னும் ஊரிலே சுத்தோதனன் என்னும் மன்னனுக்கு மகனைப் பிறந்தார். இயற்கையாகவே இவரிடம் உயிர்கள் மாட்டு அருளுடைமை சிறந்து விளங்கியது. பிற உயிர்கள் வருந்து வதைக் கண்டால் இவர் பதை பதைத்து நடுங்குவார். அவ்வுயிர்களின் துன்பத்தை விரைந்து போக்க முற்படுவார்.

எல்லோரும் எல்லா உயிர்களிடத்திலும் அன்புடையவர் களாக இருக்க வேண்டும். ஓர் உயிரையும் கொலை புரிதல் கூடாது. அருளுடைமை எல்லா நலங்களையும் எளிதில் உத வும் என்பதை இவர் எல்லா மக்கட்கும் அறிவுறுத்தினர்.

இவருடைய கொள்கைகள் தனியே புத்த மதம் என்ருகியது. இவர் தம்முடைய அழகிய மணவியையும் இளங் குழந்தையையும் அரச செல்வத்தையும் துறந்து நாடெங்கும் அருளுடைமையைப் பரப்பினர்.

நல்ல வழியில் ஆராய்ந்து அருளுடையவராக விளங்குதல் வேண்டும். பல வழிகளால் ஆராய்ந்து பார்த்தாலும் அருளுடைமையே உயிர்கட்குத் துணையாம் என்பது இவர் பால் நன்கு விளங்கியது.

[அருளுடைமையே உயிர்க்குத் துணை]

---

899. புத்தர்கனே வென்ற கதை

சைவப் பெரியார் ஒருவர் ஈழவள நாட்டிற்குச் சென்ருர். அப்பெரியார் எப்பொழுதும், "சிதப்பரம், சிதம்பரம்" என்று கூறுதலைக் கடமையாகக் கொண்டவர். உட்கார்ந்தாலும் எழுந்தாலும் யாதேனும் ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கினலும் "சிதம்பரம்" என்று சொல்லுவார். இவர் ஈழவள நாட்டிற்குச் சென்ற காலத்தில் அங்கு புத்தர்களுடைய ஆரவாரம் மிகுதியாக இருந்தது. அந்நாட்டு மன்னனே புத்த சமயத்தை மேற்கொண்டொழுகினன். சைவப் பெரியாருடைய சிதம்பரம் முழக்கத்தைக் கேட்ட புத்தர்கள் இச்செய்தியை மன்னனிடம் கூறினர்கள் அரசன் சைவப் பெரியாரைத் தன்னிடம் வரவழைத்தான். சைவப் பெரியார் அரசனுடைய அவையிற் சென்று உட்காரும்போது, "சிதம்பரம்" என்ருர். அப்பொழுது அரசன் சிதம்பரம் என்றல் என்ன வென்று கேட்டான்.

சைவப் பெரியார் அரசனைப் பார்த்துச் சிதம்பரத்தின் பொருளை விளக்கியதோடு சிதம்பரத்தின் பெருமையையும் கூத்தப்பிரானுடைய தலைமைத் தன்மையையும் அரசனுக்கு விரித்துரைத்தார். அரசனுடைய அவையில் அமர்ந்திருந்த புத்த குரு சைவப் பெரியாருடைய மொழிகளைக் கேட்டு உள்ளம் புழுங்கினர். "அவ்வாருயின் யான் அச்சிதம்பரத்துக்குச் சென்று புத்தனே தெய்வமென்று மூன்று நாட்களில் நிலை நாட்டுவேன்" என்று சூளுரைத்துச் சிதம்பரத்திற்குப்

புறப்பட்டார். அரசன் தன்னுடைய ஊமை மகளையும் அழைத்துக்கொண்டு புத்த குருவோடு உடன் சென்றான். எல்லோரும் திருத் தில்லையை அடைந்து திருக் கோயிலிற் கூடினர்கள்.

தில்லைவாழ் அந்தணர்களும் சிவனடியார்களும் புத்தர் களைக் கோயிலை விட்டுச் செல்லுமாறு கூறினர்கள். புத்த குரு அவர்களைப் பார்த்து, "யான் சோழ மன்னன் முன்னிலையில் என்னுடைய புத்தனே தெய்வமென்று நிலை நிறுத்தினால் அல்லாமல் வெளியே செல்லமாட்டேன்" என்று கூறினர். இதனைக் கேட்டோர் மனம் வெதும்பிச் சோழ னுக்குத் தெரியப் படுத்தினர்கள். தில்லைவாழ் அந்தணர் களும் சிவனடியார்களும் இத்தொல்லைக்கு யாது செய்வ தென்று உள்ளம் வருந்தி யிருந்தார்கள். கூத்தப்பிரான் அவர்களுடைய கனவில் தோன்றி, "நமது தில்லைப் பதி யில் திருவாதவூரனென்னும் மாணிக்கவாசகன் இருக்கிறான். அவனை அழைத்துச் சொற்போரிடச் செய்தால் புத்தர்களை வெல்லுவான்" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

தில்லைவாழ் அந்தணர்கள் மாணிக்கவாசகர் தங்கி யிருந்த இடத்திற்குச் சென்று கூத்தப்பிரானுடைய கட்ட ளையைத் தெரியப் படுத்தினர்கள். மாணிக்கவாசகர் புத்தர் களோடு சொற் போரிட்டு அவர்களை வெல்வதாகக் கூறினர். தில்லை வாழ் அந்தணர்களோடு புறப்பட்டுப் புத்தர்கள் தங்கி யிருந்த இடத்திற்குச் சென்றார். புத்தர்களுடைய முகத்தைப் பார்க்கக்கூடாது என்று திரை ஒன்று போடச் செய்து தாம் திரை மறைவில் இருந்து முறைப்படி சொற்போரிடலானார். கலிமகள் புத்தர்களுடைய வாக்கிலுமிருந்து சொல்லாடுதலைக் கண்டார். "கலிவாணி! இது கூத்தப்பிரானுடைய கட் டளை; இவ்வஞ்சகர்களுடைய நாவினை விட்டுச் செல்வா யாக" என்று கூறினர். அவ்வளவில் புத்தர்களனைவரும் ஊமைகளானார்கள்.

தன்னுடைய ஆசிரியர் முதலான புத்தர்கள் ஊமையா னதை ஈழ மன்னன் கண்டான். மாணிக்கவாசகரைப் பார்த்து, "அடிகாள்! இவர்களை ஊமைகளாக்க வல்ல

தங்களுக்கு ஊமையாக இருக்கும் என்னுடைய மகளைப் பேச வைத்தல் அருமையான செயலன்று; அவளைப் பேசவைப் பீர்களாக" என்று கூறி வேண்டிக் கொண்டான்.

புத்தர்கள் தம்முன்னர்க் கேட்ட கேள்விகளுக்கு அவள் விடை கூறுமாறு செய்தார். அவ்விடைகளைத் திருச் சாழற்பாட்டில் அமைத்தார். பிறவியிலேயே ஊமையாக இருந்த பெண் மாணிக்கவாசகருடைய கேள்விகட்குத் தக்காங்கு விடை பகர்ந்ததைக் கண்டு அனைவரும் உவகையங் கடலில் மூழ்கினர். ஈழ மன்னன் சைவ சமயமே மெய்ச் சமயமென்று தெளிந்து சைவனாகித் திருநீறு சிவ கண்மணி முதலியவைகளை அணிந்தான். தில்லை வாழ் அந்தணர்கள் ஊமைகளாகிவிட்ட புத்தர்கட்கும் அருள் செய்ய வேண்டு மென்று வேண்டிக் கொண்டனர். மாணிக்கவாசகர் புத்தர் களுடைய ஊமைத் தன்மையைப் போக்கி அவர்களையும் சைவர்களாக்கி ஆட்கொண் டருளினர். மாணிக்கவாசகரு டைய சொற்போர்த் திறனை அனைவரும் பாராட்டினர்.

"வாழ்வாத வூரர் வளவனவை முன்னெதிர்த்துச்
சூழ்தே ரரைவென்ரூர் சோமேசா—தாழ்வகல
ஆற்றி னளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு."

[சொல்லாற்றல்] (சோமேசர் முதுமொழி வெண்பா)

---

900. புத்தன் தலையறுந்த கதை

திருஞான சம்பந்தப் பிள்ளையார் திருத்தெளிச்சேரி என் னும் சிவப் பதிக்குச் சென்று இறை வழிபாடு செய்தார். பிறகு போதிமங்கை என்னும் ஊரை நோக்கிப் புறப்பட்டார். அவ் வூரிலே புத்தர்கள் மிகுதியாக வாழ்ந்திருந்தனர். திருஞான சம்பந்தர் சென்ற காலத்தில் திருச் சின்னங்கள் முழங்கின. பிள்ளையாருடைய வரவை அறிந்த சிவனடியார்கள், "சிவ சிவ" என்று பெரு முழக்கம் செய்தனர். இதனைப் புத்தர் களால் பொறுக்க முடியவில்லை. புத்தநந்தி என்னும் பிட்க

நூல் வல்லோன் சிவனடியார்களைப் பார்த்து, ''எம்மைச் சொற்போரில் வெற்றி கொண்ட பிறகன்றே திருச்சின்னம் முழக்குதல் வேண்டும் ?'' என்று கூறித் திருச்சின்னம் முழக்குவதைத் தடுத்தான். ''திருஞான சம்பந்தர் இச்செய்தியை உணர்ந்தார். ''அவனோடு சொற் போர் செய்வோம்'' என்றார். இதற்குமுன் தேவாரப் பாடல்களை எழுதும் சம்பந்த சரணாலயர் என்பவர், ''புத்தர் சமண் கழுக்கையர்'' என்று தொடங்குந் திருப் பாடலைப் பாடினார். அவ்வளவில் புத்த நந்தியினுடைய தலையிலே இடி வீழ்ந்து அவனுடைய தலையை அறுத்து விட்டது.

''அத்திவாரக் கற்புத்தன் சென்னியறுத் தார்சண்பைச்
சுத்தனார் தம்மன்பர் சோமேசா — நித்தம்
நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.''

[நிறை மொழி மாந்தர் பெருமை] (சோமேசர் முதுமொழி வெண்பா)

———

901. புத்திசேனர் கதை

புத்திசேனர் என்பவர் அவந்தி நாட்டிலே சங்கதாரை என்னும் ஊரிலே ஆயிரத்தைந்நூறு ஆண்டுகட்கு முன்னே வாழ்ந்திருந்தார். இவருடைய சமயம் சாருவாக சமயம் என்று கூறப்பட்டது. பல கலைகளையும் நன்கு கற்றுணர்ந்த இவர் சொல் வன்மையிலே சிறந்து விளங்கினர். புலவர்கள் பலர் இவரிடம் எதிர்த்துச் சொற்போரிட்டுத் தோல்வியுற்றனர். இவருடைய கொள்கை, ''மறுமையில் ஓர் இன்பம் உண்டென்று எண்ணி இம்மை இன்பமாகிய சிற்றின்பத்தை வெறுத்தல் மடமையாகும். பல வகையான குல மாறுபாடுகளைப பாராட்டிக்கொண்டு திரிதல் தீதுடைமையாகும். வேள்வி முதலியவைகளைச் செய்தல் வீணை செய்கையாகும்'' என்பது. இவர் இதனை உரைத்துப் பலருடைய வாயையும் அடக்கிக்கொண்டு திரிந்தார். இவருடைய சமயத்தைச் சேர்ந்தவர்கள் இவரைத் தமக்குத் தலைவராகக்

கொண்டு பாராட்டினர்கள். இவர் சிறந்த அறிவுடையவ ராக விளங்கி யிருந்தும் உள்ளத்தில் இழிந்த தன்மை உடையவராக இருந்தார். தாம் கூறிய எதையும் உண்மை என்று சாதித்துத் திரிந்தார். மாறுபட்டவர்களைப் பலவாறு பழித்து வைதார். இவருடைய கண்களிரண்டும் குருடா யின. அதனால் அல்லல் அடைந்து அலைந்தார். சிறந்த அறி வுடையவராகத் திகழ்ந்தும் நல்லியல்பு சிறிதும் இல்லாமல் புல்லிய உலக இன்பங்களை நுகர்ந்துகொண்டு திரிந்தபடி யால் இவரை எல்லோரும் இகழ்ந்து ஒதுக்கினர். கூரிய அறிவுடையவர்களாக இருந்தாலும் மக்கட்பண் பமையப் பெறுதவர்கள் மரத்தைப் போன்றவர்களாவர் என்பது இவரி டம் நன்கு விளங்கியது.

[புத்தி சேனர்]

---

902. புத்திமான் பலவானை கதை

ஒரு காட்டிலே சிங்கம் ஒன்று இருந்தது. அது விலங்கு களைக் கண்டபடி கொன்று தின்று திரிந்து கொண்டிருந் தது. அதனால் காட்டிலிருந்த விலங்குகளெல்லாம் மிகுதி யாகக் குறைந்து கொண்டு வந்தன. ஒருநாள் விலங்கு களெல்லாம் ஒன்று சேர்ந்து சிங்கத்திடம் சென்று அதைப் பார்த்து, "ஓ விலங்கரசனே! நீ நாள்தோறும் விலங்கு களைக் கண்டபடி கொன்று தின்று நாசஞ் செய்தால் காட்டில் உள்ள விலங்குகளெல்லாம் அழிந்து போகும். விலங்குகள் பெருகினால்தான் உன்னுடைய ஆட்சி சிறப்படையும். இனி மேல் நீ எங்குந் திரிய வேண்டாம். உன்னுடைய இருப்பி டத்திலேயே இரு. நாங்கள் முறை ஏற்படுத்திக் கொண்டு தினம் ஒவ்வொன்றாக வந்து இரையாகிறோம்" என்று கூறின. சிங்கமும் இதற்கு உடன்பட்டது. நாள்தோறும் ஒவ்வொன்றும் சிங்கத்திடம் வந்து இரையாகிக் கொண்டிருந் தன. ஒரு நாள் ஒரு முயலின் முறை வந்தது. அது சிங்கத் தின் பசி வேளைக்கு வரவில்லை. வெகு நேரம் பொறுத்து மெதுவாக வந்து சேர்ந்தது.

முயலைக் கண்ட சிங்கம் மிகுந்த சினங் கொண்டது. "ஓ! அற்ப முயலே! யானைகூட என்னுடைய பசி வேளைக்குப் பிறகு வந்ததில்லை. நீ இவ்வளவு மெதுவாக வருகிறாயே; உனக்கு அவ்வளவு ஆணவம் உண்டாகி விட்டதா?" என்று அதட்டியது.

முயல் சிங்கத்தைப் பார்த்து, "நான் தங்களுடைய பசி வேளைக்குச் சரியாகத்தான் வந்து கொண்டிருந்தேன். வழியில் தங்களைப் போன்ற பெரிய சிங்கம் ஒன்றைக் கண்டேன். அதனால், மிகவும் அஞ்சி ஓரிடத்தில் ஒளிந்து கொண்டிருந்தேன். அது சென்ற பிறகுதான் புறப்பட்டு வர முடிந்தது" என்று கூறியது. இதனைக் கேட்ட சிங்கம் பெரு முழக்கஞ் செய்தது. "நீ பொய் சொல்லுகிறாய். என்னைத் தவிர இக் காட்டில் வேறு சிங்கமே இல்லை. அவ்வாறு இருந்தால் அதனை எனக்குக் காட்டு" என்று சொல்லியது. "அப்படியே காட்டுகிறேன்" என்று முயல் சிங்கத்தைப் பாழுங் கிணறு ஒன்றுக்கு அழைத்துக் கொண்டு போயிற்று. "அச் சிங்கம் இக்கிணற்றுக்குள்ளேதான் இருக்கிறது" என்று கூறிற்று.

சிங்கம் கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தது தன்னுடைய நிழல் கிணற்றில் தெரிவதைச் சிங்கம் வேறொரு சிங்கம் என்றே எண்ணிக் கொண்டது. மிகுந்த சினங்கொண்டு கிணற்றுக்குட் பாய்ந்தது. தண்ணீரும் சேறும் மிகுதியாக இருந்தபடியால் வெளியே வரமுடியாமல் சேற்றில் அமிழ்ந்து மாண்டது. "புத்திமான் பலவானாவான் பலமுள்ளான் புத்தியற்றுல் எத்தனை விதத்திலும் இடரது வந்தே தீரும்"

"புத்திமான் பலவான் ஆவான் பலமுளோன்
[புத்தி யற்றுல்
எத்தனை விதத்தினு லும்இடரது வந்தே தீரும்
மற்றொரு சிங்கந் தன்னை வருமுயல் கூட்டிச் சென்றே
உற்றதோர் கிணற்றில் சாயை காட்டியே
[கொன்ற தம்மா"

[அறிவுள்ளவனே பலவான்]

903. புயபலன் கதை

முன்னாளில் வங்க நாட்டில் புயபலன் என்னும் பெயருடைய அரசன் ஒருவன் இருந்தான்; அவன் அறநெறி கோணுமல் அரசாட்சியைச் செய்து கொண்டிருந்தான். ஓராண்டு உத்தராயண நன்னாளிலே அந்தணர்களுக்குத் தானஞ் செய்ய எண்ணினான். சுசீலன் என்னும் பெயருடைய ஓர் அந்தணன் கல்வி அறிவொழுக்கங்களில் சிறந்தவனாய் விதர்ப்ப நாட்டில் விளங்கி யிருந்தான். அவன் புயபலன் தானஞ் செய்யப்போகும் செய்தியைக் கேள்வியுற்று வங்க நாட்டிற்கு வந்தான்.

பிற அந்தணர்கள் சுசீலனைக் கண்டு போற்றினார்கள். அவனை அழைத்துக்கொண்டு போய் அரசன் முன் விட்டு அவனுடைய பெருமையைக் கூறினார்கள். அவனுக்கே முன்னால் தானஞ் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அரசன் மகிழ்ந்து அவனுக்குத் தானம் வழங்கத் தொடங்கினான். அரசனுடைய நெற்றியைச் சுசீலன் பார்த்தான். திருநீறில்லாமையை உணர்ந்தான். அரசனைப் பார்த்து, "நீ திருநீறு அணியமாட்டாயாகில் நான் உன்னிடமிருந்து தானம் பெறமாட்டேன். திருநீறு அணியாதவர்களுடைய செல்வங் கெடும். அவர்களுக்குப் பல வகையான தீங்குகள் உண்டாகும்" என்று சொன்னான். அரசன் தான் திருநீறு பூசமுடியாதென்று கூறி மறுத்தான். சுசீலன் உடனே அவ்விடம் விட்டுப் புறப்படத் தொடங்கினான். அரசனுடைய மனைவி மூக்குத் துளையில் துரும்பொன்றினைச் செருகித்தும் மலை வரவழைத்துத் தும்மி, "தும்மல் தடையாக இருக்கிறது நீ நிற்பாயாக" என்று சொன்னாள். சுசீலன் அவ்வுரையைப் பொருட் படுத்தாமல் தன்னுடைய நாட்டிற்குச் சென்றான். சுசீலன் கூறியவாறு அரசனுடைய செல்வஞ் சிதைந்தது. அவன் பல வகையான தொல்லைகளை அடைந்தான். பிறகு ஒரு காலத்தில் சுசீலனைக் கண்டு வணங்கி அவனிடம் திருநீறு பெற்று பழைய நிலைமையை அடைந்தான்; அறிவில்லாதவர்களுடைய நட்பினை நீக்கி விடுதல் ஒருவனுக்கு நல்ல பேருமென்பது சுசீலனிடம் பெறப்பட்டது.

(உபதேச காண்டம்)

"போற்றுஞ் சுசீலன் புயபலனே நீத்தகன்ருன்
தோற்றிறைவி தும்மிடவுஞ் சோமேசா—வேற்றதே
ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல்"

[அறிவற்றவர் கூட்டுறவை விட்டு நீங்குதல்]

(சோமேசர் முதுமொழி வெண்பா)

---

904. புரஞ்சயன் கதை

புரஞ்சயன் என்பவன் கதிரவன் குலத்தில் தோன்றிய ஓர் அரசன். இவனுடைய தந்தையின் பெயர் சசாந்தன். இவன் மிகுந்த ஆண்மையும் வீரமும் அமையப் பெற்றவன். நுண்ணிய அறிவுடையவன். கொடையிலுஞ் சிறந்தவன். இவன் அயோத்தியிலிருந்து அரசு புரிந்து கொண்டிருந்தான். அந்நாளில் அசுரர்கட்கும் தேவர்கட்கும் பெரும் போர் மூண்டது. அவ்வரும் போரில் தேவர்கள் அஞ்சி ஓடினர்கள்.

புரஞ்சயனுடைய போராண்மையைத் திருமால் இந்திரனுக்குச் செப்பினர். இந்திரன் தேவர்கள் சிலரோடு இவன்பால் வந்தான். தான் அசுரர்கட்குத் தோற்றுப்போன செய்தியைக் கூறினன். தனக்கு உதவி செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொண்டான். புரஞ்சயன் புரந்தரன் வேண்டுகோளுக்கு இணங்கினன். போர்க்கோலம் பூண்டு புறப்பட்டான்.

இவன் போருக்கு வந்த செய்தியை அசுரர்கள் அறிந்தார்கள். ஒரு மனிதன் நம்மோடு போர் செய்ய வந்துள்ளானே என்று எள்ளி நகையாடினர்கள். ஆர்கலியெனச் சூழ்ந்து அடலுடன் அரும்போர் ஆற்றினர்கள். புரஞ்சயன் அசுரர்கட்குச் சிறிதும் அஞ்சவில்லை. அசுரர்களோடு கடும்போர் புரிந்தான். இவன் இவர்ந்து நின்ற தேர் இடையே முறிந்தது. இந்திரன் இவனைத் தாங்கினன். இவன் மேலும் பெரும்போர் செய்தான். அசுரர்கள் சுரரை முன் நிற்க முடியாமல் அஞ்சி ஓடினர்கள். வெற்றி தேவன்

களுக்காயிற்று. பிறகு இவனைப் பாராட்டிப் போற்றினான் இந்திரன் இந்திரன் பிடரியில் அமர்ந்து இவன் போர் புரிந்தமையால் இவனுக்குக் ககுத்தன் என்று பெயர் உண்டாகியது. அஞ்சாமை, அறிவு, ஊக்கம், ஈகை முதலிய நல்லியல்புகள் எல்லாம் இவன்பால் நன்கு அமைந்திருந்தபடியால் இவனை எல்லோரும் பாராட்டினர்.

[புரஞ்சயன்]

---

905. புருகுச்சன் கதை

மாந்தாதா என்னும் மன்னனுக்குப் புருகுச்சன் என்னும் பெயருடைய மகன் ஒருவன் இருந்தான். அவன் அறிவிலும் ஆற்றலிலும் மிகுந்தவன். எதையும் சீர்தூக்கி ஆராய்ந்து செய்வதில் வல்லவன். இவனுடைய பெருமையை உணர்ந்த நாகவேந்தன் தன் மகள் நருமதையை இவனுக்குத் திருமணம் செய்து கொடுத்திருந்தான்.

இவன் ஆட்சி புரிந்து கொண்டிருக்குங் காலத்தில் நாகர்கள் சிலர் இந்நிலத்திற்கு வந்து மக்களுக்கு அல்லல் புரிந்தனர். தவறு செய்தோர் எவர் என்பதை இவன் தக்க வாறு ஆராய்ந்தான். நாகர்களே என்பது நன்கு விளங்கியது. தன்னுடைய மாமனின் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக இவன் அவர்களிடம் அருள் காட்டவில்லை. ஒறுக்க வேண்டியவர்களை ஒறுத்து ஓட்டினான். மேலும் நாகர் உலகிற்கு உண்டாகிய தொல்லையையும் போக்கினான். நெறி கடந்து தீமையிற் செல்வாரைத் தகுதியாக ஆராய்ந்து மீண்டும் அவ்வாறு செய்யாதபடி ஒறுப்பவனே அரசனுவான் என்பதை இவன் உலகிற்கு உணர்த்தினான்.

[தக்கவாறு ஒறுப்பவனே அரசன்]

---

906. புரூரவன் கதை

புரூரவன் என்பவன் புதனுடைய மகன். இவனுடைய தாய் பெயர் இளை. இவன் எல்லாக் கலைகளினும் வல்லவன்.

சிறந்த அழகுடையவன். அருளும் ஆண்மையும் அமையப் பெற்றவன். இவன் இளஞ்ஞாயிறு இருக்கும்போது பூஞ்சோலை ஒன்றில் தேவமகளிர் சிலருடன் ஊர்வசி வந்து உலாவிக் கொண்டிருந்தாள். ஊர்வசியின் அழகைக் கண்ட அசுரர்கள் அவள் மீது காதல் கொண்டனர். அவளைக் கவர்ந்து கொண்டு மேலே சென்றார்கள். ஊர்வசி அஞ்சி நடுங்கினாள்; அழுது புலம்பினாள்; பெருங் கூச்சலிட்டாள்.

அசுரர்களோடு போர் புரிதற்குத் தேவர்கள் அஞ்சினர். அவளிட்ட கூச்சலைக் கேட்ட புரூரவன் அங்கு விரைந்து சென்றான். அசுரர்களை வதைத்துக்கொண்டு போர் செய்தான். இவனோடு போராட அவர்களால் இயலவில்லை. இவன் அவர்கள் எல்லோரையும் எளிதாக வென்று விட்டான். ஊர்வசியை இந்திரனிடஞ் சேர்த்தான்.

இந்திரன் இவனுடைய துணிவைப் பாராட்டினான். அவளை இவனுக்கே தந்தான். இவன் அவளை மணம் புரிந்து வாழ்க்கை நடத்தினான். ஆயு என்று ஒரு மகனையும் பெற்றான். எல்லோரும் இவனுடைய காரிய விரைவையும் துணிச்சலையும் பெரிதும் பாராட்டினார்கள்.

[அரசனுடைய ஆண்மையும் செயலும்]

---

907. புரோசனன் கதை

புரோசனன் என்பவன் முன்னாளில் அத்தினாபுரத்தில் இருந்தவன். வஞ்சகம், பொய், சூது, வாது முதலிய தீக்குணங்கட்கு எல்லாம் இருப்பிடமானவன். இவனுடைய இத்தகைய தீக்குணங்கள் துரியோதனனுக்கு மிகுந்த உவகையை உண்டு செய்தன. "மூர்க்கரை மூர்க்கர் முகப்பர், முதுகாட்டிற் காக்கை உகக்கும் பிணம்" என்பது முதுமொழியன்றே?

இத்தீயோனைக் கொண்டு பாண்டவர்களை ஒழித்துவிட வேண்டுமென்பது துரியோதனனுடைய எண்ணம். இவனைப் பாண்டவர்கட்கு அமைச்சனாக அக்கொடியோன் ஏற்பாடு செய்தான். அரக்கு மாளிகை ஒன்று அமைத்து அதில் தீயிட்டு ஐவரையும் கொன்று தீர்த்துவிட வேண்டுமென்பது திட்டம். புரோசனன் துரியோதனனுடைய திட்டப்படி

செயல்களைப் புரிந்தான். மிகு விரைவில் பாண்டவர்கள் இவனுடைய வஞ்சகத் தன்மையை உணர்ந்து கொண்டார்கள். புறப் பகை எவ்வளவு வரினும் அஞ்சாத ஐவரும் அகப் பகையாக அமைந்த இக்கொடியோனுக்கு மிகவும் அஞ்சி ஒழுகினர்.

தீமை நினைக்கும் அமைச்சர்களைப் பார்க்கினும் பக்கத்தில் அமைந்துள்ள கோடிக் கணக்கான பகைவர்கள்கூடத் தீமை புரியார் என்பது இவனிடம் நன்கு விளங்கியது.

[வஞ்சக அமைச்சர்கள்]

---

908. புரோசனன் முதலியோர் கதை

துரியோதனனுடைய தொல்லையைப் பொறுக்க முடியாமல் பாண்டவர்கள் காசிமாநகரிற் சென்று தங்கி யிருந்தார்கள். வஞ்சகனுகிய துரியோதனன் பாண்டவர்களை எப்படியும் ஒழித்துவிட வேண்டுமென்று முடிவு செய்து தன்னுடைய கையாளாகிய புரோசனன் என்பவனை அவர்களோடு அனுப்பினன். அவன் பாண்டவர்களைக் கொல்லுவதற்கு அரக்கு மாளிகை ஒன்றை அமைத்தான்; அதில் குடி ஏறவுஞ் செய்தான். பிறகு தீ யிடுவதற்குப் புரோசனன் நாள் பார்த்துக் கொண்டிருந்தான்.

இச்செய்திகள் யாவும் வீமனுக்குத் தெரிந்தன. புரோசனனை முந்திக் கொல்ல வீமன் முடிவு செய்தான். துரியோதனன் ஏவற்படி பாண்டவர்கட்கு நஞ்சிடுவதற்கு ஐந்து வேடர்களும் அவர்களின் தாயும் அவ்குச் சென்று அரக்கு மாளிகையில் தங்கி யிருந்தனர். வீமன் மாளிகைக்கு நெருப்பிட்டுவிட்டுத் தாயையும் துணைவர்களையும் தூக்கிக்கொண்டு சுரங்க வாயிலாக வெளி ஏறினன். நஞ்சிடச் சென்ற வேடர்களும் 'தீயிடக் காத்திருந்த புரோசனனும் மாளிகையில் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தார்கள். வீமன் இட்ட நெருப்பு மாளிகையில் பிடித்தவுடன் வஞ்சகர்களாக உறங்கிக் கொண்டிருந்த புரோசனன் வேடர் முதலியோர் மாண்டொழிந்தனர்.

நல்வினையினுல் முயற்சி உண்டாகும்; தீவினையினுல் சோம்பேறித்தனம் தோன்று மென்பது பாண்டவர்களிடத்திலும் புரோசனன் முதலியோர்களிடத்திலும் நன்கு பெறப்பட்டது.

[நல்வினை தீவினைகளால் விளைவன]

———

909. புலியை மிரட்டிய ஆட்டின் கதை

ஒரு காட்டிலே கொழுத்த ஆட்டுக் கடா ஒன்று இருந்தது. அது நன்கு தின்று பருத்திருந்தபடியால் முரட்டுத் தனம் வாய்ந்ததாக இருந்தது. அஃது ஒரு நாள் புலி தங்கும் குகையில் சென்று படுத்திருந்தது. வெளியே போயிருந்த புலி தன்னுடைய குகைக்குத் திரும்பி வந்தது. வாசலில் நின்று வழக்கம்போல் குகைக்குள்ளே பார்த்தது. ஆடு தன்னுடைய விழியை அகல விரித்து உருட்டலாகவும் மிரட்டலாகவும் புலியைப் பார்த்தது. அப்பார்வை புலிக்கு மிகுந்த கிலியை உண்டு செய்தது; இஃது ஏதோ புதுமையாக இருக்கிறது. இதனுல் நமக்குத் தொல்லை ஏற்படலாம் என்றஞ்சி உள்ளே போகாமல் வேறிடம் நோக்கி விரைவாக ஓடியது.

அவ்வாறு ஓடிய புலியை ஒரு நரி பார்த்து, "மாமா, என்ன செய்தி? ஏன் இப்படி அஞ்சி ஓடுகிறீர்கள்?" என்று கேட்டது. புலி, "மருமகனே! அதை என்ன வென்று சொல்லுவேன். புதுமையான ஏதோ ஒரு விலங்கு என்னுடைய குகையில் வந்து தங்கி இருக்கிறது. அதனுல் ஏதேனும் தொல்லை ஏற்படுமென்று அஞ்சி ஓடுகிறேன்" என்று மறுமொழி கூறியது.

"அஞ்ச வேண்டாம்; நான் இருக்கிறேன். வா போய்ப் பார்ப்போம்" என்று புலிக்குத் தெளிவுரை கூறி அழைத்துக் கொண்டு சென்றது குகைக்குள் படுத்திருப்பது ஆடு என்று புலிக்குத் தெளிவு படுத்திவிட்டது. அவ்வளவில் புலி ஆட்டைக் கொன்று விட்டது.

"மையது வல்லி யம்வாழ் மலைக்குகை தனிற்பு குந்தே
ஐயமும் புலிக்குக் காட்டி அடவியில் துரத்துங் காலை
பையவே நரிக்கோ ளாலே படுபொருள் உணரப் பட்ட
வெய்யவம் மிருகந் தானே கொன்றிட வீழ்ந்த தன்றே"

[புலியை மிரட்டிய ஆடு] (விவேக சிந்தாமணி)

---

910. புருக்களின் கதை

ஒரு வேடன் காட்டிலே வேட்டையாடிக் கொண்டு திரிந்தான். மாலை நேரத்தில் திடீரென்று பெரு மழை பெய்யத் தொடங்கியது. அவ்வேடன் ஒரு மரத்தின் கீழ் ஒதுங்கினான். "கடவுளே! நான் இப்பொழுது என்ன செய்வேன்? இவ் வேளையில் உம்மைத் தவிர என்னைக் காப்பவர் வேறு எவரும் இலர். மழையால் மிகவும் வருந்துகிறேன். குளிர் காற்று என்னுடைய உடலை வாட்டுகிறது" என்று சொல்லி வருந்தி நின்றான்.

அப்பொழுது அம்மரத்தில் இருந்த ஓர் ஆண் புரு தன்னுடைய பெண் புரு வராத வருத்தத்தால், "அந்தோ! இரைதேடிச் சென்ற என்னுடைய மனைவி இன்னும் வரவில்லையே. அவளை எவன் பிடித்துக் கொண்டானோ தெரியவில்லையே! மனைவி இல்லாத வீடு சுடுகாடு என்பது என்னளவில் உண்மையாக முடிந்து விட்டதே" என்று சொல்லி வருந்தியது. அதனைக் கேட்டுக்கொண்டு வேடனது கைவலையில் இருந்த பெண் புரு, "என்னுடைய ஆருயிர்த் தலைவரே! தாங்கள் வருத்தப்பட வேண்டாம். நான் இந்த வேடன் கைவலையில் சிக்கிக்கொண்டேன். முற்பிறப்பில் தீவினை செய்தவர்கட்குப் பல வகைப்பட்ட தொல்லையும் சிறையும் நோயும் வறுமையும் உண்டாகின்றன. நான் என்னுடைய தீவினையினால் வேடன் கையில் சிக்கிக் கொண்டேன். எச் சமயத்தில் எது வரவேண்டுமோ அது வந்தே தீரும். தாங்கள் என்னைப் பற்றி வருந்துவதால் எவ்வகையான பயனும் உண்டாக மாட்டாது. இப்பொழுது நம்முடைய வீடு தேடி

வந்து மழையாலும் பசியாலும் காற்றுலும் வருந்தி நிற்கும் வேடனுக்கு உதவி செய்யுங்கள். வந்த விருந்தாளியை ஒருவன் கனப்படுத்தாவிடின் அவன் தன்னுடைய நல்வினையை அடியோடு இழக்கிறான். இவ்வுண்மை தாங்கள் அறியாத தன்று'' என்று கூறியது.

ஆண் புரு தன் மனைவி கூறியதைக் கேட்டதும், தன்னுடைய மனைவியை அவ்வேடன் கைப்பற்றிக் கொண்டானே என்றும் எண்ணவில்லை. வேடனைப் பார்த்து, ''ஐயா! தாங்கள் வருத்தப்பட வேண்டாம். இவ்வீட்டைத் தங்களுடைய வீடாக எண்ணிக் கொள்ளுங்கள்'' என்றது. வேடன் புருவைப் பார்த்து, ''புருவே! உன்னுடைய அன்புக்கு நன்றி. நான் குளிரால் துன்புறுகிறேன். முதலில் என்னுடைய குளிரைப் போக்கு'' என்றான். புரு தன்னுடைய கூட்டை அப்படியே இழுத்து வேடனுக்கு முன் தள்ளியது. சருகுகளையும் குவித்தது. காட்டுத் தீயில் இருந்து ஒரு கொள்ளியைக் கொண்டு வந்து தீ மூட்டியது. வேடனைப் பார்த்துக் குளிரைப் போக்கிக் கொள்ளுமாறு கூறியது. வேடன் தன்னுடைய குளிரைப் போக்கிக் கொண்டான்.

புரு வேடனைப் பார்த்து, ''வேடரே உமக்கு வேண்டிய உணவு என்னிடத்தில் இல்லை. என்னுடைய உடலைப் புசிப்பீராக'' என்று கூறி எரிகிற தீயில் விழுந்தது. வேடன் பறவையின் செயலைக் கண்டு உள்ளம் இரங்கினான். நான் மனிதனாக இருந்தும் இப்பறவைக்கு உள்ள அறிவுகூட எனக்கு இல்லாமற் போயிற்றே என்று உள்ளம் வருந்தினான். இனி மேல் வேட்டைத் தொழிலை மேற்கொள்வதில்லை என்று முடிவு செய்து தன் வலையில் இருந்த புருவையும் விட்டுவிட்டான். விடுபட்ட புரு, என் கணவன் உடல் உமது பசிக்குப் போதாது என்னையும் புசிப்பீராக'' என்று கூறித் தானும் அத்தீயில் விழுந்தது. இரு பறவைகளும் விண்ணுலகம் புக்கன.

''பேடையைப் பிடித்துத் தன்னைப்
பிடிக்கவந் தடைந்த பேதை
வேடனுக் குதவி செய்து
விறகிடை வெந்தீ மூட்டிப்

பாடுறு பசியை நோக்கித்
தன்னுடல் கொடுத்த பைம்புள்
வீடுபெற் றுயர்ந்த வார்த்தை
வேதத்தின் விழுமி தன்றே ?''

[புருக்களின் விருந்தோம்பல்] (இராமாயணம்)

---

911. புலத்தியர் கதை

புலத்தியர் என்பவர் ஒரு சிறந்த முனிவர். புலன்களை வென்று சிறந்து விளங்கியபடியால் புலத்தியர் என்னும் சிறப்புப் பெயரைப் பெற்று விளங்கினர். இவர் இளைஞராக இருக்கும் பொழுது மேரு மலைச் சாரலில் அமர்ந்து அரிய தவத்தைச் செய்துகொண்டிருந்தார். பல ஆண்டுகள் வரை இவருடைய தவம் நீண்டு நின்றது. அரம்பையர் முதலிய தேவ மகளிர் இவரிடம் வந்து இவருடைய தவத்திற்குக் கேடு சூழ மிக முயன்றனர். அவர்களுடைய முயற்சி இவரிடம் பலிக்கவில்லை. இவர் தவம் புரிவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தார். இவருடைய தவநிலை தேவர்களாலும் வியந்து பாராட்டப் பெற்றது.

புலத்தியர் யாதும் தீங்கு செய்யாதவராகத் திகழவே மகளிர்களின் தொல்லை இவருக்கு நாளும் மிகுதியாகியது. ஒரு நாள் இவர்பால் பல பெண்கள் வந்து தமது ஆடல் பாடல்களால் இவரைக் கெடுக்க முயன்றனர். சினங் கொண்ட இவர், ''இனிமேல் இங்கு எவர் வரினும் அவர் வயிற்றில் அவர் விரும்பாத ஒரு கருப்பம் உண்டாகும்'' என்று கடுத்து மொழிந்தார். அடுத்து நின்ற பெண்கள் எடுத்தனர் ஓட்டம். அன்று முதல் இவருக்கு ஆயிழையார் தொல்லை இல்லாமற் போயது. ஒரு நாள் இச்செய்தியை அறியாத பெண் ஒருத்தி அவ்விடத்திற்கு வந்தாள். உடனே அவளுக்குக் கருப்பம் உண்டாகியது. விருப்பமில்லாத கருப்பம் மடைந்த விளங்கிழை 'உள்ளங் கலங்கினாள். அவர் திரணபிந்து என்னும் முனிவருடைய மகள். வயிறு கனமானதைக் கண்ட அத்திருந்திழை வருந்தி ஓடித் தந்தையிடம் உரைத்தாள். தந்தை விரைந்து வந்து இவரைக் கண்டு அவளை

இவருக்குத் திருமணம் செய்து தந்தார். பின் அப்பெண் ஒரு புதல்வனைப் பெற்றாள்.

புலத்தியர் இவ்வாறிருக்கும் நாளில் பராசர முனிவர் அரக்கர் பலர் மாளும்படி கொடிய வேள்வி ஒன்றைச் செய்யத் தொடங்கினர். இயற்கையாகவே அருளுடையவராகத் திகழ்ந்த இவர் அவ்வேள்வியைச் செய்ய வேண்டாமென்று அவரைத் தடுத்தார். அறிவுரைகள் பலவற்றைக் கூறினர். அவரும் அவ்வேள்வியைச் செய்யாது ஒழிந்தார். இவருடைய குண நலங்களை அக்காலத்தில் இருந்த அனைவரும் வியந்து பாராட்டினர். சான்றாண்மைக்கு இருப்பிடமாக உள்ளவர் ஊழி பெயரினும் தாம் பெயரார் என்னும் சொல்லுக்கு இவர் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தார். இவர் தம்முடைய உயர்ந்த பண்பிலிருந்து எந்நாளும் மாறுபடவில்லை.

[பெரியோர் ஊழி பெயரினும் மாறுபடார்]

---

912. புலிமுலை புல்வாய்க்கருளிய கதை

பாண்டிவள நாட்டிலே கடப்பங் காட்டிலே புலிகள் மிகுதியாகப் பெருகிவிட்டன. அதனால் மான்களின் தொகை மிகுதியுங் குறைந்துபோய்விட்டது. இறுதியில் ஒரே ஒரு மான் மட்டும் எஞ்சியது. அஃதொரு கன்றையீன்று ஒரு புதரிலே மறைந்திருந்தது. ஒருநாள் அது நீருண்ணச் சென்றபொழுது கன்மன வேடுவன் ஒருவன் அம்மானைக் கொன்று விட்டான். அது உயிர் விடும்பொழுது தன்னுடைய கன்றின் கதியாதாகுமோ என்று எண்ணி வருந்தித் தன்னுயிரை விட்டது. சிவபெருமான் அம்மான் குட்டியின் மீது மிகுந்த இரக்கங் கொண்டார். அக்காட்டில் வேறு பெண்மான் இல்லை. மான்குட்டி கிடந்த புதருக்குப் பக்கத்தில் குட்டி போட்ட பெண் புலி ஒன்று இருந்தது. இறைவன் அம்மான் குட்டிக்குப் புலியையே பாலூட்டுமாறு அருள் புரிந்தார். அதுவும் மான்குட்டியினிடத்தில் இரக்கங்

கொண்டு அந்த மான்குட்டிக்குப் பால் கொடுத்து வளர்த்து வரலாயிற்று.

"புலிமுலை புல்வாய்க்கருளினை போற்றி"

[புலி புல்வாய்க் குட்டிகளைக் காத்தது] (திருவாசகம்)

---

913. புனுகு பூனையின் கதை

முன்னாளில் திருவண்ணாமலையிற் புனுகுபூனை ஒன்று வாழ்ந்திருந்தது. அஃது அருணகிரிப் பெருமானுக்கு நாளும் புனுகு சாத்தி வழிபாடு செய்துகொண்டிருந்தது. அந்நல்வினையினால் மறுபிறப்பில் அயோத்தியில் மனுகுலத்தில் ஏமாங்கதன் என்னும் அரசனுகப் பிறந்தது. பழம் பிறப்பின் வாசனையால் திருவண்ணாமலையை அடைந்து புனுகு முதலிய வாசனைப் பொருள்களை இறைவனுக்கு அணிந்து வழிபாடு செய்தது. அந்நல்வினையினால் அப் புனுகு பூனைக்குத் திருவடிப் பேறு கிடைத்தது.

[புனுகு பூனை]

---

914. புன்னைவன நாதர் கதை

கொற்கையைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட உக்கிரப் பெருவழுதி யென்னும் அரசன் நாள்தோறும் மதுரைக்குச் சென்று சோமசுந்தரக் கடவுளை வழிபடும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தான். ஒரு நாள் வழிபாடு செய்வதற்காகப் புன்னைவனத்தின் வழியாகச் சென்றான். அப்பொழுது அவன் ஏறிவந்த யானை கீழே விழுந்தது. அரசன் ஒன்றுந் தோன்றுமல் திகைத்து நின்றான். அப்பொழுது மணிக்கிரீவனென்பவன் அரசனை வந்து பணிந்து, "அரசே! அடியேன் இவ்வனத்தைத் திருத்திக் கொண்டிருப்பவன்' ஒரு புற்றை வெட்டும்பொழுது அவ்வெட்டினால் வாலற்றுப்போன பாம்பொன்று மேலே

தோன்றியது. அதனைச் சிவபெருமானுடைய திருவுருவம் என்றே எண்ணுகிறேன்'' என்று கூறினன். அரசன் அங்கே சென்று பார்த்துக் கொண்டு நின்றான். மதுரைக்குச் செல்ல முடியவில்லையே என்று வருந்தினன். அப்பொழுது வானொலி, ''அரசே! நீ மதுரைக்குச் சென்று அடையவேண்டாம். அங்கயற் கண்ணியோடும் ஆலவாயமர்ந்த அண்ணல் இங்கு எழுந்தருளி யிருக்கின்றார். இவ்விடத்திலேயே வழிபாடு செய்து கொள்ளலாம்'' என்று கூறியது. உடனே அரசன் புன்னை மரத்தின் நிழலில் புற்றினருகே ஒரு சிவலிங்கம் இருக்கக்கண்டு வழிபாடு செய்துகொண்டு திருக்கோயில் முதலியவைகளை அமைத்தான்.

''செம்பொற் றடவரையில் சேல்பொறித்த வேந்தமைத்த
அம்பொற் சினகரத்துள் அன்றமர்ந்தோன்''.

[புன்னைவனநாதன்] (சங்கரலிங்க உலா)

---

915. பூங்குன்றனார் கதை

வெகு காலத்திற்கு முன்னர்ப் பாண்டிவள நாட்டிலே பூங்குன்றனார் என்னும் பெயருடைய புலவர் ஒருவர் இருந்தார். இவர் நூல்கள் பலவற்றை நன்றாகக் கற்றுச் சிறந்த புலவராக விளங்கியிருந்தார். செய்யுட்களை நன்கு பாடக் கூடியவர். அந்நாளில் வாழ்ந்திருந்த புலவர்கள் பொருளின் பொருட்டு மக்களைப் பாடினர். இவரோ பொருளின் பொருட்டு மனிதர்களைப் பாடுவதில்லையென்று உறுதிகொண்டிருந்தார். தமக்கிருந்த சிறிது நிலத்தில் பயிர்த்தொழில் செய்தார். அதில் இருந்து வருவாய் சிறிதுதான் கிடைத்தது. ஆயினும் இவர் செலவைப் பெருக்கிக்கொள்ளாமல் சுருக்கமாகவே செலவு செய்து வாழ்க்கையை நடத்தினர்; வாழ்க்கைச் செலவு சுருக்கமாக இருக்கவே பொருளின் பொருட்டு வேறு வழிதேடவேண்டிய தொல்லை ஏற்படவில்லை. இறுதிவரை மகிழ்ச்சியுடன் வாழ்க்கையை நடத்தினர். பொருள்வரும் வழி சிறிதாக இருந்தாலும் செலவு செய்யும் வழி விரிவடையா

விட்டால் கெடுதி நேரிடமாட்டாது என்பது இவரிடம் நன்கு பெறப்பட்டது.

[செலவைச் சுருக்கிக் கொள்ளுதல்]

---

916. பூங்கோதையார் கதை

பூங்கோதையார் என்பவர் கொங்குவளநாட்டில் சங்ககிரியில் வாழ்ந்திருந்த எம்பெருமான் கவிராயர் என்பவருடைய மகனவியாராவார். ஒரு நாள் புலவர்கள் சிலர் எம்பெருமான் கவிராயரைப் பார்ப்பதற்கு அவருடைய இல்லத்திற்குச் சென்றனர். அப்பொழுது எம்பெருமான் கவிராயர் வெளியே சென்றிருந்தார். வந்த புலவர்கள் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தனர். ஒருவர் மற்றவர்களைப் பார்த்து, "எம்பெருமான் கவிராயருடைய மகனவியாருஞ் சிறந்த புலமை அமையப் பெற்றவர்" என்று கூறினர். மற்றொருவர், "பெண்கள் எவ்வளவு படித்திருப்பினும் அவர்களுடைய அறிவு முதிர்ச்சி பெருததேயாகும்" என்று கூறினர். இம் மொழி பூங்கோதையார் காதில் விழுந்தது. அவர் உடனே;

> "அறிவி லிகளுரே ஆண்மக்கள் மாதர்
> அறிவின் முதிருரே யாவர்—அறிகரியோ
> தாங்கொண்ட சூலறிவர் தத்தையார் ஆண்மக்கள்
> தாங்கொண்ட சூலறியார் தாம்"

என்னும் ஒரு செய்யுளை எழுதி ஒரு சிறு பெண் மூலம் புலவர்களிடங் கொடுக்கச் செய்தார். இதனைப் பார்த்த புலவர்கள் திகைத்துப்போய் இருந்தனர். எம்பெருமான் புலவரும் வந்து சேர்ந்தார். புலவர்கள் பாட்டை அவரிடங் காட்டினர். பிறகு அம்மையார் பாட்டிற்குப் பொருள் விளக்கஞ் செய்தனர்.

> "குறுமுனி நேர்தமி ழாழியுண் வாணர் குழாம்வியப்ப
> அறிவி லிகளுரே ஆண்மக்கள் என்ன அறுதியிட்ட

சிறிய இடையெம் பெருமான் மனைவி சிறந்துவளர்
மறுவறு சங்க கிரிசேர் வதுகொங்கு மண்டலமே."

[பூங்கோதையார்] (கொங்கு மண்டல சதகம்)

---

917. பூசலார் கதை

பூசலார் நாயனார் என்பவர் தொண்டைவள நாட்டில் நின்றவூர் என்னும் ஊரில் அந்தணர் குலத்தில் தோன்றினார். சிவனடியார்கட்குத் தொண்டு புரிவதையே தம் முடைய கடமையாகக் கொண்டு வாழ்ந்தார். இறைவனுக்குத் திருக்கோயில் ஒன்று அமைக்க வேண்டும் என்று எண்ணினார். வறியவராகையால் எண்ணியவாறு திருக் கோயிலை அமைக்க முடியவில்லை. மனத்திற் கற்பனையாகவே திருக் கோயில் ஒன்றை அமைத்தார். நன்னாள் ஒன்றில் அதற்குக் குடமுழுக்குச் செய்யவந் திட்டமிட்டார். அந் நாளில் காடவர் கோன் என்னுங் காவலன் கச்சிப்பதியில் கடவுளுக்குக் கல்தளி ஒன்று கட்டினான். அதற்குக் குட முழுக்குச் செய்வதற்குப் பூசலார் எண்ணிய நன்னாளைத் தானும் முடிவு செய்தான். இறைவன் பூசலார் பெருமையைக் காடவர் கோனுக்குக் காட்ட எண்ணினார். அம் மன்னன் கனவில் தோன்றி "அரசனே! நீ குறிப்பிட்டுள்ள நாளிற் பூசலார் என்பவரும் குடமுழுக்கு நாள் குறிப்பிட்டுள்ளார். நாம் அன்று அங்குச் செல்வதால் நீ வேறொரு நாளை முடிவு செய்துகொள்" என்று கூறினார்.

காடவர்கோன் கடவுள் கட்டளையைக் கண்டு வியந்தான். நின்றவூரையடைந்து பூசலாரையும் அவர் கட்டிய கோயிலையுங் காண விரும்பினான். வந்து பார்த்தபோது உண்மை விளங்கியது. கடவுள் மெய்யன்புக்கே கட்டுப் படுகிறார் என்று மன மகிழ்ந்து சென்றான். அதன் பிறகு பூசலார் பெருமை யாண்டும் பரவியது.

[பூசலார் நாயனார்] (பெரிய புராணம்)

---

918. பூதத்தை அடக்கிய கதை

காஞ்சிபுரத்தில் காமாட்சி அம்மையார் முப்பத் திரண்டு அறங்களையும் புரிந்துகொண்டிருந்தார். ஒரு பூதம் அறத்திற்கு வந்துகொண்டிருந்த பலபண்டங்களையுந் தடுத்து அழிவு செய்து கொண்டிருந்ததுமன்றி மனிதர்களையும் புசித் துத் தொல்லை விளைவித்துக் கொண்டிருந்தது. அப்பூதத்தின் துடுக்கை அடக்கும்படி அம்மையார் திருமாலுக்குக் கட்டளை யிட்டார். திருமால் அப்பூதத்தைப் பிடித்து அதன் மேல் ஏறி நின்றார். அதனுல் அப்பூதத்தினுடைய ஆற்றல் அடங்க வில்லை. பிறகு அதன்மேல் உட்கார்ந்தார். அப்பொழுதும் அதனுடைய ஆரவாரம் அடங்கவில்லை. பிறகு அதனை அமுக்கி அதன்மீது படுத்துக் கொண்டார். அதன் பிறகே அதனுடைய துடுக்கு அடங்கியது. இவ்வாறு திருமால் நின்ற இடமும் இருந்த இடமும் படுத்த இடமும் வைகா, ஊரகம், பாடகம் எனப் பெயர் பெறலாயின.

"ஏணுரும் பூதங் கொடுபோ வதுமன்றி
எண்ணில்தொல்சீர்"

[அறத்துக்குத் தீமை செய்த பூதம்]

(தொண்டை மண்டல சதகம்)

---

919. பூதன் கதை

பூதன் என்பவன் தொண்டைவள நாட்டிலே புள்வேளூர் என்னும் நகரிலே வேளாளர் வகுப்பிலே தோன்றியவன். உழவுத் தொழிலையே இவன் சிறப்பான தொழிலாக மேற் கொண்டிருந்தான். இவனுடைய விளை நிலங்கள் புன்செய் யானபடியினுல் கம்பு, கேழ்வரகு, வரகு முதலிய மட்டமான கூலங்களே விளைந்தன. இவன் தன்னுடைய உறவினர்க ளெல்லாம் ஒருங்கு சேர்த்து வைத்துக் கொண்டு விளைந்த தானியங்களை அவர்களோடு உண்டு மகிழ்ந்தான். ஒருநாள் ஔவையார் பூதனுடைய இல்லத்திற்கு வந்தார். அப்பொ

ழுது வீட்டில் இருந்த வரகரிசிச் சோறு முதலியவைகளைப் படைத்து, ஔவையார் உண்ணுமாறு செய்தான். அவ்வளவு அன்பு ஔவையாருக்கு மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்கியது. ''வரகரிசிச் சோறும்'' என்று தொடங்கும் பாடல் ஒன்றை அவன் மீது பாடினார். தவத்திற் சிறந்த ஔவையாருடைய வாக்கால் பாடப் பெற்றமையினால் பூதனுடைய செல்வம் மேலும் செழித்தோங்கத் தொடங்கியது. காக்கை தனக்குக் கிடைத்ததை மறைத்து வைக்காமல் சுற்றத்தைக் கூவி அழைத்து உண்ணும். செல்வமும் காக்கையைப் போன்ற தன்மை உடையவர்களுக்கே மிகுதியாகப் பெருகும் என்பது இப்பூதனிடம் நன்கு விளங்கியது.

''வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரென வேபுளித்த மோருமே—திரமுடனே
புள்வேளூர்ப் பூதன் புகழ்ந்துபரிந் திட்ட சோ(று)
எல்லா உலகும் பெறும்.''

[புள்வேளூர்ப் பூதன்] (ஔவையார் பாட்டு)

---

920. பூருவின் கதை

பூரு என்பவன் திங்கட்குல வேந்தனுகிய யயாதியின் மகன். யயாதி சுக்கிரனுடைய சாபக் கேட்டினால் உரிய காலத்திற்கு முன்னரே முதுமைப் பருவத்தை அடைந்தான். ஆயினும் இளமை இன்பத்தை நுகர்தற்கு அவனுடைய உள்ளம் விரும்பியது. தன் மக்களிடம் அவர்களுடைய இளம் பருவத்தைத் தருமாறு கேட்டான். யயாதிக்கு மக்கள் நால்வர். அவர்களுள் மூன்று பேர் தங்களுடைய இளமையைத் தரமுடியாது என்று மறுத்து விட்டனர்.

பூரு என்பவன் தன் தந்தையின் முதுமையைத் தான் கவர்ந்து கொண்டு தன்னுடைய இளமையைத் தன்னுடைய தந்தைக்கு வழங்கினான். இதனால் இவனை மண்ணவரும் விண்ணவரும் புகழ்ந்து பாராட்டிப் போற்றலாயினர்.

ஒருவன் உலகத்திலே பிறந்தால் புகழோடு வாழுமாறு பிறக்க வேண்டும். அவ்வாறு ஒருவர் புகழோடு வாழ முடி

யாதாயின் பிறப்பதைவிடப் பிறவாமல் இருப்பதே நல்லது என்று ஆன்றோர் அருளிய அருள் மொழிக்கு இப்பூருவே சிறந்த எடுத்துக் காட்டாக அமைந்தான்.

(புகழொடு தோன்ற வேண்டும்)

---

921. பெண்ணாகப் பிறந்த அந்தணன் கதை

ஓர் அந்தணன் தன்னுடைய மனைவியைப் புறக்கணித்து ஒழுகினான். அத்தீமையினால் மறு பிறப்பில் தக்கன் என்னும் பெயருடைய பெண்ணாகப் பிறந்தான். காசிப முனிவர் என்பவர் பெண்ணாகப் பிறந்து வருந்தும் அந்தணனைப் பார்த்து, 'நீ புன்னை வனத்தை அடைந்து தவஞ் செய்வாயானால் பெண் பிறவியை ஒழித்து நற்கதியை அடையலாம்' என்று அறிவுரை கூறினார். பெண்ணாகப் பிறந்த அந்தணன் அம்முனிவருடைய கட்டளைப்படி புன்னை வனத்தை அடைந்து தவஞ் செய்தான். அதனால் பெண் பிறவி ஒழிந்தது. பிறகு வீடு பேற்றைப் பெற்றான்.

"வெம்பவங்கள் ஆற்றி யறுதொழிலோன் அன்றெடுத்த [பெண் சனனம்
மாற்றி யுயர்முத்தி வழங்கினனே."
[அந்தணன் தீவினை நீங்கியது] (சங்கரலிங்க உலா)

---

922. பெருஞ் சித்திரனார் கதை

பெருஞ் சித்திரனார் என்பவர் சங்க காலப் புலவர்களில் ஒருவர். பேரறிவு பொருந்திய இவர்பால் பெரு வறுமையும் பொருந்தி நின்றது. பல நாட்கள் உண்ண உணவின்றியும் காலங் கழித்தார். குமண மன்னன்பாற் சென்று தமது வறுமை நிலைமையைப் புலப்படுத்தினார். அவன் கணக்கற்ற செல்வத்தை இவருக்கு வழங்கினான். இவர் அச்செல்வத்தைப் பெற்றுக்கொண்டு தம்முடைய இல்லத்தை அடைந்தார்.

பெருஞ் சித்திரனார் தாம் பெற்ற பெருஞ் செல்வத்தைப் பாதுகாத்து வைத்துக்கொண்டு பலநாள் சிறப்புடன் வாழலாமென்று எண்ணவில்லை. தம்முடைய மனைவியைப் பார்த்து, "மனைகிழவோயே! இச்செல்வத்தைப் பாதுகாத்து வைத்துக் கொண்டு நீண்டநாட்களுக்கு நன்குவாழ்வோம் என்று எண்ணுதே. நின்னை விரும்பியிருப்பவர்கட்கும் நின்னால் விரும்பப் பெற்றவர்களுக்கும் வறியவர்கட்கும் உன்னுடைய உறவினர்கட்கும் உனக்குக் கடன் கொடுத்தவர்கட்கும் மற்றும் இவர்களுக்குத்தான் கொடுக்கலாம், இவர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று எண்ணுமலும் என்னைக் கேட்காமலும் நன்கு வழங்குவாயாக" என்று உரைத்தார்.

ஒருவன் பொருளைப் பெற்றால் அதனை வைக்குமிடம் வறியோர்களது பசியைத் தீர்த்தலேயாம் என்று பெரியோர்கள் கூறிய அறவுரை இப்புலவரிடம் நன்கு அமைந்திருந்தது.

[பொருள் வைக்குமிடம்] (புறநானூறு)

---

923. பெருந்தலைச் சாத்தனார் கதை

பெருந்தலைச் சாத்தனார் என்பவர் பாண்டிவள நாட்டில் வெகு காலத்திற்கு முன் வாழ்ந்திருந்த ஒரு சிறந்த புலவர். இவரிடஞ் சிறந்த கல்விச் செல்வந்தான் அமைந்திருந்ததே தவிரப் பொருட் செல்வம் பொருந்தவில்லை. அதனால் புலவர் வறுமைத் துன்பத்தில் அகப்பட்டு வாடினார்.

அந்நாளிற் குமணன் என்னும் வள்ளல் ஒருவன் வாழ்ந்திருந்தான். அவனோடு மாறுபட்டு அவனுடைய பின்னவன் அரசாட்சியைக் கைப்பற்றியிருந்தபடியால் அவன் காட்டை அடைந்து மறைந்திருந்தான்.

வறுமையால் வாடிய சாத்தனார் தமது வறுமையைத் தான் எண்ணினாரே தவிரக் குமணனுடைய நிலைமையைச் சிறிதும் எண்ணிப் பார்க்கவில்லை. செய்யுள் ஒன்று செய்து கொண்டு போய்க் குமணனிடம் பாடினார்.

குமணன் தம்பி அமணன் குமணன் தலையைக் கொண்டு வருபவர்க்குப் பெரும் பரிசளிப்பதாக அறிவித்திருந்தான்

அஃது அரசனுடைய நினைவுக்கு வந்தது. தன்னுடைய தலையை வெட்டிக் கொண்டுபோய்த் தம்பியிடம் கொடுத்துப் பொருள் பெற்றுக் கொள்ளுமாறு கூறினன்.

அறிவாளியாகிய புலவர் அவ்வாறு பழிபடு செயலைப் புரிதற்கு இணங்குவாரா? அச்செயலுக்கு நாணி அவ்விடம் விட்டகன்று வேறொரு சூழ்ச்சியை நாடினர்.

உண்டாகக் கூடிய பயனை விரும்பி நல்லவர்கள் பழியொடு பொருந்திய செயலைச் செய்ய மாட்டார்கள் என்பது அன்று பெருந்தலைச் சாத்தனாரிடம் நன்கு விளங்கியது.

[பயன் விரும்பித் தீயன புரியார்]

---

924. பெருமங்கல முடையான் கதை

காடவர்கோன் ஒருவன் தான் வடநாட்டு மன்னர்களைப் போரில் வென்றதாகச் சொல்லி இறுமாந்தான். சோழனை ஒரு பொருட்படுத்தாமல் ஆணவங் கொண்டான். சோழ மன்னன் இச்செய்தியைப் புள்ளிருக்கு வேளூருக்கு அண்மையில் உள்ள பெருமங்கலம் என்னும் ஊரில் வாழ்ந்திருந்த அவ்வூர்த் தலைவனுக்கு உணர்த்தினன். அவனுடைய பெயர் பெருமங்கலம் உடையான் என்றே வழங்கியது. அப்பெருமங்கலம் உடையானுக்குக் காளி தேவியின் அருட் பலம் உண்டு. அவன் அவ்வருட் பலத்தால் வட நாட்டரசர்களைக் கொன்று, அவர்களுடைய தலைகளைப்போல் பொய்த் தலைகள் செய்து வெற்றியாளனை மீண்டான். அவனுடைய ஆதரவில் இருந்த புலவர்கள் பலர் அப்போது களவழிப் பாடினர்கள். சோழ மன்னன் அப்பொழுது காடவனை அழைத்துக் காண்பித்தான். இப்புதுமையைக் கண்ட காடவன் வியப்படைந்து சோழனுக்குப் பணிந்தவனாக நடந்து கொண்டான்.

"களத்திற் பொலிகா டவன்பணியக்
கண்டான் கொண்டான் களவழிப்புத்
தளத்தில் பெரிய வடவரசர்
தாமே விடும்பொய்த் தலைகொண்டான்

உளத்திற் பரவு காளியருள்
உடையான் சோழன் உவப்புடையான்
வளத்திற் பெருமங் கலமுடையான்
வளஞ்சேர் சோழ மண்டலமே ''

[பெருமங்கல முடையான்] (சோழ மண்டல சதகம்)

---

925. பெற்ருன் சாம்பான் கதை

வெகு காலத்திற்கு முன்பு தில்லையிலே பெற்ருன் சாம்பான் என்னும் புலையன் ஒருவன் வாழ்ந்திருந்தான். இவன் சிற்சபை பொலியத் திருநடம் புரியும் அற்புதக் கூத்தனின் அடிமலர்களே மறவாத மாண்புடையவனுக இருந்தான். தனக்கு வீடுபேற்றினே அளிக்க வேண்டுமென்று அம்பல வாணரை நாள்தோறும் வழிபட்டுக் கொண்டிருந்தான். அம் பலக்கூத்தர் பெற்ருன் சாம்பானுக்கு வீடுபேற்றை அளிக்க விரும்பினர். தம்முடைய அடியவராகிய உமாபதி சிவாச்சாரியார் என்பவருக்கு,

'' அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டுப்—படியின்மிசை
பெத்தான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கை செய்து
முத்தி கொடுக்க முறை ''

என்னுஞ் செய்யுள் ஒன்றை எழுதிப் பெற்ருன் சாம்பானிடங் கொடுத்தார். அவன் அச்சீட்டைக் கொண்டு போய் உமாபதி சிவாச்சாரியாரிடம் கொடுத்தான். அவர் தீக்கை முதலியன செய்தார். அவன் விரைவில் வீடுபேற்றை அடைந்தான். பெற்ருன் சாம்பானுடைய மகளவி மக்கள் உமாபதியார் பெற்ருன் சாம்பானேப் பில்லி வைத்துக் கொன்று விட்டதாக எண்ணினர்கள். அரசனிடம் முறை இட்டார்கள். உமாபதி சிவாச்சாரியாரை அரசன் உசாவினன். உமாபதியார் நிகழ்ந்ததைக் கூறினர். அரசன் முள்ளிச் செடி ஒன்றைக் காட்டி அதற்குத் தீக்கை செய்து வீடு பேறு கொடுக்கச் சொன்னன்

அவ்வாறே செய்தார். அவ்வளவில் அம்முள்ளிச் செடி பட்டுப் போய் விட்டது. அரசன் ஐயம் நீங்கினன்.

"சாதல்பிறப் பைப்புலப்பெற் றனுக் குமாபதியால்
போதல்செய் வித்தபுலியூரா"

[பெற்றான் சாம்பன்] (புலியூர் வெண்பா)

---

926. பேகன் கதை

பழநி என்று இக்காலத்தில் வழங்கும் வையாபுரி என்னும் நகரத்தில் பேகன் என்னும் பெயருடைய வள்ளல் ஒருவன் வாழ்ந்திருந்தான். இவன் வேளிர் தலைவரில் ஒருவனுகிய ஆவியர் குடியில் தோன்றியவனுதலின் வையாவிக் கோப்பெரும் பேகன் எனவும் வழங்குவர். கடைச் சங்கக் காலத்தில் இருந்த கடையெழு வள்ளல்களில் ஒருவன். இவன் ஒருநாள் மலைவழியே சென்று கொண்டிருந்தான். அப்பொழுது அங்கு ஒரு மயில் சிறகை விரித்து ஆடிக்கொண்டிருந்தது. அது குளிருக்கு ஆற்றுமல் வருந்துகிறது என்று எண்ணினன். தான் போர்த்திக் கொண்டிருந்த போர்வையை எடுத்து அதன்மேற் போர்த்தினன். அவனுடைய கொடைமடத்தைக் குறித்துப் புலவர்கள் பலர் புகழ்ந்து பாடியிருக்கிறர்கள். கண்ணகி என்னும் மனைவியோடு இவன் இல்லறத்தை இனிது நடத்திக்கொண்டிருந்தான். அப்பொழுது பரத்தையர் மையலிற் சிக்கி உழன்றனன். புலவர்கள் பலர் அவனைப் புகழ்ந்து பாடி அவன் தன் மனைவியோடு சேர்ந்து வாழுமாறு செய்தார்கள்.

"உடா அ போரா ஆகுதல் அறிந்தும்
படா அ மஞ்ஞைக் கீத்த எங்கோ
கடா அ யானைக் கலிமான் பேகன்."

[பேகன்] (புறநானூறு)

---

927. பேசாப் பாவைதனைப் பேசுவித்த கதை

புத்தருக்கும் மாணிக்க வாசகருக்கும் திருத் தில்லையிற் சமயப்போர் மூண்டது. இப்போரில் மாணிக்கவாசகர் புத்தர்கட்குத் தாமே நேராகப் பதிலுரைக்கவில்லை. திருவருட்டிறத்தை நன்கு விளக்க எண்ணிய மாணிக்க வாசகர் ஊமைப் பெண் ஒன்றை வரவழைத்தார். அப் பெண்ணுக்குத் திருநீறிட்டு அருளுரை வழங்கினர். புத்தர் கள் தாங்கள் கேட்கவேண்டிய ஐயங்களை யெல்லாம் அப் பெண்ணிடம் கேட்கலாம் என்றும், அப்பெண் எல்லாவற்றிற் கும் மறுமொழி கூறுவாள் என்றுஞ் சொன்னர். பிறவியிலேயே ஊமைப் பெண்ணாகவுள்ள இவள் சமயநூற் கருத்தை எவ் வாறு கூறுவாள் பார்ப்போம் என்று பல கேள்விகளை அப் பெண்ணினிடம் கேட்டனர். அப்பெண் எல்லாவற்றிற்கும் தக்கவாறு மறுமொழி கூறினாள். இதனைக் கேட்ட புத்தர் கள் அஞ்சினர். சைவ சமயத்தின் சிறப்பை உணர்ந்தனர். தங்களுடைய தோல்வியையும் ஒப்புக் கொண்டனர்.

"பத்தரைக் கொண்டே பேசாப் பாவைதனைப்
[பேசுவித்துப்
புத்தரையாட் கொள்ளும் புலியூரே."

[ஊமைப் பெண் பேசியது] (புலியூர் வெண்பா)

---

928 பேய்கள் பிள்ளைகளான கதை

பழையனூர் நீலியும் அவளுடைய தமையனும் திருவாலங் காட்டைச் சூழ்ந்த இடங்களில் திரிந்து கொண்டிருந்தார் கள். அப்பொழுது திருவாலங்காட்டில் புரிசைக்கிழான் என் னும் ஒரு வேளாளனும் அவன் மனைவியும் பிள்ளைப் பேறில்லா மல் தவஞ் செய்து கொண்டிருந்தார்கள். புரிசைக் கிழான் மனைவியின் பெயர் திருப்பச்சைநாச்சி. பேய்களாகத் திரிந்து கொண்டிருந்த நீலனும் நீலியும் திருப்பச்சைநாச்சி வயிற்றில் இரட்டைப் பிள்ளைகளாகப் பிறந்தார்கள். ஆணு கவும் பெண்ணுகவும் பிறந்த அக்குழந்தைகளை இருவரும்

மிகுந்த விருப்பத்தோடு வளர்த்து வந்தார்கள். அப்பேய்க் குழந்தைகள் பகற் காலம் முழுவதும் குழந்தைகளாகவே இருப்பார்கள். இரவில் பெற்றோர்கள் உறங்கிய பிறகு பேயுருக் கொண்டு சுடுகாட்டிற்குச் சென்று பிணங்களையும் மந்தை களில் உள்ள ஆடு மாடுகளையும் தின்றுவிட்டுப் பிறகு முன் போலக் குழந்தைகளாகி வந்து தொட்டிலில் தூங்குவார்கள். இவ்வாறு நாள்தோறும் செய்து கொண்டிருந்தார்கள். மந் தைகளில் நாளுக்கு நாள் ஆடு மாடுகள் குறைவதற்குக் காரணம் யாதென்று மந்தைக்குரியவர்கள் விழிப்பாக இருந்து ஆராய்ந்தார்கள். அப்பேய்கள் இரண்டும் மந்தைக் குள் வந்து ஆடுமாடுகளைத் தின்றுவிட்டுப் புரிசைக்கிழான் இல்லத்துக்குள் செல்வதைக் கண்டார்கள்; இச்செய்தியைப் புரிசைக்கிழானிடம் இயம்பினர்கள். அவன் அன்றிரவு தூங்கு பவன்போல் விழித்திருந்து பார்த்தான். குழந்தைகள் பேய் களாகிச் சென்றதைக் கண்டான். மிகுந்த அச்சங்கொண்டு அன்றே அப்பிள்ளைகளை ஆலங் காட்டப்பர் கோயிலுக்கு முன் கொண்டு போய் விட்டு விட்டு வந்து விட்டான்.

[பேய்கள் பிள்ளைகளானது]

---

929. பேய் முலையுண்ட கதை

கண்ணபிரான் ஆயர்பாடியில் வளர்ந்து கொண்டிருந் தார். கண்ணனை எவ்வாறேனும் கொன்று தொலைத்துவிட வேண்டும் என்று எண்ணிய கம்சன் பூதனை என்னும் பெய ருடைய ஓர் அரக்கியை ஏவினன். அவ்வரக்கி எல்லோரும் கண்டு விரும்பத்தக்க அழகிய உருவத்தை எடுத்துக் கொண்டு நந்தகோபனின் வீட்டிற்கு இரவில் வந்து சேர்ந் தாள். அங்கு உறங்குகின்றாற்போல் நடித்துக்கொண்டு படுத் திருந்த கண்ணனைக் கையிலே தூக்கினாள். தன் தனத்தைக் கண்ணனுடைய வாயிலே வைத்தாள். உடனே கண்ணன் அவளுடைய இரண்டு தனங்களையும் இறுகப் பிடித்துப் பாலு டன் அவள் உயிரையும் உறிஞ்சி விட்டான். அவ்வரக்கி கொடிய உருவத்தோடு நிலத்தில் விழுந்தாள்.

"அரிய கங்குலில் அன்னைதன் வடிவு கொண்
டலகையாகிய நங்கை"

"உருகு மாமுலைப் பாலுடன் அவளுயி ருண்டழும்"
(பாரதம்)

"எத்தியப சாசின் முலைக்குடத் தைக்குடித்து
முற்றுயி ரிலாமல் அடக்கிவிட் டுச்சிரித்த."
(திருப்புகழ்)

[பேய் முலை யுண்டது]

---

930. பேராவூர்ச் செல்வன் கதை

தொண்டைவள நாட்டில் பேராவூர் என்னும் ஊரில் வேளாளன் ஒருவன் வாழ்ந்திருந்தான். இவன் பெருஞ் செல்வனுக விளங்கியதோடு சிறந்த வள்ளலாகவும் இருந்தான். தன்னைச் சேர்ந்தாரை ஆதரிப்பதில் இவன் தன்னிகரில்லாச் சிறப்புப் பெற்று விளங்கினன். அந்நாளில் நந்தன் சாம்பான் என்பவனை அரசனுடைய சேவகர்கள் அடிப்பதற்கோ அன்றிக் கொலைப் புரிவதற்கோ துரத்திக் கொண்டு வந்தனர். வேளாளச் செல்வன் அச்சமயத்தில் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். துரத்தப்பட்டு வந்த நந்தன் சாம்பான் அச்சமயத்தில் தன்னைக் காப்பாற்றக் கூடியவன் பேராவூர்ச் செல்வனே என்று துணிந்து அவனுடைய வீட்டுக்குட் புகுந்தான். அவன் அடைக்கலமாகப் புகுந்துள்ளான் என்பதை அறிந்த செல்வன் அப்பொழுது தான் சாப்பிட்டுக் கொண்டிருந்த கலத்திலேயே சாம்பானையும் சாப்பிடச் செய்தான். சாம்பான் பறையர் குலத்தினன் என்று சிறிதுந் தாழ்வாக மதிக்கவில்லை. உள்ளே புகுந்த நந்தன் சாம்பான் வேளாளச் செல்வனோடு உண்டு கொண்டிருப்பதைக் கண்ட அரசனுடைய சேவகர்கள் யாதும் செய்ய முடியாது அஞ்சித் திரும்பி விட்டனர். நந்தன் சாம்பானும் உயிர் பிழைத்தான். வெகு காலத்திற்கு முன்னரே சாதி, குலம், பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறுது விளங்கிய செல்வனது உயரிய மனநலம் பெரிதும் பாராட்டிப் போற்றக் கூடியதன்றே?

"தரையார் மழையுந் தபனனும்
போலத் தடையுமின்றி
உரையாது நீசனெ டுண்டமை
யாலுமொ ரூனமின்றித்
திரையார் புவியிற் புகழே
படைத்துத் தினந்தினமும்
வரையாது வள்ளன்மை காட்டுவ
தாற்ருெண்ட மண்டலமே"

[நீசனெடுண்டது] (தொண்ட மண்டல சதகம்)

---

931. பேரையூரான் கதை

தொண்டைவள நாட்டில் பேரையூர் என்னும் ஊரில் வேளாளச் செல்வன் ஒருவன் இருந்தான். பஞ்ச காலம் ஒன்றிலே ஒரு புலவன் இச்செல்வனுடைய இல்லத்திற்கு வந்தான். செல்வன் அரிசி உணவு முதலியவைகளே உண்பது வழக்கம். செல்வன் வந்த புலவனுக்கு அரிசி உணவு முதலியன படைத்து உண்ணச் செய்து விட்டுத் தான் பிறகு உள்ளே போய்ச் சோளக் கூழைச் சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தான். செல்வன் தன்னெடு உண்ணுதபடியால் புலவனுக்குச் சிறிது ஐயம் உண்டாகியது. அவன் செல்வனைப் பார்த்து, "நீர் மட்டும் நல்ல உணவு வகைகளே உண்டு வந்தீரோ?" என்று உசாவினன். இக்கேள்வி செல்வனுக்கு மிகுந்த மன வருத்தத்தை உண்டாக்கியது. அவன் கூரிய வாள் ஒன்றினுல் தன்னுடைய வயிற்றைக் கீறி உள்ளேயிருந்த சோளக் கூழை வெளிப்படுத்தினன். இதனைக் கண்ட புலவன் நாணித் தலை கவிழ்ந்தான்.

"நறுங்கூ ழெனையன்றி யுண்டனை
யோவென நாணிவயி
றிறுங்கூர் நுதிவடி வாளால்
பிளந்திட் டிறுங்கரினை

யுறுங்கூழ் புறத்தி லிருந்தானுக்
குய்த்துப்பி லாத புற்கை
வறுங்கூழ் சொரிந்திட்ட முற்றவுண்
டான் தொண்ட மண்டலமே ''

[வயிற்றுக் கூழைக் காட்டியது] (தொண்ட மண்டல சதகம்)

---

932. பொதிச் சோறளித்த கதை

சுந்தரமூர்த்தியார் கொங்குவள நாட்டிலே அடியவர்களோடு வழி நடந்து கொண்டிருந்தார். அவிநாசிக்குச் சென்று இறைவனை வழிபட வேண்டுமென்பது அவருடைய நோக்கம். இடைவழியே ஊர்கள் காணப்படவில்லை. பெருங்காடு; தண்ணீர் கிடைப்பதும் அரிதாக இருந்தது. சுந்தரரையும் அடியவர்களையும் பசிப்பிணி வருத்தியது. அவிநாசியில் எழுந்தருளிய அண்ணல் சுந்தரருடைய பசியைப் போக்க எண்ணினர். மறையவர் கோலங் கொண்டார். கையிற் பொதிசோற்றுடனும் தண்ணீருடனும் சுந்தரருக்கு முன் தோன்றினர். பொதிசோற்றினை உண்டு தண்ணீர் குடித்து வழிநடை வருத்தத்தைப் போக்கிக் கொள்ளச் சொன்னர். சுந்தரரும் அடியவர்களும் உணவு கொண்டு களைப்புத் தீர்ந்தனர். பிறகு சுந்தரர் அந்தணராக வந்த வரைப் பார்த்து, '' அவிநாசி எத்திக்கில் உள்ளது ?'' என்று வினவினர். அதற்கு இறைவன், '' இப்படி மேற்குத் திக்காகச் செல்லுங்கள் '' என்று கூறிச் சிறிது தொலை உடன் சென்று மறைந்தருளினர். அது முதல் அவிநாசி புக்கொளியூர் அவிநாசி என்று பெயர் பெறலாயிற்று.

'' மறையோ னென, வந்துகானில்
திதப்பட்டெதி ரேபொதி சோறிணை
அவிழ்த்திட்டவி நாசி யிலேவரு
திசைக்தற்ற காயனு மாகிம றைந்து
போமுன் ''

[கட்டுச் சோறளித்தது] (திருப்புகழ்)

---

933. பொய்த் தலை நீட்டுங் கதை

கள்ளர்கள் சுவர்களைக் கூரிய படைக் கலங்களால் இடித்து ஓர் ஆள் உள்ளே நுழைந்து செல்லக்கூடிய அளவுக்கு வழி செய்வார்கள். வழி செய்தவுடன் அதற்குள் திடீரென்று நுழைந்துவிட மாட்டார்கள். களி மண்ணினால் மனிதர்களுடைய தலை அளவுக்குச் செய்து மனிதர்களின் தலையைப் போலவே நிறந் தீட்டப் பெற்றுத் திடீரென்று பார்ப்பவர்களுக்கு உண்மையான தலையைப் போலவே காணப் பெறும் பொய்த் தலை ஒன்றை ஒரு தடியில் மாட்டி நுழை வாயிலில் உள்ளே நீட்டுவார்கள். சுவரிடிக்கப் பெற்ற ஒலியைக் கேட்டு எவரேனும் உறக்கந் தெளிந்து அவ்வறைக்குள் வந்து கன்னக் கோல் வழியில் நின்றிருப்பார்களானால் தடியினாலோ அல்லது வேறு படைக்கலங்களாலோ அப் பொய்த்தலை மீது அடிப்பார்கள். அவ்வாறு ஏதேனும் நிகழ்ந்தால் கன்னக்கோல் வைத்த கள்ளர்கள் சிட்டாய்ப் பறந்து ஓடிப் போவார்கள். உள்ளே நீட்டப் பெற்ற தலைக்கு எத்தகைய ஊறும் நேரவில்லை யெனின் கள்ளர்கள் அவ்வழியே உள் நுழைவார்கள். பிறகு கதவு முதலியவைகளைத் திறந்து வைத்துக்கொண்டு தங்கள் கையில் அகப்பட்ட பொருள்களைக் கவர்ந்து செல்வார்கள்.

"கைத்தலங் கண்ணைக் களவுகாண் பானொருவன்
பொய்த்தலைமுன் னீட்டியற்றுப் போந்து."

[பொய்த்தலை நீட்டுதல்]

---

934. பொன் மயிலின் கதை

தரும குணம் உள்ளவனாகிய ஒரு சிராவகன் ஒரு கோயில் அமைத்து அதில் உருவத்தையும் ஏற்படுத்தினான். அக்கோயிலின் நாள்வழிபாட்டிற்கு எத்தகைய ஏற்பாடுஞ் செய்யாமல் இறந்துபோனான். கோயில் கட்டிய நல்வினையினால் தேவருலகிற் பிறந்தான். முற்பிறப்பில் தான்

கட்டிய கோயிலுக்குப் படித்தரம் ஏற்படுத்தாமையை உணர்ந்தான். அக்குற்றத்தைப் போக்கும் பொருட்டுப் பொன் மயிலின் வடிவமாக அக்கோயிலுக்கு வந்து அருகக் கடவுளுக்கும் வழிபாட்டாளனுக்கும் பயன்படுமாறு நாள் தோறும் இரண்டிரண்டு பொன்னிறகுகள் போட்டுக்கொண்டு வந்தான். அவ்விறகுகளால் அருகக் கடவுளின் வழிபாட்டை நடத்திக்கொண்டு வழிபாட்டாளன் நலத்துடன் வாழ்ந்து கொண்டிருந்தான். அவ்வாறிருக்கும்போது ஒரு நாள் அவ்வழிபாட்டாளன் 'நாம் இந்த மயிலையே பிடித்துக் கொண்டால் பல பொன்னிறகுகள் அகப்படும். அவற்றால் நமக்குப் பொருள் குவிந்துவிடும்' என்று பேராசை கொண்டான். அம்மயில் வந்திருக்கும்பொழுது அதனுடைய தோகையைப் பற்றினான். அஃது அப்படியே அவனைத் தூக்கிக்கொண்டு சாக்கை வடிவாகி விண்ணிற் பறந்தது. அவ்வாறுகவே வழிபாட்டாளன் அஞ்சிக் கைப்பிடியை விட்டான். கைப்பிடியை விட்ட அளவில் நிலத்தில் வீழ்ந்து மாண்டான். *வீணை முயற்சிகளால் மனிதனுக்கு அழிவேற்* படும்.

"ஓக்கத்தால் மதிய முட்டும் உறுதவன் நகரி முன்னே
யாக்கையால் அழகி தாயோர் பெண்மயில் ஆடக் கண்டு
தோக்கையைப் பற்றலோடும் தொட்டவன் காயநூக்கிக்
காக்கையாப் பறந்தே யோடக் கவர்ந்தங்கை சோர்ந்துவிட்டான்"

[பொன் மயில்] (நரிவிருத்தம்)

---

935. பொன் மழை பெய்த கதை

திருத்தில்லையில் ஓடியவர் திருப்பணி செய்து கொண்டிருந்தார். கையிருப்பில் இருந்த பொருள் முழுவதுந் தீர்ந்துவிட்டது. அதற்குமேல் திருப்பணி செய்வதற்குப் பொருள் இல்லை. பொருளின்மையால் திருப்பணி தடைபடுகிறதே என்று அடியவர் உள்ளம் வருந்தினர். அவர் மாட்டு அருள்கூர்ந்த கூத்தப்பிரான் பொன் மழை பெய்யு

மாறு திருவருள் செய்தார். அதனைக்கொண்டு அடியவர் மேலுந் திருப்பணியைத் தொடர்ந்து செய்தார்.

"நன்மைத் தவத்தொருவன் நாடும் படிக்கிரங்கிப்
பொன்மாரி பெய்யும் புலியூரே"

[பொன்மழை பெய்தது] (புலியூர் வெண்பா)

---

936. பொன்னப்பன் கதை

ஓர் ஊரிலே பொன்னப்பன் என்னும் பெயருடையவன் ஒருவன் இருந்தான். இவன் வெள்ளையுள்ளத்தினன். வஞ்சம், பொய், சூது முதலிய தீக்குணங்கள் இன்னவா றிருக்குமென்பதே இவனுக்குச் சிறிதுந் தெரியாது. ஒரு நாள் இவன் ஒரு காட்டு வழியாகச் சென்றுகொண்டிருந்தான். அப்பொழுது புலி ஒன்று எதிரே வந்தது. புலிக்கு அஞ்சிய பொன்னப்பன் ஒரு மரத்தின் மீது ஏறிக்கொண்டான். புலி மரத்தின் கீழே உட்கார்ந்து கொண்டது. இவனைப்பார்த்துத் "தம்பி! நீ எனக்காகச் சிறிதும் அஞ்சவேண்டியதில்லை. நான் மனிதர்களுக்கு எத்தகைய தீங்குஞ் செய்வதில்லை. உன்னைக் கொன்று தின்னவேண்டும் என்னும் எண்ணமும் இல்லை. என் முகத்திலே உண்ணிகள் மிகுதியாக இருக்கின்றன. அவைகள் கடிப்பதால் எனக்கு மிகுந்த தொல்லையுண்டாகிறது. நீ அச்சமில்லாமல் கீழே இறங்கி வந்து என் முகத்தில் உள்ள உண்ணிகளைப் பறித்துவிட்டு நீ உன் வழியே போ" என்று உரைத்தது.

புலி புகன்றதைப் பொன்னப்பன் நம்பிவிட்டான். மரத்தை விட்டுக் கீழே இறங்கினான். புலியிடஞ் சென்றான். அது கீழே படுத்துக்கொண்டது. பொன்னப்பன் அதன் பக்கத்தில் அமர்ந்து அதன் முகத்தில் இருந்த உண்ணிகளையெல்லாம் பிடுங்கினான். புலி ஆடாமல் அசையாமல் பூனை போல் இருந்தது. இந்தப் புலி நல்ல புலிதான் என்று எண்ணிக் கொண்டான். உண்ணி பறித்து முடிந்ததும் பொன்னப்பன் போகப் புறப்பட்டான். புலி பொன்னப்பனை இறுகப் பிடித்துக்கொண்டது. "தம்பி! எங்கே போகப் பார்க்.

கிருய் ? இன்று எனக்கு நண்பகல் உணவு நீதான். நான் மனிதர்களைத் தின்று வெகு நாட்களாகி விட்டன. இன்று அருமையாக நீ கிடைத்திருக்கிருய். உன்னை விட்டு விடுவேனே?'' என்று கூறிப் பொன்னப்பனைக் கொன்று தின்றது. புலி முகத்துண்ணி பறித்த பொன்னப்பன் இவ்வாறு மாண்டொழிந்தான். எக்காரணத்தை முன்னிட்டும் தீயவர்கட்கு உதவி செய்தல் கூடாது.

[தீயோர்கட்கு உதவி செய்யக் கூடாது]

(புலிமுகத்துண்ணி பறித்துவிடல்)

---

937. பொன்னையாள் கதை

பொன்னையாள் என்பவள் முன்னாளில் மதுரையின் கிழக்கில் உள்ள பூவணம் என்னும் திருநகரில் தோன்றியிருந்தாள். இவளுடைய குலம் உருத்திரகணிகையர் குலம். இவளிடம் அறிவு, அழகு, அன்பு, அருள், வாய்மை முதலிய உயர்குணங்கள் யாவும் ஒருங்கு அமைந்திருந்தன. இவள் தன்னுடைய குலத்தொழிலையும் பெரும் பொருளையும் வெறுத்துப் பரம்பொருளின் அடிகளையே அரும் பொருளென உள்ளத்திற் பற்றி நின்றாள். அடியார்கட்கு அமுதளித்தல் முதலிய பணிகளை நாளும் புரிந்து கொண்டிருந்தாள்.

வீடுபேற்றை யடையவேண்டும் என்னும் எண்ணம் இவளுக்கு மிகுதியாக இருந்தது. இறைவனுக்கு அழகிய உருவம் ஒன்றைச் செய்ய எண்ணினாள். அதற்குப் பொன்னில்லையே என்று வருந்தினாள். மதுரைப் பெருமான் சித்தராய்த் தோன்றிப் பொன் அருளினார். அதனைக் கொண்டு இறைவன் திருவுருவை அமைக்கச் செய்தாள். உரு மிக அழகாக அமைந்தது. அதனைக் கண்டு பேருவகை பூத்தாள். இறைவனிடம் அன்பு பாராட்டிக் கொண்டிருந்து வீடுபேற்றை அடைந்தாள்.

ஒருவர் பிறப்பென்னும் பேதைமையை ஒழித்துச் சிறப்பாகிய வீடுபேற்றைப் பெற வேண்டுமானால், இறைவனடியைப்பற்றவேண்டும் என்னும் உண்மை இப்பொன்னையாளிடம் நன்கு பெறப்பட்டது.

"பொன்னகையாள் அன்பருக்கே போனகமீந்
துன்னருளால்
சொன்னமிகப் பெற்றுளே சோமேசா—பன்னில்
வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று."

[விருந்தோம்புதல்] (சோமோசர் முதுமொழி வெண்பா)

---

938. பொன்னுலகம் பொலிவிழந்த கதை

சூரபன்மன் திக்குகள் தோறுஞ் சென்று தன்னுடைய வெற்றியை நாட்டியபொழுது தேவர் உலகிற்குச் சென்றான். இந்திரன் சூரபன்மனுக்கு அஞ்சினான். தன் மனைவியோடு வேற்றுருக் கொண்டு ஒளித்துக் கொண்டான். தேவர்கள் அனைவருஞ் சூரனால் துன்புறுத்தப்பட்டார்கள். பொன்னுலகம் பொலிவிழந்து நின்றது. தேவர்கள் சூரனுடைய ஏவல்களைச் செய்து கொண்டிருந்தார்கள். இதனால் தெய்வ லோகத்து அமராவதியின் வழி மூடிக் கிடந்தது. இந்திரன் மனைவியாகிய இந்திராணியைச் சூரபன்மனுடைய தங்கையாகிய அசமுகி தூக்கிச் செல்ல முயன்றாள். அசமுகியின் கையை மகாகாளர் வெட்டி விட்டார். அவள் அழுதுகொண்டு சூரனிடம் போய் முறையிட்டாள். சூரனுடைய ஏவலால் பானுகோபன் படையுடன் விண்ணுலகத்திற்கு வந்து அதனைச் சூழ்ந்துகொண்டான். இந்திரன் ஒளிந்து கொண்டபடியால் அகப்படவில்லை. அவனுடைய மகனுகிய சயந்தனையும் பிற தேவர்களையும் பிடித்துச் சிறையிலிட்டான். தேவலோகமும் நெருப்பிலிடப்பட்டுப் பாழாகியது. பிறகு முருகக் கடவுள் சூரனையழித்துத் தேவர்களைச் சிறை மீட்டார்.

"அருமா தபத்த அமரா பதிக்கு
வழிமூடி விட்ட தணிமீள
அயிரா வதத்து விழியா யிரத்தன்
உடனே பிடித்து முடியாதே
திருவா னகற்ப தருநா டழித்து

விபுதே சர்சுற்ற மவைகோலித்
திடமோ டரக்கர் கொடுபோ யடைத்த
சிறைமீ ளவிட்ட பெருமாளே''

பொன்னுலகம்] (திருப்புகழ்)

---

939. போசன் கதை (1)

போசன் என்பவன் ஒரு சிறந்த அரசன். இவன் விதர்ப்ப நாட்டில் இருந்தவன். இவனுடைய தந்தையின் பெயர் சிந்துலன். இவன் சிறுவனாக இருக்கும்பொழுதே இவனுடைய தந்தை இறந்தான். இவனுக்குச் சிறிய தந்தை ஒருவன் இருந்தான். சிறிய தந்தையாயினும் பெரிய வஞ்சம் உடைய நெஞ்சினன். அவனுடைய பெயர் முஞ்சன் என மொழிவர்.

முன்னவன் காலமான பின் பின்னவனாகிய முஞ்சனே மன்னனாகி அரசாட்சி செய்யத் தொடங்கினன். முன்னவனாகிய அண்ணனுடைய மகன் பெயர் போசன். அவன் கலை பலகற்றுப் புலமை நலஞ்செறிந்து திகழ்ந்தான். காலக் கணிதன் ஒருவன் ஒருநாள் அரசனுடைய அவைக்கு வந்தான். போசனை உற்று நோக்கினன். ''இவன் இவ் வுலகம் முழுவதையும் அரசாட்சி செய்வான்'' என்று இயம்பினன்.

காலக்கணிதன் கழறியவைகளைக் கேட்ட முஞ்ச மன்னனுக்கு நெஞ்சம் கலங்கியது. போசனை உயிருடன் வைத்திருப்பின் நமக்கு அரசாட்சி நிலைபெறமாட்டாது என்று எண்ணினன். கொலைஞர் சிலரை யழைத்தான். போசனைக் காட்டிற்கழைத்துக் கொண்டுபோய்க் கொன்றுவிடுமாறு கட்டளையிட்டான்.

போசனைக் கொலைஞர்கள் கூட்டிப் போயினர். கொலை செய்யத் தொடங்கினர். போசன் கொலைஞர்களைப் பார்த்து, ''மனு முதல் எத்தனையோ கோடி மன்னர்கள் தோன்றி, இந்த மண்ணுலகை யாண்டு மண்ணோடு மடிந்து போனார் கள். இவ்வுலகில் நிலைபெற்றிருந்தார் எவருமிலர். என் சிறிய தந்தை மட்டும் இருப்பாராயின் என்னுடைய உயிரை

உங்களுடைய வாளுக்கு இரையாக்குங்கள். நான்மாள்வதற்கு மகிழ்வோடு உடன்படுகின்றேன்", என்று உரைத்தான். போசன் புகன்ற மொழிகளைக் கொலைஞர்கள் கேட்டனர். விரைந்து முஞ்சனிடம் சென்று விளம்பினர். அவனுக்கு நல் லறிவு தோன்றியது. அந்தோ தீவினைக்காளாக இருந்தேனே என்று உள்ளங் கவன்றான். விரைந்தோடி வந்து போசனைத் தழுவிக் கொண்டான்.

போசன் பிறகு மன்னனாகி உலகையாண்டான். காளி தாசனைப் போற்றிய காவலன் இவனே. முஞ்சன் மன நிலையை முன்னர் எல்லோரும் தூற்றினராயினும் பின்னர் அவன் சிறந்த மன்னனே என்று போற்றினர். போச மன்னன் சிறந்த அரசர்கட்கோர் எடுத்துக் காட்டாய்த் திகழ்ந்தான். இவனுடைய கொடை நலம் அனைவராலும் பாராட்டப்பெற்றது.

"போசன் கவிஞருக்கே போதப் பரிசளித்துத்
தூசிலாக் கீர்த்தி கொண்டான் சோமேசா-ஆசையுடன்
ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல(து)
ஊதிய மில்லை உயிர்க்கு"

[கொடைநலம்] (சோமேசர் முதுமொழி வெண்பா)

---

940. போசன் கதை (2)

போசன் அரச செல்வத்தைப் பெற்றிருந்தும் அதனை ஒரு பொருளாக மதிக்கவில்லை. கேள்விச் செல்வத்தையே விழுமிய செல்வமாக விரும்பினன். தன்னுடைய அவை யிலே காளிதாசன், தண்டி, பாணன், மாகன், பூதி முதலிய புலவர்களை அமரச் செய்து அவர்கள் உரைக்கும் விழுமிய நூற்பொருள்களைச் செவி மடுப்பதிலேயே தன்னுடைய பொழுதைப் பெரிதும் போக்கினன்.

ஒரு நாள் சிலர் போசனைப் பார்த்துத் தங்கள் நாள் முழு வதும் வீண் பேச்சுக் கேட்பதிலேயே காலத்தைப்போக்கி விடுகிறீர்களே? ஆடல் பாடல்கள் நிகழச் செய்தால் நன்றாக

இருக்குமே'' என்று கூறினர்கள். போசன் அவர்களுடைய மடமைக்கு இரங்கினன். கேள்விச் செல்வத்தின் சிறப்பையும் அதனல் ஏற்படக்கூடிய பயனையும் தக்கவாறு அவர்கட்கு விளக்கினன். அவர்கள் தங்களுடைய மடமைக்கு நாணி இரங்கினர்.

[செவிச் செல்வம்]

---

941. மகளைப் பலி கொடுத்த கதை

கொங்குவள நாட்டில் வட பரிசார நாட்டுப் பால் வேளாளரில் விசய விக்கிரம இம்முடிச் சோழியாண்டான் என்பவன் அவிநாசியப்பர் கோவிலுக்குத் திருப்பணிகள் செய்தான். மங்கலத்துக்கு அருகில் நெய்யாற்றில் அணை ஒன்று கட்டினன். அணை நிற்கவில்லை அடிக்கடி உடைந்து போயிற்று. ஒரு சிறுமியின் மீது சுவாமி வந்து வெறியாட்டு ஆடியது. தலைக் கன்னிகை ஒருத்தியைப் பலி கொடுத்தால் அணை நிற்கும் என்றது. பல காலத்திற்குப் பல உயிர்கள் வாழ்வதற்காக ஒரு பெண்ணைப் பலி கொடுப்பது அரிய காரியம் அல்ல வென்று உறுதி கொண்டான். அருமையான தன்னுடைய பெண்ணைப் பலிதந்து அணையைக் கட்டினன். அதன் பிறகு அணை உடையாமல் நின்றது. அணையைக் கட்டிய இம்முடிச் சோழியாண்டான் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தான்.

'' பாயு மணை நிற்க வேண்டி மகளைப் பலிகொடுத்துந்
தோயுந் திருப்புக் கொளிக்கோயில் கற்பணித்
[தொண்டுமிசை
ஆயும் பொருளந்தையிம் முடிச் சோழியாண்
[டானளியின்
மாயன் வடபரி சாரநா டுங்கொங்கு மண்டலமே ''

[மகளைப் பலி கொடுத்தது] (கொங்கு மண்டல சதகம்)

---

942. மகனைப் பலி கொடுத்த கதை

கொங்கு வள நாட்டில் தாராபுரத்தை யடுத்த கொற்றனூரில் அப்பரமேயர் எழுந்தருளிய தேர் நிலைவிட்டுப் பெயரவில்லை. எத்தனை பேர் கூடி யிழுத்தாலுந் தேரின் வடம் அறுந்து போவதைத் தவிரத் தேர் நிலை விட்டுப் பெயர்வதில்லை. தேர் நிலைக்கு வந்து சேர்ந்த பிறகுதான் உணவு கொள்வது என்னுங் கொள்கையை உடைய பல பெரியோர்கள் உள்ளங் கலங்கினர்கள். அப்பொழுது அங்கு ஒரு சிறுமியின் மீது தெய்வ ஆவேசம் உண்டாகியது. "நீங்கள் ஏன் மயங்குகிறீர்கள்? இந்து ஒரு பூதத்தினுடைய வேலை. ஒரு மகனைத் தலைப் பிள்ளையை வெட்டிப் பலி கொடுத்தால் தேர் விரைவாக நடந்து நிலைக்குப் போய்ச் சேரும்" என்று கூறினாள். அந்நாட்டில் தலைமை பெற்ற பெரிய குலத்தானை வேணுடன் என்பவன் இதனைக் கேட்டான். பல அன்பர்களுடைய வருத்தந் தீரும் பொருட்டு ஒரு பிள்ளையைப் பலி இடுதல் பெரிய காரியமோ என்று எண்ணினான். தன் பிள்ளையைப் பிடித்து வெட்டித் தேர்க் காலில் பலி கொடுத்தான். உடனே தேர் நடந்தது. அன்பர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். இந்நிகழ்ச்சியை ஒரு புலவர்;

"நாதன் இரதம் நடவாது செய் கொடிய
பூதம் அகலப் புதல்வனைவி—நோதமுற
வெட்டிப் புகழ் படைத்தான் வேணுடையான்
[கொற்றையான்
எட்டுத் திசை மகிழ வே"

என்று பாடியுள்ளார்.

"கொற்றையில் வீற்றரு ளப்பர மேயர் கொடிஞ்சிசெலப்
பெற்றதன் பிள்ளையை வெட்டிவிட் டானற் பெருமையுற
உற்றுள ராயர்பொற் சிம்மா தனத்தில் உவந்துவைத்த
மற்றெறி நீள்புய வேணுடன் வாழ்கொங்கு
[மண்டலமே"

[மகனைப் பலி கொடுத்தது] (கொங்கு மண்டல சதகம்)

943. மகிடன் கதை

மகிடன் என்பவன் எருமை முகமும் மனித உடலும் படைத்த ஓர் அரக்கன். இவன் அருந் தவங்களைப் புரிந்து பெருத் திருவடைந்து விளங்கினன். அரக்கர்கள் பலர் இவனுக்குத் துணையாக அமைந்து நின்றார்கள். இவன் அவர்களோடு மாகிசம் என்னும் நகரில் இருந்து அரசாட்சியை நடத்தினன். செல்வத் தருக்கால் செருக்கி நின்ற இவன் எல்லோருக்குந் தொல்லைகளையே விளைத்தான். அனைவரும் இவனுக்குப் பகைவர்களாக அமைந்து நின்றார்கள். இவனை ஒழிக்க வேண்டுமென்று எல்லோரும் இறைவனை வேண்டிக் கொண்டார்கள்.

இறைவன் சத்தியின் கூறு ஒன்றினை அனுப்பினர். அது மிகக் கடுமையான சீற்றத்துடன் வந்து இவனைக் கொலை புரிந்து சினந் தணிந்து சென்றது. கொடுமையான செயல்களைப் புரிவோர் விரைந்தழிவர் என்பது இவனுற் பெறப்பட்டது.

[அல்லவை செய்தொழுகும் அரசன்]

---

944. மகுடேசுரர் கதை

அகத்தியர் காவிரி ஆற்றைக் கமண்டலத்திற்குள் அடக்கிக்கொண்டு வந்தார். இச்செய்தியை உணர்ந்த ஆனைமுகக் கடவுள் காவிரியை வெளிப்படுத்த எண்ணினர். காகத்தின் வடிவங்கொண்டு கமண்டலத்தைக் கவிழ்த்தார். பெருகி ஓடுகிற காவிரியைப் பார்த்து அகத்தியர் சினங்கொண்டார். காவிரி அகத்திய முனிவரைப் பார்த்து, "சிவபெருமான் கட்டளைப்படி ஆனைமுகக் கடவுள் என்னைக் கவிழ்த்திருக்கிறார். தாங்கள் என் மீது சினங் கொள்வது தகுதி யாகுமா?" என்றாள். முனிவர் திருக்கோயிலுக்குட் புகுந்தார். இறைவன் ஒரு திருவிளையாட்டை எண்ணிப் பாதாளத்தில் அழுந்தினர். திருமணச் சிறப்பைப் பார்க்க முடியாமல் என்னை அகற்றி விட்டதுமன்றி இங்கு கண்டு தொழவும் வகையில்லாமல் பாத

லத்தில் அழுந்துகின்றாரே என்று ஓடிப் பிடித்தார். அவர் பிடித்த கைப்பிடியளவே சிவபெருமான் நின்றருளினார். அவ்வாறே என்றும் விளங்குகின்றார்.

"விரிதிரைப் பொன்னி போக வினையமுற் றினமென்
[றின்னோன்
பரிவுறப் போதுகின்றான் பாதாலத் தடைது மென்றே
இருநிலத் திழிதல் காணா முனிவரன் ஏங்கி மாழ்கிப்
பிரிவுறா வகைசெங் கையால் பிடித்தனன் பிடிக்குள்
[நின்றான்"

என்பது கொடுமுடிப் புராணம்.

(கொடு முடிப் புராணம்)

"நந்து படித்துறை சூழ்கறை யூர்தனில் நம்பரைப்பூத்
தந்து படித்தருச் சிக்கவொட் டாத்திருத் தார்முடியும்
முந்து படிக்குள் அடங்கக் குறுமுனி முன்கையினால்
வந்து பிடிக்குள் அடங்கிய துங்கொங்கு மண்டலமே"

[திருப்பாண்டிக் கொடு முடி] (கொங்கு மண்டல சதகம்)

---

945. மக்களைக் கண்டு மகிழ்ந்த கதை

நிடத நாட்டில் மாவிந்த நகரத்தில் நளமன்னன் உள மகிழ்வோடு அரசாட்சி செய்து கொண்டிருந்தான். விதர்ப்ப நாட்டில் குண்டினபுரத்தில் அரசுபுரிந்து கொண்டிருந்த வீமராசன் மகளாகிய தமயந்தியை நளன் மணம் புரிந்தான். இந்திரசேனன் என்னும் பெயருடைய ஒரு மகனும் இந்திர சேனை என்னும் பெயருடைய ஒரு மகளும் மக்கட் செல்வ மாகத் தோன்றினர்.

பழம் பிறப்பிற் செய்த தீவினையின் பயனாய்ச் சனி பக வான் நளனைப் பீடிக்கத் தொடங்கினான். புட்கரன் என்பவ னோடு சூதாடச் செய்தான். இச்சூதில் நளன் நாடு நகரம் வீடு வாசல் முதலிய யாவற்றையும் இழந்து போனான். மனைவி மக்க ளோடு நாட்டை விட்டு வெளிப்பட்டான். ஓர் அந்த ணன் மூலமாகத் தன்னுடைய மக்களைத் தன்னுடைய மாமன்

வீட்டிற்கு அனுப்பி வைத்தான். தானுந் தன் மனைவியுமாகக் காட்டிற்குச் சென்று கொண்டிருக்கையில் மனைவியைப் பிரிந்து தனியே சென்றான். வழியில் ஒரு பாம்பினால் கடிக்கப் பட்டு உருக் குலைந்தான். வாகுகன் என்னும் பெயரோடு அயோத்திக்குச் சென்று ருதுபர்ணராசன் என்பவனிடத்தில் தேரோட்டியாக அமர்ந்தான்.

நளனை விட்டுத் தனியாகப் பிரிந்து சென்ற தமயந்தி தந்தையின் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தாள். தந்தையிடம் நிகழ்ந்ததைக் கூறிக் கணவனைத் தேடச் செய்தாள். நளன் அயோத்தியில் இருப்பதை வீமராசன் அறிந்தான். தன்னுடைய மகளுக்கு இரண்டாவது முறை சுயம்வரம் நிகழப் போவதாகச் செய்தி யனுப்பி ருதுபர்ண ராசனைக் குண்டினபுரத்திற்கு வரச் செய்தான். நளனும் ருதுபர்ணனுக்குத் தேர் செலுத்திக் கொண்டு அங்கு வந்து சேர்ந்தான். பாம்புக் கடியினால் உருவம் மாறுபட்டுப் போயிருந்தபடியால் நளனைத் தமயந்தியினாலும் வீமராசனாலும் எளிதாகக் கண்டுபிடிக்க முடியவில்லை. பல வழிகளில் ஆராய்ச்சி செய்து தேரோட்டிக்கொண்டு வந்துள்ளவன் நளன்தானா என்று கண்டு பிடிப்பதற்கு முயன்றார்கள்.

ஒரு நாள் தமயந்தி தன் மக்களை அவனுக்கு முன் விளையாட விட்டாள். தன் மக்களைக் கண்டவுடன் நளனுக்கு அடக்க முடியாத ஆர்வம் பெருகியது. இன்பக் கண்ணீர் பெருக்கினான். மக்களைத் தூக்கி அணைத்து மகிழ்ந்து அவர்களோடு உரையாடலானான். அவனுடைய செய்கையை அறிந்த தமயந்தியும் வீமராசனும் அவன் நளனே என்று தெளிந்தார்கள். அன்பை அடைத்து வைப்பதற்குத் தாழில்லை. அன்புடையவர்களுடைய சிறு கண்ணீரே உள்ளிருக்கும் அன்பைப் பலரும் அறிய வெளிப்படுத்திவிடும் என்பது அன்று நளனிடம் நன்கு விளங்கியது.

‘‘தோன்ரு வகைகரந்துந் தோன்றலைக்கண் டுண்ணெகிழ்ந்து
தோன்றநின்ரு ன்முன்புநளன் சோமேசா—தோன்றுகின்ற
அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்’’

[அன்புடைமை] (சோமேசர் முதுமொழி வெண்பா)

946. மங்கன் கதை

கொங்கு வள நாட்டிலே மணியூர் என்னும் ஊரிலே மங்கன் என்னும் பெயருடையவன் ஒருவன் வெகு காலத்துக்கு முன்பு வாழ்ந்திருந்தான். இவன் மிகக் கொடிய செயலுடையவனாக இருந்தான். இவனுக்கு வாய்த்த மனைவியும் அவ்வாறே அமைந்திருந்தாள். இருவரும் பொல்லாதவர்களாக இருக்க இவர்களுடைய வாழ்க்கை மிகவும் கடையானதாக இருந்தது. இரவு பகலென்று பாராமல் பொருள் தேடுவதிலேயே இருவரும் கருத்துச் செலுத்தி இருந்தனர். மருளில் மிகுந்த இவர்களிடம் அருள் என்பது மருந்துக்கும் இல்லாததாகப் போய் விட்டது. மங்கனுக்கு மாந்தோப்பு ஒன்று இருந்தது. அது பூத்துக் காய்த்துப் பழுத்திருந்தது இவனுடைய சோலை மணி முத்த ஆற்றின் கரையில் இருந்தது. அருளாளராகிய சிவப்பிரகாசர் அடிகள் ஒருநாள் மணிமுத்தா ஆற்றிலே நீராடிவிட்டு அம்மாஞ்சோலை வழியே சென்றார். ஒரு மரத்தின் கீழ் மாம்பழம் ஒன்று விழுந்து கிடந்தது. அது சிவபூசைக்காகும் என்று எண்ணிய அடிகள் அப்பழத்தைக் கையிலெடுத்தனர். கொடியவனாகிய மங்கன் அதனைக் கண்டான். ஓடி வந்து அடிகளுடைய மடியைப் பிடித்துக்கொண்டு, "கள்ளனே! வா முறை மன்றத்திற்கு" என்று கூறி ஓலமிட்டான். அடிகள் உள்ளம் வருந்தினார். அக்கொடியவன் மீது, "... ..மாங்கனிக்கா என்னை மடி பிடித்த மாபாவி, சாங்கனிக்கா தித்தன் வரத் தான்" என்று முடியும் வசைப் பாட்டு ஒன்றைப் பாடிச் சென்றார். அவனும் அவ்வாறே கன்னிராசிக்குக் கதிரவன் வந்த சமயத்தில் மாண்டொழிந்தான். செல்வத் தேடுதலை விரும்பிப் புகழை விரும்பாதவர் உடல் நிலத்திற்குப் பாரமாம் என்பது இம் முழுமகனிடத்தில் நன்கு விளங்கியது.

[வசையால் மாண்டது]

---

947. மங்கையர்க்கரசியார் கதை

"மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம் வளவர் திருக்குலக் கொழுந்து வஞ்சக்கைமானி" என்று சேக்கிழா

ரால் பாராட்டப் பெற்ற இவர் மதுரையிலிருந்து அரசாட்சி புரிந்து கொண்டிருந்த நெடுமாறன் என்னும் பாண்டிய னுக்கு மகளியார். இவர் தம்முடைய சிறப்பினால் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரானார்.

நெடுமாறன் பழவினைப் பயனால் சமண மதத்தில் புகுந் தான். தன் கணவனுக்கு இவ்வம்மையார் அறிவுரைகள் பல கூறிப் பார்த்தார். அரசன் மனம் மாறவில்லை. அச்சமயத் தையே மேற் கொண்டொழுகினான். அரசியார் மனந் தளர வில்லை. திருஞான சம்பந்தப் பிள்ளையாரை மதுரைக்கு அழைத்துத் தம் கணவனைச் சமண சமயப் படுகுழியில் இருந்து கரை ஏற்றினார். தாமுஞ் சிறப்புற்றார்.

இவ்வாறு இவ்வரசியார் தாம் சமண சமயப் படுகுழியில் விழாமல் அதனில் விழுந்த தம் கணவனையும் மீட்ட செயல் கண்ட அனைவோரும் தம்மையுங் தங்கணவனையும் பாது காத்துக் கொள்வோரே சிறந்த பெண்களாவர் என்று திரு வள்ளுவ நாயனார் செப்பியதற்குச் சிறந்த எடுத்துக் காட் டாக விளங்குகின்றார் இவ்வரசியார் என்று பாராட்டினார்கள்.

[மங்கையர்க்கரசியார்] (பெரிய புராணம்)

---

948. மங்கை வாட மயல்செய்த கதை

திருப்பாச்சிலாச் சிரமம் என்னும் நகரைக் கொல்லி மழ வன் என்னும் பெயரையுடைய ஓர் அரசன் அரசாட்சி செய்து கொண்டிருந்தான். அம்மன்னனுக்கு ஓர் மகள் இருந்தாள். அவளை முயலகன் என்னும் நோய் பற்றியது. அதனால் அவள் மிகுந்த துன்பக் கடலில் ஆழ்ந்தாள். அந்நோய் எத னாலுந் தீரவில்லை. அரசன் இறைவனே கதி என்று எண் ணியவனாய் அப்பெண்ணைத் திருக்கோயிலிலே கொண்டு வந்து கிடத்தி யிருந்தான். அந்நாளில் திருஞான சம்பந்தர் அடியார்களோடு அவ்வூருக்கு எழுந்தருளினார். அவரு டைய வரவை அரசன் அறிந்தான். நகரை அணி செய்து அவரை எதிர்கொண்டு அழைத்துப் போற்றினான். பிள்ளை யார் திருக்கோயிலுக்கு எழுந்தருளினார். இறைவன் திரு

முன்பு கிடத்தப்பட்டிருந்த பெண்ணைக் கண்டார். அப்பெண்ணுக்கு நிகழ்ந்தது யாது? என்று உசாவினர். அரசன் நிகழ்ந்ததைச் சொன்னன். பிள்ளையார் இறைவன் மீது தேவாரப் பதிகம் பாடினர். அவ்வளவில் அந்நோய் மங்கையை விட்டு நீங்கியது. அரசன் அளவிடற்கரிய மகிழ்ச்சி அடைந்தான்.

"மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல் செய்வதோ இவர் மாண்பே"

[நோய் தீர்ந்தது] (தேவாரம்)

---

949. மணலைக் களவு செய்த மறையவன்

ஓர் ஊரிலே அந்தணன் ஒருவன் இருந்தான். அவன் நான்மறை முதலியவைகளை நன்கு கற்று நல்லொழுக்க வழியிலே தலை சிறந்து நின்றான். இவன் அரண்மனையிலே அரசனுக்குப் புரோகிதனாக அமைந்து அதனால் வரும் ஊதியத்தைக் கொண்டு வாழ்க்கையை நடத்தினான்.

இவ்வந்தணனுக்கு மகன் ஒருவன் பிறந்தான். அவனுடைய பிறந்த நாட் குறிப்பை ஆராய்ந்து பார்த்ததில் அவன் களவுத் தொழிலில் ஈடுபடுவான் என்று விதிக்கப்பட்டிருந்தது. இதனைப் பார்த்த அந்தணன் உள்ளம் வருந்தினான். நம்முடைய மகன் கள்ளனாகவும் ஆவதற்கு ஊழ் இருக்கின்றதே என்று ஏங்கினான். பிறகு அதனை மறந்துவிட்டு மறைகளையும் அறநூல்களையும் பிறநூல்களையும் போதித்து அவைகளில் வல்லவனாக்கினான்.

நாளடைவில் அந்தணன் மகன் பெரியவனாகித் தந்தையினுடைய புரோகிதத் தொழிலை மேற்கொண்டான். அரண்மனைக்குச் செல்லும் போதெல்லாம் அங்குள்ள பொருள்களில் எவைகளையேனும் களவு செய்து கொண்டு போக வேண்டுமென்று அவனுடைய உள்ளத்திலே அடக்க முடியாத ஆர்வம் உண்டாகியது. ஆயினும் இவன் தன்னுடைய நூலுணர்வால் களவு விருப்பத்தை அடக்கிக் கொண்டே வந்தான்.

இன்ன பொருளைக் களவு செய்பவர்கள் இன்ன இன்ன நரகத்திற்குச் செல்வார்கள் என்றும் இவனுடைய தந்தை இவனுக்குப் போதித்திருந்தான். மணல் முதலிய பொதுவான பொருள்களைக் களவு செய்வோர் நரகத்தை அடையார். அரச தண்டனையையும் பெறார். இதனையும் அந்தணனுடைய மகன் அறிந்திருந்தான். ஒருநாள் களவிலே காதல் கட்டுக்கடங்காத தாயிற்று. அரண்மனையின் ஒரு பக்கத்தில் புதிய கட்டிடம் ஒன்றுக்கு கட்டுவதற்கு மணல் கொண்டு வந்து கொட்டியிருந்தனர். அந்தணனுடைய மகன் எவருக்குந் தெரியாமல் அந்த மணலிலே ஒரு படியைத் தன்னுடைய துணியிலே கட்டிக்கொண்டு போனான்.

பிறந்த நாட்குறிப்பில் கண்டவாறு இவன் கள்ளனாகவும் ஆனான். அதே சமயத்தில் பயனில் பொருளாகிய மணலைக் களவு செய்தபடியால் தீவினைக்கு ஆளாகாமலும் பிழைத்துக் கொண்டான். ''ஊழையும் உட்பக்கம் காண்பர்'' என்னும் பொது மறை இவ்வந்தணன் மகனிடம் பலித்து விட்டது. மதியினால் இவன் இவ்வாறு விதியை வெல்லாமல் இருந்திருப்பானையின் தீவினைக் குள்ளாகுமாறு கள்ளனாக முடிந்திருப்பான்.

[ஊழ்வினையை வெல்லுதல்]

---

950. மணற் பாவையை நம்பிய மங்கை கதை

சோழ வள நாட்டில் காவிரிப்பூம் பட்டினத்தின் கடற் கரையில் ஒரு நாள் பல சிறு பெண்கள் கூடி விளையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது சில பெண்கள் மணலினால் ஒரு பாவையைச் செய்து விளையாடினர். ஒரு பெண் மற்றொரு பெண்ணைப் பார்த்து விளையாட்டாக, ''இது தான் உன்னுடைய கணவன்'' என்று கூறினாள். இதனை அப்பெண் நம்பினாள். அப்பெண்ணுக்குக் ''கல்லென்றாலும் கணவன்'' அக்கணவனே தெய்வமென்னும் கொள்கை நிரம்பியிருந்தது. அம்மண் பாவை மீது இரக்கம் கொண்டாள். தன்னோடு வந்த பெண்களோடு தானுஞ் செல்லா

மல் கடல்நீர் அப்பாவையைக் கரைத்து விடாதபடி காத்துக் கொண்டிருந்தாள். இச்செயலைக் கண்டோர் அவளுடைய கற்புடைமையைப் பெரிதும் பாராட்டினர்.

"கரையின் மணற்பாவை நின்கணவ னுமென்று
உரைசெய்த மாதரொடும் போகாள் திரைவந்து
அழியாது சூழ்போக ஆங்குந்தி நின்ற
வரியார் அகலல்குல் மாதர்....."

(சிலப்பதிகாரம்)

[கற்புடைமை]

---

951. மணிமான் கதை

மணிமான் என்பவன் மன்னர்களில் ஒருவன். மண்ணுலக மக்களிடத்தும் மாக்களிடத்தும் தண்ணருள் மிக்கவன். இறைவன் அடிமலரை இனிது போற்றித் திருவருள் நாட்டங் கைவரப் பெற்றவன். இவனுடைய புகழ் திக்குகள் தோறும் தக்கவாறு பரவி நின்றது. இவனை பலரும் பலவாறு போற்றிப் புகழ்தலைக் கண்ட காமனை என்னும் கணிகை ஒருத்தி இவனைத் தன் வழிப் படுத்திப் புகழையும் பொருளையும் கவர எண்ணினாள். அவள் அழகிலும் ஆடல் பாடல்களிலும் பிறரை மயக்குதலிலும் மிக வல்லவள். அவள் மணிமானை அடுத்துத் தன்னுடைய ஆற்றல்களை எல்லாம் பயன்படுத்திப் பார்த்தாள். சிவபெருமானுடைய திருப்பணிகளிலும் அப்பெருமானுடைய அருளைப் பெறுதலிலுமே நாட்டமுடைய இவனை மயக்க அவளால் இயலவில்லை. தன்னுடைய முயற்சி தோல்வி அடையவே அவள் நாணி அகன்றாள். அருளாகிய பொருளைத் தேடுகிறவர்கள் பொருளையே பொருளாகக் கொண்ட விலைமாதரது இன்ப நலத்தை நாடார் என்பது இம்மன்னன்பால் இனிது விளங்கியது.

[அருளை நாடியவர் பொருளை நாடும் பரத்தையரை விரும்பார்]

---

952. மணிமேகலை கதை

மணிமேகலை என்பவள் மாதவிக்கும் கோவலனுக்கும் பிறந்தவள். சித்திராபதி என்பவள் இவளுக்குப் பாட்டி. கோவலன் கண்ணகியின் காற் சிலம்பை விற்கப் போய், மதுரைமா நகரிற் கொலை உண்டான். அவன் கொலை உண்டதை மாதவி உணர்ந்தாள். இவ்வுலக இன்பத்தைத் துறந்து துறவறத்தை மேற் கொண்டாள்.

மாதவி தன்னுடைய மகள் மணிமேகலையையுந் துறவு நெறியில் நிற்கச் சொன்னாள். தன் மகளுடன் பெரியார்கள் பால் அறவுரை கேட்டாள். மணிமேகலை உலக நிலையாமை செல்வ நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை முதலியவைகளை நன்குணர்ந்தாள். தன் தலையை மொட்டை அடித்துக்கொண்டு துறவியானாள். அரசனுடைய மகனாகிய உதயகுமரன் பாட்டியாகிய சித்திராபதி முதலியோர்மணிமேகலையை உலக வாழ்க்கையிற் புகுத்த வேண்டும் என்று மிக முயன்றனர். அவர்கட் கெல்லாம் இவள் அறிவுரை கூறித் தெளிவுண்டாக்கினாள்.

இருவகைப் பற்றும் அற்றபொழுதே அந்நிலை பிறவித் துன்பத்தை ஒழிக்கும்; இல்லையானால் பிறவித் துன்பம் மாறிமாறி வந்து நிலையாமை காரணப்பெறும் என்னுஞ் செய்தி மணிமேகலையிடம் நன்கு விளங்கியது.

[பற்றற்றபொழுது பிறவித் துன்பம் ஒழியும்] (மணிமேகலை)

---

953. மண் சுமந்த கதை

பாண்டியனுடைய கட்டளைப்படி தண்டஞ்செய்வோர் திருவாதவூரரைப் பலவாறு துன்புறுத்தினர்கள். ஆலவாய் மேவிய அண்ணல் திருவாதவூரருடைய தொல்லையைப் போக்க எண்ணினார். வைகையாற்றில் அளவு கடந்த நீர்ப் பெருக்கு வருமாறு செய்தார். அதனால் மதுரை நகரின் பள்ளமான பகுதிகளி லெல்லாம் நீர் மிகுதியாகப் புகுந்து

விட்டது. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பொருளைக் காப்பாற்றுவதில் கருத்துச் செலுத்தினர். திருவாதவூரரை வருத்திக் கொண்டிருந்தவர்களும் தங்களுடைய பொருளைக் காப்பாற்றிக் கொள்ளுமாறு எண்ணினார்கள். திருவாதவூரரைத் துன்புறுத்துவதை நிறுத்திவிட்டுத் தங்கள் தங்கள் வீட்டை நோக்கி ஓடினார்கள். திருவாதவூரர் திருக்கோயிலை அடைந்து அங்கு இறைவனைப் போற்றி வழிபட்டு ஓரிடத்தே அமர்ந்திருந்தார்.

வைகையில் நீர்ப்பெருக்கு ஏற்பட்டு ஊருட்புகுதலைப் பாண்டியனும் அமைச்சர்களும் அறிந்தார்கள். தாழ்வான கரைகளையெல்லாம் உயர்த்துவதற்கு ஏற்பாடு செய்தார்கள். ஒவ்வொருவரும் இத்தனையடியளவு கரையை உயர்த்த வேண்டுமென்று அளந்து விட்டார்கள். அவரவர்கள் தத்தம் கரையை விரைவாக உயர்த்தினர்.

மதுரையில் பிட்டு வாணிகஞ் செய்யும் பெண்பிள்ளை ஒருத்தி யிருந்தாள். அவளுடைய பெயர் வந்தி. அவளுடைய கரையை அடைப்பதற்கு ஆள் அகப்படவில்லை. மதுரைக் கடவுள் வந்திக்குக் கூலியாளாக வந்தார். கூலியின் பொருட்டு உதிர்ந்து போகும் பிட்டுக்களைத் தருமாறு பேசிக் கொண்டு பிட்டு வாங்கித் தின்றார்; வேலை செய்யச் சென்றார். மண்ணைக் கூடையில் வெட்டித் தலையிற் சுமந்து போய் வேலை செய்யத் தொடங்கிய அவர் ஒழுங்காக வேலை செய்யவில்லை. பலவாறு திருவிளையாடல் செய்தார். கரையைப் பார்த்துக்கொண்டு வந்த அதிகாரிகள் வந்தியின் கரை அடைபடாமலிருப்பதை அரசனுக் கறிவித்தார்கள். அவன் வந்து பார்த்துவிட்டுக் கூலியாளாக வந்த இறைவன் முதுகில் பிரம்பினால் ஓரடி கொடுத்தான். இறைவன் ஒரு கூடை மண்ணைக் கரையில் கொட்டினார்; கரை உயர்ந்து விட்டது; தாமும் உடனே மறைந்து விட்டார்.

"மாணிக்க மாமலித்தேன் மானுமது ரிதச்செஞ்சொல்
மாணிக்க வாசகர்க்கா வைகையின்மண் சுமந்தனையே"

(சீகாளத்திக் கலம்பகம்)

" மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் '
[மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி... .... "
திருவாசகம்

" திருவாத வூரரெம் மாணிக்க
வாசகர் தென்னவன்முன்
வெருவாது காட்டு நரிபரி
யாய்விற்க மீண்டவைதாம்
நரியாக வைகை நதிபெருக்
காய்வரும் நாளிற்சொக்கர்
பரியாது போய் மண் சுமந்ததும்
பாண்டிய மண்டலமே."

[மண் சுமந்தது] (பாண்டி மண்டல சதகம்)

---

954. மண்மாரி பெய்த கதை

காளமேகப் புலவர் திருமலைராயன் பட்டணத்திற்குச் சென்றார். அங்கிருந்த புலவர்கட்கும் காளமேகப்புலவர்க்குஞ் சொற்போர் மூண்டது. சொற்போரில் திருமலைராயன் பட்டினத்துப் புலவர்கள் கேட்ட கேள்விகட் கெல்லாம் காள மேகப் புலவர் சிறிதுந் தயங்காது விடையளித்தார். இதனால் வெற்றி காளமேகப் புலவருக்கு உண்டாகியது. ஆயினும் அரசன் நேர்மையான வழியிலே நின்று நடுமை யான முடிவைக் கூறவில்லை. ஓரவஞ்சமாக நடந்து கொண் டான். காளமேகப் புலவருக்கு மிகுந்த சினம் உண்டா கியது. அவர் உடனே,

" செய்யாத செய்த திருமலைரா யன்வரையில்
அய்யா அரனே அரைநொடியில்—வெய்யதழற்
கண்மாரி யால்மதனைக் கட்டழித்தாற் போற் றீயோர் ;
மண்மாரி யால் அழிய வாட்டு "

"கோளர் இருக்குமூர் கோள்கரவு கற்றவூர்
காளைகளாய் நின்று கதறுமூர்—நாளையே
விண்மாரி யற்று வெளுத்து மிகக்கறுத்து
மண்மாரி பெய்கவிந்த வான்"

என்னுஞ் செய்யுள்களைப் பாடினார். இதனால் திருமலைராயனுடைய பட்டினத்தில் மண்மாரி பெய்தது. அதனால் அப்பட்டினம் அழிந்து ஒழிந்தது.

[மண்மாரி பெய்தது] (காளமேகப் புலவர்)

---

955. மதனன் கதை

மதனன் என்பவன் கட்டியங்காரனுடைய மைத்துனன். இவன் மிகப் பொல்லாதவன். இவனுடைய உள்ளத்தில் அருள் என்பது மருந்துக்குமில்லை. கட்டியங்காரன் சீவகனைப் பிடித்துக் கொன்றுவிடுமாறு இவனை ஏவினான். அவன் இவனுடைய கொலைக்கு அகப்படாமல் அகன்று போனான். இட்டதைச் செய்யுங் கெட்டிக்காரனைக இல்லையே என்று கட்டியங்காரன் இகழ்வானே என்று இவன் அஞ்சினான். பக்கத்தில் இருந்த ஒருவனைக் கொன்று விட்டு மைத்துனனிடம் போய்ச் "சீவகனைக் கொன்றுவிட்டேன்" என்று பொய் சொன்னான். பழகியவன் என்றும் பாராமல் பக்கத்தில் இருந்தவனை இப்படிச் கொலை புரிந்த தன்மையைக் கண்டு அனைவரும் உள்ளம் பதறினர். இவனை எதற்கும் அஞ்சாமல் களித்திருந்தான். அருளற்ற கண்கள் முகத்தில் இருப்பதனால் எத்தகைய பயனும் உண்டாக மாட்டா என்பது இவனிடம் நன்கு விளங்கியது.

[அருளில்லாத கண்களாற் பயனில்லை]

---

956. மதன் கதை

மதன் என்பவன் முன்னாளில் கலிங்க நாட்டிலே மதங்கபுரி என்னும் ஊரிலே வாழ்ந்திருந்தான். இவன் நன்மனம்

அமையப் பெற்றவன் அல்லன். வஞ்சகமும் சூதும் வாதும் பொருந்தியவன்.

இவன் தலையை மொட்டையடித்துக்கொண்டு காதில் குண்டலம் அணிந்தான். கழுத்தில் கண்டிகை பூணூந்தான். உடல் முழுவதும் வெள்ளிய திருநீற்றினை அணிந்தான். கையிற் சிறிய தடி ஒன்றை ஏந்திக்கொண்டு முற்றத்துறந்த முனிவன்போற் காட்சி தந்தான். இவனுடைய உள்ளம் எவரையேனும் ஏய்த்துப் பொருள் கவர வேண்டுமென்று எண்ணியது. அந்நாட்டில் இருந்த அரிபுரம் என்னும் ஊருக்குச் சென்று தனிமையில் ஓரிடத்தில் தங்கினான்.

அவ்வூரிலே தருமதத்தன் என்னும் பெயருடைய செல்வன் ஒருவன் இருந்தான். அவன் பொருளினிடத்திலே அவா உடையவன். அவனைப்பற்றி அறிந்துகொண்ட மதன் அவனுடைய இல்லத்திற்குச் சென்றான். அவன் இவ் வஞ்சகனை உண்மையான துறவி என்று எண்ணினான்; போற்றிப் புகழ்ந்து விருந்து நடத்தினான்.

பொய்க்கோலம் பூண்ட மதன் பொருளினிடத்திலே பற்றற்றவன்போல் நடித்தான். "நான் முற்றத் துறந்த மெய்த்தவன். பொருளினிடத்திலே சிறிதும் பற்றில்லாதவன். உன்னுடைய அன்புடைமைக்காக மகிழ்ந்து, உனக்கு அருள் செய்ய வந்தேன். இரும்பு முதலியவைகளை உயர்ந்த பொன்னைச் செய்யும் திறம் என்பால் உண்டு. உன்னிடம் உள்ள பொருள்களை யெல்லாம் என்னிடங் கொண்டு வருவாயாகின் உன்னுடைய இல்லத்தில் வைப்பதற்கு இடமில்லாதபடி பெருக்கித் தருவேன்" என்று பகட்டுரைகள் பல பகர்ந்தான்.

தருமதத்தன் அம்மாயத் துறவி அறைந்த மாற்றங்களை யெல்லாம் உண்மையென்று நம்பினான். தன்னிடம் இருந்த பொருள் முழுவதையும் அத்தடியனிடம் அளித்தான். அவன் அவைகளைப் பற்றிக்கொண்டு இரவோடிரவாகப் போய்விட்டான். அதன் பின் தருமதத்தன் உண்மை உணர்ந்து வருந்திப் புலம்பினான்.

உள்ளத்தில் பற்றுக்களை உரிமையாக வைத்துக் கொண்டு, துறந்தவர்களைப் போலப் பொய்க்கோலம் பூண்டு

வஞ்சித்து வாழ்கிறவர்களோப்போலக் கொடியவர்கள் இவ் வுலகத்திலே வேறெவரும் இலர் என்பதை அனைவரும் இம் மாயத் துறவியாக வந்த மதன் செயலால் அறிந்துகொண் டனர்.

[பொய்த் துறவிகள் கொடியவர்கள்] (கந்தபுராணம்)

---

957. மதிதயன் கதை

மதிதயன் என்பவன் அறிவுநலம் மிக்க ஓர் அமைச்சன். காஞ்சியில் இருந்து அரசுபுரிந்திருந்த துஷ்ணயிளங் கிள்ளி என்னும் அரசனின் அமைச்சர்களில் ஒருவன். இவன் தன் னுடைய அரசனிடம் அன்புடனும் அடக்கத்துடனும் நடந்து கொண்டான். அரசன் ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்யு மாறு பணித்தால் அரசனுடைய கட்டளைப்படி இட்டதைச் செய்வானே யன்றி, "இஃது எதற்கு? அஃது எதற்கு?" என்று கேள்விகள் கேட்டுக் கொண்டிருக்க மாட்டான். இஃது எதற்காக என்று தானாக ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கவும் மாட்டான்.

மணிமேகலை காலத்தவனாகிய அம்மன்னன் மணி மேகலை காஞ்சிக்கு வருவாள் என்பதைத் தெய்வத் திருவரு ளால் உணர்ந்தான். தெய்வத்தின் கட்டளைப்படி பொய்கை யொன்றும் சோலையொன்றும் தன்னகர் நடுவே செய்து வைக்க எண்ணினான். தன்னுடைய அமைச்சனாகிய மதிதயனைப் பார்த்து, "நம் நகர் நடுவே அழகிய பொழி லொன்றும் தடாகம் ஒன்றும் செய்து வைப்பாயாக" என்று கட்டளையிட்டான். அமைச்சனாகிய இவனும் அரசன் கட்டளைப்படியே செய்து முடித்தான். ஆயினும் "இவை கள் எற்றிற்கு?" என்று அரசனிடம் யாதும் உசாவவில்லை. அரசனும் கூறவில்லை. பிறகு மணிமேகலை காஞ்சிக்கு வந்து அப்பொழிலில் தங்கிய பிறகே இவன் அவைகளின் பயனை உணர்ந்தான். அரசனும் இதற்காகத்தான் என்று இயம்பி னான். அரசர்களைச் சேர்ந்தொழுகுவோர் அவர்கள் வெளிப் படுத்தினால் அன்றி அவர்கள் செய்யுஞ் செயல்களின் தன்

மையை உணர்ந்து கொள்ளுதற்கு முயற்சி செய்தல் கூடாது என்பது இவனிடம் விளங்கியது.

[அரசகாரிய பலன்களை உணர முயலல் ஆகாது]

---

958. மதிவாணன் கதை

மதிவாணன் என்பவன் பாண்டிவள நாட்டில் தஞ்சாக் கூரில் முன்னளில் வாழ்ந்திருந்தான். இவன் அறிவு அழகு சூழ்ச்சித் திறம் முதலிய உயர் நலங்களிலெல்லாம் புகழ் பெற்று விளங்கினன். செல்வ நலத்திற் சிறந்து திகழ்ந்த இவன் கொடை வளத்திலும் புகழ்பெற்று விளங்கினன். இவனுடைய நலத்தினை உணர்ந்த சந்திரதீபன் என்னும் பாண்டிய மன்னன் இவனைத் தனக்கு அமைச்சனாக அமைத்துக்கொண்டான். இவனுடைய அறிவு நலத்தால் சந்திரதீப மன்னனுக்கு நன்மைகள் பல உண்டாயின.

காஞ்சி நகரத்தில் இருந்த பல்லவ மன்னன் ஒருவன் சந்திரதீபனிடத்தில் பகை கொண்டிருந்தான். பெரும்படையோடு புகுந்து போர் செய்யவும் ஏற்பாடு செய்துகொண்டிருந்தான். அப்பல்லவ மன்னனுக்குத் துணைவர்கள் பலர் சேர்ந்திருந்தனர். இச்செய்தியை மதிவாணன் உணர்ந்தான். தான் பல்லவமன்னனுடைய நண்பர்களிடையே புகுந்தான். உள்ளனவும் இல்லனவுமாகிய பலவற்றைக் கூறி அவர்களைப் பிரித்துவிட்டான். நண்பர்கள் பிரிந்து போகவே பல்லவ மன்னன் பாண்டிய மன்னனோடு போரிடும் எண்ணத்தை விட்டுவிட்டான். வேறுசில அரசர்கள் பகை கொண்டிருந்தபோது இவன் அவர்கட்கு இனியன கூறி ஒன்றுபடுத்தினன். பகைவர்களின் துணைவர்களைப் பிரித்தல், பிரிந்தவர்களை ஒன்று படுத்துதல் முதலியவைகளில் வல்லவனே அமைச்சனுவான் எல்பது இவனிடம் நன்கு பெறப்பட்டது.

[பிரித்தலும் பொருத்தலும் வல்லது அமைச்சு]

---

959. மது என்னும் அசுரன் கதை

மது என்பவன் அரக்கர்களில் ஒருவன். நல்ல தவங் களைச் செய்து சிறந்த நலங்களைப் பெற்றிருந்தான். யமுனை யாற்றின் கரையில் இவன் தன்னுடைய பெயரால் நகரம் ஒன்றை அமைத்து அதிலிருந்து அரசு புரிந்து கொண்டிருந் தான். அந் நகர் மிகுந்த அரண் வலியுடையது. எத்தகைய பகைவராலும் அவனுடைய அரணைத் தகர்க்க முடியாது. இராவணனுக்குச் சிறிய தாய் ஒருத்தி இருந்தாள். அவ ளுடைய பெயர் கும்பீநசி. அவள் பேரழகுடையவள். இவன் அவளைக் கைப்பற்ற எண்ணி யிருந்தான். அவளும் இவன்மீது காதல் கொண்டிருந்தாள்.

ஒரு நாள் மது இலங்கையிற் புகுந்து அம் மாதைக் கைப் பற்றித் தனது நகருக்குக் கொண்டு சென்றான். அங்கு அவளை மணம் புரிந்து மகிழ்ந்தான். பிறகு இச்செய்தி இராவணனுக்கு எட்டியது. அவன் மிகுந்த சினங் கொண்டான். படையைத் திரட்டிக் கொண்டு போருக்குப் புறப்பட்டான். மதுபுரத்தை அடைந்தான். மதுபுரத்தின் மதிள் வலிமையைக் கண்டு திகைத்தான்; உள்ளே புக முடியாமல் விழித்தான்; இத்தகைய அரண் வலியுடைய வனை நாம் எவ்வாறு வெல்வது என்று ஏங்கினான். பிறகு அவனை உறவாக்கிக் கொண்டு திரும்பினான். மது சிறந்த அரண்வலி படைத்திருந்தபடியால் அவனை யாதுஞ் செய்ய முடியவில்லை. மிகுந்த வலிமையுடையவர்களுக்கும் அரணானது அதற்கு மேலும் சிறந்த வலிமையாக அமைந்து நலங்களை யெல்லாம் உண்டாக்கும் என்பது இவனிடம் நன்கு பெறப் பட்டது.

[அரண் வலியால் ஆற்றல் மிகும்]

---

960. மதுகைடவர் கதை

மதுகைடவர் என்பவர்கள் அசுரமரபில் தோன்றிய வர்கள். மது என்றும் கைடவன் என்றும் பெயருடைய

இவர்கள் உடன் பிறந்தவர்கள். எப்பொழுதும் ஒன்றுகவே உண்டு உடுத்து உறங்கிக் காலங்கழித்துத் திரிந்தமையால் இவர்கள் ஒன்றுகவே கூறப்பட்டனர். இவர்கள் மிகுந்த பலம் பொருந்தியவர்களாகையால் இவர்களை வெல்லுதல் எவர்க்கும் அருமையாக இருந்தது. இவர்கள் நேர்மையான பண்புடையவர்கள்; வஞ்சகர்களை நஞ்சென வெறுப்பர். வெற்றிச் செருக்கினல் இவர்கள் மிகவும் இறுமாந்திருந்தனர். நாரதர் இவர்களைத் தொலைக்க விரும்பினர். இவர்களிடம் வந்தார். "நீங்கள் மாயவனை வென்றலன்றி உங்களுடைய வெற்றி சிறப்புடையதாகாது" என்று வஞ்சக உரைகள் சிலவற்றை நெஞ்சார மொழிந்தார். மதுகைடவர்கள் அம் மாயவனையும் வெல்ல வேண்டுமென்று முடிவு செய்தார்கள். இவர்களுடைய முடிவைத் திருமால் உணர்ந்தார். இவர்களைத் தொலைக்க அவரும் சூழ்ச்சியை நாடினர். இவர்கள் அவரைப் போருக்கழைத்தார்கள். அவரும் வந்தார். பல நாள் போர் நிகழ்ந்தது. முடிவில் மாயவன் மாயமொன்று செய்தார். அதனல் மதுகைடவர்கள் மயங்கினர்கள். திருமாலைப் பார்த்து, "உனக்கு வேண்டிய சிறப்பைக் கேள் தருகிறோம்" என்று சொன்னர்கள். அவர் இவர்களைப் பார்த்து, "நான் உங்களை வெல்ல வேண்டும்" என்று கூறினர். இவர்களும் "அப்படியே ஆகுக" என்றார்கள். தம்மைக் கொன்று தொலைக்கத் தக்க வகையைத் திருமாலுக்குத் தெரிவித்தார்கள். அவரும் அவ்வாறே கொன்றொழித்தார். சூழ்ச்சியுடையவர்கள் பகைவர்களை எவ்வாறேனும் வெல்வார்கள் என்பது திருமாலிடம் நன்கு விளங்கியது.

[மதுகைடவர்]

---

961. மத்தியந்தன முனிவர் கதை

மத்தியந்தன முனிவர் என்பவர் முனிவர்களில் ஒருவர். இவர் தம்முடைய மனைவியோடு அருந்தவம் புரிந்துகொண்டிருந்தார். உலகத்தார்கட்கும் தமக்கும் நன்மையுண்டாக்கத் தக்க அரிய மகன் ஒருவனைப் பெற வேண்டுமென்பது இவ

ருடைய நோக்கமாக இருந்தது. இவருடைய நோக்கத்திற் கியைய மகன் ஒருவன் தோன்றினன். அம்மகனுக்குச் செய்ய வேண்டிய சடங்குகளை யெல்லாஞ் செய்து வளர்த்தார். அம்மகன் தகுந்த அகவையை அடைந்தவுடன் திருத்தில்லையை அடைந்து தவஞ் செய்யுமாறு பணித்தார். மகனும் அவ்வாறே திருத் தில்லையை அடைந்து திருமூல நாதரை வழிபட்டுப் புலிக்கால் பெற்றுச் சிவ பெருமானுடைய திருக்கூத்தையுந் திருத்தில்லையிற் கண்டார். இவரே புலிக்கால் முனிவர் (வியாக்கிரபாதர்). (கோயிற் புராணம்)

"மத்தி யந்தணன் வரஞ்சொலி விடுப்பத்
தில்லை கண்ட புலிக்கால் முனிவனும்"

[புலிக்கால் முனிவர் தந்தை] (கல்லாடம்—42)

---

962. மயிலன் கதை

பாண்டி வளநாட்டில் மயிலன் என்னும் பெயருடையவன் ஒருவன் முன்னாளில் வாழ்ந்திருந்தான். வணிக மரபினனாகிய அவன் பல வழிகளிலும் முயன்று பெரும் பொருள் சேர்த்தான். அளவு கடந்த பொருளைச் சேர்த்தானாயினும் தானும் தன் குடும்பத்தினரும்கூடத் தக்கவாறு உண்ணவில்லை. எவருக்கும் எதனையும் கடுகளவு கூட ஈயமாட்டான். எச்சிற்கையால் காக்கை விரட்டாத இவனுடைய கடும்பற்றுள்ளத்தைக் கண்டு ஊரார்கள் அனைவரும் மிக வியந்திருந்தனர். ஒரு நாள் நண்பகற்போதில் மயிலன் உண்டுவிட்டு வெளியே வந்தான். அப்பொழுது துறவியொருவர் மிகுந்த பசியோடு திண்ணையிற் படுத்திருந்தார். வீட்டுக்காரன் வெளியே வருவானாயினன். தன் முகத்தைப் பார்த்து இரங்கிச் சிறிது உணவு படைப்பான் என்பது துறவியின் எண்ணம். வீட்டுக்காரனாகிய மயிலனுடைய குணம் அவருக்குத் தெரியாது. வெளியே வந்த மயிலன் துறவியைக் கண்டான். கடுஞ்சினங்கொண்டான். "உடனே எழுந்து வெளியே செல்" என்று அதட்டினன்.

அத்துறவி அம் மயிலனுடைய செல்வம் அழிந்தொழிய வேண்டுமென்று வைதுகொண்டே வெளியே சென்று விட்டார்.

அன்றிரவு கள்ளர்கள் பலர் மயிலனுடைய வீட்டுக்குள் நுழைந்தனர். மயிலனை நன்கு புடைத்தனர். மயிலனுடைய கன்னத்தில் விழுந்த அடிகளால் பற்கள் முழுவதும் உதிர்ந்து போயின. மயிலன் குற்றுயிராகக் கிடந்தான். மறு நாள் மயிலன் வீட்டுக்கு வந்து பார்த்தோர் மயிலனுடைய நிலைமையைக் கண்டு மனம் மகிழ்ந்தனர். கீழ் மக்கள் தங்களுடைய கன்னத்தையுடைக்கும் பொல்லாதவர்கட்குத்தான் எதையும் கொடுப்பரென்பது இம் மயிலனிடம் நன்கு விளங்கியது.

[மயிலன்] (ஈர்ங்கை விதியார் கயவர்)

---

963. மரக்காற் கூத்தாடிய கதை

அவுணர்கள் இவ்வுலகத்திற்குத் துன்பஞ் செய்ய வேண்டுமென்று எண்ணினார்கள். பாம்பு தேள் முதலிய நச்சுப் பூச்சிகளின் உருவத்தை யெடுத்துக்கொண்டு உலக மக்களை வருத்தினர்கள். இறைவி அவுணர்களுடைய தொல்லையைப் போக்கவேண்டுமென்று திருவுளத்தில் எண்ணினாள். மரத்தினாற் செய்த கால்களின் மேல் ஏறிநின்று கொண்டு கூத்தாடி அவுணர்களையெல்லாம் அழித்தொழித்தாள். இவ்வாருடிய கூத்திற்கு மரக்காற் கூத்து என்று பெயருண்டாகியது.

"மரக்கால் ஆடி அரக்கர்க் கொன்ற
கவைத்தலை மணிவேற் பிறைத்தலைக் கன்னி."

[மரக்காற் கூத்து] (கல்லாடம்—42)

---

964. மராமரத்தை அழித்த கதை

சுக்கிரீவன் தனக்கு இராமபிரானைத் துணையாகக் கொண்டான். இராமபிரானுடைய துணைபைக்கொண்டு

தனக்குப் பகைவனுகவிருக்கும் வாலியைக் கொன்று முடித்து விடவேண்டுமென்பது சுக்கிரீவனுடைய எண்ணம். வாலியைக் கொல்லக் கூடிய திறம் இராமபிரானிடம் இருக்கிறதோ இல்லையோவென்று சுக்கிரீவன் ஐயுற்றான். இராமபிரானுடைய ஆற்றலை ஆராய்ந்து பார்க்க எண்ணினான். ஓரிடத்தில் ஏழு மராமரங்கள் நின்றன. அவைகள் மிகப் பெரியனவாகவும் பல ஆண்டுகள் முதிர்ந்தனவாகவும் இருந்தன. சுக்கிரீவன் இராமபிரானைப் பார்த்து, "நீங்கள் இம் மராமரத்தைச் சரய்த்துவிட்டால் என்னுடைய தமையனுகிய வாலியைச் சாய்த்துவிடுவதும் உறுதிதான்" என்று சொன்னான். இராமபிரான் ஒரு கணையைச் செலுத்தி அம்மரங்கள் ஏழிலும் பட்டு ஊடுருவச் செய்தார்.

"பாரமரத்திரள்மங்க."

[மராமரம் அழித்தது] (திருப்புகழ்)

---

965. மருகாந்தாரர் கதை

பரத கண்டத்தின் வட கீழ்த் திக்கில் இருந்த மருகாந்தாரம் என்னுந் தீவில் மருகாந்தரர் என்பவர் வாழ்ந்திருந்தனர். இவர்கள் ஒரே கூட்டத்தினர். இவர்களுடைய தொகை நூறு கோடி என்பர். இவர்கள் கல்வி கேள்வி சிறிதும் இல்லாராய் உண்டு உடுத்திக் களித்து வீணை வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர். இவர் எவருடைய சொல்லையுங் கேளார். எல்லோருக்கும் அல்லலே புரிவர்.

மருகாந்தாரர் இவ்வாறு வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்குங் காலத்தில் இராமபிரான் இலங்கைக்குச் சென்றார். கடலைக் கடக்க எண்ணினார். வருணனை நோக்கி வேண்டினார். அவன் குறித்த காலத்தில் வரவில்லை. இவர் சினங் கொண்டார். தமது வில்லில் ஓர் அம்பைத் தொடுத்தார். வருணன் மேல் செலுத்த எண்ணினார். அவன் அஞ்சி எதிரே வந்து நின்றான். இராமர் சினந்தணிந்தார். தமது கணைக்கு இலக்கு யாது என்று வருணனைக் கேட்டார். அவன் இந்த மருகாந்தாரர் தன்மைகளை எடுத்துக் கூறி,

அவர்கள் இருப்பதும் இறப்பதும் ஒன்றே அவர்கள் மீது செலுத்துக'' என்ருன். இராமபிரானும் அவ்வாறே செலுத்தினர். அவர்கள் அனைவரும் ஒருங்கே மாண்டு தொலைந்தனர். நூற்கேள்வியில்லாமல் வீணுக உணவுகளை உண்டு உடலை ஓம்பித் திரியும் மாக்களை யொத்த மக்கள் இருப்பினும் இறப்பினும் ஒன்றே என்பதை உலகம் இவர்கள்பால் உணர்ந்து கொண்டது.

[அறிவில்லா மக்கள் இருத்தலும் ஒன்றே]

———

966. மருதன் கதை

முன்னளிலே வடநாட்டிலே மருதன் என்னும் பெயருடைய நாவிதன் ஒருவன் இருந்தான். இவன் அரசனுக்கு மயிர் கழிக்கும் தொழிலுடையவன். இவனிடம் பொருள் மிகுதியாக இருந்தது. ஆனலும் மன நிறைவில்லை. மேலும் பொருள் தேடுவதில் நாட்டங்கொண்டிருந்தான். அவ்வாருக ஒருநாள் ஒரு பெருங்காட்டிலே சென்று கொண்டிருந்தான். அப்பொழுது ''அடே நாவிதா! உனக்கு ஏழு குடந் தங்கம் வேண்டுமா?'' என்று ஒரு குரல் எங்கிருந்தோ கேட்டது. நாவிதன் நான்கு பக்கங்களிலும் பார்த்தான். எங்கும் யாருங் கண்ணுக்குத் தென்படவில்லை. மருதன் தன் வழியே நடக்கத் தொடங்கினன். மேலும் அக்குரல் கேட்டது. இப்பொழுது நாவிதன் தயங்கி நின்ருன். ' என்னைப் போன்ற எளியவர்க்குக் உதவி செய்ய வேண்டுமானல் அதைப் பற்றிக் கேட்க வேண்டுமா?'' என்று மறுமொழி கூறினன்.

''நீ வீட்டிற்குப் போ. ஏழு குடந் தங்கமும் வீட்டில் இருக்கும்' என்று மேலும் செய்தி உண்டாயிற்று. மருதன் வீட்டிற்குப் போய்ப் பார்த்தான் ஏழு குடந் தங்கம் வந்திருந்தன. ஆறு குடம் நிறைவாக இருந்தன. ஒரு குடம் மட்டும் குறைவாக இருந்தது. குறைவாகவுள்ளதை நிறைவாக்கி வைத்துவிட வேண்டுமென்று மருதன் முடிவு செய்தான். தன்னிடமிருந்த பொருள்களை யெல்லாந் தங்கமாக மாற்றிக் குடைய மகனவியாக இருந்தாள். இவள் சிறந்த

குடத்திலிட்டான். இப்பொழுதும் குறைவு நிறைவாகவில்லை. மேலும் பொருள் தேடிக் குறை குடத்தை நிறைக்கும் செயலில் ஈடுபட்டான். மயிர் கழிக்கும் வேலையில்லாச் சமயங்களில் ஐயமும் எடுத்தான். அரசனிடம் கூலியை மிகுதியாகவும் பெற்றான். எல்லாவற்றையுந் தங்கமாக மாற்றிக் குடத்திலிட்டுங் குடம் நிரம்பவில்லை. ஆயினும் மருதன் மனந் தளரவில்லை. குடத்தை நிரப்புவதற்காக ஒழிவு நேரங்களில் ஐயமெடுத்துக் கொண்டு திரியும்பொழுது அரசன் மருதனைக் கண்டான். "ஏ மருதா! உனக்கு முன்னரை விட இப்பொழுது அதிகக் கூலி கொடுத்தும் போதாமல் பிச்சை எடுத்துக்கொண்டு திரிகிறாயே காரணம் என்ன? ஒருகால் காட்டிலுள்ள அந்த ஏழு குடந் தங்கத்தையும் வாங்கிக் கொண்டாயா என்ன?" என்று கேட்டான். இதனைக் கேட்ட நாவிதன் தங்கக்குடச் செய்தி அரசர்க்கு எப்படித் தெரிந்தது என்று தனக்குத் தானே எண்ணமிட்டுக் கொண்டு நின்றான். அரசன் நாவிதனுடைய செய்தியை அறிந்து கொண்டு, "நீ அத்தங்கக் குடத்தை வாங்கிக் கொண்டாய் என்றே தெரிகிறது. நீ தேடித்தேடி அக்குடத்தில் போடலாமே தவிர அதிலிருந்து சிறிதும் எடுத்துச் செலவு செய்ய முடியாது. வீணைக் கெட்டுப் போகாதே" என்று கூறிவிட்டுச் சென்று விட்டான்.

நாவிதன் காட்டுக்குச் சென்று முன் பொருள் பெற்ற இடத்தில் நின்றுகொண்டு, "எனக்கு அந்தப் பொருள் வேண்டாம் கொடுத்த நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டுத் தனது இல்லத்திற்குத் திரும்பினான். இவன் வருந்தித் தேடியிட்ட தங்கத்தோடு எல்லாத் தங்கமும் போய்விட்டன. பொருளில் பேரவாக் கொண்டு தேடுவோன் அதனால் பயனடைய மாட்டான். உள்ளதையும் இழக்க நேரிடும் என்பதை இவன் உலகிற்கு உணர்த்தினான்.

[பொருளவா துன்பத்தைக் கொடுக்கும்]

---

967. மருதி கதை

மருதி என்பவள் காவிரிப்பூம் பட்டினத்திலே முன்னாள் வாழ்ந்த தருமசீலன் என்னும் ஓர் அந்தணனு

அழகு அமையப் பெற்றவள். கற்புடைமையிலுஞ் சிறந்து விளங்கினுள். ஆடல் பாடல்களில் விருப்பம் உடையவள். இவள் ஒரு நாள் காவிரியில் நீராடி விட்டுத் தன்னுடைய இல்லத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள். அப்பொழுது காமந்தன் என்னும் பெயருடையவன் ஒருவன் இவளைக் கண்டு காமம் கொண்டான். இவளைத் தீச் செய்கைக்கு அழைத்தான். இதனைக் கண்டு மருதி பெருந் துயர் கொண்டாள். நான் கணவனை அன்றிப் பிறரைக் கருதியவள் அல்லேன். என்னை இப்பொல்லாதவன் இவ்வாறு அழைத்தானே என்று கரை கடந்த துன்பம் அடைந்தாள். இனி இவ்வுலகில் வாழேன் என்று உறுதி கொண்டாள்.

அந்நாளில் அந்நகரில் பூதசதுக்கம் என்னும் பலிபீடம் ஒன்று தெருவில் அமைந்திருந்தது. அப்பலிபீடம் குற்றஞ் செய்தவர்களைத் தன்பால் இழுத்து ஒறுக்குந் தன்மையுடையது. மருதி அங்குச் சென்று தன்னைக் கொலை புரியுமாறு வேண்டி நின்றாள். பூதசதுக்கப் பலிபீடம் அவளைக் கொலை புரியவில்லை. உன்னிடம் பெருங் குற்றமொன்றுமில்லை. உன் பால் ஆடல் பாடல்களை விழைந்த சிறு குற்றங்கள் தாம் அமைந்துள்ளன. ஆகவே, நான் உன்னைக் கொல்ல மாட்டேன் என்று கூறி அனுப்பி விட்டது. பழிக்கு அஞ்சுபவர்கள் தினையளவு குற்றம் தம்மிடம் உண்டானாலும் அதனைப் பனையளவாகக் கொண்டு அஞ்சுவார்கள் என்பது இவளிடம் நன்கு விளங்கியது.

[பழி நாணுவர் பண்பு]

---

968. மருதிடையே தவழ்ந்த கதை

நளகூபரன், மணிக்கிரீவன் என்னும் இருவரும் குபேரனுடைய மக்கள். இருவரும் ஒரு நாள் நன்றாக மதுவினை அருந்தினர். பிறகு ஒரு தடாகத்தில் இறங்கி நீராடல் செய்தனர். பிறகு ஆடை இல்லாமல் கரையிலேறி நின்றனர். அப்பொழுது அவ்வழியே நாரதர் வந்தார். ஆடையின்றி நின்ற அவர்களிருவரும் நாரதரைக் கண்ட பிறகுகூட ஆடையை எடுத்து அணிந்து கொள்ள முயலாமல் மரம்போல் நின்று கொண்

டிருந்தனர். அவர்களைக் கண்டவுடன் நாரதருக்கு மிகுந்த சினம் உண்டாகியது, "மரம்போல நிற்கும் நீங்கள் மரங்களாகக் கடவீர்கள்" என்று வசவுரை வழங்கினர். வசவுரையை மாற்றுமாறு இருவரும் வேண்டிக் கொண்டனர். "ஆயர்பாடியில் கண்ணன் இல்லத்தின் முன்பு நீங்கள் மரமாக நில்லுங்கள். கண்ணன் உரலோடு வந்து உங்களைக் கீழே சாய்க்கும்பொழுது நீங்கள் பழைய உருவத்தைப் பெறுவீர்கள்" என்று கூறினர். இருவரும் அவ்வாறே கண்ண பிரான் வளர்ந்த மாளிகை வாசலில் இரண்டு மருத மரங்களாகி நின்றனர். ஒருநாள் அசோதை கண்ணபிரானை உரலோடு சேர்த்துக் கட்டி வைத்தாள். அவ்வாறு கட்டியது குழந்தையாகிய கண்ணன் எங்குஞ் சென்று சுற்றுமல் இருக்கும் பொருட்டுத்தான். ஆனால் கண்ணன் உரலையுஞ் சேர்த்து இழுத்துக் கொண்டு இரு மருத மரத்தின் இடையே சென்றார். உரல் மருத மரத்தில் சிக்கி இழுபட மருத மரங்கள் உடனே நிலத்தில் சாய்ந்தன. அவ்வளவில் குபேரன் மக்கள் சாபந் தீர்ந்து பழைய உருவைப் பெற்றனர்.

"மருதிடை தவழ்ந்து நின்ற"

(திருப்புகழ்)

[மருதிடை தவழ்ந்தது]

---

969. மருத்துவனைப் பாடிய கதை

நமச்சிவாயப் புலவர் என்பவர் மதுரைமா நகரில் தங்கியிருந்தார். அப்பொழுது அவருக்குக் கடுமையான நோய் ஒன்று வந்து பற்றியது. பலவகையான மருத்துவங்களைச் செய்து பார்த்தார். யாதும் பலனேற்படவில்லை. அவ்வூரிலே சொக்கலிங்கம் என்னும் பெயருடைய மருத்துவன் ஒருவன் இருந்தான். அவனுடைய தந்தையின் பெயர் வீரபத்திரன். இறுதியில் சொக்கலிங்கனிடம் புலவர் மருத்துவஞ் செய்வித்துக் கொண்டார். மிகு விரைவில் நோய் குணமாகி விட்டது. அதனால் மிகுந்த மகிழ்ச்சி அடைந்த புலவர்,

"மிக்கமது ரைச்சிவனும் வீரபத்தி ரன்சுதனும்
சொக்கர் இருவரெனத் தோன்றினர்—அக்கோன்
பிறவாமற் காப்பான் பிறந்தாரை மண்மேல்
இறவாமற் காப்பான் இவன்"

என்று பாடினர். தன்னைக் கடவுளோடு ஒப்பிட்டுச் சரிசமமாகப் பாடியிருத்தலை யுணர்ந்த மருத்துவன் மிகுந்த மகிழ்ச்சியடைந்தான்.

[மருத்துவன்] (நமச்சிவாயப் புலவர்)

---

970. மருளசங்கர தேவர் கதை

மருளசங்கர தேவர் என்னும் பெயருடையவர் ஒருவர் முன்னாளில் இருந்தார். இவர் சிறந்த மெய்ஞ்ஞானச் செல்வர். அருளுடைமையையே இவர் விழுமிய அறமாகக் கொண்டிருந்தார். ஓர் அறிவு உடைய உயிர்க்கும் இவர் ஊறு செய்யத் துணியாது உணவுண்டலுக்குப் புதிய வழி ஒன்றைக் கண்டுபிடித்தார். அஃதாவது வசவதேவரீ என்னும் அருட் பெரியாரது இல்லத்தை அடைந்து அங்குண்ணும் அடியார்களுடைய எச்சில் இலை எறியும் இடத்தில் அமர்ந்து இலையில் எஞ்சியிருத்தலை உண்ணுதலேயாம்.

எவ்வுயிர்க்கும் ஊறு ஏற்படுத்தல் கூடாது என்னும் அருட் பெருக்கால் இவ்வாறு இவர் உள்ளார் என்பதை எவரும் உணர்ந்து கொள்ளாமல் இவர் ஒரு பித்தர் என்று எல்லோரும் எண்ணினர்.

இவருடைய பெருமையை எல்லார்க்கும் புலப்படுத்த எண்ணிய அல்லம தேவர் இவரைப் பார்ப்பதற்கு வந்தார். இதன் பிறகே இவருடைய சிறப்பை எல்லோரும் உணர்ந்து பாராட்டலாயினர்.

நல்வழி என்று சொல்லப்படுவது யாதென்றால் யாதோர் உயிரையுங் கொல்லாமையாகிய பண்பினை மேற் கொள்ளும் வழியேயாம் என்பதை எல்லோரும் இவர்பால் நன்குணர்ந்தனர்.

[கொல்லாமையே நல்வழி] (பிரபுலிங்க லீலை)

---

971. மலைகளின் சிறகரிந்த கதை

முன் காலத்திலே மலைகளெல்லாம் சிறகுடையனவாக இருந்தன. அவை ஓரிடத்தில் அமைதியாக இராமல் விண்ணிலே பறந்து பெரிய நகரங்களின் மேலே போய் அமர்ந்து அந்நகரங்களையும் அதிலுள்ள உயிர்த் தொகைகளையும் அடியோடு ஒழித்துத் தொல்லை விளைவித்துக்கொண்டிருந்தன. இதனால் கணக்கற்ற நகரங்கள் தரை மட்டமானதோடு அதிலிருந்து மக்களும் மாண்டொழிந்தார்கள். இச்செயல் இந்திரனுக்கு மிகுந்த சினத்தை உண்டாக்கியது. இம்மலைகளை இவ்வாறே விட்டுவிட்டால் உலகம் முழுவதும் தொலைந்து போகும். இவைகளின் செருக்கை அடக்க வேண்டுமென்று முடிவு செய்தான். பெரிய வாட்படையை எடுத்துக் கொண்டு மலைகளின் சிறகுகளையெல்லாம் வெட்டி விட்டான். அதன் பிறகு மலைகள் எங்கும் பறக்க முடியாமல் ஓரிடத்திலேயே கிடக்கலாயின.

"சஞ்சரித்து நின்ற சைலங் களெல்லாம்
வெஞ்சினத்தால் இந்திரன்முன் வெட்டுதலால்--"
(ஆத்திச்சூடி வெண்பா)

"தேவர் கோமான் சிறையரி புண்ணினுக்கு
ஆற்றாது பெருமுழை வாய்விட்டுக் கலுழ்ந்தென."
(கல்லாடம்—29)

[மலைகளைச் சிறகரிந்தது]

---

972. மலையைக் குடையாகப் பிடித்த கதை

ஆயர்பாடியில் ஒரு காலத்திலே மழை பெய்யவில்லை. ஆயர்கள் இந்திரனை மழையின் பொருட்டு வேண்டிக் கொண்டு அவனுக்குப் பூசை போட்டார்கள். கண்ணபிரான் இந்திரனுக்குப் பூசை நடவாதவாறு தடுத்தார். அதனால் இந்திரனுக்கு மிகுந்த சினம் உண்டாகியது. அவன் முகில்களையெல்லாம் அனுப்பிக் கண்ணபிரானால் மேய்க்கப்பெறும் ஆன் கூட்டங்களின் மீது கல் மழை பொழியச் செய்தான்.

ஆயர்கள் ஆன் கூட்டங்களுக்கு அல்லல் நேர்ந்ததே என்று உள்ளந் தவித்தார்கள். கண்ணபிரான் கல் மழையை ஒரு பொருளாக மதிக்க வில்லை. கோவர்த்தனம் என்னும் ஒரு பெரிய மலையைத் தூக்கிக் குடையாகப் பிடித்தார். கல் மழை அம்மலை மீது விழுந்து கல்லோடு கல்லாயின. இதனால் ஆன் கூட்டங்களுக்கு நேர்ந்த அல்லல் நீங்கியது. கண்ணபிரானுடைய பெருமையை ஆயர்கள் பாராட்டி மகிழ்ந்தார்கள். (பாகவதம்)

[மலையைக் குடையாகப் பிடித்தது]

---

973. மல்லர்களை வென்ற கதை

கண்ணனைக் கொல்லப் பல வகையாக முயற்சி செய்ய கம்சன் ஒரு நாள் கண்ணனையும் பலராமனையும் தன்னுடைய பேரவைக்கு வரவழைத்தான். இருவரும் அவைக்குச் செல்லுகையில் அவர்களோடு மற்போர் செய்து கொன்றொழிக்குமாறு சாணூரன் முட்டிகன் முதலிய மல் வீரர்களைக் கம்சன் ஏற்பாடு செய்திருந்தான். அம்மல்லர்கள் கண்ணனையும் பலராமனையும் எதிர்த்துப் போரிட்டார்கள். கண்ணனும் பலராமனும் தங்களை வந்து எதிர்த்த மற்போர் வீரர்கள் அனைவரையும் கொன்று தீர்த்துவிட்டுக் கம்சனுடைய அவைக்குச் சென்றார்கள்.

கண்ணன் பாரதப் போரின் பொழுது பாண்டவர்களுக்குத் தூது சென்றான். விதுரன் மனையில் தங்கியிருந்தான். அச் சமயத்தில் துரியோதனன் கண்ணனைக் கொல்ல எண்ணினான். நிலவறை ஏற்படுத்தி அதன்மீது இருக்கை அமைத்தான். நிலவறைக்குள் மற்போர் வீரர்களை நிறுத்தி வைத்தான். கண்ணன் உள்ளே விழுந்ததும் போரிட்டுக் கொன்று விடுமாறு அவ்வீரர்களுக்குக் கற்பித்திருந்தான். துரியோதனனுடைய வஞ்சனையை அறிந்த கண்ணன் நிலவறைக்குள் இருந்த மல் வீரர்களைக் கொன்றுவிட்டுச் சென்றான். (பாகவதம்)

[மல்லர்களை வென்றது]

---

974. மனுச் சோழன் கதை

மனுநீதி முறைப்படி அரசாட்சி செய்தபடியால் மனுச் சோழன் என்று பெயர் பெற்ற இவன் திருவாரூரில் இருந்து அரசாட்சி புரிந்து கொண்டிருந்தான். இறைவனும் இயமனும் இவனுடைய ஆட்சியின் சிறப்பை உலக மக்களுக்கு உணர்த்த எண்ணினர். இறைவன் பசுவானூர். இயமன் கன்று ஆனன். இருவரும் திருவாரூர்த் தெருவை அடைந்தனர். அப்பொழுது மன்னன் மகன் தேரில் ஏறித் தெருவில் வந்தான். இயமனாகிய கன்று துள்ளிச் சென்று இளவரசனுடைய தேராழியில் சிக்கி மாண்டது. இறைவனாகிய பசு அரண்மனைக்குச் சென்று ஆராய்ச்சி மணியை அடித்தது. அரசன் உற்றதை உணர்ந்தான், உள்ளந் துடித்தான். அப் பசுவைப் போலவே தானும் துன்புற வேண்டுமென்று முடிவு செய்தான். கொலைக்குக் கொலை என்பது அரசனுடைய முடிவு. தன் மகனைத் தேர்க் காலில் மாய்க்குமாறு அமைச்சனுக்குக் கட்டளை யிட்டான். அவன் அதைச் செய்ய நாணித் தன்னுடைய உயிரையே போக்கிக் கொண்டனன். பிறகு அரசன் தானே தன்னுடைய மகனைத் தேர்க்காலில் கிடத்திக் கொன்றான். தெய்வத் திருவருளால் ஆன் கன்று பிழைத்தெழுந்தது; அரசிளங் கன்றும் உயிர்த் தெழுந்தது. தேவர்களும் இவனுடைய அறநெறி முறையைப் பாராட்டினர். ஆட்சி முறையைச் சீரிய நெறியில் செலுத்தும் அரசன் அவ்வரிய ஆட்சி முறையினாலேயே காப்பாற்றப் பெறுவான் என்பது இவனிடம் பெறப்பட்டது.

"வேந்து மகற் றேர்க்கால் விடவஞ்சி மந்திரிதான்
சோர்ந்துதன தாவிவிட்டான் சோமேசா—
ஆய்ந்துணர்ந்தோர்
தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை."

[கொல்லாமை] (சோமேசர் முதுமொழி வெண்பா)

975. மழவரங்கன் கதை

மழவரங்கன் என்பவன் தொண்டை வள நாட்டில் வங்கபுரி என்னும் ஊரில் முன்னாளில் வாழ்ந்திருந்தான். பள்ளி வகுப்பைச் சேர்ந்த இவன் பயிர்த் தொழில் முதலியவைகளால் மிகுந்த பொருள் திரட்டி இருந்தான். நாளடைவில் செல்வச் சிறப்பு மிகுதியாகியது. அதனால் பெயர் அதிவீர மழவரங்கபூபன் என்று நீண்டு நின்றது. ஆனால், உளப் பண்பு செம்மை பெறவில்லை. கல்வி அறிவில்லாதபடியினால் மடமை மிகுந்த காரியங்களையே நாளுஞ் செய்து கொண்டு திரிந்தான்; இவனுடைய உண்மைத் தன்மையை உணராத சில அறிஞர்கள் இவன் மீது பாடல்கள் இயற்றிக்கொண்டு சென்றனர். பாட்டின் பொருளை அறிந்துணரத் தக்க அறிவு வாய்க்கப் பெறுத இவன் அவர்களை யெல்லாம் இகழ்ந்து விரட்டினன். செல்வச் சிறப்பு மிகுதிப்பட மிகுதிப்பட இவன் பொல்லாத காரியங்களையே மிகுதியாகப் புரிந்து வந்தான். எத்தகைய சிறந்த அறிஞர்களையும் இவன் ஒரு பொருட்படுத்துவதில்லை. நெருங்கிச் சென்றால் இகழ்ந்து விரட்டுவான். ஒருநாள் பெரும் புலவர் ஒருவர் இவனிடம் சென்றார். இவன் அவரையும் இகழ்ந்து விரட்டினன். சினங் கொண்ட அவர் இவன் மீது வசை பாடிச் சென்றார். அவ்வசைப் பாடலைப் பெற்ற பின் இவன் அழிந்து தொழிந்தான். செல்வம் அறிவற்றவர்களின் கைக்குச் சென்றால் அஃது அவர்களைத் தீய வழியிற் செலுத்தி விடும் என்பதற்கு இவன் தக்க எடுத்துக் காட்டாக அமைந்தான்.

"கள்ளிக்கேன் முள்வேலி கழுதைக்கேன்
கடிவாளங் கறுப்பில் லாத
உள்ளிக்கேன் பரிமளங்கள் உவர்நிலத்துக்
கேன்விதைகள் ஒடித்துப் போடும்
சுள்ளிக்கேன் கோடாரி துடைப்பத்திற்
கேன்கவசம் சும்மா போகும்
பள்ளிக்கேன் அதிவீர மழவரங்க
பூபனெனும் பட்டந் தானே."

(தனிப் பாடல்)

[செல்வம் அறிவற்றவர்களைத் தீயவழியிற் செலுத்தும்)

976. மனைவியை இழந்த மறையவன் கதை

முன்னாளில் பாண்டி வள நாட்டில் திருப்புத்தூர் என்னும் ஊரில் தேவசன்மா என்னும் பெயருடைய மறையவன் ஒருவன் இருந்தான். அவன் மதுரையில் திருமணஞ் செய்திருந்தான். தன் மாமனைக் காண விரும்பி மனைவியோடுங் குழந்தையோடும் மதுரையை நோக்கிப் புறப்பட்டான்.

வழியில் ஓர் ஆலமரத்தடியில் இருவரையும் இருக்கச் செய்துவிட்டுத் தான் நீர் கொண்டு வருவதற்குப் புறப்பட்டான். வெகு நாழிகைக்கு முன் ஆலமரத்தில் வேடன் ஒருவனால் எய்யப்பட்ட அம்பு ஒன்று கிளையில் தொங்கிக் கொண்டிருந்தது. அஃது இப்பொழுது காற்றினால் அசைப்புண்டு பார்ப்பனியின் மீது விழுந்தது. விழவே அவள் இறந்தாள். தண்ணீர் கொண்டு வந்த அந்தணன் வருந்தினான். அங்கிருந்த வேடன் ஒருவனே அவளைக் கொன்றிருக்க வேண்டும் என்று அவனைப் பாண்டியன் முன் பிடித்துக்கொண்டு சென்றான்.

மன்னன் மிக முயன்று உண்மையை நாடியதில் வாணாள் முடிந்தது அவளுடைய சாவுக்குக் காரணம் என்று விளங்கியது. உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு கூட்டிற்கும் பறவைக்கும் உள்ள தொடர்பைப் போன்றதாம் என்பதை அன்று அனைவரும் அறிந்தனர்.

[பழியஞ்சியது] (திருவிளையாடல்)

---

977. மாகதர் கதை

மாகதர் என்பவர் வசிட்டருடைய வழி முறையில் தோன்றியவர். சீரிய ஒழுக்கம் உடைய இவர் மேருவின் தென்பாற் சென்று ஐம்புலன்களையும் ஒடுக்கி அருந்தவம் புரிந்து கொண்டிருந்தார். மெய்யறிவு மிகுதிப் படவே வீடு பேறெய்தற்குரியராய் விளங்கி யிருந்தார்.

இவர்பால் அசுரக் கன்னிகை ஒருத்தி வந்தாள். இவரைத் தழுவிச் சிறந்த மகனைப் பெறுமாறு அசுர குருவாகிய

சுக்கிராச்சாரியாரே அவளை இவர்பால் அனுப்பி யிருந்தார். தவம் புரிந்து கொண்டிருந்த இவர் தம்முடைய தவத்தை விட்டார். அவளிடங் கழிபெருங் காதல்கொண்டார். அவளைத் தழுவி மகிழ்ந்தார். கயமுகன் என்னும் கொடிய அசுரன் அவள்பால் தோன்றினான்.

மாகதருக்கு அறிவு தோன்றியது. தமது தவம் அவம் ஆனதை அறிந்தார். அவளை அகன்று வேறோர் இடத்தை அடைந்து மேலும் அருந் தவத்தைத் தொடர்ந்தார். ஒருவன் அவாவிற்கு அஞ்சி வாழ்வதே அறமாகும்; ஏன் எனின் ஒரு வகைச் சோர்வு கண்டு கெடுத்து வஞ்சிப்பது அவாவே யாகும் என்னும் மறைமொழிக்கு இவரே இலக்கானார்.

[வஞ்சிப்பது அவாவே]

---

978. மாகந்தன் கதை

மாகந்தன் என்பவன் ஓர் அந்தணன். இவன் ஏறக் குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் இவ்வுல கில் வாழ்ந்திருந்தான். இவன் இருந்த நாடு மகத நாடு என்பர். மாகந்தனுடைய தந்தை மகத நாட்டு மன்ன னுக்கு நண்பனாக இருந்தா னாகையால் நல்ல செல்வம் இவனு டைய தந்தையின்பால் அமைந்திருந்தது. தந்தை செல்வ னாகத் திகழவே மைந்தன் சோம்பேறியாகத் திகழ்ந்தான். எத்தகைய வேலையும் அற்றவனாய் உண்பதும் உடுப்பதும் ஊர் சுற்றுவதும் வேலையாக இருந்தான். இந்நிலையில் தந்தை இவ்வுலகத்தை விட்டு அகன்றார்.

தந்தை இறந்தும் மைந்தன் தன்னுடைய சோம்பேறித் தனத்தை விடவில்லை. நின்று தின்று அழித்தால் குன்றும் குறையுமன்றே? வெகு விரைவில் செல்வம் தொலைந்தது. இவன் மிகுந்த வறுமைக்குள்ளானான். சோம்பேறியி னுடைய மடியில் மூதேவி யிருப்பாள் என்பது இவனிடம் உண்மையாகியது.

[மிடியை மடி தரும்]

---

979. மாடலன் கதை

மாடலன் என்பவன் சோழவள நாட்டிலே காவிரிப்பூம் பட்டினத்தை அடுத்த தலைச்செங்கானம் என்னும் ஊரிலே அந்தண குலத்திலே தோன்றியவன். சிறந்த நல்லொழுக்கம் உடையவன். கோவலனுக்கு நண்பன். எப்பொழுதும் இவன் ஊர் ஊராகச் சுற்றிக்கொண்டிருந்தான். இதனால் இவனுக்கு எல்லா இடத்துச் செய்திகளும் நன்கு தெரிந்திருந்தன.

கோவலன் மதுரையில் வெட்டுண்டிறந்த சில நாட்களுக்குப் பின் மதுரைக்கு எங்கிருந்தோ வந்து சேர்ந்தான். அங்குக் கோவலன் கொலையுண்டிறந்த செய்தியை அறிந்தான். விரைந்து காவிரிப்பூம்பட்டினத்திற்குச் சென்றான். மதுரையில் கோவலனுக்கு நிகழ்ந்ததைக் கேட்டவர்களுடைய கதி கலங்குமாறு கூறினான். இவன் சிறிதும் நாவடக்கம் இல்லாமல் அஞ்சத் தக்கவாறு கூறிய கடுமொழியைக் கேட்டவுடன் கோவலனுடைய பெற்றோரும் உறவினரும் திடுக்குற்றுக் குலை நடுக்கம் கொண்டு மாண்டு தொலைந்தனர். சொல்லுகிற சொல் உண்மையானதாக இருந்தாலும் அதனால் பிறருக்குத் தீங்கு நேருமாயின் அச்சொல் பொய்ச் சொற்களாக முடிந்து தீப்பலனைக் கொடுத்துவிடும். செய்தியைக் கேட்டுச் சிலர் மாண்டபடியால் மாடலனுக்குக் கொலைத் தீவினை உண்டாகியது. அவன் தான் செய்த நல்வினையின் பயன்களை இழந்து போனான். ஒருவன் செய்யும் ஒரு காரியத்திலேனும் தீய பலன் உண்டாகுமாயின் அவன் செய்த நல்வினைகள் எல்லாவற்றின் பயனையும் இழந்து தீவினையை அடையுமாறு நேரிடும் என்பது இம்மாடலனது செய்தியால் எல்லோருக்கும் நன்கு விளங்கியது. இவன் பிறகு தான் தேடிக் கொண்ட தீவினையைப் போக்கிக் கொள்ளுதற்குக் கங்கையாடச் சென்றான்.

(சிலப்பதிகாரம்)

[தீவினை உண்டானால் நல்வினை கெடும்]

———

980. மாணிக்கவாசகர் கதை

இவர் திருவாதவூரடிகள் என்றுஞ் சொல்லப் பெறுவார். ''திருவாசகம்'' என்னும் அரிய திருத் தமிழ் மறையை இயற்றிய மெய்ஞ்ஞானச் செல்வர் இவர்தாம். இவர் முதலில் மதுரையம்பதியில் அரிமர்த்தன பாண்டியனிடத்தில் அமைச்சராக இருந்து அரசியலே நடத்தி வந்தார். அப் பொழுது பாண்டியன் இவருடைய சொல் வழியே ஒழுகி இவருக்கு நலம் பல செய்திருந்தான். பிறகு இறைவனே குருவாக வந்து மாணிக்கவாசகரை ஆட்கொண்டு அருள் விளையாடல்கள் பல நடத்தினர். நரியைப் பரியாகச் செய்தார். பரியை நரியாகச் செய்தார்.

இறைவனுடைய மாயையை அறியாத மன்னன் மாணிக்கவாசகரிடம் கடுஞ் சினங்கொண்டான். பலவாறு ஒறுத்து வருத்தினன். பிறகு உண்மையை உணர்ந்தான். மாணிக்கவாசகருடைய மலரடியில் விழுந்து வணங்கினன். தான் செய்த குற்றங்களை யெல்லாம் பொறுத்தருள வேண்டுமென்று வேண்டிக் கொண்டான்.

மாணிக்கவாசகர் அரசன் தமக்கு முன்பு செய்த நன்மைகளை யெல்லாம் உளங்கொண்டு அவன் செய்த தீமைகளை அப்பொழுதே மறந்து விட்டார். நன்மையை மறப்பது நல்லதன்று. நன்மை அல்லாதவைகளை அப்பொழுதே மறந்து விடுவதுதான் நல்லது என்பது மாணிக்கவாசகரிடத்தில் அன்று நன்குக விளங்கியது.

[நன்றி மறப்பது நன்றன்று] (திருவாதவூரடிகள் புராணம்)

---

981. மாதங்கன் கதை

வங்க நாட்டிலே சகளாபுரி என்னும் ஊரிலே முன்னாளில் மாதங்கன் என்னும் பெயருடைய நாவிதன் ஒருவன் இருந்தான். இவனிடம் பேரவாவும் வீண் பெருமையுங் குடிகொண்டிருந்தன. தற்புகழ்ச்சி செய்து கொள்வதில் இவ

னுக்கு இணையாக அந்நாளில் எவரும் இலர். பொருளை அடைதலுக்குப் பொல்லாத வழிகள் எல்லாவற்றிலும் துணிந்து புகுந்து விடுவான். மயிர் கழிக்குந் தொழிலில் வல்லவனுகிய இவன் தன் தொழிலால் மிகு பொருள் சேர்த் திருந்தான். ஆயினும் மன நிறைவு உண்டாக வில்லை. மேலும் பொருள் தேட நாட்டங் கொண்டிருந்தான். அவ்வா ருக அந்நாளில் ஒருவன் துறவிகள் மூவரைக் கொன்றால் அவர்கள் உடல் பொன்னுக மாறும் என்று கனாக் கண்டான். அக்கனவின்படியே மொட்டைத் தலையாக இருந்த துறவிகள் மூவரைக் கொன்றான். பெரும் பொருள் கிடைத்தது. இச் செய்தியை மாதங்கன் அறிந்தான். மொட்டைத் தலைத் துற விகளைக் கொன்றால் அவர்களுடைய உடல் பொன்னுக மாறும் போலும் என்று முடிவு செய்து கொண்டான். மொட்டைத் தலைத் துறவிகளைத் தேடித் திரிந்தான். ஒரிடத்தில் மூவ ரிருக்கக் கண்டான். வலிய தடி ஒன்றினால் தலையில் அடித் தான். மூவருந் துடித்து உயிர் விட்டனர். இக்கொடுஞ் செயலை ஊர்க் காவலர் கண்டனர். நாவிதனைப் பற்றிப் போய்ச் சிறையில் அடைத்தனர். பிறகு குற்ற உசாவல் புரிந்து கழு வில் ஏற்றினர். அறிவற்றவன் ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கினால் அதனைக் கெடுப்பதோடு தானும் விலங்கிட்டுக் கொள்வான் என்பதை உலகம் இவன்பாற் கண்டது.

(பஞ்ச தந்திரம்)

[அறிவில்லாதவன் காரியத்தைக் கெடுத்துத் தொல்லைக்குள்ளாவான்]

---

982. மாதலவூறன் கதை

நான்முகன் படைத்தல் தொழிலை நடத்திக்கொண்டிருந் தான். விசுவகன்மனது கண்ணில் தோன்றிய மாதலவூறன் என்பவன் நான்முகனைச் சிறிதும் மதியாமல் தானும் படைப்புத் தொழிலைச் செய்யத் தொடங்கினான். நான்முகன் அம்மாதலவூ றன் தன்னிடம் வரும்படி எண்ணினான். அவனும் வந்தான். நான்முகன் அவன் மீது கடுஞ்சினங்கொண்டான். "நீ சிறிய தவறை உண்டு செய்யும் சிலந்தியாகுக" என்று கொடிய வசவுரை வழங்கினான். மாதலவூறன் தன்னுடைய குற்றத் தைப் பொறுக்கவேண்டுமென்று நான்முகனைப் பெரிதுத்

வேண்டிக் கொண்டான். நான்முகன் மாதலவூறனைப் பார்த்து, "நீ நிலவுலகில் சிலந்தியாகித் தென் கயிலாயப் பெருமானை வழிபட்டு நற்கதியை அடைவாயாக" என்று அருள் புரிந்தான். மாதலவூறன் அவ்வாறே சிலந்தியாகி வழிபாடு செய்து நற்கதியை அடைந்தான். சிலந்தியாகி வழிபாடு செய்தது திருக்காளத்தியிலும் திருவானைக்காவிலும் என்பர்.

[சிலந்தியாகியது]

---

983. மாண்டவனைப் பிழைப்பித்த கதை

திருநாவுக்கரசு நாயனார் அப்பூதியடிகளாரின் இல்லத்திற்கு எழுந்தருளினார். அப்பூதியடிகளாரின் மகிழ்ச்சி அளவற்றதாகியது. அவர் அப்பருக்கு விருந்து நடத்தத் தொடங்கினார். சமையல் முடிந்தது. தம் மக்களில் ஒருவனை வாழையிலை அறுத்து வருமாறு தோட்டத்திற்கு அனுப்பினார். அவன் சென்று வாழையிலையை அறுத்தான். வாழையின் மேல் இருந்த பாம்பு அவனைக் கடித்து விட்டது. அவன் விரைவாக ஓடி வந்து இலையைக் கொடுத்து நிகழ்ந்ததைக் கூறிக் கீழே விழுந்து இறந்தான். அப்பூதியடிகள் பிணத்தை ஒரு மூலையில் மறைத்துவிட்டு அப்பருக்கு விருந்தைத் தொடங்கினார். இலை போட்டு உணவு படைக்கப்பட்டது. திருநீறளிக்கும்போது, "பெரிய பையன் எங்கே கூப்பிடுங்கள் திருநீறளிக்க வேண்டும்" என்றார் அப்பர். இதனைக் கேட்ட அப்பூதியடிகள் விழித்தார். பிறகு உண்மையைக் கூறினார். இதனைக் கேட்டார் அப்பர். "மிக நல்ல வேலை செய்தீர்" என்று கூறித் தேவாரம் பாடியருளினார். அவ்வளவில் மூலையில் மூடப்பட்டுக் கிடந்தவன் உறங்கி விழித்தவனைப்போல் எழுந்து வந்து அப்பரை வணங்கித் திருநீறு பெற்றான்.

".....நச்சு குலை
உடைவாழை மேலுர கந்தீண்ட மாய்ந்த ஒருவனுயிர்
அடைவான் அருள்புரி யுந்திரு நாவுக் கரசினையே"

(நால்வர் நான்மணி மாலை)

"அப்பூதி யந்துறந்த ஆருயிரைத் திங்களூர்
அப்பூதி மைந்தற் களித்தோனும்"

[உயிர் பிழைத்தது]

(திருவாரூர் உலா)

---

984. மாண்டவியர் கதை

மாண்டவியர் என்பவர் மாதவர்களில் ஒருவர். மறையவர் குலத்தில் தோன்றியவர். இளமைப் பருவத்தில் பிற உயிர்களுக்குத் தீமை செய்தலையே தம்முடைய தொழிலாகக் கொண்டிருந்தார். மீன் தவளை வண்டு தும்பி ஓணன் முதலியவைகளைப் பிடித்துக் கூரிய முட்களை அவைகளின் உடலிற் குத்தி அவைகள் துடிப்பதை இவர் வேடிக்கை பார்ப்பார். பிறகு பல கலைகளைக் கற்றுச் சிறந்த விரதவொழுக்கம் உடையவராய் உயர்ந்தார். துறவற நெறியிற் புகுந்து மாதவஞ் செய்தலையே தொழிலாகக் கொண்டார்.

காட்டில் தனியிடமொன்றில் தங்கித் தவம் புரிந்து கொண்டிருந்தார். அந்நாளில் சாளுவ நாட்டு மன்னன் மாளிகையிற் கள்ளர்கள் பலர் புகுந்து கொள்ளையடித்தார்கள். பிறகு அப்பொருளைக் காட்டில் மாண்டவியர் தவஞ்செய்து கொண்டிருந்த இடத்திற்கு அண்மையில் வைத்துப் பங்கு பிரித்தார்கள்.

அரசனுடைய ஆட்கள் அடிச்சுவடு பற்றிக் கள்ளர்களைத் தேடிக்கொண்டு அவர்கள் பங்கு பிரித்துக் கொண்டிருந்த இடத்தை நெருங்கினர்கள். கள்ளர்கள் பொருளைப் போட்டு விட்டுச் சிட்டாய்ப் பறந்து மறைந்து போனர்கள். அரசனுடைய ஆட்கள் பொருள்களைக் கண்டதோடு மாண்டவியரையுங் கண்டார்கள். இவன் கள்ளர்களில் ஒருவன் நம்மிடம் இருந்து தப்புவதற்கு இவ்வாறு நடிக்கிறான் என்று எண்ணினர்கள். பிடித்துக்கொண்டு போய் அரசனிடம் விட்டு, ‘‘இவன்தான் கள்ளர்கட்குத் தலைவன்; துறவிபோல் நடிக்கிறான். யாதும் உரையாட மாட்டான் சும்மா விட்டு விடின் நாளை நம் அரண்மனையையே பெயர்த்துக்கொண்டு போய் விடுவான்’’ என்று அரசன் நம்புமாறு கூறினர்கள். அரசன் உண்மையென்று நம்பினன். முனிவர் மோன விரதராயிருந்தமையால் யாதுங்கூறவில்லை. காவலன் கழுவிலேற்றுமாறு கட்டளையிட்டான். அவ்வாறே கழுவிலேற்றினர்கள்; கதறித் துடித்தார் மாண்டவியர்.

குற்றமற்ற மாண்டவியரைக் கழுவிலேற்றக் காரணம் யாது என்று தேவர்கள் சிலர் காலனை வினவினர். இளம்

பருவத்தில் இவர் சிற்றுயிர்கட்குச் செய்த தீமையை அவன் தேவர்கட்குக் கூறினன். முனிவரும் மெய்யுணர்வால் உண்மையை உணர்ந்து கொண்டார்.

துன்பங்களெல்லாம் துன்பஞ் செய்தவர்களுக்கே உண்டாகும். ஆகவே துன்பம் இல்லாமல் வாழ்தலே விரும்புகிறவர்கள் பிறருக்குத் துன்பஞ் செய்ய மாட்டார்கள். விதிப் பயனை எத்தகையோரும் நுகராமல் தப்ப முடியாது. இது மாண்டவியர்பால் நன்கு பெறப்பட்டது.

[துன்பங்களெல்லாம் துன்பஞ் செய்தவர்களுக்கே]

---

985. மாந்தாதா கதை

மாந்தாதா என்பவன் கதிரவன் குலத்தில் தோன்றிய ஒரு வேந்தன். இவன் தன்னுடைய தந்தையின் உடலின் வலது பாகத்தைப் பிரிக்கொண்டு பிறந்தான் என்பர். இவன் பருவம் எய்தியபின் அரசாட்சியை மேற்கொண்டிருந்தான். அறிவும், ஆற்றலும் பொறுமையும் இவனிடத்தில் நன்கு அமைந்திருந்தன.

இவன் வேள்விகள் பலவற்றைச் செய்து சிறந்து விளங்கினன். இவனுடைய பொறுமையைச் சிலர் ஆராய்ந்து பார்க்க விரும்பினர்கள். பலவாருக இவனை இகழ்ந்துரைத்தார்கள். இவனே அவர்களுடைய பழிப்புரையை ஒரு சிறிதும் பொருட்படுத்த வில்லை. அவைகளெல்லாம் புகழ்ச்சியுரைகளே என்று எண்ணி உள்ளங் களித்திருந்தான். இவனுடைய பொறுமையைக் கண்டோர் இவனைப் பெரிதும் புகழ்ந்து பாராட்டினர்கள்.

உணவினை உண்ணுமல் தவஞ் செய்து கொண்டிருப்பவர்கள், பிறர் கூறும் இழிவுரைகளைப் பொறுத்துக்கொண்டிருக்கும் நல்லறிவாளர்களுக்குப் பிறகுதான் பெரியவர்களாவார்கள் என்று பெரியோர்கள் கூறியதின் உண்மை இவனிடத்தே நன்கு விளங்கியது.

[பிறர் இழிவுரையைப் பொறுப்போர் பெரியோர்]

---

986. மாபாதகந் தீர்த்த கதை

குலோத்துங்க பாண்டியன் என்பவன் மதுரையில் அர சாட்சி செய்துகொண்டிருக்கும்பொழுது அவந்தி நகரத்தில் அந்தணன் ஒருவன் இருந்தான். அவனுக்கு ஒரு மகன் பிறந்தான். அவன் வளர்ந்து பெரியவனானதும் கொடியவ னாக இருந்தான். தன் தாயைக் கலந்து ஒழுகினான். தந்தையைக் கொன்றான். தாயை அழைத்துக்கொண்டு வீட்டில் இருந்த பொருள்களையும் எடுத்துக்கொண்டு காட்டு வழியாக வேற்றூருக்குச் சென்றான். வழியில் கள்வர்கள் இக்கொடியவனை மடக்கிப் பொருளையும் பார்ப்பனியையும் கவர்ந்து சென்றனர். தந்தையைக் கொன்ற பெரும் பழி பேயுருவாக வந்து தீவினையாளனாகிய அந்தணனைப் பலவாறு வருத்தியது. அவன் பலவிடங்களிலும் அலைந்து திரிந்தான். பழிப்பேயும் அவனைத் தொடர்ந்து வருத்திக்கொண்டே யிருந்தது. பார்ப்பான் எப்பிறவியிலோ செய்த ஒரு சிறு நல் வினையினால் மதுரையை அடைந்தான். அங்குச் சோம சுந்தரக்கடவுள் இக் கொடிய பார்ப்பானுடைய தீவினையைப் போக்கியருளினார். பார்ப்பான் தெய்வத் தன்மை பெற்று வீடு பேற்றையடைந்தான்.

[மாபாதகந் தீர்ந்தது] (திருவிளையாடல்).

---

987. மாமனைக் கொன்ற கதை

கம்சன் என்பவன் கண்ணனுடைய தாயாகிய தேவகிக்கு அண்ணன். கண்ணனால் தனக்குச் சாவுநேரும் என்பதனை உணர்ந்த கம்சன் கண்ணனை எவ்வண்ணமேனும் கொன் றொழிக்கவேண்டுமென்று பலவாறு முயன்றான். ஒருநாள் வில்விழா என்னும் ஒரு காரணத்தை ஏற்படுத்திக் கண்ணனை மதுரைக்கு வரவழைத்தான். கம்சனைக் கொன்றொழிக்க எண்ணிய கண்ணன் கம்சனுடைய அரியணைமீது விரைவாக எழும்பிக் குதித்தான். மன்னனுடைய முடி கழன்று படியில் விழுமாறு அவனுடைய தலைமயிரைப் பற்றியிழுத்து

நிலத்தில் தள்ளினன். அவன்மீது தான் விழுந்து அவனைக் கொன்றெழித்தான.

"வன்கஞ்சன் என்னும்
சினமா மனைக்கொன்றுர் சேர்பு."

[மாமனைக் கொன்றது] (பாகவதம்)

---

988. மாயப் பசுவை வதைத்த கதை

சமணர்கள் தீயவேள்வி செய்து அசுரனை உண்டாக்கி அவன் பாம்பு வடிவாக மதுரைக்கு வந்தபொழுது அனந்த குணபாண்டியன் அப்பாம்பைக் கொன்றதைக் கண்ட சமணர்கள் பிறகு மாயப் பசு ஒன்றை உண்டாக்கி அதனை மதுரை மீது அனுப்பினர்கள். அனந்த குணபாண்டியன் சோமசுந்தரக் கடவுளை வேண்டிக் கொண்டான். கடவுள் தம்முடைய காளையூர்தியை நோக்கி, "நீ போய் அப்பசுவை வென்று வருவாயாக" என்று கட்டளை யிட்டார். காளை மிகுந்த சினத்தோடு ஆரவாரஞ் செய்து கொண்டு மாயப் பசுவை நெருங்கித் தன்னுடைய பேரழகை அதற்குக் காட்டியது. காளைமீது மாயப்பசு காதல் கொண்டது. உயிரோடு தன்னுடைய வீரியத்தையும் விட்டுவிட்டு மாண்டுபோயிற்று.

[மாயப்பசு]

(திருவிளையாடல்)

---

989. மாயவன் ஆழி பெற்ற கதை

சிவபிரான் சலந்தரனைக் கொல்லும்பொருட்டு ஆழி யொன்றைநிலத்திற் கீறி உண்டாக்கினர். அவ்வாழி சலந் தரனைக் கொன்றெழித்தது. பெருமை பொருந்திய அவ்வாழி யைத் திருமால் தாம்பெற விரும்பினர். ஆயிரந்தாமரை மலர்களைக்கொண்டு நாடோறும் வழிபட்டு வந்தார்.

சிவபிரான் திருமாலுடைய மெய்யன்பை ஆராய்ந்துபார்க்க எண்ணினர். ஒரு நாள் ஒரு மலரை மறைத்துக்கொண்டார். திருமால் வழிபாடு செய்யும் சமயத்தில் ஒரு மலர் குறைவதைக் கண்டார். கண்ணனது மலருக்கு ஒப்பாகும் என்று முடிவு செய்தார். ஒரு கண்ணையகழ்ந்து மலருக்குப் பதிலாக அணிந்தார். சிவபிரான் திருமாலுடைய மெய்யன்புக்கு மகிழ்ந்தார். சலந்தரனைக் கொன்ற ஆழியைத் திருமாலுக்கு வழங்கினர். திருமாலும் அவ்வாழியைப் பெற்று மகிழ்ந்தார்.

"சலமுடைய சலந்தரன்தன் உடல்தடிந்தநல்லாழி
நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடி
நலமுடைய நாரணன்தன் நயனமிடந் தரனடிக்கீழ்
அலராக இடவாழி அருளினன் காண்சாழலோ."

[ஆழிபெற்றது] (திருவாசகம்)

---

990. மாயா சனகன் கதை

இலங்கையில் மருத்துவன் என்னும் பெயரையுடைய அரக்கன் ஒருவன் இராவணன் காலத்தில் இருந்தான். இவன் மாயங்கள் செய்வதில் வல்லவன். இராவணன் சீதையை வசப்படுத்துதற்கு எவ்வளவோ சூழ்ச்சிகள் செய்து பார்த்தும் முடியவில்லை. இவனைச் சனகன்போல் கோலந் தாங்கி வந்து சீதையிடம் கெஞ்சுமாறு ஏற்பாடு செய்தான்.

இராவணன் சீதையிடம் வந்து கெஞ்சிக் கொண்டிருக்கும்போது சனகனைப்போல் கோலந் தாங்கி இந்த மாயாசனகனும் அங்கு வந்தான். சீதை அவனைக் கண்டதும் தன்னுடைய தந்தை என்றே முற்றிலும் நம்பிவிட்டாள். தன்னைத் தன்னுடைய தந்தைக்கும் தொல்லை வந்ததே என்று வருந்தினாள்.

வந்தவன் சீதைக்கு அறிவுரை கூறத் தொடங்கினான். இராவணனுடைய வேண்டுகோளுக்கு இணங்குமாறு கெஞ்சினான். இவன் இவ்வாறு கெஞ்சவே இவனுடைய பேச்சில் இருந்து இவன் தன்னுடைய தந்தை அல்லன்

என்று சீதை தெரிந்து கொண்டாள். தன்னுடைய தந்தை நிந்தையான அறிவுரையைக் கூருன் என்பது சீதைக்குத் தெரியும். ஒருவன் நன்மை யில்லாதவன் என்பதை அவன் பயனற்ற சொற்களைப் பலவாறு பேசுவதிலிருந்தே அறிந்து கொள்ளலாம் என்பது அன்று இந்த மாயா சனகனிடத்தில் நன்கு விளங்கியது.

[தீயவன் என்பதை உரையினுல் அறிந்து கொள்ளலாம்]

(இராமாயணம்

---

991. மாயீகன் கதை

திருக்கழுக்குன்றத்தைச் சேர்ந்த காட்டில் மார்க்கண் டேய முனிவர் தவஞ் செய்து கொண்டிருந்தார். அக்காட் டிலே மாயீகன் என்னும் பெயரையுடைய அரக்கன் ஒருவன் இருந்தான். அவன் தான் கொல்ல விரும்பிய விலங்கைப் போல் வடிவமெடுத்துக் கொண்டு அவ்விலங்கோடு சென்று அதனைக் கொன்று தின்னும் வழக்கமுடையன். அவன் ஒரு நாள் பன்றி வடிவமெடுத்துக் கொண்டு பன்றி ஒன்றைக் கொன்று தின்பதற்கு முயன்றான். அப்பொழுது அவனைக் கண்ட மார்க்கண்டேயர் அவன் என்றும் பன்றியாகவே திரி யுமாறு வசவுரை வழங்கினர். பிறகு அவன் முனிவரைப் பணிந்து தன் வசவுரைக்கு நீக்கங் கூறியருளுமாறு வேண்டிக் கொண்டான். "வேட்டையாடுதற் பொருட்டு வரும் சுரகுரு என்னும் சோழனுடைய அம்பால் இவ்வடிவம் தொலைந்து பழைய வடிவம் பெறுவாய்" என்று வசவுரைக்கு நீக்கம் கூறி யருளினர். மாயீகனும் அவ்வாறே பன்றி வடிவொழித்துப் பழைய வடிவம் பெற்றான்.

"மன்னு மொருமுனி வன்சவித்த மாயீகன்
என்னு மொருநிருத ஏனத்தைச்—சென்னிகுலம்
தந்த சுரகுருத் தானை யுடன்வேட்டை."

[மாயீகன்]

(திருக்கழுக்குன்றத்து உலா)

---

992. மாயை கனவில் அணைந்த கதை

திருக்கயிலையிற் சிவபெருமான் உமாதேவியோடு வீற்றிருந்தார். அப்போது உமாதேவி சிவபெருமானைப் பார்த்து, "உயிர்களெல்லாம் பிறப்பு இறப்புக்களில் சுழலாது வீடு பேற்றை அடையுமோ? அல்லது அவைகளிற் சுழலுமோ?" என்று உசாவினள். சிவபெருமான் உமாதேவியைப் பார்த்து, "மயக்க உணர்ச்சி உள்ள வரையில் நான்முகன் திருமால் முதலிய தேவர்கள்கூட வீட்டையடைய மாட்டார்கள். சுஞ்ஞானி என்பவனும் நிராங்காரன் என்பவனும் அளவற்ற தவத்தைச் செய்தார்கள். அதனல் யாம் எமது உண்மை வடிவத்தோடு, "அல்லமன் என்னும் பெயரையுடைய மைந்தனுக அவர்களிடம் பிறந்தோம். அவ்வல்ல மனைக் காண்பது உனக்கும் அரிய செயலாகும்" என்று கூறியருளினர்.

இதனைக் கேட்ட உமாதேவியானவள், "எனக்கும் அருமையான செயல் ஒன்று உள்ளதோ? யான் அவனைக் காண்பேன்" என்று சூளுரை மொழிந்தாள். தன்னுடைய தமோகுண வடிவமாகிய மாயையை அழைத்து, "நீ மண்ணுலகத்திற்குப் போய் அல்லமனைக் கண்டு வருவாயாக" என்று சொல்லியனுப்பினள்.

உமாதேவியால் அனுப்பப்பட்ட மாயை விளவல நாட்டில் வனவசை நகரத்தில் மமகாரன் என்பவனுக்கும் மோகினி என்பவளுக்கும் மகளாகப் பிறந்தாள். பருவமடைந்து சிவபெருமானைப் பூசித்துக் கொண்டிருந்தாள். ஒரு நாள் அல்லமன் மத்தளம் அடிப்பவனைப் போலக் கோலம் பூண்டு வந்து மத்தளமடித்தான். மத்தள முழக்கத்தைக் கேட்டு மாயை மயங்கினள். அவனை நேரில் அழைத்துப் பார்த்தாள். அவனுடைய அழகு மாயையின் உள்ளத்தை வருத்தியது. அவனைத் தழுவ விழைந்தாள். தன்னுடைய எண்ணத்தைத் தோழியர்க் குரைத்தாள். அவர்கள் அவனை அழைத்து வந்து மாயையிடஞ் சேர்த்தார்கள். மாயை அவனைத் தழுவுதற்கு மிக முயன்றாள். அல்லமனே மாயையினுடைய கைக்கு அகப்படவில்லை. உருவெளித் தோற்றமாகவே காணப்பட்டான். மாயை உறங்கும் பொழுது அவனைத் தழுவியதாகக்

கனவு கண்டு மகிழ்ந்தாள். மறுநாள் அச்செய்தியைத் தோழி யரிடம் உரைத்தாள்.

(பிரபுலிங்க லீலை)

"அல்லமணி மாயை கனவில் அணைந்ததனுல்
சொல்லரிய இன்பமுற்ருள் சோமேசா—நல்ல
நனவினுற் கண்டதூஉ மாங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே இனிது."

[கனவு நிலை] (சோமேசர் முதுமொழி வெண்பா)

---

993. மாரிதத்தன் கதை

மாரிதத்தன் என்பவன் மகத நாட்டிலே இராசமாபுரம் என்னும் நகரிலே அரசு புரிந்து கொண்டிருந்தான். நல்ல வனே யாயினுங் கூரிய அறிவில்லாதவன். யார் எது கூறி னுலும் அதணை அப்படியே நம்பி விடுவான். இவன் ஒரு நாள் அழகிய பொழில் ஒன்றுக்குச் சென்ருன். தென்னங் குரும்பை ஒன்று இவன் தலைமேல் வீழ்ந்தது. அதனுல் வருந்தினுன்.

அப்பொழுது அறிவிலிகள் சிலர் அவனிடம் வந்து, "அரசே! இஃது இப்பொழிலில் எழுந்தருளிய தேவியின் ஏவல். ஆகவே, அவள் மகிழுமாறு ஆடு பன்றி கோழி முத லியவைகளைக் கொன்று அவளுக்குப் பலியிட்டால் அவள் மகிழ்வாள். இனிமேல் இத்தகைய தொல்லைகள் ஏற் படாது" என்று இயம்பினர்.

அரசன் அவர்கள் பேச்சை நம்பினுன். அப்படியே பலி யிட்டுப் பூசைகள் போட்டான். அப்பொழுது அபயருசி என்னும் பெயருடைய அருந்தவர் ஒருவர் அவ்வழியே சென் ருர். அவரையுங் கொண்டு வந்து நரபலி யிட்டால் தேவி மகிழ்வாள் என்று எண்ணினுன். சண்டகருமன் என்னும் பெயருடையான் ஒருவனை அனுப்பி அம்முனிவரைப் பிடித்துக் கொண்டு வரச் செய்தான். அவரைத் தேவியின் முன்னே நிறுத்தி வாளினை உருவினுன்.

அப்பெரியவர் அஞ்சி நடுங்கி விடவில்லை. கலகல வென்று நகைத்தார். வெட்டச் சென்ற வேந்தன் வியப் படைந்து அவர் முன்னே வந்தான். "ஏன் நகைத்தீர்?" என்று கேட்டான். அம்முனிவர், "இளமைப் பருவத்தில் உன்னுடைய கையில் வைத்திருந்த தேங்காய் ஒன்றை வேடிக்கையாக ஒருவன் தலை மீது வீசினாய். அவ்வினைப் பயனால் இன்று உன் தலையின் மீது தேங்காய் விழுந்தது. அதற்காக இன்று பல உயிர்களைக் கொலை புரிந்தாய். இக் கொலையின் பயனாய் இன்னும் பல தலைமுறைக்கு நீ கொடிய தொல்லைகளை நுகரப் போகிறாய். உன் தலை மீது தேங்காய் விழுந்ததனால் உண்டான நோவினை நீ உணர்ந்தும் பிற உயிர்களுக்கு நோவினைச் செய்தாயே. இஃது எத்துணை அறியாமை உடையது? இதனை யான் எண்ணினேன். அது னால்தான் நகைப்பு உண்டாகியது" என்று மறுமொழி கூறி னார். அரசன் அஞ்சி நடுங்கினான். அவருடைய அடிமலரில் வீழ்ந்தான். அன்றே துறவை மேற்கொண்டான்.

தன்னுயிர்க்குத் துன்பமானவை இவை என்று உணர்ந்த தவன், மற்ற உயிர்களுக்கு அத்துன்பத்தைச் செய்தல் என்ன காரணத்தாலோ என்று பெரியோர்கள் இயம்பியதை ஒவ் வொருவரும் ஆராய்ந்து நடக்க வேண்டும்.

[துன்பத்தை அறிந்தும் பிறவுயிர்கட்குச் செய்தல் கூடாது]

(யசோதர காவியம்)

---

994. மாரீசன் கதை

மாரீசன் என்பவன் தாடகைக்கு மைந்தன். இவனு டைய தந்தையின் பெயர் சுநந்தன். இவன் முனிவர்கட்குத் தொல்லை செய்தலையே தன்னுடைய நல்ல வேலையாகக் கொண்டிருந்தான். விசுவாமித்திரருடைய வேள்வியைக் காக்கச் சென்ற இராமபிரான் கணை ஒன்றினால் இவனைக் கடலிடை வீழ்த்தினார்.

இராமபிரானது கணை அப்பொழுது தாக்கி வருத்தியதே யன்றி, இவனைக் கொல்லவில்லை. பிறகு இவன் நல்லவனை

அமைந்து ஓரிடத்தில் தவஞ் செய்துகொண்டிருந்தான். இராவணன் இவனுக்கு உறவினன். இராவணன் சீதையைக் கவர எண்ணியபோது இவனுடைய உதவியை நாடினான். முதலில் இவன் முடியாது என்று மறுத்தான். பிறகு உடன் பட்டான். மாயங்கள் செய்வதில் வல்லவனுகையால் பொன் மானுக வடிவங் கொண்டு சீதையின் முன் போனுன். அம்மானேக் கண்டு சீதை அவாக் கொண்டாள். பிடித்துத் தருமாறு இராமனே வேண்டினுள்.

இராமன் மானேத் தொடர்ந்து வெகு தொலே சென்ருர். இராவணன் சீதையைக் கவர்ந்து சென்ருன். மாயத்தை அறிந்த இராமபிரான் கணே ஒன்றை ஏவி அம்மானேக் கொன்று வீழ்த்தினர்.

ஒருவன் தான் தன்னையே விரும்பி நன்மையுடன் உலகில் வாழ எண்ணினுல் எத்தகைய தீய காரியங்களேயும் பிறரிடத்தில் செய்யக்கூடாது. அப்படிச் செய்யத் தொடங்கினுல் மாரீசனேப்போல மாண்டொழிய நேரிடும்.

[நல்வாழ்வை நாடியவன் தீய காரியங்களேச் செய்தல் கூடாது]

(இராமாயணம்)

---

995. மாருதி இலக்கணம் படித்த கதை

அனுமான் தான் கற்க வேண்டிய கலேகளே யெல்லாம் நன்கு கற்ருன். இலக்கணம் மட்டும் கற்கப்படாமல் எஞ்சி நின்றது. அதனே எவரிடம் ஓதி உணரலாம் என்று எண்ணினன். "கதிரவன் இலக்கண நூலில் மிகுந்த புலமை உடையவன். அவனிடம் சென்ருல் இலக்கணத்தை நன்கு ஓதி உணரலாம்" என்று சிலர் கூறினர். அதுமான் கதிரவனேக் கண்டு தன்னுடைய விருப்பத்தைத் தெரியப்படுத்தினுன். கதிரவன் அதுமானேப் பார்த்து, 'நானே ஓரிடத்தில் நிலேயாக இராமல் எல்லா உலகங்களேயும் அறுபது நாழிகை நேரத்தில் சுற்றிக்கொண்டு வருபவனுக இருக்கிறேன். என்னுடைய தேரின் விரைந்த போக்கோடு உன்னுல் வரமுடியுமா? அவ்வாறு வரக்கூடிய ஆற்றலிருந்தால்

உனக்கு இலக்கணத்தைக் கற்பிக்கிறேன். உடன் வந்து கற்றுக் கொள்ளலாம்'' என்று கூறினான். கதிரவன் சொல்லியதற்கு உடன்பட்ட அநுமான் கதிரவனுடைய தேரோடு சில காலந் திரிந்து இலக்கணத்தை நன்கு கற்றுக் கொண்டான். பிறகு தானே பலருக்கும் இலக்கணத்தைப் போதிப்பவனாக மிகுந்த புகழோடு விளங்கி யிருந்தான்.

'' மல்லல் வியாகரணம் மாருதிகற் கக்கருதி
எல்லவன் பின் சென்றான் இரங்கேசா—நல்ல
ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்
கெழுமையும் ஏமாப் புடைத்து.

[கல்வி] (இரங்கேச வெண்பா)

---

996. மார்க்கண்டர் கதை

முன்னாளில் கடகம் என்னும் நகரத்தில் மிருகண்டு என்னும் பெயருடைய முனிவர் ஒருவர் இருந்தார். அவருடைய மனைவின் பெயர் மருத்துவதி இருவரும் நீண்ட காலம் இல்லறத்தை இனிது நடத்தியும் மக்கட்பேறு உண்டாகவில்லை. மக்கட் பேற்றை விரும்பிய முனிவர் இறைவனை நோக்கிக் கடினமான தவத்தை நீண்ட நாள் புரிந்தார்.

இறுதியில் இறைவன் தோன்றி '' அன்பனே ! நூறாண்டு வாழ்ந்திருக்கத் தக்க ஓர் அறிவற்ற தீய மைந்தன் உனக்கு வேண்டுமா? அல்லது நல்லறிவாளனாக நல்லொழுக்க முடையவனாய்ப் பதினாறாண்டுகளே உலகில் வாழ்ந்திருக்கக் கூடிய ஒரு சிறந்த புதல்வன் வேண்டுமா? உன்னுடைய எண்ணத்தை உரைப்பாயாக '' என்று கேட்டார். மிருகண்டு சிறிது நேரம் எண்ணமிட்டார். பிறகு இறைவனைப்பார்த்து, '' வாணாள் அதிகம் உள்ள அறிவற்ற தீயபிள்ளை வேண்டாம்'' வாணாள் அதிகமில்லாவிடினும் அறிவுள்ள நல்ல பிள்ளையே எனக்கு வேண்டும் '' என்று கூறினார்.

இறைவன், ''அகவை பதினாறுள்ள ஒரு நல்லபிள்ளையை உனக்குத் தந்தோம் '' என்று கூறி மறைந்தருளினார். மார்க்கண்டர் என்னும் பெயருடைய மைந்தர் பிறகு தோன்

றினர். தமக்கு அகவை பதினறே என்று உணர்ந்தார். இறைவனைப் போற்றி வழிபட்டார். இறைவர் மார்க்கண்டருக்கு அகவை என்றும் பதினறுக அருள்புரிந்தார். உயிரைக் கவர்தற்கெய்திய நமனையும் உதைத்து வீழ்த்தினர். இதனால் மார்க்கண்டர் நீண்ட வாணாளைப் பெற்று நெடிது வாழ்ந்திருந்தார். இறைவனுடைய திருவடிகளைப் போற்றி வழிபட்டவர்கள் இவ்வுலகிலே நீண்டகாலம் சிறந்து வாழ்வார்கள் என்னும் உண்மையை உலகம் இவர்பால் நன்கு உணர்ந்துகொண்டது.

" அருமறைமார்க் கண்டர் நித்தந் திருக்கடவூர்
வேணியனை அன்பாய்ப் பற்றி
வருசமன்றன் பகையடக்கித் தீர்க்காயு
ளாய்ப்புவியில் வளரா நின்றார்
தருவைநிகர் தென்னேம நகரில்வளர்
செயங்கொண்டார் தமிழ்சேர் நாட்டில்
பெருமரத்தைச் சுற்றிநின்ற வல்லியுஞ்சா
காதெனவே பேசுவாரே

[கடவுளைப்போற்றினோர் நெடிது வாழ்வார்]

(செயங்கொண்டார் சதகம்)

---

997. மாலவன் மிகுதியை மாற்றிய கதை

திருமால் இந்திரன் முதலிய தேவர்கள் ஒரு வேள்வியைச் செய்ய எண்ணினர்கள். இடையே இவ்வேள்வியை இயற்றி முடிப்பவர்களே தலைவர் என்று தம்முள் உறுதி செய்து கொண்டார்கள். நிலவுலகில் குருக்சேத்திரம் என்னுமிடத்தில் வேள்வியைத் தொடங்கினர்கள். தேவர்கள் சிறிது காலத்தில் தளர்ச்சியடைந்து நின்றுவிட்டார்கள். திருமால் சிறிதும் தளர்ச்சியடையாமல் ஆயிரம் ஆண்டுகள் வேள்வியைச் செய்து நிறைவேற்றினர். அதனால் தாமே தலைவர் என்னுஞ் செருக்கு அவருக்குண்டாகியது. சிவபிரானுடைய கட்டளையால் வேள்வித்தீயின்

இருந்து ஐசுவரம் என்னும் பெயரையுடைய வில் ஒன்று தோன்றிற்று. திருமால் களிப்பின் மிகுதியினுல் அவ் வில்லினைக் கைப்பற்றினர். அதனை வலத்து அம்புகளைத் தொடுத்துக்கொண்டு தேவர்களைத் துரத்தினர். தேவர்கள் அஞ்சியோடித் திருவாரூரை அடைந்தார்கள். துரத்திக் கொண்டு வந்த திருமால் தம்முடைய ஆற்றலுஞ் செருக்குங் குறையப் பெற்றார். அவருக்கு மயக்கநிலை உண்டாகியது. அவ்வில்லையூன்றிக்கொண்டு அதன் தலையின்மேல் தமது தலையைச் சாய்த்துக்கொண்டு துயில்வாரானர். அப்பொழுது தேவர்கள் பிருகச்பதியின் மகனுடைய கட்டளைப்படி அவ்வில்லுக்குக் கீழே ஒரு புற்றையுண்டாக்கினர்கள். தாம் கறையான் வடிவங்கொண்டு அப்புற்றின் வழியாகச்சென்று மேற்கூறிய வில்லினது நாணின் அடியை அரித்தார்கள். அதனுல் வில் நிமிர மாயோன் தலை அறுப்புண்டது. அப் புற்றில் இருந்து சிவபெருமான் ஒளிவடிவமாகத்தோன்றினர்.

"ஒருதலையில் நாணும் ஒருதலையிற் சாய்ந்த
அரிதலையுஞ் சேதிப்ப தாகக்—கருதிய
வானேர் சிதலாய் வரும்புற்றில் வந்தந்த
வானேர் உளத்துளக்கம் மாற்றினேன்"

திருவாரூர்உலா

"மாலவன் மிகுதியை மாற்றிய வண்ணமும்"

[திருமாலின் ஆணவத்தைக் கெடுத்தது] (திருவாசகம்)

---

998. மாலியவான் கதை

மாலியவான் என்பவன் அரக்கர் குலத்தினன். இவனுடைய தந்தையின் பெயர் சுகேசன். இவனுக்கு இரு தம்பியர் இருந்தனர். இவன் நான்முகனை நோக்கி நற்றவம் புரிந்தான். அவன் எதிர் தோன்றிப் பல மேன்மைகளை வழங்கினன். தெய்வத் தச்சனைக்கொண்டு அழகிய நகரம் ஒன்றை அமைத்தான். அதில் தன் தம்பியரோடு குடி

யேறினன். சவுந்தரி என்னும் தையலை மணந்தான். ஏழு புதல்வர்களையும் ஒரு புதல்வியையும் பெற்றான். தன் தம்பியர்கட்குந் திருமணஞ் செய்து வைத்தான். அவர் களுக்கும் மக்கள் பலர் தோன்றினர். எல்லோரையும் தன் னுடைய நகரிலேயே ஒன்றுகச் சேர்ந்து வாழுமாறு செய் தான். அவர்களுக்கு எத்தகைய குறையும் நேரிடாமல் பார்த்துக்கொண்டான். இராவணனுடைய பாட்டனுகிய இவனுடைய குணநலங்களை அனைவரும் பாராட்டினர்கள். சுற்றத்தார்கள் தன்னைச் சுற்றி அமைந்து வாழுமாறு செய் தமையால் இவன் அடைந்த நன்மைகள் பல. "சுற்றத்தார் தன்னைச் சுற்றி வாழும்படியாக ஒருவன் நடந்துகொள்ளுதல் அவன் செல்வத்தைப் பெற்றதற்குத் தக்க பயனுகும்" என்று முன்னேர்கள் கூறியதற்கு இவன் தகுந்த எடுத்துக்காட்டாக அமைந்தான்.

[சுற்றத்தார் தன்னைச் சுற்ற வாழ்தல்]

---

999. மாவலி கதை

மாவலி என்பவன் பிரகலாதனுடைய பேரன். இவன் அசுர வேந்தனுயினுங் கொடைத் திறத்தில் சிறந்தவனுய் உயர்ந்து வாழ்ந்திருந்தான். இவனுடைய சிறப்பான வாழ்க்கை இந்திரனுக்குப் பொருமையை உண்டு செய்தது. எவ்வாறேனும் மாவலியைத் தொலைக்க வேண்டுமென்று எண்ணினன். திருமாலிடஞ் சென்று தன்னுடைய நோக் கத்தைத் தெரியப்படுத்தினன்.

திருமால் தேவர்கோன் வேண்டுகோளுக்கு இணங்கி னர். குள்ள மறையோனுக வடிவங் கொண்டு மெல்ல மாவலிபால் வந்தார். மாவலி மாலைத் தொழுதான்; யாது வேண்டுமென்று வேண்டினன். திருமால், "எனக்கு முன் றடி மண் தானங் கொடு" என்று கேட்டார். சுக்கிரன் திரு மாலின் வஞ்சத்தை உணர்ந்தான். "கொடுக்காதே; கொடுத்தால் கேடு வரும்" என்று தடுத்தான். கொடை

நலம் உடைய மாவலி தன் ஆசிரியனும் அமைச்சனுமாகிய சுக்கிரன் சொல்லைக் கேட்க வில்லை. "கேடு வந்தால் வரட்டும் தானங் கொடுப்பதைத் தடுக்காதே" என்று ஆசிரியனுக்குக் கூறிவிட்டுத் "தந்தேன்" என்றான்.

குறளாய் வந்த மால் நெடுமால் ஆனார். மண்ணையும் விண்ணையும் ஈரடியால் அளந்தார். "மூன்றுவதடிக்கு இடம் எங்கே?" என்றார். மாவலி தன் தலையைக் காட்டினன். தமதடியை மாவலி தலை மேல் வைத்தழுத்தி அவனையும் ஆட்கொண்டார்.

பிறருக்கு உதவி செய்வதனால் கேடு வரும் எனின் ஒருவன் தன்னை விற்றுயினும் அக்கேட்டை அடைய வேண்டும் என்று அறநூல் கூறுவதை உலகம் மாவலியால் உணர்ந்தது.

[விற்றுயினும் கேட்டை அடைய வேண்டும்] (இராமாயணம்)

1000. மாவளத்தான் கதை

மாவளத்தான் என்பவன் காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்து அரசு புரிந்த சோழ மன்னர்களில் ஒருவன். நலங்கிள்ளி என்பவனுக்குத் தம்பி. இவன் அறிவுடையவனாகவும் வள்ளலாகவும் விளங்கி யிருந்தான். பொறுமையும் அருளும் இவன்பால் நன்கு பொருந்தி யிருந்தன. ஒருநாள் இவன் தாமப்பல் கண்ணனார் என்பவரோடு வட்டாடிக் கொண்டிருந்தான். ஆட்டத்தில் இவனே பல முறை வெற்றியடைந்தான்.

புலவரைப் பார்த்து, "உங்கள் புலமை இவ்வட்டாடலில் காணுமே என்று பெருமிதமாகக் கூறினான். புலவர் வெகுளி உடையவர். அவர் இவனைப் பார்த்து, "உன் தாய் உன்னை யாருக்குப் பெற்றாள்?" என்று சுடு சொல் இயம்பினார். மாவளத்தான் புலவருடைய இப்புன் மொழியைப் பொறுத்துக்கொண்டான். தான் பெருமிதமாகப் பேசியதற்கு உள்ளம் வருந்திக் குற்றம் பொறுக்குமாறும் வேண்டிக் கொண்டான். தம்மைக் கண்டிக்கக் கூடியவர்களிடத்தி

லும் அருள் செய்து அவர்களுடைய தவற்றிணைப் பொறுத்துக் கொள்ளும் இயல்பே தலை சிறந்த பண்புடைமையாம் என்பது இவனிடம் நன்கு விளங்கியது.

[அரசர்கள் பிழை பொறுத்தல்]

1001. மாறியாடிய கதை

மதுரை மாநகரில் இராசசேகர பாண்டியன் என்பவன் அரசாட்சி செய்து கொண்டிருந்தான். இவன் இறைவனிடத்தில் மிகுந்த அன்புடையவன். கூத்துப் பயில வேண்டுமென்ற எண்ணம் இவனுக்குத் தோன்றியது. தக்க ஆசிரியர்களை அழைத்துக் கூத்து நூல் முறைப்படியே கூத்துக் கற்றான். கூத்துப் பயின்ற பொழுது அரசனுக்கு மிகுந்த வருத்தம் உண்டாகியது. "கூத்தாடுவது இவ்வளவு தொல்லையான காரியமா? கூத்தப்பிரான் எக்காலமும் ஆடியவாறே இருக்கிறாரே அவருக்கு எத்தகைய துன்பமாக இருக்கும்? நாம் நம்முடைய கடவுளைக் கால் மாறியாடும்படியாகச் செய்ய வேண்டும். அவ்வாறு கால் மாறியாடும்படி செய்தால் அவருக்கு ஓயாமல் ஒரே வகையாக ஆடுவதனால் உண்டாகும் துன்பம் குறையும் என்று எண்ணினான். தூக்கிய காலைக் கீழே வைத்தும் கீழே வைத்துள்ள காலைத் தூக்கியும் மாறிமாறி ஆடுமாறும் வேண்டிக் கொண்டான். மாறி ஆடாவிட்டால் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போவதாகத் தன்னுடைய வாளை இறைவன் முன்பு நாட்டி அதன் மீது விழச் சென்றான். அவ்வளவில் கூத்தப்பிரான் மாறியாடிப் பாண்டியனுடைய மனக் கவலையைப் போக்கி யருளினார்.

(திருவிளையாடல்)

'ஏராரு மாட கூட மதுரையில்
மீதேறி மாறியாடு மிறையவர்.''

[மாறி ஆடியது] (திருப்புகழ்)

1002. மாறுகோலங் கொண்டிருந்த கதை

பாண்டவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் காட்டில் திரிந்து காட்டு வாழ்க்கையை முடித்தார்கள். பிறகு ஓராண்டு மறைந்து உறைய வேண்டியதற்காக விராட னுடைய நகரத்தை அடைந்தார்கள். தருமர் கங்கபட்டர் என்னும் பெயரோடு விராட மன்னனிடம் அமர்ந்தார். வீமன் மடைத் தொழிலாளனுனன். மற்றவர்களும் தங்கள் தங்க ளுக்கு உகந்த மாறுகோலத்துடன் அங்குத் தங்கி யிருந்தார் மறைந்துறைய வேண்டிய காலமும் முடிந்த பிறகு வெளிப் பட்டார்கள்.

"வேற்றுமை யுற்றுரு வோடியல் நாளது."

[கரந்துறைந்தது] (திருப்புகழ்)

1003. மாற்ருளைப் பாராட்டிய மடக்கொடியின் கதை

முன்னாளில் காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்திருந்த ஒருவனுக்கு இரு மனைவியர் இருந்தனர். இருவருக்கும் ஒவ் வொரு குழந்தைகள் இருந்தன. இவர்கள் சக்களத்திப் போராட்டஞ் சிறிதும் இன்றி மிக்க அன்புடன் வாழ்ந்து கொண்டிருந்தனர்.

ஒருநாள் ஒருத்தியின் குழந்தை தவறிக் கிணற்றிலே விழுந்து இறந்து விட்டது. இதனைக் கண்ட மற்றவள் நம் முடைய கணவனிடத்தில் நம்மைப் போன்ற சம உரிமை படைத்த மாற்ருள் தன்னுடைய குழந்தையை இழந்து விட் டாள். அவ்வாருக நாம் மட்டும் குழந்தையோடு குலாவிக் களித்துக் கொண்டிருப்பது நல்லதன்று என்று எண்ணினுள். தன்னுடைய குழந்தையையுந் தூக்கிக் கிணற்றிலே போட்டு விட்டாள். இவளுடைய வீரக் கற்பினுலும் நடுவு நிலைமை யாலும் இரு பிள்ளைகளும் உயிரோடு மிதக்கலாயின. இரு வரும் மக்களை எடுத்துக்கொண்டு மகிழ்ச்சியோடு வாழ்ந்

திருந்தனர். இவ்வாறு மாற்ருளுக்காகத் தன் குழந்தையை யும் கிணற்றில் போட்ட மங்கையை அனைவரும் பாராட்டிப் போற்றினர்.

" ... ... இணையாய
மாற்ருள் குழவிவிழத் தன்குழவி யுங்கிணற்று
வீழ்த்தேற்றுக் கொண்டெடுத்த வேற்கண்ணுள் "

[மாற்ருளின் மாண்பு] (சிலப்பதிகாரம்)

1004. மாற்றுரைத்த பிள்ளையார் கதை

சுந்தரமூர்த்தி நாயனர் திருமுதுகுன்றத்தில் பெற்ற பொன்னை மணிமுத்தாற்றிலே போட்டுத் திருவாரூர்க் குளத் திலே எடுத்தார். பொன்னை ஆற்றில் போடுவதற்கு முன் மாற்றுரைத்துப் பார்ப்பதற்காக மச்சம் வெட்டி வைத்துக் கொண்டார். திருவாரூரில் பொன்னை எடுத்துப் பார்த்த பொழுது மாற்றுக் குறைவாகக் காணப்பட்டது. சுந்தரர் இதனைக் குறித்து இறைவனிடம் முறையிட்டுக்கொண்டார். திருப்பதிகமும் பாடினர். இறைவர் மாற்றுரைத்துச் சரியாகக் காட்டுமாறு பிள்ளையாரை அனுப்பினர். பிள்ளையார் சுந்தர ருக்கு மாற்றுரைத்துச் சரியாகக் காட்டினர். அதனல் அப் பிள்ளையாருக்கு அன்று முதல் மாற்றுரைத்த பிள்ளையார் என்று பெயர் உண்டாகியது. அப்பிள்ளையார் கமலாலயம் என்னும் குளத்தின் வடகிழக்கு மூலையில் எழுந்தருளி உள் ளார்.

" ... ...பூந்தாளில்
போற்றுரைத்த ஆரணமே பொற்சிலம்பாங்
[கைச்சிலம்பு
மாற்றுரைத்த வாரணமே வந்து. "

[மாற்றுரைத்த பிள்ளையார்] (திருவாரூர் உலா)

1005. மானக்கஞ்சாறர் கதை

சோழவள நாட்டில் கஞ்சனூர் என்னும் ஊரில் மானக் கஞ்சாறர் என்னும் பெயருடையவர் ஒருவர் இருந்தார். அவர் சிவபெருமானிடத்தில் மிகுந்த அன்புடையவர். அவருக்குத் தெய்வத் திருவருளால் பெண் மகவு ஒன்று பிறந்தது. அது வளர்ந்து மணப்பருவத்தையடைந்தது. அப் பெண்ணை ஏயர்கோன் கலிக்காமர் என்பவர் மணஞ்செய்து கொள்ள முடிவு செய்தார். திருமண நாளும் உறுதியாயிற்று. திருமண விழைக்கு முதல் நாள் இறைவன் துறவுக்கோலத்தோடு மானக்கஞ்சாறர் இல்லத்துக்கு எழுந்தருளினர். மானக்கஞ்சாறர் தாம் அத் துறவியை வணங்கியதோடு தம்முடைய மகளையும் வணங்கச் செய்தார். துறவுக்கோலச் சிவபெருமான் மானக்கஞ்சாறர் மகளுடைய கூந்தல் தமது பஞ்சவடி என்னும் பூணூலுக்குப் பயன்படுமென்று கூறினர். உடனே மானக்கஞ்சாறர் தம் மகளின் கூந்தலையரிந்து கொடுத்தார். மறுநாள் ஏயர்கோன் கலிக்காமர் திருமணத்திற்கு வந்து சேர்ந்தார். சிவபெருமானுடைய திருவருளால் கூந்தல் பழமைபோல் வளர்ந்து சிறந்து நின்றது. மானக்கஞ்சாறர் முதலியோர் இறைவனுடைய அருளையும் பெற்றனர்.

"அஞ்சா தடிகள் பஞ்சவடிக் காமென் றுரைப்ப அடி
வணங்கி
நஞ்சார் விழிப்பெண் புதுமணத்தில் நன்னுள் முடித்த
நறுங்கூந்தல்
நெஞ்சார் மகிழ்ச்சி யுடனரிந்து நீட்டி யுலகில் நீண்ட
கொடை
மஞ்சார் மானக் கஞ்சாறன் வாழ்வாஞ் சோழ மண்ட
லமே"

(சோழமண்டல சதகம்)

[மானக்கஞ்சாறர்] (பெரிய புராணம்)

1006. மானமுடையவன் கதை

ஒரு பட்டினத்திலே ஒரு வணிகன் இருந்தான். அவன் கப்பலேறித் தொலை நாடுகளுக்குச் சென்று பொருள் தேடிக்

கொண்டு வருவதற்கு எண்ணினான். அவன் திரும்பி வருவ தற்கு இரண்டு மூன்று ஆண்டுகள் செல்லும் போலிருந்தது. வணிகனுடைய மகனவி தன்னுடைய கணவனைப் பார்த்து, "நான் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு எவ்வாறு தனித் திருப்பேன்?" என்று சொல்லி வருந்தினாள். வணிகன் அவளைப் பார்த்து, "இந்நகரத்திலே மானமுடையவனுக இருப்பவனைத் தெரிந்து நீ அழைத்துக்கொண்டு வந்து அவனோடு உன்னுடைய விருப்பம்போல் இருக்கலாம்" என்று சொல்லிவிட்டுத் தான் போய் விட்டான்.

அப்பெண்ணைனவள் தன்னுடைய உயிர்த் தோழியை அழைத்துத் தன்னுடைய தலைவன் சொன்ன செய்தியை அவ ளிடங் கூறினாள். "இந்நகரத்திலே மானமுடையவனுக இருக்கிறவனைக் கண்டு பிடித்து என்னிடத்திற்கு அழைத்துக் கொண்டு வா" என்று சொன்னாள்.

மறுநாள் அத் தோழியானவள் குளக்கரைக்குப் போய் அங்கே நின்று கொண்டிருந்தாள். பட்டணத்திலுள்ள ஆட வர்கள் அவ்விடம் வந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு இருந்தார்கள். எல்லோரும் பலருங் காணுமாறு குளத்தில் இறங்கிக் கால் கை அலம்பினார்கள்.

ஒரு மனிதன் ஒரு சிறு மண் கலயத்தைக் கொண்டு வந் தான். அதில் தண்ணீரை எடுத்துக்கொண்டு யாருங்காணுத தொலைவிடத்திற்குப் போய் வெளிக்கு இருந்து கால் கை கழு வினான். பிறகு குளத்தில் இறங்கி நீராடி விட்டுச் சென்றான். இவைகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த தோழிப் பெண்ணைனவள் இவன் ஒருவன்தான் மானமுடையவனுகத் தெரிகிறான். இவனை அழைத்துக்கொண்டு போய் நம்முடைய தலைவியிடம் விடுவோம் என்று எண்ணினாள். அவனி டம் போய், "என்னுடைய தலைவி தங்களை அழைத்துக் கொண்டு வருமாறு சொன்னாள். அவளிடம் வரவேண்டும்" என்று சொன்னாள். இதனைக்கேட்ட அவன் உன்னுடைய தலைவியிடம் எனக்கு என்ன வேலை? நான் வரமாட்டேன் போ" என்று சொன்னான். தன் வழியே சென்றான். வணி கனுடைய வீட்டு வாசலில் செல்லும்போது தோழியானவள் வலுக்கட்டாயம் செய்து அவனை இழுத்தாள். அவனுடைய கையிலிருந்த மண் கலயம் கீழே விழுந்து உடைந்துபோய்

விட்டது. கலயம் விழுந்த உடன் அம்மனிதன் கூக்குரலிட்டு அலறினான்.

தோழியானவள் அவனைக் கொண்டு போய் வணிகன் மனைவியிடத்தில் விட்டு, "இவன்தான் மானமுடையவன்" என்று கூறினாள். வணிகன் மனைவி அம் மனிதனைப் பார்த்து, "நான் தோழியை அனுப்பி யழைத்தால் இவ்வாறு அலற வேண்டிய காரணம் என்ன? என்று கேட்டாள்.

அதற்கு அவன், "கொடியவளே! எனக்கு உன்னிடத்தில் என்ன அலுவலிருக்கிறது? என்னைப் பிடித்து மல்லுக் கட்டியதில் என்னுடைய கலயத்தை உடைத்துவிட்டாளே இனி மேல் நான் என்ன செய்யப் போகிறேன்" என்று சொல்லி அழுதான்.

அவனை வணிகன் மனைவி பார்த்து, "மண் கலயத்திற்குப் பதிலாக நான் பொன் கலயம் தருகிறேன். நீர் வருந்துவதை விட்டுவிடும்" என்று சொன்னாள். அம்மனிதன் "அடி பித்துப் பிடித்தவளே! உன்னுடைய பொன் கலயம் எனக்கு எதற்கு? விவரந்தெரிந்த நாள் முதல் என்னுடைய மானத்தை அந்த மண் கலயத்தைத் தவிர வேறு கலயம் கண்டதில்லை. நானாக்கு வேருெரு மண் கலயம் காணும்படியாக நேர்ந்து விட்டதே என்று தான் வருந்துகிறேனேயல்லாமல் மண் கலயம் உடைந்ததற்காகச் சிறிதும் வருந்தவில்லை" என்று கூறினான். இதனைக் கேட்டதும் வணிகனுடைய மனைவி, மானமுடைய இவன் தன்னுடைய மானத்தைத் தன்னுடைய ஒரு மண் கலயத்தைத் தவிர வேறு கலயங் கண்டதில்லையென்கிறான். நானாக்கு வேருெரு மண் கலயம் தன்னுடைய மானத்தைக் காணும்படியாக நேரிட்டுவிட்டதே என்று வருந்துகிறான். அவ்வாறுக நாம் மட்டும் வேரூர் ஆடவனுக்கு நம்முடைய மானத்தைக் காட்டலாமா? நமக்கு அறிவு வரவேண்டுமென்றே நம்முடைய தலைவர் இவ்வாறு கூறிவிட்டுப் போயிருக்கிறார் என்று நல்லறிவு பெற்றுத் தேறியிருந்தாள்.

"நீரெடுத்தோர் கலசமதில் சவுசமுஞ்செய்
தோனதுதான் நெடுநா ளாக்குப்
பாரில்விழுந் துடையவின்னம் ஒருகலயம்
என்மானம் பார்க்கும் போது

சிரிக்கையென் றழுதானென் ரொருகதைசொல்
வார்நியமச் செயங்கொண் டாரே ”
[மானமுடையவன்] (செயங்கொண்டார் வழக்கம்)

1007. மிதிலை வில்லின் கதை

மிதிலையில் சனக மன்னனிடம் ஒரு வில் இருந்தது என்ப தனையும் அதனை இராமபிரான் முறித்துச் சீதையைத் திரு மணம் செய்து கொண்டார் என்பதனையும் எல்லோரும் அறிவர். அவ்வில்லின் வரலாறுவது: ஒரு காலத்தில் விசுவகருமன் இரண்டு பெரிய விற்களைச் செய்தான். இரண்டு விற்களில் ஒன்றைத் திருமால் எடுத்துக் கொண் டார். மற்றொன்றைச் சிவபிரான் எடுத்துக் கொண்டார். இரண்டு பேரும் தேவர்களுடைய விருப்பப்படி போர் செய்யத் தொடங்கினர்கள். சிவபிரான் எடுத்த வில் சிறிது முறிந்து போய் விட்டது. அவ்வளவில் போர் நிறுத்தப்பட் டது. அவ்வில்லைச் சிவபெருமான் தேவராதன் என்னும் அரசனிடம் கொடுத்தார். அவ்வரசன் அதனைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்து வைத்திருந்தான். பிறகு அவ்வரச னுடைய வழி முறையில் தோன்றிய சனகன் வேள்விச் சாலைக்கு நிலம் உழுகையில் சீதை தோன்றினாள். சனகன் சிவபெருமானுடைய வில்லை வளைத்து நாணேற்றுபவர்கட்குச் சீதையைத் திருமணம் செய்து கொடுப்பதாக முடிவு செய் திருந்தான். பிறகு இராமபிரான் வில்லை வளைத்துச் சீதை யைத் திருமணம் புரிந்தார். இவ்வில்லுக்கு நிகரான வில் பரசுராமரிடம் சேர்ந்தது. பிற்காலத்தில் இராமபிரான் இவ் வில்லையும் வளைத்துக் கணை யேற்றினார்.
[மிதிலை வில்]

1008. மித்திரசகன் கதை

மித்திரசகன் என்பவன் கதிரவன் குலத்து மன்னர்களில் ஒருவன். இவனுடைய தந்தையின் பெயர் சுதாசன். மித் திரசகன் போரில் வல்லவன். ஆண்மையும் திண்மையும்

அமையப் பெற்றவன். இவன் அரசாட்சியை இனிது நடத்திக் கொண்டிருக்குங்கால் விந்தமன் என்னும் கீழ் மகன் ஒருவன் இவனிடம் வந்தான். "நான் சமையல் தொழிலில் வல்லவன் இனிய உணவுகளை நன்கு சமைப்பேன் எனக்கு வேலை தருக" என்று விழைந்து வேண்டினான். அவனுடைய உரையும் அடக்கமும் பணிவும் அவனிடத்தில் அரசனுக்கு அன்பை உண்டாக்கின. அட்டிற் சாலையில் பணி புரியுமாறு கட்டளை தந்தான். அவன் அட்டில் தொழிலை நன்கு அறியான் வஞ்சகமும் உள்ளவன். அவன் பகைவன் ஒருவனால் அனுப்பப் பெற்று இவ்வரசனிடம் வந்து சேர்ந்தவன் என்பர்.

மித்திரசகன் இல்லத்தில் தென்புலத்தார் கடன்புரி நாள் ஒன்று வந்தது. அன்று வசிட்டர் முதலான பெரியோர் அரண்மனையில் உணவு கொள்ளுமாறு வந்திருந்தனர். விந்தமன் அன்று சிந்தை திரிந்தான். ஊனைச் சமைத்து வந்து படைத்தான். வசிட்டர் செய்தியை உணர்ந்தார். அரசனுக்குச் சாபங் கொடுக்கத் தொடங்கினர். அரசனும் வெகுண்டு முனிவரைச் சபிக்கத் தொடங்கினன். இதனால் அரசனுக்குப் பல தொல்லைகள் உண்டாயின. இதற்குக் காரணம் மடையனாக வந்த கடையனுடைய வேலையே. அன்புடைமையைக் காரணமாகக் கொண்டு அறிவற்றவர்களை நம்பித் தெளிதல் தெளிந்தவர்கட்குத் தொல்லைகளை யெல்லாம் உண்டாக்கும் என்பதை இவ்வரசன் உலகிற்குணர்த்தினான்.

[அறிவற்றவர்களை நம்புதல் அல்லலைத் தரும்]

1009. மிருகண்டர் கதை

இவர் கௌசிகர் என்னும் முனிவருடைய மகளாகிய மருத்துவதி என்பவளை மணந்து வாழ்க்கை நடத்தினர். இவருக்கு நெடுங் காலமாக மக்கட்பேறு உண்டாகவில்லை. மகவின்மையை நோக்கி உள்ளம் வருந்தினர். இறைவனைக் குறித்து அருந்தவம் இயற்றினர். இறைவன் காட்சி தந்து;

"வேண்டியது யாது?" என்று உசாவினர். இவர் தமக் கோர் அரிய மைந்தனை அருள வேண்டு மென்று வேண்டிக் கொண்டார். இறைவனும் அவ்வாறே அருள் புரிந்து சென்றார். அம்மகனே மார்க்கண்டராவார். பெறக்கூடிய பேறுகளுள் மக்கட்பேறே சிறந்தது என்று முடிவு செய்திருந்த படியால்தான் இவர் இவ்வாறு வரம் பெற்றார். "பெறுமவற் றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த, மக்கட்பே றல்ல பிற" என் பது திருவள்ளுவ நாயனார் திருவாக்கு.

[அறிவறிந்த மக்கட் பேறு] (கந்த புராணம்)

1010. மிளகு பயறான கதை

கொங்கு வள நாட்டிலிருந்த ஒரு வேளாள வணிகன் வறுமையினால் துன்புற்றான். மிளகு வாணிகஞ் செய்ய எண்ணினான். கொச்சியில் மிளகு மூட்டைகள் பலவற்றை வாங்கிக்கொண்டு வாணிகத்திற்குப் புறப்பட்டான். எருது களின் மேல் மிளகுப் பொதிகள் ஏற்றப்பட்டன. ஆம்பிரா வதியாற்றித் தென் கரை நாட்டில் இடை ஞாழியாற் பூசிக்கப் பெறும் சிவபெருமான் எழுந்தருளிய காட்டு வழியாகச் சென் றான். கோயிலில் எழுந்தருளிய கடவுள் ஒரு முதிய அந்தண னாக வணிகனுக்கு முன் தோன்றினர். "சிறிது மிளகு வேண்டும்" என்று கேட்டார். வணிகனுக்கு மிளகு கொடுக்க விருப்பமில்லை. ஆகவே, அவன் மாறுகோலம் பூண்ட கட வுளைப் பார்த்து, "இம்மூட்டைகள் மிளகு அன்று; பயறு" என்று சொன்னான். மாறுகோலம் பூண்ட கடவுள், "அப்ப டியே ஆகுக" என்று கூறிச் சென்றனர்.

வணிகன் மூட்டைகளோடு திருவாரூர் போய்ச் சேர்ந் தான். மிளகை விற்பதற்கு விலை பேசினான். தொகையைப் பெற்றுக்கொண்டு மூட்டையை அவிழ்த்துக் கொட்டினான். எல்லாம் பயறுகவே இருந்தது. மிளகு விலை பேசியவர்கள் வணிகன் புரட்டன் என்று சினங் கொண்டார்கள். வணி கன் திகைத்தான். முன்பு மிளகு கேட்ட கிழ அந்தணர் இப் பொழுது மீண்டுந் தோன்றினர். "எல்லாம் பயறு என்று

தானே கூறினுய் இப்பொழுது ஏன் விழிக்கிறுய்?'' என்று கேட்டார். மாறுகோல அந்தணர் இறைவனே என்று வணிகன் உணர்ந்தான். பயற்றை மிளகாகச் செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொண்டான். மாறுகோலப் பரமனும் பயற்றை மிளகாகச் செய்தார். ''தென்கரை நாட்டில் உள்ள என் கோயிலுக் கற்பணியாகச் செய்வாயாக'' என்று கூறி மறைந்தார். வணிகனும் அவ்வாறே செய்து அருள் பெற்றான்.

''அணித்திகழ் சேர்தென் கரை நாட்டில் அப்பிர
[மேயருக்கு
பணித்தொழி லான தளர்ச்சியி னல்வெறுப் பாயொர்
[செட்டி
எணித்தொலை யாத மிளகைப் பயறென வெம்பெருமான்
மணிப் பயருக்கின தும்புகழ் சேர்கொங்கு மண்டலமே',

[பயறு மிளகானது] (கொங்கு மண்டல சதகம்)

1011. முகிலன் கதை

முன்னளில் வடநாட்டில் முகிலன் என்னும் பெயரையுடைய அரசன் ஒருவன் இருந்தான். இவன் மிகவும் பொல்லாதவன். வடநாட்டை விட்டுத் திருவண்ணுமலைக்கு வந்தான். வந்தவன் அங்கே தங்கினுன். நகர மக்களுக்கும் சிவனடியார்களுக்கும் தீமைகள் பலவற்றைச் செய்தான். இவனுடைய தொல்லைகள் நாளும் மிகுதியாயது. அந்நாளில் குகை நமச்சிவாயர் என்பவர் அண்ணுமலையில் குகை ஒன்றில் அமர்ந்து அருந்தவம் புரிந்து கொண்டிருந்தார். அன்பர்கள் சிலர் குகை நமச்சிவாயரிடஞ் சென்று முகிலன் செய்து வரும் தீமைகளைக் குறித்து முறையிட்டுக் கொண்டனர். முறைப் பாட்டைக் கேட்ட குகை நமச்சிவாயர்;

''சூலங் கரத்திருக்கச் சோதிமழு வாளிருக்க
ஆலமுண்ட காலத் தருளிருக்க—மேலே

எரித்த விழியிருக்க இந்நாட்சோ ணேசர்
தரித்த தென்ன காரணமோ தாம்''

என்று பாடினர். சிவபெருமான் ஆனைமுகக் கடவுளுக்குக் கட்டளை யிட்டார். ஆனைமுகக் கடவுள் அன்றிரவிலே அம் முகிலனை அச்சுறுத்தினர். அவன் யானைகள் சிலவற்றை அவ்விநாயகருக்குத் திறையாகக் கொடுத்து வழிபாடு செய்தான். அது முதல் அவ்விநாயகருக்கு யானை திறை கொண்ட விநாயகர் என்று பெயர் உண்டாகியது.

[முகிலன்] (அருணாசல புராணம்)

1012. முசுகுந்தன் கதை (1)

முசுகுந்தன் என்பவன் கதிரவன் குலத்து வேந்தனுகிய திலீபன் என்பவனுக்குப் புதல்வனுகத் தோன்றினன். இவனுடைய தாய் பெயர் மங்கலவதி. முதலில் இவன் விதுரமன் என்னும் காந்தருவனுக இருந்தான். ஒரு முனிவருடைய சாபத்தால் முசுவானன். பிறகு இறைவனருளால் அரசனானன். முசு என்பது குரங்குகளில் ஒரு வகை. இவன் குரங்கு முகமுடைய அரசனுக இருந்தபடியால் முசுகுந்தன் என்று பெயர் பெற்றன.

சிறந்த வீரனுகிய இவன் ஆரூரில் இருந்து ஆழி மன்னனாய் அரசு புரிந்திருந்தான். இவனுடைய அன்புடைமையையும் பண்புடைமையையும் உணர்ந்த முருகப் பெருமான் தம் துணைவர்களாகிய வீரவாகு தேவர் முதலிய இலக்கத்தொன்படையின் மரையும் இவனுக்குப் படைத் துணையாக உதவி அருளினர். அவர்களும் மக்களாய்த் தோன்றி இவனிடம் படைகளாய் அமைந்திருந்தனர். அவர்களுடைய துணையைக் கொண்டு இவன் உலகம் முழுவதையுஞ் சிறப்பாக ஆண்டான். இவனுடைய மனைவியின் பெயர் சித்திரவல்லி.

சிறந்த அமைச்சர்களாலும் உயர்ந்த பொருள்களாலும் நல்லொழுக்கம் பொருந்திய குடிகளாலும் மேலான அரண்களாலும் ஆற்றல் மிக்க படைகளாலும் இவன் சிறந்த புகழு

டன் விளங்கி யிருந்தான். வலாரி என்னும் அசுரனை வெல்லுதற்கு இந்திரனும் இவனுடைய துணையை நாடினான்.

படைகளும் குடிகளும் பொருள்களும் அமைச்சர்களும், நட்பினரும் அரணுமாகிய, இவைகளை உடையவன் சிறந்த அரசனுவான் என்பதற்கு இவனே நல்ல எடுத்துக் காட்டாக விளங்கி யிருந்தான்.

[முசுகுந்தன்]

1013. முசுகுந்தன் கதை (2)

முசுகுந்தன் என்பவன் முன்னாளில் அரசு புரிந்திருந்த பேராழி மன்னர்களில் ஒருவன். இவனிடம் பேராண்மை யிற் புகழ் பெற்ற படை இருந்தது. அப்படை எத்தகைய போரிலும் பின்வாங்காத புகழ் படைத்தது. அப்படையின் சிறப்பால் இவன் பெரும் புகழ் பெற்று விளங்கி யிருந்தான். இவனுடைய மகளவி சித்திரவல்லி என்பவள் அழகிய கிளி ஒன்றை வளர்த்து வந்தாள். அக்கிளி அழகாக இருந்த தோடு நன்முகப் பேசும் தன்மையுடையதாகவும் இருந்தது. இக்கிளியைப் பற்றிய செய்தியை இயமனுடைய மகளவி அறிந்தாள். அதனை விரும்பினாள். இயமனுடைய கட்டளை படி தூதுவர்கள் அக்கிளியைக் கவர்ந்து போய் அவனுடைய மகளவியிடம் அளித்தனர்.

தன் மகளவியின் கிளியை எமனுடைய தூதர்கள் கவர்ந்து சென்று அவனுடைய மகளவியின் பால் கொடுத்து விட்டனர் என்பதை முசுகுந்தன் உணர்ந்தான். எமனோடு போர் செய்ய எண்ணினான். தன்னுடைய படையை எம புரத்தின் மீது ஏவினான். படை விரைந்து புகுந்து எம புரத்தை வளைந்தது. எமனுடைய தூதுவர்கட்கும் முசுகுந்தனுடைய படைக்கும் போர் மூண்டது. இப்படை எமனுடைய படையைத் தோற்கடித்து விட்டது. கூற்றுவன் வந்து போரிட்ட பொழுது அவனுந் தோற்றுப் போனான். கிளி முசுகுந்தனுடைய மகளவியிடம் வந்து சேர்ந்தது. முசு

குந்தன் படை எமனுடைய படையையும் எதிர்த்துப் போரிட்டதை அனைவரும் பாராட்டினர். கூற்றுவனே சினந்து எதிர்த்து வந்தாலும் ஒன்றுகச் சேர்ந்து அவனையும் எதிர்த்து நிற்கும் ஆற்றலமையப் பெற்றதே சிறந்த படையாம் என்பது இவனுடைய படையிடம் நன்கு விளங்கியது.

[எமனுக்கும் அஞ்சாமல் எதிர்த்து நிற்பதே படை]

1014. முகங்களை எச்சிலாக்கிய கதை

கண்ணன் ஆய்ச்சியர் வீடுகளில் உறிகளில் வைக்கப்பட்டிருக்கும் வெண்ணெயைக் கைவிரலால் தொட்டு எச்சிலாக்கி உண்பான். அப்பொழுது அவ்வீட்டு இளம் பெண்கள் பார்த்துக் கொண்டு வந்துவிட்டால் கண்ணன் அவர்களுடைய முகத்தைத் தனது எச்சிற் கையாற் றொட்டுக் கையில் உள்ள வெண்ணெயை முகத்தில் தடவுவான். அவர்களுடைய முகத்தில் தன் வாயில் உள்ள வெண்ணெயை உமிழ்ந்து அவர்கள் தாம் வெண்ணெயைக் களவு செய்து உண்டார்களோ என்று எண்ணுமாறு செய்து விட்டு மறைந்து விடுவான்.

"... ... ...

பாவையர் மனைதொறும் வெண்ணெய்க்

காடினன் அவர்கள் முகந்தொறும் எச்சில்

ஆக்கினன்."

[கண்ணன் ஆடல்]! (விஷ்ணு பாரதம்)

1015. முஞ்சன் கதை

முஞ்சன் என்பவன் வஞ்ச நெஞ்சினன். போச மன்னனுக்குச் சிறிய தந்தை. போச மன்னன் குழந்தையாக இருக்கும்போதே தந்தையை இழந்தான். சிறிய தந்தை

யாகிய இவன் ஆட்சியைக் கைப்பற்றி நடத்தினான். சமயம் பார்த்துப் போசனையும் தொலைத்துவிட எண்ணினான்.

போசன் தெய்வத் திருவருளால் தொல்லைகளில் இருந்து தப்பினான். தகுந்த பருவத்தை அடைந்ததும் மணி முடி புனைந்து மன்னன் ஆனான். அது வரையில் ஆட்சியை மேற் கொண்டிருந்த இவன் பொருமையினால் செய்த தீமைகள் யாவும் பலிக்காமலே போயின.

பிறருடைய செல்வத்தைக் கண்டு பொருது பொருமைப் படுகிறவனைத் திருமகள் தன்னுடைய தமக்கைக்கு (மூதேவிக்குக்) காட்டி விட்டுத் தான் அகன்று போய் விடுவாள் என்பது இவனிடத்தில் உண்மையாக முடிந்தது. போசன் அரசனான பின் இவன் வறுமையினால் வருந்திப் பல வகையான அல்லல்களை அடைந்து துன்பப் பட்டான்.

[பொருமை செல்வத்தைக் கெடுக்கும்] (போச சரித்திரம்)

———

1016. முடியில் அடி வைத்த கதை

சுந்தர மூர்த்தி நாயனார் திருத் தில்லையை அடைந்து கூத்தப்பிரானை வழிபட எண்ணினார். பெண்ணை யாற்றைக் கடந்து திருவதிகையின் எல்லையை அடைந்தார். அப்பதி திருநாவுக்கரசு நாயனார் உழவாரப் பணி செய்த பதியாகையால் அதனை மிதிப்பதற்கு அஞ்சினார். ஊருக்குள்ளே போகாமல் அண்மையில் இருந்த சித்த வட மடத்திற்குச் சென்றார். திருவதிகை வீரட்டானத்தில் எழுந்தருளியுள்ள கடவுளை எண்ணிக்கொண்டு கண்ணுறங்கினார். அப்பொழுது வீரட்டானேசுரர் ஒரு முதிய அந்தணராக அம்மடத்திற்குள் எழுந்தருளினார். சுந்தரமூர்த்தி நாயனருடைய முடியின் மேல் தம்முடைய அடியை வைத்துக்கொண்டு உறங்குபவரைப்போல் பாவனை காட்டினார். சுந்தரமூர்த்தி நாயனார் விழித்துக்கொண்டு, "ஓ ஐயரே! உம்முடைய காலை என்னுடைய தலையின் மீது ஏன் வைத்தீர்?" என்று உசாவினார். அதற்குக் கடவுள், "என்னுடைய முதுமையினால் அறியாமற் செய்துவிட்டேன்" என்று கூறினார். சுந்தர

மூர்த்தி நாயனார் அதனை ஏற்றுக்கொண்டு வேறொரு பக்கத் திலே தம்முடைய தலையை வைத்துக்கொண்டு படுத்தார். கடவுள் அங்கும் அவ்வாறே செய்தார். சுந்தரமூர்த்தி நாய னார் கடவுளைப் பார்த்து, "இங்கு வந்து பல முறையும் என் தலை மீது கால் வைக்கும் நீர் யாவர்?" என்று உசாவினார். கடவுள், "நீ என்னை அறியாயோ?" என்று கூறி மறைந் தார். சுந்தரர் உண்மையை உணர்ந்து கொண்டு தேவாரப் பதிகம் பாடிப் போற்றினார்.

"மாங்குயில் மிழற்றும் நாவலூர்ப் புலவன்
மறுப்பவும் முடிமிசை யிருத்தும்,
பூங்கழல் அடியேன் தலைமிசை யிருத்தப்
புகலினும் என்கொல்நீ இரங்காய்?"

[முடியில் அடி வைத்தது] (சோணசைல மாலை)

1017. முட்டையின் கதை

பொய்யா மொழிப் புலவர் நன்கு கல்வி கற்றுச் சிறந்த புலவராக விளங்கி யிருந்தார். சிவபெருமானைத்தான் பாடு வார். முருகக் கடவுள் பொய்யாமொழிப் புலவரிடம் பன் முறை கனவில் தோன்றித் தம் மீது செய்யுள் பாடுமாறு கட் டளை யிட்டார். பொய்யாமொழிப் புலவர், "கோழியைப் பாடிய வாயால் அதன் குஞ்சைப் பாடமாட்டேன்" என்று கூறி மறுத்துவிட்டார். முருகக் கடவுள் பொய்யா மொழிப் புலவரிடம் பாடல் பெறுவதற்குச் சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் பொய்யாமொழிப் புலவர் கொங்குவள நாட்டில் பாலை நிலம் ஒன்றின் வழியாகச் சென்று கொண்டிருந்தார். அப்போது முருகக் கடவுள் அஞ்சத் தக்க வேட்டுவக் கோலத்தோடு பொய்யாமொழி முன்பு தோன்றினார். "நில்" என்று கூறி அதட்டினார். பொய்யாமொழியார் நின்றார். "நீ யார்?" என்று முருகக் கடவுள் உசாவினார். "நான் ஒரு புலவன்" என்றார் பொய் யாமொழியார், "அவ்வாறாயின், இப்பாலை நிலத்தைச் சிறப் பித்துச் சுரம் போக்காக என் மீது ஒரு வெண்பாப் பாடுக"

என்ருர் முருகக் கடவுள். "அவ்வாறே பாடுகிறேன் தங்கள் பெயர் யாது"? என்று உசாவினர் புலவர். "முட்டை" என்று மறுமொழி பகர்ந்தார் முருகர். உடனே புலவர்,

"பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
என்பேதை செல்லற் கியைந்தனளே—மின்போலுங்
மானவேல் முட்டைக்கு மாருய தெவ்வர்போம்
கானவேல் முட்டைக்குங் காடு."

என்று பாடினர். "கள்ளிப் பொறி பறக்குங் கானலில் கருவேல முள் எவ்வாறு கிடக்கும்?—உன்னுடைய பாட்டுப் பிழையுடையது. நான் பாடுகிறேன் கேட்பாயாக;

"விழுந்ததுளி அந்தரத்தே வேமென்றும் வீழின்
எழுந்து சுடர்சுடுமென் றேங்கிச்—செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்தில் பெய்வீரையுஞ் சென்றனளே
பொய்யா மொழிப்பகைஞர் போல்."

என்று பாடினர். பிறகு, "குஞ்சைவிட முட்டை உயர்ந்ததோ? கோழியைப் பாடிய வாயால் அதன் குஞ்சை பாடமாட்டேன் என்ற நீ இப்பொழுது முட்டையைப் பாடினையே என்று உசாவினர். பொய்யாமொழிப் புலவர் உண்மையை உணர்ந்து தெளிந்ததுடன் அன்று முதல் முருகக் கடவுளிடத்தில் அன்பு செலுத்தலானர்.

"முட்டையென் பேர் சுரம் போக்கா ஒருபா
[மொழியெனக்கேட்
டிட்ட மருவுபொய் யாமொழி பொன்போ லெனவுரைக்கச்
சுட்ட முகில்கீலயீ தென்று விழுந்த துளியென்று நன்
மட்டவிழ் தார்முரு கோன்சொன்ன துங்கொங்கு
[மண்டலமே."

[முருகவேளும் பொய்யாமொழியாரும்] (கொங்கு மண்டல சதகம்

———

1018. முதலைவாய் மதலை மீண்ட கதை

சுந்தரமூர்த்தி நாயனார் கொங்குவள நாட்டுச் சிவப்பதி கனை வழிபாடு செய்துகொண்டு அவிநாசிக்குச் சென்றார். அப்பொழுது ஒரு வீட்டில் மங்கல வொலியும் ஒரு வீட்டில் அழுகையொலியும் கேட்டது. நாயனார் அதன் காரணத்தை உசாவினார். "மூன்று ஆண்டுகட்கு முன்பு இரு சிறுவர்கள் குளத்திற்கு நீராடச் சென்றார்கள். அவர்களில் ஒரு சிறுவனை முதலை விழுங்கிவிட்டது. மற்றொரு சிறுவனுக்கு இன்று உபநயனம். குழந்தையை இழந்த தாய் நம்முடைய குழந்தையும் இன்று உயிரோடு இருந்தால் உபநயனஞ் செய்யலாமே என்று எண்ணி வருந்தியழுகிறாள்" என்று அங்குள்ளவர்கள் மறுமொழி கூறினார்கள்.

குழந்தையை இழந்த தாயார் படுந் துன்பம் நாயனாருக்கு மிகுந்த மனவருத்தத்தை அளித்தது. அவர் குளக்கரைக்குச் சென்று தேவாரப் பதிகம் ஓதினார். குழந்தையை விழுங்கிய முதலையானது குழந்தையை மூன்றாண்டுகட்கு உரிய வளர்ச்சியுடன் கரையிலே கொண்டு வந்து கக்கியது. இப்புதுமையைக் கண்டு மக்கள் மிகுந்த வியப்படைந்தனர். செயற்கரிய செய்வார் பெரியர் என்பது அன்று நாயனாரிடத்தில் நன்கு காணப்பட்டது.

"பூவென்ற சீரடி ஆரூர்ப் பரவைதன் போகங் கொளும்
பாவென்ற செந்தமிழ்ச் சுந்தரன் பாடிப் படர்குளத்தில்
ஆவென்ற வாயின் முதலைகொள் பிள்ளையை அன்று
கொண்டு
வாவென் றழைத்த அவிநாசி சூழ்கொங்கு மண்டலமே"

[முதலையுண்ட பிள்ளையை அழைத்தது] (கொங்குமண்டல சதகம்)

1019. முதற்கவிபாடிய கதை

திருவள்ளுவர் தமிழ் மறையை இயற்றினார். அதனை மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றஞ் செய்தற்கு எடுத்துக்கொண்டு சென்றார். சங்கப் புலவர்கள், "சங்கப்பலகை

திருக்குறளுக்கு இடங்கொடுத்தால் அதனை நாங்கள் ஒப்புக் கொள்ளுதற்குத் தடையில்லை யென்று கூறினர். சங்கப் பலகை திருக்குறள் அளவாகச் சுருங்கிப் புலவர்களைத் தண்ணீரில் தள்ளியவுடன் அவர்கள் திருக்குறளின் பெருமையை உணர்ந்து பாராட்டத் தொடங்கினர். எல்லோருக்கும் முன்பாக இறைவன் உருவிலிவாக்காய்;

"திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோ
டுருத்தகு நற்பலகை யொக்க—இருக்க
உருத்திரசன்மர்"

என்னுஞ் செய்யுளைப் பாடினர். பிறகு சங்கப் புலவர்கள் அனைவரும் திருக்குறளைப் புகழ்ந்து பாடினர்.

"சமயக் கணக்கர் மதிவழி கூருது
உலகியல் கூறிப் பொருள் இது என்ற
வள்ளுவன் தனக்கு வளர்கவிப் புலவர்முன்
முதற்கவி பாடிய முக்கட்பெருமான்"

[சிறப்புப்பாயிரம் பாடியது] (கல்லாடம்)

1020. முதுகிலேறிய கதை

கொங்குவள நாட்டில் ஆணூரில் சர்க்கரையார் என்னும் பெயருடைய வள்ளல் ஒருவர் முன்னாளில் வாழ்ந்திருந்தார். இவர் புலவர்களைப் போற்றிப் பொருளளித்துப் புகழுடன் விளங்கியிருந்தார். சர்க்கரையார்பால் நன்கொடை பெற்ற புலவர் ஒருவர் ஒரு காலத்தில் எல்லப்பன் என்னும் மற்றொரு வள்ளலிடம் நன்கொடை பெறச் சென்றார். எல்லப்பன் கொடுத்த நன்கொடைகளை இடக்கையினால் வாங்கினர். இதனைக் கண்ட எல்லப்பன் உமக்கு நன்கொடையைக் கையில் பெறுவது எப்படி என்பது தெரியாதுபோலும்" என்று சொன்னார். இதனைக் கேட்ட புலவர் நன்கொடையை எக் கையால் பெறுவது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். சிறந்த வள்ளலாகிய ஆணூர்ச் சர்க்கரையினிடம் நீட்டிய

வலக்கையைப் பிறரிடம் நீட்ட எனக்கு விருப்பம் இல்லை. இதனால்தான் இடக்கையை நீட்டினேன் என்றார். இதனைக் கேட்ட எல்லப்பன் மிக வியந்தார். ஆணூர்ச் சர்க்கரை யாரின் அரிய தன்மைகளை ஆராய்ந்து பார்க்க வேண்டு மென்று எண்ணினார்; தமது நாட்டுப் புலவர்கள் சிலரைப் பார்த்து, "நீங்கள் கொங்கு நாட்டிற்குச் சென்று ஆணூர்ச் சர்க்கரையின் பெருமையை ஆராய்ந்து மீளுங்கள்" என்று கட்டளையிட்டார். அதுவரை தம்மிடமே தங்கியிருக்குமாறு கொங்கு நாட்டுப் புலவரைக் கேட்டுக்கொண்டார்.

எல்லப்பனுடைய புலவர்கள் கொங்கு நாட்டையடைந் தார்கள். ஆணூரையடைந்து சர்க்கரை மன்ருடியாரின் பூந்தோட்டத்திற்குள் புகுந்தார்கள். அங்கு அருமையாக வளர்க்கப் பெற்றிருந்த செடிகொடிகளை யெல்லாம் மனம் போனவாறு வெட்டினார்கள். பொழிற் காவலர் சர்க்கரை யாரிடஞ் சென்று செய்தியை அறிவித்தனர். சர்க்கரையார் அப்புலவர்களைத் தம்மிடம் அழைத்துவரச் செய்தார். அவர் களைக் கண்டு நல்லவரவு கூறினர். இருக்கைகள் அளித்து இருக்கச் செய்தார். பிறகு புலவர்களைப் பார்த்து, "அருந் தமிழ் உணர்ந்த பெருந்தகையீர்! தாங்கள் பூந்தோட்டத்தில் வெட்டியெறிந்த செடிகொடிகள் அங்கிருத்தற்குத் தக்கவைக ளல்லாமலிருப்பின் ஏவலர்களைக் கொண்டு வெட்டச்செய்தி ருக்கலாமே, தங்களுடைய கைகள் நோகுமாறு தாங்களே ஏன் வெட்ட வேண்டும்?" என்று பலவாறு கூறிப் பாராட்டி னர். பிறகு நீராடல் முதலியவைகளை முடித்துக்கொண்டு எல்லோரும் உண்ணப் புகுந்தனர். புலவர்கள் மேலுஞ் சர்க்கரையாரின் குணங்களை ஆராய்ந்து பார்க்க எண்ணினர் கள். சர்க்கரையாரின் தாய் புலவர்களுக்கு உணவு படைத் துக்கொண்டிருந்தாள். ஒரு புலவர் திடீரென்று உணவு படைத்துக்கொண்டிருக்கும் அம்மையாருடைய முதுகில் ஏறினர். திடுக்கிட்ட அம்மையார் தம்முடைய மகனுகிய சர்க்கரையின் முகத்தைப் பார்த்தார். உடனே சர்க்கரையார் "என்னைப் பத்துத் திங்கள் சுமந்த தங்கட்கு இவரைச் சிறிது நேரஞ் சுமப்பது பெரிய காரியமா?" என்று கேட்டார்.

புலவர் திடீரென்று கீழே குதித்தார் சர்க்கரையாரின் குணநலங்களையும் கொடை நலங்களையும் வியந்து பாராட்டி

னர்கள். கொங்குப் புலவர் கூறியது உண்மையே என்று தெளிந்தார். எல்லப்பனிடஞ் சென்று நிகழ்ந்தவைகளைக் கூறினர்கள்.

"திருத்து புகழ்பெறு மாணூரில் சர்க்கரை செந்தமிழான்
விருத்த முடனன்னை மேலேறத் தாய்வெகு ளாமலெனைப்
பொருத்த முடன்பத்து மாதஞ் சுமந்து பொறையுயிர்த்
தாய்
வருத்த மிதிலென்னை என்றன் அவன்கொங்கு
மண்டலமே"

[முதுகிலேறியது] (கொங்குமண்டல சதகம்)

1021. முதுகூத்தனர் கதை

முதுகூத்தனர் என்பவர் சோழவள நாட்டிலே உறையூரிலே முன்னாளில் வாழ்ந்திருந்தார். இவர் திருவள்ளுவர் காலத்தினர் என்பர். பெரும் புலமை நலம் அமையப் பெற்றவர். திருக்குறளுக்குச் சிறப்புப்பாயிரம் பாடியவர்களில் இவரும் ஒருவர். இவர் நல்ல நிலைமையில் இருந்தபோது குறுநில மன்னர்கள் பலரிடஞ் சென்று நன்கொடை பெற்றுச் சிறப்பான வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தார். காலகதியால் பொருள்நலங் குன்றி வறுமையான நிலைமையை அடைந்தார். அந்நிலையில் சிற்றரசர்களிடமோ பேரரசர்களிடமோ சென்றால் அவர்கள் தம்மை மதியாதிருக்கக்கூடும் என்று எண்ணினார் மன்னனிடமுஞ் செல்லாமல் பெருமித நிலையில் இருந்தார். இவர் வறுமையடைந்துள்ளமையை உணர்ந்த குறுநில மன்னர்கள் இவர் தம்மிடம் வரக்கூடும் என்று எதிர்பார்த்திருந்தனர். இவரோ எவரிடமுஞ் செல்லவில்லை. முன்னையினும் விழுமிய போக்காகத் தலைநிமிர்ந்து நின்றார். அரசர்கள் விரும்பினால் தம்மை வந்து பார்க்கட்டுமென்று எண்ணி யாண்டுஞ் செல்லாமல் இருந்துவிட்டார். இவரை ஓர் அரசன் வந்து கண்டு நலம் உசாவினன். அவ்வரசனிடம் இவர் தமது உயர்ந்த மனநிலையைப் புலப்படுத்தினர். செல்வச் சிறப்போடு கூடியிருக்குங் காலத்தில் பணிவு வேண்டும் வறுமையை அடைந்திருக்குங் காலத்தில் பெரு

மிதம் வேண்டும் என்பதை அனைவரும் இவரிடம் நன்கு உணர்ந்துகொண்டனர்.

[செல்வத்திற் பணிவும் வறுமையில் பெருமையும் வேண்டும்]

1022. முத்திநாதன் கதை

முத்திநாதன் என்பவன் குறுநில மன்னர்களில் ஒருவன். பொருமையுஞ் செருக்கும் பொருந்தியமையப் பெற்றவன். பொல்லாதவனுகிய இவன் அந்நாளில் திருக்கோவலூரை ஆண்டு கொண்டிருந்த மெய்ப் பொருளார் மீது கடும் பகை கொண்டான். பல தடவை அவரை வெல்ல முயன்றுன் முடியவில்லே. இறுதியில் வஞ்சகமாகக் கொல்வதென்று நெஞ் சில் முடிவு செய்தான்.

தவத்தினனேப்போல் கோலங்கொண்டு மெய்ப் பொருளா ரிடஞ் சென்ருன். மெய்ப்பொருளார் இவனே வரவேற்றுப் போற்றினர். "நான் உனக்கு அறிவுரை வழங்கப்போகி றேன் நாம் இருவருந் தனித்தவிடத்தில் இருக்கவேண்டும் என்ருன். அவ்வாறே இவனே அவர் தனியிடம் ஒன்றுக்கு அழைத்துக்கொண்டு சென்ருர்.

அவ்விடத்திலே இவன் மெய்ப்பொருளாரைக் கொலே செய்தான். வஞ்சகம் பொருந்திய உள்ளத்தையுடையவனது பொய்யொழுக்கத்தைக் கண்டு மண், விண், நீர், தீ, காற்று என்னும் ஐம்பெரும் பூதங்கள் தம்முள்ளே எள்ளி நகை யாடும் என்பது இவன்பால் உண்மையாகியது.

[வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம்]

(பெரிய புராணம்)

1023. முத்துப் பந்தல் பெற்ற கதை

திருஞான சம்பந்தர் திருவலஞ்சுழியை அடைந்து சிவ பெருமானேப் போற்றி வழிபட்டார். சில நாள் அங்குத் தங்கி யிருந்தார். முதிர் வேனிற் காலம் வந்தது. திருவலஞ்சுழியை

நீங்கித் திருப்பழையாறைக்குப் போவதற்குப் புறப்பட்டார். அடியார்கள் பலர் உடன் சென்றனர்; திருவாறை மேற்ற ரியை அடைந்து வணங்கினர். திருச்சத்தி முற்றத்திற்குச் சென்ருர். பிறகு திருப்பட்டீசுரம் போவதற்குப் புறப்பட்டார். திருஞானசம்பந்தப் பிள்ளேயார்மீது வெயில் படாமல் சிவ பூதம் முத்துப்பந்தரை எடுத்து வந்து பிடித்தது. "பட்டீசர் எம்மை விடுத்தருளினர்" என்று கூறிற்று. பிள்ளேயாரோடு சென்றவர்கள் அம் முத்துப் பந்தரைக் காம்பிலே பிடித்துக் கொண்டார்கள். பிள்ளேயார் முத்துப்பந்தரின் நிழலிற்சென்று பட்டீச்சுரத்தையடைந்தார்.

[முத்துப்பந்தல்]

1024. முப்பருவங் காட்டிய கதை

விக்கிரம பாண்டியன் மதுரையில் அரசாட்சி செய்து கொண்டிருந்தான். அப்பொழுது மதுரையில் விரூபாக்கன் என்னும் அந்தணன் ஒருவன் இருந்தான். அவனுடைய மனேவியின் பெயர் சுபவிரதை. இவர்களுக்குக் கௌரி என்னும் பெயருடைய பெண்ணெருத்தி பிறந்தாள். அவள் முன் பிறவியிற் செய்த நல்வினேயினுல் இறைவனிடத்திலே பேரன்புடையவளாக இருந்தாள். தந்தை தன்னுடைய மகனே வைணவ அந்தணன் ஒருவனுக்கு வாழ்க்கைத் துணேவியாக்கினன். கௌரியினுடைய மாமன் மாமி முத லியோர் வைணவர்களாகையால் கௌரியைப் பகைத்தார் கள். பலவித தொல்லேக்கு உள்ளாக்கினர்கள். கௌரி எதற்கும் தளராமல் இறைவனுடைய அருமறையை எண் ணியவாறே இருந்தாள். இறைவன் இவளுடைய அன் புக்கு மகிழ்ந்தார். தம்முடைய வடிவத்தை முதுமையாக வும் இளமையாகவும் குழவியாகவுங் காட்டினர். பிறகு கௌரியை ஆட்கொண்டு தம்முடைய திருவடி நிழலிற் சேர்த்தார்.

"வாலவிருத்த குமாரன் எனச் சில
வடிவு கொண்டு நின்ரு யென்று வம்பிலே"

[விருத்த குமார பாலரானது] (மதுரைக் கலம்பகம்)

1025. முப்புரம் எரித்த கதை

தாரகன் மக்களாகிய தாரகாக்கன், கமலாக்கன் வித்துன் மாலினி என்னும் மூன்றுபேரும் மூன்றுகோடியாண்டுகள் தவ மியற்றினர்கள். நான்முகனுல் பொன், வெள்ளி, இரும்புகளி னுல் ஆகிய மூன்று மதில்களைப் பெற்றார்கள். இவை முறையே விண்ணுலகம், மண்ணுலகம், கீழுலகம் என்னும் இடங்களில் நிலைபெற்றிருந்து வேண்டும் இடங்கட்கு உடன் செல்லும் இயல்புடையன. அவை ஆயிரம் யாண்டுக்கு ஒரு முறை மூன்றேமுக்கால் நாழிகை நேரம் ஒருங்கு சேரும். அக் காலத்தில் ஒரு கணை விடுத்து அவைகளை அழித்தால் அல்லா மல் வேறெவ்வகையானும் அழிக்க முடியாது. இவ்வசுரர்கள் திருமால் முதலான தேவர்களையும் வெற்றி கொள்ளும்படியான மேன்மையைப் பெற்றிருந்தார்கள். மூவரும் திருநீறு சிவ கண்மணி முதலியவைகளையணிந்து சிவ வழிபாடு செய்பவர் களாக இருந்தும் தேவர்களுக்குத் துன்பம் செய்பவர்களாக இருந்தார்கள். அதனுல் திருமால் புத்த குருவாகச் சென்று இவர்களை மயக்கினர். அதனுல் சைவ சமயக் கொள்கை யில் வெறுப்புற்று மயங்கினர்கள். இவ்வசுரர்களைத் தொலைத் தருளுமாறு தேவர்கள் சிவபெருமானை வேண்டிக்கொண் டார்கள்.

சிவபெருமான் தேவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கினர். நிலம் தேராகவும், கதிரவனுந் திங்களும் இரு உருளைகளாகவும் நான்கு மறைகளும் நான்கு குதிரைகளாக வும் நான்முகன் தேரோட்டியாகவும், மறை மொழி கடிவாள மாகவும் ஓம் சாட்டையாகவும், ஆதிசேடன் நாணுகவும், மாற்று அம்பிற்கட்டிய சிறகாகவுங்கொண்டு முப்புரத்தை யடைந்தார். தேவர்கள் ஒவ்வொருவரும் முப்புர அழிவு தங்களாலேயே நிறைவேறுவதாகச் செருக்கடைந்தனர். இதனை உணர்ந்த சிவபெருமான் நகைத்தார். அதனுல் முப் புரம் தீப்பற்றி யெரிந்தது. அப்புரத்தில் இருந்த அவுணர் கூட்டமும் எரிந்தழிந்தது.

"வெள்ளி இரும்பு பொன்னெனப் பெற்ற
மூன்றுபுரம் வேவத் திருநகை விளையாட்டு
ஒருநாள் கண்ட பெருமான் இறைவன்"

[முப்புரம் எரித்தது]

(கல்லாடம்—28)

"அறிவுநிலை போகி அருச்சனை விடுத்த
வெள்ளமுரண் அரக்கர் கள்ளமதில் மூன்றும்
அடுக்குநிலை சுமந்த வலித்தடப் பொன்மலை
கடுமுரண் குடிக்கும் நெடுவில் கூட்டி
ஆயிரம் தீவாய் அரவு நாண்கொளீஇ
.....
சிறுநகை கொண்ட ஒருபெருந் தீயின்
ஏழுயர் வானம் பூழிபடக் கருக்கி"

[முப்புறம் எரித்தது] (கல்லாடம்—26)

1026. முப்புர அரக்கர் கதை

தாருகாசுரன் என்பவனுக்குத் தாரகாக்கன், கமலாக்கன், வித்யுன்மாலி என்னும் பெயருடைய மக்கள் மூவர் தோன்றினர்கள். இறைவனை நோக்கி அருந்தவம் புரிந்தார்கள். இறைவன் இவ்வரக்கர்கட்கு அருள் புரிந்து பொன், வெள்ளி, இரும்பு என்னும் மூவகை உலோகங்களாற் செய்யப்பட்ட மூன்று நகரங்களைக் கொடுத்தருளினர். அதில் அமர்ந்து இவர்கள் அரசு புரிந்துகொண்டிருந்தார்கள். அந்த நகரங்கள் மூன்றும் பறந்து திரியும் பண்பு வாய்ந்தவை. இவர்கள் முதலில் அறிவும் அடக்கமும் உடையவராக இருந்தார்கள். தேவர்கட்கும் பிறருக்குந் தீங்கினைப் புரிந்தார்கள். திருமால் இவர்கட்குக் குருவாக அமைந்தார். இவர்களுடைய தொல்லை நாளும் வளர்ந்துகொண்டே போயது.

தேவர்கள் சிவபிரானிடம் முறையிட்டார்கள். தங்கட்கு அழிவு நேரிடக்கூடும் என எண்ணி முப்புர அரக்கர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவில்லை. தம்மை எவரும் எதுவுஞ் செய்ய முடியாதென்று இறுமாந்திருந்தனர். சிவபிரான் இவ்வரக்கர்களோடு போருக்கு வந்தார். இவ்வரக்கர்களுடைய பண்பினையெண்ணிச் சிறிது புன்னகை புரிந்தார்.

மூப்புரங்களும் ஒரு நொடியில் எரிந்தொழிந்தன. மூவரும் ஓடி உயிர் பிழைத்தனர். கேடு வருமுன் தன்னைப் பாது காத்துக் கொள்ளாதவன் நிலைகெட்டொழிவான் என்பது இவ் வரக்கர்கள்பால் நன்கு விளங்கியது.

[வருமுன் காத்தல்]

1027. முயலகன் கதை

சிவபெருமானுல் தாருகாவன முனிவர்களுடைய செருக்கு ஒழிந்தது. ஆயினும் அவர்கள் தங்கட்குள்ள மடமைக் குணத்தினுல் சிவபெருமானுடைய பெருமைக் குணத்தினைச் சிறிதும் உணரா ராயினர். சிவபெருமானை அழித்தொழிக்க வேண்டுமென்னுந் தீய நோக்கத்துடன் கொடிய வேள்வி யொன்றைச் செய்தார்கள். வேள்வித் தீயி லிருந்து கொடிய அசுரன் ஒருவன் தோன்றினன்.

முனிவர்கள் அவ்வசுரனைப் பார்த்து, "நீ போய்ச் சிவ பெருமானை அழித்து வருவாயாக" என்று கூறி அனுப்பினர் கள். அவன் பேராரவாரத்தோடு சிவபெருமானையெதிர்த்து வந்தான். அவன் மிக்க நல்வினை செய்திருந்தானுகையால் அவனைத் தம்முடைய திருவடிகளால் கீழே தள்ளி மிதித்து அவன் மீதேறித் திருக்கூத்தாடலானர்.

"கிட்டிய முயல கனையுற மிதித்த
கிளரொளித் திரோபவப் பதமும்
சிட்டிசெய் துடிசேர் செங்கையும் வீசும்
திருக்கையும் சிறியனே அறிவேன்"

[முயலகன்] (பரம ரகசிய மாகூ)

1028. முரன் கதை

இவன் அரக்கர்களில் ஒருவன். சோதிகம் என்னும் நகரில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவன். வஞ்சகம் முதலிய தீக்குணங்கள் இவனுடைய நெஞ்சகத்தில் நிறைந்திருந்தன. நரகாசுரனுக்கு இவன் அமைச்சனாக அமைந்திருந்தான். ஆற்றலும் அறிவும் நன்கு அமையப் பெற்றவன். எதையும் நன்கு ஆராய்ந்து ஒழுங்காக ஒரு முடிவு செய்து கொண்ட பின்னரே செய்ய வேண்டிய காரியத்தைச் செய்யத் தொடங்குவான். ஆனால் எடுத்த காரியத்தை முடிக்கும் வழக்கம் இவனிடம் இல்லை. அரைகுறையாகச் செய்து நிறுத்தி விடுவான். இந்திரனோடு போர் செய்வதற்கு முடிவு செய்து அதற்காக வேண்டிய ஏற்பாடுகளை முறையாகச் செய்து கொண்டு சென்றான். ஆனால் காரியத்தை முடிக்காமலே மீண்டான். நரகாசுரனுக்கும் கண்ணனுக்கும் போர் நிகழ்ந்தபொழுது அப்போரில் இவன் அழிந்தொழிந்தான். மனவுறுதியில்லாதவர்கள் ஒரு காரியத்தைச் செய்வதற்கு முறையாக ஆராய்ந்து புகுந்தாலும் குறையாகவே செய்து முடிப்பார்கள் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது.

[உறுதியில்லாதவர் காரியத்தை முடியார்]

1029. முருகன் காட்சி கொடுத்த கதை

அருணகிரிநாதர் காலத்தில் திருவண்ணாமலையைப் பிரபுடதேவராசன் என்பவன் அரசாட்சி செய்து கொண்டிருந்தான். அவ்வரசன் அருணகிரிநாதரிடத்தில் அன்புடையவனாக இருந்தான். அக்காலத்தில் அவ்வூரில் வாழ்ந்திருந்த சம்பந்தாண்டான் என்பவனுக்கு அரசன் அருணகிரியார் மீது அன்பாக இருப்பது மிகுந்த பொறுமையை உண்டாக்கியது. அவன் அரசனிடத்தில் "நான் தேவியை வழிபடுபவன்; அருணகிரியார் முருகனை வழிபடுபவர். எங்கள் இருவரில் யார்தாம் வழிபடு கடவுளைத் தங்களுக்குக் காட்டுகின்றேமோ அவர்களிடத்தில்தான் தாங்கள் பற்றுடன் நடந்துகொள்ள

வேண்டும்'' என்றான். அரசன் இதற்கு இணங்கினான். அருணகிரிநாதர் முருகனை அரசனுக்குக் காட்சிதரச் செய்ய முடியும் என்றார். சம்பந்தாண்டான் தான் தேவியை அரசனுக்குக் காட்டுவதாகச் சொன்னான். இருவரும் முயன்றனர். தான் கூறியபடி தேவியை அரசனுக்குக் காட்டச் சம்பந்தாண்டானால் முடியவில்லை. அருணகிரிநாதர், ''அதலசேடனு ராட'' என்னும் பாடலைப் பாடி அரசனுக்கு முருகன் காட்சி கொடுக்குமாறு செய்தார். இதனால் சம்பந்தாண்டான் தோல்வியடைந்தான்.

''அருணையில் ஒருநொடி தனில் வரு மயில்வீரா!
மயிலினில் வந்தெனை யாட்கொளல் சகமறியும்படி
காட்டிய குருநாதா!''

[முருகன் காட்சி] (திருப்புகழ்)

1030. முருகன் பன்றியை அடக்கிய கதை

இரணியாக்கன் என்பவன் நிலவுலகத்தைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு சென்றான். நிலமகள் திருமாலிடத்தில் முறையிட்டாள். திருமால் பன்றி வடிவமெடுத்துச் சென்று இரணியாக்கனைக் கொன்றார். நிலத்தைத் தம் கொம்பின் நுனியில் தாங்கிக்கொண்டு மேலெழுந்தார். நிலத்தை முன் போல நிலை நிறுத்தினர். இரணியாக்கனைக் கொன்றபொழுது திருமால் அவனுடைய குருதியை மிகுதியாகக் குடித்தார். அதனால் அளவு கடந்த வெறியுண்டாகியது. நிலவுலகைக் கலக்கலானார். அதனால் உலகம் தலைதடுமாறியது. சிவ பிரான் முருகவேளை அனுப்பினர். முருகவேள் அப்பன்றியை எடுத்துச் சுழற்றி அடக்கினர். அதன் கொம்பைப் பிடுங்கிக் கொண்டு போய் இறைவனிடங் கொடுத்தார். இறைவன் அக்கொம்பை அணிந்து கொண்டார்.

''ஏனபதி தனை கோலக் காலமாக
அமர் செய் தவடி வேலா!''

[பன்றியை அடக்கியது] (திருப்புகழ்)

1031. முருகம்மையார் கதை

முருகம்மையார் என்பவர் வெகு காலத்திற்கு முன்னர்த் திருப்பரங்குன்றத்தில் வாழ்ந்திருந்தார். முருகன் மீது அளவு கடந்த அன்புடையவர். இவர் பிறந்தது முதற் கொண்டே, "முருகா முருகா" என்று கூறிக் கொண்டிருந்தார். அதனால் இவருடைய பெயர் முருகம்மையார் என்றே வழங்கியது. இவ்வாருக, இவ்வம்மையாருக்குத் திருமணம் நடைபெற்றது. நடைபெற்ற பிறகும் அம்மையார் முருகா என்பதை ஓதிக் கொண்டே இருந்தார். பக்கத்து இல்லில் முருகன் என்னும் பெயருடையவன் ஒருவன் இருந்தனன். அவன் ஒரு மடையன். அவன் முருகம்மையார் தன்மீது காதலுடையவர் போலுமென மாறுபாடாக எண்ணி யிருந்தான். இதனை உணர்ந்த முருகம்மையாருடைய கணவன், 'முருகா' என்று மொழிதல் கூடாது, என்று கூறித் தடுத்தான். இளமை முதற் கொண்டே பழகிவிட்ட இதனை மறந்திருக்க அம்மையாரால் இயலவில்லை. மேலும் கூறிக் கொண்டே யிருந்தார். கணவன் ஓர் அறிவிலி. சினங் கொண்ட அவன் ஒருநாள் கத்தி ஒன்றை எடுத்து அம்மையாருடைய கையை வெட்டி விட்டான். அப்பொழுதும் அம்மையார் 'முருகா முருகா' என்றே கதறினர். முருகன் மயில் மீது தோன்றினன். வெட்டுப்பட்ட அம்மையாருடைய கை வளருமாறு அருள் செய்து மறைந்தான்.

"ஒருமுரு காஎன்றென் னுள்ளங் குளிர உவந்துடனே
வருமுரு காஎன்று வாய்வெரு வாநிற்பக் கை
[யிங்ஙனே
தருமுரு காஎன்று புலம் பாநிற்பத் தையல்முன்னே
திருமுரு காற்றுப் படையுட னேவருஞ் சேவகனே."

[முருகம்மையார்]

1032. முருங்கை மரந்தளிர்த்த கதை

துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள் திருவெங்கை நகரத்தில் தமக்காக அண்ணுமலே ரெட்டியார் அமைத்த திருமடத்தில் எழுந்தருளி யிருந்தார். மடத்தின் எதிரில் முருங்கை மரம் ஒன்று இருந்தது. அதனுடைய காய் கீரை முதலியன அடியார்கட்குப் பயன்பட்டுக் கொண்டிருந்தன. அந்நகரத்தில் எழுந்தருளிய பிடாரிக்குத் திருவிழா நடை பெற்றது. தேர்த் திருவிழாவன்று பிடாரியின் தேர் மடம் இருந்த தெரு வழியாகச் சென்றது. தேர் முருங்கை மரத்தின் மீது மோத முருங்கை மரம் முறிந்து விழுந்து விட்டது. இதனைக் கண்ட சிவப்பிரகாச அடிகள் பிடாரி மீது செய்யுள் ஒன்றைப் பாடினர். அச்செய்யுளைப் பாடியவுடன் பிடாரியின் தேர் அழிந்தது. முருங்கை மரம் நன்முகத் தழைத்து வளர்ந்து நின்றது. இப்புதுமையைக் கண்டோர் சிவப்பிரகாச அடிகளின் தெய்வத் தன்மையைப் பாராட்டினர்.

" திருந்துதமிழ் இலக்கணவைந் திணைக் கோவை
விருத்தகிரிச் செல்வற் கோதும்
பெருந்தகைமை யுடையம்யாம் விடுமோலே
வெங்கைநகர்ப் பிடாரி காண்க
இரும்புவியில் ஒருமுருங்கைக் கொம்பொடியா
மற்காத்திங் கிருக்குமே நீநம்
முருங்கைதனே வேரோடுங் கனந்தனேயென்
ருலுனக்கு முறைய தாமோ ?"

[முருங்கை தளிர்த்தது] (சிவப்பிரகாச அடிகள் வரலாறு)

1033. முலைப் பால் தந்து பாடச் செய்த கதை

திருஞான சம்பந்தர் சீகாழிப் பதியிலே தோன்றியருளினர். தந்தையாருடைய பெயர் சிவபாதவிருதயர். தாயார் பெயர் பகவதி அம்மையார். சிவபாதவிருதயர் பிள்ளை

யாரை அவருடைய மூன்றும் ஆண்டிலே அழைத்துக் கொண்டு கோயிலின் உட்புறத்திலுள்ள திருத்த நீருக்கு நீராடச் சென்றார். நீரில் இறங்கி மூழ்கினார். தந்தையாரைக் காணுத பிள்ளையார் தோணியப்பர் எழுந்தருளியுள்ள திருக் கோயிலின் முடியைப் பார்த்து, "அம்மே! அப்பா!!" என்று தமது மலர் வாயைத் திறந்து அழுதார். தோணியப்பர் பிள்ளையாருக்கு அருள் செய்யத் திருவுளங் கொண்டார். உமை அம்மையாரோடு காளுபூர்தியில் திருக்குளக்கரைக்கு எழுந்தருளினர். அம்மையார் தமது திருமுலைப் பாலைப் பொற் கிண்ணத்தில் கறந்து சிவஞானத்தை அதிலே குழைத்துப் பிள்ளையாருக்குக் கொடுத்தார். அதனை உண்ட திருஞான சம்பந்தர் உடனே தேவாரப் பதிகங்களைப் பாடத் தொடங்கினர்.

"பூவான் மலிமணிநீர்ப் பொய்கைக் கரையினியற்
பாவான் மொழிஞானப் பாலுண்டு—நாவான்
மறித்தெஞ் செவியமுதாய் வார்த்தபிரான் தண்டை
வெறித்தண் கமலமே வீடு."

[பாடச் செய்தது] (நால்வர் நான்மணிமாலை)

1034. முல்லான் கதை

சோழவள நாட்டிலே ஆமூர் என்னும் ஊரிலே முல்லான் என்னும் பெயருடைய நல்லான் ஒருவன் இருந்தான். இவன் சிறந்த பொருள் வளம் பெற்றிருந்ததோடு பிறருக்கு உதவி செய்யும் இனிய நீர்மையும் பொருந்தப் பெற்றவனுக இருந்தான். சிறந்த குணங்களெல்லாம் இவனிடம் செறிந்து விளங்கின. திருந்திய அறிவு பொருந்திய இவன் அறிஞரிடத்திலே அளவிறந்த அன்பு கொண்டிருந்தான். ஔவையார் இவன் காலத்தில் வாழ்ந்திருந்தார். அவர் ஒரு நாள் இவன் ஊர் வழியே சென்றார். ஔவையாரைக் கண்டு முல்லான் மிக மகிழ்ந்தான். பணிந்து வணங்கினன்; தன்னுடைய இல்லத்திற்கு வரவேண்டுமென்று வேண்டிக் கொண்டான்.

ஔவையார் முல்லானுடைய இல்லத்திற்குச் சென்றார். பல வாறு பாராட்டிப் போற்றினன். இனிய விருந்து செய்தான். சில நாட்கள் தன் இல்லத்தில் தங்கி யிருக்க வேண்டு மென்று கூறினன். ஔவையாரும் அவனுடைய வேண்டு கோளின்படி அங்கே சில நாள் தங்கி யிருந்தார். முல்லா னுடைய அன்பு என்றும் ஒரே படியாக இருந்ததே யன்றிச் சிறிதும் மாறுபாட்டை அடையவில்லை. சில நாள் இருந்த பிறகு முல்லானிடம் சொல்லிக் கொண்டு வேறிடஞ் சென்றார். ஒரு நாள் புலியூர் என்னும் ஊர்வழியே சென்றார். அவ் வூரிலே குறுநில மன்னன் ஒருவன் இருந்தான். அவனு டைய பெயர் சிங்கன். அவனிடம் அழகுந் திருவும் அமைந் திருந்தும் அறிவு அமையப்பெறவில்லை. பொதுவாக அவனை எல்லோரும் பொல்லாதவனென்றே புகல்வர். ஔவையாரைப் பற்றி அறிந்திருந்த அவன் ஔவையாரைத் தன்னுடைய இல் லத்திற்கு அழைத்துச் சென்றான். காலையில் ஔவையாரை நன்கு பாராட்டிப் போற்றினன். மாலையிலோ புல்லர்கள் சிலரோடு சேர்ந்துகொண்டு பொல்லாத காரியங்களில் ஈடுபட்டான். ஔவையாரை அடியோடு மறந்துவிட்டான். ஔவையார் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு வேறிடஞ் சென் றார்.

ஒரு நாள் ஔவையார் சோழ மன்னனுடைய அவைக் குச் சென்றார். சோழ மன்னன் ஔவையாரைக் கண்டு அளவளாவினன். "தாங்கள் இது வரையில் கண்டவர் களில் நல்லவர் யாவர்?" என உசாவினன். உடனே ஔவையார்;

"காலையிலொன் றுவர் கடும்பகலில் ஒன்றுவர்
மாலையிலொன் றுவர் மனிதரெலாம்—சாலவே
முல்லானைப் போல முகமுமக மும்மலர்ந்த
நல்லானைக் கண்டறியோம் நாம்."

என்று செய்யுள் ஒன்று பாடினார். மக்களுட் சிறந்தவர்கள் என்றும் மாறுத ஒரே வகையான பண்போடு விளங்குவார் கள் என்பது முல்லானிடம் நன்கு விளங்கியது.

[முல்லான்]

1035. முற்கல முனிவர் தவமிழந்த கதை

முற்கல முனிவர் என்பவர் காட்டில் அமர்ந்து கடுந் தவம் புரிந்து கொண்டிருந்தார். முனிவர் அதிகமாகத் தவத்தைச் செய்தால் தன்னுடைய உலகத்திற்கு வந்து தன்னுடைய பதவியைப் பிடித்துக் கொள்வாரே என்று அஞ்சினான் இந்திரன். அவருடைய தவத்தைக் கெடுக்க எண்ணினான். தன்னுடைய வாட் படையைக் கொண்டு போய்த் தவஞ் செய்யும் முனிவருக்கு முன்னால் வைத்தான்.

முற்கல முனிவர் சிறிது நேரத்தில் தவத்தில் இருந்து விழித்தார். தமக்கு முன்னால் கூரிய வாட் படை "தக தக" வென்று ஒளியைக் கான்றுகொண் டிருத்தலைக் கண்டார். அதனை யெடுத்துப் பயன்படுத்த வேண்டு மென்னும் அவா அவருக்கு உண்டாகியது. தவத்தை விட்டு எழுந்தார்; அவ்வாட் படையைக் கையில் எடுத்தார்; முதலில் பல மரங்களையும் செடி கொடிகளையும் வெட்டி வீழ்த்தினார். பிறகு விலங்குகள் பலவற்றை வெட்டிக் கொன்றார். இரும்பு பிடித்தவன் கையுஞ் சிரங்கு பிடித்தவன் கையுஞ் சும்மா இரா வன்றே? ஓரறிவு படைத்தவைகளையே யன்றி ஐயறிவு படைத்தவைகளையும் முனிவர் வெட்டிக் கொன்ற காரணத்தினால் அவர் தம்முடைய தவத்தை இழந்தார். தீவினை மிகுதியால் நிரயத் துன்பத்தையும் அடைந்தார்.

"இந்திரன்வாள் வைக்க எடுத்துமுனம் முற்கலனார்
தந்தருமம் விட்டுத் தவமிழந்தார்—சந்ததமும்
பாகையில்வாழ் புன்னைவனப் பார்த்திபா ஆகையினு
லேகை வினைகர வேல்."

[தீவினை தவத்தைக் கெடுத்துவிடும்] (ஆத்திசூடி வெண்பா)

1306. முற்றத்திற் சென்று காட்சி கொடுத்த கதை

திருக்கழுக்குன்றத்தில் முன் காலத்தில் உருத்திர கணிகை யொருத்தி வாழ்ந்திருந்தாள். அவள் சிவபெரும

னிடத்தில் மிகுந்த அன்புடையவள். அவள் ஒரு நாள் இறைவன் திருமுன்பு நின்று, "கழுக்குன்றவாணரே! அடியாளுடைய இல்லத்தின் முற்றத்தில் வந்து காட்சி கொடுத்தருள வேண்டும்" என்று செய்யுள் ஒன்று இயற்றிச் சிவபெருமானே வேண்டிக் கொண்டனள். சிவபெருமான் அம்மாதினிடத்தில் அருள்கூர்ந்தார். அவ்வாறே அம்மாதின் இல்லத்தின் முற்றத்திற்குச் சென்று அவளுக்குக் காட்சி கொடுத்தருளி அவளே ஆட்கொண்டார். அம்மாது இயற்றிய செய்யுள் இக்காலத்தில் அகப்படவில்லை.

"விணமுற்றப் பாட்டொன்று வேட்டோர் கணிகை
மணமுற்றத் தேவந்தான் வந்தான்... ... ..."

"வேட்டொரு பெண்,

"முற்றத்தி லேவந்து முன்னிற்கி லோவென்று
சொற்றத்தில் வேறுமொரு சொல்லுண்டோ?"

(திருக்கழுக்குன்றத்து உலா)

[உருத்திர கணிகையின் மெய்யன்பு]

1037. முனிவர்கள் கதை

வெகு காலத்திற்கு முன் காமதம் என்னுங் காட்டில் முனிவர்கள் பலர் அருந்தவம் இயற்றிக் கொண்டிருந்தனர். அக்காடு இனிய நீர் நிலைகளாலும் காய் கனிகளாலும் நிறைந்து தவஞ் செய்வதற்கு ஏற்றதாக அமைந்து விளங்கியது. அதனால் முனிவர்கள் யாதொரு கவலையு மில்லாமல் அங்குத் தவஞ் செய்து கொண்டிருந்தனர். எதிர்பாராத வாறு பல ஆண்டுகள் மழை பெய்யாமற் போய்விட்டது. அதனால் நீர் நிலைகளில் நீர் இல்லை. நீர் இல்லாமற் போகவே முனிவர்கள் நீராடலுக்கும் பருகுவதற்கும் நீர் கிடைக்காமல் மிகுந்த அல்லலுக்குள்ளானார்கள். அங்கு ஐம்பது ஆண்டுகட்கு மேல் தவஞ் செய்து கொண்டிருந்த அத்திரி முனிவர் என்பவரும் கலங்கினர். இறைவனைத் தொழுதார்; இறை

வனருளால் மழை பெய்தது. எல்லோருடைய தொல்லை களும் அகன்றன. எத்தகையோர்கட்கும் நீரில்லாவிடின் யாதும் செய்ய இயலாதென்பதும் நீரும் மழையில்லா விட்டால் அகப்படமாட்டா தென்பதும் அன்று நன்கு அறியப் பட்டன.

[மழை] (சிவமகாபுராணம்)

1038. முனிவர்கள் சாபம் பெற்ற கதை

அந்தகாசுரன் என்பவன் கொடுங்கோல் நடத்திக் கொண்டிருந்தான். அதனால் நாட்டிலே பன்னிரண்டு ஆண்டுகள் மழை இல்லாமற் போய்விட்டது. தேவதாரு வனத்திலிருந்த பிருகு முதலிய முனிவர்கள் தம்முடைய பசித் துன்பம் நீங்குமாறு கௌதமருடைய மனையிலே வந்து தங்கி யிருந்தார்கள். பன்னிரண்டு ஆண்டுகள் சென்ற பிறகு மழை பெய்து பஞ்சம் நீங்கியது. பிருகு முதலிய முனிவர் கள் தத்தம் இருப்பிடங்கட்குச் செல்ல எண்ணினர்கள். கௌதமரிடங் கழறினால் அவர் அனுப்ப மாட்டார் என்று முடிவு செய்து வேறொரு சூழ்ச்சியை நாடினர்கள்.

தங்களுடைய மாயையால் நரம்பெழுந்துடல் மெலிந்த ஓர் ஆவினைப் படைத்தார்கள். அதனைக் கௌதம ரிருப்பிடத் தில் நிறுத்தினர்கள். அதனைக் கௌதமர் பார்த்தார். இவ் வாவினைக் காக்கவேண்டுமென்று எண்ணினர். அதனு டலைத் தடவிக் கொடுத்தார். அது கீழே விழுந்து இறந்தது. அதனைப் பார்த்த பிறகு பிருகு முதலிய முனிவர்கள் அனை வரும் நாங்கள் ஆவினைக் கொன்றவனது இருப்பிடத்தில் இருக்க மாட்டோம் என்று கூறிப் புறப்பட்டுத் தேவதாரு வனத்திலுள்ள தங்கள் இருப்பிடங்களை அடைந்தார்கள். இதனைக் கௌதம முனிவர் தம்முடைய அறிவுப் பார்வை யால் அறிந்தார். நம்மிடம் இருந்து நீங்குவதற்கு இம்முனி வர்கள் இச்சூழ்ச்சியைச் செய்தார்கள் என்று அறிந்தார். "இவர்கள் மறைநூல் ஒழுக்கை விட்டுச் சிவபெருமானிடத் திலே அன்பு குன்றி நிரயத்தில் வீழக்கடவர்" என்று வச வுரை வழங்கினர். அவர்களும் அவ்வாறுயினர்.

"கோதமன் ஞானக் கண்ணுல் குறித்தினி துணர்ந்து
[நோக்கி
மாதவர் இழைத்த தீதென் றறிந்துநான்
[மறைவல் லோர்கள்
வேதநூல் ஒழுக்கம் மாறி விடையவன் அன்பில் தீர்ந்து
தீதுறு நரகின் வீழ்க என்றுவெஞ் சினத்தில் வைதான்."
[முனிவர்கள் சூழ்ச்சி] (கூர்ம புராணம்)

1039. முனையடுவார் கதை

சோழவள நாட்டில் மயூரத்திற்கு அண்மையில் உள்ள திருநீடுர் என்னும் சிவப்பதியில் முனையடுவார் என்பவர் தோன்றினர். இவரிடம் இயற்கையாகவே இறையன்பு, உயிர்களிடத்து இரக்கம் உடைமை முதலிய நல்லியல்புகள் அமைந்திருந்தன. இவர் தம்மைப் போருக்குதவி செய்ய வேண்டுமென்று அழைப்பவர்களோடு சென்றார். போரில் அவர்களுக்கு உதவியாக நின்று துணை புரிந்தார். அவர்கள் நல்கும் பொருளைக் கொண்டு வந்து சிவபூசைக்கும் சிவனடியார் திருத் தொண்டிற்கும் பயன்படுத்தினர். இதன் பயனுக இவருக்கு நற்கதி கிட்டியது.

"வீடார் தொடைக்கும் படைக்குமிவன்
மேலோ னென்ன வேந்தருக்குத்
தேடார் வலியார் எண்ணரைச்
செகுத்துப் படைத்த செழும்பொனெலாம்
நீடாதளித்து முனையடுவார்
நீடூர் அமர்ந்து நெறி சேர்ந்தார்
வாடா திருக்கும் அரசிருப்பு
வளஞ்சேர் சோழ மண்டலமே."
[முனையடுவார்] (சோழ மண்டல சதகம்)

1040. முனையதரையன் கதை

சோழவள நாட்டை வீரசோழன் அரசாட்சி செய்து கொண்டிருந்தான். அப்பொழுது முனைய தரையன் என்னும் பெயருடையவன் ஒருவன் அரசனுடைய கட்டளை பெற்றுத் திருக் கண்ணபுரம் என்னும் ஊரில் தண்டத் தலைவனாக இருந்தான். இவன் இறை வசூல் செய்து பேரும் புகழும் பெற்று விளங்கினன். கண்ணபுரத்தில் எழுந்தருளிய கார் வண்ணன்பால் அன்பு மிகுந்தவனாக இருந்தான். கோயிற் கணிகை ஒருத்தியைக் காதலித்து அவளோடு இன்ப வாழ்க்கை நடத்தினன். ஆயினும் இராச காரியத்திலும் தெய்வ காரியத்திலும் தவறில்லாமல் நடந்து கொண்டான். அந்நாளில் பஞ்சம் உண்டாகி நாட்டைத் துன்பத்திற்குள் ளாக்கியது. முனையதரையன் தான் இறையாக ஈட்டிய பொருள்களை எல்லாம் வறியவர்க்கு வழங்கி அவர்களுடைய தொல்லையைப் போக்கினன். அமைச்சர்கள் முனையதரையனுடைய செயலைக் கண்டு சீற்றங் கொண்டார்கள். நாடு செழித்தாலும் இவன் அரசனுக்குச் சேர வேண்டிய பொருளைக் கொடுக்க மாட்டான் என்று எண்ணினார்கள். பிடித்துச் சிறையில் அடைத்தார்கள்.

முனையதரையனுடைய காதற் பரத்தை தன் காதலனைச் சிறையிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று கூறித் தான் ஈட்டி வைத்திருந்த பொருள்களை யெல்லாம் கொடுத்தாள். ஆயினும் முனையதரையன் விடுதலையாக வில்லை. கணிகை அழுது வருந்தினாள். பெருமாள் திருமுன்பு சென்றாள். ''இன்று ஐந்தாவது நாள் என்னுடைய காதலன் வராவிடில் தீ வளர்த்து அதில் விழுந்து உயிரை விடுவேன்'' என்று சூளுரை உரைத்தாள். ஐந்தாம் நாள் தீயும் மூட்டினாள். சவுரிராசப் பெருமாள் சோழன் கனவில் தோன்றினன். நடந்தவைகளைக் கூறினார். ''நம்முடைய அன்பனைச் சிறை விடுவாயாக'' என்று கூறி மறைந்தார். சோழ மன்னன் முனையதரையனைச் சிறை நீக்கினன். சீரும் சிறப்புஞ் செய்து அனுப்பினன். முனையதரையன் காதற்பரத்தையோடு இனிது வாழ்ந்தான்.

ஒரு நாள் இரவு இருவரும் உண்ணத் தொடங்கினர். பால் பயறு சர்க்கரை முதலியவைகளைக் கொண்டு ஆக்கப்

பட்ட உணவு ஒன்றை உண்ணத் தொடங்கிய அவர்கள் அவ்வுணவின் சுவையை வியந்து, "சவுரி ராசனுக்கே ஆகுக" என்றனர். மறுநாள் பூசகர்கள் கோயிலைத் திறந்து பார்த்தபோது பெருமாளுடைய வடிவம் முழுதும் இரவு இவர்க ளிருவரும் சவுரி ராசனுக்கே ஆகுக என்று கூறிய உணவு மயமாக இருத்தலைக் கண்டனர். இதனை அறிந்த முனைய தரையன் அம்முறைப்படியே அமுது செய்து படைக்கச் செய் தான். அஃது இப்பொழுதும் நடைபெறுகிறது. "முனைய தரையன் பொங்கல் என்பது முனியோதரன் பொங்கல்" என்று மருவி வழங்குகிறதாம்.

"புனையுங் குழலாள் பரிந்தளித்த
பொங்கல் அமுதும் பொரிக்கறியும்
அனைய சவுரி ராசருக்கே
ஆமென் றருந்து மாதரவின்
முனைய தரையன் பொங்கலென்று
முகுந்தற் கேறு முதுசீர்த்தி
வனையும் பெருமை யெப்போதும்
வழங்குஞ் சோழ மண்டலமே."

[முனைய தரையன்] (சோழ மண்டல சதகம்)

1041. மூகன் கதை

மூகன் என்பவன் ஓர் அசுரன். அரவக் கொடியோ னுக்கு நண்பன். வஞ்சனைகள் செய்வதில் துரியோதனனை மிஞ்சியவன். அருச்சுனன் அரிய கனை ஒன்றை நாடி இறைவனை நோக்கி அருந்தவம் புரிந்து கொண்டிருந்தான். அப்பொழுது அவனைக் கொன்று விடும்படி மூகனைத் துரியோ தனன் ஏவினான்.

மாயம் வல்ல மூகன் பன்றியின் வடிவெடுத்து அருச் சுனனைக் கொல்லச் சென்றான். மூகன் செயலை இறைவன் அறிந்தார். வேடக் கோலம் பூண்டு மூகனைப் பின் தொடர்ந்து சென்றார். அருச்சுனன் மீது அம்மூகன் பாய

நேர்ந்த சமயத்தில் இறைவன் கணை யெய்து அப்பன்றியை வீழ்த்தினர். அதனால் அருச்சுனன் பிழைத்தான். துரியோதனன் உரை கேட்டுத் தீமையை நாடி வந்த மூகனே மாண்டான்.

மறந்தாயினும் பிறனுக்குக் கேடு செய்யக்கூடாது. அவ்வாறு செய்யின் செய்தவனுக்கு அறக்கடவுள் கேட்டினைச் செய்து விடுவார். இது மூகனிடத்தில் நன்கு பெறப்பட்டது.

(பாரதம்)

[அறஞ் சூழுஞ் சூழ்ந்தவன் கேடு]

1042. மூங்கை கவி கொண்ட கதை

திருத்தில்லையில் முன் காலத்தில் நாதசன்மா என்னும் பெயரை உடையவர் ஒருவர் இருந்தார். பீமன் என்னும் பெயரை யுடையவன் ஒருவன் அந்த நாதசன்மாவினுடைய நூல்களைக் களவு செய்து கொண்டு போய்விட்டான். இதனை உணர்ந்த நாதசன்மா அந்தப் பீமன் ஊமையாகு மாறு வசவுரை வழங்கினர். பீமனும் அவ்வாறே ஊமையாகிப் பல இடங்களிலும் அலைந்து வருந்தினன். பிறகு திருப்பருப்பதத்தில் இருந்த உரோமச முனிவருடைய கட்டளையின்படி திருக்காளத்தியை அடைந்து சிவபெருமானை வழிபட்டான். மூலத்தானத்திற்குத் தெற்கேயுள்ள சக்தி தளத்தில் சிவலிங்கம் ஒன்றை அமைத்து வழிபட்டான். பிறகு அவனுக்குப் பேசும ஆற்றல் உண்டாயிற்று. திருக்காளத்தி நாதரையும் ஞானப் பூங்கோதையையும் துதித்துப் போற்றினன். அப்பொழுது அவன் போற்றித் துதித்த பாடல் மூகத்துதி என்னும் பெயரோடு வழங்குகின்றது.

"முதலெவாய்ச் சேயழைத்தான் மூங்கைகவி
[கொண்டான்
குதிரைநரி யாக்கிக் கொடுத்தான்-மதுரையிலே."

[மூங்கை பாடியது] (திருக்காளத்தி நாதருலா)

1043. மூடனுன இளவரசன் கதை

ஓர் ஊரிலே ஓர் அரசன் இருந்தான். அவனுக்கு ஒரு மைந்தன் பிறந்தான். அவன் அழகிற் சிறந்து விளங்கினுன். ஆயினுங் கல்வி அறிவிற் சிறந்து விளங்கவில்லை. எவ்வளவு போதித்த போதிலும் அவனுடைய மூளையில் எதுவுமே ஏறு மற் போய்விட்டது. இதனைக் கண்ட அரசனுக்கு மிகுந்த சினம் உண்டாகி விட்டது. "என்னுடைய நாட்டை விட்டு எங்கேனும் தொலைந்து போ. உன்னைப் போன்ற மூடப் பிள் ளைகள் இருப்பதும் இல்லாததும் ஒன்றுதான்" என்று கூறி அவனை ஊரை விட்டு விரட்டி விட்டான்.

தந்தையால் விரட்டப் பெற்ற இளவரசன் வேறோர் நாட் டில் ஓர் ஊரில் தெருவிற் சென்று கொண்டிருந்தான். அப் பொழுது அந்நகரத்து மன்னன் மகள் மேன் மாடத்தில் நின்று தெருவைப் பார்த்துக் கொண்டிருந்தாள். மூட இள வரசனை அரசிளங் குமரி கண்டாள். அவனுடைய அழகு அவளுடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அவனைக் கூப்பிட்டு அப்படியே நிற்கச் சொன்னுள். தான் விரைவாக உள்ளே போய் ஓலை ஒன்றை எடுத்து, "நீ இன்ன விடத் தில் உள்ள அறச்சாலைக்கு இரவில் வந்தால், நான் அங்கு வந்து உன்னைத் தழுவுவேன்" என்று எழுதிக் கொண்டு வந்து மூட இளவரசனுக்கு முன்னுல் போட்டாள்.

அவன் அதனை எடுத்துக் கொண்டு சென்றான். கல்வி யறிவற்றவ னுகையால் அதில் எழுதி இருக்குஞ் செய்தியை அவனுல் படிக்க முடியவில்லை. எதிர்ப்பட்ட குறைநோயா யாளன் ஒருவனிடத்தில் அவ்வோலையைக் காட்டினுன். அவன் நோயாளியாயினும் மிகுந்த வஞ்சகமுடையவன். அவன் ஓலையைப் படித்துப் பார்த்துச் செய்தியை உணர்ந்து கொண்டான். இவனை அச்சுறுத்தி விரட்டி விட்டுத் தானே குறிப்பிட்ட இடம் போய் அப்பெண்ணைத் தழுவ வேண்டு மென்று முடிவு செய்தான். இளவரசனைப் பார்த்து, "ஓ நண்பனே! நீ இவ்வூரில் யாருக்கு என்ன தீமை செய்தாய்? நீ இவ்வூரில் இருப்பா யாகில் கொலை வெட்டப்படுவாய்" என்று இவ்வோலையில் எழுதப்பட்டிருக்கிறதே என்று கேட் டான். இதனைக் கேட்ட இளவரசன் அஞ்சி அகன்று போனுன்.

இரவு நேரத்தில் தொழு நோயாளன் இளவரசி குறிப் பிட்ட இடத்திற்குச் சென்று அவளுடைய வரவை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். நள்ளிரவில் அவளும் வந் தாள். இருள் மிகுதியாக இருந்தபடியால் இருப்பவனை அவளால் அறிந்துகொள்ள முடியவில்லை. பகலில் கண்ட அழகனே என்று முடிவுசெய்து தழுவி மகிழ்ந்தாள். தழு விய பிறகு அவன் வேறொருவனென்றும் தோயாளி என்றும் உணர்ந்தாள். மிகவும் வருந்தித் தற்கொலை செய்து கொண்டாள்.

இளவரசன் தான் வைத்திருந்த ஓலையை மறுநாள் வேறொருவனிடம் காட்டினான். அவன் உள்ளதைச் சொன் னான். அந்தோ கல்வி அறிவில்லாமையால் ஏமாந்தோமே என்று எண்ணியவனாய் இளவரசி குறிப்பிட்டிருந்த அறச் சாலைக்குப் போய்ப் பார்த்தான். அவள் மாண்டொழிந்த செய்தியை அறிந்து வருந்தினான். தானும் தற்கொலை செய்துகொண்டு மாண்டான். இருவரும் பேயாக அவ்வறச் சாலையில் மூலைக்கு ஒருவராக அமர்ந்திருந்தனர். அன்று முதல் அவ்வறச் சாலைக்கு அப்பெண் பேய் எவரையும் நெருங்க விடுவதில்லை. அங்கு வருவோர் போவோரை எல் லாம் அறைந்து விரட்டிக் கொண்டிருந்தது.

ஒரு நாள் ஔவையார் அவ்வூருக்கு வந்தார். இரவில் படுப்பதற்கு இடந் தேடினார். அப்பேய்கள் இருந்த அறச் சாலை மிகவும் நல்ல இடமாக இருப்பதைப் பார்த்து மாலை நேரத்திலேயே அங்குச் சென்று படுத்துக் கொண்டார். அப் பொழுது ஔவையாரைக் கண்ட சிலர், "பாட்டி! அங்குப் படுக்காதே! அவ்வறச்சாலையில் பேய்கள் இருக்கின்றன. அவைகளால் தொல்லை ஏற்படும்" என்று கூறினர். இதனைக் கேட்ட ஔவையார், "நானே ஒரு பேய்தான். என்னை மற்றப் பேய்கள் ஒன்றுஞ் செய்ய மாட்டா" என்று கூறி விட்டு அவ்விடமே படுத்துக் கொண்டார்.

முதற் சாமத்தில் ஏதோ ஒலி கேட்டதை உணர்ந்த ஔவையார் விழித்துக்கொண்டு பார்த்தார். பேய், "எற்று எற்று" என்று சொல்லிக் கொண்டு வந்தது. உடனே, ஔவையார்,

"வெண்பா இருகாலிற் கல்லாகீ வெள்ளோகீல
கண்பார்க்கக் கையால் எழுதாகீப்—பெண்பாவி
பெற்ருளே பெற்ருள் பிறர்நகைக்கப் பெற்ருளே
எற்ருேமற் றெற்ருேமற் றெற்று"

என்று பாடினர். இதகீக் கேட்ட பெண் பேய் இவர்கள் கல்வி அறிவு உடையவர். நம்முடைய செய்தி உணர்ந்து கூறி விட்டார். இவரை யாதும் செய்யக் கூடாது என்று எண்ணிக் கொண்டு போய்விட்டது. பிறகு இரண்டாஞ் சாமத்தில் வர, அப்பொழுது;

"கருங்குளவி சூரைத்தூ ரீச்சங் கனிபோல்
வருந்தினர்க்கொன் றீயாதான் வாழ்க்கை—அரும்பகலே
இச்சித் திருந்தபொருள் தாயத்தார் கொள்வரே
எற்ருேமற் றெற்ருேமற் றெற்று"

என்று பாடினர்.

பிறகு மூன்ரும் சாமத்தில் வந்தபொழுது;

"வான முளதால் மழையுளதால் மண்ணுலகில்
தானமுளதால் தயையுளதால்—ஆனபொழு
தெய்த்தோ மிகீத்தோமெள் றேமாந் திருப்பாரை
எற்ருேமற் றெற்ருேமற் றெற்று"

என்று பாடினர். பிறகு நான்காஞ் சாமத்தில் வந்த பொழுது,

"எண்ணுயிரத் தாண்டு நீரிற் கிடந்தாலும்
உண்ணீரம் பற்ருக் கிடையே போல்—பெண்ணுவாள்
பொற்ருெடி மாதர் புணர்முலேமேற் சேராரை
எற்ருேமற் றெற்ருேமற் றெற்று"

என்று பாடினர். இதகீக் கேட்டவுடன் பெண் பேய் ஓடுங்கி வந்து ஔவையார் முன் நின்றது. ஔவையார் மனமிரங்கி அருளினர். "உனக்கு வேண்டியது என்ன?" என்று கேட்டார். அப்பேய், "நான் மனிதப் பிறப்பை அடைந்து முன்பு விரும்பிய கணவகீ மணந்து இல்லறம்

நடத்திப் பிறகு நல்ல கதியை அடையுமாறு அருள்புரிய வேண்டும் என்று வேண்டிக் கொண்டது. ஔவையாரும் "அவ்வாறே ஆகுக" என்று அருள் செய்து அவ்விடம் விட்டுச் சென்றார்.

[கல்வி யறிவின்மை] (ஔவையார் வரலாறு)

1044. மூர்த்தி நாயனார் கதை

மூர்த்தி நாயனார் என்பவர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர். மதுரையில் இருந்தவர். சிவபெருமானுக்கு நாள்தோறும் சந்தனக்காப்புத் திருப்பணி செய்து வந்தார். சிவத்தொண்டின் பயனாக இவர் அரச பதவி பெற்றார். யானை, தேர், குதிரை, சிவிகை முதலிய ஊர்திகள் இவருக்குப் பொருந்தி யிருந்தன. இவர் செய்த திருப்பணிக்கு இடையூறு செய்து கொண்டிருந்த வடுக அரசன் ஒருவன் தன்னுடைய அரச பதவியை இழந்து மாண்டொழிந்தான். அவனுடைய ஏவலர் மூர்த்தியாருக்கு ஏவலராகிச் சிவிகை சுமத்தல் முதலிய பணிகளைச் செய்தார்கள். அறத்தினால் சிறப்புக்கள் உண்டாகும். அதனை மறத்தலினால் கேடுகள் உண்டாகும். அறத்தின் பயன் யாது என்று நீங்கள் ஆராய்ச்சி செய்ய வேண்டாம். சிவிகையின்மீது ஊர்ந்து செல்பவனிடத்தும் அதனைத் தாங்கிச் செல்பவனிடத்தும் அதனை அறிந்து கொள்ளுங்கள்" என்று அறிஞர்கள் கூறியது இவரிடத்தில் நன்கு பெறப்பட்டது.

—"உட்பரிவால்,
கையார மாயுரைத்தார்"

(புலியூர் வெண்பா)

"மூர்த்திபால் வன்கண்மை மூண்ட வடுகரசன்
சூர்த்திறத்தா னுய்ந்தானே சோமேசா — கூர்த்த
பொருளற்றூர் பூப்பர் ஒருகால் அருளற்றூர்
அற்றூர்மற் றுதல் அரிது."

(சோமேசர் முதுமொழி வெண்பா)

" படைநான் குடன்று பஞ்சவன் துரந்து
மதுரை வவ்விய கருநட வேந்தன்
அருகர்ச் சார்ந்துநின் றருட்பணி அடைப்ப
....
உலகினில் தமது முக்குறி யாக
மணிமுடி வேணியும் உருத்திரக் கலனும்
நிலவுமிழ் புண்ணியப் பால்நிறச் சாந்தமும்
அணிவித் தருள்கொடுத் தரச னுக்கி
அடுமா லகற்றி நெடுநாள் புரக்க
வையக மளித்த மணியொளிக் கடவுள்".

(கல்லாடம்—57)

[மூர்த்தி நாயனார்] (புலியூர் வெண்பா)

1045. மூவர் கதை

மூவர் ஓரிடத்திற் சென்று பிறன் ஒருவனுடைய பொருளைக் கவர்ந்துகொண்டு சென்றனர். பின்னர் ஓரிடத்தில் அமர்ந்து அதனைப் பங்கு போட்டுக் கொள்ள முடிவு செய்தனர். ஒருவனைப் பார்த்து, "நீ ஊருக்குட் சென்று உணவு கொண்டுவா" என்று சொல்லி அனுப்பினர். பிறகு அவர்கள் இருவரும் அவன் உணவு கொண்டுவந்து கொடுத்ததும், அவனைக் கொன்று தொலைத்துவிட்டுப் பொருளினைத் தாங்கள் இருவரும் பங்கிட்டுக்கொள்வது என்று முடிவு செய்தனர்.

உணவு கொண்டுவரச் சென்றவனே மற்றவர்கள் இருவரையுந் தொலைத்துவிட்டுத் தான் ஒருவனே அப்பொருள் முழுவதையும் அடையவேண்டுமென்று எண்ணினன். வரும் போது உணவில் நஞ்சு கலந்து கொண்டு வந்தான். அவன் உணவைக் கொண்டுவந்து கொடுத்ததும், இருவரும் சேர்ந்து அவனை வெட்டி வீழ்த்தினர். பிறகு அவன் கொண்டு வந்திருந்த உணவினைத் தாங்கள் இருவரும் உண்

டனர். சிறிது நேரத்திற் கெல்லாம் இவர்களுக்குச் சாவு உண்டாகியது.

பொருளை விரும்பி மற்றவர்களுடைய மறதியை எதிர் பார்த்துக் கொண்டிருப்பவர்கள், அருளை எண்ணி மற்றவர் களிடம் அன்புடையராக நடந்து கொள்ளுதல் இல்லை என்பது இம்மூவரிடத்திலும் நன்கு விளங்கியது.

[பொருள் கருதிப் பொச்சாப்புப் பாரிப்போர்]

1046. மூவன் கதை

முன்னளிற் கொங்குவள நாட்டில் மூவன் என்னும் பெய ருடையவன் ஒருவன் வாழ்ந்திருந்தான். இவன் ஒரு குறுநில மன்னன். இவன் எல்லா வகையான செல்வங்களையும் இனிது பெற்றிருந்தான். ஆயினும் மனநிறைவு இவனிடம் இல்லை. பேரவாவே பெரிதுங் குடிகொண்ட உள்ளமுடை யவனுக இருந்தான் எல்லாரோடும் இனிமையாகப் பேசு வான். எல்லாம் பேச்சளவில்தான் இருக்கும். யாரேனும் எதனையேனும் கேட்டுவிட்டால் அஞ்சிப் பதறுவான். உயிரைக் கேட்டாலும் கொடுப்பானே அல்லாமல் பொருளைக் கேட்டால் கொடுக்கமாட்டான்.

பெருந்தலைச் சாத்தனுர் என்னும் பெரும் புலவர் மூவனு டைய குணநலங்களை உணர்ந்துகொள்ளாமல் பரிசு பெற வந்தார். இவன் அவரைப் பாராமல் கதவை அடைத்துக் கொண்டிருந்தான். செய்தியை உணர்ந்த அவர் இழித் துரைத்து உள்ளம் வருந்திச் சென்ருர். மூவனுடைய செல் வம் நாளடைவில் குறைந்து அழிந்து போய்விட்டது. இவன் பிறருக்கு ஈதலை மேற்கொண்டு பண்புடன் விளங்கி யிருப்பா னுகில் அழிந்தொழிய வேண்டிய நிலை ஏற்பட்டிராது. செய் யத்தக்க நன்மைகளைச் செய்யாமல் பொருளைச் சேர்த்து வைப்பவனுடைய செல்வம் நீடித்திராமல் அழிந்து போகும் என்பதற்கு இவனே தக்க சான்றுக அமைந்தான்.

[கடும் பற்றுள்ளத்தான் செல்வம்]

1047. மூவேந்தர் கதை

சேரன் சோழன் பாண்டியன் ஆகிய மூவரும் மூவேந்தர் களென்று கூறப் பெறுவார்கள். இவர்கள் ஒரு நாள் ஏகம்ப வாணருடைய இல்லத்துக்குச் சென்றார்கள். அப்பொழுது ஏகம்பவாணர் வீட்டில் இல்லை. நிலங்களைச் சுற்றிப் பார்ப்ப தற்காக வயல்வெளிக்குச் சென்றிருந்தார்.

வேந்தர்கள் "ஏகம்பவாணர் எங்கே?" என்று உசாவி னார்கள். வேலையாள் ஒருவன் 'அவர் வயலுக்குச் சென்றிருக் கிறார்' என்று கூறினான். அரசர்கள் 'சரி' என்று சும்மா திரும்ப வில்லை. "வயலுக்கு மூடி நடப் போயிருக்கிறாரோ?" என்று ஏளனந் தோன்றுமாறு இயம்பிக் கொண்டே சென்றார்கள். இச்செய்தி ஏகம்பவாணருடைய மனைவிக்கு எட்டியது. அவள் நல்ல புலமைத் திறம் அமையப் பெற்றவள். தன் கணவனை அம்மன்னர்கள் குறிப்பாக இகழ்ந்தது அவளுக்குச் சீற்றத்தை விளைத்தது. உடனே அவள் அவர்களை இகழ்ந்து,

"சேனை தழையாக்கிச் செங்குருதி நீர்தேக்கி
ஆனை மிதித்த அருஞ்சேற்றில்—மானபரன்
பாவேந்தர் வேந்தன் பறித்துநட்டான் ஏகம்பன்
மூவேந்தர் தங்கள் முடி"

என்று ஒரு செய்யுளைப் பாடினாள். தன் கணவன் வத்த பிறகு நிகழ்ந்ததைக் கூறினாள். ஏகம்பவாணரிடம் பூதம் ஒன்று அடிமையாக அமைந்து பணி புரிந்து கொண்டிருந்தது. அப்பூதத்தைக் கொண்டு, ஏகம்பவாணர் அரசர்களைச் சிறைப் பிடித்து அல்லல் பல செய்தார்.

அறிவுடையோர் நயமில்லாத மொழிகளைப் பேசினும் பேசுக. பயனில்லாத மொழிகளைப் பேசாதிருத்தல் நல்லது. அவ்வாறு பேசினால் ஏதம் பல உண்டாம். என்று பெரியோர் கள் கூறியது இம்மன்னர்களிடத்தில் பலித்து விட்டது.

[ஏகம்பவாணன்] (ஏகம்பவாணர் வரலாறு)

1048. மூன்று மலை முடிகளை ஒடித்த கதை

முன்னொரு காலத்தில் காற்றுக் கடவுளுக்கும் (வாயு தேவனுக்கும்) நிலந்தாங்கு பாம்பிற்கும் (ஆதிசேடனுக்கும்) தமக்குள் யார் பலசாலி யென்று சொற்போர் மூண்டது. அதனை ஆராய்ந்தறியும் பொருட்டுக் காற்றுக் கடவுள் மேரு மலையின் முடியைப் பெயர்த்துத் தள்ளுவதென்றும் நிலந் தாங்கு பாம்பு பெயர்க்க முடியாமல் காத்துக் கொள்வதென் றும் ஏற்பாடு செய்து கொண்டார்கள். அவ்வாறே அவர் கள் இருவரும் தேவர் முதலியோருடைய முன்னிலையில் தம் தம் வலிமையைக் காட்டத் தொடங்கினர்கள். ஆதிசேடன் தன்னுடைய ஆயிரம் படங்களாலும் மேரு மலையின் ஆயிரம் முடிகளையும் கவித்துக்கொண்டு பெயர்க்க முடியாமல் பாது காத்தான். வாயு தேவன் தன்னுடைய வலிமையால் அம் மலை முடிகளில் மூன்றைப் பெயர்த்துக் கொண்டு போய்த் தெற்குத் திக்கில் தள்ளிவிட்டான்.

"ஆறு பாயருவி முக்குவ டிறுத்தசெய
லான தால்முனிகொள் மத்திரன் முடித்தலையே."

[மூன்று மலைமுடிகளை ஒடித்தது] (வில்லி பாரதம்)

1049. மெய்கண்ட தேவர் கதை

மெய்கண்ட தேவர் நடு நாட்டிலே திருப்பெண்ணை கடம் என்னும் ஊரிலே வேளாளர் குலத்திலே தோன்றினர். இவருடைய தந்தையார் பெயர் அச்சுதகளப்பாளர். மெய் கண்ட தேவருக்கு இடப்பெற்ற பிள்ளைப் பெயர் சுவேதவனப் பெருமாள். இளமையில் திருவெண்ணெய் நல்லூரில் தம் முடைய மாமனார் வீட்டில் வளர்ந்தார்.

இளமைப் பருவத்தில் தானே பரஞ்சோதி முனிவர்பால் அருளுரை பெற்றுப் பொல்லாப் பிள்ளையார் திருவருளால் எல்லாந் தெளிந்தார். அதனால் மெய் கண்ட தேவர் என்று பெயர் உண்டாகியது. அந்நாளில் அருணந்தி சிவா

சாரியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் ஆதிசைவ குலத்தில் தோன்றியவர். மெய்கண்ட தேவர் வழி முறையினருக்குக் குலகுருவாக அமைந்து விளங்கியவர். அவர் பல நூல்களையும் நன்கு கற்றுச் சிறப்புற்றுச் சகலாகம பண்டிதர் என்னும் சிறப்புப் பெயரும் பெற்றிருந்தார். அவர் ஒரு நாள் மெய்கண்ட தேவரிடம் வந்தார்; இவரைக் கண்டார். குலகுருவாகிய தம்மை வணங்கவில்லையே என்று உள்ளம் புழுங்கினர்.

மனச்செருக்கோடு மெய்கண்ட தேவரைப் பார்த்து, "ஆணவமலத்தின் இலக்கணம் யாது?" என்று உசாவினர். நின்னைப் போலவே முகிழ்ந்து நிற்கும் என்னும் பொருள் புலப்பட த் தமது சுட்டு விரலை நீட்டி அவரையே சுட்டிக் காட்டினர் ஆசாரியார். அறிந்தார். தமது ஆணவ மலத்தைத் துறந்தார். இவரது அடிகளை வணங்கி இவர் பால் அருளுரை பெற்று இவரைப் போற்றினர்.

எவ்வளவு உணர்வுடையவரேனும் மெய்யுணர்வு இல்லை யானால் அவர்கள் எத்தகைய பயனையும் அடையமாட்டார் கள். மெய்யறிவுடையவர்களே மேலோராவர். இது மெய் கண்ட தேவரிடம் நன்கு பெறப்பட்டது.

[மெய்யறிவுடையோரே மேலோர்]

1050. மெய்ப்பொருள் நாயனார் கதை

மெய்ப்பொருள் நாயனார் என்பவர் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவர். தந்தையார் பெயர் தெய்வீகன்; தாயார் பெயர் பொன்மாலை. இவர் திருக்கோவலூரிலே இருந்து ஆட்சி புரிந்து கொண்டிருந்தார். குறுநில மன்ன ராக இருந்தும் உறுபொருளிடத்திலே பற்றில்லாதவராக விளங்கினர். மக்கட்குத் தக்கபடி நன்மைகள் புரிந்து கொண்டிருந்தார்.

எத்தகைய நல்லோர்கட்கும் இவ்வுலகிலே பகைவர்கள் இல்லாமல் போகார். மெய்ப்பொருள் நாயனாரிடத்திலே முத்திநாதன் என்பவன் பகை கொண்டான். மெய்ப்பொரு

ளாரை வென்றுவிடப் பன்முறை முயன்ருன்; முடியவில்லே. இறுதியில் வஞ்சகமாகத் தொலேக்க நெஞ்சில் எண்ணினுன். அடியவர்போற் கோலங் கொண்டான்; நீறணிந் தான். வாட்படையை ஓலேச்சுவடிபோற் சுற்றி எடுத்துக் கொண்டு இவரிடம் வந்தான்.

"உண்மையான நூற்பொருள் ஒன்றை உனக்கு உரைக்க வந்தேன். நாம் இருவரும் தனிமையான இடத்தில் இருக்க வேண்டும்" என்ருன், இவர் அவனேத் தனியிடம் ஒன் றிற்கு இட்டுச் சென்ருர். அங்கே அவன் ஓலேச்சுவடியை அவிழ்ப்பதுபோல் பாவனே செய்து வாட்படையை எடுத்து இவரைக் கொன்ருன்.

மெய்ப்பொருளாருடைய மெய்காப்பாளனுகிய தத்தன் நிகழ்ந்ததை அறிந்தான். வாளேயுருவிக்கொண்டு முத்தி நாதனே மாய்க்கமுனேந்தான். மெய்ப்பொருளார் முத்திநாதனேக் கொல்லாமல் தடுத்தார். "தத்தா, நம்மில்லில் வந்த இவ ரைக் கொல்லாதே. இவர் நம்முடைய சுற்றத்தார் ஆவர். எத்தகைய தீமையுஞ் செய்யாமல் வெளியே கொண்டுபோய் விட்டுவிடு என்று விளம்பினர். பிறகு மாண்டார்.

தமக்குத் துன்பஞ் செய்பவர்கட்கும் தாம் தீமை செய்யா தொழிதல் அறிவினுட் சிறந்த பேரறிவாம் என்று பெரியோர் உரைத்த உரையை மெய்ப்பொருளார் தமக்குத் துன்பஞ் செய்த முத்திநாதனுக்குத் தாமுந் துன்பஞ் செய்யாமல் சிறப் புடையது ஆக்கினர். (பெரிய புராணம்)

"ஒட்டலன்செய் தீமைக் கொருதுநம ரென்றுரைத்தார்
சுட்டியசீர் மெய்ப்பொருளார் சோமேசர்—முட்ட
ஒறுத்தார்க் கொருநாளே யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணேயும் புகழ்."

[பொறையுடைமை] (சோமேசர் முதுமொழி வெண்பா)

1051. மெய்ம்மை பேசிய கள்ளன் கதை

முன்னுளில் மாளவ நாட்டில் இந்திரசேனன் என்னும் அரசன் ஒருவன் அரசாட்சி செய்து கொண்டிருந்தான்.

இவன் அடிக்கடி இரவு நேரங்களில் மாறுகோலம் பூண்டு நகரிலே நிகழும் நிகழ்ச்சிகளை யெல்லாம் தானே நேராகக் கண்டு வருவது வழக்கம். ஒரு நாள் அரசன் தன் வழக்கப் படி நகர்சுற்றி வந்தான்.

ஓரிடத்தில் ஒரு மனிதன் தனித்தவனைச் சென்று கொண்டிருந்தான். அரசன் அவனைப் பார்த்து, "நீ யார்?" என்று உசாவினான். அவன் அரசனைப் பார்த்து, "நான் என்னுடைய வேலையின் பொருட்டுச் சென்று கொண்டிருக் கிறேன்" என்று கூறினான். அரசன் அவனைப் பார்த்து, "நள்ளிரவில் அப்படி என்ன வேலை?" என்று உசாவினான்.

அக்கள்ளன் அரசனைப் பார்த்து, "நள்ளிரவில் என்னு டைய வேலை இன்னதென்று உன்னால் ஊகிக்க முடியவில் லையா? அரண்மனையில் களவாடச் செல்லுகிறேன்" என்று கூறினான். இதனைக் கேட்ட அரசன் கள்வனைப் பார்த்து, "நான் மிக வறியவன். ஐயமேற்றே வயிறு வளர்த்துக் கொண்டிருக்கிறேன். என்மீது அருள்கூர்ந்து சிறிது உதவி னால் உன்னுடைய உதவியை நான் ஒரு நாளும் மறவேன்" என்று சொன்னான்.

கள்ளன், "அப்படியே ஆகட்டும். கூட வா" என்று சொல்லி அரசனையும் உடனழைத்துக் கொண்டு சென்றான். தன்னிடம் இருந்த மையினால் உருவின கத்தியோடு நின்று கொண்டிருந்த காவல் வீரர்களை உறங்கச் செய்தான். பிறகு உள்ளே சென்றான். பச்சிலையின் உதவியால் பெட்டிகளைத் திறந்தான். பெட்டிகளில் இருந்த பொன், வெள்ளி முதலிய பொருள்களில் அவன் நாட்டஞ் செலுத்தவில்லை. விலை மிகுந்த மாணிக்கங்கள் மூன்றிருந்தவைகளில் தன்னுடைய நாட்டத்தைச் செலுத்தினான். அவற்றில் இரண்டை எடுத் துக்கொண்டு வெளிவே வந்தான்.

வெளியே வந்தவன் அரசனிடம் ஒரு மாணிக்கத்தைக் கொடுத்துப், "பெட்டியில் மூன்று மாணிக்கங்கள் இருந்தன. இரண்டை மட்டும் எடுத்து வந்தேன். இம்மாணிக்கம் மிகுந்த விலையேறப் பெற்றது. இஃது ஒன்று மட்டும் உன் னுடைய வாழ்நாள் அளவுக்குப் போதும். இதனை விற்று உன்னுடைய வறுமையைப் போக்கிக்கொள்" என்று கூறி விட்டு அவ்விடம் விட்டுச் செல்லத் தொடங்கினான்.

அரசன் கள்வனைப் பார்த்து, "உன்னுடைய உதவிக்கு மிகுந்த நன்றி, பெட்டியில் மூன்று மாணிக்கங்கள் இருந்த தாகச் சொன்னயே இரண்டை மட்டும் எடுத்துக் கொண்டு வரக் காரணம் என்ன?" என்று கேட்டான். கள்ளன் அரசனைப் பார்த்து, "அரசனிடம் இருக்கும் பொருள்களில் இம் மாணிக்கங்கள்தாம் மிகுந்த விலைமதிப் புடையவை. மூன்றையும் எடுத்து வந்துவிட்டால் அரசன் ஏமாந்து போவான். அவ்வாறு ஏமாறக்கூடாது என்று கருதியே ஒன்றை வைத்து விட்டுவந்தேன்" என்றான். பிறகு தன்னுடைய வீட்டை நோக்கிச் சென்றான். அரசன் அவன் அறியா வண்ணம் பின் சென்று அவன் வீட்டு அடையாளத்தை நன்கு அறிந்துகொண்டு பிறகு அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்தான்.

மறுநாள் பொழுது விடிந்தது. அரசன் தன்னுடைய அமைச்சனைப் பார்த்து, "பொருளறையில் இருக்கும் மாணிக்கங்கள் மூன்றையும் எடுத்துக் கொண்டுவா" என்று சொன்னான். அமைச்சன் பொருளறைக்குச் சென்றான். பெட்டிகளெல்லாம் திறந்து கிடத்தலைக் கண்டான். மாணிக்கத்தைப் பார்த்தான். ஒன்று மட்டுமே இருந்தது. கள்வன் இம்மாணிக்கத்தைப் பார்க்கவில்லை போலும் என்று எண்ணினான். அதனை யெடுத்துத் தன்னுடைய மடியிலே வைத்துக் கொண்டு விரைவாக அரசனிடம் ஓடி வந்து, "அரசே! இரவு அரண்மனையில் களவு போயிருக்கிறது. மாணிக்கங்கள் மூன்றும் களவு போய்விட்டன" என்று சொன்னான்.

அரசன் உடனே காவலர்களை அழைத்து, "இன்ன அடையாளமுள்ள இடத்தில் இன்ன வீட்டில் ஒரு மனிதன் இருக்கிறான். அவனை உடனே அழைத்துக்கொண்டு வாருங்கள்" என்று சொல்லிப் பல்லக்கையும் அனுப்பினான். அவர்கள் உடனே சென்று அரசன் கூறிய அடையாளப்படி அக்கள்வனை அழைத்துக் கொண்டு வந்து அரசன்முன் நிறுத்தினர்.

அரசன் கள்வனைப் பார்த்து, "நேற்று இரவு அரண்மனையில் களவு போயிருக்கிறது" என்று சொல்லி முடிப்பதற்குள் அக்கள்வன் அரசனைப் பார்த்து, "சென்ற இரவு அரண்மனையில் களவு செய்தவன் நான்தான். ஒரு பேழை

யில் மூன்று மாணிக்கங்கள் இருந்தன. அவைகளில் ஒன்றை அரசனுக்கு வைத்துவிட்டு இரண்டைமட்டும் எடுத்தேன். ஒன்று மிகவும் எளியவன் என்றுகூறி உதவி செய்ய வேண்டு மென்று வந்த ஒரு மனிதனுக்குக் கொடுத்து விட்டேன். ஒன்று என்னிடம் இருக்கிறது'' என்று சிறிதும் தயங்காமற் பேசினான்.

கள்வன் கழறிய கட்டுரைகளைக் காதிலேற்ற கர்வலன் கள்வனைப் பார்த்து, ''களவுத் தொழில் இழிவுடையதன்றோ?'' என்று கேட்டான். அதற்குக் கள்வன், ''பொய் கூறு தல்தான் மிகவும் இழிவுடையது. நான் அதனை விட்டுவிட் டேன் களவு செய்யும்பொழுதும் பொய் பேசுவதில்லை என் னும் உறுதியுடையேன். அரசர் பெருமான் அவர்கள் தம்மு டைய விருப்பம்போல் என்னை ஒறுக்கலாம்'' என்று உரைத் தான்.

பிறகு அரசன், ''நேற்றிரவு உன்னுடன்வந்த ஒரு மனி தனுக்கு மாணிக்கம் ஒன்று கொடுத்தேன் என்றுயே அம் மாணிக்கம் இதுதானு பார்'' என்று சொல்லித் தன்னிடம் இருந்த மாணிக்கத்தை யெடுத்துக் காட்டினான். ''ஆம் என்றன் கள்வன். மேலும் அரசன் கள்வனைப் பார்த்து, மூன்று மாணிக்கங்களில் ஒன்றை வைத்துவிட்டு இரண்டை மட்டும் எடுத்தேன் என்று கூறினையே நீ வைத்துவிட்டுப் போனதாகக் கூறும் அந்த ஒரு மாணிக்கத்தையுங் காணோமே'' என்று சொன்னான்.

கள்வன் அரசனைப் பார்த்து, ''விடியற்காலையில் முதன் முதலாகப் பொருளறைக்குச் சென்று பார்த்தவனே அம் மாணிக்கத்தைக் களவு செய்திருப்பான்'' என்று கூறினான். உடனே அரசன் அமைச்சனைப் பார்த்தான். அமைச்சன், ''அரசே! அங்கு ஒரு மாணிக்கங்கூட இல்லை இஃதுண்மை'' என்று சொன்னான்.

கள்வனை அரசனைப் பார்த்து ''அமைச்சனிடந்தான் அம் மாணிக்கம் இருத்தல் வேண்டும். ஆராய்ந்து பார்த்தால் தெரியும்'' என்று சொன்னான்.

அமைச்சன் தன்னுடைய ஆடைகளைக் களைந்து மாணிக் கத்தைக் கண்டுபிடித்து விட்டால் மிகவும் இழிவு என்று

அஞ்சி, "அறிவீனத்தால் அம்மாணிக்கத்தை நான்தான் எடுத்துக்கொண்டேன்" என்று சொல்லித் தான் மறைத்து வைத்திருந்த மாணிக்கத்தை எடுத்து நீட்டினான்.

நிகழ்வனவைகளை யெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அவையோர் அரசன் இரவில் நகர் சுற்றிவந்தான் என்பதையும், அமைச்சனுடைய களவுப் புன்மையையும் கள்வனுடைய மெய்ம்மைத் தன்மையையும் அறிந்து மிகவும் வியந்தார்கள். அரசன் அமைச்சனைத் தக்கவாறு ஒறுத்தான். கள்வனுக்குச் சிறப்புக்கள் பலசெய்து அவனை அமைச்சனுக்கிக் கொண்டான். மெய்ம்மை மேன்மையை அளிக்குமென்பதை அனைவரும் நன்குணர்ந்து கொண்டனர்.

[மெய்ம்மை]

1052. மேருவைச் செண்டாலடித்த கதை

மதுரைமா நகரில் உக்கிரகுமார பாண்டியர் அரசாட்சி செய்து கொண்டிருந்தார். அப்பொழுது நாட்டிலே மழை பெய்யவில்லை. மக்கள் பசிப் பிணியினால் வருத்த மடைந்தனர். உக்கிர குமாரர் மதுரைக் கடவுளிடம் முறையிட்டுக் கொண்டார். மதுரைக் கடவுள் உக்கிர குமார பாண்டியருடைய கனவிலே தோன்றினார். "மகா மேரு மலையிலே ஒரு பெரிய முழையிலே அளவிறந்த பொருள் இருக்கிறது, நீ சென்று அப்பொருளில் வேண்டியதை எடுத்து வந்து பஞ்சத்தின் கொடுமையைப் போக்கி நலமுறுவாயாக" என்று கூறியருளினார். உக்கிர குமார பாண்டியர் படைகளுடன் புறப்பட்டுப் பல நாடுகளையுங் கடந்து மகாமேரு மலையை அடைந்தார். மேருமலையை அழைத்தார். மேருமலை விரைவில் உக்கிர குமார பாண்டியர் முன் தோன்றவில்லை. வருவதற்கு நேரந் தாழ்க்கவே சினங்கொண்ட உக்கிர குமார பாண்டியர் அம் மலையின் முடியில் தம்முடைய கைச்செண்டால் அடித்தார். மேருமலை நான்முகனைப்போல் உக்கிரகுமார பாண்டியர் முன்பு தோறின்ப் பொருளிருக்குமிடத்தைக் காட்டியது. உக்கிரகுமார பாண்டியர் தமக்கு வேண்டிய பொருளை எடுத்துக்கொண்டு வந்து நாட்டு மக்களைக் காப்பாற்றினர்.

"செண்டு மோதின ராசருளதிபதி"
(திருப்புகழ்)

"பழுதறு மேருவில் செண்டுங் கயலும் பதித்துவைய
முழுதுந்தன் கொற்றக் குடையால் நிழற்றி முறைபுரிந்தே
உழுது மதுவுண்டு வண்டாடும் வேம்பணி
உக்கிரப்பேர்
வழுதியென் ருறு முகன்காக்கும் பாண்டியன்
மண்டலமே"

[மேருவைச் செண்டாலடித்தது] (பாண்டி மண்டல சதகம்)

1053. மேலியுருச் சிவந்த கதை

திருமாலின் நிறம் முதலில் அழகிய வெண்ணிறமாக விளங்கியது. பிறகு திருப்பாற்கடலிலிக் கடைந்த பொழுது ஆதிசேடன் கக்கிய நஞ்சினுல் கறுத்துப்போயது. கரிய கோலத்தோடு திருமால் வெகுகாலம் இருந்தார். ஒரு நாள் திருப்பாற்கடலில் பாம்புப் படுக்கையில் அமர்ந்திருக்கும்போது சிவபெருமானுடைய திருவிளையாடல்களைக் குறித்துத் திரு மகளோடு உரையாடிக் கொண்டிருந்தார். திருமகள் திரு மாலைப் பார்த்துத் "தாங்களும் கச்சிமாநகர்க்குச் சென்று சிவபெருமானை வழிபட்டுப் பழைய அழகிய நிறத்தைப் பெற லாமே" என்று கூறினுள். திருமால் அவ்வாறே கச்சிப் பதியை அடைந்து, வீரட்டகாசம் என்னுமிடத்தில் வீரட்ட ராசச் சிவபெருமானை வழிபட்டுக் குறையிரந்தார். அப்பெரு மான் காட்சி தந்து பவளவண்ணத்தையுங் கொடுத்தருளினர்.

"பாலொளிநீத் தெழும் விடத்தான் முகில் வண்ணம்
படைத்திருந்த
மாலவனுர் கலிக்கச்சி வந்தெய்தித் தவமுஞற்றி
மேலியுருச் சிவந்தென்ன....."

[திருமால் செந்நிறம் பெற்றது] (காஞ்சிப் புராணம்)

1054. மைந்தரை வெறுத்த மாமுனிவர் கதை

பராசர முனிவருக்கு தத்தன், அனந்தன், சறுமுகன், நந்தி, பருதி, மாலி என்னும் பெயர்களையுடைய மக்கள் அறுவர் இருந்தனர். இவர்கள் ஒருநாள் சரவணப் பொய்கைக்குச் சென்று விளையாடத் தொடங்கினர்கள். தவளைகள், கயல்கள் முதலியவைகளைப் பிடித்துக் கொன்றார்கள். மீன்களைப் பிடித்துக் கொன்று கோரைப் புல்லில் மாலை போல் தொடுத்தார்கள்.

இச்சமயத்தில் பராசர முனிவர் அப் பொய்கைக்கு நீராடச்சென்றார். அங்குத் தம் மக்கள் செய்து கொண்டிருந்த செயல்களைக் கண்டார். அவருக்கு மிகு சினமும் வெறுப்பும் உண்டாயின. "முனிவனுகிய எனக்கு நீங்கள் மக்களாகப் பிறந்தும் இத்தகைய ஈனமான பொல்லாத செயல்களைப் புரிந்திருக்கிறீர்கள். அறிவற்ற நீங்கள் அறுவரும் கயல்களாகிக் கழிந்தொழியுங்கள்" என்று சாபம் இட்டார்.

தந்தையின் சாபத்தைப் பெற்ற மைந்தர்களும் அக்கணமே கயல்களாகித் தண்ணீரில் மிதந்தார்கள். கொலைத் தொழிலைச் செய்பவர்கள், கொலைத் தொழிலின் இழிவை அறிபவர்களின் உள்ளத்தில் மிக இழிவான செயலுடையோராக மதிக்கப் பெறுவர் என்பது பராசரர் இடத்தில் நன்கு உணரப்பட்டது.

[பராசர முனிவர்]

———

1055. மொக்கணீசுவரன் கதை

ஒரு காலத்தில் இரண்டு நண்பர்கள் கொங்குவள நாட்டில் குடக் கோட்டூர் வழியாகப் பயணஞ் சென்று கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர் நீராடி இறை வழிபாடு செய்து உணவுண்ணும் ஒழுக்கம் உடையவர். மற்றவரோ பசி கண்டதும் உண்ணும் பழக்கமுடையவர். இருவரும் கட்டமுது கையகத்துடையவர்களாய்ப் பாய்மா இவர்ந்து சென்றனர்.

பசி கண்டதும் உண்ணும் நண்பருக்குப் பசி உண்டா யிற்று. அவர் மற்றவரைப் பார்த்துப் "பசி உண்டாகி விட்டது உணவு உண்ணலாமா? என்றனர்." மற்றவரோ "நீராடி இறை வழிபாடு செய்ய வேண்டுமே" என்றனர். முன்னவர் சூழ்ச்சியொன்றை உள்ளத்தில் எண்ணியவராய், "நீங்கள் நீராடிவிட்டு வாருங்கள். இங்கே அண்மையில் ஒரு சிவலிங்கம் இருக்கின்றது அதனைத் தங்களுக்குக் காட்டு கிறேன்" என்றார்.

பின்னவர் முன்னவர் கூறியதை நம்பிப் பக்கத்திலிருந்த நீர்நிலை ஒன்றுக்குச் சென்று நீராடினர். முன்னவர் தமது குதிரையின் கொள்ளுப் பையில் மணலை நிரப்பிக் கட்டி ஓர் இடத்தில் சிவலிங்கம்போல் நட்டுக் காட்டுப் பூக்களைப் பறித்து மாலை தொடுத்து அதற்கு அணிந்து சிவலிங்கக் கோலம் புனைந்து வைத்திருந்தார். பின்னவர் நீராடிவிட்டு வரவே முன்னவர் தாமியற்றிய போலி லிங்கத்தை அவருக்குக் காட்டினர். பின்னவர் பல புகழ்ச்சிப் பாடல்களைப் பாடி அவ்விலிங்கத்தைப் போற்றிப் பரவினர்.

பிறகு இருவரும் உணவு கொள்ளுதலுக்கு அமர்ந்தனர். முன்னவர் நகைத்துக்கொண்டே "நீங்கள் வழிபாடு செய்த சிவலிங்கம் மிக உயர்ந்தது" என்றார். பின்னவர் என்ன காரணம்? என்று உசாவவே அது சிவலிங்கமன்று; நமது குதிரையின் கொள்ளுப் பையாகும். இங்கே வாருங்கள் காட்டு கிறேன்" என்று கூறி அழைத்துக்காண்டு போய்த் தாமியற் றிய சிவலிங்கத்தை அசைத்துத் தூக்கினர். அஃது அசைய வில்லை. எவ்வளவோ முயன்றும் அஃது இடம் பெயர வில்லை. அஃது உண்மையான சிவலிங்கமாகவே முடிந்து விட்டது. முன்னவர் மிகுந்த அச்சங்கொண்டார். பின்னவர் அடைந்த பேரின்பத்துக்கோர் அளவேயில்லை. அந்தச் சிவ லிங்கத்திற்கு மொக்கணீசுரர் என்றும் அந்த இடத்திற்கு மொக்கணீசுரம் என்றும் பெயர் உண்டாயிற்று. இதனைத் திருவாதவூரடிகளுந் தமது திருவாசகத்தில்,

"மொக்கணியருளிய முழுத்தழன் மேனி
சொக்கதாக் காட்டிய தொன்மையும்"

என்று திருவாய் மலர்ந்தருளி யுள்ளார்.

"ஏத்து சிவபத்தி யான்ஒரு செட்டிமுன் ஈசுரனைத்
தோய்த்து முழுகித் தொழவெழ வாங்கொரு சூழ்ச்சி
கற்றேன்
பூத்த வனக்குடக் கோட்டூரில் மொக்கணி யைப்புதைக்க
வாய்த்த சிவலிங்க மானதுவுங் கொங்கு மண்டலமே"

[மொக்கணீசுரன்] (கொங்குமண்டல சதகம்)

1056. மோர்முப்பேர் பெற்ற கதை

ஒரு நாள் காளமேகப் புலவர் ஓர் இடைச்சியிடம் மோர் வாங்கினர். மோரில் தண்ணீர் மிகுதியாக இருந்தது. அம் மோரைக் குறித்து ஒரு செய்யுள் பாடவேண்டும் என்னும் எண்ணம் காளமேகப் புலவருக்கு உண்டாகியது. பாட்டின் பொருள் இடைச்சிக்கு விளங்குமோ விளங்காதோ என்று அவர் சிறிதுங் கவலைப்படவில்லை. நகைச்சுவை அமையுமாறு பின்வரும் பாடலைப் பாடினர்.

"காரென்று பேர்படைத்தாய் ககனத் துறும்போது
நீரென்று பேர்படைத்தாய் நெடுந்தூரையில் வந்ததன்பின்
வாரொன்றும் மென்முலையார் ஆய்ச்சியர்கை
வந்ததற்பின்
மோரென்று பேர்படைத்தாய் முப்பேரும் பெற்றாயே."

இப் பாடலைக் கேட்டவர்கள் நகைத்தனர். பாட்டு நன்றாக அமைந்திருக்கிறதென்று புலவரைப் பாராட்டினர்கள்.

[மோர் முப்பேர் பெற்றது]

1057. யசோதரன் கதை

இவன் அவந்தி நாட்டில் முன்னாளில் அரசு செய்து கொண்டிருந்தவன். அமுதமதி என்னும் பெயருடைய

மங்கையை மணந்து அரசாட்சியை நடத்திக்கொண் டிருந்தான். இவனுடைய மனைவியாகிய அமுதமதி பேரழகு வாய்ந்தவள். அவளோடு இவன் இன்ப வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கும்போது அவள் ஒரு நாள் யாழைப் பாகன் ஒருவனுடைய வீணை இசையைக் கேட்டாள். அவ் விசை அவளுடைய உள்ளத்தை உருக்கியது. இசை பாடியவன்மீது நசை மிகக்கொண்டாள். தோழியின் மூலமாக அவனுடைய தொடர்பைக் கொண்டாள். அவன் பார்ப்பதற்கு விகாரமுடையவனுகவும் உறுப்புக் குறை யுடையவனுகவும் இருந்தான். ஆயினும் அவள் அவன்மீது கழிபெருங் காதல் கொண்டாள். இருவரும் இன்ப நலனைக் களவாக நுகர்ந்துகொண்டிருந்தனர். அரசன் அவர்க ளுடைய களவொழுக்கத்தை உணர்ந்தான். அரசியாகிய அமுதமதி பேரழகுடையவள். அவளுடைய அழகு இவ னுடைய உள்ளம் முழுவதையுங் கவர்ந்திருந்தபடியால் அவ ளுடைய களவொழுக்கத்தைப் பொருட்படுத்தாது வழக்கம் போல் இன்பம் நுகர்ந்திருந்தான். அவள் இவன் தன் னுடைய தீயொழுக்கத்தை அறிந்துவிட்டபடியால் தனக்கு ஏதேனும் துன்பம் ஏற்படக்கூடும் என்று முடிவு செய்து நஞ்சினையூட்டி இவனைக் கொன்றுவிட்டாள். மனையாளை விழைந்த பேதை மன்னன் அவ்வாறு மாண்டு முடிந்தான். மனைவியை விரும்பி அவளை அவளுடைய போக்கிற்கு விட்டு இணங்கி நடப்பவர்கள் சிறந்த பயனை அடையமாட்டார்கள். தம் கடமையைச் செய்கிறவர்கள் வேண்டாத பொருளும் அதுவேயாம் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது.

[மனைவியை மிகுதியாக விரும்புவோர் நன்மை பெறார்]

1058. யாகசேனை கதை

முன்னாளில் காவிரிப்பூம் பட்டினத்தில் தேவசன்மா என்னும் பெயருடைய அந்தணன் ஒருவன் இருந்தான். அவனுடைய மனைவியின் பெயர் யாகசேனை. இவர்கட்கு வெகுகாலம் வரையிலும் மக்கட் பேறு இல்லை. பிள்ளைப்

பேறு இல்லையே என்று உள்ளம் வருந்திய இவர்கள் கீரிப் பிள்ளை ஒன்றை வளர்த்தார்கள். பிள்ளைமீது கொள்ள வேண்டிய அவாவை அதன்மீது கொண்டார்கள்.

பிறகு பிள்ளையொன்று இவர்களுக்குப் பிறந்தது. இரு பிள்ளைகளையும் அன்புடன் வளர்த்தார்கள். ஒருநாள் தேவசன்மா வெளியே சென்றிருந்தான். அவனுடைய மனைவி கீரிப்பிள்ளையைக் குழந்தைக்குக் காவல் வைத்து விட்டுத் தண்ணீர் கொண்டுவரச் சென்றாள். குழந்தை தொட்டிலில் உறங்கிக் கொண்டிருந்தது. அச்சமயத்தில் நல்லபாம்பு ஒன்று தொட்டிற் கயிற்றின் வழியாகக் கீழே இறங்கியது. பாம்பினைக் கண்ட கீரி அதன்மீது பாய்ந்தது. அதனைத் துண்டு துண்டாகக் கடித்து உதறியது. பார்ப்பனி வரும் வழியைப் பார்த்துக்கொண்டு வாசலில் நின்றது.

தண்ணீர்க் குடத்தோடு வந்த பார்ப்பனி கண்டாள் கீரியை. அதன் வாய் முழுவதும் குருதியாக இருந்தது. ஆகவே அது குழந்தையைக் கடித்துக் கொன்றுவிட்டது என்று எண்ணினாள். வேறு எதுவும் எண்ணவோ ஆராய்ந்து பார்க்கவோ இல்லை. தண்ணீர்க் குடத்தை அதன் தலைமீது போட்டாள். கீரி மாண்டுபோயிற்று. பார்ப்பனி உள்ளே சென்றாள் நிகழ்ந்ததை அறிந்தாள். கீழே விழுந்து புலம்பினாள். தலையில் அடித்துக்கொண்டாள். அந்தணன் வந்தான். நிகழ்ந்ததை உணர்ந்தான். அவளைத் துறந்து சென்றான். எந்தச் செயலையும் எண்ணாது செய்வோர் அல்லலுக்கு உள்ளாவர்.

[எண்ணித்துணிக கருமம்]

1059. யானை எய்த கதை

விக்கிரம பாண்டியன் மதுரையில் அரசு செலுத்திக் கொண்டிருந்தான். இவன் சைவ சமய வளர்ச்சிக்குத் தக்க பணிபுரிந்ததன்றிப் புறச் சமயங்கள் தலையெடுக்காதவாறும் பார்த்துக்கொண்டான். அந்நாளில் காஞ்சிபுரத்தில் அரசாண்

டிருந்த சோழனொருவன் சமணர்களுடைய ஆருகத சமயத்தை மேற்கொண்டொழுகினன். அவன் பாண்டியன் ஆருகத சமயத்திற்குப் பகைவனுக உள்ளான் என்பதை யறிந்து அவனேடு பகை பாராட்டினன். பாண்டியனேடு நேராகப் போர் செய்து வெல்ல முடியாதென்பதை யுணர்ந்த அவன் வஞ்சகமாக வெல்ல எண்ணினன். சமணர்களை அழைப்பித்து அவர்களிடம், "நீங்கள் தியவேள்வியொன்று செய்து பாண்டியனைக் கொல்லுங்கள். உங்களுக்கு நன் கொடையை மிகுதியாக வழங்குகிறேன்" என்று சொன் னன்.

சமணர்கள் அரசனுடைய சொல்லுக்கு இணங்கினர் கள். தீயவேள்வி யொன்றைச் செய்தார்கள். அதிலிருந்து கொடிய யானை யொன்று வெளிவந்தது. பாண்டியனைக் கொல்லுமாறு அந்த யானையை ஏவினர்கள். தாங்களும் யானையைத் தொடர்ந்து சென்றார்கள். செய்தியை உணர்ந்த பாண்டியன் மதுரைக் கடவுளை வேண்டினன். மதுரைக் கடவுள் அந்த யானையைக் கொன்று பாண்டியனைக் காப்பாற் றினர். சமணர்களும் அழிந்து ஒழிந்தார்கள்.

[யானையெய்தது]

1060. யானைத் தோல் போர்த்த கதை

கயாசுரன் என்பவன் நான்முகனிடம் வரம் பெற்றுப் பேராற்றல் உடையவனுக விளங்கினன். மண்ணவர் விண்ணவர் எல்லோரையும் வருத்தினன். யானை முகங் கொண்ட அந்த அசுரனைச் சிவபிரான் உதைத்துக் கீழே தள்ளினர். அந்த யானையின் தோலை உரித்துக் குருதி யொழுகும்போதே மேலே போர்த்துக் கொண்டார். இச் செயலைக் கண்டு இறைவியும் அஞ்சி நடுநடுங்கினள்.

"கரித் துகிலைப் பரமாகத் தரித்து"

[யானைத் தோல் போர்த்தது]

1601. யானையாகத் தாங்கிய கதை

திருமால் முருகவேளை யானையாகத் தாங்க எண்ணினார். மாவிரபுரம் என்னும் பதியை அடைந்து அருந்தவம் புரிந்தார். அவருடைய தவத்திற்கு இரங்கிய முருகக் கடவுள் எதிரே தோன்றினார். "எனக்கு முன்பு இழிவு புரிந்த தாரகன் சாத்தனுருக்கு யானையூர்தியாக விளங்குகிறான். அவன் அஞ்சுமாறு நீ என்னை யானையூர்தியாகக் கொள்ள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார். முருகக் கடவுள் இவ் வேண்டுகோளுக்கு இணங்கினார். உடனே யானையாக்கி ஊர்ந்தருளினார். இதனால் முருகவேளுக்கு யானையும் ஊர்தியாயிற்று.

"அத்திக் கத்துப் பலமீவாய்"

[யானையாகத் தாங்கியது]

1062. யானையின் மருப்பொடித்த கதை

கண்ணனையும் அவனுடைய அண்ணனையுங் கம்சன் கொல்ல எண்ணினான். வில்விழா ஒன்று ஏற்படுத்தினான். அதற்காக வருமாறு இருவரையும் வரவழைத்தான். மதுரையை அடைந்த கண்ணனும் பலராமனும் அரண்மனைக்குள் நுழைந்தார்கள். அரண்மனை வாசலில் இவர்களைக் கொல்வதற்காகக் கம்சன் குவலயாபீடம் என்னும் பெயரையுடைய மதயானை ஒன்றை நிறுத்தியிருந்தான். அந்த யானை இவர்களைக் கண்டதுஞ் சினங் கொண்டு இவர்கள் மேலே வந்தது. வீரர்கள் இருவரும் அந்த யானையை எதிர்த்தார்கள். அதன் தந்தங்கள் இரண்டையும் மிக எளிதாகப் பறித்தார்கள். அவைகளையே படைக்கலமாகக் கொண்டு அந்த யானையை அடித்துக் கொன்றுவிட்டு உள்ளே சென்றார்கள்.

[யானையின் மருப்பொடிந்தது]

1063. யூகி கதை

யூகி என்பவன் வத்தவ நாட்டில் கௌசாம்பி நகரில் இருந்தவன். அந்தணர் குலத்தில் தோன்றியவன். இவன் நன்கு கல்வி கற்றுப் பேரறிவாளனாகத் திகழ்ந்திருந்தான். சொல்வன்மை இவனிடம் நன்கு அமைந்திருந்தது. எண்ணியதை எண்ணியவாறே இயற்றுவதில் இவன் வல்லவன். இவனுடைய அறிவு நலத்தை அந்நாட்டு மன்னனுகிய உதயணன் உணர்ந்து இவனை முதலமைச்சனாக அமைத்துக் கொண்டான். அமைச்சனாக அமைந்த இவன் அரசனுக்குப் பல வகைகளிலும் நன்மை புரிந்து நின்றான். சிறையில் அகப்பட்டுக் கொண்டு நிலை கலங்கி நின்ற தன்னுடைய மன்னனையும் சூழ்ச்சித் திறத்துடன் காரியஞ் செய்து சிறையிலிருந்து வெளிப்படுத்தினன். அரச தருமங்களை நன்குணர்ந்து அறிவில் நிறைந்து விளங்குபவனே சிறந்த அமைச்சனுவான் என்பதற்கு இவன் தகுந்த எடுத்துக் காட்டாக அமைந்தான்.

[அறிவிற் சிறந்தவனே அமைச்சன்]

1064. லீலாவதி கதை

லீலாவதி என்பவள் விதர்ப்ப நாட்டிலே போகபுரி என்னும் ஊரிலே காளிதாசர் காலத்தில் வாழ்ந்திருந்தவள். காளிதாசருக்குக் காமக் கிழத்தியாக விருந்தாள். போச மன்னனுக்கும் காளிதாசருக்கும் இடையே சிறிது பகை மூண்டது. அதனால் காளிதாசர் மறைந்து இவளுடைய இல்லத்தில் தங்கியிருந்தார்.

காளிதாசரைக் கண்டுபிடிக்க எண்ணிய மன்னன் நாடெங்கும் ஆட்களை அனுப்பித் தேடினான். யாதும் பயனில்லை. "ஒரு பூவின்மேல் இரண்டு பூக்கள் பூத்தன" என்னும் பொருளமைத்து வட மொழியில் அரைச் சுலோகத்தை செய்து இதனை முடிப்பவர்கட்கு இருபதினாயிரம் பொன் வழங்கப்படும் என்று நாடெங்கும் அறிவித்தான். இதனை முடிப்பதற்குக் காளிதாசர் ஒருவரால்தான் இயலும

மாகையால் இதனைக் கொண்டு அவரைக் கண்டு பிடித்து விடலாம் என்பது அரசனுடைய எண்ணம். லீலாவதி இச் செய்தியைக் காளிதாசருக்குக் கழறினள். அவர் ஒரு நொடியில் முடித்தார்.

இருபதினாயிரம் பொன்னையும் அடைய எண்ணிய அப் பழிகாரி காளிதாசர் உறங்கும்போது கொன்றாள். செய்யுளைக் கொண்டுபோய் அரசனிடம் படித்துக் காட்டினாள். தானே பாடியதாகப் புகன்றாள். அரசன், செய்யுள் காளிதாசருடையது என்று அறிந்து கொண்டான். அச்செய்யுளின் மேல் பல கேள்விகளைக் கேட்டான். இவளால் யாதும் மறுமொழி கூற முடியவில்லை. அவையில் இருந்த அனைவரும் எள்ளி நகையாடினர். புகழைவிடப் பழியே மிகுதியாயிற்று. பிறகு காளிதாசன் இறைவன் அருளால் உயிர் பெற்றார்.

தான் கல்வியறிவில்லாம லிருக்கும்போது கற்றவர் அவையில் ஒருவன் ஒருபொருளைச் சொல்ல விரும்புவது மிகுந்த இழிப்பையும் பழிப்பையும் உண்டாக்கிவிடு மென்பது இவளிடம் நன்கு பெறப்பட்டது.

[கல்லாதவன் அவையேறுதல்]

1065. வசவர் கதை

வசவதேவர் என்பவர் வட நாட்டிலே மங்களபுரி என்னும் நகரிலே தோன்றியவர். இவர் கங்காம்பை என்னும் பெயருடைய ஒரு மாதை மணந்து இல்லறத்தை இனிது நடத்திக் கொண்டிருந்தார். உயிர்களிடத்திலே அருளுடையவர். மற்றைய உயிர்கட் குற்றநோயைத் தீர்த்து அவைகளை மகிழச் செய்வதில் இவர் மிகுந்த விருப்பம் உடையவர். எவ்வளவு பேர் வரினும் அவர்கள் அனைவருக்கும் உணவளித்து அவர்களுடைய பசிப்பிணியைப் போக்குவார்.

ஒரு நாள் இவருடைய இல்லில் அடியவர்கட்கு விருந்து நடந்து கொண்டிருந்தது. பொல்லாதவர் இருவர் அடியார்

போல் கோலம் பூண்டு அடியார் கூட்டத்தோடு கலந்து உண்டனர். அவர்கள் வஞ்சகர்கள் என்பதை உணர்ந்த சிலர் அவர்களைத் தாக்கச் சென்றனர். இவர் உண்மையை அறிந்து பிறர் அவர்களைத் தாக்காமல் பாதுகாத்தார்.

இவர் மீது பொருமை கொண்ட அரசன் ஒருவன் இவருக்கு நஞ்சை ஊட்டினான். அதனை இவர் உண்டும் யாதொரு துன்பமும் இல்லாதிருந்தார். சினந்து வந்த புலி ஒன்று இவரைக் கண்டதும் வணங்கி நின்றது. அஞ்சுதற் கேதுவாகிய தீவினை ஒன்றுமில்லாமல் இவர் இன்பத்துடன் வாழ்ந்திருந்தார்.

பிற உயிர்களைத் தம்முடைய உயிரைப் போல் பாதுகாத்து அருளினை ஆட்சி செய்பவர்கட்குத் தாம் அஞ்சுமாறு எத்தகைய துன்பமும் உண்டாகாது என்பது இவர்பால் நன்கு விளங்கியது.

[அருளாட்சியாளர்கட்குத் துன்பம் நேராது] (வசவ புராணம்)

1066. வசவுரை பெற்ற இராவணன் கதை

இராவணன் ஒரு காலத்தில் சிவபெருமானை வழிபடுதற் பொருட்டு திருக்கயிலைக்குச் சென்றான். கோயில் வாயிலிலே நந்தியைப் பார்த்தான். நந்தியின் முகம் இராவணனுக்கு நகைப்பை உண்டு செய்தது. அவன், "இக் குரங்கு முகத்தானை வேண்டி உடன்பாடு பெற்றுக்கொண்டா உள்ளே செல்வது?" என்று கூறி நகைத்தான். நந்தி இராவணனைப் பார்த்து மிகுந்த சினங் கொண்டார். "ஓ அரக்கனே! நீ என்னைப் பார்த்து உன்னுடைய பல்லை இளித்துக் காட்டியபடியினால் உன்னை முடிவு நாளில், பல்லை யிளித்துக் காட்டும் குரங்கின் கூட்டங்களே அழிப்பன வாகுக" என்று வசவுரை வழங்கினார். அவ் வசவுரையை எண்ணிய தேவர்கள் இராவணனை அழிக்கும் பொருட்டுக் குரங்குகளாகப் பிறந்தார்கள். இந்திரன் பெண்ணுருக் கொண்டு வந்த அருணனோடு சேர்ந்த காலத்தில் வாலி தோன்றினான்.

" அரக்கர்கோன் நகைப்ப நந்தி வெகுண்டுனை
யழிப்ப வல்வா
னரக்குலந் தாமே யென்னச் சபித்தவா நயந்து
விண்ணோர்
குரக்கின மாஞ ரன்றே இனையவன் குரங்கு வேந்தாய்ச்
சுரர்க்கிறை கூற்ருலப்போ தாயிடைத் தோன்றி ஞனல்"

[இராவணன் வசவுரை பெற்றது] (காஞ்சிப் பராணம்)

1067. வசிட்டர் கதை

வசிட்டர் என்பவர் முனிவர்களில் ஒருவர். இவர் காலத்தில் அயோத்தியில் மித்திரசகன் என்னும் பெயரையுடைய அரசன் அரசாட்சி புரிந்து கொண்டிருந்தான். அவன் தன்னுடைய முன்னோர்களை யெண்ணிப் பெரிய விருந்தொன்று நடத்தினன். அந்த விருந்துக்கு வசிட்ட முனிவரையே தலைமையாக அழைத்திருந்தான்.

அரசனுக்கு அரக்கன் ஒருவன் பகைவனாக இருந்தான். அவன் அரசனைக் கெடுக்க எண்ணினன். மடையனைப் போல் வடிவு கொண்டு மடைப் பள்ளியில் புகுந்தான். ஊன் உணவினை ஒருபால் ஆக்கினன். உணவு உண்ணுதற்கு வசிட்டர் அமர்ந்த பொழுது அவன் ஊன் உணவினைப் படைத்தான். வசிட்டர் ஊன் உணவைக் கண்டார். அரசனை அரக்கனாகுமாறு சபித்துவிட்டு உண்ணுமற் சென்ருர். குற்றமற்ற அரசன் அரக்கனுடைய வஞ்சனையால் சாபத்துக்கு உள்ளானன்.

குற்றத்தில் நீங்கிய அறிவுடையவர்கள் உயிர் வசித்திருந்த ஊனை உண்ணமாட்டார்கள் என்பது அன்று வசிட்டரிடத்தில் நன்கு பெறப்பட்டது.

[அறிவுடையோர் ஊனுண்ணர்] (விநாயக புராணம்)

1068. வசிட்டர் பழையது சாப்பிட்ட கதை

தருமர் ஓர் அறச்சாலை யேற்படுத்தி யிருந்தார். அதில் நாள்தோறும் நூருயிரம் அந்தணர்களுக்கு உணவிடுவது வழக்கம். நூருயிரம் (இலட்சம்) பேர் சாப்பிட்டவுடன் அறச் சாலையின் முன்னுல் கட்டியிருக்கிற ஆராய்ச்சி மணி தானுகவே ஒருமுறை ஒலிக்கும். அவ்வறச்சாலைக்கு ஒரு நாள் வசிட்ட முனிவர் வந்தார். சமையல்காரர்களைப் பார்த்துப், " பசியாக இருக்கிறது உணவு வேண்டும் " என்று கேட்டார். சமையல்காரர்கள் இனிமேல்தான் சமையலாக வேண்டும்; சமையலானவுடன் சாப்பிடலாம் ஓரிடத்தில் அமர்ந்திருங்கள் " என்று கூறினர்கள். " அவ்வளவு வரை யிலும் பசி பொறுக்க முடியாது. பழையதிருந்தாலும் போடுங்கள் " என்று வசிட்டர் கூறினர். சமையல்காரர்கள் பழைய உணவினைப் படைத்து உண்ணச் செய்தார்கள். வசிட்டர் சாப்பிட்டு முடிந்தவுடனே முகப்பில் கட்டியிருந்த மணி மிகுந்த பேரொலியோடு அடித்தது. இப் புதுமையைக் கண்டு எல்லோரும் மிகுந்த வியப்படைந்தார்கள். அது முதல் " பாத்திரம் அறிந்து பிச்சையிடு " என்று ஒரு மொழி எழுந்தது.

" சாத்திரவே தியர்வசிட்டர் தருமருட
சததிரத்தில் சலச்சோ றுண்ட
மாத்திரமே லட்சமறை யோர்புசித்தால்
ஆடுமணி மலிந்தா டச்சே "

[பாத்திரமறிந்து பிச்சையிடுதல்] (செயங்கொண்டார் வழக்கம்)

1069. வசுக்கள் கதை

வசுக்கள் என்பவர் எட்டுப் பேர். இவரை அட்டவசுக்கள் என்பர். இவர்களுடைய பெயர் அனலன், அணிலன், ஆபத்சைவன், சோமன், தரன், துருவன், பிரதூஷன், பிரபாசன் என வழங்கும்.

இவர்களுள் பிரபாசன் என்பவன் தன் மனைவியின் சொல்வழியே ஒழுகும் பெண்வழிச் செல்வானைப் பிறங்கினன். அவளுடைய பெயர் வசுமதி. அவள் காமதேனுவைக் கொண்டுவருமாறு தன் கணவனிடம் கூறினள். அவன் தன் துணைவராகிய மற்ற எழுவரையும் அழைத்துக் கொண்டு வசிட்டர் மனைக்குச் சென்றனன். அங்கிருந்த காமதேனுவைக் கவர்ந்துகொண்டு சென்றனன்.

காமதேனு களவு போனதை வசிட்டர் அறிந்தார். களவு செய்தவர் வசுக்கள் என்று கண்டார். சிறந்த நிலையில் இருந்தும் இழிந்த களவைச் செய்தனரே என்று சினந்தார். அதனாற் சாபந் தந்தார். அவர்கள் அனைவரும் நிலவுலகிற் பிறந்து அல்லல் அடைய நேர்ந்தது.

களவு செய்வார்க்கு உயிருடன் வாழும் வாழ்வும் தவறிப் போகும்; களவு செய்யாமல் வாழ்வோர்க்குத் தேவருலகும் வாய்க்கத் தவறாது என்பது இவ்வசுக்களிடத்தில் நன்கு விளங்கியது.

[களவு செய்வார் உயிரிழப்பர்] (பாரதம்)

1070. வசுக்கள் வசவுரை பெற்ற கதை

மேருமலையில் வசிட்ட முனிவருடைய இருக்கைக்கு அண்மையில் அவருடைய காமதேனு மேய்ந்து கொண்டிருந்தது. அட்டவசுக்களில் எட்டாமவனுடைய மனைவியாகிய மாலினி என்பவள் காமதேனுவினுடைய பாலை விரும்பினள். அவளிடத்தில் காமக் காழ்ப்புக் கொண்ட அவளுடைய கணவன் காமதேனுவை வலிந்து பிடித்துப் பாலைக் கறக்கத் தொடங்கினன். அதனால் காமதேனு மிகுந்த சினங் கொண்டது. பாலைக் கறந்த வசுவினுடைய தமையன்மார்களும் தம்பியின் செயலை விலக்காமல் நின்றார்கள்.

சினங்கொண்ட காமதேனு வசுக்களைப் பார்த்து, "நீங்கள் நூறாண்டுக் காலம் காசியில் உள்ள சுடலையில் பிணங்

களைத் தின்று கொண்டிருப்பீர்களாக'' என்று வசவுரை வழங்கியது. பிறகு வசுக்கள் காமதேனுவைப் போற்றி வணங்கித் ''தங்களுடைய குற்றத்தினைப் பொறுத்தருள வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார்கள். காமதேனு வசவுரைக்கு நீக்கமுங் கூறியது. வசுக்கள் நூறு யாண்டுகள் காசியில் இருந்து பிறகு திருக்கழுக்குன்றத்தை யடைந்து இறைவனைப் பூசித்து வழிபட்டு முன்னைய நிலையை அடைந்தார்கள்.

''..... .....கோவித்துத்
தெய்வப் பசுவசுவோர் எண்மர்தமை யுஞ்செவித்த
எவ்வக் கொடுமை இடர்கெடுத்தோன்''

(திருக்கழுக்குன்றத்து உலா)

[வசுக்கள் வசவுரை பெற்றது] (திருக்கழுக்குன்றப் புராணம்)

1071. வசுவின் கதை

வசு என்பவன் கலிங்க நாட்டிலே சிங்கபுரம் என்னும் ஊரிலே முன்னாளில் அரசு புரிந்து கொண்டிருந்தான். ஆண்மை இவனிடம் அமைந்திருந்ததாயினும் அறிவு நன்கு அமையவில்லை. அறிவற்றவர்களையே தன்னோடு சேர்த்து வைத்துக் கொண்டிருப்பான். அவ்வாறு கூடியிருந்த அறிவிலிகளில் பரதன் என்பவன் ஒருவன். இவன் மிகப் பொல்லாதவன். பிறருக்கு எப்பொழுதுந் தீங்கு செய்வதிலேயே கண்ணுங் கருத்துமாக இருப்பான்.

கபிலபுரம் என்னும் ஊரில் இருந்து சங்கமன் என்னும் பெயருடைய வணிகன் ஒருவன் சிங்கபுரத்தை அடைந்து வாணிகம் புரிந்து கொண்டிருந்தான். கபிலபுர மன்னனுக்கும் சிங்கபுர மன்னனுக்கும் பகை மூண்டிருந்தது. பரதன் வசுவினிடம் வந்து சங்கமன் பகைவனுடைய ஒற்றன். அவன் இங்கு வந்து வாணிகம் செய்வதுபோல் நடிக்கிறான். அவனை உடனே கொன்றுவிட வேண்டுமென்று கோளுரை யுகன்றான். அரசனுகிய வசு அறிவற்றவனுகையால் அவ்

வாறே கொன்றுவிடுமாறு கட்டளை யிட்டான். சங்கமனும் கொல்லப்பட்டான்.

சங்கமன் மனைவியின் பெயர் நீலி. அவள் இக்கொடுஞ் செயலால் துடிதுடித்தாள். அழுது புலம்பினாள். ஆராயாது செய்த அரசன் அழிந்தொழிய வேண்டுமென்று தீயுரை புகன்றாள். மலை யொன்றின் மீது ஏறி உருண்டு விழுந்து மாண்டாள். வசுவினுடைய செல்வம் விரைவில் அழிந்தொழிந்தது. அவனும் பல அல்லல்கட்குள்ளானான். எளியவர்கள் துன்புற்று அழுத கண்ணீர்தான் அரசனுடைய செல்வத்தைத் தேய்க்கும் படை என்பதை அனைவரும் இவன்பால் உணர்ந்தனர்.

[கொடுங்கோலரசன் செல்வம் அழியும்]

1072. வச்சந்தன் கதை

வச்சந்தன் என்பவன் முன்னாளில் வாழ்ந்திருந்த ஓர் அரசன். இவன் குடிகளைக் கண்ணுங் கருத்துமாகக் காத்து அரசியலை மாட்சியுடன் நடத்திக் கொண்டிருந்தான். இவன் காலத்தில் கொடியர் சிலர் தோன்றிக் குடிகளை நலித்தனர். கொள்ளை யடித்தல், கொலை புரிதல், மக்களைக் கவர்ந்தேகுதல் முதலியன அக்கொடியவர்களுடைய செயலாக இருந்தன. வச்சந்தன் சினங் கொண்டெழுந்தான். தன் குடிகளை நலியுங் கொடியர்களைக் கொன்று தொலைத்தான். பல பேர் அழிந்து ஒழிந்தனர். அப்பொழுது சிலர் தோன்றி, "அந்தோ இவ்வாறு கொலைத் தொழில் புரியலாமா? இது தீவினை யன்றே?" என்று கேட்டனர். அதற்கு இவன் குடிகளைக் காத்தலும் குற்றம் புரிபவர்களைக் கடிந்தொறுத்தலும் குற்றமாக மாட்டாது. இஃது அரசன் செய்ய வேண்டிய தொழில்களேயாம்" என்று மறுமொழி கூறினான். அவர்களும் உண்மை உணர்ந்து சென்றனர்.

[குற்றங் கடிதல் அரசன் தொழில்]

1073. வஞ்ச நெஞ்சன் மாண்ட கதை

நடுநாட்டிலுள்ள திருவாமாத்தூர்த் திருக்கோயிலில் திரு வட்டப்பாறை என்னும் பெயருடைய பாறை யொன்று முன் னளிற் பேராற்றல் பொருந்தியதாகவுந் தெய்வத் தன்மை அமைந்ததாகவுஞ் சிறந்து திகழ்ந்தது. அப்பாறையின் முன்பு பொய்ம்மொழி புகல்வோர் தலை வெடிக்கப் பெற்றே பாம்பு கடிக்கப் பெற்றே, அல்லது வேறு வழிகளாலோ மாண்டொறிவர். வாலியைக் கொல்வதற்கு முன்பு இராம பிரானும் சுக்கிரீவனும் அனுமன் சான்றாக நட்பானபோது உடன்படிக்கையை அப்பாறையின்முன்பு செய்து கொண் டனரென்று தலபுராணம் கூறுகின்றது.

திருவாமாத்தூருக்கு வடக்குத் திக்கிலே பொல்லாத மனி தன் ஒருவன் இருந்தான். அவன் சூதாடுதல் பொய்ம் மொழி புகலுதல் முதலிய தீய செயல்களை நாளுஞ் செய்து கொண் டிருந்தான். அவன் முற்கூறிய திருவட்டப்பாறையாகிய மெய்ம்மைக் கல்லைத் தன்னுடைய அறிவினுல் வென்றுவிட எண்ணினான். அவனுக்கு ஒரு தம்பி யிருந்தான். அவர் களுடைய முன்னோர்கள் அவர்களுக்கு மிகுந்த பொருளைத் தேடி வைத்திருந்தார்கள். கொடியவனுகிய மூத்தவன் தீய எண்ணங் கொண்டான். முன்னோர்கள் தேடிய பொருளில் தன்னுடைய தம்பிக்குப் பாகங் கொடுக்காமல் எல்லாவற்றை யுந் தானே கைப்பற்றிக்கொள்ள எண்ணினான். இருந்த பொருள்களை யெல்லாம் விற்றுத் தங்கமாகவும் மணிகளாக வும் மாற்றினான். பொருள்களைத் தன்னுடைய தம்பியோ மற்றவர்களோ காணுமாறு சிறிதும் விட்டு வைக்கவில்லை. நீண்ட மூங்கில் தடியொன்றை எடுத்து அதன் துளைக்குள் தங்கத்தையும் மணியையும் பொதிந்து வெளியே தெரியாத வாறு செப்பஞ்செய்திட்டான். எப்பொழுதும் அத்தடியைத் தன்னு டைய கையிலே வைத்துக்கொண்டு திரிந்தான்.

ஊரார்கள் இவையனைப் பார்த்து, "உனக்குரிய பொருள்களையும் உன்னுடைய அண்ணன் கவர்ந்து கொண்டான். நீ பேசாமற் பார்த்துக் கொண்டிருக்கிறுயே உனக்குரிய பொருளைக் கைப்பற்றுவாயாக" என்று அறிவுரை கூறினர். ஆகவே, பின்னவன் முன்னவனைப் பார்த்து,

"நம்முடைய முன்னோர்கள் தேடிவைத்த பொருள்கள் எங்கே? என்னுடைய பாகப் பொருள் உன்னிடம் உளதாகில் கொடுத்துவிடு. இன்றேல் திருவாமாத்தூர்த் திருக்கோயிலின்கண் அமைந்துள்ள திருவட்டப்பாறைக்கு முன்பு வந்து, "நான் உன்னுடைய பொருள்களைக் கைப்பற்றிக் கொள்ளவில்லை என்று உறுதிமொழி கூறு" என்று சொன்னான்.

முன்னவன் பின்னவனைப் பார்த்துத் "தம்பி! என்னிடம் பொருள் இல்லை. எல்லாவற்றையும் நீதான் கைப்பற்றிக் கொண்டாய்; திருவட்டப்பாறைக்கு வா. நான் உண்மையைக் கூறுகிறேன்" என்று சொன்னான். இருவருஞ் சாட்சிக்காகச் சிலரை அழைத்துக்கொண்டு திருக்கோயிலில் உள்ள திருவட்டப்பாறை இடத்திற்குச் சென்றனர். முன்னவன் ஒரு சூழ்ச்சியை உள்ளத்தில் எண்ணிக்கொண்டு தான் இந்த வஞ்சனையில் இறங்கினான். மூத்தவன் திருவட்டப்பாறையைத் தொட்டுக் கும்பிட்டு உறுதியுரைக்கத் தொடங்குவதற்குமுன் தன் கையில் வைத்திருக்கும் பொருள் பொதிந்த தடியைத் தன்னுடைய தம்பியிடம் நீட்டித் "தம்பி! இத் தடியைக் கையிற் பிடி; நான் பாறையைத் தொட்டுக் கும்பிட்டுச் சத்தியஞ் செய்கிறேன்" என்றான். உண்மையை உணராத தம்பி தடியைத் தன்னுடைய கையிலே வாங்கி வைத்துக் கொண்டான். மூத்தவன் பாறையைத் தொட்டுக் கும்பிட்டான். "முன்னோர்கள் தேடி வைத்த பொருள்களெல்லாம் என்னுடைய தம்பியிடம்தான் இருக்கின்றன. என்னிடம் சிறிதும் இல்லை இஃது உண்மை" என்று கூறிச் சத்தியஞ் செய்தான். பிறகு தடியைத் தான் பெற்றுக் கொண்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டான்.

மூத்தவன் பொய்ம் மொழி புகன்றபோது அவனுடைய தலை வெடிக்கவில்லை. வாய்வழியாக உதிரத்தைக் கக்கவும் இல்லை. இதற்குக் காரணம் யாதோ வென்று உடனிருந்தவர்கள் திகைத்தார்கள். இளையவனே திருவட்டப்பாறையைப் பார்த்து, "உன்னுடைய உண்மையும் பொய்யாகப் போய் விட்டதோ?" என்று கூறிக் கீழேவிழுந்து புரண்டு அழுதான். பிறகு மற்றவர்களோடு அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப் போனான்.

மூத்தவன் செல்லும்போது தன்னோடு கூட வந்த மற்ற வர்களைப் பார்த்து, "பொய்ம் மொழி புகன்றுல் திருவட்டப் பாறைக் கடவுள் சிறிக் கொத்தி விடுமோ?" என்று கூறி எள்ளி நகையாடினுன். அப்பொழுது ஒரு பெரிய கரிய பாம்பு அவ்விடத்தே தோன்றி அவனைக் கொத்தியது. அவன் அக்கணமே கீழே விழுந்து மாண்டான். வஞ்சகர் கள் தம்முடைய வஞ்சனையின் பலனை நுகர்வது ஒரு பொழு தும் தவருதன்றே?

[வஞ்சகர் அழிவது திண்ணம்] (திருவாமாத்தூர்ப் புராணம்)

1074. வடுகக் கடவுள் கதை

இறைவனுக்குள்ளன போல் ஐந்து திருமுகங்கள் முன்னு ளில் நான்முகனுக்கு இருந்தன. இதனுல் நான்முகனுடைய ஆணவம் மிகுதியாயது. சிவபெருமானுக்கும் ஐந்து திருமுகங் கள் உள்ளன. நமக்கும் ஐந்து திருமுகங்கள் உள்ளன. நாம் சிவபெருமானைவிடப் பெருமையிற் குறைந்து விடவில்லை என்று தருக்கி இருந்தான். இதனைச் சிவபெருமான் உணர்ந் தார். நான்முகனுடைய அகந்தையை அடக்க வேண்டு மென்று எண்ணினர். வடுகக் கடவுள் எனவும் வைரவக் கடவுள் எனவும் இக்காலத்தில் உரைக்கப்படும் வீரனைத் தம் முடைய கூருக உண்டாக்கி, "நீ போய் நான்முகனுடைய ஆணவத்தை அடக்கி வருவாயாக" என்று ஏவினர். வைர வக் கடவுள் நான்முகனுடைய ஐந்தாவது தலையை நகத்தால் கிள்ளினர். அதனைப் பலி ஏற்கும் கலனுகக் கையில் ஏந்தி னர். தேவர்களுடைய குருதியைப் பலியாக ஏற்று அவர் களுடைய இறுமாப்பையும் அடக்கினர். பிறகு இறைவனு டைய கட்டளைப்படி வைரவர் உலகத்துக்குத் தலைவராக இருந்து மக்களுடைய துன்பத்தைப் போக்கி நாளும் இன் பத்தை நல்கிக் கொண்டிருக்கிறர். சிவபெருமானுக்குள்ள அறிகுறிகளும் படைக் கலங்களும் இவருக்கும் உண்டு. மறை கள் நாய் உருக்கொண்டு ஊர்தியாக இவருக்கு அமைந்துள் ளன. இவரை இறைவனென்று சிலரும் இறைவனுடைய பிள்ளை யென்று சிலரும் கொள்ளுவர்.

" உவணக் கொடியினன் உந்திமலர்த் தோன்றிப்
பார்முதல் படைத்தவன் நடுத்தலை யறுத்துப்
புனிதக் கலனென உலகுதொழக் கொண்டு
நவத்தலை தாமரை வனவாய்ப் பருந்தெனக்
கண்டன மகந்தொறும் கலிபெறச் சென்று
நறவிரந் தருளிய பெரியவர் பெருமான் "

(கல்லாடம்—80)

[வைரவக் கடவுள்]

1075. வடுகநாத முதலியார் கதை

தொண்டைவள நாட்டில் செங்கலங்கை என்னும் ஊரில் வடுகநாத முதலியார் என்னும் பெயருடைய வள்ளல் ஒருவர் இருந்தார். இவருடைய அருமை உடன் பிறந்தான் இறந்து போனான். வடுகநாத முதலியார் பிணத்தை எடுத்துச் சுடுவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். அப்பொழுது தமிழறிவு மிக்க புலவர் ஒருவர் மிகுந்த பசியோடு வடுகநாத முதலியாருடைய இல்லத்திற்கு வந்தார். அவர் வருகையை முன்னரே அறிந்த முதலியார் பிணத்தை மூடி மறைத்துவிட்டார். நெருப்புச் சட்டியையும் அணைத்து ஒளித்துவிட்டார். பிறகு எதிர்கொண்டு சென்று புலவரைப் போற்றி வணங்கி அழைத்துக் கொண்டு வந்தார். விரைவாக அவருக்கு விருந்து சமைத்து உண்ணச் செய்தார். தம்முடனிருந்து உண்ணுமாறு அப்புலவர் கூறியதை மறுக்காமல் உடனிருந்து உண்டார் அவருக்குத் தகுந்த நன்கொடை அளித்து அவரை அனுப்பத் தொடங்கினர். வந்த புலவர் வடுகநாத முதலியார் தம்முடைய உடன் பிறந்தானைச் சாகக் கொடுத்திருத்தலை அறிந்துகொண்டார். வடுகநாத முதலியாருடைய செயல் அப்புலவருக்கு மிகுந்த வியப்பை உண்டாக்கியது. வடுகநாத முதலியாரைப் புகழ்ந்து செய்யுளொன்று பாடிவிட்டுச் சென்றார். அப்பாட்டு;

" தன்னுடன் கூடப் பிறந்த வருந்துணைத் தம்பியுயிர்
அந்நிலை மாண்டது தோன்றுமல் மூடிவைத் தன்ன

[மிட்டான்

மன்னவர் போற்றிட வாழ்செங் கலங்கை வடுகனுக்குக்
கன்னனுஞ் சோழனு மோ இணை யாகக் கழறுவதே''

என்பது.

''நேயத் துடன்பிறந் தோன்பிணை
மூடி நெருப்பவித்துத்
தாயைப் பெனவெதிர் கொண்டழைத்
தேதன் னுடனெனவே
ஆயத் தமிற்கொண் டருங்கவி
ராயனுக் கன்பு செய்த
வாயற் பதியில் வடுகனும்
வாழ்தொண்ட மண்டலமே.''

[வடுகநாத முதலியார்] (தொண்டமண்டல சதகம்)

1076. வண்டி வழங்கிய சிறுவன் கதை

மும்முடிப் பல்லவராயன் என்று பட்டம்பெற்ற ஒருவரின் பிள்ளைக்குச் சங்கிராமச்சோழன் என்பவன் தங்கத்தால் விளை யாட்டு வண்டி ஒன்றைச் செய்து கொடுத்தான். அப்பிள்ளை அவ்வண்டியைத் தெருவில் இழுத்து விளையாடிக் கொண் டிருந்தான். பிள்ளையின் தந்தையைக் கண்டு பரிசு பெறுவ தற்குப் புலவன் ஒருவன் வந்தான். அப்பொழுது தந்தை வீட்டில் இல்லை. பிள்ளையின் முகக் கனியை நோக்கிப் புல வன் வியந்தான். ''நின்னுடைய தந்தை இப்பொழுது இருந்திருந்தால் எனக்குத் தகுந்த பரிசு கிடைத்திருக்கும். அவர் இல்லாமையால் பரிசு கிடைக்கவில்லை'' என்று கூறி விட்டுச் செல்லப் புறப்பட்டான். சிறுவன் இம்மொழிகளைக் கேட்டான். தான் விளையாடிய பொன் வண்டியை இரு கைகளாலும் எடுத்துப் புலவருக்கு நன்கொடையாக வழங் கினன். குழந்தையின் செயல் புலவருக்கு வியப்பை விளை வித்தது. அவன் அதனைப் பெற்றுக்கொண்டு போகத் துணியவில்லை. சிறிது நேரத்திற்கு எல்லாம் வீடு திரும்பிய

சிறுவனின் தந்தை சிறுவனுடைய கொடைச் செயலை உணர்ந்து மிகுந்த மகிழ்ச்சியை அடைந்தான். சிறுவன் கொடுத்த பொன் வண்டியோடு மேலும் பல பொருள்களைக் கொடுத்துப் புலவனுடைய உள்ளத்திற்கு மகிழ்ச்சி உண்டாகுமாறு செய்தனுப்பினன்.

"சங்கிராம சோழன் மரகத முத்தொடு தங்கரதம்
சிங்கையிற் பல்லவன் செல்வனுக் கீயச் சிறுவன்மனம்
புங்கம தாகச் சிறுதேர் உருட்டிப் புலவனுக்கு
மங்கள மேவிக் கொடுத்தஅன் னன்கொங்கு
மண்டலமே"

[சிறுவன் வண்டி வழங்கியது] (கொங்கு மண்டல சதகம்)

1077. வண்டோதரிக்கு மகவான கதை

இராவணன் மனைவியாகிய இவள் மண்டோதரி எனவும் பெறுவாள். தன் கணவனுகிய இராவணனைப் போலவே இவளும் சிவபெருமானிடத்தில் பேரன்புடையவளாகத் திகழ்ந்தாள். இவளுக்கு இந்திரசித்து முதலிய மக்களிருந்தார்களாயினும் இவள் சிவபெருமான் தனக்கு மகவாக வர வேண்டுமென்றுஞ் சிறிது காலந் தன்னிடம் வளர்ந்து தனக்கு அருள்புரிய வேண்டுமென்றும் நெடுங்காலம் வேண்டிக் கொண்டாள். இறைவனும் அவ்வாறே மகவாகத் தோன்றித் திருவருள் புரிந்தருளினர்.

"ஏர்தரும் ஏழ்உல கேத்த
எவ்வுரு வுந்தன் னுருவாய்
ஆர்கலி சூழ்தென் னிலங்கை
அழகமர் வண்டோ தரிக்குப்
பேரருள் இன்பம் அளித்த
பெருந்துறை மேய பிராணைச்

சீரிய வாயால் குயிலே'
தென்பாண்டி நாடனைக் கூவாய்."

[வண்டோதரிக்கு அருளியது] [திருவாசகம்]

1078. வண்ணன் பழித்த கதை

இராமபிரான் இராவணனைக் கொன்று சீதையைச் சிறை மீட்டுச் சென்றார். பின்னர் அயோத்தியில் ஆட்சியை மாட்சியுடன் நடத்திக் கொண்டிருந்தார். தம்முடைய ஒற்றர்களை நாடு முழுவதும் அனுப்பி நாட்டில் வாழ் மக்கள் தம்மைப் பற்றி யாது கூறுகிறார்கள் என்பதைக் கேட்டு வந்து கூற ஏற்பாடு செய்திருந்தார்.

அவ்வாறுக ஒரு வண்ணானுடைய மனைவி யாண்டோ சில நாட்கள் வீட்டை விட்டுச் சென்றிருந்து பின் வீட்டிற்கு வந்து சேர்ந்தாள். அவ்வாறு போய் வந்த வண்ணத்தியை வண்ணன் பார்த்து, "நீண்ட காலம் வேறொருவனுடைய இடத்தில் இருந்த தன்னுடைய மனைவியை இன்னமுஞ் சேர்த்து வைத்துக் கொண்டிருக்கும் இராமன் அல்ல நான். ஆகையால் உடனே வீட்டை விட்டு வெளியே போய் விடு" என்று கண்டித்துரைத்தான்.

இதனைக் கேட்ட ஒற்றர்கள் இராமபிரானிடம் சென்று இச்செய்தியை இயம்பினர்கள். இதனைக் கேட்ட இராமபிரான் உள்ளம் வருந்தினர். நாம் தீக் கடவுளைக் கொண்டு சீதையின் கற்பை விளக்கி இருந்தும் அதனை யாரும் ஒரு பொருட்படுத்த வில்லையே என்று எண்ணினர். இதைக் குறித்து இராமபிரான் குறைகூறிய வண்ணன்மீதோ சீதாபிராட்டி மீதோ சிறிதும் சீற்றங் கொள்ளவில்லை. சீதையைக் காட்டிலே கொண்டுபோய் விட்டு விடுமாறு ஏற்பாடு செய்தார்.

(இராமாயணம்)

"பார்சீதை சீலம் பழித்துரைக்குங் காகுத்தன்
சோர்வுறமுன் சீறிலனே சோமேசா—தேரில்

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.''

[இறையாட்சி] (சோமேசர் முதுமொழி வெண்பா)

1079. வயிரப்ப முதலியார் கதை

தொண்டை வள நாட்டிலே மெய்யூரிலே வயிரப்ப முதலியார் என்னும் பெயருடையவர் ஒருவர் ஐந்நூறு ஆண்டு கட்கு முன்னே வாழ்ந்திருந்தார். இவர் கல்வியறிவுச் செல்வம் முதலியவைகளில் சிறந்து விளங்கினர். யாவருக்கும் பேருதவி செய்யும் நல்லியல்பு இவரிடம் சிறந்து விளங்கியது. அனைவரும் இவரை வள்ளல் எனப் புகழ்ந்து மகிழ்ந்திருந்தார். இவருடைய புகழ் பல திக்குகளினும் பரவியிருந்தது. இம் முதலியாருடைய பண்ணையாட்களுள் கண்ணன் என்னும் பெயருடையவன் ஒருவன் இருந்தான். அவன் பன்றிகள் சிலவற்றை வளர்த்தான். அப்பன்றிகளுள் ஒன்று ஒருநாள் பிறன் ஒருவனுடைய புலத்துட் புகுந்து அதனை மேய்ந்து அழித்தது. அப்புலம் மலையன் என்னும் பெயருடைய ஒரு போலிப் புலவனுடையது. அப்போலிப் புலவன் பன்றி தன் நிலப் பயிரை அழித்தது கண்டு சினங் கொண்டான். உடனே அதனை அடித்துக் கொன்றான். பன்றிக்குரியவன் விரைந்து ஓடினான். பன்றியை அடித்துக் கொன்ற போலிப் புலவன் பண்ணையாளையும் அடித்துக் கொன்றான்.

பன்றியையும் பண்ணையாளையும் போலிப் புலவன் அடித்துக் கொன்றுவிட்டதைக் கண்டு வயிரப்ப முதலியார் விரைந்து அங்குச் சென்றார். போலிப் புலவன் வயிரப்ப முதலியாருடைய கன்னத்தில் அடித்தான். முதலியார் அப்புலவனைப் பணிந்தார். ''குற்றத்தினைப் பொறுத்தருளுங்கள்'' என்று பணிந்து வேண்டினர். தம்முடைய விளைநிலங்களுள் நன்கு விளைந்திருக்கும் நிலம் ஒன்றை அவனுக்குக் கொடுத்தார். அவன் இவருடைய பெருந்தன்மையைக் கண்டு உள்ளம் நாணினான். முதலியாருடைய பெருந்தன்மையை அனைவரும் கண்டு வியந்து பாராட்டினர்கள்.

இவருடைய புகழ் நாளடைவில் எல்லா விடங்களினும் பரவியது. பெருந்தன்மை யுடையவர்கள் கீழ் மக்கள் செய்யும் பெரும் பிழையைப் பொறுத்துக் கொள்வதோடு அவர்களுக்கு நன்மையும் செய்வர் என்பது இம்முதலியாரிடம் நன்கு விளங்கியது.

"பயிரைப் பெரும்பன்றி தின்றதற்
காகப் பரிசனத்தோர்
உயிரைப் பருகி உடலவர்க்
கீய வொரு புலவோன்
செயிரப் புடைத்ததுத் தானே
பொறுத் தந்தச் செய்யுதவும்
வயிரப்ப னென்பவன் வாழ்வா
னதுந் தொண்ட மண்டலமே."

[வயிரப்ப முதலியார்] (தொண்ட மண்டல சதகம்)

1080. வரகுணனுக்குச் சிவலோகங் காட்டிய கதை

வரகுணன் என்பவன் மதுரை மாநகரிலே அரசு புரிந்தான். இவன் நூல்களை யெல்லாம் தக்கார் வாயிலாகக் கேட்டுணர்ந்தான். வேதம், ஆகமம், புராணம், மிருதி முதலிய நூல்களெல்லாம் உலகங்கள் எல்லாவற்றினும் உயர்ந்தது சிவலோகம் என்று கூறுதலைக் கேட்டான். அச் சிவலோகத்தைப் பார்ப்பதற்கு அவாக் கொண்டான். அன்றிரவு திருக்கோயிலை அடைந்து சோமசுந்தரக் கடவுளை வணங்கினான். "பெருமானே! தாங்கள் சிவலோகத்தில் மெய்யன்புடையார் புடைசூழ வீற்றிருத்தலை அடியேன் கண்டு மகிழ விரும்புகிறேன். அதனை அடியேனுக்குக் காட்டி யருளுதல் வேண்டும்" என்று சொல்லி வேண்டினான். மதுரைக் கடவுள் வரகுண பாண்டியனுக்குச் சிவலோகத்தைக் காட்ட விரும்பினார். சிவலோகம் உடனே அங்கு வந்து தோன்றி

யது. நந்திதேவர் சிவபெருமானுடைய கட்டளையால் வர குணனுக்குச் சிவலோகத்தின் சிறப்புக்களை யெல்லாம் காட் டினர். கனவின் காட்சியைப்போல் வரகுணன் சிவலோகத் தின் காட்சிகளை யெல்லாம் கண்டு மகிழ்ந்தான்.

"வீசுதிரை,
சேர்க்குங் கடற்புவிக்குள் தெய்வச் சிவலோகம்
பார்க்கவர வழைத்த பார்த்திபனும்."

[வரகுணன்] (திருவிளையாடல்)

1081. வரதுங்கராம பாண்டியன் கதை

வரதுங்கராம பாண்டியன் என்பவர் பாண்டிவள நாட் டில் கரிவலம் வந்த நல்லூரில் அரசராக விளங்கினர். சிறந்த புலமைக் கல்வி கற்ற இவர் பூவேந்தராகப் பிறங்கியதோடு பாவேந்தராகவும் பாரில் திகழ்ந்தார். நூல்கள் பல இயற்றி னர். அதிவீரராம பாண்டியன் என்பவர் இவருடைய தம்பி. இவ்வதிவீரராம பாண்டியருக்கும் இவருடைய தமையனு ராகிய வரதுங்கராம பாண்டியருக்கும் ஒரு சிறு செயலை முன் னிட்டுப் பகை உண்டாகியது. அதிவீரராம பாண்டியர் போர் செய்து தம்முடைய தமையனைத் தோற்கடித்து விடு வது என்ற நோக்கத்துடன் படை திரட்டிக்கொண்டு போருக்கு வந்தார்.

வரதுங்கராம பாண்டியர் போர்செய்யத் தொடங்க வில்லை. தம்பியிடம் அன்பு செலுத்தினர். "சுக்கிரீவன், விபீடணன், அருச்சுனன் என்பவர்களைப் போல் இராதே. பரதனையும், இராமனையும் போல் இரு" என்னும் பொருளு டைய பாடல் ஒன்றை எழுதித் தம்பியிடம் அனுப்பினர். தம்பியாகிய அதிவீரராம பாண்டியர் அப்பாடலைப் பார்த்தார். உள்ளம் உருகினர்; தம்முடைய அண்ணனைத் தொழுது தம்முடைய தவற்றினைப் பொறுக்க வேண்டும் என்று வேண் டிக் கொண்டார். அறவழிக்கு மட்டும் அல்லாமல் மறவழிக்

கும் அன்புதான் துணை என்பதை அன்று அனைவரும் நன்கு அறிந்து கொண்டனர்.

[மறத்திற்கும் அன்பு துணை] (வரதுங்கராம பாண்டியர் வரலாறு)

1082. "வரப்புயர" என்று வாழ்த்திய கதை

சுருக்கமாகவும் விளக்கமாகவும் பேசுவதில் ஔவையார் மிகு புகழ் பெற்றவர். அறிஞர்கள் ஆயிரக் கணக்கான பாடல்களில் பாடிய அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவைகளை ஒரே பாட்டில் பாடிப் புகழ் பெற்றவர். ஒரு காலத்தில் சோழ மன்னன் ஒருவனுக்குத் திருமணம் நடைபெற்றது.

திருமணத்திற்குச் சென்றிருந்த புலவர்கள் பலர் பல பாடல்கள் திருமண வாழ்த்தாகப் பாடினர்கள். அவர்கள் பாடிய பாடல்களைக் கேட்டோர், "அடேயப்பா! ஒவ்வொருவரும் நூறு பாடல்கள் ஐம்பது பாடல்கள் என்று பாடுகிறார்கள். கேட்பதற்கே தலைவலி எடுக்கிறதே என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தார்கள். ஔவையாரும் வாழ்த்துப் பாடல்களைக் கேட்டு அலுத்துப் போனர். நாம் இப்படிப் பாடக்கூடாது என்று முடிவு செய்தார். பாடுவதற்குத் தம்முடைய முறை வந்தவுடன், "வரப்புயர" என்று சொன்னர். பிறகு இதற்குத் தாமே பொருள் விரிக்கத் தொடங்கி, "வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயரக் குடி உயரும், குடி உயரக் கோன் உயர்வான்" என்று பொருள் விளக்கஞ் செய்தார். இதனைக் கேட்டு அங்கிருந்தவர்கள் மிகுந்த களிப்படைந்தார்கள்.

[சுருங்கச் சொல்லுதல்] (ஔவையார் வரலாறு)

1083. வரமுனிவர் மகிடனை கதை

வரமுனி என்னும் பெயருடைய முனிவர் ஒருவர் தம் முடைய இலைக்குடிலில் அமர்ந்திருந்தார். அப்பொழுது

அவ்விடத்திற்கு அகத்தியர் முதலிய ஐம்பது முனிவர்கள் வரமுனியைப் பார்க்கும் பொருட்டு அங்கே வந்தார்கள். வர முனிவர் தம்முடைய தவத்தின் மிகுதியால் ஆணவங் கொண்டு வந்தவர்களை வரவேற்காமலும் போற்றுமலும் இருந்தார். அதனால் வந்த முனிவர்கள் மிகுந்த சினங் கொண்டார்கள். வரமுனியைப் பார்த்து, "ஏ முனியே! நீ இப்பொழுது ஆணவத்தினால் எங்களை ஒரு பொருட்படுத் தாமல் இருந்தாய். இத்தீவினையினால் வெறுக்கத் தக்க எருமை முகமுடைய அசுரனுகப் பிறக்கக் கடவாய்" என்று கடுமை யான வசவுரை வழங்கினர்கள். ஐம்பது முனிவர்களும் இவ் வாறு வசவுரை வழங்கவே வரமுனிவர் மிகுந்த அச்சங் கொண்டார். உடனே எழுந்து அம்முனிவர்களுக்கு வணக் கஞ் செலுத்தினர். "அறியாமையினால் அடியேன் செய்த தவற்றினைப் பொறுத்தருளல் வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார். அம்முனிவர்கள், "எங்களுடைய வசவுரை வீண் போக மாட்டாது. இதனை நீ நுகர்ந்தே தீருதல் வேண்டும். பார்வதி தேவியின் கூரிய துர்க்கையோடு போர்செய்யும் பொழுது உனக்கு அழிவு நேரிடும். அப்பொழுது வசவுரை யின் பலன் நீங்கும்" என்று கூறிச் சென்றார்கள். வரமுனிவர் மகிடாசுரனுகப் பிறந்து பின் துர்க்கையால் மாண்டு முடிந் தார். பெரியாரைப் பேணுதொழியின் பெரியாரால் பேரா இடும்பை தரும் என்பது வரமுனிவரிடம் நன்கு பெறப் பட்டது.

[வரமுனிவர்]

1084. வரிப்புலி நோய் தீர்த்த மந்திரவாதி கதை

ஓர் ஊரிலே மணிவிளக்கன் என்னும் பெயருடைய மந்திரவாதி ஒருவன் இருந்தான். இவன் பாம்பு நஞ்சு, தேள் நஞ்சு முதலியவைகளை மந்திர ஆற்றலால் இறக்குவதில் வல்லவன். பாம்பு கடித்து இறந்துபோனவர்களைக்கூட மணி விளக்கன் உயிர்பிழைக்கச் செய்திருக்கிறான். இவனுடைய பெயர் காடு, நாடு எங்கும் பரவியிருந்தது. இவன் ஒருநாள்

ஒரு காட்டுவழியாகச் சென்றுகொண்டிருந்தான். அப் பொழுது வேங்கைப் புலி யொன்று ஓரிடத்தில் புரண்டு கதறிக் கொண்டு கிடந்தது. மணிவிளக்கன் வேங்கைப் புலியைப் பார்த்துப் ''புலியே! உனக்கு நேர்ந்தது என்ன? ஏன் இப்படிப் புரளுகிறாய்?'' என்று கேட்டான். புலி, மணிவிளக்கனைப் பார்த்து, ''ஒரு கொடிய பாம்பு என்னைக் கடித்துவிட்டது. அதனுடைய நஞ்சு என் தலைக்கேறிவிட்டது. இன்னுஞ் சிறிது நேரத்தில் உயிர் போய்விடும் போல் இருக்கிறது. நீ என்மீது அருள்புரிந்து என் உயிரைக் காப்பாற்றினால் நான் உனக்கு என்றென்றும் கடமைப்பட்டிருப்பேன்'' என்று கூறியது. மணிவிளக்கனுக்குப் பின்புத்தியாகையால் அவன் சிறிதும் எண்ணமிட்டுப் பார்க்கவில்லை. சில மந்திரங்களைக் கூறிக் குழையடித்தான். நஞ்சு பறந்துவிட்டது. நஞ்சு பறந்த அதே சமயத்தில் புலியும் இவன்மீது பறந்து வந்து விழுந்தது. மறுகணம் மந்திரவாதி அப்புலியின் வயிற்றுக்குள் அடக்கமானான். இச் செய்தியை உணர்ந்த ஒரு புலவர்

''வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி,
ஆங்கதனுக் காகாரம் ஆனாற்போல்—பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின்மேல் இட்ட கலம்.''

என்று பாடியுள்ளார். நம் முடைய உயிரின்மீது நமக்குப் பற்று இருக்குமானால் நாம் தீயவர்கட்கு உதவி செய்யக் கூடாது. கொடியோர்க்கு உதவி செய்தால் தவருமல் தீமைபுரிவர்.

[தீயோர்க்குச் செய்த உதவி] (நீதிநூல்)

1085. வருடகாரன் கதை

வருடகாரன் என்பவன் மகதநாட்டில் வெகுகாலத்திற்கு முன்பு வாழ்ந்திருந்தவன். அந்நாட்டு மன்னனாகிய தருசகன் என்பவனுக்கு முதலமைச்சன். அறநூல்களையும் பிறநூல்களையும் ஆழ்ந்து பயின்றவன். எடுத்த காரியத்தை எவ்வகையிலும் நிறைவேற்றியே தீர்வான். இடையே தடைகள் எவ்

வளவு நிகழ்ந்தாலும் அவைகளை ஒரு பொருட்படுத்தமாட்டான். ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குமுன்பு நன்கு ஆராய்ச்சிசெய்து முடிவுக்கு வருவான். முடிவுக்கு வந்தபின் ஒரு சிறிதுங் காலந் தாழ்க்கமாட்டான். இனிமேல் காலந் தாழ்ப்பின் காரியங்கெட்டுவிடுமென்று உடனே செய்து முடிப்பான்.

உதயணன் ஒருகால் இவனிடம் வந்து தன் பகைவன் ஒருவனை வெல்லுதற்கு உதவி செய்ய வேண்டுமென்று வேண்டிக்கொண்டான். இவன் உதவி செய்யலாமா என்று ஆராய்ந்தான். செய்யலாம் என்னும் முடிவுக்கு வந்தான். இனிமேல் தாழ்த்தால் பகைவன் ஆக்கந்தேடி விடுவான் என்று எண்ணினான். விரைந்து சென்று உதயணன் பகைவனை ஒழித்து உதவினான். ஒரு காரியத்தைப்பற்றி ஆராய்தலின் பலன் ஒரு முடிவுக்கு வருதல் அவ்வாறு முடிவுக்கு வந்தபின் வினையில் புகாமல் நீட்டித்தால் கேடுண்டாம் என்பதை உலகோர் இவன்பால் உணர்ந்தனர்.

[முடிவு செய்தபின் செயலை முடிக்காமல் நீட்டித்தலாகாது]

1086. வலம்புரிந்த கதை

திருவாரூர்க்கு அண்மையில் இருந்த சிற்றூர் ஒன்றிலே ஓர் வணிகன் இருந்தான். அவன் ஊமையாகவும் வறியவனாகவும் இருந்தான். அவன் ஊரார்களுடைய ஆன்களை மேய்க்குந் தொழிலை மேற்கொண்டு அதனால் உணவு முதலியன பெற்று உயிர் வாழ்ந்து வந்தான். ஒரு நாள் கற்று ஒன்று மந்தையில் இருந்து பிரிந்து தனியாகப் போய்விட்டது. மாடு காணுமற் போகவே மாட்டுக் குரியவன் மேய்ப்போனை வெகுண்டு வைதான். மேய்ப்போன் பசியோடிருந்தான். ஆவினைத் தேடிக்கொண்டு அதன் அடிச்சுவடு பிடித்துச் சென்றான். ஆவின் அடிச்சுவடு திருவாரூரை வலமாகச் சுற்றிக் கொண்டு சென்றமையால் இவனும் அவ்வழியே சென்றான். கமலை தீர்த்தக் கரையில் ஆ மேய்ந்துகொண்டு நின்றது. அதனை ஓட்டிக்கொண்டுபோய் உடையவனிடஞ்

சேர்த்தான். பிறகு அகவை முதிர்ந்தபின் மேய்ப்போனுகிய அவ்வூமன் இறந்தான். திருவாரூரை வலஞ்செய்த நல்வினை யினுல் மறுபிறப்பில் தசான்ன நாட்டு மன்னனுக்கு மகனுகப் பிறந்தான். அவனுக்கு முன் பிறவியின் உணர்ச்சியிருந்தது. இவனுல் தேடிக்கொண்டு செல்லப்பட்ட ஆவும் அந்நாட்டில் மானிட உடல் எடுத்தது. இருவரும் முறையே அரசனும் அமைச்சனும் ஆ னை க ள். இவர்கள் பழைய உணர்ச்சி யினுல் திருவாரூரை யடைந்து வலஞ்செய்யும் வழக்கத்தை மேற்கொண்டிருந்து இறுதியில் வீடு பேற்றையடைந்தார்கள்.

"—மாநகரை
மேய்ந்து வலம்புரிந்த மெய்க்கோவும் அக்கோவை
ஆய்ந்து வலம் புரிந்த ஆடவனும்—போந்து
மதியின் அமைச்சனும் மன்னு மெனச்செய்து
கதியும் வழங்கு கழலோன்—"

[வலம் புரிந்தது]

(திருவாரூர் உலா)

1087. வலன் கதை

வலன் என்பவன் அசுர வீரர்களில் ஒருவன். இவன் வெகு காலத்திற்கு முன்னர் இவ்வுலகில் வாழ்ந்திருந்தான். இவன் சிவபெருமானே நோக்கிப் பெருந்தவம் புரிந்தான். அவர் இவனது தவத்திற்கு மகிழ்ந்து அளவற்ற சிறப்புக்களே வழங்கினர். தனக்கு யாரும் நிகரில்லே என்று இவன் தருக்கினன். இவனேடு நேருக்கு நேரே போரைத் தொடங் கினுல் யாராலும் இவனே வெல்ல முடியாது. தேவர்களும் இவனே வெல்ல முடியாமல் திகைத்திருந்தார்கள். இந்த வலனே இந்திரன் வஞ்சனையால் வெல்ல எண்ணினன். ஒரு நாள் இவனிடம் வந்தான். "உன் போராற்றலே நான் மிகவும் பாராட்டுகிறேன். நீ விரும்பியதைக் கேள் நான் வழங்குகிறேன். அவ்வாறு வழங்கி உனக்கு அருள் செய்யவே இவ்வாறு நான் எழுந்தருளி வந்துள்ளேன்" என் று கூறினன்.

இந்திரன் இயம்பியவைகளைக் கேட்டு வலன் எள்ளி நகையாடினான்; துள்ளிக் குதித்தான். "நீயாவது எனக்கு அருள் செய்யவாவது? நானே உனக்கு அருள் செய்யத்தக்க உயர்நிலையில் இருக்கிறேன். உனக்கு வேண்டியதைக் கேள் தருகிறேன்" என்று தருக்குடன் மொழிந்தான். இவைகளைக் கேட்ட இந்திரன் மகிழ்ந்தான். "நான் வேள்வி ஒன்று செய்யப் போகிறேன். அதற்கு நீ வேள்விப் பசுவாக வந்து என் காரியத்தைச் செய்து முடிக்கவேண்டும்" என்று கூறி வேண்டிக் கொண்டான்.

வகை தெரியாமல் மாட்டிக்கொண்ட வலன் வாய்மொழி தவறாமல் இந்திரனுக்கு வேள்விப் பசுவாக அமைந்து நின்றான். அவன் இவனை ஓட்டிக்கொண்டு போய்க் கொன்றான். அடங்கி நடவாமலும் தன் வலிமையின் அளவை அறியாமலும் தன்னை வியந்து பெருமை பாராட்டிக்கொண்டிருப் பவன் விரைவில் கெடுவான் என்பது இவனிடம் பெறப் பட்டது.

[அடங்கி நடவாதவன் அழிவான்]

1088. வலை வீசிய கதை

சோமசுந்தரக் கடவுள் மீனாட்சியம்மையாருக்கு மறைப் பொருளை அருளிச் செய்து கொண்டிருந்தார். மீனாட்சி யம்மையார் யாது காரணத்தாலோ அவ்வுரைப் பொருளைக் கருத்தில்லாமற் கேட்டார். அதனைச் சினங்கொண்ட கடவுள் "நீ வலையர் மகளாகப் பிறக்கக் கடவாய்" என்று சாபங் கொடுத்தார். ஆனைமுகக் கடவுளும் ஆறுமுகக் கடவுளும் சினங்கொண்டு மறை நூல்களை வாரிக் கடலில் வீசினார். ஆறுமுகக் கடவுளைப் பார்த்து "நீ மதுரையில் வணிகர் குலத்தில் ஊமைப் பிள்ளையாகப் பிறக்கக்கடவாய்" என்று சாபங் கொடுத்தார். ஆனைமுகக்கடவுளுக்குச் சாபங் கொடுக்கவில்லை. அவர்களை உள்ளே விட்ட நந்திதேவரைக் கடலில் சுறா மீனாகப் பிறக்குமாறு சாபம் கொடுத்தார்.

பாண்டி வளநாட்டில் கீழைக் கடற்கரையில் உள்ள நெய்தல் நிலத்தூர் ஒன்றில் நல்விணை செய்த பரதவர் தலைவன் ஒருவன் இருந்தான். மீனாட்சியம்மையார் அவனுக்கு மகளாயினர். நந்தி தேவர் அப் பரதவர் தலைவன் மீன் பிடிக்கும் கடலில் சுரு மீனாக உழக்கிக் கொண்டிருந்தார். பரதவர் தலைவன் அம் மீனைப் பிடிக்க எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. அம் மீனைப் பிடிப்பவர்களுக்குத் தன் மகளைத் திருமணஞ் செய்து கொடுப்பதாக முடிவு செய்திருந்தான். மதுரைக் கடவுள் பரதவக் கோலத்தோடு சென்று நந்தி தேவராகிய சுரு மீனைப் பிடித்தருளினர். வலைஞர் தலைவன் அக் கடவுளுக்குத் தன்னுடைய மகளைத் திருமணஞ் செய்து கொடுத்தான். பரதவர் தலைவனுக்குத் திருவருள் புரிந்து மதுரைக் கடவுள் அங்கு நின்றும் அகன்றார்.

"கருங்கொடி அடம்பும் கண்டலுஞ் சூழ்ந்த
பனைக்குடிப் பரதவர் கலத்தொடும் மறிய
சுரிமுகச் செவ்வாய்ச் சூல்வளை தெறிப்ப
கழுக்கடை அன்ன கூர்வாய்ப் பெருங்கண்
பனிவிடந் தன்ன உடல்முதல் துணிய
ஆர்உயிர் கவரும் கார்உடல் செங்கண்
கூற்ற முருத்தெழுந்த கொள்கை போல
நெட்டுடல் பேழ்வாய்ப் பெருஞ்சுறவு தடியும்
வரைநிரை கிடந்த திரைஉவர் புகுந்து
நெடுஞ்சடைக் கிடந்த குறும்பிறைக் கொழுந்தும்
கருமுகில் வெளுத்த திருமிடற் றிருளும்
நுதல்மதி கிழித்த அழலவிர் நோக்கமும்
மறைத்தொரு சிறுகுடிப் பரதவன் ஆகி
பொன்தலைப் புணர்வலை கொடுங்கரம் ஆக்கி
நெடுங்கடல் கலக்கும் ஒருமீன் படுத்த"

(கல்லாடம்—16)

"கேவேட ராகிக் கெளிறது படுத்தும்"

[வலை வீசியது]

(திருவாசகம்)

1089. வல்லதரர் கதை

முன்னாளில் மதுரை மாநகரில் வல்லன் எனவும் தரன் எனவும் பெயரினையுடைய இருவர் இருந்தனர். இவர்கள் இருவரும் ஒருவரையொருவர் பிரியாமல் எப்பொழுதுங் கூடியே இருந்தாராகையால் வல்லதரர் என்று ஒன்றுகவே சொல்லப் பெற்றார். இவர்கள் வெளிப் பார்வைக்கு மிக நல்லவர்கள் போல் தோற்றம் அளிப்பர். உள்ளத்திற் குள்ளோ கள்ளமுங் கபடமும் நிரம்பியிருக்கும். ஏமாந்த வர்களை அடுத்து அவர்கட்கு மிக நல்லவர்கள் போல் நடித்துத் தக்க சமயம் கிடைத்தபொழுது அடியோடு கெடுத்துவிடுவர். இவர்களுடைய உண்மை நிலையை அறிந்தவர்கள் அஞ்சியொழுகினர். அறியாதவர்களோ செய்தியறியாதவர்களாய்க் கெட்டொழிந்தனர்.

அம் மதுரையிலே அழகிய மாதர்கள் இருவர் இருந்தனர். அவர்கள் விலைமாதர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். ஆயினும் அத் தீயொழுக்கத்தை அடியோடொழித்து நல்ல வர்களாக விளங்கியிருந்தனர். அவர்களிடம் முன்னேர் தொகுத்த பொருளுங் குவிந்திருந்தது. அம் மாதர்களுடைய தன்மையை இப் பொல்லாத வல்லதரர் அறிந்தனர். அவர்களையடுத்து நல்லவர்களைப் போல் நடித்தொழுகினர். அவர்கள் காளத்தி சென்று கடவுளை வழிபாடு செய்ய எண்ணியிருந்தனர். இவர்கள் தாங்கள் அழைத்துக் கொண்டு போவதாகக் கூறிப் பொருளையும் மிகுதியாக எடுத் துக் கொண்டுவரச் செய்தனர். மாதர்களும் இப் பொல்லா தவர்கள் பேச்சை நம்பி உடன் சென்றனர். வழியிற் பெருங் காடொன்றில் அம் மாதர்களைக் கொன்று பொருள்களைக் கவரத் திட்டமிட்டனர். செய்தியை உணர்ந்த மாதர்கள் அஞ்சி யலறினர். காளத்தி நாதனே! காக்க வேண்டுமென்று கதறினர். அண்ணலும் விரைவில் நண்ணி அருள் புரிந்தார். மனம் பொருந்திக் கலவாத பொல்லாதவர்க ளுடைய நட்புச் சமயங் கிடைத்தபொழுது அழித் தொழிதற்கு ஏதுவாக அமைந்ததாம் என்பதை அனைவரும் இவர்பால் அறிந்தனர்.

[தீயோர் நட்புக் கேடு விளைத்தற்கேயாம்]

1090. வல்லாள மன்னன் கதை

வல்லாள மன்னன் என்பவன் திருவண்ணுமலையில் இருந்து அரசாட்சி செய்து கொண்டிருந்தான். இவன் சிவ பெருமானிடத்திலும் சிவனடியார்களிடத்திலும் பேரன் புடையவன். சிவனடியார்கள் விரும்புவனவெல்லாம் அளித்து அவர்களுப் பெருமைப்படுத்திக் கொண்டிருந்தான். இறைவன் இவ்வரசனுக்குத் திருவருள் செய்ய எண்ணினர். துறவிபோற் கோலம்கொண்டு சென்றார். இறைவர் இவ் வாறு வந்துள்ளார் என்பதை அறியாத அரசன் அவரைப் பாராட்டிப் போற்றினன். வந்தவர் தமக்கொரு பெண் வேண்டுமென்றார். அரசன் நகரத்து விலைமாதர்களை நாடினன். இறைவன் செய்த சூழ்ச்சியால் ஒருவரும் அகப்படவில்லை. அரசன் தன்னுடைய மகிவியையே அளிக்கத் துணிந்தான். அடியவராக வந்த இறைவன் அரசனுடைய மெய்யன்புக்குக் களித்துப் பேரருள் செய்தார். இல்லறத்தில் இருந்து வாழ்க்கை நடத்துபவன் மற்றைத் துறவறத்தினேர் முதலியவர்கட்குச் சிறந்த துணையாவான் என்பதை அந்நாளில் இம் மன்னன் உலகிற்கு உணர்த் தினன்.

[இல்லறத்தோன் துறவறத்தோனுக்குத் துணை]

1091. வல்லாள முதலியார் கதை

வல்லாள முதலியார் என்பவர் தொண்டைவள நாட்டில் வள்ளல் முதலியாராக வாழ்ந்திருந்தார். ஒருநாள் அரச னுடைய அவைக்கு உடனே வரவேண்டுமென்று முதலி யாருக்கு அழைப்பு வந்தது. முதலியார் புறப்பட்டு அரச அவையை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அப்பொழுது புலவன் ஒருவன் வல்லாள முதலியாரிடம் உடை பெறும் பொருட்டு அவருடைய வீட்டை நோக்கி வந்து கொண் டிருந்தான். அவன் சிறிது கடுமையானவன். புலவனுக இருந்தும் பொறுமை முதலிய சிறந்த குணங்கள் அவனிடம்

இல்லை. அவன் முதலியாரைக் கண்டதும் "கட்டிக்கொள் வதற்கு வேட்டிகள் இல்லை. உங்களிடம் பெறும் பொருட்டு உங்கள் வீட்டை நோக்கித்தான் வந்து கொண்டிருக்கிறேன்" என்று கூறினன். அப் புலவனைப் பிறகு வீட்டிற்கு வருமாறு சொல்வதற்கு முதலியார்க்கு மனமில்லை. இடையில் இருந்த உடையை அவிழ்த்து உடனே கொடுத்துவிட்டார். பக்கத்தில் நீர்நிலை ஒன்று இருந்தது. அதில் இறங்கி மார்பளவு தண் ணீரில் குளிப்பவரைப்போல் நின்றுகொண்டார். ஏவலன் ஒருவனைக் கூப்பிட்டு ஆடை கொண்டுவருமாறு கூறினர். அவனும் விரைந்து சென்று ஆடை கொண்டுவந்தான். முதலியார் அதனை அணிந்துகொண்டு அரசவைக்குச் சென்றார். இதனால் இவருடைய புகழ் எங்கும் பரவிவிட்டது.

"உளத்துத் தயையற்ற வோர்புல வோனுக் குடை
[யுதவிக்
குளத்துட் புனலை யுடுத்து நின் றேபின்பு கூவியவைக்
களத்துப் புகுதக் கலையுடுத் தேகரை யேறிவந்த
வளத்துப் புகழ்பெற்ற வல்லாள னுந்தொண்ட
[மண்டலமே"

[வல்லாள முதலியார்] (தொண்ட மண்டல சதகம்)

1092. வழக்குரைத்த கதை

மதுரை மாநகரிலே வைசியர் குலத்திலே தனபதி என்னும் பெயருடையவன் ஒருவன் இருந்தான். அவனுக்கு மகப்பேறில்லை. ஆகவே தன் தங்கையினுடைய பிள்ளையை எடுத்து வளர்த்தான். தங்கைக்கும் அவனுக்கும் பகையுண் டாகியது. அதனால் தனபதி தன்னுடைய பொருள்களெல்லா வற்றையுந் தன்னுடைய மருமகனுக்கு அளித்துவிட்டுத் தான் தவஞ்செய்யக் காட்டிற்குச் சென்றான். தனபதியின் பங்காளி கள் தனபதியின் பொருள்களைக் கைப்பற்றிக்கொண்டு சிறு வனையும் அவனுடைய தாயையும் கதியற்றவர்களாக்கி விட்டனர். தனபதியின் தங்கை மதுரைமா நகரில் எழுந் தருளிய இறைவனிடம் தன்னுடைய குறையை முறையிட்டுக்

கொண்டாள். கடவுள் அவளுடைய முறையீட்டுக்கு இரங்கினர். தனபதியைப்போல் வடிவமெடுத்துக்கொண்டு வந்தார். அவர்களின் பொருட்டு வழக்காடினர். அவர்கள் இழந்துபோன பொருளை மீண்டும் அடையச் செய்தார்.

"முன்னொரு வணிகன் மகப்பே றின்மையின்
மருமான் தன்னை மகவெனச் சடங்குசெய்து
ஈன்ளமுங் கரணமும் அவனுழி ஒருக்கி
முக்கவர்த் திருநதி துணையுடன் மூழ்கி
அப்புலத் துயிர்கொடுத் தருட்பொருள் கொண்டபின்
மற்றவன் தாயம் வவ்வுறு மாக்கள்
காணிகைக் கொண்ட மறுநிலை மைந்தனை
நீறைத்துக் கிளைகொள் நெடுவழக் குய்த்தலும்
மைந்தனுங் கேளிரு மதிமுடிக் கடவுணின்
புந்தியொன் றின்றிப் புகலில மென்றயர்
அவ்வுழி யொருசார் அவன்மா துலனென
அறிவொளி நிறைவே ஒருருத் தரித்துவந்
தருள்வழக் கேறி அவர்வழக் குடைத்த
கூடல் நாயகன் ... ..."

(கல்லாடம்—45)

[மாமனுக வத்தது]

1093. வஞ்சியல் விற்ற கதை

சிவபெருமான் தேவதாரு வனத்துள்ள முனிவர்களுடைய மனைவியரின் கற்பை ஐயமேற்குந்திருக்கோலத்தோடு சென்று அகற்றியருளினர். தம்முடைய மனைவியரின் கற்பழித்ததை யறிந்த முனிவர்கள் அப்பெண்களை மதுரை நகரத்திலே வைசியப் பெண்களாகப் பிறக்கும்படி சாபமிட்டார்கள். மதுரை நகரத்துக்கு அரசாகிய சோமசுந்தரக் கடவுள்வந்து கையைத் தீண்டும்போது சாபம் நீங்கும் என்றும் கூறினர்கள். பிறகு முனிவர்களின் மனைவிமார் மதுரை நகரத்தில் வைசியப் பெண்

களாகப் பிறந்தார்கள். சிவபெருமான் வளையல் விற்கும் வணிகக் கோலத்தோடு வைசியத் தெருவுக்கு வந்து வளையல் விலை கூறினார். வைசியப் பெண்கள் தெருவுக்கு வந்தார்கள். வணிகரது பேரழகைக் கண்டு காமத்தினாலே மயங்கினார்கள். அவரைச் சூழ்ந்துகொண்டு தங்களுடைய கைகளை நீட்டி வளையலிடுமாறு கூறினார்கள். வணிகராக வந்த கடவுள் வளையலிட்டு மறைந்தார். சிவபெருமான் தமது திருக்கையால் தொட்டு வளையலிட்டபடியால் அவ்வைசியப் பெண்களனைவருங் கருக்கொண்டு புதல்வர்களைப் பெற்றார்கள்.

"சேலன்ன விழிமடவார் மயர்வுறவே வளைகூடல்
தெருவில் விற்ற
பாலன்ன வடிவமுறும் பரமரே காளத்திப்
பகவ ரரே"
(திருக்காளத்திக் கலம்பகம்)

"மதுரையிலிந் தனம்வளையல் விற்றசெயங்
கொண்டாரே மருவார் போரில்"
(செயங்கொண்டார் சதகம்)

"இதழியுந் தும்பையும் மதியமுங் கரந்து
வளைவிலை மாக்கள் வடிவெடுத் தருளி
முத்தமிழ் நான்மறை முனைத்தருள் வாக்கால்
வீதி கூறி விதித்தமுன் வரத்தால்
கருமுகில் விளர்ப்ப அறல்நீர் குளிப்ப
கண்புகை யாப்புத் திணியிருள் விடிய
உடல்தொறும் பிணித்த பாவமும் புலர
கண்டநீள் கதுப்பினர் கைகுவி பிடித்துக்
குருகணி செறித்த தனிமுதல் நாயகன்"
(கல்லாடம்—46)

[வளையல் விற்றது]

1094. வள்ளலே விற்கத் தொடங்கிய கதை

கொங்குவள நாட்டில் சிறந்த வள்ளலாக வாழ்ந்திருந்த சர்க்கரை மன்ருடியார் சிவப்பதிகட்கு இறைவழிபாட்டின் பொருட்டுச் சென்றிருந்தார். ஓர் ஊரில் ஒரு புலவர் சர்க்கரை மன்ருடியாரைக் கண்டார். தமக்குக் கடன் இருப்பதாகவும் அதனைத் தீர்த்து உதவ வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். அதற்குச் சர்க்கரையார், "சிவப்பதி வழிபாடு முடிந்து பதினைந்து நாட்களில் ஊர் போய்ச் சேர்வேன். அப் பொழுது வருவீர்களானால் உதவி செய்கிறேன்" என்று கூறினர். பதினைந்தாவதுநாள் காரையூர்க்குப்போய் உசாவினர். கொடையாளி இன்னும் வந்து சேரவில்லையென்பதை உணர்ந்தார். உடனே புறப்பட்டுத்தேடிக்கொண்டு சென்ருர். களரிலே இருக்கக் கண்டார். மிகுந்த சினம் உண்டாகியது. "நீ சொல்லியதை நம்பி நான் கடன்காரனுக்கும் வாக்குக் கொடுத்துவிட்டேன். சொன்னபடி நடவாத பொய்யனுகவும் ஆய்விட்டேன். சொன்ன நாள் கடந்து மூன்று நாள் ஆகிறது. உடனே பணத்தைக் கொடு" என்ருர். "ஊருக்குப் போகலாம் வாருங்கள்" என்ருர் வள்ளல். புலவர் சினங் கொண்டார். "உன்னுடைய கொடைப்பண்பு இத்தகையதா? நான் உன்னை இவ்வூர்க் கடைத்தெருவில் விலை கூறி விற்பேன்" என்று கூறி மடியைப் பிடித்து இழுக்கத் தொடங்கினர். புலவரது உறுதியைக் கண்ட வள்ளல் அவருடைய செயலுக்கு மகிழ்ந்தார். அவருடைய கடனைப் போக்கினர்.

"கொடையிற் பெரியோய்! உடனே எனக்குக்
[கொடாமையினுல்
கடையிற் பெறநினை விற்றென் கவியைக் கழிப்பனென
மடியைப் பிடித்திழுத் தேவிலே கூறிய வாணன்மிடி
வடியப் பொருள்தந்த காமிண் டனுங்கொங்கு
மண்டலமே"

(வள்ளலே விற்கத் தொடங்கியது) (கொங்கு மண்டல சதகம்)

1095. வள்ளி பிறந்த கதை

திருமால் தம்முடைய கூற்றில் ஒன்றைக்கொண்டு உலகில் வந்து சிவமுனிவர் என்னும் பெயரோடு தவஞ் செய்துகொண்டிருந்தார். அப்பொழுது திருமகள் மானுருவம் எடுத்துச் சிவமுனிவர் முன்னே சென்றாள். சிவமுனிவர் மலர்மாணைப் புணர்ந்தார். உடனே அம்மான் கருப்பமடைந்து வள்ளிக்கிழங்கு தோண்டி யெடுக்கப்பட்ட குழியில் ஒரு குழவியை ஈன்று தான் ஓடிப்போய்விட்டது. இக்குழந்தையைக் கண்டெடுத்த வேடர்கள் தம்முடைய தலைவனிடங் கொண்டுபோய்க் கொடுத்தனர். வள்ளிக் கிழங்கு தோண்டியெடுக்கப்பட்ட குழியில் பிறந்த அக்குழந்தைக்கு வள்ளி யென்று பெயரிட்டுத் தான் வளர்க்கலானான். பிறகு முருகக் கடவுள் வள்ளியை மணஞ் செய்தருளினார்.

"மாதவனேர் மாதவனுய் மாதவஞ்செய் திடலும்
வனமானுய் வந்தெதிர்ந்த மலர்மாணைப் புணரப்
பூதலமங் கையருருவாய் அவதரித்து வள்ளிப்
பொருப்புறையும் பொருப்பர்மகீ விருப்பமுடன் வளர்ந்து
தீதகலும் திணைகாத்து வேங்கையுரு வெடுத்த
செவ்வேளை அவ்வேளைச் சேர்ந்திருகைக் கோளும்
காதலுடன் புரிந்திறைவன் வலப்பாகத் தமரும்
கன்னியெனும் வள்ளிகழல் உன்னிவழுத்
திடுவாம்".

[வள்ளிபிறந்தது]

1096. வள்ளி தெய்வானையர் கதை

அமுதவல்லி எனவும் சுந்தரவல்லி எனவும் பெயருடைய பெண்கள் இருவர் திருமாலுக்குப் புதல்வியராகப் பிறந்தனர். அவர்கள் முருகக் கடவுளை மணம்புரிந்துகொள்ள வேண்டும் என்னும் நோக்கத்தோடு சரவணத்தில் தவம்புரிந்தனர். முருகக் கடவுள் அவர்கட்கு முன்னே தோன்றினார். அமுதவல்லியை இந்திரன் மகளாக வளருமாறு கட்டளையிட்

டார். அமுதவல்லி இந்திரனை யடைந்தாள். இந்திரனுடைய கட்டளைப்படி வெள்ளையானை (ஐராவதம்) அமுதவல்லியை வளர்த்தது. இதனால் அமுதவல்லிக்குத் தெய்வயானை என்று பெயருண்டாயிற்று. சுந்தரவல்லியை வேடர் சேரியில் பிறந்து வளருமாறு கட்டளையிட்டார். பிறகு இருவரையும் மணம் புரிந்தருளினர்.

"ஆரமு தமானதந்தி மணவாளா!"

(திருப்புகழ்)

[வள்ளி தெய்வானை]

1097. வள்ளியை மணம் புரிந்த கதை

வள்ளியம்மையை முருகக்கடவுள் பின்னிரவிற் களவாடிக் கொண்டு சென்றார். வேடர்கள் பின்தொடர்ந்து கூச்சலிட்டுக்கொண்டு வந்தார்கள். வள்ளியம்மை அஞ்சினாள். முருகக்கடவுள் வேடர்களோடு போர்செய்து அவர்களை வென்றார். பிறகு வேடர்கள் உயிர்பெற்றெழுந்தார்கள். வள்ளியைக் களவு செய்தது தம்முடைய வழிபடு கடவுளாகிய முருகனே என்று உணர்ந்தார்கள். முருகனை வணங்கி, "எங்களுடைய குலதெய்வமே! வேலியே பயிரை மேய்ந்தால் பயிர் எப்படி வளரும்? கடவுளாகிய தாங்களே எங்களுடைய குலத்தின் கட்டுப்பாட்டை அழித்தருளலாமா? வள்ளியம்மையை இவ்விடமே எங்கள் ஊருக்கு வந்து திருமணஞ் செய்து கொண்டு போகவேண்டும் என்று கூறி முறையிட்டுக் கொண்டார்கள். முருகக் கடவுளும் அதற்கு இசைந்து வள்ளிமலைக்குச் சென்று வள்ளியைத் திருமணஞ் செய்துகொண்டார்.

"எடுத்த வேற்கொடு கடுகிய முடுகிய
செருக்கு வேட்டுவர் திறையிட முறையிட மயிலேறும்"

[வள்ளி திருமணம்] (திருப்புகழ்)

1098. வன்னியுங் கிணறும் இலிங்கமும் அழைத்த கதை

கடற்கரையிலே உள்ள காவிரிப்பூம்பட்டினத்தில் செல்வச் சிறப்புமிக்க வணிகன் ஒருவன் இருந்தான். அவனுக்கு ஆண் மகப்பேறு இல்லை. ஒரு பெண் மட்டும் பிறந்தாள். வணிகன் தன்னுடைய மகளை மதுரையில் இருக்கும் தன்னுடைய மருமகனுக்கே திருமணஞ் செய்து கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்தான். இம்முடிவைப் பலரும் அறியச்செய்திருந்தான். பிறகு சில நாளில் அவன் இறந்தான். அவனுடைய மனைவியும் கூட இறந்துவிட்டாள். இச்செய்தியை மதுரையில் இருந்த மருமகன் அறிந்தான். காவிரிப்பூம் பட்டினத்தை யடைந்து சிலநாள் இருந்தான். தன் மாமனுடைய பெண்ணை மதுரைக்குக் கொண்டுபோய்த் திருமணஞ்செய்து கொள்வதாக உறவினர்களிடங் கூறினான். பொருள்களை யெடுத்துக்கொண்டு பெண்ணையும் அழைத்துக் கொண்டு மதுரையை நோக்கிப் புறப்பட்டான். வழியிலே திருப்புறம்பயம் என்னும் ஊரில் இரவில் தங்கினான். அப்பொழுது பாம்பு கடித்து மாண்டான். அவன் அழைத்துக் கொண்டு வந்த பெண் அதனைக் கண்டு மிகுந்த வருத்த மடைந்து புலம்பினாள். அப்பொழுது திருஞானசம்பந்தர் அப்பதியில் அமர்ந்திருந்தார். அவர் செய்தியை உணர்ந்து அவ்விடத்திற்கு வந்தார். வணிகன் பிழைத்தெழுந்தான். அவ்விடத்திலேயே அப்பெண்ணைத் திருமணஞ்செய்துகொண்டு செல்லுமாறு கட்டளையிட்டார். வன்னி மரம் கிணறு சிவலிங்கம் ஆகியவைகளைச் சாட்சியாக அமைத்துத் திருமணம் நடைபெற்றது. பிறகு அவர்கள் மதுரையை அடைந்தார்கள்.

மதுரையில் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கும் பொழுது வணிகனுடைய மனைவியர் இருவருக்குஞ் சக்களத்திப் போர் மூண்டது. மூத்தவள் இளையவளைப் பார்த்து, "நீ என் கணவனுடைய அழகிலே மயங்கி அவனைடு வந்த காதற் பரத்தை. உன்னை என் கணவன் திருமணஞ்செய்து கொண்டதற்குச் சாட்சி ஏதேனும் உண்டா?" என்று உசாவினாள். இளையவள் "திருப்புறம் பயத்தில் உள்ள வன்னிமரம்,

கிணறு, சிவலிங்கம் ஆகியவைகளே சாட்சி என்று கூறினுள். இதனைக் கேட்ட மூத்தவள் எள்ளி நகையாடினுள். "நல்ல சாட்சிகள்தாம் அவைகளை இங்கே அழை பார்ப்போம்" என்று கூறினுள். இளையவள் சோமசுந்தரக் கடவுளை வேண்டிக் கொண்டாள். அத்தக் கடவுளுடைய அருளால் அவைகள் கோயிலின் ஒரு புறத்திலே வந்திருந்தன. இளையவள் மூத்த வளை அழைத்து அவைகளைக் காட்டினுள். அவைகளைக் கண்ட மூத்தாள் அஞ்சி நின்றுள். இதனை யறிந்த நகர மாந்தர் இளையாளைப் புகழ்ந்தனர். மூத்தாளை இகழ்ந்தனர். செய்தியை அறிந்த கணவன் மூத்தவளைத் தள்ளிவைத்தான். இளையவள் தன்னுடைய கணவனை வணங்கி மூத்தவளுடைய குற்றத்தைப் பொறுக்க வேண்டும் என்று வேண்டிக்கொண் டாள். பிறகு இருவரும் ஒற்றுமையாக வாழ்ந்தனர்.

[ஈன்னி கிணறு இலிங்கம்] (திருவிளையாடல்)

1099. வாகீசர் பிழைபொறுத்த கதை

திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் வேளாளர் குலத்தில் குறுக்கையர் குடியில் திருநாவுக்கரசு நாயனுர் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் புகழனுர்; தாயார் பெயர் மாதினியார். இவருக்குத் திலகவதியார் என்னும் பெயருடைய தமக்கையார் ஒருவரும் இருந்தார். திருநாவுக்கரசர் கலைகளை யெல்லாம் நன்கு கற்றுர். ஆயினும் மெய்யறிவைப் பெற வில்லை. சமண சமயத்திற் புகுந்து தருமசேனர் என்னும் பெயரோடு விளங்கினுர்.

சைவசமய ஒழுக்கத்தை மேற்கொண்டிருந்த இவருடைய தமக்கையார் தம்முடைய தம்பியைச் சமண சமயப் படுகுழியி னின்றும் கரையேற்றியருள வேண்டுமென்று நாளும் இறை வனைப் போற்றிக்கொண்டிருந்தார்.

தருமசேனருக்குச் சூலை நோய் உண்டாகியது. அதனைத் தீர்த்தற்குச் சமணர்கள் செய்த முயற்சிகள் வீணுயின. நாவுக்கரசர் தம்முடைய தமக்கையார் திருத்தொண்டு செய்து

கொண்டிருந்த திருவதிகை வீரட்டானத்தை யடைந்து தமக் கையாரைப் போற்றினர். தம்மை வருத்துஞ் சூலை நோயைப் போக்கியருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். தமக் கையார் தம்முடைய தம்பியார்க்குத் திருநீறு நல்கினர். அத னால் நோயின் கொடுமை நீங்கியது. செய்யுளை நன்கு பாடும் ஆற்றலும் திருவருட்டிறத்தால் உண்டாகியது.

இச்செய்தியை உணர்ந்த சமணர்கள் தருமசேனர் ஒரு பொய்க்காரணத்தைக் காட்டி மீண்டுந் தம்முடைய சைவசம யத்திற்குப் போய்விட்டார். அவரை வருத்தவேண்டுமென்று தம்முடைய அரசனுகிய பல்லவமன்னனுக்குத் தெரிவித்தார் கள். உண்மையை உணராத பல்லவன் நாவுக்கரசரைப் பல வாறு வருத்தினன். இறுதியில் உண்மையை உணர்ந்தான். திருநாவுக்கரசரிடம் வந்து தன்னுடைய குற்றத்தைப் பொறுத் தருளவேண்டுமென்று வேண்டிக்கொண்டு சைவனனன். நாவுக்கரசரும் அரசன் தனக்குச் செய்த குற்றங்களையெல்லாம் பொறுத்து அவனுக்கு அருள் புரிந்தார்.

" பல்லவர்கோன் வந்து பணியக் கருணை செய்தார்.
தொல்லைநெறி வாகீசர் சோமேசா—கொல்ல
இணரெரிதோய் வன்ன இன்ன செயினும்
புணரின் வெகுளாமை நன்று "

[குற்றம் பொறுத்தல்] (சோமேசர் முதுமொழி வெண்பா)

---

100. வாசிதீரக் காசு நல்கிய கதை

திருவீழிமிழலை என்னுஞ் சிவப்பதியிலே திருநாவுக்காசு நாயனரும் திருஞானசம்பந்தப் பிள்ளையாரும் இறைவழிபாடு செய்துகொண்டு தங்கியிருந்தார்கள். அந்நாளிலே மழையில் லாதபடியினால் விளைவு நன்றாக இல்லை. அதனால் அனைவரும் உணவுக்குத் திண்டாடினர். அப்பருஞ் சம்பந்தரும் அடியா களைக் காப்பாற்றவேண்டுமே என்று கவலை கொண்டன

இறைவர் அவர்களுடைய கனவிலே எழுந்தருளினர். "நாம் நாள் தோறும் விமானத்தின் முன்னும் பின்னும் உள்ள இருக்கைகளில் ஒவ்வொரு பொற்காசு வைப்போம். நாளை முதல் அவற்றைக்கொண்டு அடியார்களுடைய பசியைப் போக்குங்கள்" என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தார்.

மறுநாள் இருவரும் பொற்காசை யெடுத்து உணவிடலாயினர். அப்பரின் திருமடத்தில் அடியார்கள் முன்னதாக உணவு கொண்டனர். பிள்ளையார் திருமடத்தில் பின்னதாக உணவு கொண்டனர். இதற்குக் காரணம் யாது? என்று பிள்ளையார் அடியார்களை வினவினர். அப்பர் பாடல் தொண்டோடு உழவாரத் தொண்டுஞ் செய்தபடியால் அப்பர் பெற்ற காசு உயர்ந்ததாக இருந்தது. சம்பந்தர் பெற்ற காசோ மட்டமாக இருந்தது. அதனால் சம்பந்தர் காசை மாற்ற வாசி கொடுக்கவேண்டியதாக இருந்தது. இச்செய்தியை அடியவர்கள் சம்பந்தர்க்குச் சாற்றினர். சம்பந்தர் இறைவன் மீது தேவாரம் பாடினர். மறுநாள் முதல் வாசியில்லாத காசு கிடைத்தது.

"வாசி தீரவே, காசு நல்குவீர்
மாசின் மிழலையீர், ஏசலில்லையே"

(தேவாரம்)

"கொள்ளைக் கதிர்முத்தின் பந்தருஞ் சின்னமுங்
கொள்ளுமொரு
பிள்ளைக் கதுதகு நாவர சாய பெருந்தகையோய்!
கள்ளைக் குவளை உமிழ்வீ ழியிற்படிக் காசொன்றுநீ
வள்ளைக் குழையுமை பங்காளர் கையிலென்
வாங்கினையே"

[வாசிதீரக் காசு பெற்றது] (தால்லர் நான்மணிமாலை)

1101. வாணராயன் கதை

கொங்கு வளநாட்டில் வாணராயன் என்னுஞ் சிறப்புப் பெயர் பெற்ற வள்ளல் ஒருவன் முன்னாளில் வாழ்ந்திருந்தான். அவன் தமிழ்மொழியினிடத்தும் அதனைக்கற்றவர்களிடத்தும் மிகுந்த பற்றுக் கொண்டவன். கற்ற அறிஞர்கள் தன்னிடம் பொருளை நாடிவரினும் வாய்விட்டுக் கேட்பதற்கு நாணுவர் என்று தன்னுடைய வீட்டு வாயிலில் ஓலையும் எழுத்தாணியுந் தொங்கவிட்டிருப்பான். நன்கொடையை நாடிவந்தவர்கள் தமது உள்ளக்கிடக்கையை அவ்வோலையில் எழுதுவர். பணியாளர்கள் அவ்வோலையைக் கொண்டுபோய் வாணராயனிடங் கொடுப்பார்கள். வாணராயன் வந்த புலவர்களின் நோக்கத்தை உணர்ந்து பரிசிலை எடுத்து வைத்துக்கொண்டு அதன் பிறகே வந்துள்ள புலவர்களை வரவேற்பான். அந்நாளில் இவனுடைய புகழ் எங்கும் பரவியிருந்தது இச்செய்தி:

"வாயிலில் தொங்கும் ஏட்டில் வரைந்ததைப்
[புலவர்க் கென்றும்
ஓய்விலா துதவு கீர்த்தி ஓங்கவாழ் பவளன் வாண
ராயனைந் நாளும் போற்ற நலமருள் சித்தாண் டீசர்
வாயிலைக் காக்குங் கட்டி யக்காரன் வருகின் றனே"
(சித்தாண்டீசர் மோகினி விலாசம்).

என்னுஞ் செய்யுளாலும் பெறப்படும்.

"தொங்கவைத் துள்ள பணையேட்டில் வாயிற்
சொலாதெழுதி
அங்குவைத் தாலதில் கண்டதை அன்பின் அரிதில்நல்கி
இங்குமற் றும்வரு வீர்புல வீரென் றிசைபவள
வங்கிசத் தார்வாண ராயனும் வாழ்கொங்கு
மண்டலமே"

[வாணராயன்] (கொங்குமண்டல சதகம்)

———

1102. வாணனையழித்த கதை

பலிச்சக்ரவர்த்தியினுடைய வழிமுறையில் வாணசுரன் என்பவன் ஒருவன் தோன்றினன். சிவபிரான் ஒரு காலத்தில் கூத்தியற்றியபொழுது இவ்வாணன் தன்னுடைய இரண்டு கைகளால் மத்தளந்தட்டினன். சிவபிரான் அவனிடத்தில் அருள் கொண்டார். அவனுக்கு ஆயிரங்கைகளையும் நெருப்பு மதிலையும் அளவிறந்த வலிமையையும் மிகுந்த செல்வத்தையும் வழங்கினர் தாமும் தம்முடைய உறுதிச் சுற்றத்தினரோடு அவன் மாளிகையைக் காத்திருத்தல் முதலிய மேன்மைகளையுங் கொடுத்தருளினர்.

அந்த வாணசுரனுக்கு உஷை என்னும் பெயருடைய பெண் ஒருத்தி இருந்தாள். அவள் ஒரு நாள் தான் ஓர் ஆடவனோடு கூடியதாகக் கனவு கண்டாள். முன்பு உமாதேவி அருளியிருந்தபடி அவனிடத்தில் காதல் கொண்டாள். தன் உயிர்த் தோழியாகிய சித்திரலேகைக்கு இச்செய்தியைத் தெரியப்படுத்தினள். அவள் அவ்வாடவன் கண்ணனுடைய பேரனும் பிரத்யும்நனுடைய மகனுமாகிய அநிருத்தன் என்று அறிந்தாள். தன்னுடைய மாயகவசியினால் துவாரகைக்குச் சென்று அவனைத் தூக்கிக்கொண்டு வந்து உஷையினிடம் விட்டாள். உஷை அநிருத்தனோடு இன்பங்களநுகர்ந்து கொண்டிருந்தாள். இச்செய்தியை வாணன் காவலர்களால் அறிந்தான். அநிருத்தனை எதிர்த்துப் போர்செய்து பாம்புக்கணையினால் கட்டி விட்டான். துவாரகையில் அநிருத்தனைக் காணுமல் யாதவர்க ளெல்லோரும் கலங்கினர்கள். நாரத முனிவர் கண்ணனிடம் போய் நிகழ்ந்த செய்தியைத் தெரியப்படுத்தினர்.

கண்ணன் கருடனை எண்ணினன். கருடன் உடனே வந்து தோன்றினன். கண்ணன் கருடன் மீது ஏறிக்கொண்டு வாணனுடைய சோணிதபுரத்திற்குச் சென்றனன். அங்கு வாணனுக்கும் கண்ணனுக்கும் போர் நடந்தது. கண்ணன் வாணனுடைய தோள்களையெல்லாம் தனது ஆழிப்படையினால் அறுத்துத் தள்ளினன். நான்கு தோள்களே எஞ்சின. பிறகு வாணன் கண்ணனைத் தொழுது அநிருத்தனுக்கு

உஷையைத் திருமணஞ் செய்து கொடுத்தான். அதன் பிறகு கண்ணன் துவாரகைக்குத் திரும்பினான்.

"... ...வாணனுயி ரம்புயங்கள் குருதிநீர்
சிந்தியோட நேமிதொட்ட திருவரங்க ராசரே"

[வஞ்சுரன்] (திருவரங்கக் கலம்பகம்)

1103. வாணன் கதை

வாணன் என்பவன் மணப்பாரை என்னும் ஊரில் முன்னாளில் வாழ்ந்திருந்தான். இவன் ஒரு குறுநில மன்னன். கொடுமையான நெறிகளிலெல்லாம் புகுந்து பொருளை மிகுதியாகத் தேடினான். தீயோர் பலர் இவனுக்கு நண்பர்களாகச் சேர்ந்தனர். அவர்களோடு இவன் ஊர்ஊராகச் சென்று தான் தேடியிருந்த பொருள்களையெல்லாம் அங்கங்கிருந்த விலை மகளிர்கட்கு வழங்கி இன்ப நலந்துய்த்தான். அழகிய விலை மகளிர் அனைவரையும் இவன் சேர்ந்தபடியால் அவர்களிடம் இருந்த கொடிய நோய்கள் யாவும் இவனைச் சேர்ந்தன. அதனால் இவன் மிகுந்த அல்லல் உற்று வருந்தினான். இவன் அடைந்த நோய் நரகத்துன்பத்தினும் கொடியதாக இருந்தது. இவன் படுகிற தொல்லையைக் கண்டவர்கள் பொதுமகளிர் தோள்களே மேன்மையற்ற கீழ்மக்கள் அழுந்தும் அளறு ஆகும் என்பதை இவன்பால் உணர்ந்தனர்.

[பொது மகளிர் தோள்களே கீழ்மக்களது நரகம்]

1104. வாமனர் கதை

வாமனர் என்பவர் காசிபருடைய மகன். இவர் திருமாலின் ஒரு கூறாக இவ்வுலகில் தோன்றினார். இவர் மிகக் குறுகிய வடிவம் உடையவர் இவரது உயரம் இரண்டரை அடியே என்பர் இவருடைய உருவத்தைக் கண்டவர்கள் எள்ளி நகையாடுவர்.

இவர் குறுகிய வடிவத்தோடு காணப்பட்டாலும் பெருமையிற் சிறந்தவர். திருமாலின் ஒரு கூருகத் தோன்றிய இவரால் செய்து முடிக்க முடியாத செயல்களும் உள்ளனவாமோ? இவர் தம்முடைய உருவத்திற்கேற்ப அடங்கி ஒடுங்கியிருந்தார். அந்நாளில் மாவலி என்பவன் ஆட்சியை மேற்கொண்டிருந்தான். அவனுல் தேவர்கட்கும் மனிதர்கட்கும் அல்லல்கள் பல உண்டாயின. இவ்வாமனருடைய பெருமையை உணர்ந்தோர் இவர்பாற் சென்று மாவலி செய்யும் அல்லலில் இருந்து தம்மைக்காக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டனர்.

இவர் எழுந்து மாவலிபாற் சென்ருர் அவன் இவர் உருவைக் கண்டு எள்ளிநகையாடினுன். "குள்ளா! வேண்டிய தென்ன கூறு தள்ளாமல் தருகிறேன்" என்று கூறித் தருக்கினுன். இவர் மிகுதியாக ஒன்றும் வேண்டாம்; என் காலால் மூன்றடி மண் எனக்குத் தா; அதுபோதும்" என்ருர். இவர் உருவத்தை எள்ளிய அவன், "அப்படியே தந்தேன் அளந்துகொள்" என்ருன். அமைச்சர் முதலியோர் இஃதேதோ வஞ்சமாக உள்ளது. கொடுக்கலாகாது தொல்லை வரும் என்று தடுத்தனர். மாவலி கேட்கவில்லை. "அளந்துகொள்" என்றே மீண்டுங் கூறினுன். வாமனர் வானளாவ நிமிர்ந்தார். மண்ணே யோரடியால் அளந்தார். விண்ணே யோரடியால் அளந்தார். "ஆயிற்று இரண்டடி மூன்ருவதடிக்கு இடம் எங்கே?" என்று உசாவினுர். மாவடிதன் தலையைக் காட்டினுன். தலையில் அடியை வைத்தார். அழுத்தினுர் பாதாளம் வரையில். மாவலி மறைந்தான். ஒருவருடைய வடிவத்தைக் கண்டு இகழ்தல் கூடாது. உருளுகின்ற பெரிய தேர்க்கு அவர்கள் அச்சாணிபோல்பவ ராவர் என்னுஞ் செய்தி இவ்வாமனரிடம் பெறப்பட்டது.

[உருவைக் கண்டு இகழ்தல் கூடாது.]

1105. வாலி கதை

வாலி என்பவன் இந்திரனுடைய கலையாய் இவ்வுலகில் வந்து குரங்குக் குலத்தில் தோன்றியவன். குரங்குகளுக்கெல்

லாம் தலைவனாக விளங்கியிருந்தான். தன்னோடு எதிர்ப்பவர் கள் எவராக இருந்தாலும் அவர்களுடைய ஆற்றலிற்பாதி தன்பாலே வந்து சேருமாறு இவன் வரம் பெற்றிருந்தான். கிட் கிந்தை என்பது இவனுடைய இருப்பிடமாக அமைந் திருந்தது.

இவன் இறைவனிடத்திலும் மிகுந்த அன்பு பொருந்தி யவன். நாள் தோறுஞ் சிவபூசை செய்யாமல் உணவு உண்ணமாட்டான். அறிவு திரு முதலிய உயர் நலங்களும் இவன்பால் தக்கபடியாக அமைந்திருந்தன. சுக்கிரீவன் எனு பவன் இவனோடு கூடப் பிறந்தவன். ஒரு காலத்தில் வாலி வேறோர் இடஞ் சென்றிருந்தான். நீண்ட காலம் ஆகியும் அவனைப் பற்றிய விவரம் எதுவும் தெரியவில்லை. அதனால் தன் தமையனுடைய அரசாட்சியை இவன் சிறிது காலம் மேற்கொண்டிருந்தான்.

திடீரென்று ஒருநாள் வாலி வந்து தோன்றினான். உடனே சுக்கிரீவன் அரசாட்சியைத் தன் முன்னவனிடத்தில் கொடுத்துவிட்டான். ஆயினும் வாலி தன் உடன் பிறந்தா னிடத்தில் மாறுபாடான எண்ணங்கொண்டான். தன் தம்பி தன்னுடைய அரசியலைக் கவர்ந்துகொள்ள முயன்றதாக முடிவு செய்தான். சுக்கிரீவனை வருத்திப் பல தொல்லைகள் விளைத்தான். அவனுடைய மனைவியாகிய உருமை யென் பவளையுந் தான் கைப்பற்றிக் கொண்டான். எல்லா நலங்க ளும் நன்கு அமையப்பெற்று விளங்கிய இவன் பிறன் மனைவி யைக் கவர்ந்து கொண்டது பிழையாக முடிந்துவிட்டது. சுக்கிரீவன் சில நாள் ஒளிந்து திரிந்தான். பிறகு இராம னுடைய உதவியைக் கொண்டு வாலியைக் கொன்று தன் னுடைய பொருள்களை மீளப்பெற்றான். வாலி சுக்கிரீவ னுடைய மனைவியைக் கவராமல் இருந்திருப்பானாயின் மாண் டொழியுமாறு நேர்ந்திராது. அறங்கூறுதவனாய் ஒருவன் தீய காரியங்களைச் செய்திருப்பினும் அவன் பிறன் மனைவியை விரும்பாதிருப்பது நன்மையாகும் என்பது இவன்பால் நன்கு விளங்கியது.

[பிறன் மனைவியை விரும்பாமை] (இராமாயணம்)

1106. வாழ்த்துரை வழங்கிய கதை

திருவாரூரில் இருந்த ஓர் இளைஞன் பட்டினத்தடிகள் பால் பேரன்புடையவனாக இருந்தான். இவன் அடிக்கடி பட்டினத்தடிகளை வழிபடுதலும் உணவு படைத்தலுஞ்செய்து கொண்டிருந்தான். இவ்வாறாக அவனுக்குத் திருமண ஏற் பாடு நிகழ்ந்தது. திருமணத்திற்கு வந்து வாழ்த்துரை வழங்க வேண்டுமென்று அன்பன் அடிகளாரை வேண்டிக் கொண்டான். அவனுடைய விருப்பப்படி திருமணத்திற்குச் சென்ற அடிகள் திருமணம் முடிந்த பிறகு வாழ்த்துக் கூறத் தொடங்கினார். பொய்யான செய்திகளைக் கூறி வாழ்த்த அவர் விரும்பவில்லை. ஆகவே மேல் நிகழப்போவதை அமைத்து;

"நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியம் தேடி
நலமொன்றும் அறியாத நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க வருகின்ற புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர் கைவிடவு மாட்டீர்
கவர்பிளந்த மரத்துளையிற் கால்நுழைத்துக்
[கொண்டே
ஆப்பதனை அசைத்துவிட்ட குரங்கதனைப் போல
அகப்பட்டீர் கிடந்துழல அகப்பட்டீர்நீரே"

என்று பாடிச் சென்றார்.

[பட்டினத்தார் திருமண வாழ்த்து]

1107. வான்மீகி முனிவர் கதை

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் இவர் அந்தணர் குலத்தில் தோன்றினார். தமது குலத்தையும் ஒழுக்கத்தை யும் அடியோடு மறந்து தீவினைகள் பல புரிந்தார். இழிகுல மாது ஒருத்தியைக் கலந்தார். மக்கள் பலரைப் பெற்றார்;

அவர்களைக் காப்பதற்கு வழிப்பறித் தொழிலையே வளம்பெறு தொழிலாகக் கொண்டார். செயலால் வேடராக மாறி விட்டார்.

ஒருநாள் முனிவர் ஒருவர் வழியே சென்றுகொண்டிருந் தார். இவர் அவரையும் வருத்தி அவருடைய கையிலுள்ள தைப் பறிக்க எண்ணினர். முனிவரை வழி மடக்கினர். "உள்ளதைக் கொடாயேல் உயிரிழப்பாய்" என்று அச்சுறுத் தினர்.

அம்முனிவர், "இத்தொழிலால் வரும் தீவினை உன்னைச் சேரும். பொருள்களை நுகரும் இன்பமோ உன் மனைவி மக்களைச் சேரும். நாடுகளுக்கு நீ நுகரப்போகிற தீவினைப் பல னில் அவர்கள் சிறிதும் பங்கு கொள்ள மாட்டார்கள், வீணாக ஏன் கெட்டுப்போகின்றாய்?" என்று உசாவினர்.

அதற்கு வான்மீகியார், "பொருளில் பங்கு கொள்வது போல் நாடுகளுக்குத் தீவினையிலும் பங்கு கொள்வர் ஐயமில்லை" என்றார். முனிவர், "போய்க் கேட்டுப்பார்" என்று மொழிந் தார். வான்மீகியார் மனைவி மக்களிடம் போய் நாடுகளுக்கு நான் அடையப்போகும் தீவினையிலும் நீங்கள் பங்குகொள்வீர் களா?" என்று உசாவினர். அதற்கு அவர்கள் "எங்களைக் காப்பாற்ற வேண்டியது உன்னுடைய பொறுப்பாகையால் காப்பாற்றுகிறாய். தீவினையில் நாங்கள் பங்குகொள்ள வேண்டிய கட்டாயம் ஒன்றுமில்லை" என்று உரைத்தனர்.

வான்மீகியார் திரும்பி முனிவரிடம் வந்தார். அவரு டைய அடிகளில் விழுந்து பணிந்தார். "தமக்கு அறிவுரை கள் வழங்கி ஆட்கொள்ளவேண்டும்" என்று வேண்டினர். முனிவர் இராமபிரானுடைய மறையைக் கற்பித்தார். அஃதை அவரால் உணர்ந்துகொள்ள முடியவில்லை. மராமரத்தைக் காட்டி "இதன் பெயர் யாது?" என்று உசாவினர். முனிவர் 'மரா' என்றார். வான்மீகர் இதனையே சொல்லிக்கொண்டிரு என்று கூறிவிட்டுச் சென்றார். முனிவர், "மராமராமரா" என் பது 'ராமராம' என்று மாறிவிட்டது. வான்மீகர் ஐம்புலன்களை யும் அடக்கினர். தம்மீது புற்றுமூடுமாறு நெடுங்காலம் அம் மறையைக் கூறிக் கடுந்தவம் புரிந்தார். ஐம்பொறிகளையும் அடக்கிச் செய்த அருந்தவப் பயனால் எழுமையும் பயன்தரு தாகிய பெருமையை அடைந்தார். இதன் பிறகே வான்மீகர்

என்னும் பெயர் உண்டாகியது. இராமபிரானுடைய காதையை முதலில் வடமொழியில் இயற்றியவர் இவர்தாம். ஒரு பிறப்பின்கண் ஐம்புலன்களையும் அடக்கினால் எழுபிறப்பினும் உயரிய மேன்மை அடைவர் என்பது இவரிடத்தில் நன்கு விளங்கியது.

"நல்வேட வான்மீகர் சப்தரிஷி களோச்சேர்ந்தே
[ராம மந்த்ரம்
சொல்லநா வில்லாது கற்றறியா மையின்மரா
[வெனமுன் சொன்னார்
வில்விசயன் தெவ்வைவெல்லக் கணைதொடுத்த
[செயங்கொண்டார் விளங்கு நாட்டில்
கல்விதனக் கழகுகச டநமொழிதல் எனமுன்னோர்
[கழறு வாரே"

(செயங் கொண்டார் சதகம்)

[ஐம்புலன்களையும் அடக்குதல்]

1108. வான் வழியை அடைத்த கதை

சூரபன்மனுக்கும் அறுமுகக் கடவுளுக்கும் போர் நிகழ்ந்தது. அறுமுகப்பரமன் சூரனுடைய படையை அழித்து ஒழித்துக் கொண்டிருந்தார். படைகள் ஒழிதலைக் குறித்துச் சூரபத்மன் சிறிதும் அஞ்சவில்லை. பிற அண்டங்களில் இருந்தும் படைகளை வரவழைத்தான். இந்த அண்டத்துப்படை ஒழியப் பிற அண்டங்களிலிருந்தும் படைகளையழைத்தலை முருகக்கடவுள் கண்டார். பிற அண்டத்திலிருந்தும் படை வரும் வழியைக் கெட்டியாக அடைத்துவிட்டார். இதனைக் கண்டு சூரபத்மன் சிறிதுங் கலங்கவில்லை. கணைகளை ஏவி விண் வழியைத் திறந்து அவ்வழியாகத் தன்னுடைய படைகளையழைத்துப் போரிட்டான். ஆயினும் முருகக் கடவுள் அதனையொரு பொருட்படுத்தாமல் அவ்வாறு வானவெளி வழியாக வரும் படைகளையும் அழித்தொழித்தார்.

[வான் வழியை அடைத்தது]

1109. விகட சக்கர விநாயகர் கதை

திருமால் முதலிய தேவர்களைச் சேர்த்துக்கொண்டு தக்கன் சிவபெருமானுடைய திருவருளுக்கு மாறுக ஒரு வேள்வியைச் செய்தான். அப்பொழுது சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணில் இருந்து தோன்றிய அகோரவீரபத்திரக் கடவுள் அவ்வேள்வியை அழித்துத் திருமாலைத் தாக்கினர். அப்பொழுது திருமால் சுதரிசனம் என்னும் உருளைப படையை வீரபத்திரக் கடவுள் மீது ஏவினர். அவ்வுருளைப் படையை வீரபத்திரக் கடவுளுடைய திருமார்பில் விளங்கிய தலைமாலையில் இருந்த ஒரு தலை கௌவிக்கொண்டது. பிறகு அவ்வுருளைப் படையைப் பெறும்பொருட்டு வைகுண்டத்தில் வாயில் காப்பவராகிய சேனை முதலியார் என்னும் வீடுவ சேனர் வீரபத்திரக் கடவுளை வழிபாடுசெய்தார். வீரபத்திரக் கடவுள், "கவ்விய தலையிடமே பெற்றுக்கொள்" என்று அருளிச்செய்தார்.

பிறகு வீடுவசேனர் வீரபத்திரக்கடவுள் திருமுன்பு கொங்காணித்தாதன் கூத்து என்னுங் குடக்கூத்தையாடினர். அதனைப் பார்த்து அம்மாலையில் இருந்த தலை நகைத்தது. அப்பொழுது உருளைப்படை கீழே விழுந்தது. அதனை வீடுவசேனர் எடுக்கும்பொழுது ஆனைமுகக் கடவுள் தம்முடைய துதிக்கையை நீட்டி அவ்வுருளைப் படையைப் பறித்துக்கொண்டார். தம்முடைய திருமுன்பும் அக்கூத்தினை ஆடுமாறு கூறினர். வீடுவசேனர் காஞ்சி ஆயிரக்கால் மண்டபத்தில் ஆனைமுகக் கடவுள் திருமுன்பு அவ்விகடக் கூத்தையாடினர். ஆனைமுகக் கடவுள் அக்கூத்துக்கு மகிழ்ந்து உருளைப் படையைக் கொடுத்தார். அதுமுதல் அவ்விநாயகருக்கு விகட சக்கர விநாயகர் என்று பெயருண்டாகியது.

"போராழி அதன்வாயில் கழிந்துபுவி
மிசைவீழப் பொருக்கென் றங்கை
ஏராணை முகக்கடவுள் அதுகவர்ந்தங்
கறியான்போன் றிருப்ப நோக்கிப்
பேராண்மைப் படைத்தலைவன் இனிச்செயலே
தென்றழுங்கிப் பேதுற் றந்தச்

சீராளன் திருமுன்பு நீங் கைகண்ட
விகடநடஞ் செய்து வேண்ட
ஏக்கறவா னவனியற்றும் விகடநடம்
நெடும்போதெம் பெருமான் நோக்கி
மாக்கருணை சுரந்தருளி ஆழியவன்
தனக்களித்தான். ... ...''

(காஞ்சிப் புராணம்).

[விகடசக்கர விநாயகர்]

1110. விகருணன் கதை

விகருணன் கவுரவர்களில் ஒருவன். அனைவரும் பொல்லாதவர்களாக அமைந்து நின்ற அக்கூட்டத்தில் இவன் ஒருவன்தான் நல்லவனாகப் பொருந்தியிருந்தான். நேரிய நெஞ்சமுஞ் சீரிய அறிவும் ஒருங்கே அமையப்பெற்றவன். எதற்கும் அஞ்சாமல் நடுவு நிலை பிறழாமல் உரையாட வல்லவன்.

தன் முன்னவர்களாகிய துரியோதனன் துச்சாதனன் முதலியோர் அடாத காரியங்கள் பலவற்றை அரசவையில் நிகழ்த்தியபோது இவன் இடையே நின்று தடைகள் புரிந்தான். ஆனால் இவனுடைய உரையைத் துரியோதனன் முதலியோர் பொருட்படுத்தவில்லை. ஆனால் பெரியோர்கள் ''விகருணன் நல்லவன்'' என்று கூறி அவனைப் பாராட்டினார்கள். மனங்கோணுதலின்றி உரையாடுதலே ஒருவனுக்குச் சிறப்பினையளிப்பதாகும்.

(பாரதம்).

[மனங்கோணுமை]

1111. விக்கிரமாதித்தன் கதை

விக்கிரமாதித்தன் என்பவன் கூரிய அறிவு படைத்த ஓர் அரசன். இவன் அரசனுக இருந்தும் விசயன் என்னும் பெயருடைய தட்டான் ஒருவனைத் தன்னுடைய நண்பனாக

கொண்டு ஒழுகினான். விக்கிரமாதித்தனுடைய அமைச்சனுகிய பட்டி என்பவன் இதனை அறிந்தான். "தட்டானுடைய உறவு கட்டாயம் தீங்கை உண்டாக்கும். ஆகையால் அவனுடைய உறவை விட்டுவிட வேண்டும்" என்று பன்முறையும் அறிவுரை கூறினான். தீவினையின் பலனை நுகர வேண்டிய ஊழ்வினையின் வலியால் அரசன் அமைச்சனுடைய அறிவுரையைக் கேட்கவில்லை. அத்தட்டான் கற்றிருந்த இந்திரசாலம் மகேந்திரசாலம் என்னும் வித்தைகளை அவனிடத்திலே கற்றுக்கொண்டு தான் கற்றிருந்த பிறவுடலில் நுழைதல் கலையை அத்தட்டானுக்குக் கற்பித்தான். தட்டான் அரசனை வஞ்சித்து அவனுடைய இன்ப நலங்களைத் தான் நுகரவேண்டுமென்று சமயம் பார்த்துக்கொண்டிருந்தான்.

ஒருநாள் அரசன் அமைச்சனில்லாமல் வேட்டையாடுவதற்குக் காட்டிற்குச் சென்றான். இதுதான் சமயம் என்று தட்டானும் அக்காட்டையடைந்தான். அரசனுந் தட்டானும் ஒன்றாகக் கூடி வேட்டையாடினார்கள். பிறகு இருவரும் ஒரு குளக்கரையிற் போய் அமர்ந்தார்கள். அவர்கள் அமர்ந்திருந்த இடம் ஓர் ஆலமரத்தின் நிழல். அரசனுக்குக் களைப்பு மிகுதியாக இருந்தது. அரசன் தட்டானுடைய மடியிலே தலையை வைத்துக்கொண்டு படுத்தான். படுத்தவன் மேலே பார்த்தான். அவ்வால மரத்திலே ஆணும் பெண்ணுமாக இரண்டு கிளிப்பறவைகள் இன்புற்றிருந்தன. அப்பொழுது திடீரென்று ஆண்பறவை இறந்துபோய்விட்டது. ஆண் பறவையினுடைய பிரிவாற்றாது பெண் பறவை மிகுந்த வருத்தத்தையடைந்து கலங்கியது. உயிர்களிடத்திலே அருளுடைய அரசன் பெண் பறவையின் துன்பத்தைக் கண்டு உள்ளம் நெகிழ்ந்தான். அதனுடைய துன்பத்தைப் போக்க எண்ணினான். பிறவுடலில் நுழையும் (பரகாயப் பிரவேசஞ் செய்யும்) தன்னுடைய வித்தையினால் தன்னுடைய உடலை விட்டு ஆண்கிளியினுடைய உடலிலே நுழைந்தான். உடனே ஆண் கிளி எழுந்து பெண் கிளியை மகிழ்வித்தது. அரசனுடல் உயிர்போன உடலாகக் கிடந்தது. தட்டான் சமயம் வாய்த்தது என்று மகிழ்ந்தான். அரசன் கற்பித்திருந்த பிறவுடல் நுழையுங் கலையினால் அரசனுடைய உடலிலேயே நுழைந்தான். படைகளோடு விரைவாகப் பட்டணத்தை யடைந்தான். இவைகளைக் குறிப்பினால் உணர்ந்த அமைச்

சன் அரசனுடைய மனைவியர் கற்புக்குப் பழுது வராமல் சூழ்ச்சி செய்து காப்பாற்றினான். அரசன் பல தொல்லைகளை யடைந்து இறுதியில் தன்னுடைய கிளி வடிவம் நீங்கப் பெற்றுத் தன் உண்மையுடலை அடைந்தான். கீழ்மக்களுடைய நட்பு இவ்வாறுதான் துன்பத்தையளிக்கும்.

"செய்யபுகழ் விக்கிரமா தித்தனெனுந் தட்டாரப்
பையல் நறவுபற்றிப் பட்டதனில்—"

(ஆத்திசூடி வெண்பா)

[விக்கிரமாதித்தன்]

1112. விக்கிரமார்க்கன் கதை

விக்கிரமார்க்கன் என்பவன் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் உச்சயினி என்னும் நகரத்தில் இருந்து அரசு புரிந்தவன். இவன் மிகுந்த அறிவுத் திறம் உடையவன். எல்லாக் கலைகளையும் இனிது உணர்ந்திருந்தான். இவன் காளிதேவியின் அருளும் நன்கு கைவரப்பெற்றிருந்தான். இவன் அரசு புரிந்த அரியணை மிகுந்த சிறப்புடையது. அதில் முப்பத்திரண்டு பதுமைகள் அமைந்திருந்தன. அவைகள் யாவும் பேசத்தக்க ஆற்றல் அமையப் பெற்றவை. நல்லியல்பில்லாத அரசர்களாயின் அவர்கள் ஒருகணமேனும் அவ்வரியணையில் அமர்ந்திருப்பதற்கு அப் பதுமைகள் விடமாட்டா.

விக்கிரமார்க்கனிடம் எல்லாவகையான பண்புகளும் நன்கு அமைந்திருந்தன. தன்னுடைய அமைச்சர்களோ அல்லது ஆட்சிக்குட்பட்ட மக்களோ தன்னை எவ்வளவு இகழ்ந்துரைத்தாலும் குற்றங்கள் சுமத்தினாலும் அவைகளையெல்லாம் இவன் பொறுத்துக்கொள்வான். கேட்கும் பொழுது காதுக்கு எவ்வளவு துன்பத்தையுண்டாக்கினும் இவன் அதனைப் பொருட்படுத்தமாட்டான். இதனால் இவனுடைய புகழ் யாண்டும் பரவியது. எல்லோரும் இவனைப் பாராட்டினர்கள். இவன் தன்னுடைய அரசாட்சியை நன்கு நடத்திக்கொண்டிருந்தான். தனக்கு வெறுப்பை விளைவிக்

கும் சொற்களையும் பொறுத்துக்கொள்ளுகிற அரசனுடைய ஆட்சிக்கீழ் உலகம் அமைந்திருக்கும் என்பதை உலகம் இவன் பால் கண்டது.

[செவிகைப்பச் சொற்பொறுத்தல்]

1113. விசயபத்திரன் கதை

பவகிரி என்னும் நகரத்தில் வெகு காலத்திற்கு முன்பு விசயபத்திரன் என்னும் பெயருடைய அரசன் ஒருவன் இருந்தான். இவன் அறநூல்கள் பலவற்றையும் ஓதியுணர்ந்து முறைப்படி அரசு புரிவதில் வல்லவனாக இருந்தான். இவனிடம் போர் புரிதற்கு வேண்டிய படைவலி நன்கு அமைந்திருந்தது. ஆயினும் இவன் போரிடுவதில் தகையிடுவதில்லை. குலப்பகைவர்களாக நின்ற அரசர்கள் இவனிடமும் பகைபாராட்டிப் போராட வந்தனர். ஆனால் இவன் அவர்களோடு போராடுதற்குத் தொடங்கவில்லை. அவர்கள் தன்மீது நெருங்கி வந்து விடுதற்கு இடங்கொடாமலே போக்குக் காட்டிக் கொண்டிருந்தான். அவர்கள் இவனுடைய மனப்போக்கை உணர்ந்து கொள்ள முடியாமல் முதலில் மறுகி நின்றனர். பிறகு இவன் போரிடுவதால் இருபக்கத்தார்களுக்கும் தொல்லையுண்டாகுமென வெண்ணிப் பகைக்கு இடங்கொடாமல் இருக்கிறான் என்று உணர்ந்தனர். இவனுடைய செயல் நாளடைவில் அவர்கட்கு மகிழ்ச்சியை உண்டு செய்தது. பகைமையைப் பாராட்டாமல் இருக்கும் இவனோடு போரிட்டுக் கொண்டிருத்தல் நல்லதன்று என்று எண்ணி இவனோடு நட்புக் கொண்டனர். பகைவர் முன்பு பகைமை பாராட்டாமல் நடக்க வல்லவர்களை வெல்லக் கருதுபவர் எவரும் உள்ளவராகார் என்பது இவனிடம் விளங்கியது.

[பகை பாராட்டாதவர்களை எவரும் வெல்ல முயலார்]

1114. விசுவ கன்மன் கதை

தேவருலகில் உள்ள விசுவகன்மன் ஒரு நாள் வைகுண்டத்தில் திருமால் திருமுன்பு சென்றான். திருமாலானவர் விசுவகன்மனைப் பார்த்துச் சினங்கொண்டார். நீ நம்முடைய கட்டளையில்லாமல் ஆணவத்தோடு இங்கு வந்தபடியால் நிலவுலகில் உள்ள ஒரு வேளாளனால் ஒழியக்கடவாய் என்று சாபமிட்டார். விசுவகன்மன் திருமாலின் அடிகளை வணங்கிக் குற்றத்தைப் பொறுத்தருள வேண்டுமென்று வேண்டிக் கொண்டான். திருமாலானவர் சிறிது அருள் புரிந்து, "நம்முடைய வசவுரையின் பலனை நீ நுகர்ந்தே தீரவேண்டும். ஆயினும் அவ்வேளாளனோடு போர் புரிந்து தோல்வியடைந்து வேளாளகுலத்தார்க்கு நீ உன்னுடைய வழிமுறையினரோடு ஏவிய பணியைச் செய்து வாழக்கடவாய்" என்று அருள் புரிந்தார்.

விசுவகன்மன் நிலவுலகத்தையடைந்து கரசிப்பதிக்குச் சென்றான். அப்பொழுது ஒரு வேளாளன் எதிர்ப்பட்டான். விசுவகன்மன் பொறுமையினால் அவ்வேளாளனோடு போர் செய்து திருமாலின் சாபவுரையால் தோல்வியடைந்தான். பிற்கு மறுபடியும் போர் புரிந்து இளைத்துத் தேவலோகஞ் சென்றான். வேளாளன் அங்கும் விரைந்துசென்று விசுவகன்மனைக் கைப் பிடியாகக் கொண்டு வந்து நிலவுலகில் விட்டான். சிவன் திருமால் நான்முகன் முதலியோர் வேளாளனுடைய ஆற்றலைப் பலவாறு புகழ்ந்து பாராட்டினார்கள். வேளாண்மைக்குள் எல்லாம் வசியப்பட்டுள்ளனவாதலின் வேளாள குலத்தார்க்கு வைசியர் என்னும் பெயரையும் தங்கள் தங்களுடைய கொடி முதலியவைகளையுங் கொடுத்துப் புகழ்ந்தார்கள். நான்முகன் தன்னுடைய அரியணையையுங் கொடுத்தான். எண்டிரு மகளிர்களும் எல்லா வகையான செல்வத்தையுங் கொடுத்தார்கள்.

[விசுவகன்மன்]

———

1115. விசுவாமித்திரர் கதை (1)

இவர் கோசிகரென்றுங் கூறப் பெறுவார். சித்தாச் சிரமம் என்னுமிடத்தில் தங்கி வேள்வி யொன்று செய்தார். தாடகை முதலியோர் இவ்வேள்விக்கு இடையூறு இயற்றினர். அதனால் வேள்வி முற்றுப் பெறவில்லை. அந்நாளில் தசரத மன்னன் அயோத்தியிலிருந்து அரசு புரிந்து கொண்டிருந்தான். அம்மன்னனை அடைந்து தமது குறையை முறையிட்டால் வேள்வி நிறைவேறுவதற்கு அவ்வரசன் உதவி செய்வான் என்று எண்ணினர். புறப்பட்டு அயோத்திக்கு வந்தார்; தசரத மன்னனைக் கண்டு தம் குறைகளை முறையிட்டார். உன் மகன் இராமனை அனுப்பித் துணை புரிய வேண்டும் என்று வேண்டினர். தசரத மன்னனும் அவ்வாறே செய்தான். இதனால் விசுவாமித்திரருடைய வேள்வி யாதோர் இடையூறுமின்றிச் சிறப்பாக நடந்து முடிந்தது. துறவிகள் முதலானோரையும் அவர்களுடைய அறவழியிலே நடக்கச் செய்து முறைப்படி செய்யும் இல்வாழ்க்கையானது துறவிகளது தூய வாழ்வினும் உயர்ந்ததென்பது அன்று எல்லோராலும் நன்கு அறியப்பட்டது.

[இல்வாழ்க்கை சிறந்தது]

1116. விசுவாமித்திரர் கதை

இவர் வசிட்டரோடு மாறுபட்டுப் போர் தொடங்கினர். அப்போரில் தமது உடல் வலி படைவலி முதலிய தொலையப் பெற்றார்; மக்களையும் இழந்தார். பிறகு தவம் புரிந்து சிறப் படைந்தார்.

ஒருமுறை பட்டறிந்த பின்னரும் அறிவு வரவில்லை. அரிச்சந்திரன் பொருட்டு அவரோடு பகைத்துப் பழியுந் தீவினையும் படரப் பெற்றார். ஒருவன் சினம் தன்னின் வலியார் மேற் செல்லின் அதனால் தனக்கே கேடுவரும் என்பதை உணர்ந்தாரி.

திரிசங்கின் பொருட்டுத் தாம் செய்ய விரும்பிய வேள்விக்கு வராத வசிட்டருடைய மக்களை வேடர்களாகுமாறு சபித்தார். தம் சொல்லை மறுத்த தம்முடைய புதல்வர்களைப் புலையர்களாக்கினர். தம்மை விரும்பிய அரம்பையர் சிலரைக் கற்களாக்கினர். அரசர்கள் இருவருடைய படையைத் தம் சினத் தீயால் சாம்பலாக்கினர்.

சினஞ் செல்லத்தக்க விடத்தில் சினத்தைச் செலுத்திப் பலருக்குத் தீமையை உண்டாக்கியபடியால் இவர் தமது தவப்பெருமையை இழந்து பழியையுந் தீவினையையும் அடைந்தார். பிறகு சினத்தை யொழித்துத் தவம் புரிந்து சிறப்படைந்தார்.

தன்னுடைய சினம் பலிக்காத வலியவரிடத்தில் சினங்கொள்வது தீது; பலிக்கத் தக்க மெலியவரிடத்திலும் சினத்தை விடத் தீயது வேறொன்றும் இல்லை என்பதை எல்லோரும் இவரிடத்தில் நன்கு அறிந்து கொண்டனர்.

(இராமாயணம்)

[எல்லா விடங்களினுஞ் சினந்தது]

1117. விசையை கதை

விசையை என்பவள் விதைய நாட்டு வேந்தன் மகள். ஏமாங்கத நாட்டு மன்னனுகிய சச்சந்தன் என்பவனுக்கு மனைவியாகி வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தாள். அரசன் அரசாட்சியை நன்கு போற்றுமையால் அமைச்சன் ஒருவன் அதனைக் கைப்பற்றிக் கொண்டான். அரசி ஒருவாறு உயிர் பிழைத்துச் சென்று வேறோர் இடத்தில் சீவகனைப் பெற்றாள். தான் ஓரிடத்தில் அமர்ந்து தவவாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தாள். இருபதாண்டுகட்குமேல் இவள் தவத்தில் ஈடுபட்டிருந்தாள். அக்காலத்தில் சீவகன் நன்கு வளர்ந்து கல்வி கற்றுச் சிறப்புடையவனுய்த் திகழ்ந்தான். தன் தந்தை பகைவரால் கொல்லப்பட்டதையுணர்ந்தான். தன் அரசாட்சியைக் கைப்பற்றுவதற்கு ஆவன புரிந்தான். சீவகன்

சிறப்பையும் பெருமையையும் அவன் முயற்சியையும் அறிந்தோர் அவனுடைய தாயாகிய விசையைக்கு விளம்பினர். இதனைக் கேட்ட விசையை பெற்ற காலத்தில் மகிழ்ந்ததை விடப் பன்மடங்கு உவகையை அடைந்தாள். தன் மகன் அறிவாற்றல்களாற் சிறந்தவனுயினுன் என்பதைக் கேட்குந் தாய் பெற்ற பொழுது அடைந்த மகிழ்ச்சியினும் பெருமகிழ்ச்சியை அடைவாள் என்பதை உலகம் விசையைபால் நன்கு கண்டு கொண்டது.

(சீவகசிந்தாமணி)

[மகன் புகழ்கேட்டுத் தாய் மகிழ்தல்]

1118. விச்சுவவுருவன் கதை

விச்சுவவுருவன் என்பவன் அசுரர்களில் முதன்மை பெற்றவன். கலைகளை நன்கு கற்றவன். முத்தலைகள் பெற்றவன். மிகுந்த சூழ்ச்சித்திறம் உடையவன். இந்திரன் ஒரு காலத்தில் தன்னுடைய குருவான வியாழபகவானைப் பிரிந்திருந்தான். அப்பொழுது இவ்விச்சுவவுருவனை ஆசிரியராகக் கொண்டான்.

இந்திரன் தேவர்கட்கு நன்மையுண்டாகுமாறு வேள்வி ஒன்று செய்யவேண்டுமென்று விச்சுவவுருவனிடஞ் சொன்னன். அவனும் அவ்வாறே செய்வதாகக் கூறி வேள்வியைத் தொடங்கினன். வெளியில் தேவர்கட்கு நன்மையுண்டாகச் செய்பவன் போல் நடித்து உள்ளுக்குள்ளே அசுரர்களுடைய நன்மையையே நாடி மறைகளைக் கூறினன். இவ்வஞ்சகத்தை இந்திரன் உணர்ந்தான். அவனுடைய தலைகளை அறுத்துக் கொன்றுவிட்டான். ஒருவன் மனக்கோணல் கொண்டு நடுவு நிலைமையல்லாத தீயகாரியங்களைச் செய்வானுயின் அஃது அவனுக்கு அழிவினை அளிக்கும் என்பதனை அனைவரும் அன்று அறிந்துகொண்டனர்.

(திருவினையாடல்)

[மனக்கோணல் தீமை பயக்கும்]

1119. விடைக் குறியிட்ட கதை

காஞ்சிபுரத்தில் சோழ மன்னன் ஒருவன் இருந்தான். அவனுடைய பெயர் காடு வெட்டிய சோழன். அவன் மதுரையில் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளைப் போற்றி வழிபட எண்ணினான். பாண்டியனுக்கும் இச்சோழனுக்கும் பகைமையாக இருந்தபடியாலோ வேறெக் காரணத்தாலோ வெளிப்படையாகச் சென்று போற்றி வழிபட முடியவில்லை. சோமசுந்தரக்கடவுளை உள்ளத்தில் எண்ணி வேண்டிக் கொண்டான். சோமசுந்தரக் கடவுள், தனித்து வந்து தன்னைத் தொழுது செல்லுமாறு சோழனுக்குக் கனவு மூலம் உணர்த்தியருளினார். சோழன் புறப்பட்டு மதுரையை அடைந்தான். சோமசுந்தரக் கடவுள் சித்தர் ஒருவரைப் போல் எழுந்தருளி வைகைப் பெருக்கைத் தடுத்துச் சோழனைக் கோவிலுக்கு அழைத்துச் சென்றார். சோழன் தம்மை வழி பட்ட பிறகு முன் கதவில் வைக்கப் பட்டிருந்த அரக்கு முத்திரையின் குறிக்குப் பதிலாகக் காளை முத்திரையை வைத்தருளினார். காலையிற் கதவு திறக்கச் சென்றவர்கள் காளை முத்திரையைக் கண்டு கலங்கினார்கள். பாண்டியனுக்குச் செய்தியை உணர்த்தினார்கள். பாண்டியன் சோமசுந்தரக் கடவுளுடைய திருவருளால் உண்மையை உணர்ந்தான்.

(திருவிளையாடல்)

[விடைக்குறியிட்டது]

1120. விண்ணுலகத்திற் கனுப்பிய வேந்தன் கதை

செல்கெழுகுட்டுவன் என்னும் பெயருடைய செங்கோல் வேந்தன் செங்கோல் கோடாது செந்தமிழ் நாடு முழுவதும் சிறப்புடன் அரசாட்சி செய்து கொண்டிருந்தான். அவனுடைய கொடை நலம் யாண்டுஞ் சீர்த்தி பெற்று விளங்கியது. அந்நாளில் கௌதமன் என்னும் பெயருடைய அந்தணன் ஒருவன் இருந்தான். அவன் மிகவும் வறியவன். அவன் பொருள் பெறலாம் என்னும் எண்ணத்தோடு தன்மனைவியுடன் செல்கெழுகுட்டுவனுடைய அவைக்குச் சென்றான்.

அக்கௌதமன் தமிழிற் சிறந்த புலமையுடையவன். பாலைத்திணையை இனிமையாகப் பாடுவதில் இணையற்றவன். அதனால் அவனுடைய பெயர் பாலைக் கௌதமனார் என்றே வழங்கியது.

அப்பாலைக் கௌதமன் செல்கெழுகுட்டுவனோடு உரையாடினான். அவனுக்கும் அவனுடைய மனைவிக்கும் இம்மைப் பொருளில் அவா அற்றுவிட்டது. அவன் அரசன் மீது பத்துப் பாடல்கள் பாடிக் களிப்பித்தான். அப்பாடல்களின் சொற்சுவையும் பொருட்சுவையும் மன்னனுடைய உள்ளத்தைக் கவர்ந்து விட்டன. அவன் கௌதமனைப் பார்த்து, "அந்தணனே! நினக்கு வேண்டியது யாது? அதனை நாணமற்கேள். தடையின்றித் தருவேன்" என்று சொன்னான்.

பாலைக் கௌதமன் அரசனைப் பார்த்து, "நானும் என்னுடைய மனைவியும் விண்ணுலகம் புகுதலை விரும்புகின்றோம். அதனை மருமல் தந்தருள வேண்டும்" என்று கேட்டான்.

இதனைக் கேட்ட அரசன் திடுக்கிட்டான். நாம் என்ன கடவுளா? விண்ணுலகப் பதவியைத் தரத்தக்கவர் கடவுள் ஒருவர்தாமே. இதற்கென்ன செய்வோம் என்று எண்ணமிட்டான். அப்பொழுது அவனுக்கு ஒரு செய்தி நினைவுக்கு வந்தது. மூன்னாளில் அரசர்கள் விண்ணுலகம் வேண்டி அதனைப் பெறத்தக்க வேள்வியைச் செய்திருக்கின்றனர். நாமும் அத்தகைய வேள்விகளைச் செய்து இவ்வந்தணனை விண்ணுலகில் ஏற்றுவோம் என்று முடிவுசெய்தான். உடனே பல நாடுகளுக்கும் தூதர்களைப் போக்கி வேள்வியாற்றத்தக்க அந்தணர்களை அழைப்பித்தான். வேள்விகள் செய்தான். வேள்வியின் இறுதியில் விண்ணிலே ஒரு விமானந் தென்பட்டது. கௌதமனும் அவன் மனைவியும் அரசனை வாழ்த்தி அவ்விமானத்திலேறி விண்ணகஞ் சென்றனர்.

"நான் மறையாளன் செய்யுட் கொண்டு
மேனிலை யுலகம் விடுத்தோன்"

(சிலப்பதிகாரம்)

(பாலைக்கௌதமன் விண்ணகஞ் சென்றது)

1121. விதாதா என்னும் வேந்தன் கதை

அங்க நாட்டிலே விதாதா என்னும் பெயருடைய அரசன் ஒருவன் அரசு செய்து கொண்டிருந்தான். அவனுக்கு அசித்தன் என்னும் பெயருடைய குலகுரு இருந்தான். ஒருநாள் நாரத முனிவர் அங்கு வந்தார். அரசனைப் பார்த்து, "உன்னுடைய தந்தை இந்திர பதவி பெற்று இனிது வாழ்கிறான். அறநெறியில் நின்றும் தவறாமல் நடக்குமாறு உன்னிடஞ் சொல்லச் சொன்னான்." என்று கூறினார். பிறகு அசித்தனைப் பார்த்து, "உன்னுடைய தந்தை நிரயத்தில் வருந்துகிறான். தான் தேடிய பொருளைப் புதைத்து வைத்த இடத்தை உனக்குச் சொல்லாமல் இறந்துவிட்டான். அவன் தேடிய பொருள் தூணுக்கு அடியில் இருக்கிறதாம். அதனை எடுத்துத் தானஞ் செய்யச் சொன்னான்" என்று கூறிவிட்டுச் சென்றார். அரசன் அறநெறி தவறாது அரசாட்சியை நடத்திக் கொண்டிருந்தான் அசித்தன் பொருளை யெடுத்துத் தான தருமம் முதலியவைகளைச் செய்தான். அதனால் அவன் தந்தை விண்ணுலகடைந்தான்.

அரசனும் அசித்தனும் விந்தியமலைக்குச் சென்றார்கள். அங்குள்ள ஆற்றோரத்தில் அந்தணர்களுக்கு விருந்து செய்ய எண்ணினார்கள். உணவுப் பொருள்களுஞ் சமைக்கப்பட்டன. வாழைப்பழம் எங்கும் அகப்படவில்லை. திருக்கோயில் ஒன்றுக்கு உரிமையான தோட்டம் ஒன்றில் வாழைப் பழங்கள் இருந்தன. அவை அக்கோயிலில் எழுந்தருளிய கடவுளுக்குப் படைக்கப்படுவது. அரசன் அங்குச் சென்று பழம் பெற்று வருமாறு கட்டளையிட்டான். திருக்கோயில் காரியங்களை நடத்தியவர்கள் பழங்கள் இறைவனுக்குப் படைக்கப்படுவதற்கு உரியவையென்றும் விலைக்குக்கூடத் தரமுடியாதென்றும் கூறினர். அரசன் அறநெறிக்கு மாறுக வலுக் கட்டாயமாகக் கொணர்வித்துப் பழங்களை அந்தணர்கட்குப் பரிமாறிப் புசிக்கச் செய்தான். இத்தீவினையினால் தேவராசனாக இருந்த அரசனுடைய தந்தை நிரயத்தை அடைந்தான். அரசனுஞ்சில காலத்தில் இறந்து நிரயம் புகுந்தான். அறநெறிக்கு மாறுபட்டுப் பொருள் கைப்பற்றுவோர் துன்பத்திற்கு உள்ளாவார்கள்.

"நின்னபிடே கப்பழத்தை நீண்மறையோர்க்
கீந்தவிறை
துன்னுகுடி யோடழிந்தான் சோமேசா—பன்னில்
நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிமொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்."

(சோமேசர் முதுமொழி வெண்பா)

[அறநெறிக்கு மாறுபட்டு நடத்தல்]

———

1122. விதுரனைப் பகைக்கச் செய்த கதை

காட்டு வாழ்க்கையை முடித்த பாண்டவர்கட்கு நாடு கேட்கும் பொருட்டுக் கண்ணபிரான் துரியோதனனிடத் தூது சென்றார். சென்றவர் துரியோதனனுடைய மாளி கையிற் போய்த் தங்கவில்லை. துரியோதனனுக்கும் விதுர னுக்கும் பகையை மூட்டி இருவரையும் வேறுபடுத்திவிட வேண்டுமென்பது கண்ணனுடைய எண்ணம். விதுரன் மிகுந்த பலவான். அவன் தன்னுடைய கையில் வில்லை எடுப்பானேயானால் அவனோடு போரிட்டு வெற்றி கொள்வ தென்பது எவராலும் இயலாது. பகையை உண்டாக்கி வேறு படுத்திவிட்டால் பாண்டவர்களுக்கு எளிதாக வெற்றியேற் படுமென்பது கண்ணன் நோக்கம். ஆகவே தூது வந்த கண்ணன் விதுரனுடைய மாளிகையிற் சென்று தங்கினார். விதுரன் கண்ணபிரானைப் பார்த்து,

"முன்ன மேதுயின் றருளிய முதுபயோததியோ
பன்ன காதிபப் பாயலோ பச்சையா யிலையோ
சொன்ன நால்வகைச் சுருதியோ கருதிநீ எய்தற்
கென்ன மாதவஞ் செய்ததிச் சிறுகுடில் என்றான்"

என்று போற்றிப் பெருமைப்படுத்தினான். தன்னிடம் வராது விதுரனிடஞ் சென்ற கண்ணனை விதுரன் போற்றிப் பாராட்டி னானே என்று துரியோதனன் சினங்கொண்டு விதுரனைப் பலவாறு இகழ்ந்துரைத்தான். துரியோதனனுடைய இகழ்

வுரைகளைக் கேட்ட விதுரன் துரியோதனன்மீது சினங் கொண்டு தன்னுடைய வில்லை முறித்தெறிந்துவிட்டுப் புனித நீராடச் சென்றுவிட்டான்.

[விதுரன்]

1123. விதுரன் கதை

விதுரன் பாண்டவர்கட்கும் துரியோதனன் முதலியோருக்கும் உறவினன். இவன் ஊழ்வலியால் துரியோதனனோடு சேர்ந்திருந்தான். துரியோதனனுடைய அறிவற்ற செயல்கள் இவனுக்கு நாளும் மனவருத்தத்தை உண்டு செய்துகொண்டிருந்தன. ஒரு நாள் துரியோதனன் விதுரனைப் பலவாறு இகழ்ந்துரைத்தான். அச்சொற்கள் இவனுக்கு மனதில் அளவற்ற வெறுப்பை மூட்டியது. அறிவிலாத் தீயோர்களோடு நட்புக் கொண்டிருத்தல் கேடு பயப்பதாம் என்று முடிவு செய்து தன்னுடைய வில்லை முறித்தெறிந்து விட்டுக் புனித நீராடப் புறப்பட்டான். சில நாட்களில் பாரதப் போர் மூண்டது. துரியோதனனைச் சேர்ந்திருந்த அனைவரும் மாண்டு தொலைந்தனர். போர் முடிந்த பிறகு விதுரன் திரும்பி வந்தான். போரில் மாண்டொழியாமற் போனதோடு நல்வினையும் இவனுக்கு உண்டாகியிருந்தது. இவ்வாறு ஏற்பட்ட நன்மை அறிவற்ற துரியோதனனை விட்டுப் பிரிந்ததாலேதான் உண்டாயது என்று திண்ணமாக உணர்ந்தான். அறிவற்றவர்களுடைய கூட்டுறவை விட்டொழித்தல் நல்ல ஊதியமாகும் என்பதை அனைவரும் விதுரனால் நன்கு உணர்ந்து கொண்டனர்.

(பாரதம்)

[அறிவற்றவர்களுடைய நட்பையொழித்தல் ஊதியமாம்]

1124. வித்தியாதரர் கதை

இரண்டாந்திர கற்பத்தில் காஞ்சிமாநகரில் வித்தியாதரர் என்னும் பெயருடைய அந்தணர் ஒருவர் இருந்தார். அவர் இளம்பருவமும் பேரழகும் உடையவராகத் திகழ்ந்தார்.

அவர் மறை முதலிய கலைகளை நன்குணர்ந்து சிவதீக்கை யடைந்து சிவாகம நெறியுணர்ந்து தத்துவ ஆராய்ச்சி செய்து சிவசாதனத்தை மேற்கொண்டு சிவயோக நெறியிற் சிறந்து சிவயோகியென்று பெயர் பெற்றிருந்தார்.

ஒரு நாள் இவர் யோகநிலையில் இருந்து இரேசகபூரக கும்பகஞ் செய்து விண்வழியே அளகாபுரிக்குச் சென்றார். அங்குள்ள நீர் நிலை ஒன்றை அடைந்து தங்கியிருந்தார். அப்பொழுது அங்கு இளமாதர்கள் பலர் நீராடுவதற்கு வந்தனர். அவர்களுள் ஓர் அழகிய மாதைக் கண்டு காமுற்றார். அம்மங்கை தனக்குரியளாக வேண்டுமென்று குபேரனை யெண்ணினார். குபேரன் அவர் முன் தோன்றி, "நீர் விரும்பியது யாது?" என்று உசாவினன். வித்தியாதரர் தம்முடைய கருத்தைக் குபேரனுக்கு வெளியிட்டார்.

குபேரன் வித்தியாதரருடைய கருத்திற்கு இணங்கினன். இரேகாவதி என்னும் பெயருடைய அம்மாதை இவருக்கு மணஞ் செய்து கொடுத்தான். பிறகு வித்தியாதரர் அம்மாதோடு காஞ்சிப்பதியை அடைந்தார். இப்பிதீர்த்தக் கரையில் இல்லம் அமைத்து இல்வாழ்க்கை மேற் கொண்டார். இருவரும் இல்வாழ்க்கையைப் பன்னெடுங் காலம் இனிது நடத்திக் கொண்டிருந்தனர்.

வித்தியாதரர் தமக்கு நீண்டகாலமாகியும் மக்கட் பேறில்லா திருத்தற்கு உள்ளம் வருந்தினர். கற்புடைய மனைவியும், நன்மகப்பேறும், சிவபெருமானிடத்தில் அன்பும் சிவபூசனையாலன்றி அமைய மாட்டா என்று முடிவு செய்து சிவபூசையை ஒழுங்காக மேற்கொண்டார். சிவபூசையின் பயனாக நன்மகன் ஒருவன் பிறந்தான்.

வித்தியாதரருடைய மனைவியாகிய இரேகாவதி தன்னுடைய கணவனைப் பார்க்கினுஞ் சிறந்த சிவஅன்பு உடையளாக இருந்தாள். காலையில் எழுந்து நீராடி, நீறு கண்மணி முதலியவைகளைப் புனைந்து ஆயிரம் முத்தங் கொண்ட ஒவ்வோர் முத்துமாலையை இறைவனுடைய ஆயிரந் திருப்பெயர்களில் ஒவ்வொன்றையுங் கூறும்பொழுதுஞ் சார்த்தும் முறைமையைக் கடைப் பிடித்தாள். இம்முறை தொடர்ந்து நடந்து வந்தது.

ஒரு நாள் சிவபூசையின் பொருட்டு முத்தாரம் முதலிய பூசைப் பொருள்களையெல்லாம் ஏற்பாடு செய்து வைத்தாள்

தன்னைவிட்டு நீங்காத குழந்தையையும் பூசைப் பொருள்கள் இருந்த இடத்தில் வைத்துவிட்டுத் தான் உள்ளத்தில் வழி படுவதாகிய உள்வேள்வி (அந்தர் யாகம்) செய்து தன்னை மறந்திருந்தாள். அப்பொழுது அவளுடைய மகன் பூசைப் பொருள்களிற் சிறந்து விளங்கும் முத்துமாலைகளில் ஒன்றைப் புகைக்கு அமைந்துள்ள தீயில் எடுத்துப் போட்டுவிட்டான். அம்மாலை கரிந்து பொரிந்து போய்விட்டது.

பிறகு இரேகாவதி உள் வேள்வியை முடித்துக்கொண்டு புறம்பே சிவபெருமானை வழிபடத் தொடங்கினாள். வழிபாட் டிற்குரிய முத்துமாலையொன்று குறையக் கண்டு திடுக்கிட் டாள். மாலை குறைவதற்குக் காரணம் யாதென்று ஆராய்ந் தாள். அவளுடைய மகன், "அம்மா!" என்று அங்கிருந்த நெருப்பைக் காட்டினான். முத்துமாலையைத் தீயிலிட்டது தம்முடைய மகன்தான் என்று அறிந்தாள். இவன் சிவ வழி பாட்டிற்குரிய பொருளைத் தீயிலிட்டபடியினால் இறைவனுக் குரிய பொருளைக் கைப்பற்றுதலால் அடையும் தீவினைக்கு உரியவனானான். நாமும் வழிபாட்டு முறையை இழந் தோமடையுந் தீவினைக்கு உள்ளாவோம். ஆகவே இம் மகவையுங் கொன்று நாமும் இறந்து போவதே நல்லது என்று எண்ணினாள். குழந்தையைத் தரையில் மோதி வாளால் கழுத்தை வெட்டினாள்.

அப்பொழுது இறைவியோடு இறைவன் அங்கு எழுந் தருளினார். அவளுடைய கையிலிருந்த வாளைப் பறித்தார். இறைவி குழந்தையை எடுத்துக் கழுத்தினின்றும் பெருகிய உதிரப் பெருக்கைத் தன்னுடைய ஆடையால் தொடைத் தாள். இப்படியுஞ் செய்வாருண்டோ வென்றிரங்கிக் குழந் தையை உயிர் பெற்றெழச் செய்தாள்.

பிறகு இறைவன் இரேகாவதியைப் பார்த்து, "அன் புடையவளே! நீ என்னிடத்தில் வைத்திருக்கும் அன்பினை உலகினர் எல்லாரும் அறிந்துய்யுமாறு இயற்றிய திருவிளை யாடல் இதுவாகும். உன்னுடைய மகன் சிவ வழிபாட்டுப் பொருளைக் கவர்ந்ததற்குரிய தீவினையை நுகர்தற்கு உரியவ னல்லன். நீயும் விரத நெறியைக் கைவிட்டோர் அடையும் தீவினையை நுகர்தற்கு உரியவளல்லை நீ எம்மை முத்து மாலையால் அருச்சனை புரியச் சிறந்த முத்துமாலைகளை

இந்த இப்பிதீர்த்தத்தில் இப்பொழுதே உண்டாக்கி யிருக் கிறேம். அதனால் எம்மை வழிபடுவதோடு நீயும் அணிந்து இன்புறுவாயாக. இஃதன்றி நீ யெப்பொருளை விரும்பினாலும் அப்பொருளைத் தருகின்றேம்" என்று அருள் புரிந்தார்.

இரேகாவதி இறைவனைப் பார்த்து, "இறைவனே! நான் விரும்புவது ஒன்று உண்டு. என்னால் பூசிக்கப்பட்டுள்ள இவ்விலிங்கத்தின்கண் தாங்கள் அமர்ந்தருளி வழிபடுவோர் களுக்கு எல்லா நலங்களையும் வழங்கியருள வேண்டும். இத்திருத்த நீரில் மூழ்குவோர் எத்தகைய கொடிய தீவினை யில் இருந்தும் விடுபட வேண்டும்" என்று சொல்லி வேண் டிக்கொண்டாள். இறைவனும், "அவ்வாறே ஆகுக" என்று கூறி அருள் புரிந்து மறைந்தார். வெகு நாள் வழி பட்டுக் கொண்டிருந்த பிறகு வித்தியாதரரும் இரேகாவதியும் எல்லோரும் வியக்குமாறு அச்சிவலிங்கப் பெருமானோடு கலந்து மறைந்தனர்.

"ஒப்பி லற்புத முணர்த்த வெம்பிரான்
இப்பி முத்தமங் கெடுத்த ளித்தலால்
செப்ப ரும்புகழ் இப்பி தீர்த்தமென்
றப்பெ ரும்பெயர் அதனுக் காயதே"

[இப்பிதீர்த்தம்] (காஞ்சிப் புராணம்)

1125. விநாயகர் பாரதம் எழுதிய கதை

பாரதக் கதையை உலகிலே நிலைநிறுத்த வேண்டும் என்று வியாசர் எண்ணினார். எழுதுவோர் கிடைத்தால் எழுதி விடலாம் என்று முடிவு செய்தார். பிறகு ஆனைமுகக் கடவுளைக் கண்டு தம்முடைய விருப்பத்தைத் தெரிவித்தார். ஆனைமுகக் கடவுள் வியாசருடைய வேண்டுகோளுக்கு இணங்கினார். வியாசர் பாரதக் கதையைக் கூறிக் கொண்டி ருந்தால் தாம் எழுதிவிடுவதாக ஒப்புக்கொண்டார். கிருட்டிண பகவான் அருச்சுனனுக்குரைத்த மெய்யறிவுப் பொருளான பகவத் கீதை, அறநெறி முறைகள் முதலிய

பலவும் அமைத்து உலகினர் ஐந்தாம் மறை என்று பாராட்டு மாறு பாரதக் கதையைக் கூறினர். ஆனைமுகக் கடவுள் எழுத்தாணியும் ஏடுந் தேடிக் கொண்டிருக்கவில்லை. போர்க் களத்தில் முறிந்துபோன தம்முடைய தந்தத்தை எழுத் தாணியாகவும் மேருமலையை எழுதும் ஏடாகவுங்கொண்டு பாரதத்தை மேருமலையில் எழுதி முடித்தார். பாரதக் கதை இவ்வுலகிலே நிலைபெறுவதாயிற்று

"நீடாழி உலகத்து மறைநாலொ
டைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவரய்மை முனிராசன்
மாபா ரதஞ்சொன்னநாள்
ஏடாக மாமேரு வெற்பாக
வங்கூ ரெழுத்தாணிதன்
கோடாக எழுதும்பி ராணைப்ப
ணிந்தன்பு கூர்வாமரோ"

(பாரதம்)

"பாரதங்கோட்டு நுதியால் எழுதிய பண்ணவனே"

(பழமலையந்தாதி)

"பருமா வரையதனில் பாரதநூல் தீட்டும்
கரிமா முகன்கழலே காப்பு"

(ஈட்டியெழுபது)

[பாரதம் எழுதியது]

1126. விந்தமலையை அடக்கிய கதை

நாரத முனிவருடைய போதனையினால் விந்தமலை மேரு மலையுடன் பகைகொண்டது. அம்மலையினுந் தான் உயரி வுடையதாகக் கூறிக்கொண்டு ஒருமறையினால் நான்முகன் உலகுவரை நிமிர்ந்து நின்று விண்வழியை அடைத்துக் கொண்டது. கோள்கள் விண்மீன்கள் முதலியன அச்சமுற்று அகத்தியரை அடைக்கலம் புகுந்தன. விந்தமலையினுடைய

ஆணவத்தினுல் தங்கள் போக்குவரவிற்கு ஏற்பட்டிருக்குந் தடையைத் தீர்க்கும்படி விண்ணப்பித்துக் கொண்டன. அகத்தியர் சிவபிராணை எண்ணி விந்தமலையை அடக்கும் ஆற்றலைப் பெற்றார்.

பொதிகைக்குச் செல்லுகையில் விண்ணளாவிய விந்த மலையைப் பார்த்து, "விந்தமே! நாம் பொதிகைக்கு ஏகுகின் றோம், நீ சிறிது வழிவிடுவாயாக" என்று கேட்டார். விந்த மலை மிகு பெருமிதத்துடன், "உனக்கு நான் வழிவிடுகிற தில்லை. வந்தவழியே திரும்பிச் செல்வாயாக," ஏன்று மறு மொழி கூறிற்று. இம்மொழிகளைக் கேட்ட அகத்தியர் சின மடைந்தார். சிவபிராணை உள்ளத்தில் எண்ணினார். தம் முடைய கையைப் பரமபதம் வரையிலும் நீட்டினர். விந்த மலையின் முடியிலே வைத்துக் கெட்டியாய் அழுத்தினர். விந்தமலை மிகு விரைவிற் கீழுலகம் போய்ச் சேர்ந்தது.

அதனுல் அம்மலை மிகுந்த துன்பமடைந்து முனிவரைப் பார்த்துப்," பெரியீர்! தங்களுடைய பெருமையை நோக்காமல் செய்த குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும். நான் எப் பொழுது மேலே எழுவேன்?" என்று உசாவியது. அகத்தியர் அம்மலையைப் பார்த்து, "நாம் இனிமேல் இவ்வழியே திரும்பி வருவோமாயின் நீயும் எழுந்திருக்கக் கடவை" என்று கூறிச் சென்றார்.

"விந்தமும் நின்னுற் கீழ்போய் வீழ்ந்தது....."

[விந்தமலையை அடக்கியது] (சித்தாந்த சிகாமணி)

1127. விபுலன் கதை

விபுலன் என்னும் பெயருடைய வேடன் இமயமலையை அடுத்திருந்த ஏமதம் என்னுங் காட்டில் இருந்தான். பறவை களையும் மிலங்குகளையுங் கொன்று உண்ணுதலே இவ னுடைய தொழிலாக இருந்தது.

அல்லமதேவர் ஒரு நாள் இக்காட்டில் இவனைக் கண்டார்; அருள்கொண்டார். கொலை செய்து ஊனுண்ணுதலால் உண்டாகுந் தீமையையும் கொல்லா விரதியாக இருத்தலின் நன்மையையும் இவனுக்கு விரித்துரைத்தார்.

நல்வினை இவனுக்கு நன்கு அமைந்திருந்தபடியால் அல்லமர் அருள்மொழிகளை அகத்திற்கொண்டான். இனி மேல் எவ்வுயிரையுங் கொல்வதில்லையென்று உறுதி கொண்டான். கொல்லா நோன்பினை மேற்கொள்ளவே எல்லா நன்மைகளும் இவனுக்கு இனிதமைந்தன. இறுதியில் வீடு பேற்றிற்கும் உரியவனனான்.

அறச்செயல் யாதென்றால் எவ்வுயிரையும் கொல்லாமை. கொல்லுதல் பிற தீவினைகளையெல்லாங் கொடுக்கும். கொல்லாமையை மேற்கொண்டவன் எல்லா நன்மைகளையும் இனிது அடைவான் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது.

[கொல்லாமையே அறச் செயல்]

(பிரபுலிங்க லீலை)

1128. வியாசர் சொல்லிழுக்குப்பட்ட கதை

வியாசர் எல்லாக் கலைகளையும் நன்கு ஓதியுணர்ந்தார். ஆயினும் வீணுரையாடும் தீய பழக்கம் அவரிடமுஞ் சிறிது இருந்தது. கடவுளர்களின் தலைமைத் தன்மையைப் பற்றி ஒரு சமயத்தில் பிற முனிவருக்கும் இவருக்குஞ் சொற்போர் மூண்டது. வியாசர் திருமாலே பரம்பொருள் என்று நிலை நாட்ட எண்ணினர். "நாராயணனே பரம்பொருள்" எனறு கூறக் கையைத் தூக்கினர். தூக்கிய கை பாதியில் நின்று விட்டது. பேசவும் முடியவில்லை. நாவினையுங் கையினையும் அசைக்க முடியாமல் மரம்போல் நின்றார். அப்பொழுது மற்றைய முனிவர்கள் வியாசருடைய கூற்றுப் பொய்ம்மையானது என்று உணர்ந்தார்கள். அச்சமயத்தில் திருமால் தோன்றி, "யாவருக்கும் மேலான அளவிலாச் சீருடையான் சிவபெருமானே, இதனை நன்கு உணர்ந்துகொள்வாயாக" என்று அறி

வுறுத்திச் சென்றார். வியாசரும் உண்மையுணர்ந்து மயக்கம் தெளிந்தார். யாவராயினும் நாவினைக் காத்தல் வேண்டு மென்பது அன்று வியாசரிடம் நன்கு பெறப்பட்டது.

"எல்லாம் உணர்ந்தும் வியாதன் இயம்பியவச்
சொல்லாலே நாவயர்ந்தான் சோமேசா—ல்வ
[லமையால்
யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்விழுக்குப் பட்டு."

[வீண்சொல் உரையாமை] (சோமேசர் முதுமொழி வெண்பா)

———

1129. விராடன் கதை

விராடன் என்பவன் மச்ச நாட்டில் இருந்து அரசுபுரிந்து கொண்டிருந்த ஓர் அரசன். இவன் எல்லோருக்கும் நல்ல வனுக ஆவன புரிந்துகொண்டிருந்தான். பஞ்சபாண்ட வர்கள் காட்டில் வாழ்ந்திருந்த பிறகு நாட்டில் மறைந்து வாழ் தற் பொருட்டு இவனுடைய நகரத்தை அடைந்தார்கள். அடைந்துள்ளவர்கள் பாண்டவர்கள் என்பதை அறியா திருந்தும் இவன் அவர்கட்குத் தக்க உதவி செய்து அங்குத் தங்கியிருக்கச் செய்தான். ஓராண்டு முடிந்த பின்னரே அவர்கள் பாண்டவர்கள் என்பதை அறிந்தான். நுகர்தற்கு யாதும் வாய்ப்பற்றவர்களாக இருந்த பாண்டவர்கட்கு இவன் உதவி செய்து போற்றியதை அந்நாளில் அனைவரும் பாராட் டினர். துறவறத்தினர்க்கும் வறுமையாளர்க்கும் மற்றை யோர்க்கும் இல்வாழ்வான் துணையென்பது இவனிடத்தில் நன்கு பெறப்பட்டது.

[விராடன்] (பாரதம்)

———

1130. விராடன் தருமரைத் தாக்கிய கதை

பாண்டவர்கள் காட்டு வாழ்க்கையை முடித்த பிறகு விராட நகரத்திலே கரந்துறை வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார்கள். நிரைமீட்சிப் போரில் தன் மகன் வெற்றியடைந்தான் என்று தூதர்கள் சொன்னதைக் கேட்டு விராடன் மகிழ்ச்சியடைந்தான். கங்கபட்டர் என்னும் பெயரோடு தன்னிடந் தங்கியிருந்த தருமரைச் சூதாட அழைத்தான். அவரோடு சில ஆட்டங்களாடித் தோற்றான். தருமரைப் பார்த்து "இந்த ஆட்டத்தில் உத்திரன் முன் பகைவர்களுடைய படை தோற்றதைப் போல என்னிடத்தில் நீர் தோற்பீர்" என்று கூறினான்.

விராடன் கூறியதைக் கேட்ட தருமர், பகைவர்கள் தோற்குமாறு வென்றவன் உன்னுடைய மகனல்லன்; பிருகந்நளை என்னும் பேடியே. அவனைப் பேடி என்று எண்ணற்க" என்று கூறினர். இதைக் கேட்ட விராடன் சினங்கொண்டான். "அரசனுடைய சொல்லை அவனுடைய ஆதரவில் தங்கியிருப்பவர்கள் மறுத்துப் பேசலாமா?" என்றான். கங்கபட்டராகிய தருமர் மேலும் விராடனைப் பார்த்து, "துரோணர், வீடுமர், அசுவத்தாமா முதலியோர்களை நின்னுடைய மகன் வெல்ல வல்லவனை?" என்று சொன்னார்.

இதனைக் கேட்டதும் விராடனுக்குச் சினம் மேலும் மிகுதியாகியது. சூதாடு கருவியால் தருமருடைய நெற்றியில் தாக்கினான். அதனால் அவருக்குச் சிறிது காயம் உண்டாகியது. பிறகு தருமர் கூறிய உண்மையை அறிந்து உள்ளம் வருந்தினான்.

"நற்றருமன் வெற்றியினை நாடி விராடனெதிர்
சொற்றமொழி சோர்ந்ததே சோமேசா—கற்றறிவால்
நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்"

[சொற் சோர்வு] (சோமேசர் முதுமொழிவெண் பா)

1131. விருத்தச் சத்திரன் கதை

விருத்தச்சத்திரன் என்பவன் சிந்து நாட்டு மன்னன். சயத்திரதனுக்குத் தந்தை. தன் மகனுகிய சயத்திரதன் இன்ன நாளிலே இறந்துபடுவான் என்று இவன் பல அறிகுறி களால் அறிந்தான். சமந்த பஞ்சகம் என்னுந் தனியிடத்தை யடைந்து தெற்குத் திக்கை நோக்கி இயமனை எண்ணி, என்னுடைய மகன் தலையை எவன் நிலத்தில் வீழ்த்து கிருனை அவன் தலை உடனே வெடிக்கக் கடவது'' என்று அதற்குரிய அருமறையை ஓதிக்கொண்டிருந்தான்.

பாரதப் போரில் பதினன்காம் நாள் மாலையில் சயத்திர தன் தலை அருச்சுனன் கணையால் அறுபட்டது. சயத்திரத னுடைய தந்தையின் வேலையைக் கண்ணன் அருச்சுனனுக்கு அறிவித்தார். செய்தியைத் தெரிந்துகொண்ட அருச்சுனன் அத்தலை கீழே விழாதபடி செய்து அம்பினைக் கொண்டே தள்ளிக் கண்ணை மூடிக்கொண்டு மறையுரைத்திருக்கும் விருத்தச் சத்திரன் கையில் விழுமாறு செய்தான்.

விருத்தச் சத்திரன் கண்ணை விழித்துப் பார்க்கவில்லை. யாதோ என்று திடுக்கிட்டவனுய்த் தரையிற் போட்டான். சயத்திரதன் தலை தரையில் விழும்படி செய்தவன் இவனு கவே முடிந்தமையால், இவனுடைய தலை உடனே வெடித் தது. விருத்தச் சத்திரன் எண்ணிய எண்ணம் நிறைவேற வில்லை.

ஊழைவிட மிக்க வலியுள்ளவை வேறு எவை உள்ளன? ஊழை விலக்கும் பொருட்டு மற்றெருவழியை ஆராய்ந் தாலும் அங்கும் ஊழ்தானே முன்வந்து நிற்கும் என்பது இவன்பால் நன்கு விளங்கியது.

(பாரதம்)

[ஊழே முற்பட்டு நிற்கும்]

1132. விருத்தன் கதை

ஓர் ஊரில் அந்தணன் ஒருவன் இருந்தான். அவனுடைய பெயர் விருத்தன். அவன் பார்ப்பனர் குலத்திற் பிறந்தும் அக்குலத்திற்கேற்ற நல்லொழுக்கங்களை மேற்கொண்டிராமல் களவொழுக்கத்தை மேற்கொண்டிருந்தான். காட்டு வழிகளிற் செல்பவர்களை வழிமறித்து அவர்களிடம் உள்ள பொருளைக் கவர்ந்து அதனால் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்தான். ஒரு நாள் கோபருப்பதம் என்னுமிடத்தை யடுத்த காட்டில் வழிப்பறி செய்யச் சென்றான். வழிப்போக்கர்களை எதிர்பார்த்துக்கொண்டு ஓரிடத்தில் நின்றான். அப்போது கிருபா பரிபூரணர் என்னும் அந்தணர் அக்காட்டில் தருப்பை கொய்யச் சென்றார். விருத்தன் அவரைக் கண்டதும் அவரிடம் உள்ளவைகளைப் பறிப்பதற்காக அண்மையிற் சென்றான். அவர் அவனை உற்றுப் பார்த்தார். விருத்தனுடைய அறிவின்மை தொலைந்தது. மெய்யறிவுத் தன்மை தோன்றியது. அவருடைய அடிகளில் விழுந்து வணங்கினான். "நான் அந்தணனைப் பிறந்தும் இதுவரையிலும் பொல்லாத காரியங்களையே செய்து கொண்டு திரிந்தேன். நான் இனிமேலாயினும் நல்லவனாகுமாறு அருள் புரிய வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான். அவரும் அவ்வாறே அருள்செய்து அகன்றார். நல்லவர்களின் காட்சியினால் நன்மையானது உண்டாகும் என்பது இவ்விருத்தனிடம் நன்கு விளங்கியது.

[நல்லவர் காட்சி]

1133. விருந்தாவனத்தின் கதை

பிருந்தை என்பவள் சலந்தராசுரனுடைய மனைவி; இவள் பேரழகு பொருந்தியவள். திருமால் இவளை நீண்டகாலமாக விரும்பியிருந்தார். சலந்தராசுரன் மிகுபலம் பொருந்தியவன் அவன் உயிரோடிருக்கும் வரையிலும் திருமால் அவளிடம் நெருங்கவில்லை. அவன் இறந்த பிறகு அவனுடைய வடிவத்தை யெடுத்துக் கொண்டு அவளைச் சேர்ந்தார். இதனால்

அவளுடைய கற்பு அழிந்தது. அவள் மனம் வருந்தித் தீப் பாய்ந்தனள். அவள் தீப்பாய்ந்த இடத்தில் முளைத்தபடியால் துளசி பிருந்தை யென்று பெயர் பெற்றது. அது மிகுதியாக முளைக்கவே அவ்விடம் பிருந்தாவனம் என்று பெயர் பெற்றது. திருமால் கண்ணனுகத் தோன்றிய காலத்தில் இந்த இடத்திலே சுற்றிக்கொண்டிருந்தார். இடையர்களும் கண்ணனுடு தங்கியிருந்தார்கள்.

"கருமாத வாவிருந் தாவன செய்தென் கருத்திருளப்
பொருமாத வாவிருந் தாவனத்தாய்"

[விருந்தாவனம்]

1134. விருந்துண்ட கதை

மதுரைமா நகரில் பாண்டிய மன்னனுக்குத் திருமணம் நடைபெற்றது. ஔவையாரும் திருமணத்திற்குச் சென்றார். திருமணம் முடிந்தது. திருமணச் சாப்பாடு தொடங்கியது. சாப்பாட்டுக் கூட்டம் மிகுதியாக விருந்தது. ஔவையார் சாப்பிடுமிடத்திற்குப் போய்ச் சாப்பிட எண்ணினர். கூட்டத்தில் அகப்பட்டுத் தள்ளப்பட்டார். நெருக்கப்பட்டார். அகவை முதிர்ந்திருந்தபடியால் மற்றவர்களைப் போல் முரண்டியடித்துக்கொண்டு உள்ளே நுழைய முடியவில்லை. களைத்துப்போய் ஓரிடத்தில் உட்கார்ந்துவிட்டார். அப்பொழுது ஔவையாரை ஒருவர் அணுகி "உண்டு விட்டீர்களா" என்று உசாவினர். உடனே ஔவையார்,

"வண்டமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்
துண்ட பெருக்கம் உரைக்கக்கேள்—அண்டி
நெருக்குண்டேன் தள்ளுண்டேன் நீள்பசியி னூலே
சுருக்குண்டேன் சோறுண் டிலேன்"

என்று பாடினர். இதனைக் கேட்டவர்வியந்து ஔவையாரைச் சாப்பிடும் இடத்திற்கு அழைத்துக்கொண்டு சென்றார்கள்.

[ஔவையார் விருந்துண்டது]

1135. விரூபாட்சன் கதை

காஞ்சிமா நகரில் முன்னாளில் விரூபாட்சன் என்னும் பெயருடைய வணிகன் ஒருவன் இருந்தான். அவனுக்குப் பத்துப் பிள்ளைகளும் இரண்டு மனைவியரும் இருந்தனர். அவன் அவர்களிடத்தில் அதிக விருப்பம் உள்ளவனாய் அவர்கள் பொருட்டுத் தன்னுயிரையும் கொடுக்கத் துணிந்தவனாக இருந்தான். அவன் ஒரு நாளாவது கடவுளைப்பற்றி எண்ணியதே கிடையாது. எச்சமயத்திலும் பணந்தேடுவதிலும் பிள்ளை குட்டிகளைக் காப்பாற்றுவதிலுமே தன்னுடைய கருத்தைச் செலுத்தி யிருந்தான்.

அவன் அவ்வாறு வாழ்ந்து வருகையில் ஒரு நாய்க் குட்டியை வளர்த்து வந்தான். அந் நாய்க்குட்டியினிடத்தில் அவன் வைத்த அன்பிற்கு அளவே யில்லை. சில ஆண்டுகட்குப்பின் அவனுக்குப் பெருநோய் உண்டாகியது. அதனால் அவன் இறக்குஞ் சமயத்தில் இருந்தான். அப்பொழுது அவன் தன்னுடைய பிள்ளைகள் முதலியோரை அண்மையிலழைத்துத் தன்னுடைய பொருள் உள்ள இடங்களைக் கூறினான். அப்பொருள்களைப் பங்கிட்டுக் கொள்ளவேண்டிய முறைமைகளையுந் தெரிவித்தான். கடைசியில் நாயை— என்று சொல்வதற்குள் அவனுடைய உயிர் போய்விட்டது. பிள்ளைகள் தங்களுடைய தந்தைக்குச் செய்ய வேண்டிய இறுதிச் சடங்குகளை யெல்லாம் செய்தார்கள். ஓராண்டு கடந்தது.

பிறகு பிள்ளைகள் காலக் கணிதரைக் கூப்பிட்டுத் தங்களுடைய தந்தை இப்பொழுது எப்பிறவியை அடைந்துளார் என்று கண்டு பிடித்துக் கூறுமாறு கேட்டார்கள். காலக் கணிதர்கள் கணித நூலை ஆராய்ந்து பார்த்துவிட்டு, "உங்கள் தந்தை இவ்வூர்ப் பறைச்சேரியில் பெட்டை நாயாகப் பிறந்துள்ளார்" என்று கூறினர். பிள்ளைகள் தம்முடைய தந்தை நற்கதியை அடைவதற்குப் பல தானதருமங்களைச் செய்தார்கள். பொருளிடத்தில் அவாக் கொண்டால் அது பிறப்பைக் கொடுக்கும்

[பொருளவா பிறப்பைக் கொடுக்கும்]

———

1136. விரோசனன் கதை

இரணியாக்கன் என்பவனுக்கு விரோசனன் என்னும் பெயருடைய மகன் ஒருவன் இருந்தான். இவன் அஞ்சா நெஞ்சினன். கதிரவனை நோக்கிக் கடுந்தவம் புரிந்தான். அவன் இவன்முன் தோன்றி அருள் புரிந்தான். அழகிய மணிகள் பதித்த முடியொன்றை இவனுக்குத் தந்தான். அம் முடி வியத்தகு பெருமை நிறைந்தது. அதனைத் தலையில் அணிந்துகொள்பவன் உலகம் முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆள்வான். எவரும் எத்தகைய படைக்கலங்களைக் கொண்டும் அம்முடியை அணிந்துள்ளவனை வெல்ல முடியாது. அம்முடியில்லாதபோது ஒருவன் பகைமை உணர்ச்சியோடு அவன் உச்சந் தலையைத் தொடின் அத்தலை ஆயிரம் தூள்களாகப் பொடிபட்டொழியும். அம்முடியின் செருக்கினால் இவனுக்கு ஆணவம் மிகுதியாயிற்று. எல்லோருக்குந் தொல்லை கொடுத்தான். இவனுடைய செங்கோல் கொடுங்கோலாய் எங்கணுஞ் சென்றது. எல்லோரும் இவனுடைய அழிவை நாடி நின்றனர். செங்கண் மாலைப்போற்றித் தொழுதனர்.

நெடுமால் இவனை வஞ்சகமாகத் தொலைக்க எண்ணினார். கொடுமால் விளைக்கத்தக்க கோதையாய் வந்தார். மாயமாதின் நேயத்தை விரோசனன் விழைந்தான். மாலும் இணங்குவதுபோல் நடித்து இவனுக்கு மாலை விளைத்தார். முடியை அகற்றித் தலையைத் தொட்டார். இவன் முடிந்தொழிந்தான். முடிபோனபின் முடியைத் தொடுவார் பகையுடையராயின் தான் முடிந்துபோக நேருமே என்பதை இவன் மறந்தொழிந்ததால் இங்ஙனம் அழிந்தொழிந்தான். மறதியுடையவர்கட்கு நன்மையுண்டாக மாட்டாது என்பது இவனிடம் நன்கு பெறப்பட்டது.

[மறதி நன்மையை ஒழிக்கும்]

1137. விலங்கு முறியப் பாடிய கதை

சேந்தனார் என்பவர் பட்டினத்தடிகள் இல்லறத்தில் இருந்த பொழுது அவருக்குச் செயலாளராக அமர்ந்திருந்தார்.

பட்டினத்தடிகள் தம்முடைய பொருளைப் பலரும் கவர்ந்து கொள்ளுமாறு செய்து தாம் துறவறத்தை மேற்கொண்டார். பட்டினத்தாரிடம் இன்னும் பொருள்கள் இருக்கும். அவைகளிருக்குமிடம் செயலாளராகிய சேந்தனுருக்குத் தெரிந்திருக்கும். அவரை வருத்தி அப்பொருள்களைக் கைப்பற்ற வேண்டுமென்று அரசன் எண்ணினான். சேந்தனுரைப் பலவாறு வருத்திச் சிறையில் இட்டான். பட்டினத்தடிகளைக் கண்டபோது சேந்தனுருடைய மனைவி மக்கள் நேர்ந்த தொல்லையைப் பற்றிக் கூறி முறையிட்டனர். அவரைச் சிறையிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். பட்டினத்தடிகள்;

"மத்தனே தயிருண்டானும் மலர்மிசை மன்னினனும்
நித்தமுந் தேடிக் காணு நிமலனே அமல மூர்த்தி
செய்த்தலைக் கயல்பாய் நாங்கூர்ச் சேந்தனை
[வேந்தனிட்ட
கைத்தலை நீக்கி என்முன் காட்டுவெண் காட்டுளானே"

என்னுஞ் செய்யுளைப் பாடினர். சிவபிரான் ஆனைமுகக் கடவுளை அனுப்பினார். ஆனைமுகக் கடவுள் சேந்தனுருடைய விலங்கை முறித்துப் பட்டினத்தடிகள்முன் சேர்த்தார். பட்டினத்தடிகள் சேந்தனுரை ஆட்கொண்டார்.

[விலங்கு முறிந்தது]

1138. வில்லிபுத்தூரார் கதை

வில்லிபுத்தூரார் என்பவர் ஏறக்குறைய எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருந்தார். இவர் சிறந்த புலமைத் திறம் படைத்தவர். மற்றைப் புலவர்கள் பிழையாகச் செய்யுளியற்றுதலையோ நூல் எழுதுதலையோ இவர் கண்டால் உடனே அவர்களுடைய காதை அறுத்துவிடுவார். இதனால், அந்நாளில் சிறிது படித்தவர்களெல்லாம் தம்மைப் புலவர்களென்று சொல்லிக் கொள்வதற்கு அஞ்சி அடங்கியிருந்தனர்.

அருணகிரிநாதர் என்பவர் அந்நாளில் திருவண்ணாமலையிற் பிறந்து முருகப்பெருமானுடைய திருவருளைப் பெற்றுச் சிறந்து விளங்கினர். வில்லிபுத்தூரார் அருணகிரிநாதருக்கும் புலமைத் தேர்வுவைத்து அதில் அவர் தோற்றுவிட்டால் அவருடைய காதையும் அறுத்து விடுதல் வேண்டும் என்று எண்ணினர்.

அருணகிரிநாதர் நூல் ஒன்றைப் பாடுவதென்றும், அதற்கு வில்லிபுத்தூரார் உரைகூறுவதென்றும், அருணகிரிநாதர் பாடமுடியாமல் திகைத்தாலோ, அல்லது வில்லிபுத்தூரார் பொருள் உரைக்க முடியாமல் விழித்தாலோ தோற்றவர் காதை வென்றவர் அறுத்து விடுவதென்று முடிவாகியது.

அருணகிரிநாதர் கந்தரந்தாதி என்னும் நூலைப் பாடினர். வில்லிபுத்தூரார் பொருள் உரைத்தார். இடையே ஒரு பாட்டிற்குப் பொருள் உரைக்க முடியாமல் திகைத்தார். இதனால் வில்லிபுத்தூராருக்குத் தோல்வி உண்டாகியது. ஏற்பாட்டின்படி தமது காதை அறுத்துவிடுமாறு வில்லிபுத்தூரார் தமது காதறுப்புக் கருவியை அருணகிரிநாதரிடம் நீட்டினர். அருணகிரிநாதர் வில்லிபுத்தூராருடைய காதை அறுத்துவிடவில்லை. அவருக்கு அறிவுரைகள் பலகூறிக் காதை நன்கொடையாகக் கொடுத்துவிட்டார்.

உலகத்தார் வில்லிபுத்தூராரது காதினை அருணகிரிநாதர் அறுக்காமல் விட்டுவிட்டதைப்பற்றி இன்றும் அவரைப் போற்றுகிறார்கள். காதறுத்த வில்லிபுத்தூராரையோ யாரும் போற்றுவதில்லை. காதறுத்த காலத்தில் அவருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிதான் பலன்.

மற்றையோரைத் தண்டித்தவர்கட்கு ஒருநாள் மட்டும் இன்பம். தண்டிக்காமல் குற்றத்தைப் பொறுத்து அருள் செய்தவர்களுக்கோ உலகம் அழியும் வரையிலும் புகழ் என்று அறநூலார் கூறியது இவ்விருவரிடத்திலும் நன்கு பெறப்பட்டது.

[பிறர் குற்றத்தைப் பொறுத்தவர்கட்கே புகழ்]

(அருணகிரிநாதர் வரலாறு)

1139. வில்வலன் வாதாபி கதை

வில்வலன் என்பவனும் வாதாபி என்பவனும் உடன் பிறந்தவர்கள். சூரபன்மனுடைய தங்கையாகிய அசமுகி என்பவளுடைய மக்கள். அசுரத் தன்மை இவர்களிடம் மிகுதியாகக் குடி கொண்டிருந்தது. எப்பொழுதுந் தீய செயல்களையே இவர்கள் எண்ணிக்கொண் டிருப்பார்கள். மாயைகள் புரிவதிலும் வல்லவர்கள். மக்கள் மாக்கள் என்று வேறுபாடு பாராட்டாமல் எல்லா உயிர்களையும் உண்டு களித் தார்கள்.

தவஞ்செய்யும் முனிவர்களையும் இவர்கள் உண்ணுதற்கு எண்ணினார்கள். அண்ணன் முனிவனுக்கோலங் கொண் டான். தம்பி ஆடானுன் முனிவர்கள் மிகுதியாகப் போக்கு வரவுள்ள இடம் ஒன்றில் ஒரு குடிசை அமைத்துக்கொண்டு அதில் தங்கினர்கள். அவ்வழியே வரும் முனிவர்களை உண்டு போகச் சொன்னர்கள். அண்ணனுகிய முனிவன் தம்பி யாகிய ஆட்டைக் கொன்று சமைத்து முனிவர்களைச் சாப்பி டச் செய்வான். அவர்கள் சாப்பிட்டதும் அண்ணன் தம் பியைக் கூப்பிடுவான். தம்பி முனிவர்களுடைய வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளியே வருவான். பிறது இருவருமாகச் சேர்ந்து இறந்து போன முனிவர்களை உண்பார்கள். இவ் வாறு நெடுங்காலம் நிகழ்ந்து வந்தது.

அகத்திய முனிவர் ஒரு நாள் இந்த அசுரர்களிடம் வந்து சேர்ந்தார். அவரையும் இவர்கள் கொன்று தின்ன எண்ணி னர்கள் 'வாதாபி சீரணமி' என்று கூறி அகத்தியர் வாதா பியை மாய்த்தார். இவ்வாறு இவர்கள் தீமையைச் செய்து அழிந்ததைத் தவிரச் சிறிதும் நன்மை செய்யவில்லை. படைக்கலத்தைக் கையில் வைத்திருப்பவர்கள் நெஞ்சம் கொலேத் தொழிலையே எண்ணுவதுபோல் ஒன்றன் உடலை உருசியாக உண்டவர்களுடைய உள்ளம் நன்மையான செயல் களை ஊன்றி நோக்காது என்பது இவர்களிடத்தில் நன்கு விளங்கியது.

[ஊனுண்பவர்கள் மனம்]

(கந்த புராணம்).

1140. வில் வேடனை எரித்த கதை

விதர்ப்ப நாட்டிலே வெகுகாலத்திற்கு முன்னே வேடன் ஒருவன் வாழ்ந்திருந்தான். அவனுடைய பெயர் காகன் என் பர். அவன் வேடர்களுக்குத் தலைவன். சிறந்த ஆற்றல் இவனிடம் நிறைந்திருந்ததைப் போல் மடமையும் நிறைந் திருந்தது. அவன் ஒரு நாள் காட்டில் வேட்டையாடிக் கொண்டு திரிந்தான். அந்நாளில் நளன் புட்கரனுடன் சூதாடி நாடு நகரங்களையெல்லாந் தோற்றுவிட்டுக் காட்டை யடைந்தான். சனியின் சூழ்ச்சியால் மனைவியாகிய தமயந் தியையும் பிரிந்து சென்றான். தனியே சென்று கொண்டிருந்த தமயந்தியை மலைப்பாம்பொன்று கண்டது. தனக்கு நல்ல இரை கிடைத்ததென்று விரைந்தோடிப் பற்றியது. தமயந்தி பாம்பின் வாயிற் சிக்கிக் கொண்டாள். ஆயினும் பாம்பினால் தமயந்தியை விழுங்க முடியவில்லை. பாம்பின் வாயில் அகப் பட்டுக் கொண்ட நிலையில் அவள் அழுது புலம்பித் தவித் தாள். அச்சமயத்தில் முற்கூறிய வேடன் அந்த இடத்தை யடைந்தான். கனையொன்றைத் தொடுத்து மலைப்பாம்பைக் கொன்று தமயந்தியைக் காப்பாற்றினான். தமயந்தி வேட னுக்கு நன்றி கூறிவிட்டு அப்பாற் செல்லத் தொடங்கினாள். தமயந்தியின் அழகு வேடனுடைய உள்ளத்தைக் கவர்ந்தது. "ஓ பெண்ணே என்னோடு வா" என்று சொல்லி யழைத்தான். தமயந்தி இதனைக் கேட்டு நடுங்கினாள். பாம்பின் வாயி லிருந்து தப்பிய நாம் இப்பொழுது இக்கொடிய வேடன் வாயி லிருந்து தப்பும்படியாக நேரிட்டதே என்று உள்ளம் வருந்தி னாள். வேடன் கையில் அகப்படாமல் ஓடத் தொடங்கினாள். வேடனை விடாமல் துரத்தினான். சினங்கொண்ட தமயந்தி வேடனைக் கொடும் பார்வையாகப் பார்த்தாள். அவ்வளவில் வேடன் எரிந்து சாம்பலானான்.

"ஒருத்தி வில்வேடனை யெரித்தாள்"

[தமயந்தியின் கற்பு] (தண்டலையார் சதகம்)

1141. விழிமலர்ப்பூசனை செய்த கதை

குபன் என்னும் அரசனுக்கும் ததீசி முனிவருக்கும் மாறு பாடு உண்டாயிற்று. அப்பொழுது திருமால் தமது ஆழிப் படையைத் ததீசி முனிவர்மீது எறிந்தார். அப்படை கூர் மழுங்கிப் பயனற்றதாகியது. இதனைக் கண்ட திருமால் தமக்கு ஆழிப்படையில்லையே என்று உள்ளம் வருந்தினர். சலந்தரனைக் கொன்ற ஆழிப்படை யொன்று சிவபெருமா னிடத்தில் இருத்தலை யறிந்தார். காஞ்சியை அடைந்து பாசு பத விரதம் பூண்டு இறைவனை நாள்தோறும் ஆயிரந் தாமரை மலர்களைக் கொண்டு பூசை செய்தார். இவ்வாறு வழிபட்டு இறைவனிடம் உள்ள ஆழிப்படையைப் பெற்றுவிட வேண்டுமென்பது திருமாலின் நோக்கம்.

இறைவன் திருமாலின் அன்பினை ஆராய்ந்து பார்க்க எண்ணினர். ஒரு நாள் வழிபாட்டிற்கு வைத்திருந்த தாமரை மலரில் ஒன்றை மறைத்து விட்டார். ஆயிரம் திருப்பெயர் களையுங் கூறி மலர் சாத்தி வந்த பொழுது ஒரு திருப் பெயருக்கு மலரில்லாமற் போய் விட்டது. கண் தாமரை மலருக்கு நிக ராகும் என்று எண்ணிய திருமால் தமது கண்ணையிடந்து சார்த்தினர். இறைவன் மகிழ்ச்சியடைந்து காட்சி தந்தார். இழந்த கண்ணினை அருளியதோடு ஆழிப் படையையும் அளித்தருளினர்.

"விழிமலர்ப் பூசனையுஞற்றித் திருநெடுமால் பெறுமாழி"

[திருமால் ஆழிபெற்றது]

(காஞ்சிப் புராணம்)

1142. விறகு விற்ற கதை

மதுரை மாநகரில் வரகுணபாண்டியன் என்பவன் அர சாட்சி செய்துகொண்டிருக்குங் காலத்தில் வடநாட்டில் இருந்து ஏமநாதன் என்னும் பெயருடைய இசைவல்லான் ஒருவன் மதுரைக்கு வந்தான். பாண்டியன் வழங்கிய பரி

சால் உள்ளங் களித்துச் செருக்கித் திரிந்தான். பாண்டியன் ஏமநாதனுடைய செருக்கை அடக்க வேண்டும் என்று எண்ணினான். ஆகவே தன்னுடைய அவைக்கள இசை வாணனாகிய பாணபத்திரனையழைத்து ஏமநாதனுடைய செய் தியைக் கூறினான். அவனோடு இசைபாடி அவனைத் தோற் கடிக்க முடியுமா? என்று உசாவினான். பாணபத்திரன் அதற்கு இணங்கினான். மதுரைக் கடவுள் வேண்டிக் கொண்டு தன்னுடைய இல்லத்திற்குச் சென்றான். அன்றிரவு மதுரைக் கடவுள் விறகு விற்பவன்போற்கோலம் பூண்டார். தலையில் விறகுச் சுமையோடு ஏமநாதனிடஞ் சென்றார். தாம் பாணபத்திரனின் கடை மாணுக்கன் என்றார். சிறிது இசை பாடிக் காட்டினார். ஏமநாதன் விறகுத் தலையனாக வந்த கடவுளின் இசையைக் கேட்டான். மிக வியந்தான். பாண பத்திரனுடைய கடை மாணவனின் இசையே இவ்வாறு அருமையாக இருக்குமெனின் அப்பாணபத்திரனுடைய இசை எவ்வாறிருக்குமோ என்று அஞ்சி இரவே மதுரைமா நகரை விட்டு ஓடிப்போனான்.

(திருவிளையாடல்)

"மதுரையிலிந் தனம்வலையல் விற்றசெயங்
கொண்டாரே மருவார் போரில்"

(செயங்கொண்டார் சதகம்)

"சேணினிற் பறந்து பங்கயன் தேடும்
திருமுடி தன்னிலே விறகைப்
பாணனுக்காகச் சுமந்தருள் பொன்னம்
பலவனே பரமரா சியனே"

(பரமராசிய மாலை)

"வடபுல விஞ்சையன் வைகிடத் தகன்கடைத்
தென்திசைப் பாணன் அடிமை யான்என
போகா விறகுடன் தலைக்கடை பொருந்தி
... ..."

"இசைவிதி பாடி இசைப்பகை துரந்த
கூடற் கிறையோன்..... ....."

(கல்லாடம்—43)

[விறகு விற்றது]

1143. விறல் பெற்ற அலவன் கதை

மீன்களையே மிகுதியாகத் தின்று வளர்ந்த ஒரு கிழக் கொக்கானது ஒரு நாள் ஒரு குளக்கரைக்கு வந்து மிகுந்த வருத்தத்துட னிருப்பதுபோல் நடித்தது. அப்பொழுது அக் குளத்திலிருந்த மீன்கள் கொக்கைப் பார்த்து, "நீ மீன்களை மிகுதியாகப் பிடித்து உண்பது வழக்கமாயிற்றே இப் பொழுது சும்மா நின்று கொண்டிருக்கிறுயே காரணம் யாது?" என்று கேட்டன.

கொக்கு மீன்களைப் பார்த்து, "நான் மீன்களை உண்பது மெய்தான். வலைஞர்கள் இன்றைக்கு இங்கே வந்து இக் குளத்திலுள்ள மீன்களை யெல்லாம் பிடித்துக்கொண்டு போவதற்குத் திட்டம் போட்டிருக்கிறார்கள். அவ்வாறு பிடித் துக் கொண்டு போய்விட்டால் என்னுடைய இரைக ளெல்லாம் ஒருங்கே அழிந்து போகுமே என்று வருந்திச் சும்மாயிருக்கிறேன்" என்று நவின்றது. கொக்குக் கூறி யவைகளைக் கேட்ட மீன்கள் உள்ளம் அஞ்சின. மற்ற மீன் களிடமும் போய் இச்செய்தியைக் கூறிக் கலந்து எண்ணின. எவன் நமக்குத் துன்பந் தரக்கூடிய செய்தியைக் கூறினனே அவனே நமக்கு இன்பந் தரக்கூடிய செய்தியையும் கூறு வான். நாம் உயிர் பிழைப்பதற்குரிய வழியை அவனிடமே கேட்போம்" என்று முடிவு செய்தன. பிறகு அவைகள் கொக்கினிடம் வந்து, "இப்பொழுது நீதான் எங்களை பாது காத்தல் வேண்டும்" என்று கூறி வேண்டிக்கொண்டன.

கொக்கு மீன்களைப் பார்த்து, "நானே அகவை முதிர்ந்த தொண்டு கிழவன். வலைஞர்களை எதிர்த்துப் போரிடத் தக்க ஆற்றலுடையவனல்லன். ஆனல் உங்களை வேறிடத்திற்

கொண்டுபோய்ச் சேர்க்க என்னால் இயலும். நான் உங்களை வேறு இடத்தில் கொண்டுபோய் விட்டு விடுவேனாகில் இம் முதுமைக் காலத்தில் எனக்குப், "பிறருக்கு உதவி செய்கிறவன்" என்னும் பெயர் கிடைக்கும். நீங்களும் நெடுங்காலம் வாழ்ந்திருக்கலாம் என்று கூறியது.

அறிவற்ற மீன்கள் அதைத்தும் ஆருயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்று அவாக் கொண்டன. கொக்குக் கூறியமொழிகள் உண்மையென்று நம்பின. கொக்கைப் பார்த்து, "எங்களை வேறு குளத்திற் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டன. எதுவும் வருங்காலத்தில் வலியவரும் என்று களிப்படைந்த கொக்கு மீன்களையெல்லாம் நடைக்கு ஒவ்வொன்றாகக் கௌவிக் கொண்டு சென்றது. வயிறு நிரம்புகிற வரையில் கயல்களைத் தின்றது. எஞ்சியவைகளை ஒரு பெரிய பாறையின்மேல் உலரப் போட்டது. இவ்வாறு அக்கொக்குக் குளத்திலிருந்த மீன்களையெல்லாங் கொன்று தொலைத்தது.

அக்குளத்தில் கொழுத்த நண்டு ஒன்று வாழ்ந்திருந்தது. அந்நண்டு கொக்கைப் பார்த்து, "உயிர்களிடத்தில் அருளுடையவனே! மீன்களைக் கொண்டுபோய்ச் சேர்த்த இடத்திலே என்னையுங் கொண்டு போய்ச் சேர்த்தல் வேண்டும்" என்று கூறி வேண்டிக்கொண்டது.

கொக்கு நண்டையுங் கௌவிக்கொண்டு பறந்து சென்றது. செல்லும் வழியிலே மீன்கள் இறந்து கிடத்தலையும் மீன்முட்கள் சிந்திக்கிடப்பதையும் மீன்கள் பாறையின் மேல் உலருதலையும் நண்டு கண்டது. கொக்கின் வஞ்சகம் நண்டிற்கு நன்றாக விளங்கிவிட்டது. "அந்தோ இக்கொக்கு மீன்கள் பலவற்றையுங் கொன்று நம்மையுங் கொல்வதற்கு வழி தேடியது. இக்கொக்கு நம்மைக் கொல்வதற்கு முன்பு நாம் இதனைக் கொல்லுதல் வேண்டும்" என்று முடிவு செய்து ஒரு சூழ்ச்சியை உள்ளத்தில் எண்ணியது. அது கொக்கைப் பார்த்து, "என்னுடைய உறவினர் பலர் அக்குளத்தில் உள்ளனர். அவர்களையும் கொண்டு வந்து சேர்க்கவேண்டும். அவர்கள் உன்னை நம்பி வராமற் போனாலும் போவார்கள். நீ மீளவும் என்னை அக்குளத்திற்குக் கொண்டு செல்வாயானால் அவர்களையும் உனக்குக் காட்டுகிறேன்" என்று கூறியது.

நண்டு நவின்றதைக் கேட்ட கொக்கு மேலும் பேரவாக் கொண்டது. திரும்பி அக்குளத்திற்கு நேராக வந்தது. அப்போது அந்நண்டு தன்னுடைய கொடுக்கினால் கொக்கின் கழுத்தை இரண்டு துண்டாக நறுக்கி விட்டுத் தான் குளத்தில் விழுந்துவிட்டது. வஞ்சகர்களுடைய சூழ்ச்சி முடிவில் வெளியாகியே திரும்.

(பஞ்சதந்திரம்)

"தண்ணீர்மீன் கஞ்சருவ சீவதயா
பரபகந்தான் தயவாய்ப் பேசி
எண்ணுமற் சிதைத்தபழி தனக்கலவன்
பகக்கழுத்தை இடறிற் றன்றே"

[வஞ்சகர் சூழ்ச்சி] (செயங்கொண்டார் சதகம்)

1144. வீடணன் கதை

இவன் இராவணனுடைய தம்பி. இராவணன் கொடுமைகள் பலபுரிந்து தீயவன் என்று பெயரெடுத்து விளங்கினாலும் இவன் நல்லவன் என்று புகழ் பெற்றே விளங்கினான். தீமைகளைச் செய்யான். நன்மைகளையே செய்வான். இவனைக் கம்பர், "மன்னு தவத்துப் புலத்தியன்றன் மரபு விளங்க மறைவிளங்கத், தன்னோர் இல்லாத் தந்தைக்குத் தக்க மகவாய்ச் சண்டாளர், அன்னோர் முன்னோர் அவர் உதித்த அந்த வயிறு சுத்த முற, மின்னேரிடையாள் தன்வயிற்றில் விளங்கும் புகழ்வீடணன்பிறந்தான்" என்று பாராட்டியுள்ளார். அறநெறியில் முறையாக இவன் நின்றதால் இராமனைச் சேர்ந்து நலம் பல பெற்றான். அறவழியில் நிற்பவர்கள் நலமுறுவர் என்பது இவன் பால் நன்கு விளங்கியது.

[அறவழியில் நிற்போர் நலமுறுவர்] (இராமாயணம்)

1145. வீடு பேறளித்த கதை

சேந்தனுர் திருத்தில்லையில் தங்கி அடியவர்கட்கு உண விடும் பணியை நடத்திக் கொண்டிருந்தார். ஒருநாள் இல் லத்தில் உணவுப் பொருள் எதுவும் இல்லாது போயிற்று. மக் கள் பசியால் வருந்தினர். அதனைக் கண்ட சேந்தனுர் மனைவி தன்னுடைய திருக்கழுத்தில் இருந்த மங்கல நாணை யவிழ்த்துச் சேந்தனுரிடத்தில் கொடுத்து" இதற்காவது உண வுப் பொருள் வாங்கி வாருங்கள் " என்று கூறினுள். சேந்தனு ரும் அதனை விற்றுக் கேழ்வரகு வாங்கி வந்தார். கஞ்சி சமைத்து முடிவு பெற்றது. சேந்தனுர் பூசையை முடித்துக் கொண்டு சாப்பிட எழுந்தார். அப்பொழுது சிவபிரான் அடி யவர் வேடங்கொண்டு வந்து, "எனக்கு மிகுந்த பசியாக இருக்கிறது" என்று சொன்னுர். சேந்தனுர் தம்முடைய மக் களின் பசியைக் கூட எண்ணுமல் சமைக்கப்பட்ட உணவு முழுவதையும் அளித்தார். அதனையுண்ட சிவபிரான் அவர்க ளுடைய பசியைப் போக்கியதும் அல்லாமல் அவர்கள் எல் லோருக்கும் வீடுபேற்றையும் வழங்கினுர்.

"சிற்ககன தற்சொருபச் சீரகத்தைச் சேந்தனுமுன்
புற்கை யிட்டுப் பெற்ற புலியூரே"

[அறத்தால் வீடுபேறு] (புலியூர் வெண்பா)

1146. வீடுமர் கதை

வீடுமர் என்பவர் குருகுல வேந்தர்களில் ஒருவர். சிறந்த விரத ஒழுக்கங்கள் உடையவர். தந்தையின் இன்ப நலத்தின் பொருட்டுத் தம்முடைய இன்ப நலத்தை வெறுத்துக் கடுமை யான சூளினை மேற்கொண்டவர்.

அம்பை என்பவள் காசி மன்னனுடைய மகள். இவள் ஒரு காரணத்தினுல் வீடுமரை மணம் புரிய எண்ணினுள். தனது எண்ணத்தை வீடுமரிடம் கூறினுள். அவர் மறுத்து

விட்டார். பிறகு வீடுமரின் வில்லாசிரியராகிய பரசுராமரிடம் போய்த் தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றிவைக்க வேண்டும் என்று வேண்டினுள். அவர் அவ்வாறே செய்வ தாகக் கூறிப் புறப்பட்டு வீடுமரிடம் வந்தார். 'அம்பையை மணம் புரிவாயாக' என்று கூறினர். அதற்கு வீடுமர் இணங்கவில்லை. தம்சொல்லைத் தம் மாணவர் கேட்காமற் போகவே பரசுராமர் சினங்கொண்டார்; போர் தொடங்கி னர்; தம்முடைய விரத வொழுக்கத்தைத் தவற விடுவதைப் பார்க்கினும் போர் செய்து உயிரை விடுவது நல்லது என்று முடிவு செய்தார். போரிட்டு ஆசிரியரைப் புறமுதுகு காட்டி யோடச் செய்தார்.

பெரியோர்கள் தம்முடைய நல்லொழுக்கத்தைக் கைவிடு வதால் உண்டாகும் குற்றத்தினை உணர்ந்து ஒரு நாளும் ஒழுக்கத்தில் தவறமாட்டார்கள் என்பது வீடுமரிடம் நன்கு விளங்கியது.

[பெரியோர்கள் நல்லொழுக்கத்தில் தவருர்] (பாரதம்)

1147. வீடூர் வேளாளன் கதை

தொண்டைவள நாட்டிலே வீடூர் என்னும் ஊரிலே வேளாளச் செல்வன் ஒருவன் வாழ்ந்திருந்தான். அவன் புலவர்கள் எதனை விரும்பிக் கேட்டாலும் அதனை மருது கொடுப்பது என்று மனவுறுதி பூண்டு அவ்வாறே வழங்கிக் கொண்டிருந்தான். இச் செல்வனுடைய கொடைப் பெரு மையை ஆராய்ந்து பார்க்க விரும்பிய ஒரு புலவன் செல்வ னுடைய இல்லத்திற்கு வந்தான். வந்த புலவனைச் செல்வன் வரவேற்றுத் "தங்களுக்கு வேண்டியது யாது?" என்று உசா வினுன். அப்புலவன், "தங்களுடைய மனைவியைத் தர வேண்டும்" என்று கேட்டான். அச்செல்வன் உடனே தன் னுடைய மனைவியைத் தனக்குத் தாயர்க்க கருதினுன். மனை வியைப் பார்த்துத் "தாயே ஐயர் அழைக்கிருர்; அவருடன் சென்றருள வேண்டும்" என்று கூறினுன். செல்வனுடைய

மணிவியும் கணவனுடைய சொல்லைத் தட்டாமல் அப்புலவனோடு செல்வதற்கு உடன்பட்டாள். அப்புலவன் செல்வனியும் அவனுடைய மனைவியையும் வணங்கினான். ''நீங்களிருவரும் எனக்குத் தாயுந் தந்தையுமாவீர்கள். என்னுடைய தாயைக் கேட்டது பற்றிக் குறையாக எண்ணுதீர்கள்'' என்று சொன்னான். வள்ளலைப் பார்த்து, ''என் தாயை ஏற்றுக் கொள்ளவேண்டும்'' என்று கூறினான். செல்வனுந் தன்னுடைய மனைவியை ஏற்றுக் கொண்டான். இத்தகைய வள்ளல்களும் அந்நாளில் வாழ்ந்திருந்தார்கள்.

''போதாருந் தண்பொழில் வீடு ரதிபன்
புலவர்க்கெல்லாம்
தாதா வெனக்கொடி கட்டுத லாலவன்
தன்மனையை
நீதா வெனவொரு பாவாணன் கேட்பவந்
நேரிழையை
மாதா எனவழைத் தானென்கொ லாந்தொண்ட
மண்டலமே''

(தொண்ட மண்டல சதகம்)

[மனைவியை அளித்தது]

1148. வீட்டில் அடைத்து எரியிட்ட கதை

துரியோதனன் பாண்டவர்களை வஞ்சனையாகக் கொலை செய்து விடுவதென்று முடிவு செய்தான். தன்னுடைய நோக்கத்தை யறிந்து நடக்கத்தக்க தொழிலாளர்களைக் கொண்டு அரக்கு மாளிகை யொன்றை அமைத்தான். குறிப்பிட்ட ஒரு நாளில் அம்மாளிகைக்கு நெருப்பிடுவதென்றும் முடிவாகி யிருந்தது. பாண்டவர்களிடத்தில் அன்புள்ள தொழிலாளி யொருவன் பாண்டவர்கள் தப்பிப் போவதற்கு அம்மாளிகையில் வழியேற்படுத்தி வைத்து அச்செய்தியை வீமனுக்குத் தெரிவித்தான். வீமன் தன்னுடைய உடன் பிறந்

தார்களையுந் தாயையும்' அப்புறப்படுத்திவிட்டுக் கேடு நினைத்திருந்த புரோசநன் வேடுவர் முதலானவர்கள் எரிந்தொழியும்படி அம்மாளிகையில் நெருப்பை வைத்துவிட்டுப் போய்விட்டான்.

''வீட்டிலடைத் தேயெரியிடு பாதகன்''

[தீயிட்டது] (திருப்புகழ்)

1149. வீணன் கதை

பல ஆண்டுகட்கு முன்பு சோழவள நாட்டிலே தஞ்சை மா நகரிலே வீணன் ஒருவன் இருந்தான். இவனுக்கு எத்தகைய வேலையும் இல்லை. உணவு கண்ட இடத்தில் உண்டு விட்டு இடங்கண்ட இடத்தில் படுத்து உறங்குவதே அவனுடைய வேலையாக இருந்தது. இவனுடைய தன்மையைப் பார்த்தோர் இவனுக்கு வீணன் என்று பெயர் கொடுத்தனர். இவனுக்கு இவ்வாறு காரணப் பெயர் ஒன்று ஏற்படவே இடுகுறிப் பெயர் மறைந்து போயது. நாளடைவில் ஊரார் இவன் நகருக்குள் இருக்கக்கூடாது என்று கூறி நகரை விட்டுத் துரத்தி விட்டனர்.

வீணன் ஊரையடுத்திருந்த சுடலையிற் சென்று அங்கே தங்கினன். பிணத்திற்குப் போடும் வாய்க்கரிசி முதலியவைகளைப் பெற்றுத் தின்று பொழுது போக்கிக் கொண்டிருந்தான். நாளடைவில் இவனுக்கு ஓர் எண்ணந் தோன்றியது. பிணஞ்சுட வருகிறவர்களைப் பார்த்து, ''அரசர் ஒவ்வொரு பிணத்திற்கும் ஒவ்வொரு ரூபா வாங்குமாறு எனக்குக் கட்டளை யிட்டிருக்கிறார். அவ்வாறு பணங் கொடுப்பவர்கள் தாம் பிணங்களைச் சுடலாம். கொடாதவர்கள் சுடக் கூடாது'' என்று கூறினன். இயற்கையிலேயே பொல்லாதவனுக இருந்த இவனிடம் யாருஞ் சொல்லாடிக் கொண்டிருக்க விரும்பாமல் அவன் கேட்டபடியே கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இச்செயல் வழக்கமாக முடிந்து விட்டது.

வீணன் தான் பெறுகிற பணத்தில் செலவு செய்தது போக எஞ்சியதை ஓரிடத்தில் புதைத்து வைத்துக் கொண்டிருந்தான். இக்காலத்தில் விருப்பதைப் போல் அக்காலத்தில் தாளாக இல்லாமல் வெள்ளி நாணயமாக இருந்தபடியால் புதைத்து வைப்பதற்கும் ஏற்றதாக இருந்தது. இவ்வாறு நிகழ்ந்து கொண்டிருக்கும் காலத்தில் தஞ்சையில் வாழ்ந்து கொண்டிருந்த ஒரு எளிய மனிதன் இறந்து போனான். அவனுடைய மனைவி, "நான் நாளைக்குப் பிணஞ்சுட வீணனுக்கு ஒரு ரூபா கொடுக்க எங்கே போவேன்" என்று சொல்லிப் புலம்பி யழுதுகொண்டிருந்தாள். அவள் அழுதுகொண்டிருந்தது இராக் காலத்தில். அந்நாளில் தஞ்சையை அரசாண்டு கொண்டிருந்த அரசன் இரவில் நகரைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தான். அவன் முற்கூறிய பெண் அழுவதைக் கேட்டான். தன்னுடன் வந்தவர்களைப் பார்த்து, "வீணன் என்பவன் யாவன்?" என்று சொல்லி உசாவினான். வீணன் செய்தியை உணர்ந்திருந்த அவர்கள் அரசனிடம் வீணனைப்பற்றிக் கூறினார்கள்.

மறுநாள் அரசன் ஏவலர்களை அனுப்பி வீணனையழைத்து வரச் செய்தான். வீணன் வந்ததும் அவனைப் பார்த்துப், "பணம் வாங்குமாறு உனக்குக் கட்டளை யிட்டது யார்?" என்று கேட்டு அதட்டினான். வீணன் நானகத்தான் வாங்குகிறேன். மக்களுக்கு ஏதேனும் ஒரு நல்ல உதவிப் பணி செய்ய எண்ணி யிருக்கிறேன். பணமுஞ் சேர்ந்திருக்கிறது" என்று சொன்னான். அரசனும், அவையி லிருந்தவர்களும் வீணன் விளம்பியதைக் கேட்டு விழுந்து விழுந்து நகைத்தார்கள். வீணன் காவிரியில் இருந்து கிளையாறு ஒன்றை வெட்டினான். அது மக்களுக்கு நல்ல பயனுடையதாக அமைந்தது. வீணன் வெட்டியபடியால் வீணன் ஆறு என்று பெயர் பெற்றது. நாளடைவில் அப்பெயர் திரிந்து இந்நாளில் விண்ணூறு என்று வழங்கி வருகிறது.

"படுங்கோலம் அறியாமல் தண்டலையார்
திருப்பணிக்கும் பங்களஞ் செய்வார்
நெடுங்கோலுந் தண்டமுமாய் வீணூர
வீணனைப்போல் நீதி செய்வார்

கெடுங்கோபம் அல்லாமல் விளைவுண்டோ
மழையுண்டோ கேள்வி யுண்டோ
கொடுங்கோல்மன் னவன்நாட்டில் கடும்புலிவா
ழுங்காடு குணமென் பாரே''

[வீண் ஆறு] (தண்டலையார் சதகம்)

1150. வீணுக மாண்டொழிந்த நரி

ஒரு நரி ஓரிடத்தில் ஊனைக் கண்டு அதனை வயிறுரத் தின்றுகொண்டிருந்தது. அப்பொழுது அவ்வழியே ஒரு படை சென்றது. படையின் போக்கைக் கண்ட நரி இங்கு இன்று போர் நிகழப் போகிறது. போர் முடிந்த பிறகு நமக்குப் பிணங்கள் மிகுதியாகக் கிடைக்கும். நாம் அதனை உண்டு மகிழலாம். நாம் இப்பொழுது இங்கு உலவிக்கொண்டிருப் போமானால் நம்மைப் பார்ப்பவர்கள் அடித்து விரட்டுவார்கள். ஆகவே நாம் இங்கு ஓரிடத்தில் இறந்தாற்போல் கிடப்போம். அவ்வாறு கிடந்தால் நம்மை யாரும் கவனிக்கமாட்டார்கள். போர் முடிந்த பிறகு எழுந்து பிணங்களைத் தின்னலாம் என்று முடிவு செய்து கொண்டு ஓரிடத்தில் பிணம்போல் விழுந்து கிடந்தது. நரி எண்ணியபடி அவ்விடத்திற் போர் நிகழ வில்லை. அவ்வழியே சென்ற வழிப்போக்கன் ஒருவன் இங்கு ஒரு நரி இறந்து கிடக்கிறது. இதனுடைய தோல் நகம் முதலியவை நமக்குப் பயன்படும் என்று முடிவு செய்து அந் நரியின் தோல் முதலியவைகளை உரித்து எடுத்துக்கொண்டு போய்விட்டான். அதனால் அந்நரி வீணே இறந்தொழிந்தது. உலக வாழ்க்கையில் வீணான சூழ்ச்சி செய்கிறவர்களும் இந்நரியைப் போல் வீணாக அழிந்தொழிகிறார்கள்.

''குடற்படு முடையைக் கண்டு குறுநரி
[தின்று மான்றேர்க்
கடற்படை யியக்கங் கண்டே கள்ளத்தால்
[கிடப்ப யாரும்

திடற்பகை யின்மை யாலே செவி கொய்வான்
[வால் கொய்வானுய்
உடற்புறம் போர்த்த புன் தோல் உரித்திட்டங்
[கொருவன் கொன்றன்.''

[நரி மாண்டது] (நரி விருத்தம்)

1151. வீமன் கதை

வீமன் பாண்டவர்களில் ஒருவன். தருமனுக்கு அடுத்தவன்; மிகப் பலம் பொருந்தியவன். இவனுக்குக் குண்டுத் தடிதான் படைக்கலம். குண்டுத் தடியைக் கையில் எடுத்து விடுவானுயின் எல்லாவற்றையும் நொடியில் தவிடுபொடியாக்கி விடுவான். இவன் இவ்வாறு பேராற்றல் பொருந்தியவனுக இருந்தாலும் உள்ளத்திலே அழுக்காறு இல்லாதவனுக இருந்தான்.

பிறருடைய செல்வச் சிறப்பு முதலியவைகளைக் கண்டால் மனம் மகிழ்வானேயன்றிப் பொருமை கொண்டு புழுங்க மாட்டான். பிறருடைய மகிமையரைப் பெற்ற தாய் என்று எண்ணுவான். இவனுடைய மனநலம் எல்லோருக்கும் மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்கியது.

துரியோதனன் முதலியோர் அளவு கடந்த பொல்லாங்கைப் புரிந்தபடியினுல்தான் இவனுடைய பகையைத் தேடிக் கொண்டு மாண்டொழிந்தார்கள். ஒருவன் தன்னுடைய உள்ளத்திலே அழுக்காறு இல்லாத தன்மையை ஒழுக்க நெறியாகக் கொள்ளவேண்டும் என்று அற நூலோர் கூறியது இவனிடத்தில் நன்கு அமைந்திருந்தது.

[அழுக்காறற்றதே ஒழுக்க நெறி] (பாரதம்)

1152. வீமன் பூசை செய்த கதை

ஒரு சமயத்தில் கண்ணபிரானும் அருச்சுனனும் பல விடங்களிலுஞ் சுற்றித் திரிந்தார்கள். பிறகு இருவருங் கயிலாயத்திற்குச் சென்றார்கள். அங்குச் சில வேலைக்காரர்கள் சிவபெருமானுக்குப் பூசை செய்யப்பட்ட மலர்களை வண்டிகளில் ஏற்றிக்கொண்டு வந்து ஒரு பள்ளத்தில் கொட்டிக்கொண்டிருந்தார்கள். அருச்சுனன் அப்பணியாளர்களைப் பார்த்து, "இவைகள் யார் செய்யும் வழிபாட்டு மலர்கள்?" என்று கேட்டான். அப்பணியாளர்கள் அருச்சுனனைப் பார்த்துப், பாண்டவர்களில் வீமசேன் என்பவன் செய்யும் மனப் பூசையின் மலர்கள் இவை. அவன் நாள்தோறும் இருபத்தைந்து வண்டிமலர்களைக் கொண்டு கடவுளை வழிபடுகிறான்" என்று கூறினர்கள்.

சிவத்தொண்டர்கள் செப்பியமொழிகளைக் கேட்ட அருச்சுனன், மிகுந்த செருக்கோடு "பாண்டவர்களில் அருச்சுனன் என்பவன் வழிபடும் மலர்கள் எங்கே?" என்று கேட்டான்.

பணியாளர்கள் அருச்சுனனைப் பார்த்து, "அவ்வருச்சுனனுடைய வழிபாடு வெளிப் பகட்டானது. அஃது அரைக் கூடை மலருக்கும் குறைவாகவே இருக்கும். அதுவும் ஒவ்வொரு நாளைக்குத்தான் உண்டு" என்று கூறிவிட்டுப் போய் விட்டார்கள். அருச்சுனன் அம் மொழிகளைக் கேட்டு மிகுந்த நாணமடைந்தான். மனப்பற்று இல்லாமல் வெளிப் பகட்டாகச் செய்யும் பூசையினால் எத்தகைய பயனும் உண்டாக மாட்டாது; இது பற்றியே பெரியோர்கள், "நேரா நோன்பு சீராகாது" என்று கூறியிருக்கிறார்கள்.

[வெளிப்பகட்டு]

(பாரதம்)

1153. வீரசித்து கதை

வீரசித்து என்னும் பெயருடைய அரசன் ஒருவன் வெகு காலத்திற்கு முன் ஏம கூடம் என்னும் நகரில் இருந்தான்.

இவனுடைய நாடு செல்வநலத்திலே சிறந்து திகழ்ந்தது. இவனுங் கல்வியறிவில் உரம் பெற்றுத் திகழ்ந்தான். அறிவு நூல்களைத் தக்கார்பால் ஓதியுணர்ந்து ஆராய்ச்சி செய்தான். மனைவியோடு இன்ப நலத்தை இனிது நுகர்ந்துகொண்டிருந்த இவன் தனியே இருந்து பரம்பொருளை நாடித் தவஞ் செய்ய எண்ணினான். அரசாட்சிச் சுமையை அமைச்சர்களிடத்தில் விட்டுவிட்டுத் தான் தனியே பொழி லொன்றிற் புகுந்து இறைவனை நாடி மோனநிலையில் முனைந்து நின்றான். இவன் அழகிலும் அறிவிலும் செல்வத்திலும் சிறந்தவனுகையால் இவனது தவநிலையைக் குலைத்து இவனை அவநிலையில் புகுத்து தற்கு அழகிய பொது மகளிர்கள் சிலர் எண்ணினர். இவன் அமர்ந்திருந்த இடத்திற்குச் சென்று பலவாறு விளையாடல்கள் புரிந்து தம்மைத் தழுவ வேண்டுமென்று விழைந்து நின்றனர். வீரசித்து இவர்களுடைய செய்கைகளை ஒருபொருட்படுத்தா மல் தன்னிலையில் கலங்காமல் அமைந்து நின்றான். மாதர்கள் தாம் என்ன செய்தாலும் இவனை நிலை பிறழச் செய்ய முடியா தென்றுணர்ந்து மீண்டனர். அறிவு நலத்திற் சிறந்தவர்கள் பொது மாதர்களைத் தழுவமாட்டார்கள் என்பது இவனிடத் தில் நன்கு விளங்கியது.

[சிறந்த அறிவுடையவர்கள் பொது மாதரைச் சேரார்]

1154. வீரசேனன் கதை

இவன் முன் காலத்தில் நிடத நாட்டில் அரசு புரிந்து கொண்டிருந்தவன். நைடத நூலுக்குரியவனுகிய நளனுக்குத் தந்தை. இவனிடம் பெரும்படை அமைந்திருந்தது. இவனும் போராற்றலிற் சிறந்து விளங்கினான். இந்திரன் தன்னுடைய பகைவர்களை வெல்லுதற்கு இவனுடைய உதவியைப் பெற் றான். இத்தகைய புகழாளனுகிய இவனுக்கும் சில பகைவர் கள் முளைத்தனர். இவனுக்கேற்பட்ட மிகுந்த புகழ் அவர் களுக்குத் தலைவலியை உண்டாக்கியது. சமயம் பார்த்து இவனோடு போர் செய்து இவனைத் தொலைக்க வேண்டு மென்று அவர்கள் எண்ணமிட்டுக் கொண்டிருந்தனர். அவர்க ளுடைய எண்ணத்தை அறிந்தான். அவர்களுடைய

பகையை வளரவிடக்கூடாது என்று துணிந்தான். ஆரவார மின்றிப் பெரும் படையோடு போய் அவர்களைத் தோற்கடித்தான். பகையை அது சிறிதாக இருக்கும்பொழுதே தொலைத்து அழித்துவிடவேண்டும். இல்லாவிட்டால் அது வளர்ந்து பெருந் தொல்லையைக் கொடுக்கும் என்பதை உலகம் இவன் பால் உணர்ந்தது.

[பகையை மூலையிலேயே கிள்ளவேண்டும்]

1155. வீரசேனன் நோய் தீர்ந்த கதை

வீரசேனன் என்னும் பெயரையுடைய சோழ மன்னன் ஒருவன் உறையூரில் அரசாட்சி செய்துகொண்டிருந்தான். அவன் ஒரு நாள் ஓர் அந்தணன் வீட்டில் நீத்தார் கடனுக்காக வைக்கப்பட்டிருந்த பழங்களை அவை நீத்தார் கடனுக்காக வைக்கப்பட்டுள்ளன என்று உணர்ந்தும் வாங்கித் தின்றான். அத் தீவினையினால் அவனுக்கு ஒருவகை நோய் உண்டாகியது. அவன் புன்னை வனத்தையடைந்து வழிபாடு செய்ய எண்ணினான். சிவசன்மர் என்னும் பெயரையுடைய அந்தணர் ஒருவர் மூலம் ஐந்தெழுத் தருமறையை அருளப் பெற்றான். பல நாள் அங்குத் தங்கிச் சிவபெருமானை வழிபட்டான். அரசனுடைய நோய் நீங்கியது. அதனால் நலம் பெற்றான்.

"மறையோன் பொருளதனை வவ்விய பூம்பொன்னிக்
கிறையோன் பிணிதீர்த்த எங்கோன்"

[சோழன் நோய் தீர்ந்தது] (சங்கரலிங்க உலா)

1156. வீரபத்திரன் கதை

வீரபத்திரன் என்பவன் பல நூற்றாண்டுகட்கு முன்பு தொண்டைவள நாட்டிலே வாழ்ந்திருந்த ஒரு செல்வன்.

இவனுக்கு விளைநிலங்கள் மிகுதியாக இருந்தன. இவன் அவைகளை நன்கு பண்படுத்தி விளைச்சலைப் பெருக்கினான்.

தாளாண்மையிற் பல்ன் மிகுதிப்படவே பிறருக்கு உதவி செய்தலாகிய வேளாண்மையில் புகுந்தான். எளியவர்கள் நாளும் இவனிடம் வந்து தத்தமக்கு வேண்டிய உதவிகளைப் பெற்றுச் சென்றனர். இவன் கரும்பு பயிரிட்டிருந்தான். பசிக் கொடுமையாற் சிலர் புகுந்து கரும்பைக் களவாகத் தின்றனர். காவலர்கள் அக்கரும்பு தின்றவரைப் பிடித்து வந்து இவன் முன்பு நிறுத்தினர். இவன் அவர்கள் கரும்பு தின்றமையைப் பாராட்டியதுடன் கரும்பு விளைநிலத்தின் வேலியைத் திறந்து விட்டு அனைவரும் தின்னுமாறு கூவியழைத்தான். சிலர் வர மறுத்தனர். அவர்கட்கு இவன் கூலி கொடுப்பதாகவும் குழைந்து சொன்னான். இவ்வாறு இவன் பிறருக்கு உதவி செய்வதற்குக் காரணமாக நின்றது இவன் தன்னுடைய காரியத்தைத் திட்பமாகச் செய்த திறமையேயாம். பிறருக்கு உதவி செய்தலாகிய சிறப்பு முயற்சியோடு காரியம் புரியும் ஆற்றலிடத்திலேதான் அமைந்துள்ளது என்பதை உலகம் இவன்பால் உணர்ந்துகொண்டது.

"வேலி யழித்துக் கரும்பையெல் லாந்தின்ன விட்
[டிரவோர்
காலில் வணக்கமுஞ் செய்தேத்திப் பின்னுங் கரும்பு
[தின்னக்
கூலி யளந்துங் கொடுத்தான் ஒருவன் குமணனைப்
[போல்
வாலிதின் மிக்க கொடையாள னுந்தொண்ட
மண்டலமே"

(தொண்டமண்டல சதகம்)

[வேளாண்மைக்குக் காரணம் தானாண்மையே]

1157. வீரையின் கதை

முன்னாளில் அவந்தி நாட்டிலே கச்சயம் என்னும் நகரில் துச்சயன் என்னும் பெயருடைய அரசன் ஒருவன் அரசாட்சி செய்து கொண்டிருந்தான். அவனுடைய மகனவியின் பெயர் வீரை. கணவனுகிய துச்சயன் கள்ளுண்டலில் காதல் கொண்டான். அதனை நாளும் உண்டு மகிழ்ந்தான். அவனுடைய மகனவியாகிய இவளும் கள்ளுண்டலைப் பழகிக் கொண்டாள். அரசனுடைய குடியைவிட இவளுடைய குடியே மிகுதியாகப் போய்விட்டது. கள் குடித்தல் தீதாம் எனத் தக்கோர் பலர் அரசனுக்கும் அரசிக்கும் அறிவுரை கூறிப் பார்த்தனர். ஆனால் அதனை அவர்கள் கேட்கவில்லை. நாளுங் குடித்துக்கொண்டே யிருந்தனர். ஒரு நாள் வீரையாகிய இவள் கள்ளை மிகுதியாகக் குடித்து விட்டாள். கள்ளை மிகுதியாகக் குடிக்கவே அறிவு அடியோடு மழுங்கிப் போய் விட்டது. அப்பொழுது புதிதாகப் பிடித்துக்கொண்டு வந்திருந்த ஒரு யானையின் முன் இவள் சென்றாள். அஃது இவளை மிதித்துத் துகைத்துக் கொன்றுவிட்டது. அரசன் தன் மனைவிக்கு நேர்ந்த கதியைக்கண்டு உள்ளங் கலங்கித் திகைத்தான். இவளுடைய தமக்கை தங்கை முதலியவர்களும் இவளுக்கு ஏற்பட்ட கதியைப் பார்த்து நொந்து மடிந்தனர். கள்ளுண்பவர்கள் நஞ்சுண்பவர்களே என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது.

[கள்ளுண்பவர் தவருது மாள்வர்]

1158. வெண்ணாவல் மரக் கதை

சம்பு முனிவர் என்பவர் நாவல் மரங்கள் நிறைந்த காட்டில் தவஞ் செய்துகொண்டிருந்தார். அவருடைய எதிரில் வெண்ணாவற் பழம் ஒன்று விழுந்தது. அப்பழத்தின் அருமையைக் கண்டு அதனைக் கயிலையில் எழுந்தருளிய இறைவனுக்குப் படைத்தார். இறைவன் உண்டு உமிழ்ந்த விதையைத் தாம் எடுத்து விழுங்கினர். அவ்விதை அவருடைய வயிற்றில் முளைத்து வாய் வழியாகத் தழைத்து மரமாக

ஓங்கி வளர்ந்தது. இறைவனுடைய கட்டளைப்படி அவர் அவ்வெண்ணுவற் பழம் விழுந்த இடத்திற்கு வந்து தவஞ் செய்தார். இம் முனிவர் விரும்பியவாறே அவ்வெண்ணுவல் மரத்தின்கீழ் இறைவன் அமர்ந்தருளினர். அதனல் இறை வனுக்குச் சம்புநாதர், வெண்ணுவலரசு என்னும் பெயர் களுண்டாயின. அவ்விடம் சம்புகேசுரம் என்று பெயர் பெற்றது.

"வெண்ணுவ லரசுமனு வஞ்சி தந்தருள் பெருமாளே."

(திருப்புகழ்)

[வெண்ணுவல் மரம்]

1159. வெண்ணெய்நல்லூர் வேதியர் கதை

திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் ஆதிசைவ மரபில் சுந்தரமூர்த்தி நாயனர் தோன்றினர். மணஞ் செய்யும் பருவத்தை யடைந்து மணஞ் செய்துகொள்ளத் தொடங்கினர். புத்தூர்ச் சடங்கவி என்பவருடைய மகளை மணம் பேசி முடித்தனர். மணத்திற்குரிய ஏற்பாடுகளெல் லாம் நடைபெற்றன. சுந்தரமூர்த்தியார் மண்வறையில் அமர்ந்திருந்தார். அப்பொழுது சிவபெருமான் சுந்தரரை ஆட்கொள்ள எண்ணினர். முதிய மறையவன்போல் மணம் நடக்கும் இடத்திற்கு எழுந்தருளினர். "இச்சுந்தரன் எனக்கு அடியவன்" என்று சொல்லி வழக்கிட்டார். அங்குக் கூடியிருந்தவர்களும் பிறரும் திருவெண்ணெய் நல்லூருக்குச் சென்றனர். அங்குக் கூடியிருந்த அந்தணருடைய பேரவையில் இந்த வழக்கு உரைக்கப்பட்டது. அந்தணர்கள் முதிய அந்தணர் கொண்டுவந்த உறுதிமுறி முதலியவைகளை வாங்கிப் பார்வையிட்டு உண்மையை உணர்ந்தார்கள். நடுவு நிலைமையிற் சிறிதும் பிறழாதவர்களாகிய அவர்கள் "சுந்தரர் அம்முதிய அந்தணருக்குத் தொண்டு செய்யவேண்டியது முறைமைதான்" என்று முடிவு செய்தார்கள். அவ்வந்தணர் களின் நடுவு நிலைமை அனைவராலும் பாராட்டப் பெற்றது.

"வேதியனு ளாமோவென் றெள்ளாது வெண்ணெய்
[நல்லூர்ச்
சோதிவழக் கேபுகழ்ந்தார் சோமேசர்—ஓதில்

சமன் செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்
[தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி''

[நடுவுநிலைமை] (சோமேசர் முதுமொழி வெண்பா).

1160. வெள்ளையானையின் சாபந் தீர்த்த கதை

துருவாச முனிவர் காசியிலே இறைவனுடைய திருவுருவம் ஒன்றை அமைத்து வழிபாடு செய்தார். சிவபிரானுடைய திருமுடியில் இருந்து தாமரைமலர் ஒன்று கீழே விழுந்தது. முனிவர் அம்மலரைக் கையிலேந்திக் கண்ணில் ஒற்றி மகிழ்ந்தார். பிறகு தேவருலகிற்குப் புறப்பட்டுச் சென்றார். அப்பொழுது இந்திரன் யானைமீது அமர்ந்தவனுய்த் தன்னுடைய இருப்பிடத்திற்குச் சென்றான். அவனைக் கண்ட துருவாசர் தம்முடைய கையிலேயிருந்த மலரை அவனிடங் கொடுத்தார். அவன் அம்மலரைத் தன்னுடைய கை ஒன்றை நீட்டி வாங்கினன்; யானையின் மத்தகத்தின்மீது வைத்தான். யானை தன்மீது வைக்கப்பட்ட மலரைத் துதிக்கையாலெடுத்துக் காலின் கீழே போட்டு மிதித்துத் துகைத்தது. இதனைக் கண்டதுந் துருவாசருக்கு அளவு கடந்த சினம் உண்டாகியது. அவர் இந்திரனுடைய முடி பாண்டிய மன்னர்களில் ஒருவனுல் சிதறுமாறும் வெள்ளையானை காட்டானையாகப் போகுமாறும் கடுமையான வசவுரை வழங்கினர். வெள்ளையானை பல ஆண்டுகள் காட்டானையாகத் திரிந்து வருந்தியது. பிறகு மதுரையை அடைந்து சோமசுந்தரக் கடவுளைப் போற்றி வழிபட்டது. அப் பெருமான் யானையினுடைய சாபத்தை (வசவுரையை)ப் போக்கியருளினர்.

'' வெள்ளானைக் கருள் சுரந்த கடவுளேயோ ''

[வெள்ளையானையின் சாபந் தீர்ந்தது] (மதுரைக் கலம்பகம்).

———

1161. வேகவதியைத் தடுத்த கதை

நான்முகன் சிவபூசனைசெய்து திருமாலோடு உலகைப் படைக்க எண்ணினான். காஞ்சி நகரத்தை யடைந்து தன்னுடைய பெயரால் சிவலிங்கம் ஒன்றினையமைத்து வழிபட்டான். சோமயாகம் ஒன்றைச் செய்யத் தொடங்கிச் சாவித்திரி காயத்திரி என்னும் மனைவியரோடமர்ந்து வேள்வி செய்யலானான். அதனையுணர்ந்த கமலமகள் தானில்லாமல் வேள்வி செய்யத் தொடங்கியதைக் கண்டு மிகுந்த சின மடைந்தாள். அவ்வேள்வியை அழிப்பதற்காக ஆருகச் சென்றாள். இதனை நாரத முனிவர் கண்டு நான்முகனுக்கு நவின்றார். நான்முகன் சிவபெருமானை வேண்டிக் கொண்டான். சிவபெருமான் திருமாலை யழைத்து ஆற்றுப் பெருக்கைத் தடுக்குமாறு கூறினார். திருமால் அவ்வாற்றைத் தடுக்குமாறு இடையே பள்ளி கொண்டருளினார். இதனால் ஆற்றுப் பெருக்குத் தடைப்பட்டது.

"நான்முகப் பிரான் வேள்வியைத் தபவரு நதியை
மான் மறுத்திடைக் குலையெனக் கிடந்தமை மான"

[வேகவதியைத் தடுத்தது] (காஞ்சிப் புராணம்)

1162. வேங்கடாசலத்தின் கதை

சீசைலத்தின் மேற்கில் உள்ள நந்தனபுரம் என்னும் என்னும் ஊரில் புரந்தரன் பெயருடைய அந்தணன் ஒருவன் இருந்தான். அவனுக்கு மாதவன் என்னும் பெயருடைய மைந்தன் ஒருவன் இருந்தான். அவன் ஒருநாள் தன் மனைவியாகிய சந்திரலேகை என்பவளோடு பூஞ்சோலையிற் சென்று விளையாடிக் கொண்டிருந்தான். அப்பொழுது மாலினி என்னும் பெயருடைய புலைச்சியொருத்தி அவ்விடத்திற்கு வந்தாள். அவள் பேரழகு பொருந்தியவளாக விளங்கினாள். மாதவன் புலைச்சியினுடைய அழகைக் கண்டு மயங்கினான். அவளோடு சேர்ந்துகொண்டு மனையாளைத் துறந்துவிட்டான். அப் புலைமகளொடு கூடியபடியால் புலால் உண்ணுதல் மது

மாந்துதல் முதலிய கொடிய வழக்கங்களையும் மேற் கொண்டான். அதனால் கைப்பொருள் முழுவதையும் இழந்தான். பிறகு வழிப்பறி செய்தல் உயிர்களைக் கொல்லுதல் முதலியவற்றிலும் ஈடுபட்டான். பிறகு அப்புலைமகளுக்குக் கொடுப்பதற்குப் பொருள் இல்லை. இவனுடைய வறிய நிலைமையைக் கண்ட அவள் இவனைத் துரத்திவிட்டாள். இவன் பல நோய்களையடைந்து வருந்தினான். பலவகையான தீவினைகளுந் தொடரப் பித்தனைப்போல் அலைந்து திரிந்தான். இறுதியில் ஏதோ ஒரு நல்வினையினால் திருமலையாகிய திருப்பதியை அடைந்தான். அவ்வளவில் இவனுடைய தீவினைகளெல்லாம் எரிந்தொழிந்தன. இவன் பழையபடி அந்தணர் கட்குள்ள ஒளியை அடைந்தான். திருமாலைப் போற்றிவழிபட்டுப் பரமபதத்தை யடைந்தான். மாதவனுடைய தீவினைகளையெல்லாம் எரித்தொழித்தபடியால் திருமலை வேங்கடாசலம் என்னும் பெயரைப் பெற்றது. வேம்-தீவினை. கடம்-எரிதல். அசலம்-மலை. வேங்கடாசலம்-தீவினைகளையெல்லாம் எரித்தல் செய்யும் மலை.

[திருப்பதி]

1163. வேங்கை மரமான கதை

திருமாலின் பெண்களாகத் தோன்றிய சுந்தரி அமுதவல்லி என்னும் இருவரும் முருகக் கடவுளை மணம் புரியும்பொருட்டுத் தவஞ் செய்தார்கள். முருகக் கடவுள் அப்பெண்களுக்குக் காட்சி கொடுத்தார். அமுதவல்லியைத் தேவேந்திரனிடத்தில் தேவயானை என்னும் பெயரோடு வளரு மாறு கட்டளையிட்டார். சுந்தரியை நிலவுலகில் வேடர் சார்பில் வளருமாறு அருள்புரிந்தார்.

சுந்தரி வள்ளிமலைச் சார்பில் தவஞ்செய்துகொண்டிருந்த சிவமுனி என்பவருக்குப் பெண்ணாகத் தோன்றினாள். வள்ளியை அம்மலைக் கண்வாழ்ந்த வேடர் தலைவனாகிய நம்பி என்பவன் வளர்த்தான். வள்ளி தகுந்த ஆகவையை அடைந்தவுடன் அவளுடைய வளர்ப்புத் தந்தையாகிய நம்பி

தினைப்புனங் காக்க வைத்தான். அவள் கிளி முதலியவை களை ஓட்டித் தினைப்புனத்தைக் காவல் செய்துகொண்டிருந் தாள்.

தணிகைமலைக்குச் சென்ற நாரதர் வள்ளியின் செய்தியை முருகக் கடவுளுக்கு மொழிந்து, திருமணஞ் செய்தருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். முருகக் கடவுள் அழகிய வேட்டுவக் கோலத்தோடு வள்ளி முன்பு தோன்றிக் காதல்மொழிகள் பலவற்றைக் கழறினர். அப்பொழுது வள்ளியின் தந்தையாகிய நம்பிராசன் பிறவேடர்களோடு அங்கு வந்தான். அச்சமயத்தில் முருகக்கடவுள் வேங்கை மரமாக மாறி நின்றார். அப்பொழுது நம்பிராசனோடு வந்த வேடர்கள் அந்த வேங்கைமரத்தைப் பார்த்தார்கள். ''முன் பில்லாத வேங்கை மரமொன்று இப்பொழுது இங்கு புதிதாகத் தோன்றியிருக்கிறது. இதனை வெட்டிச் சாய்க்க வேண்டும்'' என்று சொன்னார்கள். நம்பிராசன் வள்ளியைப் பார்த்து, ''இம்மரம் இங்கு எப்படி வந்தது? முன்பு இல்லையே!'' என்று உசாவினன்.

வள்ளி நம்பிராசனைப் பார்த்து, நானும் இப்பொழுது தான் பார்க்கிறேன். அது வந்த விவரம் எனக்குத் தெரி யாதென்றாள். மேலும் தந்தையைப் பார்த்து, ''அம்மரம் அங்கிருந்தால் அதன் நிழலில் தங்கியிருக்கலாம்'' என்றாள். அவள் கூறியதைக் கேட்ட நம்பிராசன் ''அம்மரம் அப்படியே இருக்கட்டு'' மென்று கூறிவிட்டு அவ்விடம் விட்டுச் சென்றான்.

''அண்ணலருள் சரவணவேள் புனக்குறப்பெண்
வெயிலில் நிற்கும் அவதி பார்த்துத்
தண்ணுலவு வேங்கைமர நிழலாலன்
றவள் வருத்தம் தனைத்தீர்த் தாரோ

(சயங்கொண்டார் சதகம்)

''மான்மகள்பால் ஊடிமர மானுன் மழகளிற்றின்
தேனனையாள் காந்தன் சிவசிவா—ஏனெனிலங்
கூடுதல் காமத்திற்கின்பம் அதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின்''

[வேங்கைமர் மானது] (சிவசிவ வெண்பா)

1164. வேங்கை மார்பன் கதை

பாண்டிவள நாட்டில் திருக்கானப்பேர் என்னும் ஊரில் வேங்கைமார்பன் என்னும் பெயருடைய குறுநில மன்னன் ஒருவன் இருந்தான். இவனிடம் அரண்வலி படைவலி முதலியன சிறந்திருந்தன. இவன் மதுரையில் இருந்து அரசு புரிந்து கொண்டிருந்த உக்கிரப்பெருவழுதி என்னும் பாண்டிய மன்னனுக்கு உட்பட்டவனாய்க் கப்பங் கட்டிக்கொண்டிருந்தான். நாளடைவில் இவனுக்குச் செருக்குந் தருக்கும் மிகுதிப் பட்டன. தன்னுடைய படைவலியையும் அரண்வலியையும் எண்ணிக் களித்தான். பாண்டியனுக்குக் கப்பங்கட்டுவதையும் கட்டாமல் இருந்தான்.

வேங்கைமார்பனுடைய உள்ளக் கருத்தை உக்கிரப் பெருவழுதி உணர்ந்தான். தனக்குச் செலுத்த வேண்டிய கப்பத்தை ஒழுங்காகச் செலுத்துமாறு தூதுவர்களை அனுப்பினான். வேங்கைமார்பன் அத் தூதையும் ஒரு பொருட் படுத்தவில்லை. சோழ மன்னன் ஒருவனும் சேரமன்னன் ஒருவனும் வேறுசில அரசர்களும் உக்கிரப் பெருவழுதிக்குப் பக்கபலமாக அமைந்திருந்தனர். வேங்கை மார்பனுடைய அமைச்சர்கள் பாண்டிய மன்னனுக்குப் பக்கத்துணை அதிகமாக இருப்பதால் பகையைத் தேடிக்கொள்ளுதல் கூடாதென்றும் தேடிக்கொண்டால் அழிவு நேரிடுமென்றும் அறிவுரைகள் கூறினர். வேங்கைமார்பன் கேட்கவில்லை. பாண்டியனுக்குத் துணையாக நின்ற மன்னர்களே வேங்கைமார்பனைத் தொலைத்து விடவேண்டும் என்று குறித்தனர். பாண்டிய மன்னனுக்குப் பலர் துணையாக நிற்றலையும் வேங்கைமார்பன் பொருட்படுத்தவில்லை. பாண்டிய மன்னன் துணைமன்னர்களோடு பெரும் படையைத் திரட்டிக்கொண்டு வந்தான். கொடும் போர் மூண்டது. இவன் அப்போரில் பல மன்னர்களைத் தனிமையாக எதிர்த்துப் போரிடமுடியாமல் விரைவில் அழிந்தொழிந்தான். தான் தனியாக இருந்துகொண்டு பலருடைய பகையைத் தேடிக்கொள்பவன் பித்துப் பிடித்தவரைவிட அறிவில்லாதவனாக முடிவான் என்பது இவனிடம் நன்கு விளங்கியது.

[தனிமையிற் பலர் பகையைத் தேடிக்கொள்பவன் அறிவற்றவனாவான்]

1165. வேடர்கள் போரிட்ட கதை

முருகவேள் வள்ளி நாயகியாரைத் திருமணஞ்செய்து கொள்வதற்காகத் தினைப்புனத்திற்குச் சென்று பல திருவிளையாடல்களைச் செய்து பிறகு வள்ளிநாயகியாரைக் கவர்ந்து கொண்டு சென்றார். வள்ளியம்மையாரை முருகவேள் வேட்டுவக் கோலத்தோடு வந்து கைப்பற்றிச் செல்லுதலை வள்ளியம்மையை வளர்த்த நம்பிராசன் உணர்ந்தான். தன் துணைவர்களாகிய வேடர்களையெல்லாந் திரட்டிக்கொண்டு சென்று முருகவேளை எதிர்த்தான். முருகவேளோடு செய்த போரில் வேடர்களனைவரும் மாண்டொழிந்தார்கள். முருகவேள் வேட்டுவக் கோலத்தோடு இருந்தபடியால் நம்பிராசன் முருகவேளைத் தன்னைப்போன்ற ஒரு வேடனென்றே எண்ணினான். அதனால்தான் முருகக் கடவுளையும் வளைத்துப் போரிட்டான்.

[வேடர்கள் போர்]

1166. வேடன் மறையவனைக் காத்த கதை

ஓர் ஊரிலே எளிய அந்தணன் ஒருவன் இருந்தான். அவன் ஓர் அரசனிடம் நன்கொடையின் பொருட்டுச் சென்றான். அரசன் அந்தணனுக்கு அரிய மாணிக்கமணி ஒன்றைக் கொடுத்தான். அதனைக் கையிலே கொண்டு சென்றால் வழியில் கள்ளர்கள் பிடுங்கிக் கொள்வார்களென்று எண்ணிய அந்தணன் அதனை வாயிற்போட்டு விழுங்கி விட்டான். ஊருக்குச் சென்ற பிறகு அதனைக் கக்கியெடுத்துக் கொள்ளலாம் என்பது அந்தணனுடைய எண்ணம்.

அந்தணனுடைய செய்தியை வேடன் ஒருவன் அறிந்து கொண்டான். அவ்வந்தணன் ஊருக்குச் சென்றபொழுது அவனைத் தொடர்ந்து சென்றான். நடுக் காட்டில் அந்தணனை மடக்கிக்கொண்டு, "உன்னுடைய வயிற்றில் இருக்கும் மாணிக்கத்தைக் கக்கு" என்றான். "மாணிக்கம் உன்னுடைய வயிற்றில்தான் இருக்கிறதே தவிர என்னுடைய வயிற்றில் இல்லை" என்று அந்தணன் சொன்னான்.

இவர்கள் இவ்வாறு நடுக் காட்டில் போரிட்டுக் கொண் டிருக்கும்பொழுது அவ்விடத்திற்குக் கள்ளர்கள் சிலர் வந்து அந்தணனைப்பிடித்துக் கொண்டு ,மாணிக்கத்தைக் கக்கச் சொன்னர்கள். வேடன் அறிவுள்ளவன். அவன் அப் பொழுது அந்தணனுக்குப் பகைவனாக இருந்தாலும் அவ னிடத்தில் அன்பும் இரக்கமுங்கொண்டான். அந்தண னுடைய உயிரைக் காப்பாற்ற எண்ணினான். அவன் கள்ளர் களைப் பார்த்து, ''நாங்கள் வேடிக்கையாகப் பேசிக்கொண் டோம். யாராவது மாணிக்கத்தை விழுங்குவார்களா? உங்க ளுக்கு ஐயமிருந்தால் என்னுடைய வயிற்றைக் கீறிப் பாருங்கள்'' என்று சொன்னான்.

கள்ளர்கள் வேடனுடைய வயிற்றைக் கீறிப் பார்த்தார் கள். ஒன்றும் அகப்படவில்லை. வீணாக வேடனைக் கொன்றுவிட் டோமே என்று உள்ளம் வருந்தினர்கள். பார்ப்பானையாவது விட்டு விடுவோம் பிழைத்துப் போகட்டும் என்று எண்ணி விட்டு விட்டார்கள். பார்ப்பான் உயிர் பிழைத்தான். பார்ப் பானுக்கு வேடன் முதலிற் பகைவனாக இருந்தாலும் அவன் அறிவுடையவ னாகையால் அன்புசேர் நட்பைக் கொண்டு அந்தணனைக் காப்பாற்றி விட்டான்.

''அறிவன் பகையேனும் அன்புசேர் நட்பாம்
சிறுவன் பகையாம் செறிந்த -- அறிவுடைய
வென்றி வனசரன்தான் வேதியனைக் காத்தான்முன்'

[அறிவன் பகை நட்பு]

(நீதி வெண்பா)

1167. வேதவியாசர் கதை

முன்னொரு காலத்திற் பராசரமுனிவர் பல சிவதலங்களை யும் போற்றி வழிபட்டுக் கொண்டு உலகை வலம் வந்தார். அப்பொழுது கங்கையாற்றில் நீராடினர். கங்கையைக் கடந்து அப்புறஞ் செல்ல எண்ணினர். அங்கிருந்த மச்ச கந்தி என்பவளைப் பார்த்து, 'ஓடம் விட முடியுமா?'' என்று உசாவினர். அவள், ''ஆயிரம் பேராவது வந்தால்தான் ஓடம் விடலாம்'' என்றாள். ''ஆயிரம் பேருடைய பாரத்தை

யும் நான் ஒருவனே உண்டாக்குகிறேன் ஓடத்தைச் செலுத்து வாயாக'' என்று கூறி ஓடத்தைச் செலுத்தச் சொன்னார். செல்லும்பொழுது நாளும் கோளும் நன்னிலையில் அமைந்து நின்றன. இவ்வேளையில் நாம் ஒரு மாதைக் கூடினால் அரிய மகன் ஒருவன் பிறப்பான் என்று அறிந்தார். மச்சகந்தி புலால் நாற்றம் வீசும் உடம்பினையுடையவளாக இருந்தாள். பராசரர் மச்சகந்தியின் தீ நாற்றத்தை யொழித்து அவளைப் பரிமளகந்தி யாக்கினர். கதிரவனைப் பனியால் மறைத்து அம் மாதைச் சேர்ந்தார். அப்பொழுது வேதவியாசர் பிறந்தார். வலிமாதிடம் பிறந்தும் அவர் எல்லா நூல்களையும் நன்கு பயின்று வேதத்திற்கும் விரிவுரை யெழுதும் ஆற்றலைப் பெற்றார். அதனால்தான் அவருடைய பெயர் வேதவியாசர் என்று வழங்கத் தொடங்கியது.

''மச்சகந்தி தன்வயிற்றில் வந்துதித்தும் ஓதலினால்
விச்சைபெற்ற வேத வியாசனைப்பார் — நிச்சயமே
பன்னுதமிழ்ப் புன்னைவனப் பார்த்திவனே உண்மைநூ
லின்னே துவதொழி யேல்''

[ஓதுவ தொழியேல்] (ஆத்திசூடி.)

1168. வேதேசரர் கதை

வேதேசரர் என்பவர் பல நூற்றாண்டுகட்கு முன்பு வட நாட்டில் இருந்தவர். இவர் மறையவன் புதல்வர் என்று சிலரும் மன்னவன் புதல்வர் என்று சிலரும் கூறுப.

இவர் இளமையில் பல நூல்களையும் நன்கு ஓதியுணர்ந் தார். உலக நிலையாமை செல்வம் நிலையாமை முதலியவை களை நன்குணர்ந்து காட்டை அடைந்து அருந்தவம் புரிந்து சிறந்த முனிவரானார்; எப்பொருளையும் விரும்பாமையாகிய பண்பு இவரிடம் நன்கு அமைந்தது.

ஒரு நாள் இவர் ஒரு நகரத்திற்குச் சென்றார். அங்கு அரசிளங்குமரி ஒருத்திக்குச் சுயம்வரம் நிகழ்ந்து கொண் டிருந்தது. (சுயம்வரமாவது, மங்கை ஒருத்தி தானே மணா

ளனைத் தெரிந்தெடுத்துக் கொள்ளுதல்.) இவ்வரசிளங் குமரிக்கு உடன்பிறந்தவர்கள் இல்லையாதலால் இவளே அரசுக்கும் உரியவளாக இருந்தாள்.

இம்மங்கையையும் நாட்டையும் கைப்பற்றுவதற்கு எண்ணற்ற மன்னர்கள் திரண்டிருந்தனர். அரசிளங்குமரி மாலையொடு வந்தாள்; மேடை மீது ஏறினாள். கூடியிருந்த மன்னர்கள் எல்லோரையும் கண்டாள். நகரத்திற்கு வந்த வேதேசுரர் சுயம்வர வேடிக்கையைப் பார்க்க விரும்பியவராய்ச் சுயம்வர மண்டபத்திற்கு வந்து வேடிக்கை பார்த்துக் கொண்டு ஒரு மூலையில் நின்றிருந்தார்.

அரசிளங்குமரி வேதேசரரைக் கண்டாள். அவருக்கு மாலை சூட்டுவதற்காக விரைந்து சென்றாள். மாலையொடு வரும் மங்கையின் மனத்தை இவர் அறிந்தார். அந்தோ வேடிக்கை பார்க்க வந்து வில்லங்கத்தில் மாட்டிக் கொண்டோமே என்று நடுங்கிப் பதறினார். 'எனக்கு ஒன்றும் வேண்டாம்' என்று சொல்லிக் கொண்டே ஓட்டம் பிடித்தார். அவளும் தொடர்ந்து காட்டை அடைந்தாள். அவனைப் பார்த்துத் தம்முடைய செய்தியை உரைத்து அறவுரைகள் பல இயம்பினர். அவள் இவரது உரைகளைக் கேட்டாள். அரசை வெறுத்துத் தவநெறியிற் புகுந்தாள்.

அழகிய அரசிளங் குமரியையும் அரசாட்சியையும் வெறுத்தோடிய இவருடைய உள்ளத் தூய்மையை மண்ணவரும் விண்ணவரும் புகழ்ந்து போற்றினர். எப்பொருளையும் விரும்பாமை போன்ற சிறந்த செல்வம் இவ்வுலகில் இல்லை. வேறு எங்கும் அதற்கு நிகரானதில்லை என்னும் அறவுரைக்கு இவர் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்தார்.

[எப்பொருளையும் விரும்பாமையே செல்வம்] (பாரதம்)

1169. வேந்தன் மகனைத் துரத்திய கதை

முன்னாளிற் சகரன் என்னும் பெயருடைய அரசன் ஒருவன் இருந்தான். அவன் குடிகளை நன்கு காத்து

அரசாட்சியைச் சிறப்புடன் நடத்திக் கொண்டிருந்தான். அவனுக்கு அசமஞ்சன் என்னும் பெயருடைய மகன் ஒருவன் இருந்தான். அம்மகன் தீய வழியில் நடந்து பொல்லாத காரியங்கள் பலவற்றைச் செய்தான். சிறுவர்கள் பலரைச் சரயு ஆற்றில் எறிந்து கொலைசெய்து விட்டான். இதனை யறிந்த சகரன் அசமஞ்சன் தன்னுடைய மகன் என்று சிறிதுங் கண்ணோட்டஞ் செய்யாமல் அவனைத் தன்னுடைய நாட்டை விட்டுத் துரத்திவிட்டான். குடிகளை நன்கு காத்துக் குற்றஞ் செய்தவர்களை ஒறுத்தல் அரசன் செய்யவேண்டிய வேலையே யாகும். அவ்வாறு செய்தல் சிறிதுங் குற்றமாக மாட்டாது என்பது சகரமன்னனிடம் நன்கு காணப்பட்டது.

(இராமாயணம்)

"மைந்தனை நுமலச மஞ்சன் தனைவெறுத்தான்.
சுந்தரச்செங் கோற்சகரன் சோமேசா—முந்தும்
குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்"

[செங்கோன்மை] (சோமேசர் முதுமொழி வெண்பா)

1170. வேம்புகட்கெல்லாம் விதானம் அமைத்த கதை

வரகுண பாண்டிய மன்னன் ஒரு நாள் திருவிடை மருதூரின் திருத்தெருவிலே சென்று கொண்டிருந்தான். வழியில் வேம்பின் கனிகள் உதிர்ந்து கிடந்தன. அவை சிவலிங்க வடிவங்களாக அரசனுடைய கண்களுக்குக் காணப்பட்டன. அரசன் சிவலிங்க வடிவங்களாக விளங்கும் அக்கனிகளைத் தரும் வேப்பமரங்களுக்கு விதானம் அமைக்க வேண்டும் என்று எண்ணினான். தன்னுடைய எண்ணத்தை அமைச்சர்களுக்குத் தெரியப்படுத்தினான். அமைச்சர்களும் வேப்பமரங்களுக்கு விதானம் அமைத்தார்கள்.

"காம்பவிழ்ந் துதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதானம் அமைத்தும்."

[வரகுணர்] (திருவிடைமருதூர் மும்மணிக் கோவை)

1171. வேலவன் மேய்ப்போனை கதை

பாண்டிவள நாட்டில் திருக்குருகூரில் பிரதிவாதி பயங்கரன் என்னும் பெயருடைய புலவன் ஒருவன் முன்னாளில் இருந்தான். அவன் நூல்களை நன்கு கற்றவன். அவன் நாடுகள் தோறுஞ் சென்று தன்னுடைய நற்றமிழ்ப் புலமையைக் காட்டித் திரிந்தான். தன்னோடெதிரிட்டு வாதிட்ட புலவர்களை வென்று அவர்களுடைய நூல்களையும் பொருள்களையும் கைப்பற்றினான். "தட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்" என்பர். பிரதிவாதி பயங்கரன் தன்னுடைய பெயருக்கேற்பப் பயங்கரனாகவே மாறிவிட்டான். நாடுகள் பலவற்றிலும் சுற்றிய பிறகு கொங்கு நாட்டை அடைந்தான். திருச்செங்கோடு என்னும் ஊரை நோக்கிச் சென்றான். செங்கோட்டுமலை பாம்பு வடிவமாக அமைந்தது. அம்மலையைக் கண்டவுடன் பயங்கரப் புலவன், "சமரமுகத் திருச்செங்கோடு சர்ப்ப சயிலமென, அமரிற் படம்விரித் தாடாத தென்னை....." என்று இரண்டு அடிகளைப் பாடினான். இதற்கு மேல் பாட்டு வரவில்லை.

அத்திருச்செங்கோட்டில் குணசீலன் என்னும் புலவன் ஒருவன் இருந்தான். அவன் பிரதிவாதி பயங்கரனுடைய செய்தியை நன்கு உணர்ந்திருந்தான். அவன் தன்னிடமும் வந்து வாதிட்டுப் பொருள்களைக் கைப்பற்றிச் செல்லக்கூடுமென்று அஞ்சியிருந்தான். அதற்கேற்பப் பயங்கரனுடைய ஓலையும் வந்தது. குணசீலன் தன்னைச் செங்கோட்டு வேலவன் காப்பாற்ற வேண்டுமென்று வேண்டிக்

கொண்டான். முருகக் கடவுள் பயங்கரனை விரட்டவும் குண சீலனைக் காக்கவும் திருவுளத்தில் எண்ணங் கொண்டார். மாட்டுக்காரனுக வடிவெடுத்துப் பயங்கரன் வரும் வழியில் மாடுகள் சிலவற்றை மேய்த்துக் கொண்டிருந்தார். பயங் கரன் அரைப் பாடல் பாடிவிட்டு அதற்குமேல் பாட வகை யறியாமல் விழிப்பதைக் கண்டார். உடனே "அஃ தாய்ந்திலையோ? நமரின் குறவள்ளி பங்கனெழுகரை நாட் டுயர்ந்த, குமரன் திருமுரு கன்மயில் வாகனங் கொத்து மென்றே" என்று தாம் எஞ்சிய பாட்டை முடித்தார்.

பயங்கரன் மிகு விரைவாகப் பல்லக்கை விட்டுக் கீழே இறங்கினன். வேலவனே ஒருமாட்டுக்காரன்என்றே எண்ணிக் கொண்டான். தொழிலோ மாடு மேய்க்குந் தொழிலாக இருக்கிறது. புலமையோ தெய்வத் தன்மை அமைந்ததாக இருக்கிறது என்று எண்ணினன். வேலவனைப் பார்த்து, "நீ யார்? உனக்குச் செய்யுள் பாடத் தெரியுமா? மாடு மேய்க்க வேண்டிய காரணம் யாது?" என்று உசாவினன்.

வேலவன் பயங்கரப் புலவனைப்பார்த்து, "ஐயா, புல வரே! இவ்வூரில் குணசீலன் என்னும் பெயரையுடைய பெரிய புலவர் ஒருவர் இருக்கிறார். அவருக்கு மாணவர்கள் பலர் இருக்கிறார்கள். அம்மாணவர்களிற் கடை மாணாக்கன் யான். கண்டசுத்தி பாடுவதில் திறமை போதாதென்று அவர் ஒதுக்கி விட்டார். நான் இவ்வாறு மாடு மேய்த்துத் திரிகிறேன். ஆன்கள் நல்லினை உடையவைகளாகையால், இத்தொழிலைச் சிறந்ததாக எண்ணிமேற் கொண்டுள்ளேன்" என்று கூறினர். பயங்கரன் குணசீலப் புலவரிடம் அச்சங் கொண்டான். அவ்வூருக்குள் நுழையாமலே ஓடிப்போனன்.

"பெருமை மிகு, மர வச்சிலம் பாமெனில் பெட்புறுமவ்
வரவு படம்விரித் தாடாத தென்னென் றகத்துனுமோர்
கருவி வெருக்கொள ஆமேய்ப் பவனைக் கனிந்துதிரு
மருகன் மயில்கொத்து மென்றெனச் சொல்கொங்கு
[மண்டலமே."

[வேலவன் மேய்ப்போனை வந்தது] (கொங்குமண்டல சதகம்)

1172. வேலைக் கமலையின் கதை

தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து திருப்பாற்கடலைக் கடைந்தபொழுது அதிலிருந்து அமுதம் முதலிய பொருள்கள் தோன்றின. மேலும் கடைந்தபொழுது திருமகள் தோன்றினாள். அவ்வாறு தோன்றிய திருமகளைக் கடலரசன் வளர்த்து வந்தான். திருமால் மதுகைடவர்கள் என்னும் அசுரரைக் கொன்று ஆண்மையான செயல் புரிந்தார். இதனைக் கேட்ட திருமகள் திருமாலிடத்திலே காதல் கொண்டாள். தான் திருமாலை மணக்க எண்ணினாள். திருவாரூரை அடைந்து புற்றிடங் கொண்டாரைப் போற்றி வழிபட்டுத் தவஞ் செய்தாள். புற்றிடங்கொண்டார் திருமகளுக்குக் காட்சி கொடுத்தார். திருமாலை மணம் புரிந்து கொள்ளுதற்கான சிறப்பை யளித்தார். திருமகளின் வேண்டுகோளின்படி திருவாரூர்க்குக் கமலாலயம் என்னும் பெயரையும் வழங்கினர்.

"—பொருசங்க
வேலைக் கமலை புகுத்திறைஞ்ச வேட்டதிரு
மாலைப் புணர்த்த வரத்தினோன்—காலை
வருங்கம லாலயப்பெண் வந்திப்பத் தன்னூர்க்
கிருங்கம லாலயப்பே ரிட்டோன்."

[திருமகள் வழிபட்டது] (திருவாரூர் உலா)

1173. வேல் கொடுத்த கதை

சூரபன்மன் முதலிய அசுரர்களை வென்று தேவர்களுடைய தொல்லையைப் போக்குவதற்காக முருகக் கடவுள் சிவபெருமானுடைய திருவருளால் தோன்றினார். உமாதேவி முருகக் கடவுளை வாழ்த்தித் தமது ஆற்றல் முழுவதும் ஒருங்கே அமையப் பெற்ற வேற்படையை முருகக் கடவுளுக்குக் கொடுத்தருளினார். அப்படையால் முருகக் கடவுள் அசுரர்களை யெல்லாம் அழித்தருளினர். அருணகிரி

நாதர், "பம்பரமே போல ஆடிய சங்கரி, வேதாள நாயகி' பங்கய சீபாத நூபுர கரசூலி, பங்கமிலா நீலிமோடி பரியங்க மாகாளி யோகினி, பண்டுசுராபான சூரனுடைதிர் போர் கண்டு எம்புதல்வா வாழி வாழியெனும்படி வீருன வேல்தர என்று முளானே" என்ருர். படிக்காசுப் புலவர், "வேல் கொடுத்தாய் திருச்செந்தூரர்க்கு" என்ருர். "அழியாப் பேரளி உமைக் கணின்று, தற்பெயர் புணர்த்திக் கற்பி னெடு கொடுத்த, அமையாவென்றி அரத்த நெடுவே லோய்!" என்பது கல்லாடம்.

[வேல் கொடுத்தது]

1174. வேளாளர்கள் தோன்றிய கதை

சிவபிரானுடைய சடைமுடியில் விளங்கும் கங்கையில் சிவபிரானுடைய திருவருளால் வேளாளர்கள் தோன்றினர் கள். அவர்களுக்குத் திருமாலின் திருவடிக் கங்கையில் தோன்றிய பெண்களைச் சிவபெருமானுடைய கட்டளைப்படி தேவர்கள் அனைவரும் கூடித் திருமணம் செய்து வைத்தார் கள். நிலவுலகத்தில் பயிர்த் தொழில் செய்து உயிர்த் தொகைகள் எல்லாவற்றையுங் காப்பாற்றுமாறு வாழ்த்துரை வழங்கி அவர்கட்கு வேளாளர் எனவும், பூபாலர் எனவும், கங்கை குலம் எனவும் பெயர் கொடுத்து அனுப்பினர்கள். அவர்கள் நாற்பத்தெண்ணுயிரம் முனிவர்களுடைய அடி களிற் பணிந்தபோது தங்கள் தங்கள் பெயரை அவரவர்களு டைய கோத்திரமாகப் பின்பற்றுமாறு வரங் கொடுத்தார்கள். பிறகு போதாயன முனிவரைப் பணிந்தபோது அவர் தம்மாற் செய்த நூல்களைப் பின்பற்றி நடக்குமாறு இவர்களுக்கு அருள் செய்தார். அதனுல் இவர்கள் போதாயன சூத்திரமும் உடையவர்களானர்கள்.

[வேளாளர்கள்]

1175. வேளாளர்கள் வேலமரத்தை வெட்டிய கதை

புரிசைக் கிழானுல் வெறுத்துக் கைவிடப்பட்ட பேய்க் குழந்தைகளிரண்டும் சிறையில் இருந்து விடுதலையடைந் தாற்போல மிகுந்த மகிழ்ச்சியை அடைந்தன. நீலி என்னும் பெண் பேய், நீலன் என்னும் ஆண் பேயைப் பார்த்து, "நாமிரு வரும் ஓரிடத்தில் இருக்கக்கூடாது. நீ இங்கேயிரு" என்று கூறிவிட்டுத் தான் திருச்செங்கோட்டிற்குப் போய் அங்கே யிருந்தது. நீலன் பேய் ஆண் பேய்களுக்கெல்லாம் அரசாய் ஒரு வேலமரத்தில் தங்கியிருந்தது. ஒரு நாள் அப்பேய் வேட்டைக்குப் போயிருந்த போது பழையனூர் வேளாளர் கள் கலப்பை மரத்துக்காக வேலமரத்தை வெட்டிக் கொண்டு போய்விட்டார்கள்.

ஆண்பேய் திரும்பிவந்து மரம் வெட்டப்பட்டிருப்பதைக் கண்டு மிகுந்த சினத்தோடிருந்தது. அப்போது அவ்வழியே ஒரு குருக்கள் கூத்தப்பிரானுக்குப் படைப்புணவு கொண்டு சென்றார். அவ்வுணவைப் பேய் பறித்துக்கொண்டது. குருக்கள் கூத்தப் பிரானிடம் முறையிட்டார். கூத்தப் பிரான் குண்டோதரனை அனுப்பி நீலன் பேயைக் கொன்று விடச்செய்தார். திருச்செங்கோட்டில் இருந்த பெண் பேய் இதனையறிந்து வருந்தித் திருவாலங்காட்டிற்கு வந்தது. "என் தமையன் அழிவுக்குக் காரணமாக வேலமரத்தை வெட்டிய வேளாளர்களைக் கொன்று தொலைத்துப் பழி தீர்க் கிறேன்" என்று வஞ்சினம் கூறிக்கொண்டு அதற்குத் தகுந்த சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

[பழையனூர் நீலி]

1176. வேளூர்க்கிழான் கதை

சோழவள நாட்டில் திருத்தருப்பூண்டிக்கு வடக்கில் திரு வாரூர் செல்லும் வழியில் வேளூர் என்னும் பெயருடைய ஊர் உள்ளது. அவ்வூரில் முன்னாளில் வேளூர்க்கிழான் என்ப

வன் வாழ்ந்திருந்தான். அவனுக்குச் செல்வநலமும் திருக் கோயில் காரியக் கட்டளை முதலிய அதிகார நலன்களும் நன்கு அமைந்திருந்தன. ஒரு நாள் வேளூர்க்கிழான் வெளியே சென்று வீட்டுக்குத் திரும்பினன். கொல்லையிற் கத்தரிக்காய் பறிக்கச் சென்றிருந்த கிழானுடைய மகள் அப் போது கொல்லையில் இருந்து வீட்டுக்குத் திரும்பினாள். திரும்பி வருகையில் சேலையின் தலைப்புக் கத்தரிச் செடி யொன்றில் மாட்டிக் கொண்டிழுத்தது. அப்பொழுது அவள் வேடிக்கையாகச், "சீ சேலையை விடு" என்று சொன்னாள். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த கிழான் தன்னுடைய மகள் யாரோ ஓர் ஆடவனைநோடு உரையாடியதாக எண்ணினான். எவர் என்ன சொல்லியுங் கேளாமல் தீயிற் புகுமாறு கட்டளையிட்டான். அவள் தீப்பாய்ந்த சமயத்தில், "நத்த மிருக்க நடுமனை பாழாகவும், முடையாற விளைந்தாலும் மோருக்கு நெல்லற்றுப் போகவும், மேலைத் தெருவில் அடித்த மேளம், கீழைத்தெருவிற் கேட்காமலும், போன வழிபோக மற்றவிடம் நீரற்றுப் போகவும்" என்று கூறித் தீயிற் பாய்ந் தாள். இன்றுங் கிழானுடைய மனைபெருந்திடலாக இருக் கிறது. கீழைத் தெரு ஓசை மேலைத் தெருவுக்குக் கேட்ப தில்லை. அவள் சென்ற வழியில் பறைச்சேரி யுண்டாகி அங்கு நல்லநீர் இருக்க வேளாளர் இருக்குமிடத்தில் நீரில்லை. அண்மைக் காலத்தில்தான் ஊர் சிறிது நன் னிலைக்கு வந்ததாம்.

"தாளூர் மலரான்மனைப் படைப்பைத்
தனிக்கத் தரிமுள் தகைந் திழுப்ப
கேளூர் முந்தா னையை விடுவாய்
கெடுவா யென்ற கிளி மொழியால்
வேளூர்க் கிழவன் தன்மகளை
வெந்தீப்புகுத விடுத்த கதை
வாளூர் சாப மோங்கியது
வளஞ்சேர் சோழ மண்டலமே"

[வேளூர்க் கிழான்] (சோழமண்டல சதகம்)

1177. வேனன் கதை

பல ஆண்டுகட்கு முன் கதிரவன் வழிமுறையில் தோன்றிய அரசர் குலத்தில் வேனன் என்னும் பெயருடைய ஓர் அரசன் இருந்தான். அவன் அறிவு சிறிதும் இல்லாதவன். அவன் தன்னுடைய இழிவு தங்கிய அறிவினால் பல பொல்லாத காரியங்களைச் செய்து கொண்டு திரிந்தான். முனிவர்கள் காட்டில் தவஞ் செய்து கொண்டிருத்தலை அவன் கண்டான். அவர்களைப் பிடித்துத் தன்னுடைய பல்லக்கைச் சுமக்கச் செய்தான். முனிவர்கள் வேறு வழியில்லாதபடியினால் அவனைச் சுமந்து கொண்டு திரிந்தார்கள். கடவுள் வழிபாடு முதலிய காரியங்களைச் செய்வதற்கு அவர்கட்கு நேரங் கிடைக்காமற் போய் விட்டது.

முனிவர்கள் அரசனுக்கு நல்ல மொழிகளினால் பலவகையான அறிவுரைகளைக் கூறிப் பார்த்தார்கள். அம்மூரட்டரசன் முனிவர்கள் மொழிந்ததைச் சிறிதுங் காதில் வாங்கவில்லை. தன்னுடைய அதிகாரத்தையே பெரிதாக மதித்துக் கொண்டிருந்தான். பிறகு எல்லா முனிவர்களும் ஒன்று சேர்ந்து பல வகையான வசவுரைகளை வழங்கி அம்மன்னனைக் கொன்று விட்டார்கள். அடாது செய்தவன் படாதுபடுவான் என்பது அம்மன்னனிடத்தில் உண்மையாகிவிட்டது. ஆகவே எல்லோரும் கீழான குணங்களை யகற்றி நற்குணங்களை மேற்கொள்ளவேண்டும்.

[கீழ்மையகற்று] (பாகவதம்)

1178. வைக்க வேண்டிய இடத்தில் வைத்த கதை

கம்பருடைய மகன் அம்பிகாபதிக்குத் திருமணம் நடைபெற்றது. திருமணப் பந்தல் முழுவதும் மக்கள் நிரம்பியிருந்தார்கள். இறுதியில் வந்த சடையப்ப முதலியார் ஒரு மூலையிற் போய் உட்கார்ந்திருந்தார். இதனைக் கம்பருடைய மனைவி கண்டாள். சடையப்ப முதலியார் கம்பருடைய

மனைவியைத் தங்கை முறைப் பாராட்டிப் பலவகையான சீர் வரிசைகளுஞ் செய்தவர். ஆகவே அவரைக் கம்பர் மனைவி அண்ணன் என்று முறை பாராட்டிப் பேசுவது வழக்கம். இப்பொழுது சடையப்ப முதலியார் ஒரு மூலையிற் போய் உட்கார்ந்திருப்பதைக் கண்ட அவள் மனவருத்தங் கொண்டாள். "தன்னுடைய கணவனைப் பார்த்து, "எங்களுடைய அண்ணனை இந்த இடத்திலா உட்கார வைத்தீர்கள்?" என்று கேட்டு மனவருத்தப் பட்டாள். இதனைக் கேட்ட கம்பர், "அவரை நான் வைக்கவேண்டிய இடத்தில் வைக்கிறேன்" என்று கூறினர். பிறகு தாம் பாடிய இராமாயணத்தில் சடையப்ப முதலியாரைப் பலவிடங்களில் வைத்துப் புகழ்ந்து பாராட்டினர். சடையப்பர் கம்பர் இராமாயணத்தில் பல விடங்களில் இடம் பெற்றுப் புகழ் பெற்றவரானர்.

[சடையப்பரைத் தக்க விடத்தில் வைத்தது]

1179. வையை ஆற்றை அழைத்த கதை

மதுரை மாநகரில் தடாதகைப் பிராட்டியாருக்குத் திருமணம் நடைபெற்றது. திருமணவிருந்துக்காகச் சமைக்கப்பட்ட உணவுகள் மலைபோற் குவிந்து கிடந்தன. தடாதகைப் பிராட்டி இறைவனிடம் வந்து, "உணவுகள் அதிகமாக எஞ்சியுள்ளன. அவைகளை என்ன செய்கிறது?" என்று உசாவினர். சிவபெருமான் தம்முடைய பூதப் படைகளில் இருந்த குண்டோதரனை அழைத்து, "இப்பூதத்திற்குச் சிறிது உணவிட்டனுப்புக" என்று கூறினர். குண்டோதரன் சென்று ஆயிரக்கணக்கான பேர்களுக்குச் சமைக்கப் பட்டிருந்த உணவுகளைத் தான் ஒருவனே உண்டு தீர்த்தான். மேலும் சிவபெருமானிடம் வந்து, "எனக்குப் பசியுந் தாகமும் மிகுதியாகிவிட்டன, என்னைக் காப்பாற்றியருள்க" என்று கதறினன். திருவுளமிரங்கிய சிவபெருமான் அன்னக்குழியை அழைத்ததோடு தண்ணீர் குடிப்பதற்குப் பேரியாறு ஒன்றையும் அழைத்தருளினர். அவ்வியாறே வையை என்னும் ஆறாகியது.

"பனிக்கதிர்க் குலவன் பயந்தருள் பாவையைத்
திருப்பெரு வதுவை பொருந்திய அந்நாள்
சொன்றிப் பெருமலை தின்றுநனி தொலைத்த
காருடற் சிறுநகைக் குறுந்தாட் பாரிடம்
ஆற்று தலந்த நீர்நசை அடக்க
மறிதிரைப் பெருநதி வரைவழைத் தருளிய
கூடலம் பதியுறை குணப்பெருங் கடவுள்"

[வையை அழைத்தது] (கல்லாடம்—11)

———

பிற்சேர்க்கை

1180. அடிமுடி தேடிய கதை

ஒரு காலத்தில் திருமாலுக்கும் நான்முகனுக்குந் தலைமைத் தன்மையைப்பற்றிச் சொற்போர் மூண்டது. திருமால் தாமே தலைவரென்றார். நான்முகன் தானே தலைவனென்றான். இவ்வாறு மாறுபட்ட இருவரும் வேறுபட்ட கருத்தினராய் நீண்ட நேரஞ் சொற்போர் செய்தபின் மற்போர் செய்யத் துணிந்தார்கள். இவர்களுடைய போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவர எண்ணிய சிவபெருமான் அவர்க ளிருவருக்கும் நடுவில் நெருப்பு மலையாகத் தோன்றினார். இருவருந் தமது போரை நிறுத்தினர். அம்மலையின் அடிமுடிகளைக் காண முடிவு செய்தனர். திருமால் தாம் மலையின் அடியைக் காண் பதாகக் கூறினர். நான்முகன் தாம் அம்முடியைக் காண்ப தாக உரைத்தான். திருமால் பன்றியாகி நிலத்தைத் தோண் டிக் கொண்டு சென்றார். நான்முகன் அன்னப் பறவையாகி விண்ணிற் பறந்து முடியைக் காண முயன்றான். இருவரும்

பலநாள் முயன்றுங் அடியையும் முடியையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

"முன்னொரு நாளில் முதல் தொழில் இரண்டினர்
பன்றியும் பறவையும் நின்றுரு வெடுத்துக்
கவையா வுளத்துக் காணுங் கழலும்
கல்வியில் அறிவில் காணும் முடியும்
அளவுசென் றெட்டா அளவினர் ஆகி
மண்ணும் உம்பரும் அகழ்ந்தும் பறந்தும்
அளவா நோன்மையில் நெடுநாள் வருந்திக்
கண்ணில் காணுது உளத்தினில் புணராது."

[அண்ணாமலை] (கல்லாடம்—60)

1181. அட்டகோண முனிவர் கதை

முப்பத்து நான்கு லட்சத்து ஐம்பத்தாருயிரம் ஆண்டுகள் கொண்டது கிரேதாயுகம்; பதினேழு லட்சத்து இருபத்தெண்ணுயிரம் ஆண்டுகள் கொண்டது திரேதாயுகம்; எட்டு லட்சத்து அறுபத்து நான்காயிரம் ஆண்டுகள் கொண்டது துவாபரயுகம்; நான்கு லட்சத்து முப்பத்திரண்டாயிரம் ஆண்டுகள் கொண்டது கலியுகம். ஆக யுகங்கள் நான்குக்கும் ஆண்டுகள் அறுபத்துநான்கு லட்சத்து எண்பதினுயிரமாகும். இத்தகைய நான்கு யுகங்களுங் கொண்டது நான்முகனுக்கு ஒரு நாள். இத்தகைய நாள்கள் முப்பது கொண்டது ஒரு திங்கள். இத்தகைய திங்கள் பன்னிரண்டு கொண்டது ஓராண்டு. இத்தகைய ஆண்டுகள் நூறு கொண்டது நான்முகனுக்கு வாணுள் எல்லையாகும்.

இத்தகைய ஆயுளைப் பெற்ற நான்முகன் "நாம் உலகங்களையும் அவற்றில் உள்ள உயிர்களையும் படைக்கிறோம். நமக்கு மிஞ்சிய பெருமையுடையவர்கள் இவ்வுலகத்தில் வேறு எவரும் இலர்" என்று மிகுந்த ஆணவங்கொண்டான். நான்முகனுடைய ஆணவப் போக்கைத் திருமால் உணர்ந்தார்.

அதனைப் போக்கவேண்டுமென்று எண்ணினர். நான்முகனை அழைத்துக்கொண்டு உரோமமுனி என்னும் பெயரையுடைய முனிவர் ஒருவர் இடத்திற்குச் சென்றார். அவரைப் பார்த்து, "உமக்கு வாணாள் எவ்வளவு?" என்று கேட்டார். அதற்கு அம்முனிவர் "என்னுடைய உடலில் மூன்றரைக் கோடி மயிர்கள் இருக்கின்றன. நான்முகன் ஒருவன் இறந்தால் என்னுடைய உடல் மயிரில் ஒன்று உதிரும். இவ்வாறே மூன்றரைக்கோடி மயிர்களும் உதிர்ந்து போனால் அப்பொழுது எனக்கு உடலழிவு (சாவு) உண்டாகும்" என்று கூறினர்.

பிறகு திருமால் அந்த உரோம முனிவரையும் அழைத்துக் கொண்டு அட்டகோண முனிவர் என்னும் பெயரையுடைய முனிவரிடத்திற்குச் சென்றார். அம்முனிவருடைய உடலில் எட்டுக் கோணல்கள் பொருந்தியிருந்தபடியால் அவருக்கு அட்டகோண முனிவர் என்று பெயருண்டாகியிருந்தது. அட்டகோண முனிவர் கண்டுவமுனி என்பவருடைய மகன். மிகுவாணாளும் பெருமையும் பெற்றவர். சிறிய இலைக் குடில் ஒன்று கட்டிக்கொண்டு அக்குடிலுக்குள் பாதி உடலும் வெளியில் பாதி உடலுமாக அமர்ந்திருந்தார். திருமால் அவரைப் பார்த்து, "உமக்கு வாணாள் எவ்வளவு?" என்று உசாவினர். அதற்கு அவர், "இதோ வந்திருக்கிற உரோம முனிவர் இறந்தால் என்னுடைய உடலிற் பொருந்திய எட்டுக் கோணல்களில் ஒரு கோணல் நிமிரும். இவர் எட்டுத்தரம் பிறந்து இவ்வாறே நீண்ட நாள் வாழ்ந்து இறப்பாரேல் என்னுடைய எட்டுக் கோணல்களும் நிமிர்ந்துவிடும். அப்பொழுது நானும் இறந்து விடுவேன்" என்று கூறினர். திருமால் முனிவரைப்பார்த்து, "நீண்ட வாணாள் பெற்றுள்ள தாங்கள் பெரிய மாடமாளிகை கட்டிக்கொண்டு அதில் தங்கியிருக்கக் கூடாதா? இத்தகைய சிறிய குடிசையில் தங்கியிருக்கிறீர்களே?" என்று கேட்டார். அதற்கு அட்டகோண முனிவர் "இவ்வுலகம் நிலையற்றதாயிற்றே நான் பெற்றிருக்கிற வாணாளும் ஒரு வாணாளா? அழியுந் தன்மையுடைய உடலையும் உலகத்தையும் ஒரு பொருளாக மதிக்கலாமா? இவைகளால் யாது பயன்?" என்று கேட்டார். இதனைக் கேட்ட நான்முகன் தன்னுடைய ஆணவத்தை யொழித்தான்.

"அட்டகோ ணத்தனுடல் அத்திரமென் றுன்தீசைகள்
எட்டும் பரவும் இரங்கேசா—மட்டினுல்

நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை''

[உலக நிலையாமை] (இரங்கேச வெண்பா)

1182. அத்திரி முனிவர் கண்ணில் திங்கள் தோன்றிய கதை

அத்திரி முனிவரை நான்முகனின் கூறு என்பர். இவர் ஐம்பொறிகளையும் அடக்கி மூவாயிரம் ஆண்டுகள் அருந்தவம் புரிந்தார். ஒளிவடிவினராகிய அவருடைய கண்களில் இருந்து பத்துத் திக்குகளினும் பேரொளி வீசிக்கொண்டு நீர் பெருகியது. அக்கருப்பத்தைத் திக்கு தேவிகள் பதின்மரும் தாங்கத் தொடங்கினர்கள். பிறகு அவர்களால் தாங்கமுடிய வில்லை. திங்கள் வடிவமான அக்கருப்பத்தோடு நிலத்தில் வீழ்ந்தார்கள். பிறகு நான்முகன் அத்திங்களை மறைவடி வான தேரின்மீது ஏற்றினன். எழு முனிவர்கள் முதலான வர்கள் மறை மொழிகளைக்கொண்டு போற்றினர்கள். அதனல் திங்கள் மிகுந்த பேரொளி பெற்று உலகிற்கு ஒளி யைத் தருபவ னுயினன்.

''அத்திரிப் பெயர் அந்தணன் அம்பகத்தனிலும்
... ...பிறந்தொளி சிறந்தோன்''

[திங்கள் பிறப்பு] (பாரதம்)

1183. அப்பைய தீட்சிதர் கதை

அப்பைய தீட்சிதர் என்பவர் தொண்டைவள நாட்டிலே காஞ்சி நகரத்திற்கு அண்மையில் உள்ள அடையகுலம் என்னும் ஊரில் அந்தணர் குலத்தில் தோன்றினர். இவ ருடைய காலம் முந்நூறு ஆண்டுகட்கு முன்னர் என்ப.

இவர் வடமொழியிற் சிறந்த புலமையுடையவர். இருநூற் றைம்பதுக்கு மேற்பட்ட நூல்களை இவர் இயற்றியுள்ளார். சிவபெருமானுடைய தலைமைத் தன்மையை நிலைநாட்டியவர் களில் இவர் தலைமையானவர்.

இவர் காலத்தில் காஞ்சிமாநகரில் வைணவ வேதியர் குலத்தில் தாதாசாரியர் என்பவர் ஒருவர் இருந்தார். இவரும் நல்ல புலமையுடையவர். இவர் அப்பையதீட்சிதரிடம் பொருமை கொண்டார். காஞ்சி நகரை அந்நாளில் ஆண்டு கொண்டிருந்த அரசன் இவருக்கு நண்பகை இருந்தான். இவர் அப்பைய தீட்சிதரைச் சொற்போருக் கழைத்து அரசன் முன் சொற்போரிட்டார். அதில் அவரோடு பேசமுடியாமல் தோல்வியடைந்தார். இதனாலும் அப்பைய தீட்சிதரிடத்தில் இவருக்குப் பொருமை மிகுதியாயிற்று. அரசன்முன் அவரை இழிவுபடுத்தவேண்டு மென்று எண்ணினார். தீட்சிதருக்கு நண்பகலில் வயிற்றுவலி வந்து அடங்குவது வழக்கமென் பதையுணர்ந்த இவர் அச்சமயத்தில் அரசன் முன்பு தீட் சிதரை வரவழைக்கச் செய்தார்.

வயிற்றுவலி வருஞ் சமயத்தில் அரசனுடைய அவைக்கு வந்த அப்பையதீட்சிதர் தம்முடைய மேலாடையை எடுத்து எதிரே வைத்தார். வயிற்றுவலி அவ்வாடையை முடக்கி யலைத்தது. இதனைக் கண்ட அரசன், ''இஃதென்னவென்று உசாவினான். தீட்சிதர், ''இது பழவினையின் பயன்; ஆகவே இதனைப் போக்கும் வகை தேடிக்கொள்ளாமல் இதனையான் நுகர்கின்றேன். அப்படிச் செய்யாதொழியின் பல பிறவிகட்குத் தொடர்ந்து வருத்தும்'' என்று கூறினார். அரசன் அப்பைய தீட்சிதர் பால் அன்பும் அச்சமும் கொண்டு நன்கு மதித்துப் போற்றினான். இவரையே நண்பராகக் கொண்டு தாதாசாரி யாருடைய நட்பை யகற்றிவிட்டான். பொருமையின் பிடியி லகப்பட்டுழன்ற தாதாசாரியாருக்கு அரசனால் உண்டாகிய நன்மைகள் யாவும் ஒழிந்தன. பொருமை தீமையை உண்டு செய்யுமென்பதனை அனைவரும் தாதாசாரியாரிடம் உணர்ந்து கொண்டனர்.

[பொருமை]

(சிறப்புப் பெயரகராதி)

1184. அரவின் முதுகைச் சாடிய கதை

கம்சன் கண்ணபிராஜைக் கொல்லும் பொருட்டு அகாசுரன் என்பவஜை அனுப்பிஞன். அவ்வசுரன் கண்ணன் ஆநிரைகஜை மேய்த்து வரும் வழியில் ஒரு பெரிய மலைப் பாம்பாக வந்து வாயை விரித்துக்கொண்டு கிடந்தான். இடைப் பிள்ளைகள் அதஜை மலைக் குகையென்று எண்ணினர்கள். ஆக்களோடுங் கன்றுகளோடும் அதனுள்ளே சென்றார்கள். கண்ணபிரான் யாதுங் கூருமல் தாமும் உள்ளே சென்ருர். அங்குப் பெரிய வடிவத்தையெடுத்துக் கொண்டு பாம்பின் முதுகைப் பிளந்து அதஜைக் கொன்ருர். ஆயர்களையும் ஆக்களையும் வெளிப்படுத்தினர்.

"சாடிஞன் அரவின் முதுகையும்"

[கண்ணன் ஆடல்] (பாரதம்)

1185. அருச்சுனன் பேடியான கதை

அருச்சுனன் தவஞ்செய்து இறைவனிடமிருந்து பாசுபதக் கணையைப் பெற்ருன். இதன் பிறகு இந்திரன் அருச்சுனனிடந் தோன்றி அருச்சுனஜைத் தன்னுடைய உலகிற்கு அழைத்துக்கொண்டு சென்ருன். தன்னுடைய பேரவையில் வைத்துப் பாராட்டிஞன். ஊர்வசியைக் கூத்தாடச் செய்தான். அருச்சுனன் அக்கூத்திஜைப் புகழ்ந்து பாராட்டிஞன்.

கதிவரன் மறைந்த பிறகு இந்திரன் அருச்சுனஜை ஒரு மாளிகையில் இருக்கச் செய்தான். அருச்சுனன்பால் மோகங்கொண்ட ஊர்வசியானவள் அவனிருந்த மாளிகைக்குச் சென்ருள். அவள் தன்னுடைய தந்தையாகிய இந்திரனுக்கு உரியவளாதலின் தனக்குத் தாய் முறையாக வேண்டுமென்று எண்ணிய அருச்சுனன் அவளடிகளில் வீழ்ந்தான். அதனுல் ஊர்வசி சினங்கொண்டாள். "நான் உன்னுடைய தோள்களைத் தழுவுவதற்கு வந்தேன். நீயோ

என்னை இவ்வாறு பழித்தாய், ஆகவே நீ பேடியாகுக'' என்று ஊர்வசி அருச்சுனனுக்கு வசவுரை வழங்கினாள். உடனே பேடி வடிவம் அமைந்தது.

அருச்சுனன் ஓர் ஆடையினால் தன்னுடைய உடலை மூடிக்கொண்டிருந்தான். மறுநாள் பொழுது விடிந்தது. இந்திரன் ''அருச்சுனனை அழைத்துக்கொண்டு வருவாயாக'' என்று கூறி ஒரு கந்தருவனை அனுப்பினான். அவன் வந்து பார்த்துவிட்டுத் திரும்பிச் சென்று அருச்சுனனுக்கு நிகழ்ந்ததை இந்திரனிடங் கூறினான். இந்திரன் அருச்சுனனை வந்து பார்த்தான். பிறகு ஊர்வசியிடஞ் சென்று, ''அருச்சுனன் விரும்பும் போது மட்டும் அவனுக்குப் பேடியுருவம் அமையுமாறு அருள்புரியவேண்டு''மென்று வேண்டிக் கொண்டான். அவளும், ''அவ்வாறே ஆகுக'' என்று உடன் பட்டாள். இதனால் அருச்சுனன் எண்ணும்பொழுது மட்டும் அவனுக்குப் பேடி வடிவம் அமைவதாயிற்று. சிறந்த அறிவினையுடையவர்கள் பொதுமாதர்களின் இழிந்த இன்ப நலத்தை விரும்பமாட்டார்கள் என்பது அருச்சுனனிடம் அன்று நன்கு விளங்கியது.

(பாரதம்)

''வேண்டும் உருப்பசியைப் பார்த்தன் வெறுத்தானே
தூண்டு மறைப்பரியாய் சோமேசா—யாண்டும்
பொது நலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின்
மாண்ட அறிவி னவர்''

[வரைவின் மகளிர்] (சோமேசர் முதுமொழி வெண்பா)

1186. அறம் வளர்த்த கதை

உமையவள் சிவபெருமானுடைய உடன் பாட்டைப் பெற்றுக்கொண்டு காஞ்சி நகரை நோக்கி வந்தாள். இடையிலே மகத நாட்டில் ஒன்பதாண்டுகள் மழையில்லாமையால் அந்நாட்டில் வற்கடம் மிகுதியாகி உயிர்த் தொகைகளை வருத்தியது. நல்லவர்களும் பொல்லாதவர்களும் மிகுந்த

அல்லலுக் குள்ளாயினர். மகத நாட்டு மக்களின் அல்லலைக் கண்ட உமையவள் அதனைப் போக்க எண்ணினாள். அந் நாட்டில் அமர்ந்து அறச்சாலையொன்றை அமைத்தாள். முப் பத்திரண்டு அறங்களையும் வளர்த்துக்கொண்டிருந்தாள். வறுமையில் வாடிய மகத நாட்டு மன்னன் அம்பிகையின் அறச்சாலையில் உள்ள பொருள்களைக் கவர்ந்து கொள்ளுதற்கு எண்ணினான். இதையுணர்ந்த இறைவி அவ்விடத்தை விட்டு நீங்கிவிட்டாள்.

"மகதநா டென்னக் காஞ்சி
வைப்பினுங் கடைஞ ரெய்தி
இகலற வளர்க்கு மெண்ணுன்
கறத்தினுக் கிடர்செய் யாமைத்
தகையணங் குமையாள் வைத்த
தடைநிகர் மதிற்சீர் முற்றும்"

[அறம்வளர்த் தல்] (காஞ்சிப்புராணம்)

1187. ஆமூர் முதலியார் கதை

காளமேகப் புலவர் வாழ்ந்திருந்த காலத்தில் தொண்டை வளநாட்டில் ஆமூர் என்னும் ஊரில் முதலியார் ஒருவர் இருந் தார். அவருடைய பெயர் களப்பாளர். இவர் கொடை நலத்திற் சிறந்து விளங்கினர். இவருடைய கொடை நலந் திக்கெலாஞ் சென்று புகழ் விளைத்து நின்றது. இம்முதலியா ரைப் பார்க்க எண்ணிய காளமேகப்புலவர். தொண்டை வளநாட்டிற்கு வந்தபொழுது ஆமூர்க்குப் போய் முதலியா ரைப் பார்த்தார். அவர் மீது ஒரு வெண்பாவைப் பாடத் தொடங்கினர்.

வெண்பாப் பாதி கூட முடியவில்லை. அதற்குள் ஆமூர் முதலியார் காளமேகப் புலவருக்கு நன்கொடை வழங்கத் தொடங்கிக் காளமேகப் புலவர் வெறுக்குமாறு ஆடையணி கலன் பொன் முதலியவைகளை வழங்கினர் இதனைப் பார்த்த காளமேகப்புலவர்;

"உள்ளங்கால் வெள்ளெலும்பு தோன்ற ஒருகோடி
வெள்ளங்கா லந்திரிந்து விட்டோமே—தெள்ளுதமிழ்
ஆமூர் முதலி அரசர்பிரான் இங்கிருக்கப்
போமூர் அறியாமற் போய்"

என்னும் வெண்பாவை இயற்றினர்.

"மோதிச் சிவந்த கவிகாள மேகம் மொழிந்தவெண்பா
பாதிக்கு முந்திப் பரிசளித் தோன்களப் பாளனெனும்
ஆதிக்கம் பெற்றவன் ஆமூர் முதலி அரசிருப்பாம்
மாதிக் கெலாம்புகல் கின்றதொல் சீர்த்தொண்ட
[மண்டலமே

[களப்பாளன்] (தொண்டைமண்டல சதகம்)

1188. ஆமையழிந்த கதை

இரண்டு அன்னப் பறவைகளும் ஓர் ஆமையும் மிகுந்த நட்போடு ஒரு குளத்தில் வாழ்ந்து கொண்டிருந்தன. மழை பெய்யாதபடியினால் குளம் வற்றத் தொடங்கியது. அன்னங்கள் வேறு இடத்திற்குப் போய் விடுவது நல்லது என்று முடிவு செய்தன. இச்செய்தியைத் தங்களுடைய நண்பனாகிய ஆமையிடத்தில் கூறின. ஆமை அன்னங்களைப் பார்த்து, "நீங்கள் பறந்து போய்விடுவீர்கள். நான் வேறோர் இடத்திற்கு எவ்வாறு செல்வது?" என்று உசாவியது.

அன்னங்கள் ஆமையைப் பார்த்து, "நீ எங்களுடைய மொழியிலே நம்பிக்கை வைத்து உறுதியாக இருப்பாயானால் நாங்கள் உன்னையும் வேறு இடத்திற்குக் கொண்டு போவோம். போகும் வழியில் நீ வாயைத் திறத்தல் கூடாது. வாயைத் திறப்பாயானால் மாண்டு போக நேரிடும்" என்று கூறின.

பிறகு ஒரு கழியைக் கொண்டு வந்து, ஆமையைப், பார்த்து, "இக்கழியைப் பல்லினாலே பலமாகக் கடித்துப் பிடித்துக் கொள். எக்காரணத்தைக் கொண்டும் விட்டு

விடாதே. நாங்கள் இருவரும் இருபுறத்திலும் பற்றிக் கொண்டு விண் வழியாகப் பறந்து செல்லுகிறோம்,, என்று கூறின. ஆமையைக் கழியைப் பிடித்துக்கொள்ளச் செய்து தாங்கள் கழியைப் பற்றிக் கொண்டுபறந்தன.

அன்னப் பறவைகள் ஓர் ஆமையைத் தூக்கிச் செல்லும் புதுமையைய ஓர் ஊரில் உள்ளமக்கள் பார்த்து மிகுந்த வியப்படைந்தார்கள்.பல பேர் கூட்டங் கூடி நகைத்தார்கள். '' இஃதென்ன இரண்டு பறவைகள் ஒரு கழியினுல் ஆமையைத் தூக்கிக் கொண்டு செல்லுகின்றன. '' என்று பேரிரைச் சலிட்டுப் பேசினர்கள். பேரிரைச்சலைக் கேட்ட ஆமை அந்த இரைச்சலுக்குக் காரணத்தைக் கேட்க விரும்பி வாயைத் திறந்தது அவ்வளவில் அது கழியினின்றும் விடுபட்டு நிலத்தில் விழுந்தது. உடனே அங்கிருந்த புலாலுண்பவர்கள் அதைக் கொன்று தின்றார்கள். தனக்கு நன்மை செய்கிறவர்களுடைய பேச்சைக் கேட்காமற் போனுல் ஆமைக்கு நேரிட்ட கதி மனிதனுக்கு நேரிடக் கூடும்.

(பஞ்சதந்திரம்)

'' கொடியைஇரண் டோதிமங்கள் கௌவிப்பறக்க
நடுக்கூர்மங் குலவிச் செல்கால்
நொடியிலொரு செய்திசொல வாய்திறந்தா
மையும்விழுந்து நொறுங்கிற் றன்றே
வடிவுளதந் திரக்கதையும் உண்டுசெயங்
கொண்டார்வாழ் வளஞ்சேர் நாட்டில்
நெடுங்கிணறும் வாயாலே தூருமென்றே
சொல்லிடுவர் நிசங்கண் டீரே ''

[நல்லுரையை மறவாதிருத்தல்] (செயங்கொண்டார் சதகம்)

1189. ஆனைமுகக் கடவுள் தோன்றிய கதை

முன்னாளில் யானைமுகத்தையுடைய அசுரன் ஒருவன் பிறந்தான். அவன் சிவபெருமானை நோக்கிப் பெருந் தவஞ் செய்து மக்களாலும் தேவர்களாலும் விலங்குகளாலும் மற்ற வர்களாலும் இறவாதிருக்கும்படியான வரத்தைப் பெற்றான்.

அதனால் அளவுகடந்த ஆணவங் கொண்டு நான்முகன் முத லிய தேவர்களுக்கெல்லாம் அளவற்ற துன்பங்களைச் செய்து கொண்டு திரிந்தான். அதனைப் பொறுத தேவர்கள் திருக் கைலாயத்திற்குப் போய் இறைவனைக் கண்டு வணங்கித் தம்முடைய குறைகளை முறையிட்டுக் கொண்டார்கள். சிவபெருமான் தேவர்களைப் பார்த்து, " அவன் என்னை நோக்கி அரிய தவஞ் செய்து தேவர்களாலும் மனிதர்களா லும் அசுரர்களாலும் விலங்குகளாலும் இறவாதிருக்க வரம் பெற்றிருக்கின்றனன். ஆனால், தனது வடிவமாகி வருவோ னால் இறவாதிருக்க வரம் கேட்கவில்லை. நாம் மாறுபட்ட திருமேனியாக யானைமுகத்தோடு சென்று அவனை அடக்கு வோம் " என்று கூறி அவர்களுக்கு விடை கொடுத்து அனுப் பினர்.

பிறகு சிவபெருமான் பார்வதி தேவியாரோடு ஓவியச் சாலை ஒன்றுக்குச் சென்றார். அங்கு விசுவகருமனால் எழுதப் பட்ட மந்திரவடிவமாகிய ஓவியங்கள் பல இருந்தன. இறைவன் அவைகளைப் பார்வதி தேவியாருக்குக் காட்டிப், " பெண்ணை முதலில் உள்ள பிரணவாகாரமாகிய இரண்டு யானைகளில் முன்னால் உள்ளது மும்மூர்த்திகளையுந் தந்தது. அஃது என்னுடைய வடிவமாகும். அடுத்தது சக்திகள் மூவரையும் பெற்றது. அஃது உன்னுடைய வடிவமாகும் ஆதலின் நாம் அப்பிரணவ ஓவியங்களின் வடிவமாகுதும் " என்று திருவுளஞ் செய்தருளினர். உமாதேவியாரும் அக் கருத்துக்கு இசைந் தருளினர்.

அப்பொழுது இறைவன் ஒரு திருவிளையாடலைச் செய்தரு ளினர். அதனால் அப்பிரணவ வடிவத்தில் இருந்து ஆனை முகக் கடவுள் தோன்றியருளினர். சிவபெருமான் ஆனை முகக் கடவுளைக் கைலைமலைக்குக் கொண்டு சென்று முடிசூட் டினர். பிறகு ஆனைமுகக் கடவுளைப் பார்த்து, " உன்னை வணங்கி உனது அருளைக் கொண்டு செய்யுங் காரியங்களை நிறைவேற்று, உன்னை வணங்கி அருள் பெறுது செய்யும் காரி யங்களுக்கு இடையூறு செய். உனக்கு விக்கின விநாயகர் என்று பெயர் கொடுத்தோம் " என்று திருவாய் மலர்ந்தருளி னர். பிறகு தேவர்களைப் பார்த்து, " இவன் நம்முடைய மூத்த பிள்ளை. எம்மைப் போல் நினைத்து இவனைப் போற்று வீர்களாக " என்று திருவாய் மலர்ந்தருளினர். பிறகு

தேவர்கள் ஆனைமுகக் கடவுளைப் போற்றி வழிபட்டார்கள். ஆனைமுகக் கடவுள் கயமுகாசுரனோடு போரிட்டார். அவன் எத்தகைய படைக்கலங்களாலும் சாகவில்லை. ஆகவே தம் முடைய கொம்பை ஒடித்து அவன்மீது வீசினார். அவன் பெருச்சாளி வடிவத்தை யடைந்தான். அப் பெருச்சாளியினை ஆனைமுகக் கடவுள் தம்முடைய ஊர்தியாக்கிக் கொண்டார்.

"தன்திருக் கோட்டில் ஒன்று தடக்கையின்
[முறித்துக் கொண்டான்"

"தடக்கையில் ஏந்துங் கோட்டைத் தந்தியாம்
[அவுணன் மீது
விடுத்தலும் அனையன் மார்பை வெய்தெனக் கீண்டு
[போகி
உடற்படி மிசையே வீழ்த்தி ஒல்லையில் ஓடித்தெண்ணீர்க்
கடற்படிந் தமலன் மைந்தன் கரத்தில் வந்திருந்த
[தன்றே"

[ஆனைமுகக் கடவுள் தோன்றியது]

1190. இந்திரன் தீவினையைப் போக்கிய கதை

தெய்வமங்கை யொருத்தி வித்தியாதரன் ஒருவனால் தன னுடைய பந்தை யிழந்து வருந்திக் கொண்டிருந்தாள். இந் திரன் அவளுடைய வருத்தத்தை உணர்ந்தான். தான் அப் பந்தைத் தேடிக்கொண்டு சென்றான். அடிக்குமையைப் பிடித்துக்கொண்டு வெள்ளிமலையை அடைந்தான். சிவ பெருமான் மாறுகோலம் பூண்டு உமாதேவியாரோடு சூதாடு பவர்போல நடித்துக் கொண்டிருந்தார். சிவபெருமா னுடைய பக்கத்தில் தெய்வமங்கை யிழந்துபோன பந்து இருந்தது.

மாறுகோலச் சிவபெருமானைத் தேவேந்திரன் உணர்ந்து கொள்ளவில்லை. "கள்ளனே! இப்பந்தை ஏன் கவர்ந்து கொண்டு வந்தாய். அதனை உடனே இங்கு கொடுத்து,

விடு'' என்று மிகுந்த சினத்துடன் கேட்டான். மாறுகோலச் சிவபெருமான் யாதும் மறுமொழி உரையாதிருந்தார். இந்திரனுக்குச் சினம் உண்டாகியது. வச்சிரப்படையினால் சிவபெருமானைத் தாக்கச் சென்றான். இந்திரனுடைய கை அசையாமல் நின்று விட்டது. சிவபெருமான் இந்திரனைச் சிறையில் அடைக்கும்படி செய்தார். தேவர்கள் தங்களுடைய அரசனை எங்கும் தேடினார்கள். பிறகு சிவபெருமானால் சிறைப்பட்டிருத்தலை உணர்ந்தார்கள். தேவகுருவைக் கொண்டு இந்திரனுடைய சிறையை நீக்கினார்கள். பிறகு இந்திரன் சிவபெருமானுடைய கட்டளைப்படி திருக்கழுக்குன்றத்தை அடைந்து இறைவனைப் போற்றி வழிபட்டு அவரைத் தாக்கச் சென்ற குற்றத்திலிருந்து நீங்கினான்.

''அசனித் துவசத்தோன் அன்றெருத்தி பந்தால்
வசனித்த தீவினையை மாய்த்தோன்.''

(திருக்கழுக்குன்றத்து உலா)

[இந்திரன் சிவபெருமானைத் தாக்கச் சென்றது]

(திருக்கழுக்குன்றப் புராணம்)

1191. இலக்கணங் காட்டிய கதை

காஞ்சீபுரத்தில் காளத்தியப்ப சிவாசாரியர் என்பவர் ஒருவர் முன்னாளில் இருந்தார். அவருக்குக் கச்சியப்ப சிவாசாரியார் என்பவர் புதல்வராகத் தோன்றிக் கல்வி கற்றுச் சிறப்படைந்து குமரகோட்டத்தில் எழுந்தருளிய முருகக் கடவுளை மெய்யன்போடு பூசை செய்து கொண்டிருந்தார்.

ஒருநாள் முருகக் கடவுள் கச்சியப்ப சிவாசாரியருடைய கனவிலே தோன்றி. ''அன்பனே! நீ நமது வரலாற்றைக் கந்தபுராணம் என்னும் பெயரோடு பெருநூலாகத் தமிழிலே பாடுவாயாக'' என்று கட்டளையிட்டுத், ''திகட சக்கரச் செம்முகமைந்துளான்'' என்று முதலடியும் எடுத்துக் கொடுத்து மறைந்தருளினார். பிறகு கச்சியப்ப சிவாசாரியர் கந்த

புராணத்தைப் பாடி முடித்து நன்னுள் ஒன்றிலே அரங்கேற்றம் செய்யத் தொடங்கினர்.

திகட சக்கரச் செம்முக மைந்துளான் என்னும் அடியைத் திகழ் தசக்கரம் என்று பிரித்துப் பொருள் விரிக்கத் தொடங்கினர். அவையில் இருந்த புலவர்களில் ஒருவர் எழுந்து, "திகட சக்கரம்" என்பது, "திகழ் தசக்கரம்" என்று பிரிவதற்கு விதி தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களில் இல்லை. அவ்வாறாக இது பொருந்துமாறு எப்படி?" என்று மறுக்கத் தொடங்கினர். கச்சியப்பர், "இது முருகக் கடவுள் எடுத்துக் கொடுத்த அடி. அவ்வாறாக இலக்கண மின்மைக்கு நான் யாது செய்வது?" என்றார். மறுப்புரையாளரோ, "முருகக் கடவுள் அடி எடுத்துக் கொடுத்தது எங்கட்குத் தெரியாது. அஃது உங்களுக்குள் நிகழ்ந்த புதுமையான மறைவு நிகழ்ச்சி. அதனை நாங்கள் நம்புவதெப்படி?" என்றார். கச்சியப்பர் அவ்வளவோடு அரங்கேற்றத்தை நிறுத்தி விட்டார்.

இரவில் கச்சியப்பர் முருகக் கடவுளை வேண்டிக் கொண்டார். முருகக் கடவுள் கனவில் தோன்றி, "நாளைக்கு இலக்கணங் காட்டப்படும்" என்று உரைத்து மறைந்தார். மறு நாள் அவை கூடியது. முருகக் கடவுள் மொழிந்ததைக் கச்சியப்பர் அவையோருக் கறிவித்தார். அப்பொழுது ஒரு புலவர் வீரசோழியம் என்னும் இலக்கண நூலோடு அங்கு வந்தார். முதனூலில் மறுப்புக் கூறிய புலவர் விரைந்து சென்று அந்நூலை வாங்கிப் பார்த்து, "திகட சக்கரம்" என்பதைத் திகழ் தசக்கரம் என்று பிரித்தற்கு விதி யிருத்தலைக் கண்டார். அவையோருக்குங் கூறினர். இலக்கண நூல் கொண்டுவந்த புலவர் அதனைக் கச்சியப்பரிடம் கொடுத்து விட்டு மறைந்தருளினர். இது முருகக் கடவுளின் திருவிளையாடல் என்று அனைவரும் அறிந்து மகிழ்ந்தனர்.

[இலக்கணம் காட்டியது] (கந்த புராணம்)

1192. இறைவன் கோவில் கட்டிய கதை

பாண்டிய மன்னனுகிப் பாண்டிய நாட்டின் அரசாட்சியை மேற்கொண்டிருந்த பரமன் மக்களுக்குத் தெய்வ வழிபாட்டின் இன்றியமையாமையை அறிவுறுத்த எண்ணினுர். மதுரையின் நாப்பண் திருக்கோயில் ஒன்றினை அமைத்துத் தம்மைத்தாமே வழிபாடு செய்யும் தன்மையை மேற்கொண்டார். இந்நாளில் மதுரைமா நகரில் விளங்குந் திருக்கோயில் மலியத்துவச பாண்டியனுக்கு மருகனுய் வந்த கடவுள் அமைத்த தென்பர்.

"முலைமூன் றணிந்த சிலைநுதல் திருவினை
அருமறை விதிக்கத் திருமணம் புணர்ந்து
மதிக்குலம் வாய்த்த மன்னவன் ஆகி
மேதினி புரக்கும் விதியுடை நன்னுள்
நடுஹூர் நகர்செய்து அடுபவம் துடைக்கும்
அருட்குறி நிறுவி அருச்சனை செய்த
தேவ நாயகன் கூடல்வாழ் இறைவன்."

[மதுரைக் கோயில்] (கல்லாடம்)

1193. இறைவன் நூலியற்றிய கதை

ஒரு காலத்தில் தமிழ் நாட்டில் அகப்பொருள் இலக்கண நூல் வேண்டிய அளவு இல்லாமற் போய்விட்டது. பாண்டியனும் சங்கப் புலவர்களும் அதனைக் குறித்து உள்ளம் வருந்தினர்கள். அக்காலத்தில் சிவபெருமான் இறையனர் என்னும் பெயரோடு எழுந்தருளி அறுபது நூற்பாக்களில் இறையனர் களவியல் என்னும் அகப்பொருள் இலக்கண நூலை இயற்றியருளினர். அந்நூலைக் கண்டு சங்கப் புலவரும் பிறரும் மகிழ்ந்தனர். பிறகு அந்நூலுக்கு நக்கீரனர் உரையியற்றினர். இதனுல் அகப்பொருள் இலக்கணம் இல்லாத குறை நீங்கியது.

"உலகியல் நிறுத்தும் பொருள்மர பொடுங்க
மாறனும் புலவரும் மயங்குறு காலை

முந்துறும் பெருமறை முனீத்தருள் வாக்கால்
"அன்பினந் திணை"யென் றறுபது சூத்திரம்
கடலமு தெடுத்துக் கரையில்வைத் ததுபோல்
பரப்பின் தமிழ்ச்சுவை திரட்டிமற் றவர்க்குத்
தெளிதரக் கொடுத்த தென்தமிழ்க் கடவுள் "

(கல்லாடம்)

[அகப்பொருளிலக்கணம்]

1194. எரியைக் குளிரவைத்த கதை

இராமபிரான் கட்டளைப்படி அனுமான் சீதையைத் தேடிக்கொண்டு சென்றான். இலங்கையிற் கண்டான். தான் தேடிக்கொண்டு வந்த செய்தியைச் சீதாபிராட்டியிடங் கூறினான். பிறகு இலங்கையைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு திரிந்தான். அரக்கர்கள் அநுமானைக் கண்டார்கள். பிடித்துக் கொண்டுபோய் வாலில் துணிகளைச் சுற்றித் தீயை வைத்து எரியச் செய்தார்கள். பிறகு அவனைக் கயிறுகட்டித் தெருவில் இழுத்துக்கொண்டு சென்றார்கள். இச் செய்தியைச் சீதா பிராட்டி உணர்ந்தாள். அநுமானைத் தீச்சுடாதிருக்கவேண்டு மென்று தீக்கடவுளை வேண்டினாள். கற்புமிக்க கனங்குழை யாகிய சீதாபிராட்டியின் வேண்டுதலையறிந்த தீக்கடவுள் அநுமானுக்கு வெப்பத்தைச் செய்யாமல் குளிர்ச்சியைச் செய் தார். இச்செய்தியை உணர்ந்தவர்கள் சீதாபிராட்டியைப் பாராட்டினார்கள்.

"ஒக்கும் எரிகுளிர வைத்தாள் ஒருத்தி"

[தீயைக் குளிரவைத்தது] (தண்டலையார் சதகம்)

1195. ஏடு எதிரேறிய கதை

மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் வேண்டிக் கொண்டதற்கிணங்கிச் சம்பந்தர் மதுரையை அடைந்தார்.

சமணர்களோடு இகல்கொண்டு அவர்கூேத் தோற்கடிப் பதற்காகப் பாண்டியனுடைய காய்ச்சலேத் தீர்த்தார். தேவாரப் பதிகம் எழுதிய ஏட்டை வையை ஆற்றில் விட்டு அவ்வேடு எதிரேறிச் செல்லுமாறு செய்தார். சமணர்கள் விட்ட ஏடு ஆற்றின் ஓட்டத்தோடு கடலே நோக்கிச் சென்றுவிடச் சம் பந்தர் விட்ட ஏடு எதிரேறி ஓடியது. ஓரிடத்தில் அவ்வேடு நிற்குமாறு பதிகம் பாடினர். அவ்வேடு நின்ற இடம் திரு வேடகம் என்னும் பெயர் பெற்றது. பிறகு அந்த இடத்தில் திருக்கோயில் முதலியன ஏற்பட்டன.

(பெரிய புராணம்)

"செய்கை தவத்த சமண்குண்
டரையவர் சென்றுசெய்த
துய்யற்கு மங்கைக் கரசி
குலச்சிறை உண்மகிழ்ந்த
சைவத்தை ஓங்கச்செய் சம்பந்தர்
ஏட்டைத்தண் ணுற்றெதிரே
வையைக்கு ளேயோடச் செய்தது
பாண்டியன் மண்டலமே"

[ஏடுஎதிரேறியது]

(பாண்டிமண்டல சதகம்)

1196. ஐயமிட்டுண்ட அரசன் கதை

முன்னளில் திங்கட் குலத்தில் ஓர் அரசன் இருந்தான். அவன் "உடல் நிலேயற்றது; அறம் ஒன்றுதான் நிலேபெற்றது; நாம் அதனே நன்ருகச் செய்ய வேண்டும்" என்று முடிவு செய் தான். தன்னே விரும்பி வந்த இரவலர்கட்கு இல்லேயென் ருமல் எல்லாவற்றையும் விருப்பத்தோடு கொடுத்தான். பிறகு தான் காட்டிற்குச் சென்ருன். அங்கு நாற்பத்தெட்டு நாட்கள் வரையில் பட்டினி கிடந்து ஒரு நோன்பை நிறை வேற்றினன். பிறகு உணவு கொள்ளத் தொடங்கினன்.

அப்பொழுது ஓர் இரவலன் வந்து, "ஐயா! மிகவும் பசிக்கின்றது. சிறிது உணவு கொடுங்கள்" என்று கேட்டான். அரசன் தன்னுடைய உணவிற் பாதியைக் கொடுத்தான். பிறகு மற்றொருவன் வந்து பசி என்று இரந்தான். அவனுக்கும் இருந்த உணவில் அரசன் பாதியைக் கொடுத்தான். பிறகு இளைத்த நாய் ஒன்று பசியால் மெலிந்து வந்து வாலைக் குழைத்துக்கொண்டு நின்றது. அரசன் எஞ்சிய உணவை அதற்கு வைத்தான். தான் களிப்புடன் தண்ணீரைப் பருகினன். கடவுள் அரசனுடைய அருளுக்கு மகிழ்ந்தார். அரசன் விரும்பிய மேன்மையைக் கொடுத்து மறைந்தார். ஐயமிட்டுச் சாப்பிடவேண்டியது மனிதர்களுடைய கடமை.

[ஐயமிட்டுண்] (பாகவதம்)

1197. ஒரு மணத்தைத் தடுத்து இருமணத்தை முடித்து வைத்த கதை

சுந்தரமூர்த்தி நாயனார் புத்தூரில் திருமணஞ் செய்து கொள்ளுதற்கு ஏற்பாடு செய்து அதற்காக வேண்டிய செயல்களும் நடைபெற்றன. அப்பொழுது சிவபெருமான் அங்குத் தோன்றிச் சுந்தரமூர்த்தியார் திருமணம் செய்து கொள்ளுதலைத் தடுத்து நிறுத்தினார். பிறகு திருவாரூரில் பரவை நாய்ச்சியாரைத் திருமணம் செய்து வைத்தார். திருவொற்றியூரில் சங்கிலி நாய்ச்சியாரைத் திருமணஞ் செய்து வைத்தார். இவ்வாறு ஒரு மணத்தைத் தடுத்து நிறுத்திய சிவபெருமான் இருமணங்களை முடித்து வைத்தது அடியவர்கட்கு மிகுந்த வியப்பை ஊட்டியது.

"ஒரு மணத்தைச் சிதைவு செய்து வல்வழக்கிட்
டாட்கொண்ட வுவகைக் கொண்டே
இருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட
வல்லாளன் எல்லாம் உய்ய."

[ஒரு மணந்தடுத்து இருமணங் கொடுத்த] (காஞ்சிப் புராணம்)

1198. கங்கையை அணிந்த கதை (வேறு)

முன்காலத்திலே அயோத்தியா நகரத்தைச் சகரன் என்னும் அரசன் அரசாட்சி செய்து கொண்டிருந்தான். அவன் குதிரை வேள்வி (அசுவமேத யாகம்) செய்ய எண்ணிக் குதிரையை உலக வலத்துக்கு அனுப்பினன். அதனைக் கண்டு பொருமை கொண்ட இந்திரன் வஞ்சக எண்ணத்தோடு குதிரையைப் பிடித்துக் கொண்டு போய்ப் பாதாளத்தில் தவஞ் செய்து கொண்டிருந்த கபில முனிவரின் பக்கத்தில் கட்டிவிட்டுச் சென்றான்.

அவ்வரசனுடைய மக்களாகிய சகரர்கள் அறுபதினாயிரம் பேரும் தந்தையினுடைய கட்டளைப்படி குதிரையை உலகம் முழுவதுந் தேடினார்கள். பிறகு நிலத்தைத் தோண்டிக் கொண்டு பாதாளத்திற்குச் சென்றார்கள். அங்கே கபில முனிவரின் பக்கத்திலே குதிரை கட்டப்பட்டிருத்தலைக் கண்டார்கள். அம்முனிவரே குதிரையைப் பிடித்துக் கொண்டு வந்து கட்டி யிருக்க வேண்டுமென்று எண்ணி அம் முனிவரை வைதார்கள். அதனால் கபிலர் சினமடைந்து விழித்துப் பார்த்தார். அறுபதினாயிரம் பேரும் சாம்பராயினர்.

சகரர்கள் சாம்பரான செய்தியைச் சகரன் அறிந்தான். 'வேள்வியை நிறுத்திவிடக் கூடாது' என்று தன்னுடைய பேரனாகிய அஞ்சுமான் என்பவனிடம் கூறினன். அஞ்சுமான் பாதாளத்திற்குச் சென்றான். தந்தைமாருடைய சாம்பரைக் கண்டு நடுநடுங்கினன். கபிலரைத் தொழுது குதிரையைக் கேட்டான். அவர் நடந்ததைக் கூறிக் குதிரையைக் கொடுத்தார். பிறகு வேள்வி நிறைவேறியது.

அவ்வரசனுடைய வழி முறையிற் பகீரதன் என்பவன் தோன்றினன். அவன் தன்னுடைய மூதாதையர்களாகிய சகரர்கள் அறுபதினாயிரம் பேர் கபில முனிவருடைய கடுஞ் சினத்தால் சாம்பராகி நிரயமடைந்துள்ள செய்தியை அறிந்தான். அவர்களை விண்ணுலகிற் செலுத்த எண்ணினன். நான்முகனை நோக்கிப் பதினாயிரம் ஆண்டுகள் தவம்புரிந்தான். நான்முகன் பகீரதனுடைய தவத்திற்கிரங்கி வெளிப்பட்டான். "விண்ணுலகில் உள்ள கங்கை அவர்களுடைய எலும்பின்

மேற்பட்டால் அவர்கள் விண்ணுலகடைவர். அக்கங்கை நிலத்தில் வருமாகில் அதனுடைய விரைந்த வரவைத் தாங்குதல் சிவபெருமானுக்கன்றி ஏனையோர்க்கு அரிதாகையால் அப்பெருமானை நோக்கித் தவஞ் செய்யத் தொடங்குவாயாக'' என்று கூறி மறைந்தான். பகீரதன் இறைவனை நோக்கிப் பதினாயிரம் ஆண்டுகள் தவம் புரிந்து இறைவனுடைய அருளைப் பெற்றான். பிறகு கங்கையை நோக்கி ஐயாயிரம் ஆண்டுகள் தவம் புரிந்தான். கங்கை பெண் வடிவமாக வந்து '' என் விரைவு தாங்குதியாதலால் என்னைத் தாங்குமாறு சிவபெருமானை நோக்கி இன்னும் அரிய தவங்களைச் செய்வாயாக'' என்று கூறி மறைந்தாள்.

பகீரதன் மேலுஞ் சிவபெருமானை நோக்கி இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகள் தவஞ் செய்தான். சிவபெருமான் தோன்றினார். கங்கை கூறியதைச் சொன்னான். அவர் அருள் பெற்றுக்கொண்டு மேலுங் கங்கையை நோக்கித் தவஞ் செய்தான். கங்கை மூவுலகும் அஞ்சுமாறு ஆரவாரத்தோடு தோன்றினாள். அவ்வாறு வந்த கங்கையைச் சிவபெருமான் சடை நுனியில் அணிந்தார். பகீரதன் கங்கையைக் காணுமல் வருந்தினான். ஒரு துளியை இறைவன் கீழே விட்டார். அஃது ஆருகிச் சென்றது. கங்கையின் விரைவால் சன்னு முனிவருடைய வேள்வி யழிந்தது. அவர் சினங்கொண்டு உள்ளங்கையிலேற்று உட்கொண்டார். பகீரதன் சன்னு முனிவரை வணங்கி நிகழ்ந்ததைக் கூறினான். அவர் மனதிரங்கிக் காதின் வழியே வெளிப்படுத்தினர். கங்கை சகரர்களுடைய சாம்பரிற் படிந்த அளவில் அவர்கள் நற்கதியை அடைந்தனர்.

''சீர்பூத்த செழுந்தரங்கத் தீம்புனன்மந்
தாகினிதன் தேனூர் கொன்றைத்
தார்பூத்த செஞ்சடையில் அணிந்துமதன்
மேல்விழைவு தணியான் ஆகிக்
கார்பூத்த இருவிசும்பில் கங்கைநதி
சூழ்கிடந்த காசி வாழும்
ஏர்பூத்த தனிமுதலின் இணையடிப்பூங்
கமலமலர் ஏத்து வாமே.''

(காசி காண்டம்)

[கங்கையின் வரவு]

1199. கடல்முழக்கம் அடங்கிய கதை

இராவணனை வென்று கொன்றொழிக்கும்படி இராமபிரான் அதற்குரிய செயல்களைக் குறித்துத் துணைவர்களோடு ஆராய்ந்து உரையாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது கடல் முழக்கம் மிகுதியாக இருந்தது. ஒருவர் பேசியது ஒருவர்க்குக் கேட்கவில்லை. அதனால் இராமபிரான் கடலைச் சினந்தார். உடனே அலையும் ஒலியும் அடங்கிப் போயின. அவ்விடத்திற்கு 'ஏகாந்த ராமம்' என்றும், ஏகாந்த ராமநகரம் என்றும் பெயர்களுண்டாயின. அவ்விடத்தில் எழுந்தருளிய இராமபிரானுக்கு ஏகாந்தராமன் என்று பெயர்.

"ஏத்தியநல்லோரை ஏகாந்த ராமன்பால்"
"மாயோனடக்கும், நெடுங்கடல் போலடங்கிநிற்க"
"இமைக்குங் கடலேழில் ஏகாந்த ராமன்
அமைக்குங் கடல்பார்த் தமர்ந்தீர்"

[ஏகாந்த ராமன்] (தேவையுலா)

1200. கண்டதைக் கற்ற கதை

விலை உயர்ந்த மோதிரம் ஒன்று ஆழமான கிணறு ஒன்றில் விழுந்துவிட்டது. பாண்டவர்களும் துரியோதனன் முதலியோரும் அதனை அறிந்தார்கள். ஆயினும் அம்மோதிரத்தை யாராலும் எடுக்க முடியவில்லை. துரோணருக்கு இச் செய்தியைத் தெரியப்படுத்தினர்கள். துரோணர் கிணற்றுக்குள் அம்பு ஒன்றைச் செலுத்தி வெகு திறமையாக அந்த மோதிரத்தை வெளியே யெடுத்தார். அவர் எவ்வாறு எடுக்கிறார் என்பதை அருச்சுனன் கண்ணுங்கருத்துமாகப் பார்த்துக்கொண்டிருந்தான். மோதிரம் மேலே வந்ததும் அருச்சுனன் அதனைத் தன்னுடைய கையில் வாங்கினான். மீண்டும் கிணற்றுக்குள் எறிந்தான். இதனைப் பார்த்தவர்கள், அரும்பாடுபட்டு எடுத்த ஆழியை அருச்சுனன் மீண்டும் கிணற்றில் போட்டு விட்டானே, என்ன மடமை! என்று எண்ணமிட்டுக்

கொண்டு நின்றார்கள். மோதிரத்தை வெளியே எடுப்பதற்குத் துரோணர் எம்முறையைக் கடைப்பிடித்தாரோ அம்முறையைக் கடைப்பிடித்து அருச்சுனனும் அம்மோதிரத்தை வெளியே எடுத்துவிட்டான். கண்டதைக் கற்கின்றவனே அறிஞன் என்பது அன்று அருச்சுனனிடத்தில் பெறப்பட்டது. அனைவரும் அருச்சுனனுடைய திறமையைப் பாராட்டினார்கள்.

(பாரதம்)

"பண்டுகிணற் றினிலெறிந்த பௌத்திரத்தைத்
துரோணர்சிலை பாணம் போட்டுக்
கொண்டுவரக் கண்டதனஞ் சயனு மந்த
விற்றொழில்கைக் கொண்டா னன்றே
வண்டுவிழி உமைபாகா செயங்கொண்டா
ரேஉமது வளஞ்சேர் நாட்டில்
கண்டதைக்கற் கின்றவனே பண்டிதனு
வானென்றே கருது வாரே"

(செயங்கொண்டார் சதகம்)

[கண்டதைக் கற்றல்]

1201. கண்ணன் பிறந்த கதை

வடமதுரையில் அந்நாளில் வாழ்ந்திருந்த தேவகன் என்பவனுடைய மகளாகிய தேவகியை வசுதேவர் திருமணஞ் செய்துகொண்டார். கம்சன் என்பவன் தேவகிக்கு ஒரு முறையில் உடன்பிறந்தானுவன். மணமக்களைத் திருமணத் தேரில் ஏற்றிக் கம்சன் ஊர்வலம் நடத்திக்கொண்டிருந்தான். அப்பொழுது உருவிலி வாக்கு ஒன்று கம்சனைக் கூப்பிட்டு, "அடே! அறிவற்றவனே! நீ எவனை அவள் கணவனென்று தேரிலேற்றி விருப்பமாக நடத்துகிறாயோ அவளுடைய எட்டாவது மகன் உன்னுடைய உயிரைப் போக்குவான்" என்றது கூறியது.

தேவ வாக்கைக் கேட்டவுடனே கம்சன் சினங் கொண்டான். கத்தியைக் கையிலெடுத்துக்கொண்டு தேவகியைக் கொல்லச் சென்றான். அப்பொழுது வசுதேவர், "நீ இவளைக் கொலை செய்தல் வேண்டாம். இவளுடைய வயிற்றிலே பிறக்கும் பிள்ளைகளையெல்லாம் உன்னிடம் தந்துவிடுகிறேன். நீ உன்னுடைய விருப்பப்படி செய்துகொள்" என்று மொழிந்தார். வசுதேவர் கூறியதற்குக் கம்சன் இணங்கினான்; தேவகியைக் கொல்லாமல் விட்டான்.

கம்சன் என்பவன் காலநேமி என்னும் அசுரனுடைய கூறுக உலகில் தோன்றினான். வேறு பல கொடிய அசுரர்களும் நிலவுலகில் அரசர்களாகப் பிறந்து மக்களுக்கு மிகுந்த தொல்லையை உண்டுசெய்து கொண்டிருந்தார்கள். இவர்களுடைய சுமையைப் பொறுக்க முடியாமல் நிலமகள் வருந்தினாள். நான்முகன் பூமகள் முதலியோர் திருமாலிடஞ் சென்று, "தீயோரைக் கொன்று நிலவுலகச் சுமையைப் போக்கியருள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்கள்.

திருமால் தாம் தேவகியின் கருப்பத்தில் எட்டாவது பிள்ளையாகப் பிறந்து கம்சனையும் மற்றைக் கொடியோர்களையும் கொன்றொழித்து நிலச் சுமையைப் போக்குவதாக வாக்குக் கொடுத்தருளினார். இச்செய்தியை நாரதமுனிவர் கம்சனிடம் வந்து இயம்பினார். கம்சன் சினங்கொண்டு, தேவகியையும் வசுதேவரையும் விலங்கிட்டுச் சிறையில் அடைத்து விட்டான்.

பிறகு தேவகிக்கு ஏழு குழந்தைகள் பிறந்த பிறகு திருமால் எட்டாவது பிள்ளையாக ஆவணித் திங்களில் கிருட்டிணபட்சத்து அட்டமியின் இரவிலே கண்ணனைப் பிறந்தார். அதே இரவில் நந்தகோபனுடைய மனைவியான யசோதை என்பவளும் ஒரு குழந்தையைப் பெற்றாள். கண்ணன் நான்கு திருத்தோள்களுடனும் சங்காழியுடனும் பிறந்தார். கண்ணனை வசுதேவரும் தேவகியும் பலவாறு புகழ்ந்து போற்றினார்கள். கம்சனிடம் தங்களுக்கு உள்ள அச்சத்தினால் தெய்வத் திருக்கோலத்தை மறைத்துக்கொள்ள வேண்டுமென்று வேண்டினார்கள். கண்ணனும் அவ்வாறே மறைத்துக் கொண்டார். பிறகு கண்ணன் பொதுவான வடிவத்தோடு வசுதேவரைப்

பார்த்து, ''என்னை எடுத்துக்கொண்டு போய்க் கோகுலத்தி லுள்ள நந்தகோபன் வீட்டில் யசோதையின் படுக்கையில் சேர்த்துவிட்டு அங்குள்ள பெண் குழந்தையை எடுத்துக் கொண்டு வந்து கம்சனிடங் கொடுங்கள்'' என்று கூறினர். அவ்வாறே வசுதேவர் குழந்தையை எடுத்துக் கொண்டு வெளியே வந்தார்.

காவலாளர்கள் அனைவரும் அறிதுயிலினுல் மதிமயங்கிச் சும்மா இருந்தார்கள். வசுதேவர் குழந்தையை எடுத்துக் கொண்டுசென்றார். அப்பொழுது மழை பெய்தது. ஆதி சேடன் வந்து தன் முடிகளால் கவித்து அம்மழையில் கண்ணன் நனையாதபடி செய்தான். மிகுந்த நீர்ப்பெருக் கோடு சென்ற யமுனையாறு வசுதேவருக்கு முழங்கால் அளவாகவிருந்தது.

நந்தகோபனுடைய மனைவியாகிய யசோதை ஒரு பெண் குழந்தையைப் பெற்று அறிதுயிலில் மூழ்கியிருந்தாள். பிறந் துள்ளது ஆணுபெண்ணு என்பதையும் அவள் அறிந்து கொள்ளவில்லை. அண்மையில் இருந்தவர்களும் அறிதுயிலில் மூழ்கி யிருந்தபடியால் அவர்களும் நிகழ்ந்ததை உணர்ந்து கொள்ளவில்லை. ஆகவே எவ்வகையான தடையும் இல்லாமல் வசுதேவர் அங்குப்போய்க் குழந்தையை மாற்றிக் கொண்டுவந்தார்.

பிறகு யசோதை மாயையின் மோகத்தில் இருந்து விடு பட்டு நீங்கிக் கண்ணுகிய குழந்தையைப் பார்த்துத் தனக்கு மகன் பிறந்துள்ளான் என்று மகிழ்ந்தாள். குழந்தையை மாற்றிக்கொண்டு சென்ற வசுதேவர் பெண்குழந்தையைத் தேவகியின் படுக்கையில் விட்டார். உடனே அக் குழந்தை கத்தியது. அவ்வொலியைக் கேட்ட காவலாட்கள் உடனே கம்சனிடம் ஓடிச்சென்று தேவகிக்குக் குழந்தைபிறந்துவிட்ட தென்று தெரியப்படுத்தினர்கள். கம்சன் உடனே ஓடிவந் தான். உடனே அக்குழந்தையைத் தூக்கியெறிந்து கொல்ல முயன்றான்.

அக்குழந்தை விண்ணில் எழும்பி நின்று, ''உன்னைக் கொல்லப் பிறந்தவன் ஒளித்துவளர்கிருன்'' என்று சொல்லி விட்டு மறைந்துவிட்டது. பிறகு கண்ணன் திருவாய்ப் பாடியில் வளர்ந்தார்.

"சொற்றவா நன்று சுகன்திருத் தாதை
சூதிகைத் தோன்றிய பொழுதே
பெற்றதாய் தானும் பிதாவுமுன் வணங்கப்
பேசலா உரையெலாம் பேசிக்
கற்றமா யையினுல் கன்னியங் கிருப்பக்
காரிருட் காளிந்தி நீந்தி
அற்றைநாள் அண்டர் ஆனவர்க் கெல்லாம்
அரசனுக் கருமக வானுன்"

(பாரதம்)

[கண்ணன் ஆடல்]

1202. கம்பர் சுவர் வைத்த கதை

கம்பர் கலிமகளின் அருளையடைந்து உலகில் புகழுடன் விளங்கியிருந்தார். அதனுல் அலிமகள் அருளுங் கம்பரிடஞ் சிறந்து விளங்கியது. சில காரணங்களால் கலிமகள் கம்பரைவிட்டுப் பிரிந்தாள். அதனுல் கம்பருக்கு அல்லல் பல உண்டாயின. சோழ மன்னனிடம் பகை கொண்டு நாட்டைவிட்டுச் சென்றார். கூலி வேலை செய்யும்படியான நிலைமையும் ஏற்பட்டுவிட்டது. ஒரு நாள் ஓர் ஊரில் சென்றுகொண்டிருந்தபோது கம்பரைப் பசிநோய் வருத்தியது. வேலி யென்பவனிடஞ் சென்று கூலிக்குச் சுவர் வைக்கத் தொடங்கினார். அச்சுவர் ஒரு பேயினுடைய செய்கை யினுல் அடிக்கடி சரிந்து விழுந்துகொண்டு வந்தது. அப்போது கம்பர்;

"மற்கொண்ட திண்புயத்தான் மாநகர் விட்டிங்கு
[வந்தேன்
சொற்கொண்ட பாவின் சுவையறிவார் இங்கிலையே
விற்கொண்ட வாள்நுதலாள் வேலி தருங்கூலி
நெற்கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே"

என்னுஞ் செய்யுளைப் பாடிச் சுவர் விழாதிருக்கச் செய்தார். பிறகு சுவரை முடித்து அவளிடங் கூலி நெல்லைப் பெற்றுக் கொண்டு சென்றார். அக்காலத்தில் கம்பருக்கு மேலும் பல தொல்லைகள் உண்டாயின.

"நங்கைகளை வாணிகம்ப ரிடத்திருக்கத்
தண்டிகையில் நலமாய் வாழ்ந்தார்
அங்கவள்தான் புறம்போகக் கம்பரன்றே
கூலிக்கோர் ஆளா னாரே
செங்கையுகி ரால்வேதன் சிரத்திலொன்றைத்
துணித்துவிட்ட செயங்கொண் டாரே
சுங்கமா றியபோது சுண்ணும்புங்
கொடுக்கார்தொல் புவியு ளோரே"

[தெய்வத் திருவருள் நீங்கினுல் தொல்லை நேரிடும்]
(செயங்கொண்டார் சதகம்)

1203. கழுதையாய்க் கத்திய சிசுபாலன் கதை

சேதி நாட்டைத் தமகோஷன் என்னும் பெயருடைய அரசன் அரசாட்சி செய்து கொண்டிருந்தான். அவனுடைய மகிஷியின் பெயர் சுருதசிரவை. சுருதசிரவை வாசுதேவனுக்கு கூடப்பிறந்தவள். ஆகவே கண்ணபிரானுக்கு அத்தை. அந்தச் சுருதசிரவையின் வயிற்றிற் சிசுபாலன் பிறந்தான். சிசுபாலன் பிறந்தபொழுது மூன்று கண்களையும் நான்கு கைகளையும் உடையவனுய் இருந்தான். பிறந்தவுடன் கழுதையைப் போல் பெருங்குரலெடுத்துக் கத்தி ஆரவாரஞ் செய்தான். இதனைப் பார்த்ததும் தாய் தந்தையர் முதலிய உறவினர்கள் அஞ்சிக் கலங்கினர்கள். இவனைத் தொலைத்து விட வேண்டும் என்று எண்ணமிட்டார்கள்.

அப்பொழுது உருவிலிவாக்கு ஒன்று, ("அசரீரி") சிசுபாலன் என்னும் பெயருடைய இக்குழந்தை மிகுமேன்மை

யுடையவன். பேராற்றல் அமையப்பெற்றவன். இவனிடத்தில் அச்சங் கொள்ளாமல் நன்முகக் காப்பாற்ற வேண்டும். இவன் இப்பொழுது இறக்கக் கூடியவனல்லன். இவனைக் கொல்வதற்கு ஒருவன் பிறந்திருக்கிறான்'' என்று கூறியது.

சிசுபாலனுடைய தாயாகிய சுருதசிரவை, தன் குழந்தையிடத்துள்ள அன்பினால், ''இவனைக் கொல்பவன் யார்''? என்று உசாவினாள். மேலும் அத்தெய்வ வாக்கு, ''இவனைக் கொல்லக் கூடியவர்கள் என்று நீ எண்ணுகிற எல்லோருடைய மடியிலும் வைத்துப் பார். யாருடைய மடியில் வைக்கும்பொழுது இவனுடைய கைகளிரண்டும் நெற்றிக்கண்ணும் மறைகின்றனவோ அப்பெயர்வழியினாலே இவனுக்குச் சாக்காடு நேருமென்பதை நீ அறிந்து கொள்' என்று கூறியது. அதுமுதல் சிசுபாலனுடைய தாய் சிசுபாலனைப் பலருடைய மடியிலும் வைத்துப் பார்த்தாள். கண்ணபிரானுடைய மடியிலே வைத்தபொழுது அவை மறைந்தன. ஆகவே, கண்ண பிரானால்தான் தன்னுடைய கனுக்குச் சாவு நேரிடப் போகிறது என்பதைச் சுருதசிரவை அறிந்தாள். கண்ண பிரானைப் பார்த்து, ''என்னுடைய மகன் எவ்வளவு குற்றங்கள் செயினும் அவனைக் கொல்லக் கூடாது'' என்று வேண்டிக் கொண்டாள்.

சுருதசிரவை தமக்கு அத்தையென்பதற்காகக் கண்ண பிரான் ஒரு சிறிது இரங்கினார். ''அப்படி முடியாது. இவன் எனக்கு நூறு குற்றங்கள் செய்கிறவரையிற் பொறுப்பேன். அதற்குமேல் பொறுக்கமாட்டேன்'' என்று கூறினார். கண்ணன் தனக்குப் பகையென்பதைச் சிசுபாலன் இளம் பருவத்திலேயே அறிந்து கொண்டு பகைமை பாராட்டத் தொடங்கினான். எப்பொழுதும் கண்ணபிரானைப் பழித்துரைத்தலையே தனது தொழிலாகக் கொண்டிருந்தான். இவனுக்கு மணஞ் செய்வதற்கு உறுதி செய்யப்பட்டிருந்த உருக்குமணியைக் கண்ணன் வலுக்கட்டாயமாகக் கவர்ந்து கொண்டுபோய் மணஞ் செய்து கொண்டான். அதனாலும் பகைமுறுகி வளர்ந்தது. இராசசூய வேள்விநடந்தபொழுது கண்ணனை அளவு கடந்து இகழ்ந்தபடியால் அப்பொழுது கொல்லுறுக்கப்பட்டான்.

[சிசுபாலன்]

(பாகவதம்)

1204. கருப்பைக் கருளிய கதை

(கருப்பை எலி)

சோழவள நாட்டிலே திருமறைக் காட்டிலே சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோயிலில் இரவில் திருவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. எரிந்து கொண்டிருந்த திருவிளக்குத் தூண்டுவாரில்லாத படியினாலே அணைந்து போகக்கூடிய நிலைமையில் இருந்தது. அப்பொழுது ஓர் எலி அவ்விளக்கில் இருந்து நெய்யை உண்பதற்காக அவ்விளக்கிற்குச் சென்றது. அதனுடைய வால் திரியிற்பட்டுத் தூண்டப் பட்டபடியினால் அணைந்துபோகக்கூடிய நிலையில் இருந்த விளக்கு நன்கு ஒளிபரப்பி மேலும் எரியத் தொடங்கியது விளக்கு நன்கு எரியத் தொடங்கியதைக் கண்ட சிவபெருமான் அவ்வெலி பேரரசனாகப் பிறக்குமாறு திருவருள் வழங்கினார். அவ்வெலி மறுபிறப்பில் மாவலிச் சக்கரவர்த்தியாக மாநிலத்தில் பிறந்தது.

"மறையடி வருந்திய மறைவனத் தொருநாள்
மணிச்சுடர் நறுநெய் கவர்மதிக் கருப்பைக்கு
இருவகை யேழெனும் திருவுல கனைத்தும்
கொடுத்தவன்..... "

[விளக்கைத் தூண்டியது] (கல்லாடம்)

1205. கன்மாடன் கதை

கன்மாடன் என்னும் அந்தணன் ஒருவன் சமித்து தருப்பை முதலியன கொண்டு வருகையில் அவனை ஆ ஒன்று முட்டித் தள்ளுவதற்கு எதிர்த்தது. அந்தணன் அவ்வாவினை யெதிர்த்துத் தள்ளினான். அந்த ஆ சேற்றில் விழுந்தது. அதனால் சேற்றில் இருந்து கரையேற முடியவில்லை. சேற்றிலேயே அழுந்தி மாண்டது. அந்தணன் ஆவைத் தள்ளிய பிழையினால் ஆனைக் கொன்ற தீவினை அவனைப் பற்றி

யது. அவனுக்கு அல்லல்கள் பல நேர்ந்தன. அவன் இந் நாளில் சங்கரநாராயணர் கோவில்என வழங்கும் புன்னைவனத் தையடைந்து நாகசுனையில் நீராடி இறைவழிபாடு செய்தான். அதனால் அவனுடைய பழி நீங்கியது; அவன் வீடு பேற்றை யடைந்தான்.

"—னமுற,
ஆவினுயிர் செகுத்த அந்தணன்தான் புன்னைநறும்
காவில் வழுத்தக் கதிகொடுத்தோன்"

[கன்மாடன்] (சங்கரலிங்க உலா)

1206. கன்னன் கலக்கத்தைத் தீர்த்த கதை

துரியோதனனுக்குத் தீக்குணங்களே மிகுதியாகப் பொருந்தியிருந்தனவாயினும் அவனிடம் நற்குணங்களும் சில அமைந்திருந்தன. கன்னனிடத்தில் துரியோதனன் கொண்ட மெய்யன்பு இறுதிவரை நீடித்திருந்தது. கன்னன் மிகப்பெரிய தவறுகளைச் செய்தானையினும் துரியோதனன் அவைகளை ஒரு பொருட்படுத்துவதில்லை.

துரியோதனன் ஒரு நாள் வெளியே சென்றுவிட்டான். அவன் சென்ற பிறகு கன்னன் துரியோதனனுடைய மனைவி பானுமதி யிருக்கும் அந்தப் புரத்திற்குச் சென்றான். அங்கு இருவரும் தனியிடமொன்றில் சூது விளையாடிக் கொண்டிருந்தனர். துரியோதனனுடைய மனைவி தோல்வியடையுஞ் சமயமாக இருந்தது. இந்தச் சமயத்தில் துரியோதனன் வந்து விட்டான். அவன் சிறிது தொலைவில் வந்து கொண்டிருத்தலைப் பானுமதி பார்த்து விட்டாள். கணவன் யாது சொல்வானோ என்று அச்சங்கொண்டு எழுந்தாள். துரியோதனன் வருதலைக் கன்னன் பார்க்க வில்லை. தோல்வியடையுஞ்சமயமாக இருப்பதால் பானுமதி எழுந்து ஓடிப்போகப் பார்க்கிறாள் என்று எண்ணினான். பானுமதியின் மணிவடம் ஒன்றைப் பிடித்து இழுத்து "உட்கார் ஆட்டம் முடிந்த பிறகுதான் போகவேண்டும்" என்றான். இழுத்தபொழுது

மணிவடம் அறுந்து மணிகள் சிதறிப் போயின. துரியோதனன் பக்கத்தில் வந்து விட்டான். அவனைக் கண்ட கன்னன் திடுக்கிட்டு நடுங்கி விட்டான். யாது நிகழுமோ என்று அஞ்சினன்.

கன்னனுடைய கலக்கத்தைக் கண்ட துரியோதனன் அவனுடைய கலக்கத்தைத் தெளிவிக்க விரும்பினன். "நண்பா ஏன் கலங்குகிறாய்? இம்மணிமாலை அறுந்துபோனது பெரிய ஒரு காரியமா? நான் மணிகளைப் பொறுக்கித் தரவா அல்லது கோக்கவா?" என்று கேட்டான். கன்னனுடைய கலக்கம் தெளிந்தது. கன்னன் இறக்கும் வரையில் துரியோதனனுடைய இந்தச் சீரிய பண்பை மறக்கவேயில்லை. பிறகு கன்னன் இதனைப் பலரிடமும் எடுத்துக் கூறிப் பாராட்டினன்.

(பாரதம்)

"குறித்தரசு கன்னனுடன் கோதை விளையாடத்
தெறித்த மணியுஞ் சிவசிவா—பொறுக்கின்
அழிவந்த செய்யினும் அன்பருர் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்"

[பழமை] (சிவசிவ வெண்பா)

1207. காம்பினுல் நிரைகுவித்த கதை

மழைக் காலம் ஒன்றில் கண்ணபிரான் நிரைகளை மேய்த்துக் கொண்டிருந்தார். திடீரென்று பெருமழை பிடித்துக் கொண்டது. ஆன் நிரைகளோ பல விடங்களினுஞ் சிதறி மேய்ந்து கொண்டிருந்தன. கண்ணபிரான் நிரைகளை ஒன்று சேர்க்க எண்ணினர். ஒரு பெரிய ஆலமரத்தின் கீழ்ச் சென்றார். தம்முடைய புள்ளாங் குழலை எடுத்துக் குரலெழுப்பி இசை பாடினர். இசையைக் கேட்ட நிரைகள் விரைந்து வந்து கண்ணபிரானைச் சூழ்ந்தன.

"காம்பினுல் நிரை குவித்தசெந் தாமரைக்கண்ணன்"

[வேய்ங் குழல் வாசித்தது] (காசிகண்டப்)

1208. காளமுனி கதை

பாண்டவர்கள் காட்டு வாழ்க்கை மேற்கொண்டிருந்த காலத்தில் காளமுனி என்னும் பெயருடைய முனிவர் ஒருவர் காட்டில் தவஞ் செய்துகொண்டிருந்தார். அவர் தவத்தினால் உயர்ந்த நிலையை அடைந்து சிறந்து விளங்கியிருந்தார். துரியோதனன் முதலியோர் பாண்டவர்கள் மீளமுடியாமல் காளமுனிவரைக் கொண்டு தொலைத்துவிட வேண்டுமென்று நீள ஆராய்ந்து முடிவு செய்தனர். பிறகு காளமுனியை அழைத்து வருமாறு வேறொரு முனிவரை அனுப்பினர்கள். காளமுனிவரும் வந்து சேர்ந்தார். துரியோதனன் முனிவருடைய மனம் மகிழுமாறு பெருவிருந்து செய்தான். துரியோதனன் விருந்தால் மகிழ்ந்த முனிவர் "துரியோதனனைப் பார்த்து," "உன்னுடைய விருப்பத்தைக் கூறு; நிறைவேற்றுகிறேன்" என்று வாக்குக் கொடுத்தார்.

முனிவர் வாக்குக் கொடுத்த பிறகு துரியோதனன் பாண்டவர்கள் ஐவரையுங் கொன்று தொலைக்க வேண்டும் என்று தெரியப் படுத்தினன். வாக்குக் கொடுத்துவிட்டபடியினால் மறுத்துரைக்க முடியாமல் முனிவர் தமது இருப்பிடத்திற்குத் திரும்பினர். கொடிய வேள்வி யொன்று செய்தார். அதிலிருந்து பூதம் ஒன்று வெளிப்பட்டது. முனிவர், "பாண்டவர்கள் ஐவரையுங் கொன்று வா" என்று அப்பூதத்திற்குக் கட்டளையிட்டார். பூதம் பாண்டவர்கள் இருந்த இடத்தை நோக்கிச் சென்றது. நிகழப்போவதை முன்னரே உணர்ந்திருந்த கண்ணபிரான் ஐவரும் மாயமாக மாளுமாறு செய்திருந்தார். பாண்டவர்கள் மாண்டு கிடப்பதைப் பார்த்த பூதம் திரும்பிச் சென்று காளமுனிவரைப் பார்த்து, "மாண்டவர் பின்னும் பின்னும் மாள்வரோ மதியிலாதாய்" என்று கூறி அடித்து வீழ்த்திக் கொன்று சென்றது. தீயவர்களோடு சேர்ந்து தீமையான காரியங்களைச் செய்வோர் உடனே தீமையடைவர் என்பது காளமுனியிடம் நன்கு விளங்கியது.

(பாரதம்)

"காளமுனி பாண்டவர்மேல் ஏவும் கடிவிழுங்கி
ஏளித மாளுன் இரங்கேசா—நாளுந்தான்

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்''

[தீவினையச்சம்] (இரங்கேச வெண்பா)

1209. கானவனேயாண்ட கதை

பாண்டிவள நாட்டில் முன்னுளில் இருந்த புன்னை வனத்தில் வேடன் ஒருவன் வேட்டையாடிக் கொண்டு திரிந்தான். அவனுக்குப் பசி மிகுதியாயிற்று. அதனால் சோர்வையடைந்த அவ்வேடன் நாகசுனை யென்னும் பெயருடைய நன்னீர்த் தடாகத்திற்கு நீர் குடிக்கச் சென்றான். சென்றவன் தவறி அத்தடாகத்தில் விழுந்தான். அவன் கரையேற முடியாமல் அத்தடாக நீரிலேயே மாண்டான். அவன் அப்புன்னை வனத்தில் ஒருநாள் வசித்திருந்தபடியாலும், நாகசுனையின் நீர் தீண்டப்பெற்றபடியினாலும் வீடுபேற்றையடைந்தான்.

''படிமிசையில்
ஞானநெறியுதவு நாகசுனைப் பாவிறந்த
கானவனே யாளுங் கருணையான்''

[வேடன் வீடு பெற்றது] (சங்கரலிங்க உலா

1210. கூழுக்குக் கோவை பாடிய கதை

ஔவைப் பிராட்டியார் தென்பாண்டி நாட்டிலே ஒரு காட்டு வழியாகச் சென்று கொண்டிருந்தார். அப்பொழுது அவரைப் பசிப் பிணி மிகுதியாக வருத்தியது. அண்மையில் ஊரோ வீடுவாசல்களோ இல்லை. ஓரிடத்தில் இடையன் ஒருவன் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான். ஔவையார் அவனிடஞ் சென்று ''பசி மிகுதியாக இருக்கிறது.

உணவு ஏதேனும் இருந்தால் தருக" என்று கேட்டார். அவன் தன்னிடமிருந்த கூழைக்கொடுத்து ஔவையாருடைய பசியைப் போக்கினன். அதனால் ஔவையாருக்கு அவன்மீது அளவு கடந்த அன்புண்டாயிற்று. அவன் மீது ஏதேனும் ஒரு நூல் செய்ய எண்ணினர். அவனுடைய பெயரைக் கேட்டார். "நான் என்னுடைய பெயரை மறந்து விட்டேன்" என்றான் அவன். "போகட்டும் உன்னுடைய ஊரின் பெயரையாவது கூறுவாயாக" என்றார் ஔவையார். "ஊரின் பெயரையும் மறந்துவிட்டேன்" என்றான் அவன். "சரி போகட்டும் ஊரில் உள்ள ஏதேனும் ஒரு அடையாளத்தையாவது கூறு" என்றார் ஔவையார் "எங்கள் ஊரில் ஐந்து வேலமரங்கள் உள்ளன. அவை தாம் எனக்குத் தெரியுமென்றான் அவன். ஔவையார் அவனுக்கு ஐவேல் அசதி என்று பெயர் சூட்டினர். (அசதி-மறதி) அவன் மீது கோவையொன்று பாடினர். ஔவையார் வாக்கால் பாடப்பெற்ற அவன் மீது விரைவில் செல்வநல மோங்கப்பெற்றுச் சிற்றரசனானான். உதவியின் பயனை நன்கு உணர்வோர் தினையளவு உதவி செய்யினும் அதனைப் பனையளவாகக் கொள்வர் என்பது ஔவையாரிடத்தில் நன்கு விளங்கியது.

"பன்னு மசதிநன்றி பாராட்டிக் கோவைநூல்
சொன்னளே ஔவைமுன் பு சோமேசா—மன்னுத்
தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்"

[செய்ந்நன்றி யறிதல்] (சோமேசர் முதுமொழி வெண்பா)

1211. கொக்கிறகு சூடிய கதை

முன்பு ஒரு காலத்தில் ஓர் அரக்கன் இருந்தான். அவன் பேராற்றல் படைத்தவன். தேவர்கட்கு துன்பஞ் செய்ய வேண்டுமென்பதே அவனுடைய நோக்கமாக இருந்தது. அவன் கொக்கினுடைய வடிவத்தை யெடுத்துக் கொண்டு தேவர்கட்குப் பெருந் தொல்லை விளைத்துத் திரிந்தான். இ-

திரன் நான்முகன் முதலிய தேவர்கள் வாழிடங்களையெல்லாம் அழித்தான். தேவர்கள் அனைவரும் அவ்வரக்கனுடைய தொல்லையைப் போக்கியருள வேண்டுமென்று இறைவனை வேண்டிக் கொண்டார்கள். சிவபெருமான் அக்கொக்கைக் கொன்று அதனுடைய இறகை வெற்றிக்கு அறிகுறியாக அணிந்தருளினர்.

"அடுந்திற லசுர கொடுந்தொழில் பெருக்கிய
மாயா வரத்த பெருங்குருகு அடித்து
வெண்சிறை முடித்த செஞ்சடைப் பெருமான்"

[கொக்கை யழித்தது] (கல்லாடம்—70)

1212. கோவணங் கட்டிச் சென்ற கதை

துரியோதனனுடைய தாயாகிய காந்தாரி ஒருநாள் துரியோதனனைப் பார்த்து, "நீ என்னிடம் ஆடையில்லாது வருகையான் உன்னுடைய உடல் முழுதுந் தடவுவேன், அதனால் உன்னுடைய உடம்பு வயிர வுடம்பாகும்" என்று கூறினாள். துரியோதனன் அதற்கு உடன்பட்டான். துரியோதனன் வயிர வுடம்பை யடையுமாறு விடக்கூடாது என்று எண்ணிய சகுனி துரியோதனனைப் பார்த்து, "அது கூடாது. தாய் சொன்னாலும் நீ அவளிடம் சிறிதும் ஆடையில்லாமற் செல்லக் கூடாது. கோவணமேனும் அணிந்து கொண்டு செல்ல வேண்டும்" என்று சொன்னான்.

சகுனியினுடைய சொற்கள் தகுதியானவைகளே என்று எண்ணிய துரியோதனன் கோவணம் ஒன்றை அணிந்து கொண்டு தன் தாயிடஞ் சென்றான். அவள் தடவிப் பார்த்துக் கோவணம் அணிந்திருத்தலை யுணர்ந்தாள். "நான் ஆடையில்லாமல் வருமாறு கூறியிருக்கவும் நீ ஆடையோடு வந்திருக்கிறாயே. யாரோ உன்னைக் கெடுக்கவேண்டும் என்னும் எண்ணத்தோடு கோவணங் கட்டிக்கொண்டு வருமாறு சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். அவ்வாறு சொல்லிக் கொடுத்தவர்களுடைய உரை உனக்குத் தீமை பயக்கக்

கூடியதென்று அறியாமற் போனுயே. இனிமேல் நீ வயிர வுடம்பையடைதல் என்பது முடியாதே என்று வருந்தினுள். பிறகுதான் துரியோதனன் சகுனி செய்த வஞ்சகத்தை யுணர்ந்தான்.

(பாரதம்)

"தாய்தீண்டத் தூசுடுத்துச் சாரெனுஞ்சொல்
[தீதென்றுள்
தூய சுயோதனற்குச் சோமேசா—வாயதனுல்
நட்டார்போல் நல்லவை சொல்லினும்-ஒட்டார்சொல்
ஒல்லே யுணரப்படும்"

[பகைவர்கள் உரை தீமை பயக்கும்] (சோமேசர் முதுமொழி வெண்பா)

1213. சகுந்தலையின் கதை

கண்ணுவ முனிவர் என்பவர் ஒரு காட்டில் தவஞ்செய்து கொண்டிருந்தார். அவர் ஒரு நாள் வயல்புறமாகச் சென்ற போது ஓரிடத்திற் பெண் குழந்தையொன்று கிடந்தது. அதனைச் சகுந்தப் பறவைகள் காத்துக் கொண்டிருந்தன. கண்ணுவமுனிவர் அக்குழந்தையைத் தம்முடைய இருப்பிடத் திற்கு எடுத்துக்கொண்டு போய் வளர்க்கலானுர். அக் குழந்தை சகுந்தப் பறவைகளாற் காக்கப்பட்டமையின் அதற் குச் சகுந்தலை என்று பெயரிட்டார்.

சகுந்தலை வளர்ந்து பருவமடைந்தாள். அவளுடைய கவின் கண்டார் உள்ளத்தைக் கவரும் தன்மையுடையதாகச் சிறந்து திகழ்ந்தது. துஷ்யந்தன் என்னும் அரசன் ஒருவன் அந்நாளில் அரசாட்சி செய்துகொண்டிருந்தான். அவன் வேட்டையாடும் பொருட்டுக் காட்டிற்கு வந்தான். சகுந் தலையைக் கண்டபொழுது அவளிடத்தில் கழிபெருங் காதல் கொண்டான். அப்பொழுது கண்ணுவமுனிவர் அங்கு இல்லை. அவர் வேறு எங்கோ சென்றுவிட்டார். துஷ்யந்தன் தன்னு டைய எண்ணத்தைச் சகுந்தலைக்கு அறிவித்தான். சகுந் தலைக்கும் அவனிடத்தில் காதல் ஏற்பட்டபடியால் தன்னு

டைய வளர்ப்புத் தந்தையாகிய கண்ணுவ முனிவருடைய உடன்பாடு இல்லாமலே துஷ்யந்தனுடைய விருப்பத்திற்கு இணங்கினர். துஷ்யந்தன் சகுந்தலையைக் காந்தருவ மணஞ் செய்து கொண்டான். தன்னுடைய மோதிரம் ஒன்றைச் சகுந்தலையிடம் நினைவுக்குறியாகத் தந்தான். சில நாட்களில் தான் அவளை அழைத்துக் கொள்வதாகக் கூறிவிட்டுத் தன்னுடைய நகருக்குப் போய்ச் சேர்ந்தான்.

சகுந்தலை பிரிவாற்றாது துஷ்யந்தனையே நினைத்து ஏங்கிக் கொண்டிருந்தாள். ஒரு நாள் துருவாசர் அங்கு வந்தார். சகுந்தலை அவரை வரவேற்றுப் போற்றாமல் இருந்தாள். இதனால் துருவாசருக்கு மிகுந்த சினம் உண்டாகியது. அவர், "நீ எவனைப் பற்றி எண்ணமிட்டுக்கொண்டிருக்கிறாயோ அவன் இப்பொழுது முதல் உன்னை மறந்தொழிவானாக" என்று வசவுரை வழங்கினர்.

இச்செய்தியை உணர்ந்த தோழியர் வசவுரையை (சாபத்தை) நீக்குமாறு துருவாசரை வேண்டிக் கொண்டார்கள். "அவன் தந்த மோதிரத்தைக் காட்டினால் மறப்பொழிவானாக" என்று கூறி வசவுரையை மாற்றினர். ஆனால் இச்செய்தியைத் தோழியர் சகுந்தலைக்குக் கூறவில்லை.

சில நாட்கள் சென்றன. கண்ணுவ முனிவர் திரும்பி வந்தார். சகுந்தலையின் மணச் செய்தியை அறிந்தார். சக்கரவர்த்தியாக உள்ளவனை மணம்புரிந்தமைக்கு மகிழ்ந்தார். "சகுந்தலையின் மகன் சிறந்து விளங்குவானாக" என்று வாழ்த்துரை கூறினர்.

பல நாட்கள் சென்றன; துஷ்யந்த மன்னனிடம் இருந்து எவரும் வந்திலர். கண்ணுவர் சில முனிவர்களையும் கௌதமி என்னுந் தவ மூதாட்டியையும் உடன் கூட்டிச் சகுந்தலையைத் துஷ்யந்தனிடம் அனுப்பி வைத்தார். இடைவழியில் இருந்த ஓராற்றில் நீராடும்போது துஷ்யந்தன் அளித்த மோதிரம் ஆற்றில் விழுந்துவிட்டது. அதனைச் சகுந்தலை உணர்ந்துகொள்ளவில்லை. பிறகு துஷ்யந்தனுடைய அரண்மனையை அனைவரும் அடைந்து துஷ்யந்தனைக் கண்டார்கள். துருவாசமுனிவரின் வசவுரைப் பலனால் துஷ்யந்தன் சகுந்தலையை அடியோடு மறந்துவிட்டான். சகுந்

தலையைத் தான் எப்பொழுதும் கண்டதே இல்லை யென்று ஒரேயடியாகச் சாதித்து விட்டான்.

சகுந்தலை கண்ணீருந் கம்பலையுமாக அரண்மனையை விட்டுப் புறப்பட்டாள். ஒரு தேவதை தோன்றி அவளை உடனழைத்துச் சென்றது.

நிற்க. ஆற்றில் விழுந்த மோதிரத்தைமீன் ஒன்று விழுங்கியது. சில நாட் சென்றபின் அது வலைஞன் ஒருவனுடைய வலையிற் சிக்கியது. வலைஞர்கள் அம்மீனை அரண்மனைக்கு அனுப்பி வைத்தார்கள். அதனை அறுத்த வேலைக்காரர்கள் அதனுடைய வயிற்றிலே மோதிரத்தைக் கண்டெடுத்து அதனைத் துஷ்யந்தனிடங் காட்டினார்கள். உடனே அவனுக்குச் சகுந்தலையின் எண்ணம் உண்டாகியது. தூதர்களை அனுப்பிச் சகுந்தலையை எல்லா விடங்களினுந் தேடச் செய்தான். அவள் எங்கும் அகப்படவில்லை. மேலுஞ் சில ஆண்டுகள் சென்றன. சகுந்தலையினுடைய மகன் வளர்ந்து பெரியவனானன். ஒரு நாள் துஷ்யந்தன் காட்டிற்குச் சென்றபோது தன்னுடைய மகன் ஓர் அரிமாவோடும் அதன் குட்டியோடும் விளையாடுதலைக் கண்டான். பிறகு சகுந்தலையையும் அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு வந்து அவளோடு வாழ்க்கை நடத்தினன். (பாரதம்)

"தாதையன்றித் தானேதுச் சந்தனைச்சேர்ந்
[தின்னலுற்றுள்
சூதில் சகுந்தலைதான் சோமேசா—ஓதில்
கதுமெனத் தாநாக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்க துடைத்து"

[கண்விதுப்பழிதல்] (சோமேசர் முதுமொழி வெண்பா)

1214. சங்கரநாராயணனை கதை

முன்னாளில் சங்கன் எனவும் பதுமன் எனவும் பெயரையுடைய இருவர் இருந்தனர். இவர்களை மகாநாகர் என்பர்.

இவர்களிருவரும் உண்மைப் பொருள் சிவபெருமானென்றும் திருமாலென்றும் தம்முள் மாறுபட்டுச் சொற் போரிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய மாறுபாட்டை யொழிக்க விரும்பிய வியாழபகவான் அவர்களைப் பார்த்து "நீங்கள் நிலவுலகில் உள்ளபுன்னைவனத்தையடைந்து தவம் புரியுங்கள் உங்களுக்கு உண்மை விளங்கும்" என்று கூறி யருளினர். அவர்களும் அவ்வாறே இப்பதியை அடைந்து தவஞ் செய்தனர். திருமாலுஞ் சிவனும் ஒன்றென்பது அவர் களுக்குப் புலப்படுமாறு சிவபெருமான் முன்பு ஆவுடை நாய கிக்குக் காட்டியருளிய சங்கரநாராயணத் திருவுருவத்தைக் காட்டியருளினர். அவர்களும் உண்மையுணர்ந்து மாறுபாடு ஒழிந்தனர்.

"நிலைமை பெறுமெய்ப் பொருள் நேமியான் செங்கைக்
கொலைமழுவா னென்றுதம்மிற் கூறும்—மலைவொழியத்
தாமேவிச் சங்கபத்ம ரென்னுந் தடநாகம்
தேமேவு புன்னைவனஞ் சென்றுதொழப்—பூமேல்
இருவுருவு மொன்றாய் இறைவிக் களித்த
திருவுருவங் காட்டியருள் செய்ய"

[இருவரும் ஒன்றானது] (சங்கரலிங்க உலா)

1215. சங்கப்புலவர்கள் தருக்கடங்கிய கதை

திருவள்ளுவ நாயனார் தாம் இயற்றிய திருக்குறளை அரங் கேற்றஞ் செய்வதற்காக மதுரையில் அந்நாளில் இருந்த கடைச் சங்கத்திற்கு எடுத்துக் கொண்டு சென்றார். சங்கத் தார் திருவள்ளுவரையும் அவருடைய திருக்குறளையும் மதிக்க வில்லை. அவர்கள் திருவள்ளுவரைப் பார்த்து, நாங்கள் இருக்கும் இந்தச் சங்கப் பலகை உம்முடைய நூலுக்கு இடந் தருமானால் நாங்கள் அதனை யேற்றுக் கொள்கிறோம்" என்று கூறினர்கள்.

திருவள்ளுவர் தம்முடைய நூலினைச் சங்கப் பலகையின் மீது வைத்தார். சங்கப்பலகை திருக்குறள் எழுதப்பட்டிருந்த

ஏட்டினளவாகச் சுருங்கியது. அதன் மீதிருந்த சங்கப்புல வர்கள் நாற்பத்தொன்பது பேரும் பொற்றுமரையில் வீழ்ந்தார் கள். தட்டுத் தடுமாறிக் கரையேறிய அவர்கள் திருவள்ளுவ ரையுந் திருக்குறளையும் புகழ்ந்து ஆளுக்கொரு செய்யுள் பாடி னர்கள். அச் செய்யுட்கள் நாற்பத்தொன்பதுந் திருவள்ளுவ மாலை என்னும் பெயரொடு விளங்குகின்றன. கல்வியறிவிற் சிறந்தவர்களே உயர்ந்தவர்கள். மற்றவர்கள் தாழ்ந்தவர்கள் குலநலத்தினுல் எத்தகைய உயர்வும் ஏற்பட்டுவிடமாட்டாது என்பன அன்று சங்கட் புலவர்களிடமுந் திருவள்ளுவரிடமும் நன்கு விளங்கின.

"மெய்த்ததிரு வள்ளுவனுர் வென்றுயர்ந்தார் கல்விநலம்
துய்த்தசங்கத் தார்தாழ்ந்தார் சோமேசா—உய்த்தறியின்
மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றுர் அனைத்திலர் பாடு"

[கல்லாமை] (சோமேசர் முதுமொழி வெண்பா)

1216. சந்திரசேனன் கதை

முன்னுளில் ஆடவ நாட்டில் மாலியம் என்னும் நகரில் இரண்டு அந்தணர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவ னுடைய பெயர் சுபுத்தன்; மற்றவனுடைய பெயர் விபுலன். சுபுத்தனுக்குத் தருமன் என்னும் பெயருடைய ஒரு மகன் இருந்தான். விபுலனுக்குச் சந்திரசேனன், மிருதுசந்திரன் என்னும் பெயர்களுடைய இரண்டு பிள்ளைகளிருந்தார்கள். இவர்களில் தருமன் சந்திரசேனன் என்னும் இருவரும் வித்தியானந்தன் என்னும் பெயருடைய ஓர் அருந்தவனிடஞ் சென்று தங்கட்கு நல்லுரை கூறி யருளவேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள். அவ்வருந்தவன் இல்லறத்தின் இழிவையும் துறவறத்தின் உயர்வையும் இருவருக்கும் எடுத் துக் கூறினுன். இருவரும் அதனைக் கேட்டுக்கொண்டு வீட் டிற்கு வந்து சேர்ந்தார்கள்.

சந்திரசேனன் தன்னுடைய தந்தையிடம் தான் துறவியாகவேண்டுமென்று சொன்னான். மற்றொரு மகன் இருந்தபடியினால் தந்தை அதற்கு இசைந்தான். ஆகவே சந்திரசேனன் முக்கோல் துறவியானான். தருமன் தன்னுடைய தந்தையிடம் தான் துறவியாக விரும்புதலைத் தெரியப்படுத்தினான். சுபுத்தன் தன்னுடைய வழிமுறைக்கு வேறுபிள்ளையில்லாதபடியினால், ''நீ துறவியாகக் கூடாது'' என்று சொல்லித் தடுத்தான். தருமன் தன்னுடைய தந்தை கூறியதைக் கேட்கவில்லை. துறவியாகியே தீர்வேன் என்று பிடிவாதமாக இருந்தான். தாய் தந்தையரும் சுற்றத்தார்களும் அழுது வருந்தினர்கள். அப்பொழுது பிருகு முனிவர் என்பவர் அங்கு எழுந்தருளினார். பல காரணங்கூறித் தருமன் துறவியாகாமல் தடுத்தார். திருமணம் நடத்தச் செய்து ஐந்தெழுத் தருமறையையும் கூறிச் சென்றார். தருமனும் குருவின் மொழிவழியே ஒழுகினான். நாட்கள் பல சென்றன. துறவியாகச் சென்ற சந்திரசேனன் ஒருநாள் ஊர்வழியே வந்தான். அவனைக் கண்ட தருமன் அவனோடு உரையாடினான்.

அப்பொழுது சந்திரசேனன் தான்பெற்ற பேற்றினைப் பெரிதாகக் கூறினான். தருமனைத் தாழ்த்திப் பேசினான். ''இந்திரனையும் என்னால் இங்கு அழைக்க முடியும்'' என்று சொல்லி இறுமாந்து நின்றான். தருமன் ''எங்கே அழை பார்ப்போம்'' என்றான். உடனே சந்திரசேனன் இந்திரனை அங்கு வரவழைத்தான். இந்திரன் வந்து சேர்ந்ததும் தன்னைப் பணிந்து நின்ற சந்திரசேனனுக்கு யாதும் உரையாது அப்பொழுதே சென்று விட்டான். சென்ற பிறகு தருமனும் இந்திரன் அங்கு வருமாறு எண்ணினான். எண்ணிய அளவில் இந்திரன் அங்கு வந்தான். தருமனை வணங்கிப் புகழ்ந்து பலவாறு போற்றினான். பிறகு விடைபெற்றுக்கொண்டு சென்றான்.

இவ்வேறுபாட்டைக் கண்ட சந்திரசேனன் வியப்படைந்து நின்றான். தருமன், ''நான் நான்முகனையும் அழைப்பேன் பார்ப்பாயாக'' என்று சொல்லி அழைத்தான். அது செய்ய முடியாத சந்திரசேனன் தன்னுடைய ஆணவம் இழந்தான். தருமனிடம் ஐந்தெழுத் தருமறையை முறைப்படி

கூறுமாறு கேட்டுப் பெற்றுன். இருவருஞ் சிவகதியடைந் தனர். முறைப்படி இல்வாழ்க்கையை நடத்துபவன் மிகுந்த சிறப்புடையவனுவான் என்பது தருமனிடம் நன்கு விளங்கியது.

" இல்வாழ் தருமன் இயற்சந் திரசேனன்
தொல்வார்த்தை கீழ்ப்படுத்தான் சோமேசா—நல்ல
இயல்பினுன் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாந் தலை."

[இல்வாழ்க்கை] (சோமேசர் முதுமொழி வெண்பா)

1217. சந்திரமதி கதை

சந்திரமதி யென்பவள் மெய்ம்மை பேசுதலைக் கடைப் பிடித்து நின்ற அரிச்சந்திரனுடைய மனைவி. இவள் சிறந்த கற்புடையவள். அரிச்சந்திரனுடைய மெய்ம்மைத் தன்மையை ஆராய்ந்து பார்க்க எண்ணிய முனிவர்களின் செயலால் அம் மன்னன் நாடு நகரம் முதலியவைகளை யிழந்தான். அரிச் சந்திரனை மிகுதியான அல்லலுக்குட்படுத்தி அவனைப் பொய்யனுக்க எண்ணிய விசுவாமித்திரர் பலதுன்பங்களைச் செய்தார். சந்திரமதியை விற்றுப் பொருள் கொடுக்கும்படி யான நிலைமையையும் உண்டாக்கினர்.

அரிச்சந்திரன் உண்மை நெறியைக் கடைப்பிடித்து நிற்றலையே பெரும் பேருகக் கருதிய சந்திரமதி தன்னுடைய ஆருயிருக் கொப்பான தலைவனையும் பிரிதற்குத் துணிந்தாள். பொருளை நாடிச் சுற்றித் திரிந்தவர்கட்குத் தன்னை விற்றுப் பொருள் கொடுக்கச் சொன்னுள். அவளுடைய மனத்திட்பத் தைக் கண்டோர் பெரிதும் பாராட்டினர்.

(அரிச்சந்திர புராணம்)

" சத்தியந்தப் பாமலரிச் சந்திரற்குச் சந்திரமதி
சித்தமொரு மித்தாள் சிவசிவா—புத்தியுடன்

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்''

[கற்பு] (சிவசிவவெண்பா)

1218. சராசந்தன் கதை

மகதநாட்டை முன்னாளில் பிருகத்ரதன் என்னும் பெயருடைய அரசன் அரசாட்சி செய்துகொண்டிருந்தான். இவனுக்கு வெகுநாள் வரையில் மக்கட்பேறு உண்டாகவில்லை. மக்கட்பேற்றை விரும்பிய அரசன் காட்டிற்குச் சென்று அங்குத் தவம் புரிந்துகொண்டிருந்த சண்டகௌசிகன் என்னும் பெயரையுடைய ஒரு பெரிய முனிவரைக் கண்டு தன்னுடைய குறையைச் சொல்லி முறையிட்டுக்கொண்டான்.

அம்முனிவரின் இருப்பிடத்தில் சிறந்த மாமரம் ஒன்று விளங்கியிருந்தது. அம்மரத்தின் கனியொன்றை ''அரசன் மக்கட் பேற்றையடைய வேண்டும்'' என்னும் வாழ்த்துரையோடு முனிவர் அரசனுக்களித்தார். அவ்வரசன் அக்கனியைப் பெற்றுக்கொண்டு தனது அரண்மனையை அடைந்தான். அவனுக்கு இரண்டு மனைவியர் இருந்தனர். அவன் அக்கனியை இரண்டாக அறுத்து இருவருக்கு மீந்தான். அக்கனியை இருவரும் உண்டபடியால் இருவரும் கருப்பமடைந்தனர். பிறகு இருவரும் அரை அரைக் குழந்தையைப் பெற்றனர். மாங்கனியை இரண்டாக அறுத்துக் கொடுத்த தன் பலனை அரசன் அப்பொழுதுதான் அறிந்தான். இரு கூறுக விளங்கும் குழந்தையை வைத்துக் கொண்டு என்ன செய்வது? அரசன் அக்குழந்தையை ஊருக்கு வெளியில் எறிந்துவிடுமாறு கட்டளையிட்டான். குழந்தையின் கூறுகள் அவ்வாறே எறியப்பட்டன.

சரையென்பவள் ஓர் அரக்கி (கிராம தேவதை என்றுங் கூறுவர்), அவள் நள்ளிரவில் நகரைச் சுற்றிக்கொண்டு வந்தாள். எறியப்பட்டுக் கிடக்கும் குழந்தைப் பாதியைக்

கையிலெடுத்து ஒன்றுகப் பொருத்திப் பார்த்தாள். குழந்தை பிழைத்துக்கொண்டது. அவள் அதனை அரசனிடங்கொடுத்து வளர்க்குமா றியம்பிச் சென்றாள். சரை யென்பவளால் சந்து செய்யப்பட்டபடியால் அக்குழந்தைக்குச் சராசந்தன் என்று பெயரிட்டு வளர்த்தான்.

சராசந்தன் வளர்ந்து பெரியனுகிக் கிரிவிரசம் என்னும் நகரத்தில் இருந்து அரசாட்சி செய்தான். மக்களுக்கும் பிறருக்குங் கொடுமை செய்தான். அரசர் பலரை வென்று சிறையில் அடைத்து வைத்திருந்தான். இவனைக் கொன் றொழிக்க விரும்பிய கண்ணபிரான் வீமனைக்கொண்டு கொன்று தொலைத்தார்.

[சராசந்தன்] (பாகவதம்)

1219. சலந்தரன் தோன்றியகதை

இந்திரன் ஒரு காலத்தில் திருக்கையிலாயத்திற்குச் சென் றான். சிவபெருமான் தம்முடைய வடிவத்தை மாற்றிக் கொண்டு வழியில் நின்றார். இந்திரன் வடிவு மாறி நிற்குந் சிவபெருமானைப் பார்த்து, "நீ யாவன்? எத்தொழில் புரி வோன்?" என்று உசாவினன். அதற்கு மாறுவடிவச் சிவ பெருமான் யாதுங் கூறுதிருந்தார். இந்திரன் சினந்து தன் கையிலிருந்த வச்சிரப் படையினால் தாக்கினன். அது பொடியாக உதிர்ந்து போயது. சிவபெருமானுக்குச் சினம் உண்டாகியது. ஓர் உருத்திர வடிவத்தை மேற்கொண்டார். இந்திரன் அஞ்சிப் பலவகையாகப் புகழ்ந்து போற்றினன். சிவபெருமான் மனம் பொறுத்தார். தம் சினத்தினால் உண் டாகிய வியர்வை நீரை வழித்தெறிந்தார். அது மேல் கட லில் வீழ்ந்து ஓர் ஆண் குழந்தையாகியது. கடலரசன் அக் குழந்தையைத் தனது மகனெனக் கொண்டு வளர்த்து வந் தான். சலத்தில் தோன்றியபடியால் அக்குழந்தை சலந்த ரன் என்னும் பெயரைப் பெற்றது. அக்குழந்தை வளர்ந்து பெரியவனனவுடன் அவுணர்களுடன் கூடினன். அசுரத்தச் சனால் ஓர் அழகிய நகரத்தை உண்டாக்கிக்கொண்டு கால

நேமியின் மகளாகிய விருந்தை என்பவனை மணந்து வாழ்க்கை நடத்தினன். மேருமலையில் இருந்த தேவர்களோடு போர் புரியக் கருதிச் சென்றான். தேவர்கள் திருமாலை வேண்டிக்கொண்டார்கள். அவர் கருடன் மீது ஏறிக் கொண்டு அவனோடு போர் புரியச் சென்றார். இருபதினாயிரம் ஆண்டுகள் போர் புரிந்தும் அவனை வெல்ல முடியவில்லை. பிறகு சிவபெருமான் தம்முடைய காற்பெரு விரலால் நிலத்திற் கீறிய உருளைப் படையினால் மாண்டான்.

[சலந்தரன் வரலாறு]

1220. சிந்து நாட்டரசன் மாண்ட கதை

சிந்து நாட்டரசன் பாரதப் போரில் துரியோதனன் பக்கத்திற் சேர்ந்து போர் செய்தான். அப்போரில் சிந்து நாட்டரசனுடைய மகனும் கலந்திருந்தான். சிந்து நாட்டரசன் தன்னுடைய மகன் தலையை யார் நிலத்தில் வீழ்த்துகிறார்களோ அவர்கள் உடனே மடிய வேண்டுமென்று இறைவனை நோக்கித் தவம் புரிந்தான். இறைவன் தோன்றி "அவ்வாறே ஆகுக" என்று அருள் புரிந்து மறைந்தார். கண்ணன் இச்செய்தியை உணர்ந்தார். அருச்சுனன் சிந்து நாட்டரசன் மகனோடு போரிட்டுக் கொண்டிருந்தான்.

கண்ணபிரான் அருச்சுனனைப் பார்த்து, "சிந்து நாட்டரசனுடைய மகன் தலையை அறுத்து நிலத்தில் வீழ்த்திவிடாதே. அவ்வாறு வீழ்த்துவாயானால் நீயும் மாண்டொழிய நேரிடும். சிந்து நாட்டரசன் தன்னுடைய மகன் தலையை நிலத்திலே வீழ்த்துவோன் உடனே மடிய வேண்டுமென்று வரம் பெற்றிருக்கிறான். அறுக்கப்படுகிற தலையைக் கணையினாலேயே தள்ளிக்கொண்டுபோய்ச் சிந்து நாட்டரசனுடைய கையில் வீழ்த்துவாயாக" என்று உரைத்தார்.

அருச்சுனன் கண்ணன் கூறியபடி அவன் தலையை அறுத்தான். நிலத்தில் விழவிடாமல் கணையினாலே தள்ளிக் கொண்டுபோய் ஓரிடத்தில் அமர்ந்து கண்ணை மூடியவாறு

கடவுளே எண்ணியிருந்த சிந்து நாட்டரசனுடைய மடியில் வீழ்த்தினன். சிந்து நாட்டரசன் அப்பொழுது கையை மடியில் வைத்துக் கொண்டிருந்தான். தன்னுடைய கையில் எதுவோ வந்து வீழ்ந்ததைக் கண்டு திடுக்கிட்டான். அஃது இன்னதென்று கண்ணைத் திறந்து பாராமலே அதனை நிலத்தில் எறிந்தான். இப்பொழுது தலையை நிலத்தில வீழ்த்திய வன் இவனேயாகிவிட்டபடியால் உடனே மாண்டு தொலைந்தான். சிறுமையான செயல்களைச் செய்துவிட்டு மகிழ்ந்திருப்போர் அதன் பலனை விரைவில் அடைவார்கள் என்பது இவனிடம் நன்கு விளங்கியது.

—(பாரதம்)

"மைந்தன் முடிவீழ்த்தான் மாள்கவெனக் கைவிரித்த
சிந்துபதி பட்டான் சிவசிவா—தந்தம்
சலத்தால் பொருள் செய்தே மாத்தல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீ இ யற்று."

[வினைத் தூய்மை] (சிவசிவ வெண்பா)

1221. சிற்றுணர்வு தின்ற கதை

குசேலருங் கண்ணபிரானும் இளமைப் பருவத்தில் நண்பர்கள். இளமைப் பருவம் கழிந்தபின் இருவரும் பிரிந்தார்கள். துவாரகையில் கண்ணபிரான் எல்லா வகையான சிறப்புக்களோடும் இனிது வாழ்ந்திருந்தார். குசேலரோ வறுமையால் மிகவும் வாடினர். மேலுங் குசேலருக்கு மக்களும் இருபத்தெழுவர் தோன்றினர். வறுமையினால் எவ்வளவோ துன்பத்தை அடைந்தும் தம்முடைய இளமைப் பருவ நண்பராகிய கண்ணபிரானைச் சென்று பார்க்க விருப்பமற்றவராக விருந்தார். பிறகு ஒருவாறு துணிந்து ,எழுந்து துவாரகைக்குச் சென்றார்.

வெறுங் கையோடு போய்க் கண்ணனைப் பார்க்கக் கூடாது என்று எண்ணிய குசேலர் தமக்குக் கிடைத்த கம்

பரிசியில் ஓர் அரைப் படியைத் துணியில் முடிந்துகொண்டு சென்றார். குசேலரைக் கண்ட கண்ணபிரான் மகிழ்ந்தார். அவரோடு அன்பு பாராட்டி அளவளாவினர். "நான் தின் பதற்கு யாது கொண்டு வந்திருக்கிறீர்?" என்று உசாவினர். குசேலர் தாம் கொண்டு வந்திருந்த கம்பரிசியை மிகுந்த நாணத்தோடு எடுத்துக் கொடுத்தார். இவ்வரிசியில் ஒரு பிடியை அள்ளித் தின்றார். குசேலருக்கு நன்மை உண் டாக்க வேண்டுமென்னும் எண்ணத்தோடுதான் அதனை வாங்கி யுண்டார். இதனால் குசேலருடைய வறுமை அடி யோடு தொலைந்தது. எல்லா வகையான நன்மைகளும் உண்டாயின.

(குசேலோபாக்கியானம்)

"உற்ற குசேலனலம் உற்றிருத்தற் காவுவந்தோர்
சிற்றுணவுட் கொண்டான் சிவசிவா—சுற்றும்
உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

[நட்பு] (சிவசிவ வெண்பா)

1222. சீமந்தனி கதை

ஆரியவர்த்தன மென்னும் நாட்டரசனுகிய சித்திரவர் மன் என்பவனுக்குச் சில ஆண் பிள்ளைகளிருந்தார்கள். பெண் மகவு ஒன்றினை அடையவேண்டும் என்று விரும்பிய அரசன் தவம் புரிந்து ஒரு பெண் மகளைப் பெற்றான். காலக் கணிதர்களை யழைத்துப் பிறந்தநாட் பலனை உசாவினன். ஒரு காலக் கணிதன், "உன்னுடைய மகள் பதினுயிரம் ஆண்டு கணவனுடனே இனிது வாழ்வாள்" என்று சொன்னன். வேருெருவன் பதினன்காவது அகவையில் கணவனை இழப் பாள்" என்று சொன்னன். சித்திர வர்மன் எல்லாஞ் சிவ பெருமானுடைய செயலின்படி நடக்குமென்று பேசாம லிருந்தான்.

சீமந்தனி உரிய பருவத்தை யடைந்தபொழுது இரண்டாவது காலக்கணிதன் கூறியதை அறிந்தாள். தவமூதாட்டி ஒருத்தியிடஞ் சென்று அச்செய்தியைக் கூறினாள். அம்மூதாட்டி சீமந்தனியைப் பார்த்து, "நீ திங்கட்கிழமை நோன்பினை நோற்பாயாயின் உனக்கு எவ்விதமான குறையும் நேராமாட்டாது" என்று கூறினாள். சீமந்தனியும் அந்நோன்பினை மேற்கொண்டாள்.

சீமந்தனியை நிடதநாட்டரசனுகிய இந்திரசேனன் என்பவனுடைய மகன் சந்திரசேனன் என்பவன மணம் புரிந்து கொண்டான். அவன் ஒரு நாள் தன் நண்பர்கள் சிலரோடு யமுனையாற்றில் ஓடமேறிச் சென்றான். அவ்வோடம் கவிழ்ந்தது. சந்திரசேனனுடைய நண்பர்கள் யாவரும் முதலை வாயில் அகப்பட்டுக் கொண்டனர். சந்திரசேனன் சீமந்தனியின் நோன்புப் பலனுல் பாதலம் புகுந்து தட்சகன் என்னும் பாம்பரசனுல் போற்றப் பெற்றிருந்தான். சீமந்தனி தன் கணவனுடைய வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். சந்திரசேனன் தட்சகனிடம் விடைபெற்றுக்கொண்டு பூவுலகத்திற்குத் திரும்பினன். அதற்குள் மூன்றுண்டுகள் சென்றுவிட்டன.

திரும்பி வந்த சந்திரசேனன் தன்னுடைய தந்தையைப் பகைவர்கள் சிறையிலிட்டு நாட்டைக் கைப்பற்றி யிருத்தலை யுணர்ந்தான். பகைவர்களை விரட்டித் தந்தையைச் சிறையினின்று மீட்டுப் பழையபடி அரசனுக்கினன். சீமந்தனியை இரண்டாவது முறை மணம் புரிந்து இனிது வாழ்ந்தான்.

(பிரமோத்திர காண்டம்)

"சந்திரசே னன்வரவு நோக்கியுயிர் தாங்கினளால்
சுந்தரசீ மந்தனிதான் சோமேசா—முந்தும்
உரனசைஇ உள்ளந் துணையாகச் சென்றூர்
வரனசைஇ இன்னு முளேன்"

[அவர்வயின் விதும்பல்] (சோமேசர் முதுமொழி வெண்பா)

1223. சுரசையின் கதை

சுரசை என்பவள் அசுரேசனுடைய மகள். இவள் சுக்கிரபகவானிடம் மாயக் கலைகளையெல்லாங் கற்று வல்லவளாகினள். பிறகு அவன் கூறியவாறே காசிப முனிவர் தவஞ்செய்துகொண்டிருக்கும் இடத்தை அடைந்து அவருக்கு முன்னே பேரழகுடையவளாக நின்றுள். காசிபர் சுரசையைக் கண்டு காதல் கொண்டு மயங்கினர். தமக்கு இணங்குமாறு வேண்டினர். அவள் முதலில் இணங்காதவளைப் போலப் பிணங்கிப் போக்குக் காட்டினள். காசிபர் அவளைக் காணுது வருந்திப் புலம்பினர். அவள் மறுபடியுந் தோன்றி அவருக்கு இணங்கினள். சூரபன்மன் முதலியோர் சுரசைக்கு மக்களாகத் தோன்றினர். மாதர் மயலிற் சிக்கியோர் தவம் முதலியவைகளை விட்டொழிப்பரென்பது காசிபரிடம் விளங்கியது.

(கந்தபுராணம்)

"மெய்த் தவத்தைக் காசிபனும் விட்டொழித்து
[மாயைபால்
சுத்தமனம் வைத்தானே சோமேசா—இத்தலத்தில்
தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணுன் உலகு"

[மாதர் மயல்] (சோமேசர் முதுமொழி வெண்பா)

1224. சூரியசன்மா கதை

முன்னாளில் கௌசிக நாட்டில் விக்கிரம நகரத்தில் இரண்டு அந்தணர்களிருந்தார்கள். அவர்களில் ஒருவனுடைய பெயர் சூரிய சன்மா; மற்றவனுடைய பெயர் ஆனந்தன். இவர்களில் ஆனந்தன் என்பவன் வஞ்சகன். சூரிய சன்மாவோ நல்லியல்புகள் அமையப் பெற்றவன். இருவருக்கும் பகையுண்டாகியது. வஞ்சகனாகிய ஆனந்தன் நல்லவ

ஞகிய சூரிய சன்மாவை எதிர்த்து வெல்ல முடியாதென்றறிந்தான். வஞ்சனையால் வெல்ல வேண்டும் என்று முடிவு செய்தான். ஒரு நாள் சூரிய சன்மாவிடம் வந்து, ''அன்பனே! அறிவில்லாதபடியினால் இவ்வளவு காலமாக உன்னோடு பகைத்துக் கொண்டிருந்தேன். அதனைப் பொறுத்தருள்க'' என்று கூறி வீழ்ந்து வணங்கினன்.

சூரிய சன்மா ஆனந்தனுடைய வஞ்சகத்தை அறிந்து கொள்ளவில்லை. ஆனந்தன் தன்னிடம் உண்மையாக நடந்து கொள்ளுகிறான் என்று எண்ணினான். அவனிடங் கொண்ட பகையை ஒழித்தான். அவனோடு மிகுதியாக நெருங்கிப் பழகினன். நாட்கள் பல சென்றன.

ஆனந்தன் ஒரு நாள் தன்னுடைய எண்ணத்தை முடிக்க எண்ணினான். சூரிய சன்மாவைப் பார்த்து, ''ஐய! நமது தெருவில் புலியொன்று இரவில் வருகிறது. நான் அது வருஞ் சமயத்தைப் பார்த்துக் கொண்டிருந்து உம்மைக் கூப்பிடுகிறேன். நீர் உடனே வெளிவந்து அதனைக் கொல்லுவீராக'' என்று சொன்னான். பிறகு ஓர் ஆவுக்குப் புலியின் தோலைப் போர்த்தினான். நள்ளிரவில் நடுத்தெருவிற் கொண்டு வந்து நிறுத்தி விட்டுச் சூரிய சன்மாவை அழைத்தான். சூரிய சன்மா ஓடி வந்து அம்பெய்து அவ்வாவினைக் கொன்றான். ஆவினைக் கொன்ற தீவினை சூரிய சன்மாவைப் பற்றியது.

மேலும் ஆனந்தன் சூரிய சன்மாவைப் பார்த்து, ''உம்முடைய மனையிற் கள்வர்கள் வந்துள்ளனர். நான் அங்குப் போய் அவர்களை விரட்டி விட்டு வருகிறேன். நீர் இவ்விடமே இருப்பீராக'' என்று கூறிவிட்டுச் சூரிய சன்மாவினுடைய இல்லத்திற்குச் சென்று, சூரிய சன்மாவின் மனைவியைப் பார்த்துக் ''கள்வர் இங்கு வருவதாக உள்ளனர். நீர் உம்முடைய மகன் இல்லத்திற்குச் சென்று அங்குத் தங்கியிருப்பீராக'' என்று கூறி அவனை அவளுடைய மகனில்லத்திற்கு அனுப்பிவிட்டான். பிறகு சூரிய சன்மாவினுடைய மகனையும் மருமகனையும் அவ்வீட்டிற் கொண்டு வந்து சேர்த்து விட்டு விரைவாகச் சூரிய சன்மாவிடஞ் சென்றான். சூரிய சன்மாவைப் பார்த்து, ''நண்பரே! ஒரு தகாத செய்கை நடைபெறுகின்றது. உம்முடைய மனையாள் வேறொருவனோடு

ஒன்றுபட்டிருத்தலைக் கண்டேன். உடனே இல்லத்திற்குச் சென்று காண்பீராக என்று சொன்னான்.

சூரிய சன்மா விரைவாகத் தன்னுடைய இல்லத்திற்குச் சென்றான். வாசற் கதவு அடைத்திருந்தபடியினால் புறக் கடை வழியாக மதிற் சுவர் ஏறி வீட்டிற்குட் புகுந்தான். இரண்டு பேர் பாயில் படுத்திருத்தலைக் கண்டான். அவர் கள் இருவரும் தன்னுடைய மகனும் மருமகளும் என்றுணராது கொலை செய்தான்.

மறுநாட் காலையில் சூரிய சன்மாவினுடைய மனைவி தன்னுடைய இல்லத்திற்கு வந்தாள். மகனும் மருமகளும் மாண்டு கிடத்தலைக் கண்டாள். வாயினும் வயிற்றினும் அடித்துக் கொண்டு கதறினாள். அவளுடைய அழுகை ஓலியைக் கேட்ட சூரிய சன்மா விரைந்தோடி வந்தான்; நடந்த வஞ் சனையை அறிந்து தானும் புலம்பினான்.

ஆனந்தன் அந்தணர்களுடைய அவைக்குச் சென்று, "சூரிய சன்மா ஆவினைக் கொலை செய்தது மல்லாமல் மக னையும் மருமகளையும் கொன்று விட்டான்" என்று சொன் னான்.

அவையினர் சூரிய சன்மாவைக் கூப்பிட்டு உசாவினர் கள். சூரிய சன்மா உள்ளம் வருந்தினான். அவர்களைப் பார்த்து, "ஐயன்மீர்! இவை வஞ்சனையினால் நிகழ்ந்தன. ஆனந்தனே இவைகளுக் கெல்லாம் காரணம்" என்று சொன்னான். அவையினர், "அவ்வாருயின் நீ கேதார நாதன் திருமுன்புள்ள நந்திக்குப் புல் அருத்துவாயா?" என்று கேட்டனர். அதற்குச் சூரியசன்மன், "அந்நந்திக்கு மட்டுமன்று, திருமதிலில் உள்ள நந்திகட்கும் கோபுரத்தில் உள்ள நந்திகட்கும் உடனே புல்லருத்துவேன் வருக" என்று சொன்னான்.

நான்கு அந்தணர்கள் சூரிய சன்மனைடு சென்றார்கள்.

"கேதாரநாதனுடைய திருப் பெயராகிய ஐந்தெழுத்துக் கட்குத் திருவருள் உண்டெனில் நந்திகளே வருக" என்றான். சூரியசன்மா. உடனே அந்நந்திகள் வந்து சூரியசன்மா தந்த புல்லைத் தின்றன. அவ்வருஞ் செயலை வியந்து அனை வரும் சூரிய சன்மாவை வணங்கினார்கள்.

சூரியசன்மாவினுடைய மனைவி இறந்துபோன ஆவும் மகனும், மருமகளும் உயிர் பெற்றெழும்படி செய்ய வேண்டும் என்று வேண்டிக்கொண்டாள். சூரியசன்மா ஐந்தெழுத்தருமறையை ஓதிய அளவில் ஆ வுயிர் பெற்று எழுந்தது; மகனும் மருகியும் உயிர் பெற்றெழுந்தனர். அனைவரும் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்கள். வஞ்சகனுகிய ஆனந்தன் காட்டை அடைந்து மறைந்து சில காலம் வசித்தான். பிறகு மாண்டு நிரயத்தை அடைந்தான். எவனுடைய செயலையும் நன்கு ஆராய்ந்து பார்த்த பிறகே தெளிதல் வேண்டும். இன்றேல் தீமை நேரிடுவது திண்ணம்.

(உபதேச காண்டம்)

" தேரருமா னந்தனைமுன் தேறிப் பழிபூண்டான்
சூரியசன் மாவென்பான் சோமேசா—தாரணிமேல்
தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும் "

[தெரிந்து தெளிதல்] (சோமேசர் முதுமொழி வெண்பா)

1225. செங்குந்தர் உயிர்பெற்ற கதை

செங்குந்தர்கள் ஒட்டக்கூத்தரைக் கண்டு தங்கள் மரபினைக் குறித்து ஒருநூல் இயற்றவேண்டும் என்று கேட்டார்கள். ஒட்டக்கூத்தர் செங்குந்தர்களைப் பார்த்து, " நாமுஞ் செங்குந்த மரபினரா யிருத்தலால் நமது மரபைக் குறித்து நாமே புகழ்ந்து பாடிக் கொள்ளுதல் அவ்வளவு சிறப்புடைய தன்று. பிறமரபினர்கள் புகழ்ந்து பாடினுல்தான் சிறப்பாக இருக்கும். கந்தபுராணம் நம் மரபின் பெருமையை நன்கு நவில்கின்றது. நம் மரபின் பெருமை விளங்குதற்கு அஃதொன்றும் போதிய தாயிற்றே " என்று கூறி மறுத்தார். ஆனல் செங்குந்தர்கள் கூத்தர் கூறிய உரையை ஒப்புக் கொள்ளவில்லை. பாடத்தான் வேண்டுமென்று கட்டாயப் படுத்தினர்.

பிறகு கூத்தர் புவனையென்னும் ஊருக்குப் போய் அங்கு தமக்கு நண்பராக விருந்த சோமாசியாண்டார் என்னும் அந்

தணருடைய இல்லத்திற்குச் சென்று அங்குத் தம்முடைய நாட்கடன்களைச் செய்துகொண்டிருந்தார். செங்குந்தர்கள் நாம் விரும்பியதை மறுத்துச் சென்ற ஒட்டக் கூத்தர் குலப் பற்றுச் சிறிதும் இல்லாதவர். இவரைக் கொலை செய்தாலும் தகும். ஆகையால் கொன்று தீர்த்துவிடுவோமென்று முடிவு செய்து தேடிக்கொண்டு கூத்தர் தங்கியிருந்த அந்தணர் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். அந்தணரைப் பார்த்துக், கூத்தரைத் தங்களிடம் ஒப்புவிக்க வேண்டுமென்று கேட் பார்கள்.

தம்மிடம் வந்து சேர்ந்துள்ள நண்பரைச் செங்குந்தர்க ளிடம் ஒப்புவித்தற்கு அந்தணருக்குச் சிறிதும் விருப்ப மில்லை. அந்தணர் கூத்தருக்குச் செய்தியைக் கூருமலே தம் பிள்ளை யொன்றைப் பேழை யொன்றில் வைத்து மூடி அவர்களிடங் கொண்டு வந்து கொடுத்துக், " கூத்தர் இதற் குள் இருக்கிருர். இவ்வூரெல்லையைக் கடந்து அப்பாற் கொண்டுபோய்ச் செய்யவேண்டியதைச் செய்து கொள்ளுங் கள் " என்று கூறினர்.

செங்குந்தர்கள் அந்தணர் கூறியதை உண்மைதா னென்று நம்பிக் காட்டிற் கொண்டுபோய்ப் பேழையைத் திறந்து பார்த்துப் புலவரில்லாமல் வேறு பெயர் வழி இருப்ப தைக் கண்டு ஏமாந்தனர். மீண்டும் கூத்தரையடைந்து வேண்டிக்கொண்டனர். " தலையினுல் இருக்கை ஒன்று அமைப்பீர் களானுல் அதன் மீதிருந்து பாடுவேன் " என்ருர். செங்குந்தர்கள் தலைகளை வெட்டி அதனைக் கொண்டு அரி யணை ஒன்றை அமைத்து அதன் மீதிருந்து பாடச்செய்தனர். கூத்தர் ஈட்டி எழுபது என்னும் நூலைப் பாடினுர். பிறகு இறந்து போன செங்குந்தர்களைப் பிழைப்பிக்க எண்ணிச் செய்யுளொன்று பாடினுர். வெட்டப்பட்டு அரியணையாக இருந்த தலைகள் தத்தமக்குரிய உடல்களிற் பொருந்தி உயிர் பெற்றன. இதன் பின்னரே கூத்தப் புலவருக்கு ஒட்டக்கூத்தர் என்று பெயருண்டாகியது.

" கலைவாணி நீ உலகில் இருப்பதுவும்
[கல்வியுணர் கவிவல் லோரைத்
தலையாகக் காப்பதுவும் அவர் நாவில்
[வாழ்வதுஞ் சத்தியமே யன்ரு

சிலேவாண னுவிருந்தா யிரம்புயங்கள்
[துணிந்துமுயர் சீவ னுற்றான்
தலேயாவி கொடுத்திடுஞ்செங் குந்தருயிர்
[பெற்றிடநீ தயைசெய் வாயே''

(உயிர் பெற்றது) [எழுப்பெழுபது]

1226. செங்குந்தர் பாவாடையிட்ட கதை

செங்குந்த மரபினர்கள் தம் மரபினர்மீது நூல் ஒன்று இயற்ற வேண்டுமென்று கேட்டபொழுது கூத்தர் இரத்தப் பாவாடை போடவேண்டுமென்றுந் தலேயினல் அரியணை அமைக்க வேண்டுமென்றும் சொன்னர். செங்குந்தர்கள் ஆயிரத்தெட்டுத் தலேகளே வெட்டி உதிரப் பாவாடை இட்டு அத்தலேகளே அரியணைபோல் அடுக்கினர்.

செங்குந்தர்கள் இரத்தப் பாவாடையிட்ட செய்தியும் தலேயினல் அரியணை அமைத்த செய்தியும் உலகமெங்கும் பரவிச் செங்குந்தர்களுடைய புகழை மிகுதியாக்கின. இதனேப் பற்றிய பிற செய்திகளே முன் கதையிற் காண்க.

''பூவார் புவனியில் சோமன் தரும்பழி போனபின்பு
நாவாணர் போற்றிய நாடகங் கேட்ப நலமுடனே
ஆவாணர் செங்குந்தர் ஆயிரத் தெண்தலே
[கொய்திரத்தப்
பாவாடையிட்ட துலகமெல் லாம்புகழ் பாலித்த தே''

[இரத்தப் பாவாடை யிட்டது] (சுட்டியெழுபது)

1227. செய்யுளியற்றிய கதை

சோழன் அரசு செய்து கொண்டிருந்தான். அவனுடைய அவையிற் புலவர்கள் பலர் குழுமி யிருந்தார்கள்.

வெளியிடத்துப் புலவர்கள் பலர் சோழன்மீது செய்யுள் பாடிக் கொண்டு வந்து அடிக்கடி பெருந் தொகையை நன்கொடையாகப் பெற்றுச் சென்றனர்.

அந்நாளில் அறிவிலி ஒருவன் இருந்தான். அவனுக்குக் கல்வி மணம் சிறிதும் கிடையாது. வறுமையில் வாடிய அவன் புலவர்கள் அரசன்மீது பாட்டு பாடிக்கொண்டுபோய் பொருள் பெறுகிறார்களே நாமும் ஏன் பாட்டும்பாடிக்கொண்டு போய்ப் பெறக்கூடாது என்று எண்ணினான். எவ்வாறுவது ஒரு பாட்டைப் பாட வேண்டுமென்று முடிவு செய்தான். தன் நண்பன் ஒருவனிடம் போய், "அரசன்மீது பாட்டியற்றிக் கொண்டு போய்ப் பொருள்பெற வேண்டும் பாட்டு எவ்வாறு பாடுவது?" என்று கேட்டான். அந்நண்பன், "அதைப் பற்றி என்ன? கன்னு பின்னு, மன்னு தென்னு என்று பாடிக்கொண்டு போ. இது ஒரு பெரிய காரியமா?" என்றான். அறிவிலி தன்னுடைய நண்பன் கூற்றை மெய்யென்று கொண்டான். "கன்னு பின்னு மன்னு தென்னு" என்பதை மறந்துவிடாமல் உருவேற்றிக்கொண்டு சென்றான். வழியில் ஒருவன் ஏதோ பேச்சு வாக்கில், "உங்கள் அப்பன்" என்று பேசியது இவனுடைய காதில் விழுந்தது. இந்தப் பாவாணன் அதனையுந் தன்னுடைய பாட்டோடு சேர்த்துக் கொண்டு சென்றான். ஒரு பெருச்சாளி கோவிலில் வலை தோண்டிக் கொண்டிருந்தது. கோவிற் பெருச்சாளி என்பதையும் பாட்டோடு சேர்த்தான். மேலும், "மண்ணுண்ணி மாப்பிள்ளையே காவிறையே கூவிறையே" என்பதும் இவனுடைய பாட்டிற் சேர்ந்தது. ஆகவே, இப்பொழுது இவனுடைய பாட்டு;

"கன்னு பின்னு மன்னு தென்னு
உங்களப்பன் கோவிற் பெருச்சாளி
மண்ணுண்ணி மாப்பிள்ளையே
காவிறையே கூவிறையே"

என்று நீண்டுவிட்டது. இப்பொழுது இம்மூடன் தான் பாட்டுப் பாடி விட்டதாக மிகுந்த மகிழ்ச்சிகொண்டான். பாட்டு மறந்து போகாமல் அடிக்கடி சொல்லி நெட்டுருச் செய்து கொண்டான். இனிமேல் அரசனிடம் சென்று இதனைக் கூறிப் பரிசுபெற வேண்டியது ஒன்றுதான் பாக்கி யென்று முடிவு செய்தான். கற்று வல்ல அறிஞர்களாக இருந்

தால் சிறிதாவது அச்சம் உள்ளத்தில் இருக்கும். அறிவு என்பது சிறிதுமில்லாத இவனுக்கு அச்சம் எங்கிருந்து வரப் போகிறது? சிறிதும் அஞ்சாமல் சோழ மன்னனுடைய பேரவைக்குச் சென்ருன். அரசனைப் ''பார்த்து, அரசே! தங்தள் மீது பாட்டு இயற்றிக்கொண்டு வந்திருக்கிறேன் அதனைக் கேட்டு நன்கொடை வழங்கியருள வேண்டு''மென்று வேண்டிக் கொண்டான். இவனுடைய கோலத்தைப் பார்த்து அரசனும் அவையிலுள்ளவர்களும் நகைத்தார்கள். அரசன், ''எங்கே பாட்டைச் சொல் கேட்கலாம்'' என்ருன். மூடன் தான் கட்டி யிருந்த பாடலைப் பாடினன். கேட்டவர்கள் வயிறு புண்ணுகுமாறு நகைத்தார்கள். அரசனும் நகைத்தான். அரசன் இவனைப் பார்த்துப் பாட்டிற்குப், ''பொருள் சொல்வாயா?'' என்று கேட்டான்.

அவையிலிருந்த புலவர்களில் ஒருவர் அம்மூடன்மீது இரக்கங் கொண்டார். எவ்வாறேனும் அவன் நன்கொடை பெறச் செய்ய வேண்டுமென்று முடிவு செய்தார். அரசனைப் பார்த்து, ''அரசே! செய்யுளியற்றியவர்கள் அதற்குப் பொருளுஞ் சொல்லுவது அவ்வளவு சிறப்பன்று. நான் கூறுகிறேன். கன்னு - கொடையில் கன்னனைப் போன்றவனே! பின்னு மன்னு - போரிற் புறங் கொடுக்காத அரசனே! தென்னு - தென்னட்டை யுடையவனே! உங்கள் அப்பன் கோ - உங்கள் தந்தையாகிய அரசன்! வில் பெருசு ஆளி - வில்லெடுத்துப் போர் செய்வதில் ஆளியைப் போன்றவனுவன். மண் உண்ணி மா பிள்ளே யே - மண்ணை உண்ட திருமாலைப்போற் சிறந்தவனே! கா இறையே - கற்பக நாட்டிற்குத் தலைவனுகிய இந்திரனைப் போன்றவனே, கூ இறையே - நிலத்திற்குத் தலைவனே' எனக்குப் பொருள் தந்து அருள்புரிய வேண்டும் என்னுஞ் சொற்கள் எச்சமாக நிற்கின்றன. இப்பாடல் பாவினத்தைச் சேர்ந்தது'' என்று பொருள் விரித்தார். அவையினரும் அரசனும் ஒரு பித்தனுடைய பாட்டிற்குப் புலவர் இப்படிப் பொருள் விரிக்கிருரே, என்று அவருடைய திறமையைப் பாராட்டினர்கள். அரசன் செய்யுள்பாடி வந்தவனுக்கு ஓரளவு பொருள் கொடுத்து அனுப்பினன்.

"அறம்பெற்ற சோழகோமண் ணுண்ணிமாப்
பிள்ளையென் றதிலோர் பாட்டாய்
வெறும்பித்தன் சொல்லவந்த வேந்தர்சபை
யோர்கள்பொருள் விளங்கச் சொன்னார்
திறம்பெற்ற பரிசுகொண்டான் தென்னேம
நகரில்வளர் செயங்கொண் டாரே
எறும்புக்குந் தன்கையால் எண்சாண்மெய்
என்றுலகோர் இயம்பி னரே!"

[புலவர் திறம்] (செயங் கொண்டார் சதகம்)

1228. சேரமாண்டார் கதை

முன்னாளிற் சேர நாட்டில் மன்னன் ஒருவன் இருந்தான். அவனுடைய பெயர் சேரமாண்டார் என்பர். இம்மன்னன் மிகுந்த பொறுமையுடையவன். இவனுடைய பொறுமையைப் பற்றிய புகழ் எல்லாத் திக்குகளினும் பரவி நின்றது. ஒரு நாள் சோழ மன்னனுடைய பேரவையில் சேரமாண்டாருடைய பொறுமையைப் பற்றிப் பேச்சுண்டாகியது. அப்பொழுது அங்கிருந்த ஒரு மனிதன் "அந்தச் சேரமாண்டாருக்கு நான் சினத்தை உண்டாக்கிவிடுவேன். அவ்வாறு உண்டாக்காமற் போனால் என்னுடைய பெயரை மாற்றிக் கொள்ளுகிறேன் பாருங்கள்" என்று சூளுரை மொழிந்தான். சோழ மன்னன் அம்மனிதனைப் பார்த்து, "நீ இப்பொழுது உரைத்தபடியே சேரநாட்டிற்குச் சென்று சேரமாண்டாருக்குச் சினத்தை உண்டாக்கி விட்டு வருவாயாக அவ்வாறு உண்டாக்காமற் போனால் உன்னை நான் ஒரு விலங்கென்றே மதிப்பேன். நீ உன்னுடைய பெயரை மாற்றிக் கொள்ள வேண்டிய கட்டாயமில்லை" என்று சொன்னான்.

உடனே அம்மனிதன் சேரமாண்டாருடைய அரண்மனைக்குப்போய் அரண்மனை வாசலில் நெடுங்காலமாக நின்று கொண்டிருந்த காவல் மரத்தை வெட்டினான். சேரமாண்டாருடைய தாய் வெளியே வந்து, "யாரடா மரத்தை வெட்டுகி-

றவன்?'' என்று உசாவினுள். மரத்தை வெட்டிய மனிதன், ''உங்களுடைய அப்பன்'' என்று மறுமொழி கூறினுன்.

இதனைக் கேட்ட சேரமாண்டார், ''அவன் சொல்வது சரி, அதனுல்தான் உரிமையோடு வெட்டுகிறுன். நீ அவனைத் தடை செய்யாதே'' என்று சொன்னுன். இம் மறுமொழியைக் கேட்ட அம்மனிதன் மிகவும் நாணினுன். நாம் இவருக்குச் சினத்தை உண்டாக்க முடியாது. மன்னனிடந் தோற்றுப் போனேம் என்று எண்ணமிட்டுக் கொண்டு சோழமன்னனிடம் போய்த் தன்னுடைய தோல்வியை ஒப்புக் கொண்டான்.

''முந்து மரந்தறித்த மூர்க்கன்சொற் கேட்டுமவன்
எந்தைபிரான் என்ருன் இரங்கேசா—கொந்தி
அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை''

[பொறையுடைமை] (இரங்கேச வெண்பா)

1229. சேவலும் மயிலுமான கதை

சூரபன்மன் சிவபெருமானை நோக்கி உயர்ந்த தவத்தைச் செய்தான். அதனுல் சிறந்த மேன்மை யெல்லாம் பெற்றுத் திகழ்ந்தான். பிறகு முருகக் கடவுளோடு பெரும் போர் செய்தான். அப்பொழுது வேற்படை அவனுடைய மார்பைப் பிளந்து உடலை இரு கூருக்கிக் கடலில்வீழ்த்தியது. சிவபெருமான் கொடுத்த மேன்மையினுல் சூரபன்மன் மீளவும் எழுந்தான். முருகக் கடவுளோடு போர் செய்ய எண்ணினுன். கோழியும் மயிலும் ஆனுன். முருகக் கடவுளின் திருமுன்பு வந்தான். தேவர்கள் அஞ்சியோடுமாறு போர்ச் செருக்குக் கொண்டான்.

முருகக் கடவுள் சூரபன்மன் மீது திருவருள் நோக்கஞ் செலுத்தியருளினுர். அத்திருவருட் பார்வையால் சூரபன்மனுக்கு நல்லறிவு உண்டாகியது. அறுமுகக் கடவுள் நல்லறிவு பெற்ற கோழியைப் பார்த்து, ''நீ நம்முடைய தேரிற் கொடியாக அமர்ந்திருந்து கூவுவாயாக'' என்று திருவருள்

புரிந்தார். கோழி கொடியாகிக் கூவியது. பிறகு முருகக் கடவுள் இந்திரனுகிய மயிலில் இருந்து இறங்கினர். தமது அருளைப் பெற்றுக் குறிப்பின்வழி நின்ற சூரனுகிய மயிலின் மீது ஏறினர். ''நம்மைச் சுமப்பாயாக'' என்று அதனை ஊர்தியாகக் கொண்டார்.

(கந்த புராணம்)

''ஆடும் பரிசேவல் ஆனன் அடற்சூரன்
தேடுந் தலைத்தாற் சிவசிவா—நாடுங்கால்
வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்''

[சேவலும் மயிலுமானது] (சோமேசர் முதுமொழி வெண்பா)

1230. சேவுயர்த்த கதை

முன்னெரு காலத்தில் ஊழி ஒன்று உண்டாகியது. அறக் கடவுள் (தரும தேவதை) தானும் அழியுமாறு நேரிடுமே என்று அஞ்சியது. சிவபெருமானிடஞ் சேர்ந்தால் பிழைத்திருக்கலாம் என்று முடிவு செய்தது. காளையின் வடிவத்தை எடுத்துக்கொண்டு சிவபெருமானிடஞ் சென்றது. பெருமானைப் பணிந்து, ''எம்பெருமானே! அடியேனை ஊர்தியாகக் கொண்டருளுதல் வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டது. சிவபெருமான் அதனுடைய வேண்டுகோளுக் கிணங்கி அதனை ஊர்தியாகக் கொண்டருளினர்.

''சேவுயர்த்தவன் சேவடி சிந்தை செய்திருந்த''

[அறக் கடவுள் ஊர்தியாகியது] (காசி காண்டம்)

1231. ஞானப் பிரகாசர் கதை

ஞானப்பிரகாசர் என்பவர் தொண்டை வள நாட்டில் காஞ்சிபுரத்தில் வேளாளர்கட்குக் குலகுருவாக எழுந்தருளி

யிருந்தார். சிறந்த கல்வியறிவுடைய இவர் கிருட்டிணராயர் மீது தமிழ் மஞ்சரி,கச்சிக் கலம்பகம் என்னும் நூல்களைப் பாடினர். ஞானப்பிரகாசருடைய பெருமை எங்கும் பரவியிருந்தது. அந்தணர்கள் ஞானப்பிரகாசருடைய பெருமையை உணர்ந்து கொள்ளவில்லை. இவருக்குச் சிறுமையை உண்டாக்க எண்ணினர்கள். இவரை மயக்கித் தழுவுமாறு அழகிய விலைமகள் ஒருத்திக்குப் பொருள் கொடுத்து அனுப்பினர்கள். அவ்விலைமகள் ஞானப்பிரகாசரிடம் வந்து இவரைத் தழுவப் பலவாறு முயற்சி செய்தாள். ஞானப் பிரகாசர் அவ்விலைமகளைப் பார்த்து, "நீ விரும்பி வந்தது இதற்குத்தானே இதனைக் கொண்டுபோ" என்று கூறித் தம்முடைய கோசத்தை அறுத்து அவளிடங் கொடுத்து விட்டார். அவள் அதனைக் கொண்டுபோய்ப் பார்ப்பனரிடத்திலே கொடுத்தாள். பார்ப்பனர்கள் அதனைப் பார்த்துவிட்டு ஞானப்பிரகாசர் இறந்து போயிருப்பார் என்று எண்ணினர்கள். மறுநாட் காலையில் எழுந்து சர்வ தீர்த்தத்திற்கு நீராடச் சென்றார்கள். அப்பொழுது ஞானப்பிரகாசர் நீராடிவிட்டுப் பூசை செய்து கொண்டிருத்தலைக் கண்டார்கள். அவர்கட்கு மிகுந்த வியப்பும் அச்சமும் உண்டாயின. இவரைப் பூசித்து வணங்கினர்கள். இவர் மீது கொண்ட பொறாமையை விட்டுவிட்டு அன்பு கொண்டார்கள்

[மெய்த்துறவி]

(ஞானப்பிரகாசர் வரலாறு)

1232. தஞ்சைவாணன் கதை

முன்னளிற் பாண்டிவள நாட்டில் தஞ்சாக்கூர் என்னும் ஊரில் சந்திரவாணன் என்னும் பெயருடைய வேளாளச் செல்வன் ஒருவன் வாழ்ந்திருந்தான். அவன் அந்நாட்டை அரசாண்ட கோமாற வர்வா திரிபுவன சக்கரவர்த்தி குலசேகர தேவர் என்பவருக்கு அமைச்சனாகவும் படைத்தலைவனாகவும் விளங்கியிருந்தான். அவன் செந்தமிழை நன்கு கற்றுணர்ந்தான். புலவர்களைப் போற்றிப் பொருளுதவி செய்வதில் தலைமையான நிலையை அடைந்திருந்தான்; அவனுடைய வள்

ளல் தன்மையை உணர்ந்து பல புலவர்கள் அவன்பாற் சென்று நன்கொடை பெற்றுச் சென்றனர். அவனுடைய புகழ் அந்நாளில் யாண்டும் பரவி யிருந்தது.

அவனுடைய காலத்தில் பொய்யாமொழிப் புலவர் என்பவர் வாழ்ந்திருந்தார். அவர் சிறந்த கல்வியறிவு நிறைந்தவர். அவர் சந்திரவாணனிடத்தில் பொருளுதவி பெற எண்ணினர். அவன்மீது தஞ்சைவாணன்கோவை என்னும் நூலைப் பாடிக்கொண்டு போய் அரங்கேற்றஞ் செய்தார். சந்திரவாணன் தமிழ் மொழியை நன்கு உணர்ந்தவனுகையால் பாட்டின் அருமையை அறிந்து மகிழ்ந்தான். ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் முக்கண்களிலும் மணிகள் பதிக்கப் பெற்ற பொற்றேங்காயை உருட்டினுன்.

"ஒருகவிக் கோரொரு தேங்காய்பொன்
னுற்செய் துருட்டிக்கல்வி
பெருகச்செய் நாவலர்வாழக் கொடுத்துப்ர
தாபம் பெற்றுன்
திருமலி தஞ்சையில் கோவைத்
தமிழ்கொண்டு செல்வமிக
வருதரு வாகிய வாணனும்
பாண்டியன் மண்டலமே"

[தஞ்சைவாணன் கோவை] (பாண்டி மண்டல சதகம்)

1233. தமயந்தி ஊடிய கதை

நளனுக்கும் தமயந்திக்கும் திருமணம் நடைபெற்றது. இருவரும் இன்ப வாழ்க்கையில் திளைத்தனர். நளன் தமயந்தியைப் பார்த்து, "அன்புடையாய்! நான் உன்னை இப்பிறப்பில் பிரிய மாட்டேன்" என்று கூறினன். இதனைக் கேட்ட தமயந்தி, "அப்படியானுல் இனிமேல் வரும் பிறவியினில் பிரிந்துவிடுவீர் போலும்" என்று கூறி நளனேடு ஊடல் கொண்டாள். அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர்

உதிரத் தொடங்கியது. இதனைக் கண்ட நளன் "எப்பிறப் பிலும் நான் உன்னைப் பிரியேன்" என்று கூறித் தேற்றித் தெளிவடையச் செய்தான்.

(நைடதம்)

" இப்பிறப்பி லேபிரியேன் என்றநள னேடுடல்
செப்பவரி தன்றே சிவசிவா—அப்படியே
இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனுக்
கண்ணிறை நீர்கொண் டனள் "

[புலவி நுணுக்கம்] (சிவசிவ வெண்பா)

1234. தருவதாகக் கூறி ஏமாற்றிய கதை

யவன நாட்டில் ஆதித்தபுரம் என்னும் ஊரில் முன்னு ளில் ஒரு வணிகன் இருந்தான். அவனுடைய பெயர் விச்சுவ வசு. அவனுக்கு நான்கு பிள்ளைகளிருந்தார்கள். கடவுளுக் குத் திருப்பணி புரிதலே மேற்கொண்டிருந்த அந்தணன் ஒரு வன் அந்நால்வரிடமும் பொருள் கேட்டான். அவர்களுங் கொடுப்பதாகச் சொன்னார்கள். பொருள் பெற்றுத் திருப்பணி நடத்தலாம் என்று எண்ணிய அந்தணன் அவ்வணிகர்க ளிடம் பன்முறை சென்றான். இறுதியில் அவ்வணிகர்கள் பொருள் கொடுக்க முடியாது என்று கூறிவிட்டனர். அதனால் அந்த அந்தணன் மனம் வருந்திச் சென்றான். பிறகு அவ் வணிகர்கள் நால்வரும் மக்கலத்திற் சரக்கேற்றிக் கொண்டு வாணிகத்தின் பொருட்டுக் கடலிற் சென்றார்கள். மரக்கலம் சுழல் காற்றிற் சிக்கிச் செல்லும் வழிதவறிச் சென்று நீரில் மூழ்கியது. பண்பற்றவர்களின் செல்வம் ஈண்டே அழிந் தொழியும் என்பது இவர்களிடம் பெறப்பட்டது.

(உபதேச காண்டம்)

"உன்பணிக்கென் றேதிநல்காச் செல்வம் உததியுறத்
துன்பமுற்றார் நால்வணிகர் சோமேசா—வன்புமிகும்

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந் தீமை யால்திரிந் தற்று''

[பண்பிலார் செல்வம்] (சோமேசர் முதுமொழி வெண்பா)

1235. திருநீலகண்ட யாழ்ப்பாணர் கதை

சோழவள நாட்டில் திருவெருக்கத்தம்புலியூரிலே திருநீலகண்ட யாழ்ப்பாணர் தோன்றினர். இறைவருடைய திருவிளையாடலைத் தமது யாழிலே இட்டுப் பாடும் தொழிலை இவர் மேற்கொண்டார். மதுரைக்குச் சென்று திருவால வாய்க் கோவிலுக்கு முன்நின்று யாழை ஓருங்கு செய்து பண்ணமைத்துப் பாடினர். மதுரைக் கடவுள் அடியார் களுடைய கனவில் எழுந்தருளித் தம்முடைய திரு முன் அழைத்துக்கொண்டு வருமாறு கட்டளை யிட்டார் நிலத் தின் குளிர்ச்சி தாக்கினால் யாழ் கெட்டுப் போகுமென்று, நின்று பாடுவதற்குப் பலகை யொன்றும் இடுமாறு அடியார் களுக்குக் கட்டளையிட்டார்.

இவர் பல சிவப்பதிகளையும் போற்றி வழிபட்டுக் கொண்டு திருவாரூரை யடைந்தார். இறைவருடைய திருமுன்பு நின்றுகொண்டு யாழ் வாசிக்க வேண்டுமென்று விரும்பினர். புற்றிடங்கொண்டார் வட மதிலில் ஒருவாயில் செய்வித்து அவ்வழியாக அழைத்து யாழ்வாசிக்கச்செய்து கேட்டார்.

''ஆரூர் வடபுரிசை அன்பால் திறந்ததுவும்''

(திருக்கழுக்குன்றத்து உலா)

''புரிசை வட,
வாயிலால் நீலகண்டப் பாணர்வரவழைத்த
சாயலார் கந்தருவத் தையலரும்''

[திருநீலகண்ட யாழ்ப்பாணர்] (திருவாரூர் உலா)

1236. திருவாசகத்திற்குப் பொருளுரைத்த கதை

திருவாத வூரடிகளாகிய மாணிக்கவாசகர் பாடிய திருவாசகத்தைக் கூத்தப்பிரான் தமது கைப்பட எழுதினார். பிறகு அந் நூலைப் பொன்னம்பலத்தில் வைத்துவிட்டு மறைந்து போனார். தில்லை வாழந்தணர்கள் திருவாசகச் சுவடியைக் கண்டார்கள். அதனில் திருச் சிற்றம்பலமுடையான் கையெழுத்து என்று எழுதியிருத்தலையும் பார்த்தார்கள். பிறகு மாணிக்க வாசகரைப் பார்த்துத் திருவாசகத்திற்குப் பொருள் கூறவேண்டுமென்று கேட்டார்கள். மாணிக்கவாசகர் தில்லை வாழந்தணர்களைக் கூத்தப்பிரான் திருமுன்பு அழைத்துக்கொண்டு சென்றார். "திருவாசகத்திற்குப் பொருள் இவர்தாம்" என்று கூத்தப்பிரானைக் காட்டிச் சிற்சபைக் குட் புகுந்து மறைந்தார். மாணிக்கவாசகர் அவ்வாறு கூறி அம்பலவாணனடி மலரிற் கலந்ததைக் கண்டு தில்லை வாழந்தணர்கள் மிகுந்த வியப்படைந்தார்கள்.

"சொற்சுவைசேர் வாசகத்தில் சொன்னபொருள் [ஈதென்றே
சிற்சபையே போனார் சிவசிவா — நற்கலைநூல்
கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி"

[திருவாசகத்தின் பொருள்] (சிவசிவ வெண்பா)

1237. திலோத்தமையை விரட்டிய கதை

நான்முகன் எல்லா உலகங்களினுமுள்ள மங்கையர்கள் அனைவருடைய அழகையையும் ஒன்றுகத் திரட்டி யெடுத்துப் படைத்தாற்போலத் திலோத்தமை என்னும் அழகிய பெண்ணைப் படைத்தான். அவளுடைய அழகைக் கண்டு அவளைப்படைத்த தானே மயங்கினான். அவளைக் கைப்பற்ற முயன்றான்; அவள் ஒளித்துக்கொண்டாள். நான்முகன் நான்கு திக்குகளினும் தேடித் திலோத்தமையைக் கண்டு

பிடித்தான். அவள் பெண் மானுக வடிவெடுத்துக்கொண்டு ஓடினாள். நான்முகன் ஆண்மானுக வடிவம் எடுத்துக் கொண்டு அவளைத் தொடர்ந்தான். பிறகு திலோத்தமை பெண்கிளியாக வடிவமெடுத்துக் கொண்டு பறந்தாள். நான்முகன் ஆண்கிளியாக வடிவமெடுத்துக்கொண்டு அவளை விரட்டினான்.

திலோத்தமைக்கு வேறெருரு வழியுங் காணப்படவில்லை. தொலைவிலே தான் கண்ட திருவண்ணாமலையை அணுகி, "அண்ணாமலையாரே! அடியேன் உம்முடைய அடைக்கலம்" என்று கூறி வீழ்ந்தாள். இறைவன் நான்கு மறைகளையும் நான்கு வேட்டை நாய்களாக்கிக்கொண்டு வேட்டுவக் கோலத்தோடு அம்மலையினின்றும் வெளிப்பட்டார். நான்முகனைப் பார்த்து, "இத்திலோத்தமையை நீ படைத்தாய். உன்னாற்படைக்கப்பட்ட இவள் உனக்கு மகளாகின்றாள். மகளாகிய இவளை நீ விரும்பிய தீவினை கற்பகாலத்தினும் போக்கக் கூடியதன்று. ஆயினும் நீ பெருமை பொருந்திய இம்மலையைக் கண்டாயாகையால் அதனைப் போக்கியருளினேம்" என்று கூறியருளினர். நான்முகன் அஞ்சித் தன்னுலகம் போய்ச் சேர்ந்தான்.

(அருணாசல புராணம்)

"ஈன்றோன் திலோத்தமையை இச்சிக்கில் ஆங்கவள்மெய்
தோன்றுமெழி லென்சொல்வேன் சோமேசா—ஆன்ற
முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு"

[அழகுநலம்] (சோமேசர் முதுமொழி வெண்பா)

1238. தீவினையாளர்கள் கதை

திருஞான சம்பந்தப் பிள்ளையாருக்கும் திருநல்லூரில் இருந்த நம்பாண்டார் நம்பிகளுடைய மகளுக்கும் திருமணம்

நிகழ்ந்தது. திருஞான சம்பந்தர் "அந்தோ இல்வாழ்க்கை வந்து சேர்ந்ததே இதற்கு யாது செய்வேன்? இவளொடு நான் உலகில் தடுமாறமாட்டேன் இப்பொழுதே இறைவனுடைய திருவடிகளை யடைவேன்" என்று எண்ணமிட்டார். மணவேள்வித் தீயை வலம்வரும்பொழுது அங்கிருந்த எல்லாரோடும் இறைவனுடைய அடிகளை அடையவே எண்ணினர்; திருப்பதிகம் பாடினர். அத் தீ மிகப் பெரிதாகிப் பேரொளியோடு திகழ்ந்தது. திருஞான சம்பந்தர் தம்முடைய மனைவியின் கைகளைப்பற்றிக்கொண்டு அத்தீயிற் புகுந்து கலந்தார். அங்கிருந்தவர்களும் அதனுட் புகுந்து பெறற்கரும் பேற்றை அடையச் செய்தார். அப்பொழுது திருமணத்திற்கு வந்த சிலர் தொலைவில் இருந்து இக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆயினும் அவர்கட்கு நல்வினையின்மையால் வீடுபேறு கிட்டவில்லை. எல்லோருந் தீயில் விழுந்து மாண்டுபோனதாக எண்ணிக் கொண்டு ஓடிவிட்டார்கள். எதற்கும் நல்வினை வேண்டுமன்றே?

"ஏர்மணநல் லூர்ச்சுடருள் யாருமணு கச்சிலர்தாம்
தூரநெறி நின்றயர்ந்தார் சோமேசா—ஓரில்
தவமுந் தவமுடையார்க் காகும் அவமதனை
அஃதிலர்ஏர் மேற்கொள் வது"

[தவம்] (சோமேசர் முதுமொழி வெண்பா)

1239. துருபதன் கதை

பாஞ்சால நாட்டை அரசாண்ட துருபதனும் துரோணாசாரியாரும் இளமைப் பருவத்தில் ஒரே ஆசிரியரிடத்திற் கல்வி கற்றனர். ஒரு நாள் துருபதன் துரோணாசாரியரைப் பார்த்து, "நான் அரசனானால் என்னுடைய நாட்டில் பாதியை உமக்குத் தருகிறேன்" என்று சொன்னான். கல்வி கற்று முடிந்த பிறகு இருவரும் பிரிந்தனர். துருபதன் அரசனானான். துரோணர் இல்வாழ்க்கையை மேற்கொண்டு வறுமையில் வருந்தியிருந்

தார். அவருக்கு ஒரு குழந்தை உண்டாயிற்று. அதற்குப் பால் அகப்படவில்லை. கல்வி கற்குங் காலத்தில் துருபதன் சொன்ன மொழிகளை உள்ளத்தில் வைத்திருந்த துரோணர் பாதிநாட்டைத் தருவதாகப் பகர்ந்த துருபதன் ஒரு கறவை மாட்டைத் தரமாட்டானா என்று எண்ணினார். பிறகு புறப் பட்டுப் பாஞ்சால நாட்டை யடைந்து துருபதனைக் கண்டார்.

துருபதனுக்கு இப்பொழுது இவறன்மைக் குணம் மிகுதி யாக இருந்தது. துரோணரைக் கண்ட துருபதன், "நீ யார்? எங்கு வந்தாய்?" என்று உசாவினன். இதனைக் கேட்ட துரோணர் நடுங்கினர். "நான் உன்னுடைய நண்பன். இரு வரும் ஓராசிரியரிடத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்தோமே அதனை மறந்துவிட்டாயா?" என்று கேட்டார்.

துருபதன் எதையுங் காதிற் போட்டுக்கொள்ளவில்லை. "நானோ அரசன் நீயோ அந்தணன், அவ்வாறுக நம்மிரு வருக்கும் எவ்வாறு தொடர்பு உள்ளதாகக் கூறலாம்? உடனே இவ்விடம் விட்டுப் போய் விடு" என்று சொன்னான். துரோணர் தாம் விரும்பிச் சென்ற செய்தியைக் கூறினர். துருபதன் கேட்கவில்லை.

துரோணர் மிகுந்த வருத்தத்தோடு அங்கிருந்து புறப் பட்டார். "என்னுடைய மாணவனைக் கொண்டு உன்னைத் தோற்கடிக்கிறேன் பார்ப்பாயாக" என்று சூளுரை சொல்லி விட்டுச் சென்றார். நேரே வீடுமரிடஞ் சென்றார். அவ ருடைய ஆதரவில் தங்கிப் பாண்டவர்கட்கும் துரியோதனன் முதலியோர்க்கும் வில்வித்தை கற்பிக்கலானார். அருச்சுனன் தன்னுடைய எண்ணத்தை நிறைவேற்றக்கூடியவன் என்று அவனிடத்தில் மிகுந்த பற்றுக் கொண்டிருந்தார். வில்வித் தையை நன்கு கற்பித்தபின் பாஞ்சாலன்மேற் போருக்கனுப் பினர். அருச்சுனன் சென்று போர்புரிந்து பாஞ்சாலனை வென்றான். அவனைத் தேரிற் கட்டிக்கொண்டு வந்து தன் னுடைய ஆசிரியராகிய துரோணர் முன்பு விட்டான். தமது சூளுரையை நிறைவேற்றிய துரோணர் துருபதன் நாணித் தலை கவிழுமாறு பல சொற்களைக் கூறி அவனை விடுவித்தார். இதனால் துருபதன் மிகுந்த நாணமடைந்து தலைகவிழ்ந்தான். துரோணருடைய தலையைத் துணிக்க ஒரு மகனையும் அருச்சு னனுக்கு மணஞ் செய்து கொடுக்க ஒரு மகனையும் பெற

வேண்டுமென்னும் நோக்கத்தோடு துருபதன் அவ்விட மிருந்து திரும்பினன். உபயாசன், யாசன் என்னும் இரண்டு முனிவர்களைக் கொண்டு வேள்வியொன்று செய்தான். அவ் வேள்வியின் பயனாய்த் திருட்டத்துய்மன் என்னும் மகனும் திரௌபதி என்னும் மகளுந்தோன்றினர்கள். பிறகு தன் னுடைய எண்ணப்படியே துருபதனுஞ் செய்துமுடித்தான். கீழ் மக்கள் தங்களை வருத்தப் படுத்துவோர்கட்கே எதையுந் தருவார்களேயல்லாமல் நல்லவர்கட்கு எதையுந் தரமாட் டார்கள் என்பது துருபதனிடத்தில் நன்கு பெறப்பட்டது.

(பாரதம்)

"ஏற்ற துரோணனையன் றெள்ளித் துருபதன்பின்
தோற்றுவிச யற்களித்தான் சோமேசா—போற்றிடினும்
ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்குங்
கூன்கைய ரல்லா தவர்க்கு

[கயவர் இயல்பு] (சோமேசர் முதுமொழி வெண்பா)

1240. நால்வர்க்கருளிய கதை

சநகர், சநந்தனர், சநாதனர், சநற்குமாரர் என்போர் நான்கு முனிவர்கள். இவர்கள் மெய்யறிவைப் பெற்று வீடு பேற்றையடைய வேண்டுமென்று விரும்பினர்கள். இறைவனை நோக்கிப் பன்னெடுங்காலம் பெருந்தவம் புரிந்தார்கள். சிவ பெருமான் அவர்கட்குத் திருவருள் செய்ய எண்ணினர். கல்லால மரத்தின் நீழலில் தென்திக்கை நோக்கி அமர்ந்தார். அம்முனிவர்கட்கு சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்றி னையும் மெய்யறிவு தோன்றுமாறு உரைத் தருளினர். நான் காவதாகிய ஞானத்தினை இருந்தபடி இருந்து மோன முத் திரையினல் காட்டியருளினர்.

"அன்ருவின் கீழிருந்தங் கறமுரைத் தானுயிடினும்"
[திருவிளையாடற் புராணம்] (திருவாசகம்)

"கல்லாலின் புடையமர்ந்து நான் மறையா
றங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததணு
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நிணையாமல்
நிணைந்துபவத் தொடக்கை வெல்வாம்"

"வீழ்சுற் ருெழுக்கிய பராரைத் திருவடக்
குளிர்நிழல் இருந்து குணச்செயல் மூன்றும்
உடலொடு படரும் நிலைநிழல் போல
நீங்காப் பவத்தொகை நிகழ்முதல் நான்கும்
உடனிறைந் தொழியா உட்பகை ஐந்தும்
மதியினிற் பழித்த வடுஇரு மூன்றும்
அணுகா தகற்றி பணிமுனி நால்வர்க்கு
அறம் முதல் நான்கும் பெறவருள் செய்த
கூடற் பெருமான்....."
[நால்வர்க்கருளியது] (கல்லாடம்—55)

1241. நாய் வாலைக் களவு செய்த கதை

விசுவாமித்திர முனிவர் நீண்டகாலம் நெடுந்தவம் புரிந்துகொண்டிருந்தார். பிறகு ஒருநாள் கண்ணை விழித்துப் பார்த்தார். உலகத்தில் வெகுகாலமாக மழை பெய்யாதிருந்தபடியினல் எங்கும் விளைவில்லாமல் பஞ்சத்தின் கொடுமை மிகுதியாக விருந்தது. விசுவாமித்திர முனிவருக்கோ பசியின் கொடுமை மிகுதியாயிற்று. உணவினைத் தேடிக்கொண்டு வெளியே புறப்பட்டார். உண்பதற்கு எதுவும் அகப்படவில்லை. ஓரிடத்தில் ஒரு வீடு காணப்பட்டது.

முனிவர் அவ்வீட்டிற்குள் நுழைந்தார். அஃது ஒரு வேடனுடைய வீடு. அப்பொழுது வேடன் வீட்டில் இல்லை. ஓரிடத்தில் நாயினுடைய இறைச்சியிருந்தது. முனிவர் அவ்விறைச்சியில் இருந்த வாலையெடுத்து உண்ணத் தொடங்கினர். அச்சமயத்தில் வேடன் வந்துவிட்டான். முனிவர் தாம் நாய்வாலைக் களவுசெய்து உண்ணத் தொடங்கிய செய்தியை வேடனிடங் கூறித் தம்முடைய களவுக் குற்றத்தினைப் பொறுத்தருள வேண்டுமென்று வேடனை வேண்டிக் கொண்டார். பிறகு தம்முடைய ஆற்றலால் மழை பெய்யச் செய்தார். விசுவாமித்திரர் நாய்வாலைக் களவு செய்த செய்தியை பிறமுனிவர்கள் கேள்விப்பட்டு விசுவாமித்திரரைப் பலவாறு இகழ்ந்து பேசினர்கள்.

"நாய்வாற் களவினுல் ஞாலமிக ழப்பட்டான்
தூயனுங் காதிமகன் சோமேசா—வாயதனுல்
எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றுங்
கள்ளாமை காக்கதன் னெஞ்சு"

[களவு] (சோமேசர் முதுமொழி வெண்பா)

1242. நால்வேந்தர் கதை

முன்னளிற் கௌசல நாட்டில் கௌசிகன் என்னும் பெயரையுடைய அரசன் ஒருவன் அரசாட்சி செய்துகொண்டிருந்தான். அவனுக்கு நான்கு பெண்கள் இருந்தார்கள். அவர்கள் மணப்பருவத்தை யடைந்தபொழுது அரசன் அவர்களுக்குச் சுயம்வரம் ஏற்படுத்தினன். பல நாட்டு அரசர்களும் வந்து கூடினர்கள்

நிடத நாட்டரசனுகிய மகேந்திரனையும், காம்போச நாட்டரசனுகிய சானந்தனையும், அங்க நாட்டரசனை கீர்த்தி மாலியையும், கொங்கண நாட்டரசனை விசால நேத்திரனையும் அந்நான்கு பெண்களும் மணாளர்களாகத் தேர்ந்தெடுத்தார்கள். அந்நான்கு அரசர்களும் சிலநாள் அங்குத் தங்கியிருந்தார்கள். பிறகு மாமனரிடம் விடை பெற்றுக்கொண்டு

படைகள் புடைசூழத் தேரேறிப் புறப்பட்டுத் தங்கள் நாட்டை நோக்கிச் சென்றார்கள்.

அப்போது கோசிக முனிவர் எதிர்ப்பட்டு அவர்களைக் கூப்பிட்டார். ஒலிக்கருவிகளின் முழக்கத்தாலும் படையின் ஆரவாரத்தாலும் முனிவர் கூப்பிட்ட ஒலி அரசர்களுக்குக் கேட்கவில்லை. அரசர்கள் தம்மை ஒரு பொருட்படுத்தவில்லை யென்று முனிவர் சீற்றங் கொண்டார். மிகுந்த சினத்தோடு படைகளைப் பார்த்தார். அவ்வளவில் அப்படைகள் யாவும் வெந்து சாம்பராயின. அதனைக்கண்ட அரசர்கள் முனிவரிடம் போய்த், தங்களிடம் எத்தகைய குற்றமும் இல்லையென்று கூறினர்கள். ஆயினும் முனிவருடைய சினந்தணியவில்லை. அவர்களைப் பார்த்து, "உங்களுடைய கண்கள் குருடாகுக. நீங்கள் மாதரொடு சேர்ந்தால் தலை வெடித்து இறக்க; நீங்கள் நாடு நகரம் முதலியவைகளைத் துறந்து காடு சென்று வாழ்ந்துக" என்று வசவுரை வழங்கினர். அவர்கள் அவ்வாறே மிகுந்த துன்பமடைந்தார்கள். பெரியோர்கள் சினங் கொள்வார்களானால் அரசர்களும் மிகுந்த துன்பத்தை யடைவார்களென்பது இம்முனிவரிடமும் அரசர்களிடமும் பெறப்பட்டது.

(உபதேச காண்டம்)

"கொன்படைகள் நீருகக் கோசிகனர் சாபத்தால்
துன்பமுற்றார் நால்வேந்தர் சோமேசா — இன்புதவும்
ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வெந்து கெடும்"

[பெரியாரைப் பிழையாமை] (சோமேசர் முதுமொழி வெண்பா)

1243. நிரம்பவழகியர் கதை

நிரம்ப வழகியர் என்பவர் நானூற்றைம்பது ஆண்டுகட்கு முன் சோழவள நாட்டிற் பிறந்தார். நன்கு கல்வி கற்றுச் சிறந்த புலமை யடைந்து திகழ்ந்தார். பிறகு பாண்டி வள நாட்டிற்குச் சென்று தங்கியிருந்தார். இவருடைய நிறம் மிகக்

கருமையாக இருக்கும். இவர் ஒரு நாள் அரசன் ஒருவனுடைய அவைக்குச் சென்றார். அரசன் இவருடைய கருநிறத்தைப் பார்த்து வியந்தான். அங்கிருந்தவர்களை நோக்கி "இவர் அண்டங்காக்கைக்குப் பிறந்தவர் போலும்" என்று கூறினன். இதனைக்கேட்ட நிரம்பவழகியார் அரசனைப் பார்த்து, "அரசே! அண்டங் காக்கைக்குப் பிறந்துள்ளவர் தாங்களே யன்றி நானல்லன்" என்று மறுமொழி கூறினர். நிரம்பவழகியார் எப்பொருளில் அவ்வாறு கூறுகின்றார் என்பதை அறியாத அரசன் இவர் கூறியதைக் கேட்டுச் சினங் கொண்டான். யாவராயினுஞ் சரி. தம் முடைய நாவினை அடக்கிப் பேசுதல் வேண்டும். அவ்வாறன்றி நாவினை அதன்போக்கில் விட்டால் இழுக்குண்டாகும். இதனை யெண்ணியே திருவள்ளுவரும், "யாகாவாராயினும் நாகாக்க காவாக்காற், சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" என்று மொழிந்துள்ளார்.

நிரம்பவழகியார் சீற்றங்கொண்ட அரசனைப் பார்த்து, "அரசே! சீற்றங்கொள்ள வேண்டாம்; இவ்வண்டத்தைக் காப்பதற்குப் பிறந்துள்ளவர் தாங்களா? அன்றி யானா? நன்றுக எண்ணிப் பாருங்கள்" என்று கூறினர். இதனைக் கேட்டு அரசன் சீற்றந்தணிந்தான். நிரம்பவழகியாரின் சொல்லாற்றலைப் பெரிதும் பாராட்டிப் போற்றினன்.

"பொன்னார்செல் வமுந்தமிழும் பொருந்தரசன்
தருக்கதனுல் புலவ ருக்குள்
மன்னனை நிரம்பவழ கியரையண்டங்
காக்கையென வழுத்தக் கேட்டே
அன்னார்நீ யேயண்டங் காக்கையென்றார்
செயங்கொண்டார் அணிகொள் நாட்டில்
தன்னாலே தான்மெலிந்தால் அண்ணுவி
என்னசெய்வான் தரணி மீதே"

[நாவடக்கம்] (செயங்கொண்டசர் சதகம்)

1244. நீற்றினுற் காய்ச்சலை நீக்கிய கதை

பாண்டிவள நாட்டிற்கு மங்கையர்க் கரசியாருடைய வேண்டுகோளின்படி திருஞான சம்பந்தர் எழுந்தருளினர். திருஞான சம்பந்தர் தங்கியிருந்த திருமடத்தில் சமணர்கள் தீயை வைத்தார்கள். சம்பந்தர் தீயின் சூடு பாண்டியனை அடையுமாறு திருப்பதிகம் பாடினர். அவ்வளவில் பாண்டிய மன்னனுக்குக் கடுமையான காய்ச்சல் நோய் உண்டாகியது. அதனுற் பாண்டியன் மிகுந்த தொல்லைக் குள்ளானன். பிறகு சம்பந்தருஞ் சமணர்களுஞ் சேர்ந்து பாண்டியனுடைய காய்ச்சல் நோயைப் போக்கத் தொடங்கினர்கள். சமணர்கள் "அருகனே காவாய், அருகனே காவாய்" என்று கூறி மயிற் பீலியினுல் தடவினர்கள்.

திருஞான சம்பந்தரோ திருநீறே செம்பொருளெனக் கொண்டு திருநீற்றுப் பதிகத்தைப்பாடிப் பாண்டியன் உடலில் திருநீற்றைப் பூசினர். இதனுற் காய்ச்சல் நோய் நீங்கியது. பிறகு சமணர்கள் நெருப்பிலும் நீரிலுந் தங்கள் திறமையைக் காட்ட முயன்று யாதும் பயனில்லாமல் கழுவிலேறி மாய்ந்தார்கள்.

"பண்ணுருங் கவுணியர்வி பூதியினுல்
வழுதிசுரம் பாதி தீர்த்தார்
எண்ணு யிரஞ்சமணர் திருநீற்றை
மறந்துகழு ஏறி மாய்ந்தார்
பெண்ணுகீச் சடையில்வைத்த செயங்கொண்டா
ரேயுலகிற் பெருமை சேர்ந்த
வெண்ணீறே விஜயகற்றும் தரிப்பவர்க்குச்
சிவகதியும் மேவுந் தானே"

[திருநீற்றின்பெருமை] (செயங்கொண்டார் சதகம்)

1245. படைத்துணை கொண்டுபோன கதை

பாரதப்போர் நிகழ்வது உறுதியாயிற்று. கண்ணபிரானும் அப்பண்ணலுனச் சேர்ந்த பிறரையும் படைத்துணை

யாகக்கொள்ள வேண்டுமென்று பாண்டவர்களும் துரியோத னன் கூட்டத்தாரும் முடிவு செய்தனர். துரியோதனனும் அருச்சுனனும் துவாரகைக்குச்சென்று வாசுதேவனைப் படைத் துணை செய்யவேண்டுமென்று அழைத்தனர். கண்ணபிரான் அவர்களிருவரையும் பார்த்துப், "போரில் படைக்க லத்தை நான் தொடுவதில்லையென்று உறுதிசெய்து விட்டேன். அவ் வாருகப் போருக்கு எப்படி உதவி செய்யப்போகிறேன். யாராவது ஒருவருக்கு நான் துணையாக வருகிறேன். மற்றவர் என்னுடைய படைகளையெல்லாம் பலராமனோடு கொண்டு செல்லலாம்" என்று கூறினர்.

துரியோதனன் படையெடுத்துப் போர்புரிய மாட் டேன் என்கிற இவனைக் கொண்டுபோய் யாது பயன்? படைகளை யழைத்துப் போவோமென்று தன்னுடைய சிற்றறி வைக் கொண்டு முடிவு கட்டினான். அருச்சுனனோ, கண் ணன் கடவுளின் கூருக உலகில் தோன்றிய மேதக்கோன். அவன் நம்முடைய பக்கத்திலிருந்தாலே வெற்றி நமக்குரிய தாகும் என்று முடிவுசெய்து, படையெடுக்கா விட்டாலும் உடனிருந்தால் போதும்" என்று கூறித் தன் பக்கமாக்கிச் சென்றான். துரியோதனன் கண்ணன் துணையை இழந்து விட்டானே என்று பலரும் துரியோதனனை, "உன்னுடைய அறிவு இவ்வளவுதானா?" என்று கூறி இகழ்ந்துரைத்தனர்.

(பாரதம்)

"சீதரனைப் பார்த்தனன்று சேர்த்தான் அரவுயர்த்தோன்
யாதவரை யுற்றான் இரங்கேசா—ஓதில்
அறிவுடைய ராவ தறிவா றறிவில்லார்
அஃதறி கல்லா தவர்"

(அறிவுடைமை) (இரங்கேச வெண்பா)

1246. பரிமளகந்தி கதை

குருகுல மன்னனாகிய சந்தனுவென்பவன் வேட்டை யாடச் சென்றான். காளிந்தியாற்றுக் கரையை அடைந்து ஓரிடத்தில் பாசறையமைத்துக்கொண்டு தங்கினான். நறு

மணம் ஒன்று சந்தனு மன்னன் தங்கியிருந்த விடத்தில் உண்டாகியது. அரசன் அம்மணம் உண்டாகிய காரணத்தை ஆராய்ந்தான்; பரிமளகந்தியைக் கண்டான். அவளிடத்தில் அடங்காத காதல்கொண்டு மயங்கினன். பரிமளகந்தியினுடைய தந்தையைக் கண்டு தன்னுடைய காதலைக் கூறினன். அவனே அரசனைப் பார்த்து," நாட்டை அரசாட்சி செய்வதற்குக் கங்கை மைந்தன் இருக்கிறான். என்னுடைய மகள்பெறும் பிள்ளை யாது செய்வான்?" என்று கேட்டான். இதனைக் கேட்ட சந்தனு மன்னன் உள்ளம் வருந்தி நகரத்திற்குத் திரும்பினன். பரிமள கந்தியைப் பற்றிய எண்ணத்தால் உள்ளம் வருந்திச் செயலற்று மயங்கியிருந்தான். தந்தைக்கு அந்நிலையேற்பட்ட காரணத்தை வீடுமர் உணர்ந்தார். உடனே காளிந்தியாற்றுக் கரை சென்று பரிமளகந்தியின் தந்தையைக் கண்டு பரிமள கந்தியைத் தம் தந்தைக்கு மணஞ் செய்துகொடுக்க வேண்டுமென்றும் அரசாட்சியைப் பரிமளகந்தியின் பிள்ளைக்கே கொடுப்பதாகவும் தாம் மணஞ்செய்து கொள்ளாமல் இருப்பதாகவும் உறுதிமொழி கூறிப் பரிமள கந்தியின் தந்தையைத் திருமணத்திற்கு இணங்கச் செய்தார். பிறகு பரிமளகந்திக்கும் சந்தனுவுக்கும் திருமணம் நிகழ்ந்தது.

(பாரதம்)

"யோசனைக் கந்தியினைக் காண்டலும்பே
ரோகை கொண்டான்
தூசணையாச் சந்தனுத்தான் சோமேசா—
நேசமுடன்
உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு"

[காமப் பண்பு] (சோமேசர் முதுமொழி வெண்பா)

1247. பன்றிக்குட்டிகளைப் பாதுகாத்த கதை

பாண்டிய வளநாட்டிலே குருவிருந்த துறையென்னும் ஊரிலே முன்னுளில் சுகலன் என்னும் பெயருடைய

வேளாளன் ஒருவன் இருந்தான். அவனுடைய மகனவியின் பெயர் சுகலை. சுகலனுக்கும் சுகலைக்கும் பன்னிரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்கள் தாய் தந்தையர்களுடைய அறிவுரையைக்கேட்டு நல்வழியில் நடவாமல் பொல்லாதவர்களாஞர்கள். காடுகளில் உயிர்களைக் கொன்று வேடர்களைப் போலத் திரிந்தார்கள். ஓரிடத்தில் தவஞ் செய்துகொண்டிருந்த வியாழன்மீது கல்லையும் மணலையும் வாரி வீசினர்கள். சினங்கொண்ட வியாழன் பன்னிருவரும் ஏனத்தின் குருளைகளாமாறு வசவுரை வழங்கினன். பன்னிருவரும் அவ்வாறே பன்றியின் குட்டிகளாகித் தாய்ப்பன்றியையும் இழந்து அல்லற்பட்டார்கள். பரமன் அப்பன்றிக் குட்டிக்குப் பால் கொடுத்துக் காப்பாற்றினர். பிறகு அவைகளைப் பாண்டிய மன்னனுடைய படைத் தலைவர்களாகவுஞ் செய்தார்.

"கருமுகிற் கனிநிறத் தழற்கட் பிறை யெயிற்
றரிதரு குட்டி ஆயபன் னிரண்டினைச்
செங்கோல் முளையிட்டு அருள்நீர் தேக்கிக்
கொலைகள வென்னும் படர்களை கட்டுத்
தீப்படர் ஆணை வேலி கோலித்
தருமப் பெரும்பயிர் உலகுபெற விளைக்கும்
நாற்படை வன்னியர் ஆக்கிய பெருமான்"

[பன்றிக் குட்டிகட் கருளியது] (கல்லாடம்—56)

1248. பாண்டவர்களின் பழங் கதை

நளாயனி மௌத்கல்யர் என்னும் முனிவருடைய மகனவி. மௌத் கல்யரோடு நீண்டநாள் இனிது வாழ்ந்திருந்தாள். பிறகு ஊழ்வலியால் இறந்தாள். இறக்கும் பொழுது நான் அடுத்த பிறப்பிலும் ஒரு பெண்ணைகப் பிறந்து இக் கணவனையே கூடுவேன் என்று எண்ணினள். அவ்வாறே மறுபிறப்பில் பெண்ணைக இந்திரசேனை என்னும் பெயரோடு பிறந்தாள். மௌத் கல்யரைக் கணவனைய் அடைதற்கு

அவரிடஞ் சென்ருள். அவரோ தவஞ் செய்து வீடு பேற்றை அடைய வேண்டும் என்னும் எண்ணமுடையவராக இருந்தார். ஆகவே இந்திரசேனைக்கு இடங்கொடாமல் நீங்கிச் சென்ருர்.

அவ்வாறு செல்லவே இந்திரசேனை அவரைப் பார்த்து, "நான் இனிமேல் யாது செய்வது?" என்று உசாவினுள். அவர், "பதிமாதுடனுகிய பரமனை (அர்த்த நாரீசுவரனை) எண்ணித் தவம் புரிவாயாக" என்று சொன்னர். அவளும் அவ்வாறே செய்தாள். இந்திரசேனையின் தவத்திற்கு மகிழ்ந்த அக் கடவுள் தமக்குரிய ஐந்து முகங்களோடு இவள் முன் தோன்றினர். இவள் "எனக்கு ஏற்ற கணவனைத் தருக" என்று ஐந்து முறை கூறி வேண்டிக் கொண்டாள். அக்கடவுள், "அவ்வாறே யாகுக" என்று இவள் ஐந்து கணவர்களைப் பெறுமாறு அருள் புரிந்தார். இவள் அதற்கு மகிழாமல், "தகுந்த ஒரு கணவனைத் தரவேண்டும்" என்று மறுபடியும் வேண்டிக் கொண்டாள்.

கடவுள் இந்திர சேனையைப் பார்த்து, "நீ ஐந்து முறை வேண்டிய படியால் நாம் உனக்கு ஐந்து முறை அருளியது தவருது. ஆனுல் அதனை இப்பிறப்பிலின்றி மறு பிறப்பிலடையுமாறு அருள் புரிகிறேம்" என்று அருளினர். மேலும் இந்திர சேனையைப் பார்த்து, "நீ கங்கை யாற்றுக்குப் போய் நீராடி விட்டு வருவாயாக! வரும் பொழுது உன் முன் வரும் ஆடவனை உன்னேடு அழைத்துக்கொண்டு வருவாயாக" என்றுஞ் சொன்னர்.

இந்திரசேனை கங்கையாற்றுக்குச் சென்று, "நாம் இப் பொழுதே ஒரு கணவனைப் பெற முடியாமற்போன தன்றி மறு பிறப்பில் ஐந்து கணவர்களைப்பெறுமாறு நேரிட்டிருக்கிறதே" என்னும் வருத்தத்தோடு கங்கையில் முழுகினுள். அவளுடைய விழிகளில் இருந்து பெருகிய கண்ணீர்த்துளிகள் கங்கையில் விழுந்து பொற்றுமரை மலர்களாயின. அந்த வியத்தகு செயலை அப்பொழுது அங்கு வந்த தேவேந்திரன் பார்த்தான். "இஃது என்ன?" என்று கேட்டுக்கொண்டு இந்திரசேனையிடஞ் சென்ருன். இந்திரசேனை "என்னேடு வந்து செய்தியை உணர்ந்துகொள்வாயாக" என்று கூறி, அவனைத் தன்னேடு கூப்பிட்டாள்.

அவ்விந்திரன் இந்திர சேனையைத்தொடர்ந்து சென்றான். அப்போது ஓரிடத்தில் இறைவியோடு சூதாடிக்கொண்டிருந்த சிவபிரானைக்கண்டு வணங்காமல் செருக்கோடு பேசினான். சிவபிரான் சினங்கொண்டு இந்திரனுடைய செருக்கையடக்கினார். பிலம் ஒன்றுக்குள்ளே தள்ளினார். இவ்வாறே முன்பு செருக்குற்றுப் பிறகு தம்மால் அடக்கப்பட்டு அப்பிலத்தில் அடைக்கப் பெற்றிருந்த நான்கு இந்திரர்களையும் அவனுக்குக் காட்டினார். ''நீங்களனைவரும் நிலவுலகில் அரசர்களாகப்பிறந்து அரசகன்னிகையாகப் பிறப்பெடுக்கும் இவளை மணம் புரிந்து வாழ்க்கை நடத்தி விண்ணுலகம் புகுவீர்களாக'' என்று கட்டளையிட்டார். இறைவன் கட்டளைப்படியே அவ்விந்திரர்கள் பாண்டுவின்மைந்தராகவும் இந்திரசேனை திரௌபதியாகவும் பிறந்து இவ்வுலகில் வாழ்க்கை நடத்தி விண்ணகம் புகுந்தனர்.

''இங்கிதத் திந்திரர் என்பவர் யாவரும்
சங்கரன் விதியினுல் தரணி பாலராய்
வெங்கனல் தோன்றிய மின்னை ஐவரும்
மங்கலம் புவிமகள் வழக்கின் எய்தினீர்''

[பாண்டவர்கள்] (பாரதம்)

1249. பாண்டியனுகி அரசாண்ட கதை

உமாதேவியானவள் மலையத்துவச பாண்டிய மன்னன் செய்த தவப்பயனுல் அவனுக்கு மகளாகத் தோன்றித் தடாதகை என்னும் பெயர் தாங்கினாள். பிறகு பாண்டிய நாட்டின் அரசாட்சியை மேற்கொண்டிருந்தாள். சிவபெருமான் தமது கொன்றைமாலை முதலியவைகளை நீக்கி வேப்பமாலையை அணிந்து பாண்டியனுகித் தடாதகைப் பிராட்டி என்னும் பெயரோடு பாண்டி நாட்டரசியாகத் திகழ்ந்த உமாதேவியை மணம் புரிந்து பாண்டி நாட்டை அரசாட்சி செய்திருந்தார்.

''கடுக்கைமலர் மாற்றி வேப்பலர் சூடி
ஐவாய்க் காப்புவிட் டணிபூண் அணிந்து

விரிசடைமறைத்து மணிமுடி கவித்து
விடைக்கொடி நிறுத்திக் கயற்கொடி எடுத்து
வழுதி யாகி முழுதுல களிக்கும்
பேரருள் நாயகன்''

[இறைவன் அரசாண்டது] (கல்லாடம்)

1250. பெட்டகத்திட்டோட்டிய கதை

இராவணன் தவஞ்செய்து கொண்டிருந்த வேதவதி என்பவனைத் தழுவ விழைந்து வலுக்கட்டாயஞ் செய்தான். அவள், ''உன்னையும் உனது குலத்தையும் அழிப்பதற்கு நான் மறுபிறப் பெடுப்பேன்'' என்று கூறித் தீயிற்பாய்ந்து மாண்டாள். பிறகு ஓர் அழகிய பெண் குழந்தையாய் இலங்கையில் தடாகமொன்றில் ஒரு தாமரைப்பூவில் அமர்ந்திருந்தாள். அக்குழந்தையைக் கண்டோர் எடுத்துக் கொண்டுபோய் இராவணனிடஞ் சேர்த்தனர்.

இராவணன் அக்குழந்தையின் அழகைக் கண்டு உள்ளம் மகிழ்ந்தான். தன்னுடைய மகளெனக்கொண்டு வளர்த்தான் காலக் கணிதர்களைக்கொண்டு அக்குழந்தையின் நாட்குறிப்பை ஆராய்ந்து பலனுரைக்கச் சொன்னான். காலக் கணிதர்கள் பலனை ஆராய்ந்து பார்த்தார்கள். அக்குழந்தையால் இலங்கை அழிந்தொழியும் என்று கண்டார்கள். அச் செய்தியை இராவணனுக்கு அறைந்தார்கள். அவன் அதனைக் கேட்டு மிகுந்த சினமடைந்தான். ''இக் குழவியை உடனே கொன்று தொலைப்பேன்'' என்று கூறி வாட்படையை உருவினான்.

அறநூலுணர்ந்தோர், ''குழந்தையைக் கொல்லுதல் கூடாது. அதனுலுளதாம் தீவினை மிகக் கொடிது'' என்று அறிவுரை கூறினர். ''ஆயின் இக்குழந்தையையாது செய்யலாம்?'' என்று உசாவினான். பேழையொன்றில் அடைத்துக் கடலில் எறிந்துவிடலாம் என்று அவர்கள் மறு

மொழி கூறினர். இராவணன் அவ்வாறே செய்யுமாறு ஆணையிட்டான்.

கடலில் எறியப்பட்ட பேழை அலையினால் அடித்துச் செல்லப்பட்டு மிதிலை நகரை யொட்டிய கடற்கரையைச் சேர்ந்தது. கரையில் ஒதுக்கப்பட்ட பெட்டி மணலால் மூடப்பட்டுக் கிடந்தது. சிலகாலம் பொறுத்துச் சனகமன்னன் கடற்கரையில் வேள்வி செய்தற் பொருட்டுக் கலப்பையால் கடற்கரையை ஒட்டிய இடத்தை உழச் செய்தான். அப்போது அப்பேழை வெளியாயிற்று. அதனைத் திறந்து பார்த்த மன்னன் சீதையென்று பெயரிட்டுத் தன்னுடைய மகளாக வளர்த்தான். இதன் பிறகு இராவணன் அழிவுக்கு நிகழ வேண்டியவைகளெல்லாம் நிகழ்ந்தன.

(இராமாயணம்).

"உற்றுழிப் பெட்டகத்திட் டோட்டுமிலங் கேசனைப்பின்
செற்றுள்வந் தென்பர் சிவசிவா—உற்றுரின்
ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்"

[ஊழ்வலிது]

(சிவசிவ வெண்பா)

1251. மணிகன்னிகையின் கதை

மணிகன்னிகை என்பது காசி நகரத்தில் உள்ள ஒரு தடாகம். முன்னளிற் சிவபெருமான் திருமாலைப் பார்த்து, "உன் பெயர் நாராயணன் உன்னிடத்தில் உண்டாகிய மூச்சுக் காற்று மறை யாகும். அதனால் நீ யாவையும் உணர்வாய்" என்று திருவாய் மலர்ந்தருளினர். திருமால் காசிமாநகரை அடைந்து தம் கையிலுள்ள ஆழிப்படையினால் ஒரு தடாகத்தைத் தோண்டித் தம் உடலில் உண்டான வியர்வை நீரினால் அதனை நிரப்பி அதன் கரையில்

ஐம்பதினாயிரம் ஆண்டுகள் அரிய தவத்தைச் செய்தார். சிவபெருமான் திருமாலுடைய தவத்திற்கு இரங்கினர்; உமாதேவியாரோடு அங்கு எழுந்தருளினர். "திருமாலே உன்னுடைய தவத்திற்கு மகிழ்ந்தோம். வேண்டியதைக் கேள்" என்று கூறித் தம்முடைய தலையை அசைத்தார். அப்பொழுது சிவபெருமானுடைய திருக்காதுகளில் இருந்த குண்டலமணி அத்தடாகத்தில் வீழ்ந்தது.

திருமால் சிவபெருமானைப் பார்த்துத், "தேவரீர் இடத்திலே நீங்காத அன்பினை அருளி மயக்கத்தினைப் போக்கியருளுதல் வேண்டும்" என்று சொல்லி வேண்டிக் கொண்டார். சிவபெருமான் "அவ்வாறே அருளினேம்; உன் தவச் செயலுக்கு மகிழ்ந்து தலையசைத்தபொழுது குண்டலமணி இத்தடாகத்தில் வீழ்ந்த படியால் இதற்கு மணிகன்னிகை என்று பெயர் வழங்கக் கடவது. இதனில் மூழ்கினோர் பெறுதற்கரிய வீடுபேற்றினை அடையக் கடவர்" என்று திருவாய் மலர்ந்தருளினர்.

"களங்கனி அனைய மேனிக் கண்ணநின்
தவத்தென் சென்னி
துளங்கலுங் குழையில் தாழ்ந்த சுடர்மணி
விழுந்த வாற்றுல்
வளங்கெழும் இந்தவாவிக் கொளிமணி
கன்னிகைப் பேர்
விளங்குக இதனில் தோய்ந்தோர் பெறலரும்
வீடு சேர்வார்.

[மணிகன்னிகை வரலாறு] (காசிகண்டம்)

———

1252. மதலையை அழைத்த கதை

அவந்தி நாட்டில் இருந்த சாந்தீவினி என்பவரைக் கண்ணனும் பலராமனும் ஆசிரியராகக்கொண்டு வேதங்களையும் ஆகமங்களையும் கற்றுணர்ந்தனர். பிறகு கண்ணன் ஆசிரியரை வணங்கித், "தங்களுக்கு வேண்டிய குருகாணிக்கை யாது?" என்று உசாவினர். அவர் தம்முடைய மனைவியைக் கேட்டார். அவர் மனைவி, "சிறிது காலத்திற்கு முன் கடலாடுகையில் அலையில் அகப்பட்டு இறந்துபோன நம்முடைய மகனைத் தரும்படி கேளுங்கள்" என்று கூறினள். ஆசிரியர் அவ்வாறே கண்ணனைக் கேட்டார். கண்ணன் உடனே தம்முடைய அண்ணனோடு தேரேறி வருணன் உலகிற்குச் சென்றார். வருணன் கண்ணனை வணங்கி "வந்த காரியம் யாது?" என்று உசாவினன். கண்ணன் "கடலாடுகையில் இறந்துபோன எம்முடைய ஆசிரியரின் மகனைத் தருக" என்று கேட்டார். வருணன், "கடலில் வசிக்கும் பாஞ்சசனன் என்னும் அவுணன் விழுங்கிவிட்டான்" என்று கூறினன்.

கண்ணன் கடலிற் பாய்ந்தான். அங்கு துயின்றுகொண்டிருந்த அசுரனுடைய நெஞ்சைப் பிளந்து அதனுள் இருந்த சங்கை எடுத்துக்கொண்டு தேரேறி நமனுலகத்தையடைந்தான். சங்கைப் பலமாக ஊதினன். சங்கொலியைக் கேட்ட நமன் விரைந்தோடி வந்தான்; வணங்கினன். "இங்கு வந்த காரணம் யாது?" என்று கேட்டுணர்ந்து அப்புதல்வனைக் கண்ணனிடம் அளித்தான். கண்ணன் அப்புதல்வனைக் கொண்டுவந்து ஆசிரியர்முன் விட்டான்.

"கதழெரி நேமி தூண்டிக் கராங்கவர் குரவ னீன்ற
மதலையை அழைத்த செங்கண் மாலென வருந்து மும்மல்"

[கண்ணன் பிள்ளையை அழைத்தது] (காசிகண்டம்)

1253. மன்னவன் மனத்திலுள்ளதைப் பாடிய கதை

ஒருநாள் குலோத்துங்க சோழன் இரவில் நகரைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தான். விடியும் வேளையில் ஒரு பெண் தனிமையாகச் சென்று கொண்டிருந்தாள். அவளுடைய செய்கையை ஆராய்ந்து பார்க்க விரும்பிய அரசன் அவளைப் பின் தொடர்ந்தான். அப்பொழுது பொழுது விடியும் நேரமாகையால் நீர்க்காக்கை கத்தியது. அதனைக் கேட்டுப் பொழுது விடியப் போகிறதே என்று அஞ்சிய அம்மங்கையானவள் ஆற்றின் கரையிற் கிடந்த ஒரு பிணத்தை யிழுத்து ஆற்றுவெள்ளத்திற் போட்டு அதனையே தெப்பமாக நடத்திக்கொண்டு அக்கரைக்குச் சென்றாள்.

ஆற்றுக்கு அக்கரையில் அவளுடைய கள்ளக் காதலன் வசித்திருந்தான். அவனைநெடு அம்மங்கை விரைவாகவும் அச்சத்தோடும் இன்பத்தை நுகர்ந்து மீண்டும் பிணத் தோணியில் ஏறி ஆற்றைக் கடந்து வந்தாள். அப் பொழுது முதலையொன்று அவளுடைய காலைப் பற்றியது. அவள் அதற்குச் சிறிதும் அஞ்சாமல் அதன் முகத்தில் தன்னுடைய காற்கொலுசினால் உதைத்து மீண்டாள்.

குலோத்துங்க சோழன் மறு நாள் தன்னுடைய அவையை அடைந்தான். கண்ட சுத்தி பாடுவதில் வல்லவராகிய ஒட்டக் கூத்தர் இரவு நிகழ்ந்ததை உணர்ந்து பாடுகிறாரா என்று பார்க்க வேண்டுமென்னுங் குறிப் போடிருந்தான். தெய்வப் புலமை வாய்ந்த ஒட்டக் கூத்தர் அரசனுடைய உள்ளக் கருத்தை உணர்ந்து கொண்டு பின்வரும் பாடலைப் பாடினார். அரசன் கூத்தரைப் பாராட்டினான்.

"கரண்டகண்டத் தொனிக்கஞ்சிய
[மான்கருங் கங்குலிலே
திரண்டவெள் ளத்திற் பிணமீது
[சென்றனள் சேர்ந்தவளே
அரண்டவின் பங்கொடு மீளக்
[கராம்பற்ற அங்கொலுசால்

குரண்ட கன்னத்தில் உதைத்தனள்
[காணங் குலோத்துங்கனே.

[கண்டசுத்தி] (ஒட்டக்கூத்தர் பாடல்)

1254. வாயடங்கிய வைணவர் கதை

காளமேகப் புலவர் வைண சமயத்தில் தோன்றியவர். இவர் இறைவியின் அருளைப் பெற்றுச் சைவராகிவிட்டது திருவரங்கத்து வைணவர்கட்கு மிகுந்த வெறுப்பை யுண்டாக்கி யிருந்தது. காளமேகப் பலவரை இழிவுபடுத்தி வாயடக்க வேண்டும் என்று எண்ணினர்கள்.

ஒரு நாள் பலபேர் ஒன்றுகூடிக் காளமேகப் புலவரைப் பார்த்து, "முற்காலத்திலே திருமால் உலகங்களையெல்லாம் தம்முடைய வயிற்றுள் அடக்கினரே அப்பொழுது உங்களுடைய சிவபெருமான் எங்கிருந்தார்? அவரும் எங்களுடைய பெருமாளின் திருவயிற்றுக்குள் அடங்கிவிட்டாரன்றே? அவ்வாறு சிவபெருமான் திருவயிற்றுக்குள் அடங்கவில்லையென்றால் அவர் எங்கிருந்தார்?" என்று கேட்டார்கள்.

இதனைக் கேட்டவுடன் காளமேகப் புலவருக்குச் சினம் உண்டாகிறது. அவர் வைணவர்களைப் பார்த்து, "யானை பெருங்கவளமாக உணவை யெடுத்து உண்ணும் பொழுது யானைப்பாகன் அதன்மீது உட்கார்ந்துகொண்டிருத்தலை நீங்கள் பார்த்ததில்லையா? அதைப் போல் திருமால் உலகங்களை விழுங்கிய காலத்தில் சிவபெருமான் திருமால்மீது அமர்ந்திருந்தபடியே தான் அமர்ந்திருந்தார்" என்று மறுமொழி கூறினர். இதனைக் கேட்ட வைணவர்கள் வாயடங்கி நாணிச் சென்றனர்.

"அருந்திஞன் அண்டமெலாம் அன்றுமால் ஈசன்
இருந்தபடி ஏதென் றியம்பப்—பொருந்திப்

பருங்கவளம் யானைகொளப் பாகனதன் மீதே
இருந்தபடி ஈசனிருந் தான்"

[இறைவன் முழுமுதற்றன்மை] (காளமேகப் புலவர்)

1255. விநாயகர் திருமண ஓலை எழுதிய கதை

பறம்புமலைப் பாரியிறந்தபின் பாரியின் பெண்களிருவர் திருக்கோவலூரில் திக்கற்றவர்களாக இருந்தனர். ஔவை யார் அப்பெண்களைக் கண்டார். அவர்கட்குத் திருமணஞ் செய்து வைப்பதற்கு ஏற்பாடு செய்தார். திருமண அழைப் பிதழ் எழுதிப் பதிப்பிட இந்நாளைப் போல் அந்நாளில் இயலாது. எல்லோருக்கும் ஓலையில் எழுதித்தான் அனுப்ப வேண்டும். ஔவையாரால் ஓலையை எழுத முடியவில்லை. யாரைக் கொண்டு எழுதச் செய்யலாம் என்று எண்ணமிட்டார். தம்முடைய வழிபடு கடவுளாகிய ஆனைமுகக் கடவுளைக் கொண்டு எழுதுவதுதான் தக்கதென்று முடிவு செய்தார். ஆனைமுகக் கடவுள் அஞ்சுமாறு செய்யுள் ஒன்று பாடினார். ஆனைமுகக் கடவுள் விரைந்து வந்து ஔவை யாருடைய கட்டளையை நிறைவேற்றினர்.

"ஒருகொம் பிருசெவி மும்மதத்து நால்வாய்க்
கரியுரிவைக் கங்காளன் காளாய்—பரிவுடனே
கண்ணுலை ஓலை கடிதெழுத வாராயேல்
தன்னுண்மை தீர்ப்பன் சபித்து.

[ஆனைமுகக் கடவுளுக்குக் கட்டளை] (ஔவையார்)

சில மேற்கோள் பாடல்கள்

1. அகத்தியர் கதை

தென்றிசை மேலும் வட திசை
தாழவுந் தேவிமணம்
அன்றுசெய் கின்ற அரனுர்
அகத்திய அப்பொதிகைக்
குன்றினி லேகு கெனவுந்
தமிழ்ப்பொதிகூடல் வெள்ளி
மன்றினில் வந்து சமானஞ்செய்
பாண்டியன் மண்டலமே.

---

45. அரசனுடைய பொருளை அள்ளிக் கொடுத்த கதை

ஈரக் கருக்கரி வாள்கொண்டு போகையில்
இன்புலமேவான்
நேரொக்க வேதின்று வண்டோ லிடுமென
நின்று தனஞ்
சேரக் கொடுப்பவொன் றில்லாமல் மன்னவன்
செம்பொனெல்லாம்
வாரிக் கொடுக்கத் துணியவல் லான்தொண்ட
மண்டலமே.

---

91. ஆற்றூர்க் கிழான் கதை

கூற்றூர்ப் புலவன் ஒருபரி கேட்பக்
கொடை மதத்தால்
ஆற்றூர்க் கிழான்பரி ஆயிரம் ஈந்தனன்
ஆதலினால்
வேற்றூர் பலவிது நம்மூ ரெனும்படி
வெம்பசியை
மாற்றூர் பலவுள மண்டலங் காண் தொண்ட
மண்டலமே.

---

120. இடையாலத்தான் கதை

கடைவா யிலில்நின் றியாசகர்
கூப்பிடக் காதிலது
தடையாய் அவனும் பசியால்
வருந்தத் தடையகற்றி
அடையாத வாசல் உடையான்
எனும்பெயர் ஆதரித்தான்
மடையார் கழனி இடையாலத
தான்தொண்ட மண்டலமே.

---

107. சந்திரனைத் தோள் நெரித்த கதை

"சந்திரனைத் தேய்த்தருளித்
தக்கன்தன் வேள்வியினில்"

---

194. எழுகடலழைத்த கதை

"மாமி ஆடப் புணரி அழைத்த
காமர் கூடற் கிறைவன் கழலிணை"

(கல்லாடம்—26)

---

242. கண்டங்கறுத்த கதை

"நாரணன் பாறத் தேவர்கெட் டோட
வளிசுழல் விசும்பின் கிளர்முக டணவிக்
கருமுகில் வகுந்து பெருகிய போல
நிலைகெடப் பரந்த கடல்கெழு விடத்தை
மறித்தவர் உயிர்பெறக் குறித்துண் டருளித்
திருக்களம் கறுத்த அருட்பெரு நாயகன்"

(கல்லாடம்—53)

---

246. கண்ணப்பர் கதை

"முன் னெருகாலத் தடுகொலைக் கணைந்த
முகிலுருப் பெறுமோர் கொடுமரக் கிராதன்
அருமறைத் தாபதன் அமைத்திடு செம்மலைச்
செருப்புடைத் தாளால் விருப்புடன் தள்ளி
வாயெனுங் குடத்தில் வரம்பறவெடுத்த
அமுதுகடல் தள்ளும் மணிநீர் ஆட்டி
பின்னல்விட் டமைத்த தன்தலை மயிர்அணை

திருமலர் விண்புக மணிமுடி நிறைத்து
வெள்வாய் குதட்டிய விழுதுடைக் கருந்தடி
வைத்தமை யாமுன் மகிழ்ந்தமு துண்டவன்
மிச்சிலுக் கின்னும் இச்சைசெய் பெருமான்

(கல்லாடம்—15).

---

275. கரிக்குருவிக்கு அருளிய கதை

"பலகுறி பெற்று இவ்வுலகுயி ரளித்த
பஞ்சின் மெல்லடிப் பாவைகூ ருகி
கருங்குரு விக்குக் கண்ணருள் கொடுத்த
வெண்திரு நீற்றுச் செக்கர் மேனியன்"

(கல்லாடம்—41).

---

289. கல்லானை கரும்புதின்றகதை

"நதிமதம் தறுகண் புகர்கொலை மறுத்த
கல்லிபம் அதனைக் கரும்புகொள வைத்த
ஆலவாய் அமர்ந்த நீலநிறை கண்டன்"

(கல்லாடம்—30).

---

334. காமன் நீறுகியகதை

"கயிலைத் தென்பால் கானகம் தனித்த
தேவர்நெஞ் சுடைக்கும் தாமரை யோகின்
மணக்கோல் துரந்த குணக்கோ மதனைத்

திருக்குளம் முகூத்த கண்தா மரைகொடு
தென்கீழ்த் திசையோன் ஆக்கிய தனிமுதல் ''

(கல்லாடம்—32)

---

330. காரைக்கால் அம்மையார் கதை

'' மாங்கனி இரண்டில் ஆங்கனி யொன்றுல்
முன்னெரு நாளில் முழுக்கதி யடைந்த
அம்மைப் பெயர்பெறும் அருட்பேய் பிடிப்பப்
பூதமுங் கூளியும் பேயுங் குனிப்ப
அமரர்கண் களிப்ப ஆடிய பெருமான் ''

(கல்லாடம்—63)

---

340. கார்காத்தார் கதை

காரூர் புயற்குப் பிணைசொல்லிக்
கீர்த்திக் கவிதைகொள்ளும்
நீரூ ருவக்குங் காரினைக்
காத்த நெறிமுறையின்
நேரூறு மன்னவன் உத்தர
தேசத் தகன்றிருக்கும்
வாரூறு மங்கல வேளாளர்
பாண்டியன் மண்டலமே.

---

348. காளத்திக்குச் சென்ற காரிகையார் கதை

"பாண்டிவள நாட்டிலுயர் பாவலனைப் போலவே
ஈண்டியிருங் கதியை எய்தவே — வேண்டி
வரும்புண்ட ரீகவிழி மானுரைத் தாளில்
இரும்புண்ட நீராக்கு மெங்கோன்."

(திருக்காளத்தி நாதருலா)

---

375. குமர குருபரர் கதை

"பேர் கொண் டரசு செய் மீனுட்சி
யம்மன்றன் பிள்ளைத்தமிழ்
கூர்கொண்ட சூலங்கொள் சொக்கேசர்
மும்மணிக் கோவைமுதல்
தேர்ந்து சிறக்குங் குமர
குருபரத் தம்பி ரான் சொல்
பார்கொள் பெருமையைப் பெற்றது.
பாண்டியன் மண்டலமே."

(பாண்டி மண்டல சதகம்)

---

422. கோட்டி முதலியார் கதை

உணலிலப் பசும் பொன் முதலான வற்றை

[உதவிப் பின்னும்

குணலச்சை யுள்ளவர் கேட்கவுங் கூசுவர்
[கொல்லெனவே
எணலைக் கருதி எழுதிவைப் பீரென
[இன்மறைந்து
மணலைப் பரப்பிய முன்றிலுள் ளான்கொங்கு
[மண்டலமே.

---

678. திருமுகங்கொடுத்த கதை

"குடக்கோச் சேரன் கிடைத்திது
[காண்' கென
மதிமலி புரிசைத் திருமுகம் கூறி
அன்புருத் தரித்தவின் பிசைப் பாணன்
பெறநிதி கொடுக்கென வுறவிடுத் தருளிய
மாதவர் வழுத்துங் கூடற் கிறைவன்"

(கல்லாடம்—12)

---

732. நக்கீரர் கரையேறிய கதை

"மஞ்சடை குழற்பெறு செஞ்சடைப் பெருமான்
அருந்தமிழ்க் கீரன் பெருந்தமிழ்ப் பனுவல்
வாவியிற் கேட்ட காவிய ங் களத்தினன்"

(கல்லாடம்—52)

பொருள் விளக்கம்

1. அரசர் கதைகள்

தொடர் எண்	கதையின் பெயர்	பொருள்	பக்கம்
8	அங்கிவருணன் கதை	கள்ளுண்டல்	8
11	அசமஞ்சதன் கதை	மடியினமை	10
12	அசன் கதை	அஞ்சாமை	18
15	அஞ்சுமான் கதை	சினத்தை யொழித்தல்	18
22	அதிகன் கதை	மடிமை	12
62	அவிச்சித்து கதை	அறநெறி தவறுதல்	59
66	அறிவுடைநம்பி கதை	அறிவு	59
77	ஆதியந்த வுலா வாசுபாடிய கதை	ஞானவுலா வரலாறு	66
84	ஆரியன் கதை	ஊக்கமுடைமை	78
104	இந்திரத் துய்மன் கதை	மறதி	82
105	,, ,, ,,	புகழ்	83
114	இரகு கதை	வறுமையிற் செம்மை	90
116	இரணியவர்மன் கதை	சிவகங்கைச் சிறப்பு	95
120	இராசவர்மன் கதை	உறவினர்கள்	103
134	இரும்பொறை கதை	அறிஞர்களிடம் அன்பு	111
159	உண்மையை உணர்ந்த கதை	வேளாளர் சிறப்பு	129
163	உதியன் கதை	உணக்கொடை	146
171	உருக்குமாங்கதன் கதை	ஒழுக்கத்தைக் காத்தல்	156
180	உலோகமாபாலன் கதை	தீயநட்பு	164
205	ஏனன் கதை	கேள்வியறிவற்றவர்	184

தொடர் எண்	கதையின் பெயர்	பொருள்	பக்கம்
239	கணன் கதை	பிறர்பொருள் நயத்தல்	213
273	கரிகாலன் கதை	கரிகாலன் செய்தி	242
274	கரிகாலன் வழக்குத் தீர்த்த கதை	குலவித்தை தானே வரும்	243
284	கலிங்கன் கதை	சூது	252
329	காந்தன் கதை	வருமுன் காக்கும் அறிவு	290
355	கானன் கதை	கல்வியறிவு	313
394	குலிசன் கதை	மூனிவர் சினம்	346
397	குவலயாசுவன் கதை	கலந்தெண்ணுதல்	349
406	கூன்பாண்டியன் கதை	நல்லினமே நற்றுணை	357
407	கேகயன் கதை	மறதி	358
426	கோப்பெருஞ்சோழன் கதை	நட்பு	374
438	சகரர் கதை	மிகுந்த சினம் அழிவைக் கொடுக்கும்	384
439	சகரன் கதை	சுற்றம் போற்றல்	384
441	சகுந்தன் கதை	பெரியோரை இகழ்தல்	386
461	சததன்வா கதை	ஆராயாது வினை செயல்	402
462	சதானீகன் கதை	அறிவிலான் செய்யும் அறம்	403
467	சத்தியவான் கதை	கற்புடை மனைவி	408
468	சத்தியாதனன் கதை	மடியினுற் குடி கெடும்	409
469	சத்திரசித்து கதை	புல்லர்களுடைய பொருள்	409
472	சந்தனை கதை	கல்வியறிவின்மை	412
496	சனகன் கதை (1)	இறைவனடி பற்றுவோர்	434
497	,, ,, (2)	பற்றற்ற தன்மை	435
507	சாமகன் கதை	மனைவிக்கஞ்சுவோர்	444
510	சாலிவாகனன் கதை	வரலாறு	447

511	சிகித்துவசன் கதை	உண்மைப் பொருளை உணர்தல்	450
518	சித்திரகேது கதை	கேள்வி	455
521	சிபிச்சக்கரவர்த்தி கதை	அன்புடைமை	459
522	சிம்மகன் கதை	சுற்றத்தினரைப் போற்றுதல்	461
541	சீமூதவாகன் கதை	அருட்செல்வம்	477
555	சுச்சோதிகன் கதை	சிவப்பதிப்பெருமை	488
557	சுதயணன கதை	முறைபுரியா மன்னன்	491
558	சுதரிசனன் கதை	மக்கட்குக் கல்வி கற்பித்தல்	492
559	,, ,, (வேறு)	முயற்சி பலனை யளிக்கும்	492
575	சுவேதன் கதை	பற்றுள்ளத்தால் வருங் கேடு	509
577	சுனச்சேபன் கதை	நிறைமொழி மாந்தர் பெருமை	511
600	தக்கன் கதை	பெரியார் துணை	531
607	தடமித்தன் கதை	நல்லவர் நட்பு	537
618	தமன் கதை	ஆக்கங்கருதி முதலிழத்தல்	545
621	தருமகுத்தன் கதை	மடியை மாற்றுதல்	548
624	தருமதத்தன கதை	பெருமைக்குஞ் சிறுமைக்குங் காரணம்	551
633	தலையைக்கண்டு தலையுற வணங்கிய கதை	வரகுணன அன்புடைமை	561
687	திலீபன கதை	முயற்சியைக் கைவிடலாகாது	606
688	திலீபராசன் கதை	திலீபன் அருள் பெற்றது	607
713	தெய்வீகன் கதை	சிறந்த எண்ணம்	632
715	தென்முகன் கதை	நல்லோர்	634
719	தேவமித்திரன் கதை	விலைமாதரை விரும்புவோர்	638
721	தேவியைக் கொடுத்த கதை	வரகுண பாண்டியன் அன்புடைமை	639
724	தொண்டைமான் கதை	நாக கன்னிகை	642
725	தொண்டைமான் களிற்றைத் தடுத்த கதை	திருமுல்லைவாசல்	642

தொடர் எண்	கதையின் பெயர்	பொருள்	பக்கம்
734	நந்தன் கதை	சொல்லேருழவர் பகை	650
746	நரிகட்குப் போர்வை யளித்த கதை	வரகுண பாண்டியன்	661
752	நல்லியக்கோடன் கதை	தலைமையான அறம்	666
760	நள்ளி கதை	கைம்மாறில்லாத உதவி	673
763	நன்னன் கதை	கொடுங்கோல் மன்னன்	676
771	நாந்தகன் கதை	பகைமிகுதல்	683
773	நாய்க்கட்டம் எடுத்த கதை	வரகுண தேவர்	685
778	நார்முடிச்சேரலன் கதை	ஊக்கமுடைமை	689
790	நிருகன் கதை	முறை செய்யா அரசன்	700
791	நீகன் கதை	புகழை மறதி யழிக்கும்	701
797	நெடுங்கிள்ளி கதை	கடுமொழியுங் கையிகந்த தண்டமும	707
798	நெடுஞ்செழியன்	செங்கோன்மை புகழை யளிக்கும்	708
827	பரதன் கதை (2)	இறைமாட்சி	736
829	பராந்தகன் கதை	உள்ளத்தால் எண்ணுதலும் தீமை	737
881	பிருகரதன் கதை	விட்டுவிட்ட பொருள்களால் துன்பமில்லை	781
891	புட்கரன் கதை (1)	ஆகூழும் போகூழும்	790
892	புட்கரன் கதை (2)	சூதாடுதல்	790
904	புரஞ்சயன் கதை	வேந்தர்க்குரிய குணங்கள்	806
905	புருகுச்சன் கதை	தக்கவாறு ஒறுப்பவனே அரசன்	807
906	புரூரவன் கதை	ஆண்மையுஞ் செயலும்	807
939	போசன் கதை (1)	கொடை நலம்	836
940	,, ,, (2)	செவிச் செல்வம்	837
945	மக்களைக் கண்டு மகிழ்ந்த கதை	அன்புடைமை	842
951	மணிமான் கதை	ஈகைமகளிரை விரும்பாமை	847

974	மனுச்சோழன் கதை	கொல்லாமை	867
985	மாந்தாதா கதை	இழிவுரையைப் பொறுப்போர்	876
1000	மாவலத்தான் கதை	அரசர்கள் பிழை பொறுத்தல்	889
1008	மித்திரசகன் கதை	அறிவற்றவர்களை நம்புதல்	896
1012	மூசுகுந்தன் கதை (1)	சிறந்த அரசன்	900
1013	,, ,, (2)	சிறந்த படை	901
1040	மூனையதரையன் கதை	கண்ணபுர நிகழ்ச்சி	925
1046	மூவன் கதை	கடும் பற்றுள்ளம்	933
1047	மூவேந்தர் கதை	ஏகம்பவாணர் பகை	934
1057	யசோதரன் கதை	மனைவியை விரும்பிய மன்னன்	945
1072	வச்சந்தன் கதை	குற்றங்கடிதல்	957
1081	வரதுங்கராமபாண்டியன் கதை	மறத்திற்கும் அன்பு துணை	967
1103	வாணன் கதை	பூரியர்கள் ஆறும் அளறு	989
1113	விசயபத்திரன் கதை	பகைமை பாராட்டாமை	999
1120	விண்ணுலகத்திற் கனுப்பிய வேந்தன் கதை	பாலைக் கௌதமன் விண்ணகம்	1004
1121	விதாதா என்னும் வேந்தன் கதை	மாறுபாடான நடக்கை	1006
1153	வீரசித்து கதை	பொது மாதரை அறிஞர் வெறும்பார்	1038
1154	வீரசேனன் கதை	பகையை மூலையிற் கிள்ளுதல்	1039
1164	வேங்கை மார்பன் கதை	பல்லார் பகை	1048
1170	வேம்புகட்கெல்லாம் விதானம் அமைத்த கதை	வரகுணன்	1058
1242	நால்வேந்தர் கதை	பெரியாரைப் பிழையாமை	1199

1157

1411
421
421
426

2. இராமாயணக் கதைகள்

தொடர் எண்	கதையின் பெயர்	பொருள்	
3	அகலிகை கதை	ஒழுக்கம்	4
32	அநுமான் கதை (1)	சொல்லாற்றல்	21
33	,, ,, (2)	கைம்மாறு நோக்கா உதவி	28
34	,, ,, (3)	அடக்கமுடைமை	28
35	,, ,, (4)	பயனில கூறுமை	29
36	அநுமான் மருந்து மலையைக் கொண்டு வந்த கதை	அரிய செயல்	30
110	இந்திரன் கதை	பிறர்மனை நயத்தல்	93
117	இரணியன் கதை	இனங்காத்தல்	99
121	இராமபிரான் கதை (1)	நன்மகன்	103
122	,, ,, (2)	பிறர்மனை நயவாமை	104
123	இராமபிரான் பொறுமை	பொறுமையின் பெருமை	104
125	இராமன் மான் பிடித்த கதை	ஊழ் முன்னிற்கும்	106
126	இராவணன் கதை (1)	மறதெறி கேடு தரும்	107
127	,, ,, (2)	பிறர்மனை நயத்தல்	108
128	,, ,, (3)	அறிவுடையார் ஆவதறிவார்	109
129	,, ,, (4)	பயனில பேசுதல்	110
130	இராவணன் மலையெடுத்த கதை	ஆற்றலறியாது தவறுபுரிதல்	110
131	இராவணனுங் குபேரனும்	நல்வழியில் வந்த பொருள்	111
137	இலட்சுமணன் கதை	அறமுடையவன்	117
173	உரோமபதன் கதை	மழையின் சிறப்பு	158
191	எல்லா உயிர்களையும் நல்லுலகில் ஏற்றிய கதை	மெய்யன்பு	173

228 கடலைச் சினந்தது
262 கபிலர் கதை
272 கரனைக் கொன்ற கதை
288 கலிக்கோட்டு முனிவர் கதை
293 கவந்தன் கதை (1)
294 ,, ,, (2)
316 காகங் கண்ணிழந்த கதை
328 காந்தளலர்த் தொடையிட்டனுப்பிய கதை
341 கார்த்தவீரியார்ச்சுனன் கதை
342 கார்த்தவீரியார்ச்சுனன் உயிரிழந்த கதை
358 குகன் கதை
379 கும்பகருணன் கதை (1)
380 ,, ,, (2)
381 ,, ,, (3)
405 கூனி கதை
411 கைகேசி கதை
421 கோடகன் கதை
434 கௌதமர் கதை (2)
456 சடாயு கதை
457 சடாயுக்கு வீடளித்த கதை
471 சத்துருக்கனன் கதை
481 சம்பாதி கதை
482 சம்புகன் கதை
487 சரபங்கர் கதை

இராமனும் வருணனும் 204
பெரியோர் வெகுளி 233
கரன் அழிந்தது 242
பொய்ம்மையும் வாய்மை 256
தீவினை செய்தவர்கள் 260
கவந்தன வீடுபேறு 261
புன்செயல் புரிவோர் 280
வாலி வதை 290

மடமையாற் சிக்கியது 300
அளவுகடந்து ஊக்குதல் 301

அன்பு 316
புறங்கூறுமை 334
தவமுந் தவமுடையார்க்காகும் 334
சோம்பேறிகள் இகழ்வுரை கேட்பர் 335
நட்பாடல் தேற்றாதவர் 356
வேண்டாமை 361
பெண்சொற் கேட்போர் 370
முனிவர்கள் ஆற்றல் 381
உடையது விளம்பேல் 398
சடாயு வீடுபேறு 399
பேரின்பம் விரும்புவோர் 411
அளவுகடந் தூக்கல் 421
நெறிமாறி நடத்தல் 421
செருக்கறுத்தவர் 426

தொடர் எண்	கதையின் பெயர்	பொருள்	பக்கம்
492	சவரி கதை	இன்சொல்	430
535	சிறையி நுந்து சீதையின் கதை	தண்ணீர் உணவு	472
539	சீதையின் பழங் கதை	சீதையின் முன் வரலாறு	475
540	சீதையைத் தேடிய கதை	நாடவிட்டது	476
549	சுக்கிரீவன் கதை	அன்பிற்குத் தாழ்	484
550	சுக்கிரீவனும் இராமபிரானும்	குற்றமற்றவர் நட்பு	485
552	சுக்கிரீவன் மறந்த கதை	சுக்கிரீவன்	486
562	சுதிக்கண்ணர் கதை	முக்குற்றங் கெடுத்தல்	494
583	சூர்ப்பநகையின் கதை	சூர்ப்பநகை	516
589	செப்புக்குமரன் கதை	ஊழ்	522
603	தசரதன் கதை (1)	மக்கட்செல்வம்	534
604	தசரத மன்னன் கதை (2)	ஒழுக்கம்	534
605	,, ,, ,, (3)	ஆய்ந்து செயல்புரிதல்	535
661	திரிசடை கதை	இன்சொல்	585
697	துந்துபி கதை	வகையறச் சூழாதெழுதல்	617
698	துமிரன் கதை	ஆற்றலுடையவர்களிடத்தில் தவறு செய்தல்	617
738	நந்திதேவர் சாபமிட்ட கதை	இராவணன் சாபம் பெற்றது	655
780	நாரீவாவென்ற கதை	இராமபிரான் அருள்	690
788	நிகும்பலை வேள்விக் கதை	இந்திரசித்து வஞ்சனை	698
789	நிமி கதை	துன்பம் துன்பமளிக்கும்	700
793	நீல அரக்கியை வென்ற கதை	தாடகை	704
910	புருக்களின் கதை	விருந்தோம்பல்	812
964	மராமரத்தை அழித்தது	ஆற்றலின் அளவறிந்தது	858
990	மாயா சனகன் கதை	சொல்லால் அறிதல்	879

994	மாரீசன் கதை	தீயன செய்தல்	883
998	மாலியவான் கதை	சுற்றத்தார் சுற்ற வாழ்தல்	887
999	மாவலி கதை	விற்றாயினும் கேட்டை யடைதல்	888
1007	பிதிலை வில்லின் கதை	வில் வரலாறு	896
1078	வண்ணன் பழித்த கதை	சீதையை இகழ்ந்தது	964
1105	வாலி கதை	பிறன் மனை வியை விரும்பாமை	990
1144	வீடணன் கதை	அறவழியில் நிற்போர்	1030
1169	வேந்தன் மகனைத் துரத்திய கதை	செங்கோன்மை	1052
1178	வைக்கவேண்டிய இடத்தில் வைத்த கதை	இராமாயணத்தில் சடையப்பர்	1060
1191	எரியைக் குளிர வைத்த கதை	சீதையின் செயல்	1077
1199	கடல் முழக்கம் அடங்கிய கதை	ஏகாந்தராமன்	1082
1250	பெட்டகத்திட் டோட்டிய கதை	ஊழ் வலிது	1139

3. உலகவழக்குக் கதைகள்

6	அங்கப்பன் கதை	தங்கலம் காடுதல்	6
16	அடகுவைத்த கதை	இறைவன் திருவிளையாடல்	14
40	அந்தணன மாண்ட கதை	வீண் அவா	33
44	அம்பலப் புளியின் கதை	கூத்தப்பிரான்	38
45	அரசனுடைய பொருளை அள்ளிக் கொடுத்த கதை	கொடை	39
65	அறிவிலிகளின் கதை	மனநலம்	57
71	ஆட்டுக்கிடை நாய் அழிந்த கதை	ஆராயாது செயல்புரிதல்	62
80	ஆப்பசைத்த குரங்கின் கதை	வீண் தொல்லையிற் சிக்குதல்	70
101	இடை நாய்க்கு எலும்பிட்ட கதை	வஞ்சகர்கள் சூழ்ச்சி	86

தொடர் எண்	கதையின் பெயர்	பொருள்	பக்கம்
132	இருசப்பன் கதை	தியவர்களை யெழுப்பி விடுதல்	112
149	இறைவன் குட்டுப்பட்ட கதை	இறைவன் ஆடல்	128
236	கணக்கன் பழி தீர்த்துக்கொண்ட கதை	கணக்கன் பகைமை	210
238	கணவனைக் கொன்ற காரிகை கதை	(ா)காடிய மனைவி	212
512	சிங்கத்தோல்போர்த்த கழுதையின் கதை	வஞ்சகம்	451
514	சிட்டுக்குருவியின் கதை	பெரியாரைத் துணைகொள்	453
537	சிற்பியோடு முருகன் பறந்த கதை	வழிவழிச் செய்தி	474
609	தடியப்பன் கதை	பெருத்தது பெரிது	538
619	தமிழ்ப் புலவனை உண்ட கதை	அப்பர் வீடு பேறு	546
620	தரிசன செட்டி கதை	பழையனூர் நீலி கதை	547
716	தேரையர் கதை	சிறந்த மருத்துவன்	635
941	மகனைப் பலி கொடுத்த கதை	அணைக்குப் பலி	838
942	மகனைப் பலி கொடுத்த கதை	தேர் ஓடாமல் நின்றது	839
1031	முருகம்மையார் கதை	வெட்டிய கை வளர்ந்தது	917

4. கந்தபுராணக் கதைகள்

68	ஆறுமுகன் ஆட்டிலேறிய கதை	தகரேறியது	60
107	இந்திரனைத் தோள் நெரித்த கதை	இந்திரனுக்குத் தண்டனை	91
109	இந்திரன் மூங்கிலான கதை	கரந்துறைந்தது	92
146	இறைவனுக்குப் பொருள்கூறிய கதை	முருகன் திருவிளையாடல்	126
154	இறைவி தக்கனுக்கு மகளான கதை	தக்கனுக்கு மகளானது	133
169	உமையம்மை கதை	நோக்கக் குழையும் விருந்து	155
231	கடவுளை வணங்காத மூவிவர்கள் கதை	கல்வியின் பயன்	206

260 கதிரவன் பல்லைத் தட்டிய கதை
319 காசிபர் கதை
313 காஞ்சி முருகன் திருத்திய கதை
334 காமன் நீறுகிய கதை
344 காவிரி தோன்றிய கதை
356 கிரவுஞ்சமலைக் கதை
361 குச்சகர் கதை
581 சூரபதுமன் கதை
582 சூரிய சந்திரர் கதை
601 தக்கன் கதை (வேறு)
602 தக்கன் வரம்பெற்ற கதை
720 தேவர்கள் மீன் பிடித்த கதை
784 நான்முகனைச் சிறையிட்டது
938 பொன்னுலகம் பொலிவிழந்த கதை
956 மதன் கதை
1009 மிருகண்டர் கதை
1139 வில்வலன் வாதாபி கதை
1165 வேடர்கள் போரிட்ட கதை
1191 இலக்கணங் காட்டிய கதை
1223 சுரசையின் கதை
1229 சேவலும் மயிலுமான கதை

வேள்வியில் நிகழ்ந்தது 232
மெய்யுணர்வு 282
முருகனுடல் 286
காமன் நீறுனது 294
காவிரி 303
கிரவுஞ்சமலை 314
இல்வாழ்க்கை 318
செல்வம் நிலையாமை 515
புறங்கூறுமை 515
அறம் 532
தவத்தாற் சிறப்பு 533
தீவினைக்குத் தீயார் அஞ்சார் 639
முருகனுடல் 693
சூரபதிமன் தொல்லை 835
பொய்த் துறவிகள் 851
அறிவறிந்த மக்கட்பேறு 897
ஊனுண்பவர்கள் மனம் 1024
முருகவேளோடு நிகழ்ந்தது 1049
நிகட சக்கரச் செம்முகம் 1074
மாதர் மயல் 1109
சேவலும் மயிலும் 1118

5. காப்பியக் கதைகள்

76 ஆதிமந்தியின் கதை
78 ஆபுத்திரன் கதை (1)
79 ,, ,, (2)

கற்புடைமை 67
ஈதலின்பம் 69
மழையின் சிறப்பு 69

தொடர் எண்	கதையின் பெயர்	பொருள்	பக்கம்
97	இடவகன் கதை	சொற்சோர்வு காத்தல்	84
119	இராகுலன் கதை	பழவினை பயனளித்தல்	101
141	இளங்கோவடிகள் கதை	குற்றமற்றவர் கொள்கை	121
172	உருத்திரதத்தன் கதை	உழையிருந்தார் கடன்	157
218	ககந்தன் கதை	செங்கோன்மை	195
233	கட்டியங்காரன் கதை	நடுவின்றிப் பொருள் வெஃகல்	208
245	கண்ணகி கதை	கற்புடைமை	219
290	கல்லுருவம் பெற்ற காரிகையின் கதை	கற்புடைமை	257
309	கனக வல்மன் கதை	புறம்பேசி நகைத்தல்	273
322	காஞ்சனன் கதை	பேதையர் செயல்	285
327	காதன் கதை	கட்குடியர்கள் பண்பு	288
352	காளன் கதை	இன்பமும் துன்பமும்	311
383	குரங்கு முகங்கொண்ட கோதையின் கதை	கற்புடைமை	337
430	கோவலன் கதை	அறத்தால் வருவதே இன்பம்	378
431	கோவிந்தன் கதை	உட்பகை	379
451	சச்சந்தன் கதை	நல்வினை தீவினைகளை ஒப்ப நோக்குதல்	394
503	சாதுவன் கதை (1)	ஊழ்	439
504	,, ,,	சூது	440
543	சீவகன் கதை	ஐம்புலன்களைக் கெடுத்தல்	479
649	தாயுரை காத்த தையலின் கதை	கற்புடைமை	574
747	நரிகளான வராயாடிகள் கதை	நாகாக்க	662
826	பரதன் கதை (1)	வினையின் பகை	734
840	பவணமாதேவன் கதை	பிறர்நோயைத் தன்நோய்போல் எண்ணுதல்	746

950	மணற்பாவையை நம்பிய கதை	கற்புடைமை	846
952	மணிமேகலை கதை	பிறவித்துன்பம் ஒழிதல்	848
955	மதனன் கதை	அருளற்ற கண்கள்	851
967	மருதி கதை	கற்புடைமை	861
979	மாடலன் கதை	திவிஜ உண்டானுல் கல்விஜ கெடும்	871
993	மாரிதத்தன் கதை	பிறவுயிர்கட்குத் துன்புஞ் செய்தல்	882
1063	யூஜி கதை	அறிவுடைய அமைச்சன்	950
1071	வசுவின் கதை	கொடுங்கோல்	956
1117	விசையை கதை	ஈன்றபொழுதிற் பெரிதுவத்தல்	1003
1157	வீரையின் கதை	கள்ளுண்பவர்	1042
1233	தமயந்தி ஊடிய கதை	புலவி நுணுக்கம்	1121

6. திருவிளையாடற் புராணக் கதைகள்

7	அங்கம் வெட்டிய கதை	பழிதீர்த்தல்	7
20	அட்டமாசித்தி அருளிய கதை	அடியவர்க்கருளுதல்	17
83	ஆரன்தாங்கு பாண்டியன் கதை	அரசரிற் சிறந்தவன்	72
95	இசைவாது வென்ற கதை	இறைவன் ஆடல்	82
99	இடைக்காடன் பிணக்குத் தீர்த்த கதை	இறைவனுந் தொண்டரும்	85
108	இந்திரன் பழிதீர்த்த கதை	வஞ்சனையும் பலனும்	92
111	இந்திரன் கதை (2)	பெருமிதமும் பலனும்	94
112	,, ,, (3)	பெரியார் தொடர்பை விடலாகாது	94
155	உக்கிரகுமார பாண்டியன் கதை	தமிழ்ச்சுவை	134
178	உலவாக்கிழி பெற்ற கதை	கடவுளாடல்	163
179	உலவாக்கோட்டை அருளிய கதை	,,	164
193	எல்லாம்வல்ல சித்தர் கதை	இறைவனுடல்	175

தொடர் எண்	கதையின் பெயர்	பொருள்	பக்கம்
194	எழுகடல் அழைத்த கதை	இறைவனுடல்	176
230	கடல்சுவற வேல்விட்ட கதை	கடவுளாடல்	205
275	கரிக்குருவிக்கு அருளிய கதை	அருள்	244
289	கல்லாணை கரும்பு தின்ற கதை	எல்லாம்வல்லச் சித்தர்	257
298	கழுவிலேறிய கதை	சைவசமயச் சிறப்பு	264
340	கார்காத்தார் கதை	மூகில்களை விடச் செய்தது	299
370	குண்டோதரனுக்குச் சோறிட்ட கதை	இறைவன் ஆடல்	327
372	குதிரை வீரரான கதை	நரியைப் பரியாக்கியது	328
390	குலசேகரபாண்டியன் கதை	தன் குற்றத்தை நீக்குதல்	343
393	குலபூடணன் கதை	மூறை மாறினுல் மழை குறையும்	345
396	குலோத்துங்க பாண்டியன் கதை	நீர ஆராய்தல்	349
508	சாரர் கதை	களவினுல் ஆகிய ஆக்கம்	445
517	சித்தன கதை	பிறர்மனையிடங் தீமை யெண்ணுதல்	455
526	சிவகலியின் கதை	நண்பர்கள் தவறு	465
546	சுகலர் கதை	பன்றிக்குட்டிகளானமை	482
561	சுந்தரசாமந்தன் கதை	மெய்க்காட்டிட்டது	496
565	சுந்தரப் பேரம்பு எய்தது	இறைவனருளாடல்	497
599	சோழனை மடுவில் தள்ளிய கதை	,,	531
608	தடாதகைப்பிராட்டியின் கதை	திருமணம்	538
613	தண்ணீர்ப் பந்தல் வைத்த கதை	அருளாடல்	542
632	தருமிக்குப் பொற்கிழி யளித்த கதை	,,	559
632	தனதனை கதை	உலக நிலையாமை	566
640	தனபதி கதை	பிறன்பொருள் வெளவுதல்	566
678	திருமுகங்கொடுத்த கதை	மதிமலிபுரிசை	599

684	திருவாதவூரடிகட் கருளிய கதை	அருள் பெறல்	603
729	நகுடன் கதை	பாம்பானது	646
748	நரிகளைப் பரிகளாக்கிய கதை	வாதவூரர்க்கருளல்	662
751	நல்லான் கதை	திருவிளையாடல்	665
777	நாரைக்கு முத்தி கொடுத்த கதை	திருவிளையாடல்	688
830	பரிகளை நரிகளாக்கிய கதை	அருளாடல்	738
832	பரிமாமிசை வரப்பண்ணிய கதை	இறைவன் குதிரையில் வந்தது	740
845	பழியஞ்சிய கதை	மணமகன் மாண்டது	750
853	பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்த கதை	இறைவன் ஆடல்	758
868	பாம்பு எய்த கதை	,, ,,	771
937	பொன்னனையாள் கதை	விருந்தோம்புதல்	834
953	மண் சுமந்த கதை	இறைவன் ஆடல்	848
976	மனைவியை இழந்த மறையவன் கதை	பழியஞ்சியது	869
986	மாபாதகந் தீர்த்த கதை	தந்தையைக் கொன்றவன்	877
988	மாயப் பசுவை வதைத்த கதை	சமணர்கள் அனுப்பிய மாயப் பசு	878
1001	மாறியாடிய கதை	வெள்ளியம்பலத் திருக்கூத்து	890
1003	மாற்றுளைப் பாராட்டிய மடக்கொடியின் கதை	மாற்றுளின் மாண்பு	891
1024	மூப்பருவங் காட்டிய கதை	விருத்தகுமாரபாலரானது	911
1052	மேருவைச் செண்டாலடித்த கதை	உக்கிரகுமாரபாண்டியர்	941
1059	யாகை யெய்த கதை	விக்கிரமபாண்டியனுக்கருளியது	947
1080	வரகுண னுக்குச் சிவலோகங் காட்டிய கதை	சிவலோகக் காட்சி	966
1088	வலை வீசிய கதை	நந்திதேவர் மீனானது	973
1092	வழக்குரைத்த கதை	மாமனுயிர்த்தது	977

தொடர் எண்	கதையின் பெயர்	பொருள்	பக்கம்
1093	வஸீயல் விற்ற கதை	இறைவன் ஆடல்	978
1098	வன்னியுங் கிணறும் இலிங்கமும் அழைத்த கதை	கற்புடைமை	983
1118	விச்சுவ வருவன் கதை	மனக்கோணல் தீமை பயக்கும்	1003
1119	விடைக் குறியிட்ட கதை	இறைவனுடல்	1004
1142	விறகு விற்ற கதை	,,	1026
1160	வெள்ளை யானையின் சாபந் தீர்ந்த கதை	யானை வழிபட்டது	1044
1179	வையை ஆற்றை அழைத்த கதை	சுந்தரர் ஆடல்	1061
1247	பன்றிக் குட்டிகளைப் பாதுகாத்த கதை	இறைவனுடல்	1135
1249	பாண்டியனுகி அரசாண்ட கதை	இறைவன் அரசாண்டது	1138

7. பலவகைக் கதைகள்

4	அக்கினிலாவின் கதை	உணுக்கொடை	3
5	அங்கதன் கதை	நாகரிகம்	5
6	அங்கப்பன் கதை	தந்நலம் நாடுதல்	6
17	அடக்கம் அமரருள் உய்த்த கதை	அடக்கமுடைமை	15
28	அநதாரியின் கதை	கல்வி	24
29	அருளுயை கதை (1)	கற்பு	25
30	,, ,, (2)	,,	26
46	அரதத்தர் கதை	அருளுடைமை	40
48	அரவிந்தன் கதை	மாறுபாடான செயல்புரிவோர்	41
51	அரிய சுவர் கதை	அவாவற்றல் வீடுபேறு	44
52	அரிவிசயர் கதை	அருள்	45
55	அருந்ததி ஆறுகடந்த கதை	கற்புடைமை	48

56	அருந்ததி கதை	கற்புமாட்சி	50
57	அருவாவசு கதை	தீயவர்கட்கு நன்மை புரிதல்	50
58	அலங்காரி கதை	விருந்தோம்பா மடமை	52
59	அல்லமர் கதை	சினத்தை யடக்குதல்	52
60	அவந்தன் கதை	பிசினன் பொருளிழப்பான்	53
63	அழகிய மணவாளன் கதை	அரங்கர் ஆடல்	56
65	அறிவிலிகளின் கதை	மனநலம் அடையாவாங் கீழ்	57
70	அன்னப் பறவைகள் அழிந்த கதை	தீயவர்கட்கு இடங்கொடுத்தல்	61
72	ஆண்டாள் சூடிக்கொடுத்த கதை	ஆண்டாள் வரலாறு	63
74	ஆதன் கதை	ஊனுண்டல்	65
75	ஆத்திரேயன் கதை	மடி	66
94	இசைக்கு உருகிய கதை	இசைச் சிறப்பு	81
98	இடைக்காடர் கதை	வான் சிறப்பு	84
100	இடைஞானிகள் கதை	இறையருள்	85
103	இடையே புகுந்து நெருக்கிய கதை	மாயன் ஆடல்	88
106	இந்திரனுக்கு வாலி பிறந்த கதை	வகையறிந்து செயல் புரிதல்	91
118	இரண்டு அமைச்சர்களின் கதை	நடுவின்றிப் பொருள் வெஃகல்	99
140	இவறன்மை மிக்கவன் கதை	இவறன்மை	120
148	இறைவன் இறந்த கதை	புலவர் நகைச்சுவை	127
153	இறைவி ஊடல் தீர்ந்த கதை	கைலை யெடுத்தது	133
156	உசனசன்மன் கதை	பயன்படாக் கல்வி	135
157	உடன்பிறந்தார் இருவர் கதை	முயற்சியின்மை	136
165	உபகோசையின் கதை	கற்பு நலம்	147
175	உலக குருவின் கதை	வேண்டின் உண்டாகத் துறக்க	160
181	உலோலுபன் கதை	உலுத்தன் பேரவா	1 5
182	உழுதொழிலாளனும் வணிகர்களும்	பேரவா	166

தொடர் எண்	கதையின் பெயர்	பொருள்	பக்கம்
183	எச்சிலே நுகர்ந்த கதை	இறைபணியில் அன்பு	167
185	எருக்கு முனைத்தில்லை என்ற கதை	திருவாசர் வசை	169
192	எல்லாந் தெய்வச் செயலான கதை	புருக்கள் உயிர் பிழைத்தது	174
199	ஏகன் கதை	உண்மையான பணியாள்	180
200	ஏசுவின் கதை	ஓழுக்கம்	180
201	ஏரண்ட முனிவர் கதை	பிறர்க்குதவி	182
202	ஏலேல சிங்கர் கதை	வாணிகத்திற்கழகு	183
206	ஐயந்தீர்த்த அணங்கின் கதை	நல்லறிவு	185
207	ஐயமேற்கச் சென்று அடிபட்ட கதை	வினைப்பயன்	186
210	ஒன்னன் கதை	பொல்லா மனைவி	188
220	கங்கையில் விழுந்த வேளாளன் கதை	கங்கை மகன்	196
225	கஞ்சனூராழ்வார் கதை	தெய்வத்தன்மை	202
229	கடவுள் நூறுதரந் தலையசைத்த கதை	திருவருள்	204
240	கணிகண்ணர் கதை	திருமால் தமிழன்பு	214
241	கண்டக சேதனன் கதை	வஞ்சகம்	215
251	கண்ணன் கதை	பணிவுடைமை	224
261	கபன் கதை	கள்ளுண்போர்	233
278	கருணகரத் தொண்டன் கதை	சோழமண்டல சதகம்	246
281	கருவூர்ச் சித்தர் கதை	அரங்கன் திருவிளையாடல்	249
286	கலியின் கதை	சனியின் ஆற்றல்	254
296	கழுகுகளான முனிவர்கள் கதை	பொய் புகலல்	262
297	கழுமரம் எரியப் பாடிய கதை	எல்லாம் இறைவன் செயல்	263
300	கழைக்கூத்தியின் கதை	விச்சளிப் பாய்ச்சல்	265
301	கள்ளத் துறவியின் கதை	வஞ்சக நடத்தை	267

302 கள்ளன் கடுந்துறவு பூண்ட கதை
303 கள்ளன் கைக்கட் டவிழ்ப்பித்த கதை
304 கன்ரூப்பூர் நடுதறிக் கதை
308 கற்காலை கடக்கூ தின்ற கதை
310 கனகேசன் கதை
317 காகுத்தன் கதை
318 காக்கை கதியடைந்த கதை
319 காசும் பொன்னும் கலந்து தூவிய கதை
338 காரிகையர் சொல் கேட்போர் கதை
338 காரிகையைக் காத்த கதை
342 கார்த்தவீரியார்ச்சுனன் கதை
359 குசலன் கதை
360 குசேலர் அவாவின்மை
366 குடும்பச் சுமை உண்டான கதை
368 குணநிதி கதை
369 குண்டப்பன் கதை
371 குதிரைக் கழுத்தன் கதை
373 குப்பிச்சி கதை
384 குரங்கு வேந்தனைக் கொன்ற கதை
385 குருகுகிரி எறிந்த கதை I-II
388 குருநமசிவாயர் கதை
391 குலசேகரர் கதை
392 குலத்தை யுணர்ந்த கதை
395 குலிதன் கதை
398 கூகைகள் அழிந்த கதை
402 கூழாண்டார் கதை

கோலத்தால் நலம் விளைதல் 267
இறைவனிடத்தன்பு 269
மெய்யன்பு 269
செயற்கருஞ் செயல் 272
களவு விருப்பம் 274
பிறருக்குக் கேடு சூழ்வோர் 281
அறத்தின் பலன் 282
வரகுணபாண்டியன் 284
பெண்வழிச்சேறல் 297
வேளாளர் பண்பு 298
அளவுகடந்தூக்குதல் 301
உலகப் போக்கிற்கு மாறுபட்டு நடத்தல் 317
அவாவற்றூல் பொருள் சேரும் 318
பற்றற்றிருத்தலே துறவு 324
சூதாடுவோர் 325
தகுதியான உணவு 326
அழிவுக்குக் காரணம் 327
சூழ்ச்சி 328
அறிவிலார் தொடர்பு 337
மலை பிளந்தது 338, 339
தூய நிலை 341
பொறுமையால் நிமை 344
செயலால் உயர்வு தாழ்வறிதல் 345
நியோர்கள் 347
மாற்றூனுக் கிடங்கொடேல் 350
சிவத்தொண்டு 354

தொடர் எண்	கதையின் பெயர்	பொருள்	பக்கம்
408	கேசவன் கதை	தீயோர் பழிநாணார்	359
414	கொங்கணர் கதை	சினத்தினால் தீமை	364
415	கொங்க மருத்துவச்சி கதை	மருத்துவத் திறமை	365
417	கொல்லிப் பாவையின் கதை	பாவையின் செய்தி	367
424	கோதமி கதை	கேள்வி தளர்ச்சியைப் போக்கும்	373
427	கோரக்கர் கதை	நில்லாதவைகளை நிலையென்றெண்ணுதல்	375
428	கோரன் கதை	பொய்யாமை ஒன்றே போதும்	376
437	சகமித்திரர் கதை	புறக்கோலங்கள் பயனற்றவை	383
443	சங்கசூடன் கதை	மறதி உயிரைப் போக்கும்	388
447	சங்கராசாரியர் கதை	சங்கரரை இகழ்ந்தது	391
448	சங்காழி யீந்த கதை	சங்கு சக்கரங் கொடுத்தது	392
450	சசிவர்ணன் கதை	பெரியோர் தொடர்பு	394
455	சடாசுரன் கதை	குற்றமுடையவைகளை விலக்குதல்	397
460	சண்பகம் கதை	கல்வியழகு	401
465	சத்தியகோடன் கதை	தீயவர் தீமை பெறுவர்	405
474	சந்தனையின் கதை	நன்மனம் உடையோர்	414
476	சமணர்கள் கதை	கல்விக்கழகு	416
477	சமிதன் கதை	புன்சொல் உரைப்பவன்	416
484	சயதேவர் கதை	இகழ்ச்சியைப் பொறுத்தல்	423
501	சாணக்கியன் கதை	ஊக்கமே செல்வம்	438
502	சாணூரன் கதை	ஆற்றலுடையார்க் கின்னாசெயல்	439
505	சாந்தி கதை	கல்வி	441
506	சாபாலி கதை	தோல்வி பெறல்	442
509	சாலன் கதை	மனைவிக்கஞ்சுவோர்	446

515 சித்தராமர் கதை
516 சித்தரும் புத்தரும்
520 சித்திரங்கி கதை
523 சிரகாரி கதை
527 சிவகாமி சோறிட்ட கதை
528 சிவஞான தேசிகர் கதை
530 சிவபிராணும் நக்கீரரும் போரிட்ட கதை
533 சிவேதன் கதை
536 சிற்றம்பலநாடிகள் கதை
544 சினக்கர் கதை
553 சுசீலை கதை
554 ,,
556 சுதாஞ்சணன் கதை
561 சுதாசனன் கதை
563 சுநந்தன் கதை
568 சுந்தரன் கதை
572 சுவாகையின் கதை
578 சூடுபோட்ட கதை
580 சூதாடிய கதை
595 சேந்தனார் கதை
597 சோமகாந்தன் கதை
598 சோமசாமி கதை
622 தருமசாமி கதை
625 தருமம் வீண்போகாது
637 தனஞ்சயன் கதை
638 தனதேவன் கதை

சினமே பகை 451
கொலையால் வருஞ்செல்வம் 454
தையல்சொற் கேளேல் 458
ஆராய்ந்து செயல்புரிதல் 462
பெரியோர் பெருமை 466
வெகுளாமை நன்று 467
கல்வியில் தருக்கு 469
சொல்லாற்றலின் பண்பு 471
முற்றத் துறந்தவர் 473
நட்பின் சிறப்பு 480
சிறுகையளாவிய கூழ் 487
நன்மனைவி 488
சிறந்த நண்பன் 490
கடுஞ்சொல்லன் 494
பொதுமகளிர் கூட்டுறவு 495
ஒழுக்கத்தில் தவறினால் பழிப்பு 499
புனிதநீர்ப் பெருமை 506
கொங்கக் குயவன் 513
சூதுக்கு அஞ்சுதல் 514
துறந்தவர்கட்கு உதவுதல் 528
பெரியாரைப் பேணிக்கொள்ளுதல் 580
தீவினை 530
அறிவு திரிதல் 549
அருளுடைமையின் சிறப்பு 552
முயற்சியால் முன்னுக்கு வருதல் 564
நண்பர்கட்குத் தீமை செய்தல் 565

தொடர் எண்	கதையின் பெயர்	பொருள்	பக்கம்
641	தனபாலன் கதை	அளவறிந்து வாழவேண்டும்	567
642	தன்வினை தன்னைச் சுட்ட கதை	ஓட்டப்பம் வீட்டைச் சுட்டது	568
644	தாடி வெண்ணெய்க்காரன் கதை	பேரவா	570
663	திருக்களிற்றுப்படியார் கதை	தெய்வத் திருவருள்	586
665	திருக்கூத்துக்காட்டிய கதை	தொண்டர்க்கருளுதல்	588
669	திருப்பாணும்வார் கதை	தொண்டர் பெருமை	592
671	திருமங்கை மன்னன் கதை	ஊக்கமுடைமை	593
672	திருமழிசையாழ்வார் கதை	அவா இல்லாதவர்கட்குத் துன்பமும் இல்லை	594
673	திருமங்கையாழ்வார் கதை	திருத்தொண்டு	595
680	திருவரங்கத்தின் கதை	திருவரங்கம் உண்டானது	600
692	தீயில் இறங்கிய வேளாளர்கள் கதை	வேளாளர் சிறப்பு	611
696	துச்சோதனன் கதை	அறிவின்மை	616
703	துருவன் கதை	அறிவுடைமையும் இன்மையும்	622
707	துற்சகன் கதை	தீவினை நீங்கியது	626
708	துற்றெரிசனன் கதை	துற்றெரிசனன் நற்கதி	627
709	துன்பந் தொடர்ந்துவந்த கதை	ஆவின மழைபொழிய	627
710	தூக்கணங் குருவியின் கதை (1)	தியோர்கட்கு அறிவுகூறல்	629
711	,, ,, ,, (2)	கைக்கூலி பெறுவோர்	630
712	தெய்வாதீன கதை	காலத்தினாற் செய்த நன்றி	631
714	தென்மலையான் கதை	அறிவற்றவர் செல்வம்	633
718	தேவசன்மா கதை	ஆஷாடபூதி	636
723	தேனுண்டு மகிழ்ந்தவன் கதை	சிற்றின்பத்தில் மகிழ்தல்	641
726	தொண்டைமான் கதை (வேறு)	கடாவைக் காதறுத்தது	644
746	நம்மாழ்வார் கதை	புலனை யடக்குவோர்	657

749	நரியின் கதை	ஆட்டுக்கடாப் போரில் நரி யிறந்தது	663
750	நரியின் கதை	வீணவா	664
753	நல்லொழுக்கத்தை விட்ட கதை	நல்லொழுக்கமே மூலகாரணம்	666
754	நவகேசர் கதை	சூதாடுதல்	667
756	நளன் பெருமை கொண்டாடிய கதை	தன்மானம்	669
759	நளாயனி கதை	கற்புடைமை	673
761	நன்றிகெட்ட வேடன் கதை	தீயோர்க்கு உதவிசெய்தல்	674
762	நன்றி மறவாத கதை	நன்றி மறவாமை	675
764	நாகதந்தன் கதை	தாயை வஞ்சிக்க எண்ணியவன்	677
765	நாகன் கதை	பொருள் சிறப்பினைக் கொடுக்கும்	678
766	,, ,, (வேறு)	தாளாண்மை வேண்டும்	679
767	,, ,, (வேறு)	கொல்லா நோன்பு	679
768	நாடன் கதை	அருளாளர் நிரயமடையார்	680
786	நான்முகன் எழுத்தை அழிக்கமுடியாத கதை	ஊழ்வலிது	697
792	நீரிலே நின்ற நேரிழையின் கதை	பிழையுணரா மாது	702
799	நெம்மேலித் தச்சன் கதை	கம்பருக்கு நெல்லளித்தது	709
801	நெல்லி மரமான கதை	சுவாமிமலைச் செய்தி	711
803	நெற்போர் எரிந்த கதை	வசை பாடியது	712
805	பகவன் கதை	மக்கள றிவுடைமை	714
810	பட்டி கதை	நிறமையுடைவன் சிறந்தவன்	719
811	பட்டி இரட்டையாக்கிய கதை	மந்திரங் கால் மதி மூக்கால்	719
814	பட்டினத்தடிகள் கதை	துறவிகள் பெருமை	723
816	பட்டைக் கிழித்த கதை	தொடையாடை கிழித்தது	725
817	பண்ணன் கதை	நன்னெறியில் தேடிய பொருள்	726
818	பதஞ்சலிக்கருளிய கதை	பதஞ்சலி தில்லையை அடைந்தது	727

தொடர் எண்	கதையின் பெயர்	பொருள்	பக்கம்
819	பதுமயோனி கதை	உலுத்தன் இழிந்த பிறப்படைவான்	727
821	பத்திரகிரியார் கதை	பற்றற்றிருத்தல்	729
834	பர்த்துருகரியார் கதை	மனையாளின் ஒழுக்கம்	741
838	பலி கதை	அளவறிந்து கொடை வழங்கல்	744
839	பலிதன் கதை	அவையஞ்சுவோர் இழிவடைவர்	745
846	பழையது சாப்பிட்ட கதை	போனகமென்பது தானுமுண்டுண்டல்	752
847	பழையனூர் நீலியின் பழங்கதை	முன் செய்தி	753
848	பழையனூர் நீலி கதை (1)	வேளாளர் மாண்டது	754
849	,, ,, (2)	கொழுவினுல் குத்திக்கொண்டிறந்தது	756
850	பறிதலிக் குண்டர் கதை	சமணர்கள் செயல்	756
851	பனந்தன் கதை	ஊக்கமும் ஆக்கமும்	757
854	பாசதரன் கதை	வில்லிமகளிர் இன்சொல்	759
855	பாசமறுத்த கதை	ஆதிமூலேசர்	760
870	பாம்புக் குடம்பெற்ற கதை (1)	போனது போனதுதான்	772
871	,, ,, ,, (2)	கையைவிட்டு நீங்கிய பொருள் பயன்படாது	773
872	பாரி கதை	அருளற்ற கண்கள்	774
878	பிம்பசரன் கதை	புலாலுண்ணுமை	778
884	பிருடி கதை	காலம்வரும்போதுதான் காரியம் கைகூடும்	783
886	பிழைப்பிழந்த கதை	மனநிறைவு வேண்டும்	785
895	புண்டரீகன் கதை	அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்	794
896	புண்டரீகாக்கன் கதை	பெண்வழிச் சேறல்	795
898	புத்தர் கதை	அருளுடைமை	798
899	புத்தர்களே வென்ற கதை	சொல்லாற்றல்	799
900	புத்தன் தலையறுந்த கதை	நிறைமொழி மாந்தர் பெருமை	801

901	புத்திசேனர் கதை	மக்கட் பண்பில்லாதவர்	802
902	புத்திமான் பலவானை கதை	அறிவுள்ளவனே பலவான்	805
909	புலியை மிரட்டிய ஆட்டின் கதை	விவேகம் வேண்டும்	810
924	பெருமங்கலமுடையான் கதை	இறுமாப்படங்கியது	823
925	பெற்றான் சாம்பான் கதை	பெற்றான் சாம்பாலுக்கு வீடுபேறு	824
927	பேசாப் பாவைதனைப் பேசவைத்த கதை	ஊமைப் பெண் பேசியது	826
928	பேய்கள் பிள்ளைகளான கதை	நீலனும் நீலியும்	826
930	பேராவூர்ச் செல்வன் கதை	நீசனெடுண்டது	828
931	பேரையூரான் கதை	வயிற்றுக்கூழைக் காட்டியது	830
933	பொய்த்தலே நீட்டுங் கதை	கள்ளர் செயல்	831
934	பொன் மயிலின் கதை	பேரவா	831
935	பொன் மழை பெய்த கதை	கூத்தப்பிராணுடல்	832
936	பொன்னப்பன் கதை	தீயோர்க்கு உதவி செய்யக்கூடாது	833
949	மணலைக் களவு செய்த மறையவன்	ஊழ்வினையை வெல்லுதல்	846
957	மதியன் கதை	மறையை உணர முயலாமை	853
958	மதிவாணன் கதை	அமைச்சரியல்பு	854
962	மயிலன் கதை	கயவர் இயல்பு	857
966	மருதன் கதை	பொருளவா	860
978	மாகந்தன் கதை	மிடியை மடிதரும்	870
981	மாதங்கன் கதை	பேதையின் செயல்	873
992	மாயை கனவில் அணைந்த கதை	கனவுநிலை	882
995	மாருதி இலக்கணம் படித்த கதை	கல்வி	884
1006	மானமுடையவன் கதை	அறிவு புகட்டியது	893
1010	மிளகு பயறுன கதை	இறைவனுடல்	898
1015	முஞ்சன் கதை	பொறுமை செல்வத்தைக் கெடுக்கும்	902

தொடர் எண்	கதையின் பெயர்	பொருள்	பக்கம்
1019	முதற்கவி பாடிய கதை	திருக்குறள் சிறப்பு	906
1028	முரண் கதை	மனவுறுதியற்றவர்கள்	915
1043	மூடனுன இளவரசன் கதை	ஔவையார் பேயை விரட்டியது	928
1045	மூவர் கதை	பொருள் கருதிப் பொச்சாப்புப் பார்த்தல்	932
1049	மெய்கண்டதேவர் கதை	ஆசிரியரைத் திருத்தியது	935
1051	மெய்ம்மை பேசிய கள்ளன் கதை	கள்ளன் அமைச்சனது	937
1058	யாகசேனை கதை	கீரியைக் கொன்றது	946
1064	வீலாவதி கதை	காளிதாசனைக் கொன்றவள்	950
1065	வசவர் கதை	பிரபுலிங்க லீலை	951
1077	வண்டோதரிக்கு மகவான கதை	வரம் பெற்றது	963
1084	வரிப்புலி நோய் தீர்த்த மந்திரவாதி கதை	தியோர்க்கு உதவிசெய்தல்	969
1085	வருடகாரன் கதை	காரியத்தை நீட்டித்தல் கெடுதி	970
1111	விக்கிரமாதித்தன் கதை	கூடுவிட்டுக் கூடு பாய்தல்	996
1112	விக்கிரமார்க்கன் கதை	செவி கைப்பச் சொற்பொறுத்தல்	998
1132	விருத்தன் கதை	நல்லவர் காட்சி	1018
1135	விரூபாட்சன் கதை	பொருளவா	1020
1140	வில் வேடனை எரித்த கதை	தமயந்தியின் கற்பு	1025
1143	விறல்பெற்ற அலவன் கதை	வஞ்சகர் சூழ்ச்சி	1028
1145	வீடுபேறளித்த கதை	அறத்தால் வீடுபேறு	1031
1149	வீணன் கதை	வீணன் ஆறு	1035
1150	வீணைக மாண்டொழிந்த கரி	நரி மாண்டது	1036
1162	வேங்கடாசலத்தின் கதை	திருப்பதி	1046
1166	வேடன் மறையவனைக் காத்த கதை	அறிவன் பகை நட்பு	1049

1174	வேளாளர்கள் தோன்றிய கதை	வேளாளர்கள்	1057
1175	வேளாளர்கள் வேல மரத்தை வெட்டிய கதை	பழையனூர் நிகழ்ச்சி	1058
1176	வேளூர்க்கிழான் கதை	சோழநாட்டு நிகழ்ச்சி	1058
1183	அப்பைய தீட்சிதர் கதை	பொறுமை	1066
1188	ஆமையழிந்த கதை	கல்லுரையைக் கேளாவிடில் தீமை	1073
1192	இறைவன் கோவில் கட்டிய கதை	மதுரைக் கோயில்	1076
1193	இறைவன் நூலியற்றிய கதை	அகப்பொருள் இலக்கணஞ் செய்தது	1076
1221	சூரியசன்மா கதை	தெரிந்து தெளிதல்	1109
1225	செங்குந்தர் உயிர்பெற்ற கதை	உயிர் பெற்றது	1113
1226	செங்குந்தர் பாவாடையிட்ட கதை	இரத்தப் பாவாடை	1114
1227	செய்யுளியற்றிய கதை	புலவர் திறம்	1114
1213	சகுந்தலையின் கதை	துஷ்யந்தன் மறந்தது	1096
1216	சந்திரசேனன் கதை	இல்லறப் பெருமை	1100
1217	சந்திரமதி கதை	மெய்ம்மை	1102
1221	சிற்றுணவு தின்ற கதை	குசேலர் செய்தி	1106

8. பாகவதக் கதைகள்

27	அத்தினபுரத்தைச் சாய்த்த கதை	ஆண்மை காட்டுதல்	23
43	அம்பரீடன் கதை	தானப் பெருமை	37
81	ஆயர்களுக்குப் பரமபதங் காட்டிய கதை	கண்ணன் பெருமை	71
162	உதத்தியன் கதை	பொய்யாமையின் சிறப்பு	144
164	உதிரன் கதை	ஊனுண்போர் அருளற்றவர்	146
177	உலக்கையின் கதை	ஊழ் வலிது	162

தொடர் எண்	கதையின் பெயர்	பொருள்	பக்கம்
186	எருதாக வந்த அரக்கன் கதை	கண்ணன் ஆடல்	169
204	ஏறு செற்ற கதை	ஏறு தழுவியது	184
212	ஒதுவித்த கூலி கொடுத்த கதை	செயற்கருஞ் செயல்	190
226	கஞ்சன் கதை	பொருமை	202
234	கட்டுவாங்கன் கதை	விரைந்து நல்வினை புரிதல்	209
235	கணக்கற்ற மாதரைச் சேர்ந்த கதை	கண்ணன் ஆடல்	209
248	கண்ணனுங் குசேலரும்	இன்சொலியம்புதல்	221
250	கண்ணன் கட்டுண்ட கதை	கண்ணன் ஆடல்	223
253	கண்ணன் பிரமசாரியான கதை	பற்றின்றிச் செயல்புரிதல்	226
305	கன்முல் விளவெறிந்த கதை	கண்ணன் ஆடல்	271
306	கன்றுகளுஞ் சிறுவர்களுமான கதை	,, ,,	271
325	காட்டுத்தீயை விழுங்கிய கதை	,, ,,	287
389	குருந்திலேறிய கதை	,, ,,	342
404	கூனல் நிமிர்ந்த கதை	,, ,,	356
413	கொக்காக வந்தவன் கதை	,, ,,	368
425	கோபிகைகளின் முன்பிறப்புக் கதை	கோபிகைகள்	374
436	சகடாசுரன் கதை	கஞ்சன் முயற்சி	382
478	சபீகர் கதை	பொறுமை	418
494	சுபாரி கதை	பற்றுந் துன்பமும்	432
560	சுதர்மையின் கதை	தேவ சபை	493
614	திதிபாண்டன் கதை	கண்ணன் ஆடல்	542
717	தேவகி எண்ணத்தை முடித்த கதை	எண்ணத்தைக் கண்ணன் முடித்தது	635
722	தேனுகனைக் கொன்ற கதை	கண்ணன் ஆடல்	640
739	நப்பின்னை கதை	நப்பின்னை திருமணம்	656

807	பரீதன் கதை	நன்மக்கட்பேறு	716
833	பரிவாய் பிளந்த கதை	கேசி என்னும் அசுரன்	740
836	பலராமன் யமுனை யாற்றை அடக்கிய கதை	ஆற்றை யழைத்தது	743
841	பவுண்டரகன் கதை	புறங்கூறலில் இறத்தல் இனிது	747
867	பாம்பின் தலையிற் கூத்தாடிய கதை	கண்ணன் ஆடல்	770
873	பாரிசாதங் கொண்டுவந்த கதை	தேவலோக மரம் கொண்டுவந்தது	775
887	பிள்ளைகளை மீட்டுக்கொடுத்த கதை	பிள்ளைகளை மீட்டது	786
929	பேய் முலையுண்ட கதை	கண்ணன் ஆடல்	827
968	மருதிடையே தவழ்ந்த கதை	" "	862
972	மலையைக் குடையாகப் பிடித்த கதை	கன்மழை தடுத்தது	865
987	மாமனைக் கொன்ற கதை	கஞ்சன் அழிந்தது	877
1014	மூகங்களை எச்சிலாக்கிய கதை	கண்ணன் ஆடல்	902
1062	யானையின் மருப்பொடித்த கதை	குவலயா பீடம்	949
1102	வாணனை யழித்த கதை	கண்ணன் ஆடல்	988
1177	வேனன் கதை	கீழ்மை யகற்று	1060
1176	ஐயமிட்டுண்ட அரசன் கதை	ஐயமிட்டுண்	1078
1203	கழுதையாய்க் கத்திய சிசுபாலன் கதை	சிசுபாலன் பிறப்பு	1087
1207	காம்பிளுல் நிரைகுவித்த கதை	வேய்ங்குழல் ஊதியது	1091
1252	மதலையை அழைத்த கதை	அண்ணன் செயல்	1142

9. பாரதக் கதைகள்

14	அசுவத்தாமா கதை	அசுவத்தாமா பிறப்பு	12
19	அட்சய பாத்திரக் கதை	அறவினையாளன்	17
25	அத்திபதி கதை	பெரியோர் நட்பு	22

தொடர் எண்	கதையின் பெயர்	பொருள்	பக்கம்
26	அத்திமன்னன் கதை	சிறந்த அரசன்	25
47	அரவான் கதை	புகழ்நிலை நிறுத்தல்	40
53	அருச்சுன சங்கியாசி கதை	தவம் மறைந்து அல்லவை செய்தல்	46
54	அருச்சுனன் வில்லால் அடிபட்ட கதை	இறைவன் முழுமுதல் தன்மை	47
64	அளவற்ற வடிவுற்ற கதை	கண்ணன் ஆடல்	56
135	இருவருக்கும் அகப்படாத கதை	மனம்போல வாழ்வு	114
145	இறந்தவர்களை அழைத்துக் காட்டிய கதை	வியாசர் அருளாற்றல்	125
190	எல்லா உயிர்களும் அடிபட்ட கதை	இறைவன் முழுமுதல் தன்மை	172
198	ஏகலைவன் கதை	ஆசிரியரிடத்தன்பு	179
221	கசன் கதை	ஒழுக்கம்	196
227	கஞ்சன் முதலியோர் கதை	நுணங்கிய கேள்வி	203
232	கடோற்கசன் கதை	பிறன்பழி கூறுதல்	206
249	கண்ணன் அண்ணனை விரட்டிய கதை	கண்ணன் சூழ்ச்சி	222
252	கண்ணன் சூழ்ச்சி செய்த கதை	நட்புப் பிரித்தல்	225
254	கண்ணன் பிழை பொறுத்த கதை	பிழை பொறுத்தல்	226
255	கண்ணன் முனைநேற்பாடு செய்த கதை	கண்ணன் ஆடல்	227
259	கதிரவனை மறைத்த கதை	,, ,,	231
282	கர்ணனுக்குக் காட்சி தந்த கதை	கர்ணன் கொடை	251
299	கழுவில் தங்கிய கதை	கண்ணன் வீமனைக் காத்தல்	265
311	கன்னன் இடது கையால் அளித்த கதை	நல்லதை உடனே செய்தல்	276
312	கன்னன் கதை	சோற்றுக் கடன் கழித்தல்	277
313	,, ,,	கொடுத்தலே சிறந்தது	278
314	கன்னன் களவுக் கதை	வஞ்சனையைத் தவிர்த்தல்	278

315	கன்னன் விறகளித்த கதை	அறிவு நலம்	279
330	காந்தாரி கதை (1)	எச்சத்தால் உணர்தல்	291
331	,, ,, (2)	பொறுமை	292
357	கோசகன் கதை	பிறர்மனை நயத்தல்	315
386	குருகுல மன்னர்கள் கதை	கற்றவரும் கல்லாதவரும்	339
435	கௌரவர்கள் கதை	பொறுமை அழிவைக் கொடுக்கும்	382
440	சகாதேவன் கதை	உள்ளந் தூயராக இருத்தல்	385
442	சகுனியின் கதை	தீயொழுக்கம் துன்பம் தரும்	387
452	சஞ்சயன் கதை	சஞ்சயன் செய்தி	395
470	சத்துப்பிரத்தன் கதை	தலைமையாய அறம்	410
473	சந்தனுவும் வீடுமனும்	செயற்கருஞ் செயல்	413
483	சம்வர்ணன் கதை	கேளுங் கிளையுங் கெட்டோர்க்கில்லை	422
485	சயத்ரதன் கதை	கருதுப கோடியும் அல்ல பல	424
486	சயிந்தவன் கதை	வஞ்ச நெஞ்சினர்	426
491	சல்லியன் கதை	செய்ந்நன்றி மறவாமை	430
499	சனமேசயன் கதை	செவியுணவுடையார்	436
513	சிசுபாலன் கதை	கொடுப்பதழுக்கறுப்பான்	452
519	சித்திராங்கதன் கதை	வினைப்பயன்	457
591	சௌனமேசயன் கதை	பாரதங் கேட்டது	524
626	தருமர் கதை	காலம் பார்த்து அடங்குதல்	553
627	தருமனும் துரியோதனனும்	அறிவுடைமையும் இன்மையும்	554
628	தருமர் தாக்குண்ட கதை	ஒன்று நன்றுள்ளக் கெடும்	554
629	தருமர் தீர்ப்புக் கூறிய கதை	நடுவுநிலைமை	555
630	தருமர் பொய் சொன்ன கதை	தீமையற்றவைகளே உரைத்தல்	558
631	தருமர் பொறுமைக் கதை	பொறுமை	559
634	தவத்தை மறந்த அந்தணன் கதை	செய்தவம் மறந்தால் கைதவம் மாளும்	561

தொடர் எண்	கதையின் பெயர்	பொருள்	பக்கம்
651	தாரையின் கதை	புகழில்லாத மனைவி	576
686	திருதராட்டிரன் கதை	தியவன் என்பதை அறிந்துகொள்ளுதல்	588
690	தீக்கடவுள் கதை	காண்டவதகனம்	609
691	தீக்கடவுள் நோயடைந்த கதை	பாலோடாயினுங் காலமறிந்துண்	610
695	துகில் வளர்ந்த கதை	கண்ணன் அருள்	615
699	துரியோதனன் கதை (1)	அழுக்காறு	618
700	,, ,, (2)	உறவினரைப் பகைத்தல்	619
701	,, ,, (3)	இன்னு செய்தாரை யொறுத்தல்	620
702	,, ,, (4)	உறவினரை இகழ்வோர்	621
705	துரோணர் கதை	அறிவுடைமையுஞ் செல்வமும்	624
706	துரோணரை ஓணன் கொண்டுபோன கதை	துரியோதனனுதியர் மடமை	626
769	நாடோட நடுவோடிய கதை	நாடொப்பன செய்தல்	681
803	பகாசுரன் கதை	ஊன் உண்பவன்	715
831	பரிச்சித்து கதை	ஊழ் வலிது	739
835	பலராமன் கதை	சமயத்திற்கு உதவாதவர்	742
844	பழிக்குப்பழி தீர்த்த கதை	மறைந்து நின்று வாலியைக் கொன்ற பலன்	750
856	பாஞ்சாலன் கதை	அன்பின்மை	761
857	பாஞ்சாலி கதை (1)	விருந்தினர் பெருமை	761
858	,, ,, (2)	உண்மை பேசுதல்	762
861	பாண்டவர்கள் கதை (1)	அறம் எல்லாவற்றையுங் கொடுக்கும்	764
865	பாண்டு மன்னன் கதை	இன்பம் விரும்புவோன்	768
907	புரோசனன் கதை	வஞ்சக அமைச்சர்கள்	808
908	புரோசனன் முதலியோர் கதை	நல்வினை தீவினைகளால் விளைவன	809

920 பூருவின் கதை
973 மல்லர் களை வென்ற கதை
1002 மாறுகோலங் கொண்டிருந்த கதை
1041 மூகன் கதை
1069 வசுக்கள் கதை
1070 வசுக்கள் வசவுரை பெற்ற கதை
1110 விகருணன் கதை
1122 விதுரனைப் பகைக்கச் செய்த கதை
1123 விதுரன் கதை
1125 விநாயகர் பாரதம் எழுதிய கதை
1129 விராடன் கதை
1130 விராடன் தருமரைத் தாக்கிய கதை
1131 விருத்தச் சந்திரன் கதை
1142 வீடுமர் கதை
1148 வீட்டில் அடைத்து எரியிட்ட கதை
1151 வீமன் கதை
1152 வீமன் பூசை செய்த கதை
1167 வேதவியாசர் கதை
1168 வேதேசரர் கதை
1184 அரவின் மூதுகைச் சாடிய கதை
1185 அருச்சுனன் பேடியான கதை
1200 கண்டதைக் கற்ற கதை
1201 கண்ணன் பிறந்த கதை
1206 கண்ணன் கலக்கத்தைத் தீர்த்த கதை
1212 கோவணங்கட்டிச் சென்ற கதை
1218 சராசந்தன் கதை

புகழொடு தோன்ற வேண்டும் 820
கண்ணன் தூது நிகழ்ச்சி 866
கரந்துறைறந்தது 891
அருச்சுனனுக்கு இறைவன் அருள் 926
களவு செய்தல் 954
" 955
மனங்கோணுமை 996
கண்ணன் சூழ்ச்சி 1007
அறிவற்றவர் நட்பை விடல் 1008
பாரதம் எழுதியது 1011
இல்வாழ்வான் துணை 1015
சொற்சோர்வு 1016
ஊழே முற்பட்டு நிற்கும் 1017
பெரியோர்கள் ஒழுக்கந் தவறார் 1031
துரியோதனன் வஞ்சம் 1033
அழுக்காறற்றதே ஒழுக்கநெறி 1037
வெளிப்பகட்டு 1038
கல்வியறிவு 1050
அவாவறலே செல்வம் 1051
கண்ணுடல் 1067
வரைவின் மகளிர் 1068
அருச்சுனன் 1082
கண்ணன் பிறப்பு 1083
மணிமாலை யறுந்தது 1090
துரியோதனன் 1095
குழந்தை ஒன்றுபட்டது 1103

தொடர் எண்	கதையின் பெயர்	பொருள்	பக்கம்
1220	சிந்துநாட்டரசன் மாண்ட கதை	தல்விதி தன்னைச் சுடும்	1105
1239	துருபதன் கதை	பொய்யுரைத்தது	1126
1245	படைத்துணை கொண்டுபோன கதை	கண்ணன் வஞ்சம்	1133
1246	பரிமளகந்தி கதை	சந்தனு கதை	1134
1248	பாண்டவர்கள் பழங்கதை	பழைய நிகழ்ச்சி	1136

10. புராணக் கதைகள்

13	அசுரர்கள் கதை	நல்விதி வேண்டும்	11
38	அந்தகாசுரன் கதை	ஆணவம் அடங்கல்	32
39	அந்தணர்களில் ஒருவரான கதை	இறைவன் ஆடல்	32
49	அரிச்சந்திரன் கதை (1)	அறநெறியில் தாழ்வு	43
50	அரிச்சந்திரன் கதை (2)	அளவறிந் தீதல்	44
61	அவனன்றி ஓரணுவும் அசையாது	இறைவன் முழுமுதல் தன்மை	54
67	அறுபுரத்தை யழித்த கதை	அறுபுரம் அழிந்தது	59
85	ஆலங்காட்டில் ஆடிய கதை	இறைவன் ஆடல்	74
88	ஆல்இலையில் அமருங் கதை	ஆலிலையிற் பள்ளி	76
89	ஆழிப்படை தோற்ற கதை	முனிவரும் தேவரும்	76
92	ஆனைமுக அவுணன் கதை	பெருச்சாளி யேறியது	79
93	ஆனைமுகன் ஆறுமுகன் கதை	தக்கன் வேள்வி	80
96	இடப்பாகம் பெற்ற கதை	சத்தியும் சிவமும் ஒன்று	85
124	இராமர் பரசுராமரான கதை	பரசுராமர் வரலாறு	105
133	இருபதங் காட்டியருளிந்த கதை	கதிரவனுக் கருளியது	112
136	இரேணுகாதேவியின் கதை	இரேணுகை	115

இலக்கறி யளித்த கதை 117
இல்வாழ்க்கையை இனிது நடத்திய கதை 119
இளமை பெற்ற கதை 122
இறைவன் நஞ்சுண்ட கதை 132
உணவிடும் பலனே உணர்ந்த கதை 136
உமாபதி சிவாசாரியர் கதை 153
உமை குற்றம் நீங்கிய கதை 154
எலும்பணிந்த கதை 170
ஐயாறதனிற் சைவனான கதை 187
கங்கையணிந்த கதை 195
கசேந்திரன் கதை 199
கச்சபேசர் கதை 200
கண்டங் கறுத்த கதை 216
கண்டகர்ணன் கதை 218
கண்ணப்ப நாயனாரின் பழங்கதை 220
கம்பள அசுவதரர் கதை 239
கயன் கதை 240
கயாசுரன் கதை 240
கயா தீர்த்தக் கதை 241
கருடன் கதை 245
கருடன் வருந்திய கதை 245
கலுவன் முதலிய கள்ளர் கதை 255
கல்வி கரை கண்ட புலவன் கதை 259
காசிபன் கதை 283
காமதேனுவின் கதை 292
உண்வளித்தலின் பயன் 117
இல்வாழ்க்கைச் சிறப்பு 119
இறைவனுடல் 122
நஞ்சுண்டது 132
உணவிடும் பலன் 136
இன்ன செய்யாமை 153
உமை தவம் 154
என்பு அணிதல் 170
இறைவனருள் 187
கங்கையைத் தாங்கியது 195
கசேந்திரன் வரலாறு 199
ஆமையோடணிந்தது 200
அருளாடல் 216
பகைவெறி 218
காளத்திப் புராணம் 220
கம்பள அசுவதரர் 239
எண்ணுது வாக்குறுதி யளித்தல் 240
கயாசுரன் 240
செய்ந்நன்றி மறத்தல் 241
தாயவலந் தீர்த்தது 245
கருடன் ஆணவங் கழன்றது 245
கள்ள வேடம் 255
முருகனே புலவன் 259
உள்ளன்பிலாத நண்பர்கள் 283
காமதேனு 292

தொடர் எண்	கதையின் பெயர்	பொருள்	பக்கம்
333	காமந்தன் கதை	பொருளும் அருளும்	293
343	கார்த்திகை விளக்கின் கதை	கார்த்திகை விளக்கு	302
348	காளத்திக்குச் சென்ற காரிகையார் கதை	இறைவனருள்	306
349	காளத்திச் சிலந்தியின் பழங்கதை	சிலந்தி வரலாறு	308
350	காளத்திப் பாம்பின் பழங்கதை	பாம்பின் வரலாறு	309
351	காளத்தி யானையின் பழங்கதை	யானையின் வரலாறு	310
354	காவேயேறு கர்த்தன் கதை	ஆனேறிவர்ந்தது	313
387	குருத்துருகன் கதை	சிவபூசைப் பலன்	341
399	கூந்தல் வளர்ந்த கதை	இறைவனுடல்	351
400	கூலன் கதை	வறுமையால் தீயன செய்யற்க	354
409	கேமசருமன் கதை (1)	கள்ளுண்டல்	359
410	,, ,, (2)	கற்றுங்கொழுகாதவர்	360
412	கைதையும் நான்முகனும் பொய் யுரைத்த கதை	பொய்ம்மையின் புன்மை	362
418	கோகருணர் கதை	நமனுலகு சென்று மீண்டது	367
446	சங்கமுனிவன் கதை	கைவளரப் பெற்றது	390
449	சங்கீத்துவசன் கதை	பலபிறவி யெடுத்தல்	393
480	சம்பரன் கதை	அரசன் குடிகளிடம் பொருள் கேட்டல்	420
488	சரபத்தின் கதை	சிவபிரான் சரபமானது	427
489	சலந்தரன் கதை	ஆற்றலறியாது வீணபுரிதல்	428
490	சலன் கதை	அறிவற்றவர் உலகநிலை யறியார்	429
498	சனமித்திரன் கதை	துணைநலமும் வினைநலமும்	436
524	சிலாதர் கதை	நந்திதேவர் வரலாறு	463
531	சிவமுனிவர் கதை	வள்ளி	469

542	சிலம்பூத்த மாலைச் சேர்ந்த கதை	திருமாலை இறைவன் தழுவியது	478
548	சுகுமாரன் கதை	ஒழுக்கத்தைப் பாதுகாத்தல்	484
551	சுக்கிரீவன் பிறந்த கதை	சுக்கிரீவன் பிறப்பு	486
569	சுரைக்குடையான் கதை	பாதிச் சுரைக்காய் அரிந்தது	502
570	சுலபன் கதை	மயக்கவுணர்வால் பிறப்பு	503
571	சுவாகாதேவியின் கதை	கற்பு நலம்	505
573	சுவாயம்புமனு கதை	அரசாட்சி நலம்	508
575	சுவேதர் கதை	தவஞ் செய்வோர்	508
576	சுவேதன் கதை (வேறு)	சிவ வழிபாடு	510
594	சேடன் மலையை மூடிக்கொண்டு கிடந்த கதை	சேடனுக்கும் வாயுவுக்கும் பகை	527
606	தசரதன் கதை (வேறு)	ஆரூர்ச் சிறப்பு	536
611	தண்டகன் கதை	வசவுரை	540
615	தத்தி முனிவர் கதை (1)	அன்புடையவர்கள்	543
623	தருமஞ்ஞன் கதை	புனித நீர்ப் பெருமை	550
636	தழுவிக்கொண்ட கதை	தழும்பு கொண்டது	564
643	தாடகை கதை	மெய்யன்பு	569
648	தாயுமானவர் கதை	*இறைவன் தாயாகியது	574
653	திங்களணிந்த கதை	சாபத்தால் தேய்ந்தது	579
654	திங்களின் கதை	மனந்திரிதல்	580
655	,, ,,	நல்லொழுக்கமும் தீயொழுக்கமும்	580
656	திங்களைத் தேய்த்த கதை	தொல்லோக்குள்ளானது	581
657	திதியின் கதை	மாற்றானுக்கிடங் கொடேல்	581
658	திரணுசனன் கதை	அருள்பெற்றது	582
659	திரிசங்கு கதை	சினம்	583
660	திரிசங்கு சுவர்க்கக் கதை	தவத்தின் சிறப்பு	584

தொடர் எண்	கதையின் பெயர்	பொருள்	பக்கம்
662	திருக்கண் புதைத்த கதை	உலகம் கடகரீ முதலாக உடையது	585
670	திருமகள் வழிபட்ட கதை	திருமகள் தவறு செய்தது	592
674	திருமாலைச் சிவனுக்கிய கதை	குற்றலம்	595
675	திருமால் எலும்பிற் புரண்ட கதை	பிருங்கையைச் சேர்ந்தது	597
676	திருமால் மீன் வடிவெடுத்த கதை	பத்தவதாரத்தில் ஒன்று	597
677	திருமால் வஞ்சனை செய்த கதை	வஞ்சனை	598
685	திருவாலீக்காக் கதை	ஆனை பூசித்தது	604
689	தில்லை புலியூரான கதை	வியாக்கிர பாதர்	608
693	தீவினையாளர்கள் சிவலோகம் அடைந்த கதை (1)	அருள்	612
694	,, ,, ,, (2)	,,	614
728	நகிலன் கதை	கொடாதவன் செல்வம்	645
733	நச்சரவாட்டிய நம்பன் கதை	இறைவன் பாம்பாட்டியது	649
743	நரகாசுரன் கதை	கொடுங்கோல் மன்னன்	658
744	நரசிங்கத்தின் கதை	நரசிங்கமானது	660
755	நளனுடைய கலியை நீக்கிய கதை	திருப்பூவண நிகழ்ச்சி	668
757	நளன் கதை (1)	நன்மை செய்தார் நலம் பெறுவர்	670
758	,, ,, (2)	இரக்கப்படுதலும் இன்பம்	671
782	நான்முகம் பெற்ற கதை	நான்முகனனது	692
783	நான்முகனுடைய தலையை அறுத்த கதை	ஆணவத்தால் அல்லல்	692
785	நான்முகன் அருள்பெற்ற கதை	செருக்கழிதல	694
787	நான்முகன் தில்லைக்கு வந்த கதை	தில்லை	698
795	நீறிட்டாள் மதிலில் கதை	திருவாலீக்கா மதில்	705

812 பட்டிப்பெருமான் பள்ளனை கதை
813 பட்டினசாமி கதை
820 பதுமாசூரன் கதை
822 பத்துப் பிறவி யெடுக்க நேர்ந்த கதை
824 பரசுராமர் கதை
842 பழனியாண்டவர் கதை (1)
843 ,, ,, (2)
859 பாணன் கதை
866 பாதிமாதுடனை பரமன் கதை
869 பாம்புகள் வழிபட்ட கதை
874 பார்வதி கூற்றை யுதைத்த கதை
875 பால் அருந்திய அறுவர் கதை
879 பிரகலாதன் கதை
903 புயபலன் கதை
912 புலி மூலை புல்வாய்க்கருளிய கதை
913 புனுகு பூனையின் கதை
914 புன்னைவனநாதர் கதை
918 பூதத்தை அடக்கிய கதை
921 பெண்ணைப் பிறந்த அந்தணன்
943 மகிடன் கதை
944 மகுடேசுரர் கதை
959 மது எனனும் அசுரன் கதை
960 மது கைடவர் கதை
961 மத்தியந்தின முனிவர் கதை
963 மரக்காற் கூத்தாடிய கதை
966 மருகாந்தாரர் கதை

கடவுள் பள்ளனைது 721
ஆரூர்ப் புராணம் 722
இறைவன் அஞ்சியோடியது 728
திருமால் சாபம் பெற்றது 730
இராமனும் பரசுராமனும் 732
பழனி வரலாறு 748
,, ,, 749
தவத்தினால் செல்வம் 763
அர்த்தநாரீசுவரர் 769
திருத்தணிகை நிகழ்ச்சி 771
திருக்கடவூர்ச் சிவபிரான் செயல் 775
பராசரரின் மக்கள் 776
அறிஞர் பொருளற்ற மொழி கூறார் 780
அறிவற்றவர் கூட்டுறவு 805
இறைவன் ஆடல் 814
நல்வினையின் பயன் 815
அரசனை ஆட்கொள்ளல் 815
அறத்துக்குத் திமை செய்த பூதம் 819
அந்தணன் தீவினை நீங்கியது 821
அல்லவை செய்தொழுகும் அரசன் 840
காவிரியைக் கவிழ்த்தது 840
அரண்வலி 855
சூழ்ச்சியால் அழிதல் 855
புலிக்கால் முனிவர் தந்தை 856
இறைவியின் கூத்து 858
அறிவில்லா மக்கள் 859

தொடர் எண்	கதையின் பெயர்	பொருள்	பக்கம்
970	மருளசங்கர தேவர் கதை	கொல்லாமை	864
971	மகிளகளின் சிறகரிந்த கதை	இந்திரன் செயல்	865
980	மாணிக்கவாசகர் கதை	நன்றி மறப்பது நன்றன்று	872
982	மாதலவூறன் கதை	சிலந்தியாகியது	873
989	மாயவன் ஆழிபெற்ற கதை	கண்ணீடந்து சாத்தியது	878
991	மாயிகன் கதை	பன்றியாகச் சாபம் பெற்றது	880
993	மார்க்கண்டர் கதை	கடவுளைப் போற்றினோர் நெடிது வாழ்வர்	885
997	மாலவன் மிகுதியை மாற்றிய கதை	திருமாலின் ஆணவம் அழிந்தது	886
1011	முகிலன் கதை	யாகை திறை கொண்டது	899
1025	முப்புரம் எரித்த கதை	நகைத் தெரித்தது	912
1026	முப்புர அரக்கர் கதை	,, ,,	913
1027	முயலகன் கதை	முயலகனைத் தள்ளி மிதித்தது	914
1030	முருகன் பன்றியை அடக்கிய கதை	வராகாவதாரம்	910
1036	மூற்றத்திற் சென்று காட்சி கொடுத்த கதை	திருக்கழுக்குன்ற நிகழ்ச்சி	921
1042	மூங்கை கவிகொண்ட கதை	மூங்கை பாடியது	927
1048	மூன்று மகிள முடிகளை ஒடித்த கதை	வாயுவுக்கும் ஆதிசேடனுக்கும் பகை	935
1053	மேகலையுருச் சிவந்த கதை	மால் செந்நிறம் பெற்றது	942
1055	மொக்கணீசுவரன் கதை	மொக்கணி லிங்கமானது	943
1060	யாகைத்தோல் போர்த்த கதை	கயாசுரன்	948
1061	யாகையாகத் தாங்கிய கதை	திருமாலும் முருகனும்	949
1066	வசவுரைபெற்ற இராவணன் கதை	நந்திதேவர் சாபமிட்டது	952
1073	வஞ்சநெஞ்சன் மாண்ட கதை	தம்பியை ஏய்த்தவன்	958
1074	வடுகக் கடவுள் கதை	வடுகக் கடவுள் வரலாறு	960

1086	வலம்புரிந்த கதை	வல்லம்புரிந்து நன்மை பெற்றது	972
1089	வல்லதரர் கதை	தியோர் நட்பு	975
1090	வல்லாளமன்னன் கதை	இல்லறத்தான் கடன்	976
1095	வள்ளி பிறந்த கதை	வள்ளி வரலாறு	981
1096	வள்ளி தெய்வானையர் கதை	சரவணத்தில் தவம் புரிந்தது	981
1097	வள்ளியை மணம் புரிந்த கதை	வள்ளி திருமணம்	982
1104	வாமனர் கதை	உருவுகண் டெள்ளாமை	989
1108	வான் வழியை அடைத்த கதை	போரில் வழியடைத்தது	994
1109	விகடசக்கர விநாயகர் கதை	விகடக் கூத்து	995
1114	விசுவகன்மன் கதை	ஆணவத்தாற் கேடு	1000
1124	வித்தியாதரர் கதை	புனித நீர்ப் பெருமை	1008
1127	விபுலன் கதை	கொல்லாமையே அறச் செயல்	1013
1133	வீருந்தாவனத்தின் கதை	பிருந்தை தீப்பாய்ந்தது	1018
1136	விரோசனன் கதை	மறஞ் நன்மையை ஒழிக்கும்	1021
1137	விலங்கு முறியப் பாடிய கதை	சேந்தனார், பட்டினத்தார்	1021
1141	விழிமலர்ப் பூசனை செய்த கதை	திருமால் ஆழிபெற்றது	1026
1155	வீரசேனன் நோய் தீர்ந்த கதை	தீவினை	1040
1158	வெண்ணுவல் மரக்கதை	சம்புகேசுவரம்	1042
1161	வேகவதியைத் தடுத்தது	காஞ்சியில் நிகழ்ந்தது	1045
1163	வேங்கை மரமான கதை	முருகன் ஆடல்	1046
1171	வேலவன் மேய்ப்போனை கதை	பயங்கரப் புலவன்	1054
1172	வேல்லக் கமலியின் கதை	திருமகள் வழிபட்டது	1056
1173	வேல் கொடுத்த கதை	முருகன் வேல் பெற்றது	1056
1180	அடிமுடி தேடிய கதை	அண்ணுமலை	1062
1186	அறம் வளர்த்த கதை	அறம் வளர்த்தல்	1069
1189	ஆனைமுகக் கடவுள் தோன்றிய கதை	விநாயகர் பிறப்பு	1067

தொடர் எண்	கதையின் பெயர்	பொருள்	பக்கம்
1191	இந்திரன் தீவினையைப் போக்கிய கதை	சிவபெருமானைத் தாக்கச் சென்றது	1041
1198	கங்கையை அணிந்த கதை	இறைவனுடல்	1080
1204	கருப்பைக்கருளிய கதை	எலி விளக்கைத் தூண்டியது	1089
1205	கன்மாடன் கதை	ஆளைக் கொன்ற கதை	1090
1209	கானவனே ஆண்ட கதை	புனிதநீர்ப் பெருமை	1093
1211	கொக்கிறகு சூடிய கதை	கொக்கைக் கொன்றது	1094
1214	சங்கரநாராயணனான கதை	அரியும் அரனும் ஒன்று	1098
1219	சலந்தரன் தோன்றிய கதை	சலந்தரன் பிறப்பு	1105
1222	சீமந்தினி கதை	திங்கட்கிழமை நோன்பு	1107
1230	சேவுயர்த்த கதை	ஏற்றுக்கொடி	1119
1234	தருவதாகக் கூறி ஏமாற்றிய கதை	பொய் கூறியது	1122
1237	திலோத்தமையை விரட்டிய கதை	நான்முகன் செயல்	1124
1240	நால்வர்க்கருளிய கதை	சனகாதி நால்வர்	1128
1251	மணிகன்னிகையின் கதை	புனிதநீர்	1140

11. புலவர் கதைகள்

37	அந்தகக்கவி வீரராகவர் கதை	கல்வி	31
87	ஆலத்தூர் கிழார் கதை	நட்புக் கொள்ளுதல்	75
115	இரட்டையர்கள் கதை	வரலாறு	97
143	இளவெளிமான் கதை	அரசனுக்குக் குற்றங்கள்	123
176	உலக்ன் கதை	இரட்டையர்கள்	161
196	ஏகம்பவாணன் கதை	புலவர்களாற்றல்	177
197	ஏகம்பவாணன் மனைவி கதை	நாவடக்கம்	178

209 ஓட்டக்கூத்தர் கதை
214 ஔவையார் ஏமாந்த கதை
215 ஔவையார் கயிலாயஞ் சென்ற கதை
216 ஔவையார் கதை (1)
217 ,, ,, (2)
243 கண்டசுத்தி பாடிய கதை
256 கண்ணுக்கினியான் கதை
263 கம்பரிடம் பாடல்பெற்ற கதை (1)
264 ,, ,, ,, (2)
265 கம்பர் வீட்டு வேலைக்காரி கதை
266 கம்பர் கதை
267 கம்பர் கரையடைத்த கதை
279 கருந்தேனுக் கண்ணுந்த கதை
295 கவி வீரராகவர் கதை
326 காதறுத்த கதை
347 காளமேகப் புலவர் கதை
353 காளிதாசன் கதை
363 குடியானவன் கதை (1)
364 ,, ,, (2)
365 ,, ,, (3)
375 குமரகுருபரர் கதை
376 குமரனார் கதை
377 குமார தேவர் கதை
382 குயவன் முதலியோர் கதை
429 கோரைக்காலாழ்வான் கதை
432 கோலூர்கிழார் கதை

தலை வெட்டியது 188
உருவு கண்டெள்ளாமை 191
கைலை சென்றது 192
சுருங்கச் சொல்லுதல் 193
உதவிவரைத்தன்றுதவி 194
கண்ட சுத்தி 217
மக்கட் பண்பின்மை 228
வேளாளர் பெருமை 234
விறகு வெட்டி பாடல் பெற்றது 235
விடுகதை 237
விழுமந் துடைத்தவர் நட்பு 238
கரையைக் காத்தது 238
கண்ட சுத்தி 248
கல்வியறிவு 262
வில்லிபுத்தூரார் 288
புலவர் சைவராகியது 306
வரலாறு 311
ஔவையார் அறிவுரை 320
,, ,, 321
நல்ல மனைவி 323
யாதானு நாடாமால் 330
அறிஞர் பெருமை 331
கயல் உயிர்பெற்றது 332
நல்லவை கேட்டல் 336
பொருளைப் பாதுகாத்திழத்தல் 377
உள்ளப் பிரிதல் 379

தொடர் எண்	கதையின் பெயர்	பொருள்	பக்கம்
444	சங்கத்தார் கலகந்தீர்த்த கதை	தமிழ் வளம் உணர்ந்தது	388
445	சங்கப் பலகையின் கதை	சங்கப் பலகையில் வீற்றிருந்தது	389
464	சத்திமுத்தப் புலவர் கதை	ஊழ்	404
479	சம்பந்தாண்டான் கதை	புலமை நிரம்பாமல் இழிவு	419
587	செஞ்சொல் கொண்டு வழிதிறந்த கதை	திருமுருகாற்றுப்படை	520
593	சேடன் கதை	விருந்தோம்புதல்	527
681	திருவள்ளுவர் கதை (1)	சங்கப் பலகையில் திருக்குறள்	601
682	,, ,, (2)	மெய்யறிவாளர்கள்	,,
683	திருவள்ளுவர் பொறுமைக் கதை	பிறர் செய்த தீமையை மறத்தல்	602
686	திருவேங்கடன் கதை	ஒத்ததறிவான் உயிர்வாழ்வான்	605
730	நக்கீரர் கதை (1)	பெருமையை வாய்மொழி காட்டுதல்	647
731	,, ,, (2)	அறிவு கல்விப் பயிற்சியளவே	648
732	நக்கீரர் கரையேறிய கதை	திருவிளையாடல்	649
735	நந்தன் கதை (வேறு)	ஔவையார் இகழ்ந்து பாடியது	651
737	நந்திக்கலம்பகக் கதை	நந்திக்கலம்பகம்	653
770	நாட்டைப் புகழ்ந்து பாடிய கதை	ஔவையார்	683
772	நாமம் போட்ட பிள்ளையார்கதை	வீணுகப் பழிப்புத் தேடிக்கொள்ளுதல்	684
781	நான்கு கோடிக்குப் பாடிய கதை	ஔவையார்	691
808	படிக்காசுப்புலவர் தோல்வியடைந்த கதை	கொங்கு நிகழ்ச்சி	716
809	பட்டமரம் தளிர்த்த கதை	தமிழின் சிறப்பு	717
815	பட்டும் பாட்டும்	அழிவற்ற பொருள்	724
837	பலாத் தழைக்கப் பாடிய கதை	ஔவையார்	743
852	பனந்துண்டந் தளிர்க்கப் பாடிய கதை	,,	758

888 பிள்ளைப்பாண்டியன் கதை
889 புகழேந்திப் புலவர் கதை
915 பூங்குன்றனார் கதை
916 பூங்கோதையார் கதை
922 பெருஞ்சித்திரனார் கதை
923 பெருந்தலைச் சாத்தனார் கதை
946 மங்கன் கதை
954 மண்மாரி பெய்த கதை
969 மருத்துவனைப் பாடிய கதை
975 மழவரங்கன் கதை
1017 முட்டையின் கதை
1020 முதுகிலேறிய கதை
1021 மூதுகூத்தனார் கதை
1029 மூருகன் காட்சி கொடுத்த கதை
1032 மூரிங்கை மரந் தளிர்த்த கதை
1056 மோர் முப்பேர் பெற்ற கதை
1082 வரப்புயர என்று வாழ்த்திய கதை
1106 வாழ்த்துரை வழங்கிய கதை
1134 விருந்துண்ட கதை
1138 வில்லிபுத்தூரார் கதை
1202 கம்பர் சுவர் வைத்த கதை
1210 கூழுக்குக் கோவை பாடிய கதை
1315 சங்கப் புலவர்கள் தருக்கடங்கிய கதை
1243 நிரம்பவழகியர் கதை
1253 மன்னவன் மனத்திலுள்ளதைப் பாடிய கதை

"குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியன்" 787
இன்சொல் இயம்புதல் 788
செலவைச் சுருக்குதல் 816
பெண்பாற் புலவர் 817
பொருள் வைக்குமிடம் 821
அறிஞர் தியன புரியார் 822
வசையால் மாண்டது 843
திருமலைராயன் பட்டினம் நிகழ்ச்சி 851
சமச்சிவாயப்புலவர் 863
வசைபெற்றது 868
பொய்யாமொழியார்பால் நிகழ்ந்தது 904
வள்ளலை ஆராய்ந்து பார்த்தது 907
வறுமையிற் செம்மை 909
சம்பந்தாண்டான் 915
சிவப்பிரகாசர் 918
காளமேகப் புலவர் பாடல் 945
சுருங்கச் சொல்லல் 968
பட்டினத்தார் 992
ஔவையார் 1019
பிறர் குற்றம் பொறுத்தல் 1022
புலவர் வறுமை 1086
ஔவையார் 1093
திருவள்ளுவர் 1099
அண்டங் காக்கை என்றது 1131
கண்டசுத்தி 1148

தொடர் எண்	கதையின பெயர்	பொருள்	பக்கம்
1254	வாடாவூங்கிய வைணவர் கதை	காளமேகப் புலவர்	1144
1255	விநாயகர் திருமண ஓலை எழுதிய கதை	ஔவையார்	1145

12. பெரியபுராணக் கதைகள்

18	அடியெடுத்துக் கொடுத்த கதை	அடியார்க்கருளுதல்	16
23	அதிசூரன் கதை	தவம் மறைந்து அல்லவை செய்தல்	20
24	அதிபத்த நாயனார் கதை	சிவத்தொண்டு	21
31	அநபாயன் கதை	செங்கோன்மை	26
41	அப்பூதியடிகள் கதை	வீருந்தோம்பல்	34
42	அமர்நீதி நாயனார் கதை	திருத்தொண்டு	35
78	ஆண்பனை பெண்பனையான கதை	திருவருட் செயல்	64
77	ஆதியந்தவுலா வாசுபாடிய கதை	ஞான உலா வரலாறு	68
90	ஆற்றிலிட்டுக் குளத்தில் தேடிய கதை	இறைவனுடல்	77
113	இயற்பகையார் கதை	கொடைச் சிறப்பு	95
144	இளையான் குடிமாறர் கதை	இல்வாழ்க்கை	124
147	இறைவன் இரந்து சோறிட்ட கதை	அடியவர்க்கருளல்	127
150	இறைவன் கொள்ளையடித்த கதை	வேடுபறி	129
151	இறைவன் தூதுசென்ற கதை	இறைவனுடல்	130
184	எச்சில் நீரை முழுக்காட்டிய கதை	கண்ணப்பர் வீடுபேறு	168
188	எலும்பு பெண்ணான கதை	எலும்பு பெண்ணானது	170
195	எறிபத்த நாயனார் கதை	சிவப்பணி	177
201	ஏயர்கோன் கலிக்காமர் கதை	தொண்டர்கள் பகைமை	181
211	ஓடம் ஆளில்லாமல் ஓடிய கதை	வியத்தகு செயல்	190

237 கணம்புல்லர் கதை
246 கண்ணப்பர் கதை
258 கதவு திறந்தடைத்த கதை
283 கலய நாயனார் கதை
285 கலியனார் கதை
291 கல்லோடு கட்டிக் கடலில்விட்ட கதை
324 காடவர்கோன் கதை
335 காய்ச்சல் நீங்கிய கதை
339 காரைக்கால் அம்மையார் கதை
408 கூற்றைப் பிடர்ப்பிடித்துத்தள்ளிய கதை
416 கொங்கை சுரந்த கதை
423 கோட்புலிநாயனார் கதை
459 சண்டேசுரர் கதை
463 சத்தி நாயனார் கதை
466 சத்தியசீலன் கதை
500 சாக்கிய நாயனார் கதை
525 சிவகணமாகக் காட்டிய கதை
529 சிவபாத இருதயர் கதை
532 சிவிகை கொடுத்த கதை
534 சிறுத்தொண்டர் கதை
566 சுந்தரர் இகழ்ந்த கதை
567 சுந்தரர் விருத்துண்ட கதை
585 சூலைநோய் தந்து பாடச்செய்த கதை
586 செங்கல் செம்பொனான கதை
590 செருத்துணையார் கதை
592 சேக்கிழார் கதை

கணம்புல்லர் தொண்டு 211
மெய்யன்பு 219
சமய குரவர் புதுமை 230
தாலி விற்றுக் குங்கிலியம் 251
இன்பம் பயக்கும் வினை 253
தெய்வத் திருவருள் 258
அழிவில்லாத செல்வம் 286
சம்பந்தர் ஆடல் 295
பற்று 299
சம்பந்தர் வீடுபேறு 355
அன்புப் பெருக்கு 366
நல்வினை தீவினைகள் 372
முறுகிய சிவத்தொண்டு 400
தொண்டு 404
பிறிதின் உயிர்நீக்கும் வினை 407
அகவழிபாடு 437
தில்லைவாழ் அந்தணர்கள் 465
மக்கள் மெய்தீண்டல் 468
சம்பந்தர்க் கருளியது 470
பிள்ளைக்கறி 471
சுந்தரரும் சிவபெருமானும் 498
கொங்கில் நிகழ்ந்தது 499
இறைவனுடல் 518
,, 519
திருத்தொண்டு 523
பண்ணமைந்த மொழிகள் 526

தொடர் எண்	கதையின் பெயர்	பொருள	பக்கம்
596	சேரமான் பெருமாள் கதை	சேரன் இறையன்பு	529
610	தடுத்தாட்கொண்ட கதை	இறைவனுடல்	539
612	தண்டியடிகள் கதை	இயன்றவழியில் அறம்புரிதல்	541
646	நாயனார் கதை	அரியசெயல் புரிதல்	572
664	திருக்குறிப்புத்தொண்டர் கதை	திருத்தொண்டு	587
667	திருநாவுக்கரசர் கதை	இறைவனடியார் துன்படையார்	589
668	திருநீலகண்டநாயனார் கதை	மனவுறுதி	590
679	திருமூலர் கதை	மக்கள் யாக்கையின் பயன்	600
727	தோழமை கொண்ட கதை	சுந்தரர்	645
736	நந்தனார் கதை	வாழ்நாள் வழியடைத்தல்	652
740	நமிநந்தியடிகள் கதை (1)	கண்ணீர் விளக்கெரித்தது	656
741	,, ,, (2)	தீண்டாமை போக்கியது	657
745	நரசிங்கமுனையரையர் கதை	கள்ளன் திருந்தியது	660
779	நாவுக்கரசர் நஞ்சுண்ட கதை	அருளாடல்	690
794	நீலநக்கர் கதை	மாதின் மெய்யன்பு	704
796	நீற்றறையிலிட்ட கதை	அப்பருக்குத் தண்டனை	706
800	நெல்லளித்த கதை	குண்டையூர்கிழார்	710
890	புகழ்த்துணை நாயனார் கதை	வான்சிறப்பு	788
917	பூசலார் கதை	உள்ளத் தூய்மை	818
932	பொதிச்சோறளித்த கதை	சுந்தரமூர்த்தியார்பால் நிகழ்ந்தது	830
947	மங்கையர்க்கரசியார் கதை	கணவனைக் காத்தது	843
948	மங்கைவாட மயல்செய்த கதை	நோய் தீர்ந்தது	844
983	மாண்டவனைப் பிழைப்பித்த கதை	உயிர் பிழைத்தது	874
1004	மாற்றுரைத்த பிள்ளையார் கதை	சுந்தரர்க்கருளிய திருவருள்	892

1005	மானக்கஞ்சாறர் கதை	கூந்தலளித்தது	893
1016	முடியில் அடிவைத்த கதை	சுந்தரர் பால் நிகழ்ந்தது	903
1018	மூதகிலவாய் மதலே மீண்ட கதை	சுந்தரர் நிகழ்த்தியது	906
1022	முத்திநாதன் கதை	படிற்றொழுக்கம்	910
1023	முத்துப் பந்தல் பெற்ற கதை	சம்பந்தர்பால் நிகழ்ந்தது	910
1033	முகிலப்பால் தந்து பாடச்செய்த கதை	சம்பந்தர் தேவாரம் பாடியது	918
1039	முனையடுவார் கதை	சிவத்தொண்டு	924
1044	மூர்த்திநாயனார் கதை	கையைத் தேய்த்தது	931
1050	மெய்ப்பொருள் நாயனார் கதை	பொறையுடைமை	936
1099	வாகீசர் பிழை பொறுத்த கதை	குற்றம் பொறுத்தல்	984
1100	வாசிதிரக் காசு நல்கிய கதை	நல்ல காசு நல்கியது	985
1159	வெண்ணெய்நல் லூர் வேதியர் கதை	நடுவுநிலைமை	1043
1195	ஏடு எதிரேறிய கதை	சம்பந்தர்	1077
1197	ஒரு மணத்தைத் தடுத்து இரு மணத்தை முடித்துவைத்த கதை	சுந்தரரிடம் நிகழ்ந்தது	1079
1235	திருநீலகண்டயாழ்ப்பாணர்	யாழ் வாசித்தது	1123
1244	ஈற்றினில் காய்ச்சலே நீக்கிய கதை	சம்பந்தர் செயல்	1133

13. முனிவர் கதைகள்

1	அகத்தியர் கதை	துறவிகள் பெருமை	1
2	அகத்தியர் வேள்வியைத் தடுத்த கதை	அருளுடைமை	2
9	அங்கீரர் கதை	சான்றோர் பெருமை	8
160	உதங்கர் கதை (1)	ஒக்கற்றுங் கற்றல்	140
161	,, ,, (2)	குற்றம் சுற்றத்தையும் சூழ்தல்	143

தொடர் எண்	கதையின் பெயர்	பொருள்	பக்கம்
166	உபமன்யு முனிவர் கதை	தவச் சிறப்பு	152
174	உரோம முனிவர் கதை	நாளே வாள்	159
257	கண்ணுவர் கதை	தவம்	230
346	காளமுனி கதை	தீவினை பின்தொடர்தல்	305
367	குட்டுப் போட்டுக்கொண்ட கதை	குட்டிக் கொள்ளுதல்	324
419	கோசிகர் கதை	மழையின்றேல் உலகமில்லை கெடும்	368
420	,, ,,	பயனில பேசுதல்	369
433	கௌதமர் கதை (1)	மழையின்றேல் தவமில்லை	380
453	சடபரதர் கதை	உயிர்களிடத்தில் அருள்	396
454	சடபரதர் அடக்கம்	அடக்கம்	397
495	சுவனகர் கதை	தங்கருமஞ் செய்வார்	433
545	சுகர் கதை	ஐம்புல நுகர்ச்சி	481
579	சுகமுனிவர் கதை	இன்சொலியம்புதல்	513
616	ததீசி முனிவர் கதை	அறிவிலார் நல்லுரை கொள்ளார்	544
617	தத்தாத்திரையர் கதை	அவாவறுத்தல்	544
645	தாணுமாலய முனிவர் கதை	யார் நட்பதாயினும் நட்புக்கொளல் வேண்டும்	571
647	தாயுமானவர் கதை	ஒழுக்கமுடைமை	573
680	தாருகாவன முனிவர்கள் கதை	ஆணவமும் மடமையும்	576
704	துருவாசர் கதை	துருவாசர் உயிர் பிழைத்தது	623
774	நாரதர் கதை	பற்றற்றவர்	686
775	நாரதர் குடும்பச் சுமையறிந்த கதை	நாரதர் குடும்பச் சுமை	687
776	நாரதர் சுற்றித் திரிய நேர்ந்த கதை	வசவுரை பெற்றது	688
804	நைமிச முனிவர்கள் கதை	செவியுணவு	714
825	பரத முனிவர் கதை	அவாவே பிறவி விதை	733

828 பரத்துவாசர் கதை
860 பாணினி முனிவர் கதை
882 பிருகுமுனிவர் கதை
883 பிருங்கி முனிவர் கதை
894 புட்பதந்தர் கதை
895 ,, ,, (வேறு)
911 புலத்தியர் கதை
977 மாகதர் கதை
984 மாண்டவியர் கதை
1035 மூற்கலமுனிவர் தவமிழந்த கதை
1037 முனிவர்கள் கதை
1038 முனிவர்கள் சாபம் பெற்ற கதை
1054 மைந்தரை வெறுத்த மாமுனிவர் கதை
1067 வசிட்டர் கதை
1068 வசிட்டர் பழையது சாப்பிட்ட கதை
1083 வரமுனிவர் மகிடனை கதை
1107 வான்மீகி முனிவர் கதை
1115 விசுவாமித்திரர் கதை (1)
1116 ,, ,, (2)
1126 விந்தமலையை அடக்கிய கதை
1128 வியாசர் சொல்லிமுக்குப்பட்ட கதை
1181 அட்டகோண முனிவர் கதை
1182 அத்திரி முனிவர் கண்ணில் திங்கள் தோன்றிய கதை
1241 நாய்வாலைக் களவு செய்த கதை

தவநலம் 736
அறிவு சேர்ந்த இனத்தால் உண்டாகும் 764
அவாவற்றருள் துன்பங் கெடும் 782
விரும்பிஞல் பிறவாமையை விரும்பவேண்டும் 783
அருளே கண்ணுக்கழகு 791
பெரியோர் செயல் 792
பெரியோர் தன்மை 813
வஞ்சிப்பது அவாவே 869
தீவினைப் பயன் ஒழியாது 876
தீவினை தவத்தைக் கெடுத்து விடும் 921
மழைபெய்யச் செய்தது 922
கௌதமர் சாபமிட்டது 923
பராசரர் வரலாறு 948
அரசன் ஊன் உணவிட்டது 953
பாத்திரமறிந்து பிச்சை யிட்டது 954
ஆணவத்தால் துன்புற்றது 968
புலனடக்குதல் 992
இல்வாழ்க்கை சிறந்தது 1001
எல்லாவிடங்களினுஞ் சினந் தீது 1001
அகத்தியர் 1012
வீண்சொல் உரையாமை 1024
உலக நிலையாமை 1063
திங்கள் பிறப்பு 1066

விசுவாமித்திரர் 1129

தொடர் எண்	கதையின் பெயர்	பொருள்	பக்கம்

14. வள்ளல்கள் கதை

10	அசதியின் கதை	விருந்தோம்பல்	9
21	அதிகமான் கதை	கருநெல்லிக்கனி	18
82	ஆயின் கதை	அறமே துணை	71
86	ஆலஞ்சேரி அயிந்தன் கதை	கொடை	74
91	ஆற்றூர்க்கிழான் கதை	கொடை	78
102	இடையாலத்தான் கதை	உணக்கொடை	87
170	உயிர்கொடுத்த நீட்டால வள்ளல் கதை	வள்ளன்மை	156
189	எல்லன் கதை	உணக்கொடை	171
213	ஓரி கதை	வள்ளலாக உள்ளம் வேண்டும்	191
224	கச்சியப்ப முதலியார் கதை	பொறுமை	201
280	கரும்பு தின்னக் கூலிகொடுத்த கதை	கொடை	249
307	கறுப்ப முதலியார் கதை	பணிவு	272
336	காய்ச்சிய நெய்யில் கையிட்ட கதை	உண்மையை விளக்கியது	295
345	காளத்தி முதலியார் கதை	இறத்தலும் இனிமை	303
362	குடிதாங்கி முதலியார் கதை	குடியை உயர்த்த மடியை விடுதல்	319
374	குமணன் கதை	புலவர் சூழ்ச்சி	330
378	குமுழம்பட்டு வேளாளன் கதை	நன்கொடை	333
401	கூவத்துநாராணன் கதை	கொடை	354
422	கோட்டி முதலியார் கதை	செல்வ நலம்	371
458	சடையப்ப பிள்ளை கதை	மிச்சில்மிசை வான்புலம்	399
475	சந்திரசேகரவாணன் கதை	அரசனைச் சிறையிலடைத்தது	415
493	சவுக்கடி பெற்ற கதை	சர்க்கரை வள்ளல்	431

598 சித்தக்காதி கதை
547 சுகுணன் கதை
584 சூலி முதுகில் சோறிட்ட கதை
588 செட்டி பிள்ளையப்பன் கதை
635 தவளகிரி முதலியார் கதை
652 தாலியைக் கொடுத்த கதை
812 நெற்குன்றவாணர் கதை
823 பந்தன் கதை
876 பிச்சையப்பன் கதை
877 பிணத்தை மூடி மணத்திற்குச் சென்ற கதை
897 புண்ணியகோட்டி முதலியின் கதை
919 பூதன் கதை
926 பேகன் கதை
1034 முல்லான் கதை
1075 வடுகநாத முதலியார் கதை
1076 வண்டி வழங்கிய கதை
1079 வயிரப்ப முதலியார் கதை
1091 வல்லாள முதலியார் கதை
1094 வள்ளலை விற்கத் தொடங்கிய கதை
1101 வாணராயன் கதை
1147 வீடுர் வேளாளன் கதை
1156 வீரபத்திரன் கதை
1187 ஆமூர் முதலியார் கதை

செத்துங் கொடுத்தது 475
மீனவியை ஈந்தது 483
வள்ளன்மை 517
புலிக்குகையில் நுழைந்தது 521
காய்ச்சிய நெய்யில் கையிட்டது 562
கொடை 577
தன்னை விற்றது 711
சுற்றந் தழுவுதல் 731
தனக்கென வாழாதவன் 776
வள்ளல் செயல் 777
மணல் பரப்பிய வள்ளல் 797
சுற்றந் தழுவுதல் 819
மயிலுக்குப் போர்வை யளித்தது 825
ஔவையாராற் பாடப்பெற்றவன் 919
பிணத்தை மறைத்தது 961
கொங்குச் செய்தி 962
போலிப் புலவனிடம் பணிவு 965
உடுத்திய ஆடை கொடுத்தது 976
புலவர் செயல் 980
ஏடும் எழுத்தாணியும் 987
மீனவியை அளித்தது 1030
கொடைநலம் 1042
களப்பாளன் 1070

எடுத்தாளப்பட்ட நூல்கள்

அட்டப் பிரபந்தம்
அபிதான சிந்தாமணி
அரிச்சந்திர புராணம்
அருணைக் கலம்பகம்
அத்திருடி வெண்பா
இரகுவமிசம்
இரங்கேச வெண்பா
இராமாயணம்
இலிங்க புராணம்
ஈட்டி யெழுபது
உபதேச காண்டம்
எழுப்பெழுபது
ஏகம்பவாணன் வரலாறு
ஔவையார் வரலாறு
கந்தபுராணம்
கந்தரலங்காரம்
கரபுரநாதர் புராணம்
கல்லாடம்
காஞ்சிப்புராணம்
கொங்குமண்டல சதகம்
சங்கரலிங்க உலா
சங்கர விசயம்
சித்தாந்த சிகாமணி
சிலப்பதிகாரம்
சிவசிவ வெண்பா
சிவபுராணம்
சிறப்புப் பெயரகராதி
சீகாளத்திக் கலம்பகம்
செயங்கொண்டார் சதகம்
செயங்கொண்டார் வழக்கம்
சோணசைலமாலை
சோமேசர் முதுமொழி வெண்பா
சோழமண்டல சதகம்
தண்டலையார் சதகம்
தனிச்செய்யுட் சிந்தாமணி
தனிப்பாடல் திரட்டு
திருக்காளத்திநாதருலா
திருக்காளத்திப் புராணம்
திருக்குறட் குமரேச வெண்பா
திருப்புகழ்
திருப்பூவணநாதருலா
திருப்பூவணப் புராணம்
திருமுருகன் பூண்டிப் புராணம்
திருவருணைக் கலம்பகம்
திருவாசகம்
திருவாரூர் உலா
திருவாரூர்ப் புராணம்
திருவிலஞ்சி முருகன் பிள்ளைத் தமிழ்
திருவிளையாடற் புராணம்
திருவெண்காடர் புராணம்
தேவாரம்
தேவிபாகவதம்
தொண்டமண்டல சதகம்
நரி விருத்தம்
நால்வர் நான்மணிமாலை
நீதி வெண்பா
பட்டினத்துப் பிள்ளையார் பரமராசிய மாலை [பிரபந்தம்
பழநிப் புராணம்
பழமலையந்தாதி
பழமொழி
பாகவதம்
பாண்டிமண்டல சதகம்
பிரபுலிங்க லீலை
புதுவைப் புராணம்
புலவர் புராணம்
புலியூர் வெண்பா
பெரிய புராணம்
மணிமேகலை
மதுரைக் கலம்பகம்
மறைசையந்தாதி
மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்
முருகவேள் பன்னிரு திருமுறை
வில்லிபாரதம்
விவேக சிந்தாமணி
வைராக்கிய சதகம்

மற்றும் பல நூல்கள்.

